# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

| Vol. 25. | January. | No. 1. |
|---|---|---|

**Contents:**

Bible Sketches and their Teachings. ... ... ... 2
Christian Church History. ... ... ... ... ... 5
Notes on Genesis. ... ... ... ... ... ... 7
The Parables of Christ. ... ... ... ... ... 11
On the Liturgy. ... ... ... ... ... ... ... 14
Communicant's Companion. ... ... ... ... 16
Summary of News. ... ... ... ... ... ... 19

அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... ௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௫
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௭
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௧௧
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ௧௪
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ௧௬
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௯

**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

க. ஜனவரி௴. ௲அளகூ௵.



1873
162398


## Bible Sketches and their Teachings.

### பாலபோதனை.

### மோசேயின் மரணம்.

உபாகமம் 32 : 48—52; 34. அதி.

(தொடர்ச்சி.)

மோசே கண்ணாரக்கண்டவைகளையெல்லாம் நாம் மனதினாலே மாத்திரம் யூகித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இந்தச் சிறப்பான தேசத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கும்பொழுதே அதைப் பார்க்க அதிகச் சிறப்பான வேறொரு தேசத்தை நோக்கிப் பார்க்க ஆயத்தமாயிருந்தானென்று நினைக்கலாமே. கானான்தேசத்து வீட்டிலும் மகிமையான வீடு ஒன்றுண்டு என்று அவன் அறிந்திருந்தான். பாவம் வாக்குதத்த தேசத்தில் அவனைப் பிரவேசிக்க ஒட்டாமல் தடுத்துவிட்டது. மோட்சத்திற் பிரவேசிக்காமல் பாவம் அவனைத் தடுக்கக்கூடவில்லை. தேவன் அவனுக்கு மன்னித்துவிட்டாரே. தண்டனை சொற்ப நேரத்துக்கு இருந்தது. அவனுக்குக் கிடைத்த சந்தோஷமோ சதாகாலமாயனுபவிக்கத்தக்கது. இயேசு இரட்சகர் மரிக்கப்போகிறாரே, சிலுவையிலே அவர் சிந்தப்போகிற விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலே நித்திய இளைப்பாறுதலுள்ள பரம கானான்தேசம் திறந்திருந்தது. மரணத்தில் பிரகாசமான தன் கண் இருண்டு பூமிக்குரிய கானான்தேசம் மறைந்துபோனவுடனே தன்னுடைய ஆத்துமம் மோட்ச வீட்டிற் சேர்ந்து என்றென்றைக்கும் இளைப்பாறுமென்று மோசே அறிந்திருந்தான்.

ஒரு விசை ஒரு சிறு பையனிடத்தில், மோக்ஷத்தை நாம் இப்பொழுது ஏன் பார்க்கக்கூடவில்லை என்று கேட்டதற்கு "நமது கண்களுக்குமுன் அநேக மேகங்களிருப்பதினாலே தான் பார்க்கக்கூடவில்லை" என்று சொன்னான். பையன் சொன்ன உத்தரவு கவனிக்கத்தக்கது தான். இயேசுக்கிறிஸ்துவானவரை நாம் நம்புவோமாகில் அவர் மரணமாகிய தூதனைக்கொண்டு அந்த மேகங்களையெல்லாம் பறக்கடித்து மோக்ஷலோகத்தின் பூரண மகிமைகளை நமக்குக் காண்பிப்பார்.

கடைசியாக மோசே இப்பொழுது எங்கே இருக்கிறான்? அவனுடைய சரீரத்துக்கு என்ன நேரிட்டது? கர்த்தர் அதை அடக்கம்பண்ணினார். அது வைக்கப்பட்ட இடத்தை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. மோசே நடப்பித்தவைகளை ஞாபகப்படுத்தும்படிக்கு ஒரு ஸ்தம்பம் வேண்டியிருந்ததில்லை. அவன் வைக்கப்பட்ட இடம் தெரியாமற்போனது நன்று. மற்றப்படி யூதர்கள் பிற்காலத்தில் அவனுடைய கல்லறையைத் தொழுதுகொள்ள ஏற்பட்டிருப்பார்கள். அவர்கள் உத்தமரென்று நினைத்த மற்றும் பல பெயர்களுடைய கல்லறைகளை புத்தி



யீனமாய் அவர்கள் தொழுதுவந்ததை யறிவோமே. அவனுடைய சரீரத்துக்கு என்ன நேரிட்டிருந்தாலும் பெரிய காரியமல்ல. அவனுடைய ஆத்துமம் எங்கே?

இயேசுவானவர் உயரமான ஒரு மலையிலிருக்கையில் வானத்திலிருந்து மகிமையான ஒரு ஒளி அவரைச் சுற்றிப் பிரகாசித்து, அவருடைய முகமும் வஸ்திரங்களும் சூரிய வெளிச்சத்திலும் அதிகச் சோதியாய் அவர் மறுரூபமானபொழுது அவரோடிருந்த மூன்று சீஷர்களும் கண்ட ஆச்சரியமும் மகத்துவமுமான காட்சியைப்பற்றி, நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அந்தச் சமயத்தில் இயேசுவானோடு காணப்பட்டவர்கள் யார்? மரணத்தைக் காணமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எலியாத் தீர்க்கதரிசி ஒருவன். மற்றவன் மோசே என்று அறிவீர்களே. தேவனுடைய நேசகுமாரனாகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையிற் சகிக்கப்போகிற மரணத்தைப்பற்றி அவரோடு சம்பாஷித்துக்கொள்ளும்படியாய் தேவன் தாமே அவ்விருவரையும் அனுப்பியிருந்தார். இயேசுவுக்கு விசேஷித்த சிநேகிதர்களாக விளங்குகிறார்களே. என்ன பாக்கியம்! எவ்வளவு கனம்! அவரோடு சம்பாஷிக்கவும் அவரைக் கனப்படுத்தவுமென்று பரலோகம் எங்கும் தெரிந்த தூதர்களாயிருப்பது எவ்வளவு பெரிய சலாக்கியம். ஆம், மோசேயின் பரதேச பிரயாணம் முடிந்துபோயிற்று. இச்சீவகாலத்துக்குரிய பாவங்களும் துன்பங்களுமெல்லாம் தீர்ந்துபோயின. மகிமையான கானான்தேசம் அவனுக்கு நித்திய இளைப்பாறுதலுக்கான வீடாகி விட்டது.

எகிப்தின் ஐசுவரியங்களைப் பார்க்க இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உண்டாகும் நிந்தையைச் சகிப்பதே பெரிய பொக்கிஷம் என்றெண்ணி பார்வோன் குமாரத்திக்குப் புத்திரனென்னப்படுவதை மோசே ஒரு காலத்தில் தள்ளிப்போட்டானே. அந்தச் செய்கையைக்குறித்து மோசே பிற்காலத்தில், எப்படி நினைத்திருப்பான்? தேவனுக்கு ஊழியக்காரனாயிருப்பது அக்காலத்தில் அவனுக்கு துக்கமான காரியமாகத் தோன்றியிருக்குமாகில், இப்பொழுது அவனுக்குக் கிடைத்திருக்கிற மேன்மையையும் மகிமையையும் நினையுங்கள். பிரியமானவர்களே, உங்களில் யாராவது கிறிஸ்துவினிமித்தம் துன்பத்தைச் சகிக்க நேரிடுகிறதா? அருமையான அவருடைய நாமத்துக்காக சிலர் துன்பப்படலாம், ஈனக்ஷயாயெண்ணப்படலாம், நிஷ்டூரமாய் நடத்தவும்படலாம். இதுகளைச் சகிக்கிறது வருத்தந்தான். என்றாலும் வரும் பலனை நினையுங்கள். இரட்சகருக்கு உண்மையுள்ளவர்களாய் நடங்கள். ஒருக்காலும் பின்வாங்கிப்போகாதிருங்கள். மற்றவர்கள் என்ன சொன்னாலுஞ் சரி, என்ன செய்தாலுஞ் சரி, உறுதியாய்த் தரித்து நில்லுங்கள். சாந்தமும் தாழ்மையுமாயிருக்கிறதோடு தீர்மானமும் கரிசனையுமுள்ளவர்களாயிருங்கள். அவர் உங்கள் துக்கங்களை யறிவார். உங்கள் ஊழியத்தை யேற்றுக்கொள்வார். ஒருநாள் நீங்களும் என்றும் கர்த்தரோடிருப்பீர்கள்.

### யோர்தானைக் கடந்தது.

யோசுவா 3, 4 அதிகாரங்கள்.

மோசே மரணமடைந்ததின்பேரில் யோசுவா இஸ்ரவேலருக்குத் தலைவனானான். சனத்தை வாக்குதத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குள்

நடத்திக்கொண்டுபோவதே அவன் செய்யவேண்டியிருந்த முதல் வேலை. அவர்கள் கானான்தேசத்தின் ஓரத்தில் வந்திருக்கிறார்கள். தேசத்துக்குள் உடனே பிரவேசிக்கிறதற்கு ஒரே ஒரு தடை மாத்திரமிருந்தது. அந்தத் தடையாதென்றால், யோர்தான் நதிதான். உங்களில் அநேகருக்குத் தெரிந்திருக்கிறபடி அது அத்தனை பெரிய நதியுமல்ல. யோர்தான் நதியைப் பார்க்க விசாலமான நதிகளை நாம் எல்லாரும் பார்த்திருக்கிறோம். இவ்வாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி எரிகோப் பட்டணத்தையும் அதின் குடிசனங்களையும் வேவுபார்த்துவரும்படிக்கு யோசுவா இரண்டு பேரை அனுப்பியிருந்தான். அவர்களும் அதிக வருத்தமில்லாதபடிக்கு போய்ப் பார்த்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். கலங்கலான அதின் சலம் அருகிலுள்ள ஒடுக்கமான பள்ளத்தாக்கில் பாய்கிறதை அந்தச் சனங்கள் கண்டபோது, அவர்கள் பிதாக்கள் சிவப்புக்கடலைப்பார்த்து நடுங்கி தத்தளித்ததுபோல தத்தளித்திருக்கமாட்டார்களென்று நினைக்கலாகும். "இன்னும் இரண்டொரு வாரமாத்திரங் காத்திருக்கவேண்டும், அதற்குள்ளாக நதி வற்றிப்போகும், அப்பால் நாம் எல்லாரும் லேசாய்க் கடந்துபோய் விடலாம்" என்று ஒருவேளை நினைத்திருப்பார்கள். மெய்தான், அவர்கள் உடனே நதியைத் தாண்டிப்போய்விட நினைக்கவில்லை. ஒருவரும் அப்படி நினைக்க ஏதுவிருந்ததில்லை. என்னத்தினாலென்றால் அந்நாட்களில் தான் மழைகளினாலும் வடக்கே வெகு தூரத்திலுள்ள மலைகளில் பனிக்கட்டி உருகினதினாலும் நதியில் தண்ணீர் நிறைய வந்து அதிவேகமாயும் மும்முரமாயும் பாய்ந்துகொண்டிருந்ததல்லாமலும், இருபுறமும் அமைந்திருந்த பரும்புகளையுந் தாண்டிக் கரை புரண்டு சூழ அடர்ந்திருந்த காடுகளெங்கும் பரவி துஷ்ட மிருகங்கள் தாபரித்த கெபிகள் குகைகள் வரையுஞ் சென்று அநேக சிங்கங்கள் நரிகள் புலிகள் கடுவாய்கள் முதலிய துஷ்டசெந்துக்களையெழுப்பிவிட்டதினால் அவைகள் தண்ணீர் போகமாட்டாத உயர்ந்த மைதானங்களில் அலைந்து திரிந்துகொண்டிருந்தன. இதினாலே "புரண்டோடுகிற யோர்தானின் பிரவாகம்" மகா பயங்கரமானதென்று சொல்லியிருக்கிறது. (எரேமி. 12: 5. 49:·19.) இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த இடங்களிலுந் திரிந்த மிருகங்களின் சத்தத்தை இஸ்ரவேலர் இராத்திரிகளில் கேட்டு பயப்பட்டிருப்பார்கள். என்றாலும் அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்? இதெல்லாம் பெரிய காரியமல்ல. இன்னும் இரண்டொரு தினத்துக்குள் மிருகங்களெல்லாம் தங்கள் குகைகளுக்குப் போய்விடும். சலமும் வற்றிப்போம். அப்பொழுது பாதை வருத்தமாயிராது என்று தேற்றிக்கொண்டிருந்திருப்பார்கள். அப்படியே இஸ்ரவேலருடைய சத்துருக்களும் ஆற்றின் அப்புறத்தில் நின்று பார்க்கும்பொழுதும், சமபூமியில் ஐந்து மைல் தூரத்தில் நின்ற பேரீந்தமரங்களுக்கு மேலே காணப்பட்ட எரிகோவின் கோபுரங்களில் சாமங்காத்து நிற்கும்பொழுதும் எப்படி நினைத்திருப்பார்களென்றால்,—'இன்னும் நமக்கு மோசமில்லை, இப்பொழுது அவர்கள் ஆற்றைத் தாண்டிவரத் துணிவார்களோ, எப்படியும் நாம் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணிக்கொள்ள நமக்கு இன்னும் இரண்டு மூன்று வாரங் கிடைக்கும்" என்று ஒருவேளை நினைத்திருப்பார்கள்.

தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள்போலல்லவே. இஸ்ரவேலர் அவ்விடத்தில் வந்து பாளயமிறங்கின மூன்று நாளுக்குள்ளே, ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துகொண்டு முன்னுக்குச் செல்லுகிறதைக் காணும்போது சகல சனங்களும் அதற்குப் பிறகா



லே போக ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று பாளயமெங்கும் உத்தரவு பிறந்தது. ஆனால் இப்படி நடக்கப்போகிறது எப்பொழுது? ஒருவருக்குந் தெரியாது. "நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அதிசயங்களைச் செய்வார்" என்று யோசுவா சொன்னதை மாத்திரம் கேட்டிருந்தார்கள். தேவன் என்ன அதிசயங்களைச் செய்வாரோ? நாற்பது வருஷத்துக்கு முன்னே சிவப்புக்கடலை இரண்டாகப் பிளந்து வழியுண்டாக்கினாரென்று அவர்கள் பிதாக்கள் அடிக்கடி சொல்லியிருப்பார்களே, சனங்கள் ஒருவேளை அந்த நாளையும் அந்த அதிசயத்தையும் நினைக்கத் தொடங்கியிருப்பார்கள். அந்தப்படியே இப்பொழுதும் நடக்கப்போகிறதோ! நல்லது நாளைத் தெரியும்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளோத்தோவின் கொள்கைக்காரர்.—ஒரிஜன் குருப்பட்டமடைந்து செசாரியாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தேனிய வகுப்பார்—இக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்.—ஆத்துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்.—பிலிப்புவின் அரசாட்சி இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

(தொடர்ச்சி.)

மொந்தேனிய வகுப்பாருக்கு விரோதமாய் இதுவரையிற் செய்யப்பட்ட முயற்சிகளிலெல்லாம் இதுதான் கடினமானது. துவக்கத்தில் மொந்தேனியக் கொள்கைக்காரர் தப்பறைக்காரரென்று எண்ணப்படவுமில்லை. அதினிமித்தமாய் ஒருவனும் சபையின் ஐக்கியத்தை விட்டு நீக்கப்படவுமில்லை. என்றாலும் வரவர இரு பக்ஷத்திலுமுள்ள அன்புத்தாட்சியினாலே பிணக்கு அதிகப்பட்டது. சபைத் தலைவர்கள் மொந்தேனியரைக் கசப்பு உண்டாகத்தக்கதாகவே நடத்தினார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. நாம் பார்த்துவருகிறபடி இவர்கள் காரியம் பல சங்கங்களில் பேசித் தர்க்கிக்கப்பட்டு ஒவ்வொரு சங்கத்திலும் அவர்களுக்கு விரோதமாகவே தீர்ப்புச் செய்யப்பட்டது. சபைத் தலைவர்கள் இவ்விஷயத்தில் ஏக சம்மதங் காட்டினபோதிலும், மொந்தேனியர் அதை ஒரு பொருட்டாயெண்ணாமல், அறிந்தும் பகிரங்கமாயும் சபையின் அதிகாரத்தை எதிர்த்துக்கொண்டே வந்தார்கள். தெர்த்துல்லியன் என்பவனும் மொந்தேனிய வகுப்பைச் சேர்ந்தவன் தானே. அவன் தங்கள் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்களைக்குறித்துப் பேசுகிற இடத்தில், அப்படிப்பட்டவர்களைப்பற்றி அலட்சியமாயும் ஈங்கிலைஷயாயும் பேசுவது அவர்களுக்குள் வழக்கமாயிருந்ததென்று தெரியவருகிறது. அவர்களே மற்றக் கிறிஸ்தவர்களோடு சகவாசம்பண்ணமாட்டோமென்று பிரிந்துகொண்டதாக நினைக்க இடமுண்டு.

அவர்கள் எதிராளிகளால் அவர்கள் சபைக்குப் புறம்பாக்கப்பட்டார்களென்று சொல்லுவதைப் பார்க்க, அவர்களே எதிராளிகளைப் புறம்பாக்கினார்களென்று சொல்வது தான் தகுதி. அவர்களுக்கு விரோதமாய்ப் பொதுவான யாதொரு தீர்ப்பு இன்னுஞ் செய்யப்படாமலிருந்தும், அவர்களே பொதுவான சபையை விட்டுப் பிரிந்து, பிரத்தியேகமான சபைகளாயேற்பட்டு, சபைத்தலைவர்களோடு எவ்வளவேனும் சம்பந்தமில்லாதவிதமாய்த் தங்கள் காரியங்களைத் தாங்களே நடத்துக்கொள்ளத் தலைப்பட்டார்கள். ஆகிலும் இப்பொழுது இரண்டு நூற்றாண்டுகளாய் ஏற்பட்டிருந்த சபையின் ஆளுகைக்குரிய புறம்பான முறைமையில் யாதொரு வேறுபாடும் செய்ததில்லை. அவர்கள் தங்களுக்குச் சொந்தமான கண்காணிமார்களையும் குருக்கள்மார்களையும் நியமித்துக்கொண்டார்கள். பொதுவான காரியங்களைப் பேசித் தீர்மானிக்கிறதற்கு சங்கங்களுங் கூடினார்கள். புறஜாதிச் சனங்கள் அவர்கள் சபையிற் சேரும்போது ஞானஸ்நானமுங் கொடுத்தார்கள். கடைசியிற் சொன்ன இந்தக்காரியமே அவர்களுக்கு விரோதமாய்ப் பொதுவாய்ச் செய்யப்பட்ட கடினமான தீர்மானத்துக்கு ஏதுவாயிருந்தது. இக்கோனியாப் பட்டணத்திற் கூடிவந்த சங்கத்தார் அவர்களாற் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் செல்லாதென்று தீர்த்தார்களே. மொந்தேனியரைச் சேர்ந்தவனாய் வளர்க்கப்பட்ட ஒருவன், பொதுவான சபைக்குப் போவானாகில், அவன் திரும்பவும் ஞானஸ்நானம்பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதினாலே மொந்தேனியரால் ஞானஸ்நானச் சடங்குசெய்யப்பட்டிருந்தபோதிலும், அவன் ஞானஸ்நானம்பெறவில்லையென்று காண்பித்ததாக விளங்குமே. ஆகையால் மொந்தேனியரைச் சேர்ந்த குருக்கள்மாரை சரியாயும் ஒழுங்காயும் பட்டம்பெற்றவர்களென்று அங்கீகரிக்கவில்லையென்பது தெளிவாகிறது. என்னத்தினாலென்றால் மொந்தேனியர் நமது இரட்சகர் கற்பித்த வார்த்தைகளைச் சொல்லி ஞானஸ்நானங்கொடுத்திருக்கமாட்டார்களென்று நினைக்க இடமில்லை. ஆகவே ஞானஸ்நானத்தைக் கொடுத்த ஆட்களைப்பற்றிய ஆட்சேபனையேயல்லாது வேறில்லை.

அப்போஸ்தலர்களுக்குப்பதிலாக ஏற்படுத்தப்பட்டவர்களால் குருப்பட்டமடைந்தவர்களுக்கே ஞானஸ்நானத்தின் மூலமாய் எவர்களையாவது திருச்சபையிற் சேர்த்துக்கொள்ளுகிற அதிகாரம் உரியதென்று எக்காலமும் எண்ணப்பட்டு வந்தது. மொந்தேனியர் அப்போஸ்தலமார்களுக்குப் பின்வந்தவர்களால் அதிகாரம்பெற்றிருந்தவர்களுடைய சம்மதியின்றி, தங்களுக்குக் கண்காணிமார்களை நியமித்துக்கொண்டதினால் அந்த முறையைக் குலைத்துப்போட்டார்களே. ஆகையால் அவர்கள் சபை நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்ட சபையேயல்லாமல் ஆதிமுதலாயிருந்த பொதுவான திருச்சபையைச் சேர்ந்ததல்லவென்று தீர்மானித்திருக்கவேண்டும். அதினிமித்தமே அவர்கள் கொடுத்த ஞானஸ்நானம் செல்லாதென்று தீர்த்தார்கள. மற்றச் சபைகளிலே எப்படியிருந்தபோதிலும, மொந்தேனுவின் கொள்கைகள் மிகுதியும் பிரபலியமாயிருந்த ஆசியாச் சபைகளில் இதுவே வழக்கமாயிருந்தது. கர்தாகோப் பட்டணத்துச் சபையாரும் இந்தப் பிரமாணத்தை அநுசரித்துக்கொண்டார்களென்று நினைக்க முகாந்தரமுண்டு. மொந்தேனியக் கொள்கைக்காரர் அதிகமாயில்லாததினாலே அவர்கள் பிரத்தியேகமான சபைகளாயமையாத இடங்களில் அவர்கள் ஞானஸ்நானத்தைக்குறித்த விஷயம் தர்க்கிக்கப்படவில்லை. இந்த விஷயத்தில் சில வருஷங்களுக்குப்பின் உண்டான குழப்பங்களுக்கும், உரோமை வசியா ஆப்பிரிக்காச் சபைகளில் எழும்பின மனஸ்தாபங்களுக்கும் ஒருவேளை இதுவே காரணமாயிருந்திருக்கலாம்.



---

## Notes on Genesis.

---

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௰. அதிகாரம்.

### புதிய உலகத்தாரின் ஆதி மூலங்கள்.

1. 5: 32. வியா. காண்க.

"யாப்பேத்து" என்பதற்கு பெருக்கம் என்றர்த்தம். இவன் மூத்தவனானதினாலே இவன் சந்ததியாரை முதலிற் காட்டியிருக்கிறது. ஆசியாவின் வடபக்கத்திலுள்ளவர்களும் கொஞ்சங்குறைய ஐரோப்பாக் கண்டத்தாரெல்லாரும் அநேகர் நினைக்கிறபடி அமெரிக்காக் கண்டத்தாரும் இவன் சந்ததியார்.

"சலப்பிரளயத்துக்குப் பின்பு" வரையும் நோவாவின் மக்களுக்குப் பிள்ளைகளில்லை என்ற அபிப்பிராயம் உறுதியாகிறது.

2. இந்த அதிகாரம் பின்வரும் சங்கதிகளுக்கும், சகல இதிகாசங்களுக்கும் முகவுரைபோலிருக்கிறது. விசேஷமாய் ஆபிரகாமுடைய வம்சத்தார் சரித்திரத்தை மோசே எழுதப்போகிறான். ஆனாலும் ஈசாக்குடைய சரித்திரத்தைச் சொல்லுமுன் இஸ்மவேல், ஆபிரகாமுக்கு கேத்தூராளாலே பிறந்த பிள்ளைகள் இவர்கள் சந்ததியாரையும்; யாக்கோபின் சரித்திரத்தைச் சொல்லுமுன் ஏசாவின் சந்ததியாரையுங் குறித்து கொஞ்சம் சொல்வதுபோல (35: 1—18. XXXVI.) சேமின் சந்ததியாருடைய வரலாறுகளை விஸ்தாரமாய்க் காட்டுமுன் அவன் தமையன்மாருடைய சந்ததியாரை முந்திக் காட்டுகிறான். இதினாலே அநேக தேசத்தாருடைய பூர்வோத்தரங்களைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

"கோமர்" இவன் சந்ததியார் மேற்குமுகமாய் கொஞ்சங்குறைய ஐரோப்பா முழுவதும் பரவிப்போனார்கள் என்று தோன்றுகிறது. (எசேக். 38: 6.)

"மாகோகு, தூபால், மேசேக்," இவர்கள் சந்ததியார் கறுப்புக்கடலுக்கும் கஸ்பியன் கடலுக்கும் இடையிலும், சீத்தியா தேச எல்லைகளிலும் குடியேறினார்கள். எசேக். 38: 2, 14, 15. 27: 13. 32: 26. 39: 1. மாகோகு என்ற தேசத்தின் தலைவனுக்கு கோகு என்று தீர்க்கதரிசி பேரிடுகிறார்.

"மாதாய்"மேதியருக்கு முற்பிதா. 2 இராசா 17: 3. ஏசா. 13: 17. எரே. 51: 11. தானி. 5: 28. இந்துஸ்தானின் பூர்வ குடிகளும் இவன் சந்ததியாரென்று தோன்றுகிறது.

"யாவான்" கிரேக்கரில் யாவானியருக்கு முற்பிதா. இவனுடைய 4 குமாரரால் மத்திய கிரேக்கு தேசம் குடியேற்றப்பட்டது. "தீராஸ்" திராசியாவில் குடியேறினான்.

3. "அஸ்கினாஸ்" இயூக்சைன் (கறுப்பு) கடலின் கரையோரங்களில் குடியேறினதாகத் தோன்றும். அஸ்கினாஸ் என்ற பேர் போன்ற

அக்சினஸ் என்பது இந்தக் கடலுக்கு ஆதிப்பேர். இவன் குடியேறின இடம் அர்மீனியாவுக்குச் சமீபத்தில் (பித்தினியா) என்று வேதத்திற் காட்டப்படுகிறது. எரே. 51: 27. அர்மீனியா பாஷை "அஸ்கினுசியா" என்ற பேரால் இன்னம் வழங்குகிறது.

"ரீப்பாத்து" அஸ்கினஸ் குடியேற்றுக்குக் கிழக்கே பாவ்லகோனியா, குரேஷியா முதலிய இடங்களில் இவன் சந்ததியார் குடியேறினார்கள்.

4. "எலீசா" வினால் கிரேக்கையிலுள்ள எலிஸ் நாடும், "தர்சிஸ்" ஆல் கிலிக்கியாவிலுள்ள தர்சும், "கித்தீம்" ஆல் சிப்புரு தீவும், "தொதானீம்" ஆல் ரோதாதீவும் குடியேற்றப்பட்டதாகச் சொல்லப்படும். வேதத்தின் பிந்தின ஆகமங்களிற் சொல்லப்படுகிற தர்சீஸ், இஸ்பானியாவிலுள்ள தர்த்தேசஸ் என்று நினைக்கப்படுகிறது.

5. "சாதிகளுடைய தீவுகள்," ஆசியாவின் பூர்வ குடிகளுக்கு நன்றாய்த் தெரிந்திருந்த ஐரோப்பாவின் பாகங்களாம்.

6. "காம்" என்பதற்கு காங்கை அல்லது சுடப்பட்ட என்றர்த்தம். இது இவன் சந்ததியாருக்குக் கிடைத்த தேசங்களின் தன்மையை நன்றாய்க் காட்டுகிறது. அதாவது ஆப்பிரிக்காவும் ஆசியாவின் உஷ்ணமான தென்பாகங்களுமாம். சங்கீ. 105: 23.

"கூஷ்" செங்கடலின் இருகரையிலுமுள்ள இடங்களுக்கு இவன் பேர் வந்தது. பார்சுக் குடாக்கடலை அடுத்த ஆசியாவின் பாகம் "கூசிஸ்தான்" என்று இன்னம் அழைக்கப்படுகிறது. இதிலிருந்து இவன் சந்ததியார் அரபிக்கும் இந்தியாவின் ஒரு பாகத்துக்கும் பரவிப்போய், அங்கேயிருந்து எகிப்துக்குச் சென்று அதைக் கீழ்ப்படுத்தி "மேய்ப்ப இராசாக்கள்" என்ற பேர்பெற்று ஆண்டு அவ்விடத்திலிருந்து மத்திய ஆப்பிரிக்காவில் பரவினார்கள்.

"மிஸ்ராயீம்" என்றால் இரண்டு எகிப்துகள் என்றர்த்தம். எகிப்தில் குடியேறினான். அதினாலே வேதத்தில் எகிப்தியருக்கு "மிஸ்ராயீம்" என்று பேர். கிழக்கத்தியாருக்குள் இந்த தேசம் நாளதிலும் "மிசரின் தேசம்" என்றழைக்கப்படுகிறது.

"பூத்து" (அல்லது வில்) இவனும் இவன் சந்ததியாரும் ஆப்பிரிக்காவில் மாரிற்றானியா (நாளதில் பார்பரியும் மருக்கோவுமடங்கிய) தேசத்தில் குடியேறினார்கள். இவ்விடத்தில் பூத்தியா என்னப்பட்ட ஒரு பட்டணமிருந்ததாக பிளினியும்; "பூத்து" என்ற இந்தப் பேரையே உடைய ஒரு நதி இருந்ததாக பித்தோலமியும்; இதை அடுத்த தேசம் ரீஜியோ பூத்தென்சிஸ் (Regio Phutensis) அதாவது "பூத்தின் தேசம்" என்றழைக்கப்பட்டதாக எரோமும் சொல்லுகிறார்கள். யூதருடைய கல்விக்கு முக்கிய இடமான சிரேனே இவ்விடத்திலிருந்தது.

"கானான்" வாக்குத்தத்த தேசத்தைக் குடியேற்றினான்.

7. இவர்கள் இதுமேயாவிலும் அரபியின் ஒரு பாகத்திலும் குடியேறினார்கள். "ராமா" அரபியில் ஒரு பட்டணத்தைக் கட்டினான். எசே. 27: 22. "சேபா"வின் இராஜஸ்திரீ சாலொமோன் ஞானத்தைக் கேட்க வந்தாள். மத். 12: 13 ல் "பூமியின் எல்லை" இதுதான். இது அரபியில் செங்கடலோரமாயிருக்கிறது. "திதான்" பேபல் மேண்டப் வாய்க்காலை அடுத்த ஏதேன் துறைமுக நகரமென்று நினைக்கப்படுகிறது.

8. "நிம்ரோது" என்பதற்கு பாஷண்டம், அவபக்தி, கலகம் என்றர்த்தம். முதலில் பலத்த வேட்டைக்காரனாயிருந்து வரவர மனுஷ இரத்தத்தையும் சிந்தப் பழகி, சனங்களை நிஷ்டூரமாய்க் கீழ்ப்படுத்



தி ஆண்டான். சரித்திரங்களிற் சொல்லப்படுகிற முதல் மகுடமன்னன் இவன் தான்.

9. "கர்த்தருக்கு முன்பாக" பிரபலமான என்றர்த்தம்.

10. "பாபேல்" குழப்பத்தின் பட்டணம் என்றர்த்தம். ஐப்பிராத் நதியில் கட்டப்பட்டு பிற்காலத்தில் கல்தேயா இராச்சியத்துக்கு இராஜதானியான பாபிலோன் நகரத்துக்கு இதுதான் மூலம். ஏசா. 13: 19—22. தானி. 4: 30. மகா பிரமாண்டமான பாபேல் கோபுரம் (Birs Nimrod) ஐப்பிராத் நதியின் மேல் கரையில் அதின் கழிமுகத்துக்கு 300 மயில்தூரத்தில் கட்டப்பட்டிருந்தது.

"ஏரேகு," ஐப்பிராத் நதியில், எல்அசேயா மண்மேடு (அல்லது கூழாங்கல் அரமனை) என்று சொல்லப்படுகிற இடத்திலிருந்ததாக நினைக்கப்படுகிறது.

"அக்காது" கிரேக்கர் இதை சிற்றஸ் என்பார்கள். தற்காலத்தில் இதற்கு அக்கர்கவ் என்று பேர். நாளதில் நிம்ரோதின்மேடு (Tel Nimrud) என்றழைக்கப்படுகிறது. திகிரிஸ் நதிக்கு மேற்கே 9 மயில் தூரத்தில் இதைக் காணலாம். இதற்குச் சமீபமாய் கோசான் நதி திகிரிஸ் நதியோடு சேருகிறது. "கல்னே" அக்காதுக்கு சற்றுத் தெற்கே திகிரிஸ் நதியின் கீழ்கரையில் டெசிபன் (Ctesiphon) என்ற பெரிய நகரமிருந்த இடத்திலிருக்கிறது.

11. "அந்தத் தேசத்திலிருந்து" நிம்ரோதின் தேசத்திலிருந்து. 10 வச. "அசூர்" சேமின் இரண்டாம் மகன். "புறப்பட்டுப்போய்" சபிக்கப்பட்ட காம் சந்ததியானான நிம்ரோதின் பலவந்தத்தினாலோ அவன் ஆளுகைக்குட்படப் பிரியமில்லாமையினாலோ தன் சனத்தாரோடு வெளியேறி அசீரியாவைக் குடியேற்றினான். பிற்பாடு இது நிம்ரோது ஸ்தாபித்த கூஷின் இராச்சியத்தைச் சேர்ந்த ஒரு நாடாயிற்று.

"நினிவே" திகிரிஸ் நதியில் அசீரியாவுக்குத் தலைநகரி.

"ரெகொபோத்து" கர்க்கேமிஷ் பட்டணத்துக்குத் தெற்கே ஐப்பிராத் நதியின் மேல்கரையில் இருந்தது.

"காலாகு" கோசான் நதிக்குத் தென்புறத்தில்,

12. "ரொசேன்" நினிவேக்கு சற்றுத் தெற்கே.

13. "லூதீம், லெகாபீம்," இவர்கள் காப்தோ-லிபியர் என்று தோன்றுகிறது. ஏசா. 66: 19. எரேமி. 46: 19. எசே. 27: 10. இவ்வாக்கியங்களிலும் இவர்கள் ஆப்பிரிக்காவில் குடியிருந்ததாகவே குறிப்பு வருகிறது.

"நப்தூகீம்" எகிப்தியரால் "நெவ்துஸ்" என்றழைக்கப்படுகிற கடற்கரையில் குடியிருந்தார்கள்.

"பத்துருசீம்" எகிப்தின் வடபக்கத்திற் குடியேறினான். அதினால் அந்த இடத்துக்கு பத்ரோஸ் என்ற பேர் வந்தது. ஏசா. 11: 11.

"கஸ்லூகீம், கப்தொரீம்" இவர்கள் சந்ததியார் நீல நதியின் முக்கோண நிலத்துக்கும், பலஸ்தீனாவின் தென் கடைசிக்கும் இடையில் குடியேறினார்கள். இவர்கள்தான் பெலிஸ்தியர். எரேமி. 47: 4 ல் கப்தோர், ஒரு தீவு என்று சொல்லப்படுகிறது. இது அந்த ஆதிகாலத்திலேயே எகிப்தியருக்குத் தெரிந்திருந்த கிரேத்தா தீவு என்று நினைக்கப்படுகிறது. இது கப்தொரீமால் குடியேற்றப்பட்டிருக்கலாம்.

15—19. "சீதோன்" கானான்தேசத்தின் வடமேற்கு மூலையில் குடியேறி வியாபாரத்திற் சிறந்த சீதோன் பட்டணத்தைக் கட்டினான். நியா. 18: 7. ஏசா. 23: 2. "கேத்து" ஏத்தியருக்கு முற்பிதா. தெற்கே எபிரோனுக்குச் சமீபமாய்க் குடியேறினார்கள். ஆதி. 23: 3—7. "எபூசி

யர்" எருசலேமில் தாவீதின் காலம்வரையுமிருந்தவர்கள். 2 சாமு. 5: 6—9. "ஏமோரியர்" பலத்த சாதியாரானதினாலே எல்லாருக்கும் பதிலாக இவர்கள் பேர் வழங்கப்படுவதுண்டு. சவக்கடலுக்கு மேற்கே மலைநாட்டில் குடியிருந்ததுமல்லாமல் (எண். 13: 29.) யோர்தானுக்குக் கிழக்கிலும் குடியேறினார்கள்.

யோசுவா அழித்த கானானியருக்குள் இந்தப் பேர்களெல்லாம் வரவில்லை. சிலர் கானானுக்கு வடக்கே குடியேறிப்போய்விட்டார்கள். 2, 3. வம்சங்களை ஒரு பேருக்குள் அடக்கிச் சொல்லப்படுவதுமுண்டு. சோதோம் கொமோராவும் இவர்கள் எல்லைக்குள் அடங்கியதுதான்.

21. "ஏபேர்" இவனால் இஸ்ரவேலருக்கு எபிரோயர் என்ற பேர் வந்தது.

22. "ஏலாம்" எலிமாயிஸ் என்னப்பட்ட தென்பாரசீகத்தில் குடியேறினதாகக் காணப்படுகிறது. இது பூர்வத்தில் சூசியானா என்னும் நாளதில் கூசிஸ்றான் என்னும் அழைக்கப்படுகிற நாட்டை அடுத்திருந்தது. வேதத்தின் பின்பாகத்தில் ஏலாம் என்பது பாரசீகம் முழுமைக்கும் பேர். எரேமி. 49: 34, 35. "அசூர்" 11 வியா. பார்.

"அர்பக்சாத்து" எபிரோயருக்கும் பூர்வ அரபருக்கும் முற்பிதா.

"லூத்து" சின்னஆசியாவில் குடியிருந்தவர்களுக்கு முற்பிதா என்று பாரம்பரை உண்டு.

"ஆராம்" பாபிலோனியாவுக்கு வடக்கேயுள்ள "ஆராம்நகராயீம்" என்ற செழிப்பான தேசத்திற் குடியேறினான். ஆராம் நகராயீம் என்பதற்கு "இரண்டு நதிகளுக்கு இடையிலுள்ள அராம்" என்றர்த்தம். இந்த அர்த்தத்தைக்கொண்டே கிரேக்கர் அதற்கு மெசொப்பொத்தாமியா என்றும், 24: 10. பதான் ஆராம் (அதாவது ஆராமின் சமதேசம்) என்றும் பேர் தரித்தார்கள். 25: 20. இந்த தேசம் வேதத்தில் சீரியா என்று அடிக்கடி பேசப்படுகிறது. ஆகையால் இதை பலஸ்தீனா சீரியா என்று நினைக்கக்கூடாது.

23. "ஊத்ஸ்" யோபின் தேசமான அரபியின் வடபக்கத்திற் குடியேறினான்.

25. "பேலேக்" என்பதற்குப் பிரிவினை என்றர்த்தம். எபிரோயர் இவன் வழியாயுண்டானவர்கள். சனங்கள் சிதறுண்ட காலத்தில் இவன் கல்தேயாவிலே இருந்தானென்று தோன்றும். ஏனென்றால் இவன் சந்ததியான தேராகும் அவன் குடும்பத்தாரும் "ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்தில்" குடியேறியிருந்தார்கள். 11: 31.

"யொக்தான்" பூர்வ அரபர் இவன் வழியாயுண்டானார்களென்று நினைக்கப்படுகிறது.

30. யொக்தானுடைய குமாரர் ஆரம்பத்தில் இந்தியாவில் குடியேறி இந்துக்களில் பெரும்பாலார்க்கு முன்னோர்களாயிருந்தார்களென்று ஒரு சாஸதிரி (Faber) சொல்லுகிறார்.

### படிப்பினை.

மனித ஜாதியாரெல்லாரும ஒரே வீட்டாரும், ஆதாம் நோவா என்ற இவர்கள் வீட்டுப் பிள்ளைகளுமாயிருக்கிறபடியால் ஒருவரை ஒருவர் நேசித்து நடக்கவேண்டியதற்கு எவ்வளவோ நியாயமிருக்கிறது. ஒரு மனுஷனை நாம் பார்க்கும்போது அவன் எச்சாதியானாலுஞ் சரி, எவ்வருணத்தானானாலும் சரி, அவனைச் சகோதரனாகப் பாவித்து அவன் நமது எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமானவனென்று எண்ணி நடக்கவேண்டும். சகோதர ஐக்கியம் மனிதருக்கிருக்க



வேண்டியது நியாயமானால் கிறிஸ்தவர்களுக்கு அது இருக்கவேண்டியது எத்தனை அதிக நியாயமும் அவசியமுமான காரியம்!

---

## The Parables of Christ.

---

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XI-வது. கெட்ட தோட்டக்காரரைக்குறித்து.

மத்தேயு 21: 33, 44. மாற்கு 12: 1—12. லூக்கா 20. 9—18.

(தொடர்ச்சி.)

தோட்டக்காரருடைய குற்றத்தை இவ்வளவாகச் சொல்லிமுடித்து, யூதத்தலைவர் கொஞ்சக்காலத்துக்குள்ளாகச் செய்யப்போகிற அக்கிரமத்தை தீர்க்கதரிசனமாகக் காட்டினபிறகு இரட்சகர் ஒரு கேள்வி கேட்கிறார். திராட்சத்தோட்டத்து எசமான் வரும்போது அந்தத் தோட்டக்காரரை என்னசெய்வான். பல தலைமுறைகள் ஒன்றின் பின்னொன்றாகக் கூட்டி இஸ்ரவேலின் அக்கிரம அளவை நிரப்பியிருக்க, ஒரு கூட்டத்தாரைப்போல தோட்டக்காரர் என்று மாத்திரஞ் சொல்லியிருக்கிறதை நாம் கவனிக்கவேண்டும். தேவன் ஒரு சனக்கூட்டத்தை ஒரு மனிதனைப்போலவே எண்ணி நடத்துகிறார். அப்படியிராவிட்டால் பிதாக்களின் அக்கிரமங்களை அறிக்கையிடுகிறது புரியாசஞ்செய்கிறதுபோலிருக்கும். மத்தே. 23: 32—35. இப்படிப்பட்ட வாக்கியங்களுக்கு யாதொரு பொருளுமிராது. நம்முடைய சுய நயப்பிரியத்தைத் தடுக்கும்படிக்குத் தேவன் பிரயோகிக்கிற பலவகைகளில் இதொன்று. நன்மைசெய்ய இதினால் நூதன முகாந்தரமும் ஏதுக்களுமுண்டாகும். இதில் யாதொரு அநியாயமுங் கொடுமையுமில்லை, பெரிய ஆசீர்வாதத்திற்கு இது கருவிதான். முழு உடலுக்கும் உயிரிருக்கிறதுபோல ஒவ்வொரு பங்குக்கும் உயிருண்டு. ஒரு தலைமுறையானது அக்கிரம அளவை நிரப்பி தன் அக்கிரமத்திற்காகவும முன்னோருடைய அக்கிரமத்திற்காகவும் தெண்டிக்கப்படும்போது அந்தச் சந்ததியைச் சேர்ந்த ஒவ்வொரு ஆளும் விசுவாசத்தினாலும் மெய்மனஸ்தாபத்தினாலும் வருந்துன்பத்தினின்று தன்னை விலக்கிக்கொள்ளலாம். உலகமழிந்தபோது ஒரு பேழையிருந்தது. எருசலேம் அழிந்தபோது பெல்லா என்கிற பட்டணமிருந்தது. இப்படித் துன்பத்தினின்று தப்ப ஏதுவில்லாவிட்டாலும், சரியான துன்பத்திற்கு அவன் தப்பித்துக்கொள்ளலாம். அதாவது தேவகோபாக்கினைக்கு அவன் தப்பிக்கொள்ளலாம். வெளியரங்கமான தண்டனைகள் இந்தக் கோபாக்கினையின் ரூபந்தானே.

குமாரன் தாமே இந்தக் கெட்ட தோட்டக்காரரிடத்தில் பழிவாங்கினாரென்று சொல்வது உவமைக்கு விரோதமாயிருக்கும். அவர் கொல்லப்பட்டுப்போனார். அவர்களிடத்தில் பழிவாங்க அவரால் கூடாது. திராட்சத்தோட்டத்து எசமானாகிய பிதாவே அதைச் செய்யவேண்டும். இது வேதவசன சாதாரண போதனைக்கு விரோதமல்ல. பிதாவானவரே சீனாமலையில் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அவரே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களெல்லார் பேரிலுங் கடைசிரா

ளில் பழிவாங்க வருவார். திராட்சத்தோட்டத்து எசமான் வரும்போது அந்தத் தோட்டக்காரரை என்னசெய்வான் என்கிற கேள்வியைக் கொண்டு அவர்கள் தங்களையே குற்றவாளிகளாய்த் தீர்த்துக்கொள்ளும்படி செய்கிறார். ஏசாயா 5: 3லுமிப்படியே கண்டிருக்கிறது. இந்த உவமையைக் கேட்டுக்கொண்டிருந்த பரிசேயர் இந்த நோக்கத்தை அறியாமல், அந்தக் கொடியரைக் கொடுமையாக அழித்து ஏற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரருக்கு திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பானென்று சொன்னதினால், தங்களுக்குந் தெரியாமல் தங்களையே குற்றவாளிகளாகத் தீர்த்துக்கொண்டார்கள். அல்லது இரட்சகர் சொன்னதின் நோக்கத்தை யறியாதவர்கள்போல காண்பித்தபடியால் அவர்களுக்கு இரட்சகர் திட்டமாய், நன்றாய் விளங்கத்தக்கதாக பின்வரும் வார்த்தைகளைச் சொல்லவேண்டியிருந்தது. "ஆகையால் நானுங்களுக்குச் சொல்லுகிறதாவது, தேவனுடைய இராச்சியம் உங்களிடத்திலிருந்து எடுபட்டு அதற்கு ஏற்ற கனிகளைத் தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்படும்." இப்பொழுது தான் கிறிஸ்துவும் அவருடைய சத்துருக்களும் எதிர்முகமாய் நின்றார்கள். முன்னொருவிசை ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலின் கெட்ட இராசனொருவனுஞ் சந்தித்தபோது அந்தத் தீர்க்கதரிசி வேஷமாறி, இராசன் தன்னைத் தானே தன் வாயைக்கொண்டு குற்றவாளியாகத் தீர்த்துக்கொண்டபிறகு சாம்பலைத் துடைத்துவிட்டதினால், அவன் தீர்க்கதரிசிகளிலொருவனென்றறிந்து, தெரியாமல் தன்னைக் குற்றவாளியாக்கிக்கொண்டதை உணர்ந்தான். 1 இராசா 20: 41. லூக்காவில் கண்டிருக்கிறபடி அந்தத் திராட்சத்தோட்டக்காரர்மேல் வரும் தண்டனையைக் கேட்டவுடனே சனங்கள் அப்படி ஆகாதிருப்பதாக என்றதினால் அவர்கள் உவமையின் நோக்கம் தெளிவாய்ச் சொல்லப்படுமுன்னமே தானே அறிந்திருந்ததாகத் தெரியவருகிறது. பரிசேயரோ அப்படிப்பட்ட வார்த்தைகளை லேசாய் சொல்லத்தக்கவர்களல்ல. இது ஒன்று பயத்தினின்றுண்டாகிற சொல். அப்படிப்பட்ட தீங்கு நீங்கவேணுமென்கிற விருப்பத்தினின்று பிறக்கத்தக்கது. அல்லது அவிசுவாசத்தினின்றுண்டாயிருக்கலாம். அது ஒருபோதும் நடவாது. எங்களுடைய சலாக்கியங்களை நாங்கள் ஒருபோதும் இழந்துபோகிறதில்லையென்பதுபோல சொல்லியிருக்கலாம். சொன்னவர்களுடைய குணபாகத்தைக் கவனிக்கும்போது இப்படித்தானிருந்திருக்கவேண்டும்.

அவர்களுக்குப் பிரியமில்லாத இந்தச் சத்தியத்தை இரட்சகர் சொல்லி பழையஏற்பாட்டிலுள்ள ஒரு தீர்க்கதரிசனத்தைக்கொண்டு அதை உறுதிப்படுத்துகிறார். தேவனுடைய யோசனைகளில் முந்தித் தானே இது தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று தெளிவாய்த் தெரியவருகிறது. "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" என்று வேதத்தில் நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? இது 118 ம் சங்கீதம் 22. 23 ம் வாக்கியங்களிலுள்ளது. இது மேசியாவைக்குறித்த சங்கீதமென்று யூதர்களே சொல்லுகிறார்கள். அப். 4: 11. 1 பேதுரு 2: 7. எபேசியர் 2: 20 முதலிய வசனங்களைப் பார்த்தாலுந் தெரியும். யூதரையும் புறச்சாதியாரையுங் கிறிஸ்து இணைத்தபடியால் அவருக்கு (சகரியா 4: 7. 1 இராசா 5. 17.) மூலைக்கல்லென்று பெயர். சங்கீதத்திலுள்ள வாக்கியம் இந்த உவமையோடு நன்றாய்ப் பொருந்துகிறது. அங்கே கட்டுகிறவர்கள் இங்கே தோட்டக்காரர். அவர்கள் ஆவிக்குரிய மாளிகையைக் கட்டும்படி தேவனால்



ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் ஞானக்கருத்தின்படி திராட்சத்தோட்டத்தைப் பண்படுத்தவேண்டியவர்கள். மூலைக்கல்லைத் தள்ளினது சுதந்தரவாளியைத் தள்ளிக்கொன்றதுக்குச் சமானம். பின்னுமொரு விசேஷித்த சத்தியத்தைக் காட்டவேண்டியிருந்தபடியால் திராட்சத்தோட்டத்தின் உவமையை நீக்கி, வேறொரு உவமையை இரட்சகர் எடுத்துக்கொள்ளுகிறார். பரிசேயருடைய பகை குமாரன் சுதந்தரவாளியாயிருக்கவேண்டுமென்கிற நோக்கத்தைத் தடுக்கமாட்டாது. பழிவாங்குதல் நடக்குமென்பது மாத்திரமல்ல. குமாரனே பழிவாங்குவார். இந்தச் சத்தியங்களைத் திராட்சத்தோட்டத்தின் உவமை தெளிவாய்க் காண்பிக்கமாட்டாது. தள்ளப்பட்ட கல் மூலைக்கல்லாகும். கட்டுகிறவர்கள் அதின்மேல் விழுந்து சேதமடைவார்களென்பதினால் இந்தச் சத்தியம் தெளிவாய்க் காட்டப்படும். அப்பொழுது அவர்கள் அந்தக் கல்லின்மேல் விழுந்து நசுக்கப்பட்டார்கள். முடிவுவரையில் அதற்கு விரோதஞ்செய்வார்களானால் அது அவர்கள்மேல் விழுந்து அவர்களை முற்றிலும் அழித்துப்போடும். கிறிஸ்துவின் தாழ்மையான நிலைமையைப் பார்த்து வெறுப்படைகிறவர்கள் கல்லின்மேல் விழுகிறார்கள். ஏசாயா 8: 14. லூக்கா 2: 34. இந்தக் குற்றத்தை முன்னமே செய்தவர்கள் இதைவிட பெரிதான குற்றத்தைச் செய்ய ஏதுவாயிருந்தார்கள். இதினால் அதிகக் கொடிய தண்டனை வருமென்று அவர்களை எச்சரிக்கிறார். வேணுமென்று அறிந்து இரட்சகரை யெதிர்க்கிறவர்கள் எவர்களோ அவர்கள்மேல் தான் கல் விழுகிறது. அவரின்னாரென்று அறிந்து அவருக்கும் அவருடைய இராட்சியத்துக்கும் தங்களை நேர் விரோதிகளாகக்கொள்ளுகிறார்கள். அவர்கள் விழுந்து நசுங்கிப்போகிறது மாத்திரமல்ல, இப்படிக் கல்லின்மேல் விழுந்து சேதமடைகிறவர்கள் லேசாய்ச் சுகமடையலாம். யார்பேரில் அந்தக்கல் விழுந்து அவர்களை நசுக்கிப்போடுதோ அவர்களை முற்றிலும் அழித்து நாசமாக்கிப்போடும். ஏசாயா 41: 2. 15, 16. தானியேல் 2. 44. மத்தேயு 8: 12. அவர்களைத் தவிடுபொடியாக்கிப்போடும். தானியேல் சொல்லுகிறபடி கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாகும்.

முன்னும்பின்னுமாக இந்த உவமையின் பொருளை யாவரும் அறிந்துகொண்டதுபோல, உவமை தங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்டதென்று வேதபாரகரும் பரிசேயரும் அறிந்தபோது அவர்களுக்கு வந்த கோபத்தை மூன்று சுவிசேஷகருஞ் சொல்லுகிறார்கள். இரட்சகரை அவர்கள் வெறுத்தார்கள். சனங்களுக்குப் பயப்படாதிருப்பார்களானால், அவரை பலாத்காரமாய்ப் பிடித்துக் கொல்லுவார்கள். ஆகிலும் இரட்சகர் அவர்களை விட்டுவிடவில்லை. இந்த உவமையில் தேவனுக்கும் அவர்களுக்குமிருந்த சம்பந்தத்தைக் கடமையாகக் காட்டி, அதை நிறைவேற்றாமல் அசட்டைசெய்தால் பெரிய குற்றமும் மோசமும் அவர்கள்பேரில் வருமென்று எச்சரித்ததுபோல, இதற்குப்பின் வரும் இராசகுமாரனுடைய கலியாண உவமையில் அந்த சம்பந்தத்தை அவர்களுக்குப் பிரியமாய்த் தோன்றத்தக்கதான சலாக்கியமாகக் காட்டுகிறார். அவர்களுடைய வேலையை ஒரு பாரமான சுமையாகவல்ல, அவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்ட தயவென்று காட்டுகிறார். இந்த முகாந்தரத்தினாலேயே அதை யற்பமாக எண்ணி அசட்டைசெய்கிறதினால் அதிக மோசத்துக்குங் குற்றத்துக்கும் ஏதுவாயிருப்பார்களென்று ரூபிக்கிறார்.

## On the Liturgy.

# செபபுஸ்தக வியாக்கியானம்.

## ௫. அதிகாரம்.

### ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

மூன்றாவது. மார்க்கசீர்திருத்தம் உண்டானபோது மற்ற பவனி போகுதல் எல்லாவற்றையும் நிறுத்தினவர்கள் இந்த நாட்களில் குருவானவரோடு சபையாரும் கோயிலைச் சுற்றி பவனிவந்து, 104 ம் சங்கீதத்தை வாசிப்பார்களாம். வேறு சில வேதவாக்கியங்களையும் சொல்லுவார்களாம். மேலும் நாலு பங்காக வகுக்கப்பட்ட ஒமிலியென்னும் பிரசங்கமும் இதற்கென்று நியமிக்கப்பட்டிருந்தது. திங்கள், செவ்வாய், புதன் இம்மூன்று நாட்களிலும் முதல் மூன்று பங்குகளும், பவனிபோகும் சமயத்தில் நாலாம் பங்கையும் வாசிப்பார்கள்.

### XXI. பரலோகத்துக்கேறின நாளைக்குறித்து.

உயிர்த்தெழுந்த நாற்பது நாளுக்குப்பிற்கு நம்முடைய இரக்ஷகர் பகிரங்கமாய் மனுஷீகத்தோடு பரத்துக்கேறி தேவனுக்கு முன்பாகக் காணப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உளுக்கார்ந்தார். அவருடைய மனுஷீகமாகிய முதற் பலனை ஏற்றுக்கொண்டது மனுஷசாதி முழுவதையும் அங்கீகரித்ததுக்கடையாளம். இந்த விசேஷித்த சங்கதியை நன்றியறிதலோடு கொண்டாடும்பொருட்டு சபையானது இந்த நாளை ஏற்படுத்தியிருக்கிறதுமல்லாமல் இதற்கேற்ற ஒரு நல்ல ஆராதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இரண்டாவது. வழக்க சங்கீதங்களுக்குப் பதிலாக 8: 15. 21 ம் சங்கீதங்களும் மாலையில் 24: 44. 108 ம் சங்கீதங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. 8 ம் சங்கீதம் சிருஷ்டிப்பின் ஆச்சரியத்துக்காகவும் மனுஷனை அந்த சிருஷ்டிப்புக்கு அதிபதியாக நியமித்த தேவ தயவுக்காகவும் அவரைப் போற்றவும் தாவீதினால் எழுதப்பட்டது. இரக்ஷகர் மனித அவதாரம் எடுத்து அதோடு பரமண்டலத்துக்கேறி அங்கே இராசனாக ஆளுகிறதினால், மனுஷ சுபாவத்தை தேவன் மேன்மைப்படுத்துகிறார் என்பதற்கு இது தீர்க்கதரிசனமாயுமிருக்கும். 15 ம் சங்கீதம் நம்முடைய இரக்ஷகர் மோக்ஷத்துக்கு குறிப்பாகிய சீயோன் மலையில் ஏறுகிறதைக்குறித்துப் பேசுகிறது. அந்தச் சங்கீதத்தில் சொல்லியிருக்கிற நற்குணங்களெல்லாம் அவரிடத்தில் தான் காணப்பட்டது. அந்த மேலான இடத்துக்கு நாமும் போய்ச் சேரவேண்டுமானால், அந்த குணங்களை நாமும் அடையப் பார்க்கவேண்டும். 21 ம் சங்கீதம் இரக்ஷகர் தம்முடைய சத்துருக்களைச் செயித்து தம்முடைய பலத்தில் உயர்ந்து நித்தியபாக்கியத்தில் பிரவேசித்து சிரசின்மேல் பொற்கிரீடம் தரித்துக்கொண்டபோது நிறைவேறிற்று.

மாலைமுதல் சங்கீதம் 24வது. சீயோன்மலையில் உடன்படிக்கைப்பெட்-



டிக்காக ஆயத்தம்பண்ணின இடத்தில் அதைக்கொண்டு வரும்போது தாவீது இதைப் பாடினான். அது இரக்ஷகர் பரலோகத்துக்கேறினதற்கு முன்னடையாளமாயிருந்ததுபோல இந்தச் சங்கீதமும் அதற்கேற்ற தீர்க்கதரிசனம். அந்தச் சமயத்தில் இரக்ஷகர் பரலோகத்துக்கேறின போது தேவதூதர்கள் இதையே பாடினதாக சிலர் சொல்லுகிறார்கள். 47 ம் சங்கீதம் அஞ்ஞான சாதிகளை தேவன் கீழ்ப்படுத்தினதினிமித்தம் அவரைத் துதிக்க யூதர்களை ஏவிவிடுகிறது. கிறிஸ்து சபையையும் இப்படியே ஏவிவிடுகிறது என்று சொல்லலாம். தேவன் ஆர்ப்பரிப்போடும் கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார். அவர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து கேடகத்தினால் சபையை ஆதரிக்கிறார். சத்துருக்களைச் செயித்து சனங்களின் பிரபுக்களை தம்முடைய சுதந்தரத்தோடு சேர்த்துக்கொள்ளுகிறார். 108 ம் சங்கீதத்தில் சங்கீதக்காரன் தன் கீதவாத்தியங்களை எழுப்பி தம்மை வானங்களுக்கு மேலாக உயர்த்தி, தம்முடைய மகிமையை பூமியனைத்தின்மேலும் எழும்பப்பண்ணினதற்காக அவரைத் துதிக்க ஏவிவிடுகிறான். இரக்ஷகர் பரலோகத்கேறி தேவனுடைய வலதுபாரிசத்தில் உளுக்கார்ந்தபோது இது நிறைவேறிற்று.

மூன்றாவது. காலைமுதலாம் பாடம் 5 மோ. 10. இதில் யூதருக்காக நியாயப்பிரமாணத்தை வாங்கின மோசே பரலோகத்துக்குப்போன சங்கதி அடங்கியிருக்கிறது. இரக்ஷகர் நமக்கு விசுவாசப்பிரமாணமாகிய புதுப்பிரமாணத்தை அனுப்ப பரத்துக்குப்போனார். மாலைமுதலாம் பாடம் 2 இராசா 2 ல் எலியா பரத்துக்கேறினதும் எலிசாவின்மேல் இரட்டிப்பான வரத்தைகொடுத்ததும் சொல்லியிருக்கிறது. இது இரக்ஷகருக்கு முன்னடையாளம். அவர் பரத்துக்கேறினபிறகு ஆவியைப் பரிபூரணமாய் தம்முடையவர்கள்மேல் ஊற்றினார். இரண்டாம் பாடமும் இந்த நாளுக்கு மிகவும் ஏற்றதுதான். சுருக்கசெபமும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் பழைய புஸ்தகங்களில் இருக்கிறபடியே இருக்கிறதுமல்லாமல் இந்தச் சமயத்துக்கு மிகவும் ஏற்றவைகள்.

### XXII. பரலோகத்துக்கு ஏறின பண்டிகைக்குப்பின்வரும் ஞாயிறு.

இந்த வாரத்தில் அப்போஸ்தலன்மார் செபம்பண்ணி, கிறிஸ்துவானவர் அனுப்புவேனென்று சொன்ன பரிசுத்தாவிக்காக காத்திருந்தார்கள். அதினால் எதிர்பார்க்கிற வாரமென்றும் இதற்குப் பெயர். மார்க்கம் சீர்திருத்தப்பட்டபோது இந்த சுருக்கசெபம் திருத்தப்பட்டது. நிருப சுவிசேஷ வாக்கியங்கள் பழையபடியே இருக்கிறது. சுவிசேஷ வாக்கியத்தில் சத்தியஆவியாகிய தேற்றரவாளன் வருவார் என்று காட்டியிருக்கிறது. நிருபவாக்கியம் பரிசுத்தாவியானவர் நமக்குக் கொடுக்கும் வரங்களை தேவகிருபையின் நல்ல உக்கிராணக்காரரைப்போல உபயோகப்படுத்த நம்மை ஏவிவிடுகிறது.

### XXIII. பரிசுத்தாவியின் பண்டிகை.

பெந்தேகோஸ்து பண்டிகை யூதருக்குள் வெகு முக்கியமானது. சீனாமலையில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதை இந்தச்சமயத்தில் நினைவுகூர்ந்தார்கள். இந்தச் சமயத்தில் அப்போஸ்தலர்மேல் பரிசுத்தாவியானவர் அக்கினி நாவுகளாக வந்திறங்கி அற்புத வரங்களை அவர்களுக்கு அளித்ததினால் கிறிஸ்தவர்களுக்கும் இது முக்கியமான பண்டிகைதான். பஸ்காவுக்கு 50 நாளுக்குப்பிறகு பெந்தேகோஸ்து பண்டிகை வந்ததுபோல ஈஸ்தர் பண்டிகைக்கு 50 நாளுக்குப்பிறகு தான் பரிசுத்தாவின் பண்டிகையும் வருகிறது. பவுல் இந்நாளில் எருசலேமில்

இருக்கவேண்டுமென்று ஆவல்கொண்டபடியால் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர் காலமுதல் இந்தப் பண்டிகையை ஆசரித்துவந்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். பவுல் எந்த நோக்கங்கொண்டவனாயிருந்தாலும் கிறிஸ்து சபையில் இதை ஆதிமுதல் கொண்டாடினார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அப். 20. 16.

---

## Communicant's Companion.

# நற்கருணை விளக்கம்.

## ௬. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(தொடர்ச்சி.)

நாம் என்னென்ன காரியங்களுக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்றால்,

(1) கர்த்தருடைய பந்திக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படியாக அவரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும். தேவனும் நாமும் இசைந்திருக்கும்படியாகத் தகுதியைக்கொடுக்கிறதெதுவோ அது தேவனுடைய வரம். நமக்கு அறிவு அவசியமா? அப்படியானால் ஞானத்தின் கதவோரத்தினின்று கொண்டு, நமக்கு வேண்டிய ஞான வரங்களை யளிக்கும்படியாக மன்றாடவேண்டும். நமக்கு அறிவைக் கொடுக்கும்படியாகத் தேவகுமாரன் உலகத்துக்கு வந்தார். விசுவாசம் அவசியமா? அது பராபரனுடைய ஈவாகவேயிருக்கிறது. "விசுவாசத்தை ஆரம்பமாய்த் துவக்குகிறவராயும் முடிக்கிறவராயுமிருக்கிற" அவரை நோக்கி "ஆண்டவரே எங்கள் விசுவாசத்தைப் பெருகப்பண்ணும்" என்று ஜெபம்பண்ணவேண்டும். அன்பு அவசியமா? பரிசுத்தாவியினாலே பராபரனுடைய அன்பு நம்முடைய இருதயங்களிலூற்றப்பட்டிருப்பதால் நாம் அவரைச் சிநேகிக்கிறோம். நம்முடைய இருதயத்திலுள்ள அன்பின் கங்கு கொழுந்துவிட்டெரியும்படியாய் பரிசுத்தாவியாகிய காற்று அதின்மேல் வீசவேண்டும். மனந்திரும்புதல் அவசியமா? தேவன் தாமே நமக்கு மனந்திரும்புதலைக் கட்டளையிட்டு "கல்லைப்போல கடினமான இருதயத்தை எடுத்துப்போட்டு மாம்சத்தைப்போல மிருதுவான இருதயத்தைக் கொடுக்கிறார்." "நெருப்புங் கட்டையுமிருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" என்று ஈசாக்கு தகப்பனைப் பார்த்துக் கேட்டான். அதாவது நற்கருணை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு வேண்டியவைகளெல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. தேவனுக்குகந்த பலியாகிய இருதயமெங்கே? நம்முடைய இருதயத்தை ஆவிக்குரிய பலியாக அவருக்கு ஒப்புக்கொடுக்கும்படியாய்த் தேவனே ஆயத்தப்படுத்தும்படி அவரைப் பார்த்து மன்றாடவேண்டும்.

(2) கர்த்தருடைய பந்தியை நாம் சேரும்போது நம்முடைய இருதயம் நெருப்பின்முன் மெழுகு உருகுமாப்போலுருகிப் பரவசப்படும்படி அவரைப் பார்த்து ஜெபம்பண்ணவேண்டும். அவரே "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும் வரண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவோம்" என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார். தேவாவியானவர் நமக்குள்ளே இவ்வகையாய்க் கிரியைசெய்கிறாரென்று அறிந்தாலேயொழிய, நாம் அந்தப் பந்தியைச்சேரத் தகுந்தவர்களல்லவென்றறிந்துகொள்ளவேண்டும். நாம் அந்தப் பந்தியைவிட்டு வரும்போதெல்லாம் எம்மாவூருக்குப் போன சீஷர் சொன்னதுபோல "நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா? என்று சொல்லுகிறவர்களாயிருக்கவேண்டும்.

(3) நாம் அந்தப் பந்திக்கென்று ஆயத்தப்படுத்துகிறதும் அதைச் சேருகிறதுமாகிய ஊழியம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கவேண்டும். தேவனால் அங்கீகரிக்கப்படாத நம்முடைய ஊழியமெல்லாம் அபத்தமே. மனிதர் புகழ்ச்சி வீண். ஆகையினாலே இந்த விஷயத்தில் நாம் தேவனோடே போராட்டம்பண்ணி என்னுடைய பிரயெத்தனங்களை "நீர் அங்கீகரித்தால் ஒழிய உம்மைவிடேன்" என்று மன்றாடவேண்டும். "என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து உன்னதமான தேவனுக்கு முன்பாக பணிந்துகொள்வேன்" என்றும் "நான் அவரைக் கண்டுபிடிக்குமிடத்தை யறிந்தால் தாவிலை" என்றும், கர்த்தருடைய பந்தியில் நான் அவருடைய திருமுக வெளிச்சத்தைப் பார்பபது எனக்கெவ்வளவு இன்பமென்றும், என் ஆத்துமாச் சிநேகிக்கிறவரை நான் காணுமட்டும் என் கண்ணுக்கு நித்திரையைக்கொடேனென்றும் அங்கலாய்ப்பாய் அவரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும். அவருடைய பொற்செங்கோலின் நுனியைத் தொடும்படி உத்தரவுகொடுக்கப்பட்டதானால் நான் கேட்ட விண்ணப்பம் இதுதான், அதாவது, உம்முடைய திருமுக வெளிச்சத்தை என்மேல் ஏறெடுங் கர்த்தாவே" என்ற இந்த ஒரே விண்ணப்பத்தை மாத்திரம் பண்ணுவேன். இதினாலுண்டாகுஞ் சந்தோஷத்துக்கு நிகரான சந்தோஷம் பூமியிலொன்றும் எனக்கிருக்கமாட்டாது.

(4) கிறிஸ்துவினிரத்தத்தால் நம்முடைய பாவங்களெல்லாம் நிவர்த்தியாகும்படி ஜெபம்பண்ணவேண்டும். எசேக்கியாவுமிந்த ஜெபத்தையே பண்ணினான். (எசேக்கியாவின் ஜெபத்தைப் பார்.) பலவகையிலே நாம் செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் செய்யத்தகாதவைகளைச் செய்துவருகிறோம். ஆகையால் நாம் தேவனுடைய கண்டிப்பான சட்டத்தின்படி நடப்பது நம்முடைய கடமை. "உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தினாலும் முழுப் பெலத்தினாலும் உன் முழு ஆத்துமாவினாலும் முழு மனதினாலும் சிநேகிப்பாயாக" என்பது அந்தச் சட்டம். ஆகையால் நாம் அந்தச் சட்டத்தின்படியே நடந்துவருவதில்லையென்பதைப்பற்றி உங்கள் மனச்சாக்ஷி சொல்லும். மனச்சாக்ஷியைவிடப் பெரியவராகிய தேவனும் அதை யறிந்திருக்கிறார். ஆனாலும் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படியாய்த் தேவனிடத்தில் நொறுங்குண்ட இருதயத்தோடே மன்றாடினோமானால் அவர் நமக்கிரங்கி நமமுடைய பாவங்களெல்லாவற்றையும் மன்னிப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. தாவீதின் சங்கீதங்களிலும் பவுலப்போஸ்தலனுடைய நிருபங்களிலும் நாம் ஜெபம்பண்ணவேண்டிய விதத்தையும் வார்த்தைகளையும் அறிந்துகொள்ளலாம். ஜெபத்தின்மூலமாய் அவரண்டை போகிறவர்களை ஒருபோதுந் தள்ளார். யாககோபின் தேவன் அவருடைய புத்திரரை நோக்கிப் பார்த்து நீ என்னைத் தேடுவது வீண் போகுமென்று ஒருபோதுஞ் சொல்லவில்லை.

---

# எ. அதிகாரம்.

### நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.

பொழிப்புரை.

I. தீர்மானமான மனதோடும்,
II. அமரிக்கையுள்ள மனதோடும்,
III. தேவசந்நிதானத்தைப் பற்றின ஒடுக்க வணக்கத்தோடும்,
IV. நம்முடைய அபாத்திரத் தன்மையை உணரும் எண்ணத்தோடும்.
V. பிள்ளைகளுக்குரிய நம்பிக்கையோடும்,
VI. தேவன் பேரிலுள்ள வாஞ்சையோடும்,
VII. தேடினது கிடைக்குமென்கிற நம்பிக்கையோடும்,
VIII. சந்தோஷமும் நன்றியறிதலுமுள்ள மனதோடும்.
IX. யாவருக்கும் விசேஷமாய் மெய்க்கிறிஸ்தவர்கள் யாவருக்கும் அன்பைக் காட்டுகிற குணத்தோடும் சேரவேண்டும்.

கலியாண விருந்தை ருசிக்கப்போகிறவர்களுக்கு கலியாண வஸ்திரமிருப்பது அவசியம். நற்கருணையாகிய விருந்தை ருசிக்கப்போகிறவர்களுக்கும் அதற்குரிய நற்குணங்களிருக்கவேண்டும். இதை விளக்கிக் காட்டும்படி வேதத்திலே ஒரு நல்ல சட்டமிருக்கிறது. (அதாவது) நீ தேவனுடைய வீட்டுக்குப் போகும்போது உன் காலைக் காத்துக்கொள். (அதாவது) "எல்லாக் காவலிலும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" என்பதே. இராஜாதிராஜனுடைய பந்தியைச் சேரும்போது நமக்கு முன்னிருப்பதின்னதென்று கவனிப்பது உத்தமம். ஆசாரியர்களை ஏற்படுத்தும்போது அவர்களை ஸ்நானம்பண்ணுவிப்பது வழக்கம். ஆனால் அந்த ஸ்நானமே போதுமென்றிருக்கவில்லை. அவர்கள் தாங்கள் ஊழியஞ்செய்யப்போகும்போதெல்லாம் ஸ்நானம்பண்ணி உடுத்திக்கொண்டுபோவார்கள். அதில் தவறினால் அவர்களுக்குச் சிக்ஷையுண்டு நாமும் அவர்களைப்போல தேவனுக்கு ஆசாரியர்களாயிருக்கிறோம். நாம் தேவனுக்கு முன்பாகச் சேரும்போதெல்லாம் பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்களாயிராவிட்டால் அவருடைய ஆசீர்வாதத்தையல்ல, சாபத்தைப் பெறுகிறவர்களாயிருப்போம். யோசுவா ஜனங்களைப் பார்த்து உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். நாளை உங்கள் நடுவே தேவன் அற்புதங்களைச் செய்யப்போகிறாரென்று சொன்னான். கிருமிகளும் விரியன் பாம்பின் குட்டிகளுமாகிய நம்மோடு தேவன் உடன்படிக்கைக்குட்படுவதும் கலகக்காரரின் புத்திரராகிய நமக்கு இப்படிப்பட்ட ஈவுகளை யளிப்பதும், தம்முடைய கிருபையின் வல்லபத்தால் பாவிகளைப் பரிசுத்தம்பண்ணி, துக்கமுள்ளவர்களை ஆறுதற்படுத்தி, பரிசுத்தாவியின் சந்தோஷத்தால் நம்மை நிறைவாக்குகிறதுமே நமக்குள் நடப்பிக்கிற பேரதிசயம்.



# Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** இங்கிலாந்துக்கும் அமேரிக்காவுக்குமுண்டாயிருந்த பிணக்கு நீங்கினதினிமித்தம் சென்ற நவம்பர்மீ 2௯௨ சந்தோஷ நாளாகவும் தோத்திர நாளாகவும் கொண்டாடப்பட்டது. அதற்கு முந்தின நாள் அமேரிக்காவில் ஒரு ஓய்வு நாளாக ஆசரிக்கப்பட்டது.

பிரான்சிய துரைத்தன சபையாருக்குள் அத்தேசத்தின் அதிபத்தியத்தைக்குறித்து சம்வாதம் உண்டாயிற்று. அதில் ஒரு பக்ஷத்தார் சர்வதேசசபையார் கலைந்துபோகவேண்டுமென்றும், மறு பட்சத்தார் அவர்கள் கலைந்துபோகப்படாதென்றுஞ் சொல்லுகிறார்கள். இதினால் என்ன நேரிடுமோவென்று தேசாபிமானிகளிற் பலரும் ஏங்கி மௌனமாயிருக்கிறார்கள். தேயர் துரை இதற்காக விசனப்பட்டும், கூடியமட்டும் துரைத்தன காரியங்களை சமாதானமாய் நிர்வகிப்போமென்கிறார். பட்டமிழந்த நப்போலியச் சக்கரவர்த்தி மகன் அங்கிலேய தேசத்தைச்சேர்ந்த உலுல்விச் நகரத்திலுள்ள ராணுவ காலேஜில் ராணுவத் தொழில் முதலானவைகளைக் கற்றுக்கொண்டுவருகிறார். சில காலத்திற்குமுன் பஞ்சாப் கவர்னராயிருந்த ஸ்ரீ டொனலட் மக்லௌட் என்பவர் லண்டன் நகரத்தின் கீழ்த்தரை இருப்புப் பாதை வழியாய்ப் பயணம்போனபொழுது, ஏதோ ஒரு பிசகினால் நசுங்கிப் பிராணசேதமடைந்தார்.

ஜின்ஜிப்பாருக்குப் போகிற ஸ்ரீபார்ட்டில் பிரெயர் துரை இத்தாலியாவைச் சேர்ந்த பிலோரென்ஸ நகரத்தின் வழியாய்ப் பயணமான பொழுது, இத்தாலிய அரசர் பொற்பதக்கம் ஒன்று அவர் கையில் கொடுத்து, அதை ஆபிரிக்க தேசாந்திரியாகிய டாக்டர் லிவிங்ஸ்டன் துரைக்குக் கொடுக்கும்படி சொன்னார்.

**இந்தியா.** மாட்சிமைதங்கிய கவர்னர் ஜெனரலவர்கள் புனாவை விட்டுப் புறப்பட்டபின்பு, பம்பாய்க் கவர்னரவர்களோடு நிஜாம்பிரதேசத்தில் குண்டுவா முதலானவிடங்களுக்குப் போனார்கள். அங்கங்கே அதிக பக்திவிநயத்துடனே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். சென்றமீ 12௨ மீளவும் கவர்னர் ஜெனரல் கல்கத்தா போய்ச் சேர்ந்தார்.

திருவிதாங்கோட்டு மகாராஜா அலகபாத்துமட்டும் பயணமாய்ப் போனபின்பு, வடக்கில் உள்ள குளிர்ச்சி சரீர சுகத்துக்கு ஈனமாகுமென்றெண்ணி, தமது இராச்சியத்துக்குத் திரும்பிப்போகத் தீர்மானித்தார். ஸ்ரீமாதவராயர் ஹோல்கார் மஹாராஜா அவர்களுக்குப் பிரதான மந்திரியாக நியமனம்பெற்றிருக்கிறார்.

வட இந்தியாவில் பிரசித்தமாக்கப்பட்ட பத்திரிகை ஒன்றில் வருகிற வருஷத்தில் வருமானவரி ஏற்பாடு திரும்ப விதிக்கப்படுவதில்லையென்று கண்டிருக்கிறதாம்.

திருச்சிராப்பள்ளிக்கும் திருமங்கலத்திற்கும் ஊடே உண்டாக்கப்படுகிற இருப்புப் பாதையின் வேலை திரபதிகரமாய் நடக்கின்றது. திருச்சிராப்பள்ளியிலிருந்து முப்பத்தொன்பது மயில் தூரம் மின்கம்பி வைத்திருக்கின்றது. கொஞ்சக்காலத்துக்குள் தூற்றுக்குடியினின்று இருப்புப்பாதை வழியாய், பயணக்காரர் வடக்கேசென்று, சென்னை, பம்பாய், கல்கத்தா, வடமேற்கு இந்தியாவில் உள்ள பிரதான பட்டணம் எவற்றிற்கும் போக்குவரவுபண்ணுவது எளிதாகும்,

ஜனுவரிமீ நாள் 31. மார்கழிமீ 19உமுதல், தைமீ 19உவரை.

| வாரம். | இங். தேதி. | தமிழ். தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ககூ | கர்த்தர் சதாகாலங்களாய் இராசரீகம்பண்ணுவார். யாத். 15: 18. |
| வி | 2 | உ0 | பூமியின் நடுவில் நானே கர்த்தர். 8: 22. |
| வெ | 3 | உக | நானும் என் சனமும் துன்மார்க்கர். 9: 27. |
| ச | 4 | உஉ | உன்னைத் தாழ்ந்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய். 10: 3. |
| ஞா | 5 | உந | நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவனல்ல. 1 இரா. 19: 4. |
| தி | 6 | உச | இங்கே உனக்கென்ன காரியம்? 9. |
| செ | 7 | உரு | நீ கொலைசெய்ததும் எடுத்துக்கொண்டதுமில்லையோ? 21: 19. (29. |
| பு | 8 | உசு | ஆகாப் எனக்குமுன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா |
| வி | 9 | உஎ | அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான். சங்கீதம் 72: 7. |
| வெ | 10 | உஅ | அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள். 9. |
| ச | 11 | உகூ | எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். 13. |
| ஞா | 12 | கூ0 | முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். 73: 24. |
| தி | 13 | க | பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. 25. |
| செ | 14 | உ | உம்மைவிட்டு சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். 27. |
| பு | 15 | ந | எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். 28. |
| வி | 16 | ச | பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான். பிர. 9: 18. |
| வெ | 17 | ரு | இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும். 10: 4. |
| ச | 18 | சு | படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான். 8 |
| ஞா | 19 | எ | நடக்கப்போகிறது இன்னதென்று மனுஷன் அறியான். 14. |
| தி | 20 | அ | மிகுந்த சோம்பலினாலே மேல்மச்சு பழுதாகும். 18. |
| செ | 21 | கூ | என் இரட்சிப்பு தாமதிப்பதில்லை. ஏசாயா 46: 13. |
| பு | 22 | க0 | இஸ்ரவேலுக்கு என் மகிமையைக் கட்டளையிடுவேன். 13. |
| வி | 23 | கக | நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன். 47: 3. |
| வெ | 24 | கஉ | நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள். ஓசியா 10: 12. |
| ச | 25 | கந | கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறது. 12. |
| ஞா | 26 | கச | நீர் சீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. யோ. 6: 69. |
| தி | 27 | கரு | உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான். 70. |
| செ | 28 | கசு | உலகம் என்னைப் பகைக்கிறது. 7: 7. |
| பு | 29 | கஎ | தேவனே சத்தியபரர். உரோமர் 3: 4. |
| வி | 30 | கஅ | எந்த மனுஷனும் பொய்யன். 4. |
| வெ | 31 | ககூ | நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. 10. |

## விசேஷித்த நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனப் பண்டிகை.
5. கிறிஸ்து பிறந்த பண்டிகைக்குப்பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
6. வெளிப்படுத்தலென்னும் பண்டிகை.
12. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.
14. பௌரணமி.
19. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப்பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
26. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப்பின்வரும் மூன்றாம் ஞாயிறு.
29. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 25.** **February.** **No. 2.**

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 22
Christian Church History. ... ... ... ... ... 24
The Parables of Christ. ... ... ... ... ... 26
Notes on Genesis. ... ... ... ... ... ... 29
On the Liturgy. ... ... ... ... ... ... ... 32
A Family Commentary on the Sermon on the Mount. 34
Communicant's Companion. ... ... ... ... ... 37
Summary of News. ... ... ... ... ... ... 39


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... உஉ
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... உச
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... உசு
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... உகூ
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... நஉ
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... நச
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... நஎ
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... நகூ



**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,**

BY L. DEVANAYAGAM PILLAY.

**1873.**

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### யோர்தானைக் கடந்தது.

யோசுவா 3, 4 அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

மறுநாளிலே மேகஸ்தம்பம் இடம்பெயர்ந்து, கரைபுரண்டு மும்முரமாயோடுகிற ஆற்றுக்கு நேராய் உயரமான கரையிலிருந்து பள்ளத்தாக்கிலிறங்க ஆரம்பித்தது. மேகஸ்தம்பமும் அதற்குப் பிறகாலே கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துகொண்டுபோன ஆசாரியர்களும் வெகு தூரம்போகிறவரையில் சனமெல்லாம் பார்த்துக்கொண்டே நின்றது. என்னத்தினாலென்றால் சகல சனங்களும் கர்த்தருடைய பெட்டி போன மார்க்கத்தைத் தெளிவாய்க் காணும்படிக்கு அது அரைமைல் தூரத்துக்கு அப்பால் சனத்துக்கு முன்னே போய் நிற்கவேண்டுமென்று யோசுவா சொல்லியிருந்ததினாலே தான். அப்புறம் சனங்களும் புறப்பட உத்தரவுண்டாக, அந்த ஏராளமான சனக்கூட்டமெல்லாம் தூரத்தில் நின்ற கர்த்தருடைய பெட்டியையும் மேகஸ்தம்பத்தையும் பார்த்துக்கொண்டே ஆற்றிலிறங்க ஆரம்பித்தார்கள். இப்பொழுதுதான்கர்த்தர் நடப்பிக்கப்போகிற பெரிய காரியத்தை யோசுவா சனத்துக்கு அறிவித்தான். அதோ ஆசாரியர் சலத்தின் ஓரத்தில் வந்துவிட்டார்கள். மேகம் சற்றுநேரம் ஆற்றின் மீது ஆடுகிறதுபோல நிழலிடுகிறது. இதோ ஆற்றைக காணோம். என்ன ஆச்சரியம். சொற்பனமாயிருக்குமோ! அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஆயிராயிரமான கண்களெல்லாம் வஞ்சிக்கப்பட்டனவோ? இல்லை. காரியம் மெய்தான். ஆசாரியர்களுடைய கால் சலத்தைத் தொட்டமாத்திரமே சலம் பிரிந்துவிட்டன, அவர்கள் இடதுபாரிசத்திலுள்ள தண்ணீர் சவக்கடலுக்கு ஓடியது. வலதுபாரிசத்திலுள்ள தண்ணீரோ அநேக மைல் தூரத்துக்கு பள்ளதாக்குவழியாய்த் திருப்பி யடிக்கப்பட்டுப்போயிற்று. மேலே மலையிலிருந்து வந்த சலத்தை, கர்த்தரால் மீட்கப்பட்ட சனம் கடந்துபோகிறவரையில், அவருடைய கரம் அவ்விடத்திலேயே நிறுத்திக்கொண்டது.

சனங்களுங் கூட அற்புத முழுமையையும் பார்க்கக் கூடாதிருந்தது. முன் ஆழமும் மும்முரமுமான நதியாயிருந்த இடம் இப்போது தண்ணீரற்ற வரண்ட பள்ளத்தாக்காயிருக்கவும் அதைக் கழித்தவுடனே கானான்தேசமென்று மாத்திரம் அறிந்தார்கள். இந்தக் காட்சியைக் காணவே சந்தோஷ பூரிப்பாய் ஆர்ப்பரியார்களோ! ஆனால் நின்று தேவனை ஸ்தோத்திரிக்கவும் நேரமில்லை.



மேகஸ்தம்பம் மெதுவாய் முன்னுக்குப்போய்க் கொண்டேயிருக்கிறது. ஆசாரியர்கள் ஆழமான கரையை விட்டிறங்கி ஆற்றுக்குள்ளே நடக்கிறார்கள். ஆற்றின் நடுவில் சேர வெகு தூரமில்லை. பரும்புகளிலிருந்து இறங்கி சுற்றிச் சுற்றிவருகிற சேனையெல்லாம் பார்க்கத்தக்கதாக அவ்விடத்திலே திரும்பவும் அவர்கள் நிற்கிறார்கள். இப்பொழுது எக்காளங்கள் சந்தோஷமாய்த் தொனிக்கின்றன. முன்னேக்கி நடங்கள் என்கிற சத்தம் எங்கும் கேட்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான அந்தச் சனங்கள் பயமில்லாவிட்டாலும் தீவிரமாய் யோர்தானின் கரையில் வந்து சேருகிறார்கள். ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துகொண்டு அமரிக்கையாய் நிற்கிறார்கள். அவர்கள் அவ்விடத்தில் நிற்கும்வரையில் தூரத்திலுள்ள தண்ணீர் தேவனுடைய கரத்தினாலே தடுக்கப்பட்டு நிற்கின்றது. சனங்கள் கூட்டம்கூட்டமாய்க் கடந்துபோகிறார்கள். இன்னம் மேலும் மேலும் வந்துகொண்டேயிருக்கிறார்கள். அநேகமாயிரம்பெயர் கானான்தேசத்திற் பிரவேசித்துவிட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் ஆற்றுக்குள்ளே நடக்கிறார்கள். ஆயிராயிரமானவர்கள் இப்பொழுது தான் கரையைவிட்டு ஆற்றிலிறங்குகிறார்கள். யாராவது பிந்திப்போய் இக்கரையில் அகப்பட்டுக்கொள்ளுவார்களோ! எல்லோரும் கரையேறுமுன் மேகஸ்தம்பம் பேர்ந்துபோய் விடுமோ? அப்படி நேரிடாது. ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துகொண்டு யோர்தானின் நடுவில் வரண்ட நிலத்திலே நின்றார்கள். அந்த ஏராளமான கூட்டத்திலெல்லாம் ஒருவராவது பின்விடப்படவில்லை. ஒரு விளையாட்டுப் பிள்ளையாவது ஒரு விர்த்தாப்பியனாவது ஒரு எளிய இஸ்ரவேலனாவது ஒரு அற்ப விசுவாசியாவது கைவிடப்பட்டதேயில்லை. சனமெல்லாம் யோர்தானைக் கடந்துபோனார்கள்.

அதோடு எல்லாம்முடிந்துபோகவில்லை. கர்த்தருடையபெட்டியோடு ஆசாரியர் இன்னம் நின்ற இடத்திலேயே நிற்கிறார்கள். சனங்கள் விடுதலையடைந்தார்கள், கானான்தேசத்துக்குள் வந்துவிட்டார்கள். ஆகிலும் அவர்களை இரட்சித்துக் கரைசேர்த்த சேனைகளின் கர்த்தருக்கு ஸ்துதிதோத்திரங்கள் செலுத்தவேண்டாமா? ஓசையான கைத்தாளத்தைக் கொட்டி கானானின் மதுரமான பாட்டை முதல்விசையாய்ப் பாடுகிறதற்கு மீரியாம் இப்பொழுதில்லை. சனங்களும் தவித்து இளைத்துப்போயிருந்தபடியால் பாட்டுப் பாடி சந்தோஷங் கொண்டாடக் கூடாமலுமிருந்திருக்கலாம். ஆகிலும் பாட்டினாலும் வார்த்தையினாலும் தங்கள் நன்றியறிதலைக் காண்பிக்கிறதிலும் இனனொரு உத்தமமான வகையாய்க் காண்பிக்கத்தக்கதாயிருந்தது. ஆசாரியர்களுடைய கால்கள் நின்ற இடமாகிய ஆற்றின் நடுவிலிருந்து பன்னிரண்டு கற்களை யெடுத்துக்கொண்டுபோய், பிற்காலத்திலே இஸ்ரவேலருக்கு ஞாபகார்த்தமாயிருக்கும்பொருட்டு ஆற்றின் அக்கரையில் குவியலாக நிறுத்திவைக்கக் கட்டளைபெற்றிருந்தார்கள். ஆற்றின் நடுவில் ஒரு குவியலும் கரையில் ஒரு குவியலுமாக இரண்டு குவியல்கள் நிறுத்தப்பட்டன என்று சொல்வாருமுண்டு. ஆற்றின் நடுவில் ஒரு குவியல் நிறுத்தியிருக்குமாகில், யோர்தானின் வேகமான நீரோட்டம் சீக்கிரத்துக்குள்ளாக அதை உருட்டிக்கொண்டுபோய் விடுமே. ஒரே கட்டளை குறிக்கப்பட்டிருப்பதினாலும், ஒரு குவியலே இருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியினாலும், ஆற்றின் நடுவிலிருந்து பன்னிரண்டு கற்களை யெடுத்துக்கொண்டுபோய் கரையில் மாத்திரம் ஒரு குவியலாக நிறுத்தினார்களென்பது தான் எதார்த்தமாகத் தோன்றுகிறது. அக்கா

லத்தில் இஸ்ரவேலர் அந்த வழியாய்ப் பயணம்பண்ணுகையில் பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களைப் பார்த்து, "தகப்பனோ இந்தக் கற்களை ஏன் இவ்விடத்தில் நிறுத்தியிருக்கிறது. இதின் பொருளென்ன என்று கேட்டிருக்குமே. அதல்லாமலும் பக்தியுள்ள இஸ்ரவேலர் வசந்த காலத்தில் கில்கால் என்று பெயர் வழங்கிய அந்த இடத்தைப் பார்த்துவரவேண்டும் என்ற நோக்கமாகவும், தங்கள் பிள்ளைகளோடு போயிருப்பார்களே. ஆம் அப்பொழுது அந்தப் பிள்ளைகள் பாசிபிடித்து ஆசி படிந்து கறுத்துப்போயிருக்கும் அந்தக் கற்குவியலைச் சுற்றி விளையாடியிருப்பார்கள். அவர்கள் ஓடியாடி தவித்துப்போன பின்பு தகப்பனானவன் அடியிற் கிடக்கிற கல்லின் மீது உட்கார்ந்து, பிள்ளைகளைத் தன் மடியிலும் பக்கத்திலுமாக இருத்திக்கொண்டு, தேவனுடைய வல்லமையையும் அன்பையும் விளக்கிய பூர்வத்தில் நடந்த மகத்துவமான இச்சங்கதியைத் திரும்பவும் ஒரு விசை அவர்களுக்கு விவரித்துச் சொல்லியிருப்பானென்றும் நினைக்கத்தக்கது.

---

## Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 13. அதிகாரம்.

*அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோவின் கொள்கைக்காரர்.—ஒரிஜன் குருப்பட்டமடைந்து செசாரியாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தேனிய வகுப்பார்—இக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்.—ஆத்துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்.—பிலிப்புவின் அரசாட்சி இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.*

(தொடர்ச்சி.)

---

பொந்துநாட்டிலிருந்து செசாரியாவில் ஒரிஜனிடத்தில் வந்திருந்த வேறு இரண்டு பேர் அதனடோரு தியோடோரு என்று பெயர்கொண்ட சகோதரர்கள். தியோடோரு என்பவனுக்கு வழக்கமாய் கிரகோரி என்ற பெயர் சொல்லப்படும். அவ்விருவரும் ஐந்து வருஷம் ஒரிஜனோடிருந்து சுவிசேஷத்தில் மாத்திரமல்ல, சாதாரணக் கல்வி விஷயங்களிலெல்லாம் அவனாற் போதனையடைந்தார்கள்.

கிரகோரி என்பவன் பிற்காலத்தில் அற்புதன் என்னும் பட்டப்பெயர் பெற்று மிகுந்த பிரஸ்தாபமடைந்தான். நாலாம் நூற்றாண்டில் அவனுடைய ஜீவிய விர்த்தாந்தம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. அது முழுவதும் அவன் நடப்பித்ததாகச் சொல்லிய மகா பெரிய அற்புதங்களாய்த் தான் நிறைந்திருக்கிறது. அதற்கு முந்திய நூலாசிரியர்கள் அவனுக்கு அற்புத வரம் இருந்ததைக்குறித்து ஒரு வார்த்தையாகிலுஞ் சொல்லவில்லை. ஆகையினாலே அவனால் நடந்ததாகச் சொல்லப்படும் அற்புதங்கள் பிற்காலத்தில் தோன்றின கட்டுக்கதைகளென்று சொல்



லவேண்டியதாகிறது. அற்புதம் செய்யும் வரம் படிப்படியாயும் தெரியாதவிதமாயும் நின்றுபோயிருக்கவேண்டுமென்று மேலே ஓரிடத்திற் குறிப்பித்தோமே. ஆகையால் இரண்டாம் நூற்றாண்டிலும் ஒருவேளை மூன்றாம் நூற்றாண்டிலுங் கூட ஓரோர்வேளை ஓரோரிடத்தில் அற்புதம் நடந்திருக்கலாம். என்றாலும் பொந்துநாட்டு கிரகோரியென்பவன் செய்ததாகச் சொல்லப்படும் அற்புதங்கள் நமது ஆண்டவராலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் நடந்தவைகளைப் பார்க்க மகா மகத்துவமானவைகள். அவன் ஜீவகாலமெல்லாம் அற்புதமே செய்துகொண்டிருந்ததாகவும் காட்டியிருக்கிறது. ஆகவே ஒன்றில் அற்புதமான அவன் சரித்திர முழுமையையும் மெய்யென்று அங்கீகரிக்கவேண்டும், அல்லது முழுவதும் கட்டுக்கதையென்று தள்ளவேண்டும். இந்தக் கட்டுக்கதைகளுக்குள்ளே உண்மை எவ்வளவேனுமிருந்தபோதிலும் இவ்வளவு காலத்துக்குப்பின் அதைக் கண்டுகொள்வது சாத்தியமன்று. கிரகோரிக் கண்காணியார் மிகுந்த கீர்த்திப் பிரஸ்தாபமடைந்திருந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. அவருடைய நாட்களில் அஞ்ஞானிகளுக்குள்ளே விசேஷமாய் அவர் வசித்த சீமையில் சுவிசேஷம் அதிசயமானவிதமாய்ப் பிரபலியமாயிற்று என்றும் சொல்லலாம். ஆகிலும் கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பூமியில் பிரஸ்தாபப்படுத்துவதற்கு தேவன் அவருக்கு அற்புத வரம் அருளியிருந்தாரோ இல்லையோ என்று அறிகிறதற்கு ஏதுவேயில்லை.

அவ்விரு சகோதரரும் செசாரியாவில் ஒரிஜனோடு அதிககாலம் சஞ்சரிக்காதபடிக்கு ஒரு தடை நேரிட்டது. அதென்னவென்றால் கி. பி. 235 ல் இராயன் ஜர்மானியரோடு யுத்தம் நடப்பிக்கும்படி போகும் மார்க்கத்தில் மென்ஸ் பட்டணத்திலே அவன் கொலையுண்டதுதான். அவனைக் கொலைசெய்தவன் திரேசியா நாட்டானான மாக்ஸிமினு என்று பெயர்கொண்ட ஒருவன். இவன் இராக்ஷதனைப்போல உயரமாய் வளர்ந்திருந்ததினாலே இராணுவத்தார் அவன்பேரிற் பக்ஷமாயிருந்தார்கள். என்றாலும் இராச்சியபாரம் தாங்குவதற்குப் போதுமான மனத்திறமையுடையவனேயல்ல; அவனைக் காட்டு மனுஷனென்றும் முரடனென்றும் எதார்த்தமாய்ச் சொல்லத்தக்கது. அவன் சிம்மாசனமேறின மாத்திரமே தனக்கு முன்னிருந்த இராயனுக்கு அனுசரணையாயிருந்த யாவரையுங் கொலைசெய்வித்தான். இவ்வகையாய் நாலாயிரம் பேர்வரையும் சங்காரமானார்கள். இராஜ அரண்மனையில் உத்தியோகஸ்தர்களாயிருந்த கிறிஸ்தவர்கள் பலரும் உயிர்ச்சேதமடைந்தார்கள்.

அலெக்சாந்தர் இராயன் கிறிஸ்தவர்களுக்கு தயைதாக்ஷணியம் பாராட்டாவிட்டாலும் அவர்களை பக்ஷபாதமில்லாமல் மற்றவர்களைப்போலவாவது நடப்பித்திருப்பானென்பதற்கு வேறு அத்தாட்சிகளில்லாவிட்டாலும் மேற்காட்டிய விசேஷம் ஒன்றே போதுமானதாயிருக்குமே. ஆகிலும் அவன் அரசுபுரிந்த காலத்தில், இராஜதானியிலே கிறிஸ்தவர்கள் பலர் இரத்தச்சாக்ஷிகளானார்களென்று சொல்லியிருப்பதுண்டு. இராயன் கிழக்கத்தி நாடுகளுக்குப்போயிருந்த வேளையில் அப்படி நடந்தாலும் நடந்திருக்கலாம். என்றாலும் கிறிஸ்தவர்களுக்குத் தொடர்ந்தேற்றியாய்த் துன்பமுண்டாயிருந்ததென்று சொல்ல எவ்வளவேனும் ருசுவில்லை. இராயனுடைய ஆலோசனைக்காரர்களிலொருவனாகிய அல்ப்பியன் என்று பெயர்கொண்ட பேர்போன நியாயசாஸ்திரியானவன் அநேக கிறிஸ்தவர்கள் மரணஆக்கினை யடைவதற்கு ஏதுவாயிருந்ததாகவும் சொல்லியிருக்கிறது. வேற்று மதங்களைக்குறித்

த் வைராக்கியமுடையவனாயிருந்தானென்று அவன் எழுதின நூல்களில் இப்பொழுதிருக்கிற பகுதிகளாலும் தெரியவருகிறது.

மாக்ஸிமினு என்பவனால் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட நிஷ்டூரங்களைக் கவனிக்குமிடத்து இந்தத் துன்பங்கள் ஒரு பொருட்டாய்த் தோன்றமாட்டாது. இந்த முரடன் மதாபிமானமுடையவனாயிருந்திருப்பானென்று நினைக்க இடமேயில்லை. அவனும் அவனைச் சூழ்ந்தவர்களும் கிறிஸ்தவர்கள் முந்தின அரசனுக்கு அனுசரணையாயிருந்தது கண்டு அவர்கள் ஒருவேளை அவன் மரணத்துக்காகப பழிவாங்குவதற்கு எத்தனப்படுவார்களென்று நினைத்திருக்கலாம். அதினாலேயே இராயன் சிம்மாசனமேறினவுடனே கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி சட்டம் பிறப்பித்தான். கிறிஸ்தவர்கள் இதுவரையில் வெகுகாலமாய் சுகமாயும் அமரிக்கையாயுமிருந்தபடியால் இப்பொழுது உண்டான துன்பம் அகோரமானதாகத் தோன்றியிருக்கும். இந்தத் துன்பத்தில் சபைத் தலைவர்களைச் சங்கரிக்கத்தான் முக்கியமாய் நோக்கினார்கள். இராயனுடைய நிஷ்டூரத்துக்கு தேசாதிபதிகளும் இணங்கியிருந்த இடங்களில் சங்காரம் முந்திய காலங்களிற்போல மும்முரமாய் நடந்தது. கப்பத்தோக்கியாவிலே துன்பம் அதிக முயற்சியாய் நடப்பதற்கு வேறொரு ஏதுவும் நேரிட்டது. அதென்னவென்றால் அச்சீமையில் பயங்கரமான பூகம்பங்களுண்டாகி பல பட்டணங்களை விழுங்கிவிட்டன. சனங்கள் அதைக் கிறிஸ்துமார்க்க விர்த்தியினிமித்தமாய் தேவர்கள் அனுப்பின கோபாக்கினையென்று பாவித்ததுதான்.

கப்பத்தோக்கியாவிலே கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட துன்பம் மகா கொடியதாயிருந்தபோதிலும், ஓரிஜன் என்பவன் செசாரியாவிலிருப்பதைப் பார்க்க அவ்விடம் தாவிலையென்று கண்டு அங்கே அடைக்கலந்தேடினான். அதெனடோரு, கிரகொரி என்று பெயர்கொண்ட அவன் சிநேகிதர் இருவரும் அவ்வாறே அலெக்சந்திரியாவுக்கு ஓடிப்போனார்கள். இதினாலே எகிப்துதேசத்துக் கிறிஸ்தவர்களுக்கு அதிகத் தொல்லை நேரிடவில்லையென்று நிதானிக்கலாமே. இக்காலத்தில் ஓரிஜென் என்பவன் கப்பத்தோக்கியாவிலுள்ள செசாரியாப் பட்டணத்தில் வசித்த தன் சிநேகிதனான பர்மிலியேனு என்பவனைப் போய்க் கண்டு பேசிக்கொண்டு, அப்புறம் ஜூலியானாள் என்று பெயருள்ள ஒரு பெருமாட்டி வீட்டில் அடைக்கலம்பெற்று, அவ்விடத்தில் இரண்டு வருஷம் தங்கியிருந்து தான் ஆரம்பித்திருந்த பெரிய வேலையை நடப்பித்துக் கொண்டுவந்தான்.

---

## The Parables of Christ.

---

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

---

## XII-வது. இராசகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

---

இந்த உவமையும், லூக்கா 14. 16லுள்ள உவமையும் ஒன்றல்ல. வெவ்வேறு உவமைகள். இரண்டிலும் விருந்துக்கழைக்குதல் காணப்படுகிறது. ஆகிலும் இரண்டும் வெவ்வேறு சமயங்களில் சொல்லப்பட்ட



து. லூக்காவிலுள்ளது விருந்துக்குப்போயிருந்த சமயத்தில் சொல்லப்பட்டது. இது தேவாலயத்தில் சொல்லப்பட்டது. முந்தினது இரட்சகருடைய பகிரங்க ஊழியத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டது. இது வெகுகாலத்துக்குப் பிந்தி சொல்லப்பட்டது. அப்பொழுது பரிசேயருடைய விரோதம் அவ்வளவாக முற்றவுமில்லை. வெளியாகவுமில்லை. பரிசேயரில் விசேஷித்த ஒருவனே அந்த உவமை சொல்லப்பட்ட வேளையில் இரட்சகரைத் தன்னோடு விருந்து சாப்பிட அழைத்திருந்தான். லூக்கா. 14: 1. இந்த உவமை சொல்லப்பட்டபோது அவர்களுடைய விரோதம் எவ்வளவோ அதிகமாய் வளர்ந்துபோச்சுது. இரட்சகரை பிடித்துக்கொண்டுபோகவேணுமென்று தங்களுக்குள்ளே தீர்மானம்பண்ணியிருந்தார்கள். யோவான் 11: 47—53. அந்த சமயத்தில் அவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவார்களென்கிற நம்பிக்கையிருந்தது. இப்பொழுதோ தேவயோசனையை அசட்டைசெய்து கிறிஸ்துவைப் பகைக்கத் தீர்மானம்பண்ணிக்கொண்டார்கள். காலத்துக்கும் கெட்டவர்களுடைய குணத்துக்கும் இசைவாக லூக்காவிலுள்ள உவமை சாந்தமாகச் சொல்லப்பட்டது. மத்தேயுவிலுள்ளது சற்றே கடுமையாய்ச் சொல்லப்பட்டது. பிந்தினதில் அவர்களுடைய குற்றம் அதிகமானபடியால், தண்டனையும் அதிக பயங்கரமாயிற்று. அந்த உவமையில் விருந்தாடிகள் அழைக்கப்பட்டும் போகமாட்டோமென்று மரியாதையோடு போக்குச்சொன்னார்கள். இந்த உவமையில் அழைத்தவர்களை எவ்வளவோ இழிப்பாய் எண்ணினார்கள். வீண்போக்குச் சொல்லுகிறது போதாதென்றெண்ணி வேலைக்காரரையும் செய்தி கொண்டு வந்தவர்களையும் அடித்துக்கொன்றார்கள். உவமையிலுள்ள மற்றச் சங்கதிகளோடு இது இசைவாயிருக்குமானால், முந்தின உவமையில் வீட்டெசமானுடைய குமாரனைப்போல இராசாவின் குமாரன் தானே அவர்களை அழைக்க வந்து அவர்களால் கொலையுண்டானென்று சொல்லவேண்டும். அதில் அசட்டைசெய்த விருந்தாடிகள் விருந்தினின்று விலக்கப்பட்டார்கள். இந்த உவமையிலோ அவர்களுடைய பட்டணம் சுட்டெரிக்கப்பட்டு, அவர்களும் அழிக்கப்பட்டார்கள். அழைத்தவர்களுடைய கண்யத்துக்கும் காரியத்தின் மேன்மைக்குந்தக்கதாக அவர்களுடைய அசட்டை அதிகக் குற்றமுள்ளதாக எண்ணப்படுகிறதுபோல இந்தப் பெரிய குற்றம் இந்த விருந்தைச்செய்தவர் ஒரு சாதாரணமான மனிதனல்ல, இராசாவென்பதினால் விசேஷமாகிறது. இது அசட்டை மாத்திரமல்ல, இராசதுரோகமும். விருந்து சாதாரணமானதல்ல. அவருடைய குமாரனுடைய கலியாணத்தை அடுத்தது. இந்தக் கடைசிச் சங்கதியினால் தேவனுடைய இராச்சியத்தோடு யூதர்களுடைய சம்பந்தம் பொதுவாக மாத்திரமல்ல, ஏசு என்னும் இராசனோடு அவர்கள் எவ்விதமாய் விசேஷித்துச் சம்பந்தப்பட்டிருக்கிறார்களென்றுங் காட்டுகிறது. எவ்வகையாய்ப் பார்த்தாலும் அவரை அசட்டைபண்ணின குற்றம் எவ்வளவோ பெரிதாகிறது. லூக்காவிலுள்ள உவமையில் தேவன் யூத சனங்களில் ஒரு வகுப்பாரை விட்டு அதாவது, பரிசேயரிடத்திலிருந்து அவர்கள் அசட்டையாயெண்ணின சலாக்கியங்களை யெடுத்து, வேறொரு தேசத்தாருக்கு நியாயப்பிரமாணத்தை அறியாத ஆயக்காரருக்கும் வேசிகளுக்கும் அவைகள் கொடுக்கப்படுமென்று மாத்திரங் கண்டித்திருக்கிறது. புறச்சாதியார் அழைக்கப்படுவதை சாடையாய்க் காட்டியிருக்கிறது; 23 ம் வசனம், மத்தேயுவிலோ தேவனுடைய இராச்சியம் யூத சனங்கள் ஏகமாய் அதின் சலாக்கியங்களை அசட்டைசெய்தவர்களானபடியால், அவர்களி

டத்திலிருந்து முற்றிலும் எடுக்கப்பட்டு புறச்சாதியாருக்குக் கொடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறது.

இவை இரண்டு உவமைகளும் வெவ்வேறானவைகளென்று காண்பிக்க இத்தனை நியாயங்களிருக்க, வேத விரோதி ஒருவர் இதுகளைக் கவனியாமல், லூக்கா மாத்திரம் இரட்சகருடைய வார்த்தைகளை உண்மையாய்ச் சொல்லுகிறதுபோலும், மத்தேயு இரட்சகர் சொல்லுகிறதோடு உண்மையில்லாதவைகளைக் கூட்டியிருக்கிறதுபோலுஞ் சொல்லுகிறார். வேலைக்காரரை கொடூரமாய் நடத்திக் கொன்றது முந்தின உவமைகளிலிருந்தெடுத்ததாகவும் வேறு சமயத்தில் தனியாய்ச் சொல்லப்பட்ட கலியாண வஸ்திர உவமையை மத்தேயு இந்த உவமையோடு தானாய்க் கூட்டியிருக்கிறதாகவும் சொல்லுகிறார். முந்தினதற்கு அவர் சொல்லுகிற ஒரு நியாயம் நல்லதாகத் தோன்றும். தோட்டக்காரர் தங்கள் எசமானுடைய ஊழியக்காரரை தங்களுக்கு வரவேண்டிய கனிகளை கேட்டபோது கொடுமையாய் நடத்தினது நடக்கக் கூடிய காரியமாயிருந்தாலும், விருந்தாடிகளாக அழைக்கப்பட்டவர்கள் வர மனமில்லாதபோதைக்கும் விருந்து ஆயத்தமாயிருக்கிறதென்று சொல்லவந்த வேலைக்காரரை அடித்துக் கொல்லுகிறது விளங்காத காரியம். அப்படிப்பட்டது உவமையில் வரத்தக்கதல்ல. உண்மையாய் நடக்கக் கூடியதானாலும் உவமையில் வரத்தக்கதல்ல என்கிறார். மனமில்லாமை மாத்திரம் இவர்கள் வராததற்குக் காரணமாயிருக்குமானால் இது நன்றாய் விளங்காத காரியந்தான். காரியத்தைப் பார்த்தாலோ தங்கள் எசமான்பேரில் அதிக வெறுப்புக்கொண்டு அவருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்யவேண்டுமென்கிற நோக்கம் முன்னமே இருந்திருக்குமானால் இவ்விதமாய் அது இப்பொழுது வெளிப்படுகிறது ஆச்சரியமல்ல. அவராலனுப்பப்பட்டவர்கள் முன்புக்குச் செய்கிற கலகம் அவருக்கு விரோதமாகவே செய்ததானபடியால், இப்படிப்பட்ட சமயத்தில் அநேகநாள் விரோதம் வெளிப்படுமே. வெளியரங்கமாய்ச் சொல்லப்பட்ட முகாந்தரமோ அவர்கள் அப்படி நடக்கக் கூடாததுபோல காட்டுகிறது. ஆகிலும் இந்த அநியாயமான நடத்தை தேவகிருபையைக் கூறுகிற கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளை நற்காரியங்களைக்குறித்து நற்செய்திகொண்டு வருகிறவர்களைக் கொடுமையாய் நடத்தி அவர்களைக் கொல்லுகிறதுமல்லாமல் அவர்களுடைய முத்துகளைக் கால்களின் கீழேபோட்டு மிதிக்கிறதை வெளிப்படுத்த தகுதியுள்ளதுதான்.

கலியாண வஸ்திரத்தைப்பற்றின சங்கதி ஆதியில் இதோடு சேர்ந்ததல்லவென்று அவர் சொல்லுகிற இரண்டாங் காரியமோ ஒரு ஆட்சேபனையின்மேல் நிற்கிறது. சரித்திரத்தில் காணுகிறபடி அவகாசமில்லாத ஒரு காரியத்தைக்கொண்டு போகாததினால் விருந்தாடியைத் தெண்டிக்கிறது நீதியல்ல என்பதுதான் அந்த ஆட்சேபனை. இதைப்பற்றிப் பிறகு பேசுவோம். மேலும் உவமையோடு நன்றாய்ச் சேராமல் அதினுடைய ஒற்றுமையைத் தடுக்கிற முற்றிலும் நூதனமான வேறு சங்கதி சேர்ந்திருக்கிறபடியால் இதைக்குறித்து ஆட்சேபிக்கிறார்கள். காரியமோ அப்படியல்ல, இரட்சகருடைய போதனையில் விளங்குகிற அன்பும் ஞானமும் இத்தன்மையுள்ளதென்று இது காட்டுகிறது. பாவிகளெல்லாரும் சுவிசேஷ நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்படி அழைக்கிற இந்த உவமையில், இதுகளை எப்பொழுதும் அனுபவிக்கவேணுமானால் தங்களுடைய பழைய நடக்கைகளைத் தள்ளவேணுமென்று அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறது எவ்வளவோ அவசியம். தியோப்பிலேற்றென்பவர் சொல்லுகிறபடி கலியாண விருந்துக்



குப்போகிற வாசலில் எவர்களும் தாராளமாய் நுழையலாம். நல்லவர்களும் பொல்லாதவர்களும் கிருபையாய் அழைக்கப்படுகிறார்கள். பிரவேசித்தவர்களோ பிறகு தங்கள் இஷ்டப்படி நடக்கக் கூடாது. மார்க்கத்தில் அமைந்தபிறகு அசுத்தமான வஸ்திரங்களைத் தரித்திருக்கிறவர்களைக்குறித்து இராசன் வெகு கண்டிப்பாய் விசாரணைசெய்வார். இது அவசியமான எச்சரிப்பு யாவரும் தேவகிருபையை அசட்டைசெய்து, முன்னே சுயாதீனமாய் அழைக்கப்பட்டிருக்கிறவர்கள் பிறகு பரிசுத்தத்திற்கு அழைக்கப்படுகிறார்களென்பதை மறந்துவிடக் கூடாது. லூக்காவில் சொல்லியிருக்கப்பட்ட உவமையோடு இது சம்பந்தப்பட்ட வகையைக்குறித்து இவ்வளவு தூரஞ் சொன்னது போதும். முந்தின உவமையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கர்த்தர் தான் இராட்சியத்துக்குரியவரென்றும், அதிக மேன்மையான வரிசையில் உற்பத்தியானவரென்றும் வெகு தெளிவாய்க் காட்டுகிறார். அதில் அவர் குமாரன், ஒரே குமாரன் வீட்டெசமானுக்கு அருமையான குமாரன். இதிலேயோ அவர் இராச வம்சத்தைச் சேர்ந்தவர் இராசனாகவும் இராசகுமாரனாகவும் விளங்குகிறார். சங்கீதம் 72: 1. இந்த உவமையில் வீட்டெசமானுடைய நடத்தை புதியஏற்பாட்டிற்குரியது. முந்தி அறிவிக்கப்பட்ட இராட்சியம் இராசாவின் வருகையோடு சம்பந்தப்பட்டது. முந்தின உவமையோ பழையஏற்பாட்டின் சரித்திரத்திற்குரியது. அதில் கிறிஸ்து தாமும் தீர்க்கதரிசிகளாகிய போதகன்மார் வரிசையில் கடைசியானவராகக் காணப்படுகிறாரேயொழிய, புது இராட்சியத்தை ஸ்தாபிக்கிறவராகக் காணப்படுகிறதில்லை. நியாயப்பிரமாணத்திற்குரிய அந்த உவமையில் தேவன் மனிதனிடத்திலிருந்து ஏதோ ஒன்று வேணுமென்று கேட்கிறதுபோலிருக்கிறது. இதிலோ தேவன் மனிதருக்குக் கிருபையாய் ஏதோ ஒன்றைக் கொடுக்கிறதுபோலிருக்கிறது. அதில் தான் கேட்டதை அவர்கள் கொடாததினால் மனஸ்தாபப்படுகிறார். இங்கே தம்முடைய தயவை ஏற்றுக்கொள்ளாததினால் கோபங்கொள்ளுகிறார். அங்கே கேட்கிறார். இங்கே கொடுக்கிறார். இரண்டுஞ் சேர்ந்து ஒரே காரியத்தை பூரணமாக்குகிறது. அந்த உவமை விட்டதிலிருந்து இது தொடங்குகிறது.

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### ௰௧. அதிகாரம்.

*பாபேல்.*

1. "ஒரே பாஷை." எபிரேயு பாஷை என்று காணப்படுகிறது. நோவாவும் சேம் சந்ததியில் ஏபேர் வழியாயுண்டான மற்றும் பக்திமான்களும் பாபேலைக் கட்டின நிம்ரோதின் கூட்டத்தோடு சேராததினாலே தங்கள் பூர்வ பாஷையையே பேசிவந்தார்கள். அதினால் அது ஏபேருடைய வம்சத்தாருக்கேயுரிய சொந்தப் பாஷைபோலாயிற்று. ஆகையால் ஏபேர் என்பவனால் இந்தப் பாஷைக்கு எபிரேயு என்ற பேர் வந்ததென்று நன்றாய் நிதானிக்கலாம். ஆபிரகாம் எபிரேயன்

என்றும் அவன் சந்ததியார் எபிரோயர் என்றும் அழைக்கப்பட்டதற்கு இதுவே முகாந்தரமாயுமிருக்கும்.

“கிழக்கே இருந்து” நிம்ரோது படையெடுத்து எல்லாரையும் தன் குடைக்குள்ளாககப் புறப்பட்டதில் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணியிருக்கலாம். நோவா பேழையைவிட்டு இறங்கினவுடனே சிநேயாருக்குக் கிழக்கே குடியிருந்தான் என்றும், அவன் சந்ததியார் இப்பொழுது மேற்கு முகமாய்ப் பிரயாணம்பண்ணினார்களென்றும் சிலர் நினைக்கிறார்கள்.

2. “சிநேயார் தேசம்.” 10: 10. வியா.

3, 4. பேலேக் பிறந்த காலத்தில் அதாவது சலப்பிரளயம் உண்டாகி 101 வருஷமானபின் இது நடந்ததென்பது அநேக கல்விமான்களுடைய அபிப்பிராயம். ஆனால் இந்த அதிகாரத்தில் நோவாவுடைய சந்ததியாரின் பெருக்கத்தைக் கவனிக்கும்போது அதைவிட அதிக காலமான பிற்பாடு இது நடந்ததாகத் தோன்றும். பேலேக் நாளில் பூமி பகுக்கப்பட்டதும், இப்பொழுது சனங்கள் சிதறடிக்கப்பட்டதும் வெவ்வேறு சம்பவங்களென்று பொதுவாக எண்ணப்படுகிறது.

சனங்கள் “பலுகிப்பெருகி பூமியை நிரப்ப”வேண்டும் என்பது தேவசித்தம். 9: 1. அதற்கு விரோதமாக அவர்கள் “பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு” ஒரே பாஷை பேசி தங்களுக்குப் பேரும் கீர்த்தியுமுண்டாக்கவும், நிம்ரோதின் இராச்சியத்துக்கு மத்தியஸ்தானமாயிருக்கவுமாக இப்படிப்பட்ட வீணாடம்பரமான நோக்கங்களையிட்டு இந்த நகரத்தையும் கோபுரத்தையும் கட்டினார்கள். தேவவாக்கை நம்பாமல் இனிமேல் சலப்பிரளயம் வருமென்று பயந்து அதற்குத் தப்பிக்கொள்ள நோக்கமாய் இதைக் கட்டினார்களானால் சமபூமியில் அல்ல உயர்ந்த மலைமேல் கட்டுவார்களே.

பிற்காலத்தில் இந்த இடம் விக்கிரகாராதனைக்குப் பேர்போன இடமாயிற்று.

“கல்லுக்குப் பதிலாக” இச்சம பூமியில் கல் அகப்படத்தக்க இடங்களில்லை.

“நிலக்கீல்” சாந்துபோன்ற ஒரு வகைக் களிமண். இயல்பாகவே அதிகப் பசையுள்ளது.

“நாம்” திரித்துவத்துக்குக் குறிப்பு.

“பாஷையை தாறுமாறாக்குவோம்.” மனுஷ நாவுக்குப் பேசும் சக்தியை அளித்த சர்வவல்லவர் “ஒருவர் பேசுவது மற்றொருவர் அறியாதபடி” செய்தார். இது ஒரு விநோதமான அற்புதம். இதினால் அவர்கள் வேலை நிறுத்தப்பட்டது. உலகத்திலே பல பாஷைகள் உண்டானது. அந்தந்தப் பாஷை வாக்கிலே உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள்.

10—25. 5: 4—20. வியா.

மெத்தூசலா 248 வயதாகிறவரையும் ஆதாம் உயிரோடிருந்தான். சேம் ஏறக்குறைய 100 வயதாகையில் மெத்தூசலா மரித்தான். சேம் தன் பத்தாம் தலைமுறையானான ஆபிரகாம் உயிரோடிருந்த காலமெல்லாம் பிழைத்திருந்தான். இப்படியாக ஆதாமுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் 2,000 வருஷத்துக்கு அதிக காலங்கள் சென்றாலும் ஆதாமுக்கு அளிக்கப்பட்ட தேவ வெளிப்படுத்தலை ஆபிரகாமுக்குச் சொல்ல இரண்டு பேராலே கூடும். ஆ!. சலப்பிரளயத்துக்குப்பின் மனிதருடைய ஆயுசு வரவர என்னமாய் குறைந்துபோயிற்று!



26. ஆபிரகாம் முக்கியத்துக்காக சேம், மோசே இவர்களைப்போல் முதலிற் சொல்லப்பட்டாலும், (5: 32. வியா.) ஆரான் எல்லாருக்கும் மூத்தவனாயிருக்கவேண்டும். ஏனென்றால், நடுவுள்ள நாகோர் அவன் மகளைக் கலியாணம்செய்திருக்கிறான். ஆபிரகாம் எல்லாருக்கும் இளையவன். எப்படியென்றால், தேராகு 205 ம் வயதில் மரித்தான். 32 வா. அப்போது ஆபிரகாமுக்கு 75 வயது. 12: 4. நடபடி 7: 4. ஆகையால் தேராகின் 130 ம் வயதில் ஆபிரகாம் பிறந்திருக்கிறான். மேலும் ஆரானின் குமாரத்தி என்று பெரும்பாலும் நினைக்கப்படுகிற சாராய் ஆபிரகாமுக்கு 10 வயதுக்கு மாத்திரம் இளையவள். 17: 17.

29. “இஸ்காள்” சாராளென்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறது.

“ஊர்” திகிரிஸ், ஐபிராத்து என்ற நதிகளுக்கு இடையிலுள்ள மெசொப்பொத்தாமியாவில், ஐபிராத்து நதி அருகிலிருந்தது, 19: 22 25. வியா. இப்பொழுது அதற்கு ஊர்பா (Urfah) என்று பேர். கிழக்கத்தி யூதர்கள் இதை “ஊர் என்ற கல்தேயருடைய பட்டணம்” என்றழைத்து ஆபிரகாமின் பிறப்பிடம் என்ற விசேஷத்துக்காக இப்பொழுதும் அந்த ஊருக்கு யாத்திரைசெய்துவருகிறார்கள். அந்த ஊருக்குள்ளே மிகவும் தெளிவான சலமுள்ள ஒரு குளமிருக்கிறது. அதற்கு “நேசர் ஆபிரகாமின் ஏரி” என்று பேர். அதிலே திரளான மீன்களுண்டு, இது அந்தக் குளத்துக்கு ஒரு விசேஷமாகச் சொல்லப்படுகிறது. ஊர்பாவுக்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் “ஆரான்” இருக்கிறது. நடபடி 7: 4. இதில் “ரெபெக்காளுடைய கிணற்றை” இப்பொழுதுங் காணலாம். இஸ்மவேலர் (or Bedouins) தொழுகிறதற்கும் தங்கள் மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுகிறதற்கும் இந்தக் கிணற்றுக்கு நாளதுவரையும் போய் வருகிறார்கள்.

“விட்டு” தேவஉத்தரவினாலே 12: 1. நடபடி 7: 2, 3.

தேவன் ஆபிரகாமை அழைக்குமுன் விக்கிரகாராதனை எங்கும் மிஞ்சிப்போய் தேராகும் குடும்பத்தாரும் “வேறே தேவர்களைச் சேவித்தார்கள்.” யோசு. 24: 2. ஆபிரகாம தன் ஜனன தேசத்தைவிட்டு விடும்படி தேவன் சொன்னதற்கு இது ஒரு முகாந்தரமாயிருந்தது. பிறகு அவன் வழியிலுள்ள மற்றவர்களும் ஆரானுக்கு வந்துவிட்டதாகக் காணப்படும்.

## படிப்பினை.

தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்புகளை மனிதர் எவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடுகிறார்கள்! சலப்பிரளயத்தின் இடிபாடுகள் தங்கள் கண்களுக்கு முன்னிருந்தும் பத்தியுள்ள நோவா வழியாயுண்டான மனிதர் அவன் இன்னம் உயிரோடிருக்கும்போதே துணிந்து, அக்கிரமம் செய்கிறார்கள். தேவஆவியானவர் மாத்திரம் நமது ஜென்ம சுபாவத்தை மாற்றக்கூடும்.—அநேகம் விசை மனிதர் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. சிதறடிக்கப்படாதபடி பாபேலைக் கட்டினார்கள். அதினாலேயே சிதறடிக்கப்பட்டார்கள்.—அநேகர் ஆரான்மட்டும் வந்துங் கானானில் பிரவேசியாமற் போகிறார்களே! 32 வா. மாற். 12: 34.—தாய்தந்தை பிள்ளைகள், இராசா குடி, ஐசுவரியவான் தரித்திரன், கல்விமான் பேதைமுதலான வித்தியாசம் பார்க்க மரணத்துக்குத் தெரியாது!

## On the Liturgy.

# செபபுஸ்தக வியாக்கியானம்.

## ௫. அதிகாரம்.

### ஒய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

இரண்டாவது. இங்கிலீஷில் இதற்கு வெள்ளை ஞாயிறு என்று பெயர். உலகத்தாருக்கு அறிவைக்கொடுக்க அப்போஸ்தலருக்கு வெளிச்சமும் பிரகாசமும் இந்தநாளில் உண்டாயிற்று. மேலும் இது ஞானஸ்நானம்பெறுகிற காலமானபடியால் அவர்கள் உடுத்தியிருக்கும் வெண்வஸ்திரத்தையிட்டும் இந்தப் பெயர் வந்தது. பூர்வீகத்தில் இங்கிலாந்திலிருந்தவர்கள் தாங்கள் சாப்பிடும் பாலை ஏழைக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்துவிடுகிற வழக்கத்தினின்றும் இந்தப் பெயர் வந்ததாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மூன்றாவது. காலை சங்கீதங்கள். 48: 68. 48 ம் சங்கீதம் எருசலேமை நினைத்துப் பாடினது. இது தேவாராதனைக்காக தேவன் தெரிந்துகொண்ட இடம். சத்துருக்களிலின்று ஆண்டவர் அந்தக் காரணத்தினிமித்தம் அதைத் தற்காத்து வந்தார். தேவஇரக்கத்துக்காகவும் சுவிசேஷத்தால் கிறிஸ்து சபைக்குண்டாகும் நன்மைகளுக்காகவும் தேவனுக்கு இந்தநாளில்துதிசெலுத்துகிறோம். அப்போஸ்தலன்மார் பரிசுத்தாவியைப் பெற்றது அந்த நன்மைகளில் விசேஷித்தது. இதைப் பார்த்த சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆச்சரியப்பட்ட அநேகர் கெட்டுப்போனபோதிலும் தேவாவியால் அந்நாளில் 3,000 பேர் சபையில் சேர்க்கப்பட்டார்கள். அப். 2: 41. 68 ம் சங்கீதம் இஸ்ரவேலருக்கு கிடைத்த பெரிய மீட்பையும் அவர்கள் சத்துருக்களுக்குக் கிடைத்த பெரிய அழிவையும் நினைத்துப் பாடப்பட்டது. கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததைக்குறித்தும் இதில் தீர்க்கதரிசனமுண்டு. அவர் உன்னதத்திற்கேறி சிறையாக்கினதைச் சிறையாக்கி மனிதர்களுக்கு வரங்களைச் சம்பாதித்தார். அவர் இந்நாளில் அப்போஸ்தலர்பேரில் அதுகளை ஊற்றினபோது பூமி யதிர்ந்தது. தேவனுக்கு முன்பாக வானமும் பொழிந்தது. தமது சுதந்தரத்தின்மேல் சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணி இளைத்துப்போனபோது அதை திடப்படுத்தினார். கர்த்தர் வசனம் தந்தபோது பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதியாயிற்று.

மாலை சங்கீதங்கள் 104. 145. உலக சிருஷ்டிகளை சிருஷ்டித்து அதைக் காத்துவருகிற தேவஞானத்தையும் தேவவல்லமையையும் 104 ம் சங்கீதத்தில சொல்லியிருக்கிறது. இதிலுள்ள சில வாக்கியங்கள் பரிசுத்தாவியின் ஆச்சரியமான செய்கைகளைக் குறித்துப் பேசுகிறபடியால், இந்த நாளுக்கு இது மிகவும ஏற்றது. அவர் மேகங்களைத் தமது இரதமாக்கி காற்றின் செட்டைகளின்மேல் செல்லுகிறார். அவர் பூமியை நோக்கிப் பார்க்க அவைகள் அதிர்ந்தபோதிலும் அவருடைய ஆவியை அனுப்பி அதைப் புதிதாக்கி அதைத் தம்முடைய பொருட்களால் நிரப்



புகிறார். 145 ம் சங்கீதம் நன்றியறிதல் செலுத்த மிகவும் ஏற்றது. சங்கீதக்காரன் தேவமகிமையின் லட்சணங்களைக்குறித்து அதில் பேசியிருக்கிறபடியால், அது இந்த நாளுக்கு மிகவும் ஏற்றது. திரித்துவத்தின் மூன்றாம் ஆளைக்குறித்து இதிலே சொல்லியிருக்கிறது. அவருடைய பெருமையைக்குறித்தும் மகத்துவத்தைக்குறித்தும் அவருடைய துதியைக்குறித்தும் வல்லமையுள்ள செய்கைகளைக்குறித்தும் சிறந்த மகிமையின் பிரதாபத்தைக்குறித்தும் அவருடைய அதிசயமான கிரியைகளைக்குறித்தும் சங்கீதக்காரன் பேசுகிறான்.

நான்காவது. காலை முதல் பாடம் 5 மோ. 16—18. இதில் வாரங்களின் பண்டிகையைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. இது நம்முடைய பண்டிகைக்கு முன்னடையாளம். யூதருக்கு இந்தச் சமயத்தில் சீனா மலையிலிருந்து நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதுபோல பரிசுத்தாவியின் மூலமாய் கிறிஸ்தவர்கள் சுவிசேஷப் பிரமாணத்தை இந்த நாளில் பெற்றார்கள். மாலைக்குரிய முதலாம் பாடம் ஏசாயா 11. தேவாவியின் மூலமாய் ஏவப்பட்ட அப்போஸ்தலன்மாரைக் கொண்டு புறச்சாதியார் குணப்படுகிறதை இதில் கண்டிருக்கிறது. இரண்டாம் பாடங்களாகிய அப்போஸ்தலர் 10—34: அப். 19—21. இவ்விரண்டிலும் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறினதைக் காட்டியிருக்கிறது. இந்த நிறைவேறுதலை முக்கியமாய் நிருபவாக்கியத்தில் காணலாம். சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி இரக்ஷகர் வாக்குத்தத்தம்பண்ணின ஆவியைப் பெற்றுக்கொள்ள அப்போஸ்தலன்மார் ஓரே இடத்தில் கூடியிருந்தபொழுது பரிசுத்தாவியானவர் ஆச்சரியமானவிதமாய் இறங்கினதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிறது. நிருப சுவிசேஷ வாக்கியங்களும் சுருக்கச்செபமும் பழைய செபபுஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டது.

### XXIV. பரிசுத்தாவியின் வாரத் திங்கள், செவ்வாய்.

பரிசுத்தாவியின் பண்டிகை வாரம் முழுவதும் பண்டிகைநாட்களல்ல. அடுத்த ஞாயிறில் குருப்பட்டம் கொடுக்கிறது வழக்கமானபடியால், அப்போஸதலன்மார் வழக்கத்தின்படி அப். 13. 3. புதன், வியாழன், வெள்ளிகளில் உபவாசம்பண்ணுவார்கள். திங்களையும் செவ்வாயையும் ஈஸ்தர் வாரத்தில் செய்ததுபோல கொண்டாடுவார்கள். அதுகளைக்குறித்துச் சொன்னது இதுகளுக்கும் உதவும்.

இரண்டாவது. சுருக்கச்செபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் வெகு பூர்வீகமானவைகள். இது ஞானஸ்நானம் பெறுகிற காலமானபடியால், நிருபவாக்கியங்களில் குணப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைப்பற்றியும், கைகளை வைத்து திடப்படுத்துகிறதும் இக்காலத்தில் வழக்கமானபடியால், அப்போஸ்தலருடைய கைகள் மூலமாய் பரிசுத்தாவி பெறுகிறதைப்பற்றியும், நிருபவாக்கியங்களில் வாசிக்கிறோம். திங்களுக்குரிய சுவிசேஷ வாக்கியம் புதிதாய் ஞானஸ்நானம்பெற்றவர்களுடைய போதனைக்கேற்றது. கிறிஸ்துவை விசுவாசிக்கவும் ஒளியின் பிள்ளைகளாய் நடக்கவும் அது கற்பிக்கிறது. செவ்வாய் சுவிசேஷ வாக்கியம் எம்பர் வாரத்துக்கேற்றது. நியாயமானபடி அழைக்கப்பட்டு தேவஊழியத்துக்கு ஏற்படுகிறதுக்கும் அழைக்கப்படாமல் அந்த திவ்விய ஊழியத்தில் சேருகிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை இது காட்டுகிறது.

மூன்றாவது. திங்கள் காலைக்குரிய முதலாம் பாடம் 1 மோ. 11. 10 வரை. இதில் பாபேல் கோபுரத்தில் பாஷை தாறுமாறானதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. பாஷை தாறுமாறானபோது உலகமெங்கும் விக்

கிரகஆராதனை பெருகி தேவனையும் மெய்மார்க்கத்தையும் பற்றின அறிவு ஒழிந்துபோனதுபோல பாஷைகளைப் பேசுகிற வரத்தினால் தம்மைப்பற்றின அறிவைப் புதுப்பித்து புது மார்க்கத்தை ஸ்தாபப்படுத்தினொன்று சபையானது நமக்குக் காட்டுகிறது. திங்கள் மாலைக்குரிய முதலாம் பாடம் 4 மோ. 11: 16 வரை. இதில் தேவஆவியானவர் இஸ்ரவேலரில் 70 பேர்மேல் தங்கி அவ்வளவு பெரிய சனக்கூட்டத்தை மோசே தனியாய் ஆளுகிற வருத்தம் நீங்கினதுபோல பரிசுத்தாவியானவர் அவர்மேலும் மற்றவர்கள்மேலும் இறங்கினதினால் அப்படியே அனுகூலம் உண்டாகுமென்று காட்டியிருக்கிறது. அநேகர்தேவபணிவிடையில் சேரும்போது இந்த நன்மையுண்டாகும். இந்த நாளுக்குரிய இரண்டாம் பாடங்கள் 1 கொரி. 12: 1 கொரி. 14: 26 வரை. இந்த அதிகாரங்களில் மற்றவர்களுடைய பிரயோசனத்துக்காக ஆவிக்குரிய இந்த வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் மற்றவர்களுக்கு எழுப்புதல் உண்டாகத்தக்கவிதமாய் இதுகளைப் பிரயோகிக்கவேணுமென்று இதினால் கற்றுக்கொள்ளுகிறோம்.

செவ்வாய். காலை முதலாம் பாடம 1 சாமு. 19: 18; சவுலும் அவன் அனுப்பினவர்களும் தேவாவியினால் ஏவப்பட்டதைக்குறித்து சொல்லியிருக்கிறது. மாலை முதலாம் பாடம் 5 மோ. 30. பிற்காலத்தில் மோசே யூதர்கள் குணப்படும்பொழுது தேவன் அவர்களை நடத்தின விதத்தைககுறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். காலை இரண்டாம் பாடம் 1 தெசலோ. 5: 12—24. ஆவியை அணைத்துப்போடாமலும் அந்த ஆவியானவர். சொல்லும் தீர்க்கதரிசனங்களை அசட்டைபண்ணாமலிருக்கவும் கற்பித்திருக்கிறார். உலகத்தில் அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கிறபடியால், மாலை இரண்டாம் பாடம் 1 யோ. 4: 16 வரை. ஆவியைப் பெற்றோம் என்று சொல்லுகிற யாவரையும் நம்பாமல் விசுவாச சட்டத்தின்மூலமாய் அவர்களைப் பரிசோதிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மததேயு 7: 1, 2.

(தொடர்ச்சி.)

“நீங்கள் குற்றவாளிகளென்று எண்ணப்படாதபடிக்கு, மற்றவர்களைக் குற்றவாளிகளென்று எண்ணாதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களை எண்ணுகிற எண்ணத்தின்படியே நீங்களும் எண்ணப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.”

தங்கள்மேல் நிஷ்டூரமாய்க் குற்றஞ்சுமத்துவதுபோல உத்தம பத்தியுள்ளவர்களைக்குறித்து உலகத்தார் வழக்கமாய்க் குறை கூறுகிறார்கள். அவர்கள் சொல்வது, நீங்கள் ஒப்புக்கொள்ளுகிற வேத புத்தகத்தில் “நீங்கள் குற்றவாளிகளென்று எண்ணப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று எண்ணாதிருங்கள்” என்று சொல்லியிருக்கவில்லையா? பின்னை யேன் உங்கள் வேதத்தின்படி நீங்கள் செய்கிறதில்லை? நாங்கள் ஒருவனையுங் குற்றவாளியென்று எண்ணமாட்டோம். நீங்கள் தான் பொதுவாக மனித சுபாவத்தைக் குற்றமுள்ளதென்றும் அநேக மனிதரைக் குற்றவாளிகளென்றுந் தீர்க்கிறீர்கள். அதனால் கிறிஸ்துமார்க்க சற்குணத்தின் பொருளாகிய அன்பற்றவர்களென்று நீங்களே உங்களைக் காட்டிக்கொடுக்கிறீர்களென்று சொல்லுகிறார்கள். கிறிஸ்துமார்க்கத்தின் உயர்தர உத்தம பத்தியைக்குறித்து அறியாதிருந்து அகன்ற பாதையிலே நடக்கிற அநேகர் இப்படிக்கொத்த வசனங்களினாலே சுவிசேஷ சத்தியத்தைக்குறித்து பரிந்துபேசுகிறவர்கள்போல பாவனை காட்டி தங்கள் சொந்தக் காரியத்தைத் தான் ஆதரிக்கத் தேடுகிறார்கள். சில பொல்லாங்குகளை வழக்கமாய் நடப்பித்து வருகிற அநேகருக்கு அவர்கள் செய்துவருவது பாவமென்று சொல்லி அவர்கள்மேல் குறை கூறும்போது அவர்களும் இவ்வித நியாயங்களைச் சொல்லி தங்களைப் பேணப்பார்க்கிறார்கள். அவர்கள் சொல்வது “எங்கள் மனது விரும்புகிற பாவங்களை நடப்பிக்க எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் நடப்பிக்கும் பாவங்களை நீங்களும் நடப்பிக்க உங்களையும் விட்டுவிடுவோம்” என்கிறார்கள். ஆகையால் இந்த வசனத்துக்குத் தாற்பரியம் சொல்லும்போது கிறிஸ்துமார்க்கத்துக்கு அடாத எந்தக் கருத்தாவது வந்துவிடாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

வேதத்தை வியாக்கியானஞ்செய்யும்போது அதிலுள்ள ஒரு வசனத்தை இன்னொரு வசனத்துக்கு விரோதமில்லாமல் வியாக்கியானஞ்செய்யவேண்டுமென்பது சட்டம். நமதாண்டவர் கிறிஸ்தவர்களுக்கு, மத். 5: 13, 14 ல் “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; நீங்கள் உலகத்துக்கு. வெளிச்சமாயிருககிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது” என்று சொல்லியிருப்பதைக் கவனிப்போமாக. கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலரும் உலகத்தார் வழக்கமாக நடப்பித்துவருகிறவைகளுக்கு இசைந்து பேசுகிறார்களா? அப்படிப் பேசவேயில்லை. நம்முடைய இரட்சகர் உலகத்தாருடைய செய்கை கெட்டதென்று சாட்சியிட்டார். யோவான் அதை உறுதிப்படுத்தி, 1 யோவான் 5: 19 ல் “நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்” என்கிறார். ஆகையால் குற்றவாளிகளென்று எண்ணுவது என்றால், கிறிஸ்தவர்கள் உலகத்தாருடைய சாதாரணமான கோட்பாடுகளையும் நடத்தைகளையும் மெச்சிப்பேசவேணுமென்று தாற்பரியமல்ல. இப்படி மெச்சிப்பேசுவது கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாயிருப்பதால், அப்படிச்செய்யாதபடி கவனமாயிருக்கவேண்டும். “துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.” (நீதிமொழி 17: 15.)

மோசமான எந்தத் தப்பிதத்திலாவது விழாமல், இந்த வசனத்தை வியாக்கியானஞ்செய்யப் பிரயாசப்படுவோமாக. இதில் பின்வருகிற மூன்று காரியங்களை விலக்கியிருக்கிறது. அதாவது, 1வது. நேர்ந்தபடியான பதஷ்டமான தீர்ப்பு; 2வது. பாரபட்சமான தீர்ப்பு; 3வது. உக்கிரமுங் கடினமுமான தீர்ப்பு இவைகளாம்.

1வது. இந்த வசனத்தில் பதஷ்டமான தீர்ப்பு ஆகாதென்று விலக்கியிருக்கிறது. அநேகர் தங்கள் அயலாருடைய நடக்கைகளைக்குறித்து சரியாய் விசாரித்து அறியுமுன் அவைகளைக்குறித்துத் தீர்ப்புச் சொல்

னுகிறார்கள். நாம் முந்தி அவைகளைக்குறித்து ஒருதரம் மாத்திரமல்ல, பல தடவைத் திரும்பத்திரும்ப விசாரித்துச் சிந்தித்து நிதானிக்கவேணும். போதுமானபடி ருசுத் துலங்காவிட்டால், நம்முடைய தீர்ப்பை நிறுத்திவைக்கவேணும். பதஷ்டமான தீர்ப்புச்செய்கிறவன், ஞானத்துக்குரிய பெரிய பிரமாணத்தையும் சுவிசேஷத்துக்குரிய முக்கியமான போதகத்தையும் கற்றறிந்தவனல்ல.

2வது. இந்த வசனம் பாரபட்சமான தீர்ப்புக்கு விரோதமானது. நாமெல்லாருங் கொஞ்சத்திலாவது அதிகத்திலாவது ஒரு பட்சஞ் சாய்கிறவர்களாயிருக்கிறோம். ஒருவன் அந்நிய தேசத்தானாயாவது, நமக்கெதிரிடையான துரைத்தனக் கொள்கைக்காரனாயாவது, எதிரிடையான மார்க்கக் கொள்கைக்காரனாயாவது, வர்த்தக விஷயத்தில் எதிரியாயாவது இருந்தால் அப்பேர்ப்பட்டவனைக்குறித்து நியாயமான தீர்ப்புச்செய்வது வெகு வருத்தம். ஆகையால் கிறிஸ்தவர்கள் பாரபட்சத்தைத் தங்களைவிட்டு அகற்ற மெத்தக் கவலையாயிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் அவர்கள் உலகத்தாருக்கு மேற்போகவேணும். எதிர்பட்சக்காரர் கூட இராத சமயங்களில் அவர்களைத் தூஷிக்கிறவர்களோடு சேரவேகூடாது. கபடின்மை சிறந்த கிறிஸ்தவ சற்குணங்களிலொன்று. மற்ற விஷயங்களிற் கண்டிப்பாயிருக்கிற அநேகர் இந்தச் சற்குணத்தைச் சரியானபடி மதிக்கிறதில்லை. நீங்கள் குற்றவாளிகளென்று எண்ணப்படாதபடிக்கு மற்றவர்களைக்குறித்து கபடாய்த் தீர்ப்புச்சொல்லாதிருங்கள். நீங்கள் பாரபட்சக்காரராயிருந்தால் அவர்களும் பாரபட்சக்காரராயிருப்பார்கள்.

3வது. கடினமான தீர்ப்பு இந்த வசனத்துக்கு விரோதமானது. மனிதனுக்குப் பெலவீனமுண்டென்று நாம் சிந்திக்கவேணும். பெரிய சோதனைகளுக்குட்பட்டிருக்கிறவர்களை அந்தச் சோதனைகளின் பலத்துக்குத்தக்கதாக நாம் சகிக்கவேண்டும். பிறனுடைய சில பாவங்களைக்குறித்து நமக்குத் திட்டமாய்த் தெரிந்திருந்தாலும் அதினிமித்தம் அவனுக்குண்டாயிருக்கிற பெரிய மனஸ்தாபத்தை யெவ்வளவும் அறியாதிருப்போம். யோசித்து, நிதானித்து, வேணுமென்று செய்யப்படுகிற பாவங்களுக்கும் தடுமாற்றத்தினாற் செய்யப்படுகிற பாவங்களுககும் வித்தியாசங் காட்டவேணும், ஒருவன் சடுதியான சோதனையினாலே மிகப் பெரிய பாவங்களில் சிக்கிக்கொண்டாலும், தேவபத்தியாய் நடக்கக் கருத்துள்ளவனாயிருந்து தேவதயவைப் பெற்றவனாயிருக்கலாம்.

ஒருவனுடைய ஒரு செய்கையைக்கொண்டு அவனுடைய செய்கைகளெல்லாம் அப்படியேயிருக்குமென்று உத்தேசிப்பதும், ஒரு சங்கதியைக்கொண்டு அவனுடைய ஆத்தும நிலைமையைகுறித்துத் தீர்ப்புச் சொல்வதும் இந்த வசனத்திலடங்கிய கற்பனைககு விரோதமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கடினமான தீர்ப்புச்செய்யத் துணிகிறவர்கள், தங்கள் சொந்த ஆத்தும நிலைமை கேவலமானதென்று தெரிவிக்கிறார்கள்.

கடைசியாக மற்றவர்களைக் குற்றவாளிகளென்று எண்ணும் பாவத்துக்கு நாம் விலக விரும்பினால், நம்மைக்குறித்து மற்றவர்கள் எப்படி எண்ண விரும்புகிறோமென்பதை யோசித்துப் பார்க்கக் கடவோம். நம்முடைய பாவங்களுக்கு அநேக போக்குகளைத் தேடிக் கண்டுபிடிக்கிறோமே. அந்தப்படியே மற்றவர்களுடைய குற்றங்களுக்கும் போக்கிடக்கடவோம். அவர்கள் நமக்குப் பொறுக்கவேணுமென்று நாம் விரும்புவதுபோல நாமும் அவர்களுக்குப் பொறுக்கக் கடவோம். விசேஷ



மாக, நாம் தேவனுடைய ஆக்கினைக்குத் தப்பும்படியாக அவர் நமக்குச் செய்யும் தீர்ப்பை இரக்கத்தோடு செய்யவேணுமே. நாம் இரக்கம்பெற விரும்புவதுபோல் மற்றவர்களுக்கும் இரக்கங் காட்டுவோமாக. "நீங்கள் மற்றவர்களை அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."

---

## Communicant's Companion.

# நற்கருணை விளக்கம்.

## எ. அதிகாரம்.

*நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.*

### பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

நம்மை ஆயத்தப்படுத்தும்படிக்கான குறிப்புகளாவன:

I. தீர்மானமான மனதோடு இந்தப் பந்தியைச் சேரக்கடவோம். ஒரு பாவியை அலைக்கழிக்கிற எல்லாக் கேடுகளிலும் நிலையற்ற வீண் எண்ணங்களே முக்கியமானது. ஒரு நிமிஷத்தில் அவனுக்குள்ளே பல கோடி எண்ணங்களுமுண்டாகி அவனை யலைக்கழிக்கிறதுமுண்டு. அதினால் அவன் தேவனண்டை சேரவும், அவர் இருக்கிற பிரகாரமாக அவரைப் பார்க்கவும், தன் இருதயத்தை அவருக்கு முன்பாக ஊற்றிவிடவும் திராணியற்றவனாகிறான். ஆகையினாலே தன் மனதை ஓர்மைப்படுத்துவதில் மற்றெந்தச் சமயத்தையும்விட கர்த்தருடைய பந்தியைச் சேருகிற சமயத்திலேயே அதிக முயற்சிசெய்யவேண்டும். மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பதற்கு வழியிலும், வாசல்களிலும், வீடுகளிலுமுள்ள கூளங், குப்பைகளை அப்புறப்படுத்தி சிறப்பித்து வைப்பது அவசியம். தேவனண்டை சேருகிற விஷயத்தில் விற்பாருங் கொள்வாருமாகிய எப்பேர்ப்பட்ட அவசரமான காரியக்காரர் மனதிலே கிரியைசெய்துகொண்டிருந்தபோதிலும் அவர்களைப் பார்த்து இப்போது நீங்கள் போகலாம். சாவகாசமான வேளை உங்களை வரவழைப்பேன் என்று சொல்லவேண்டும். உன்னினத்தார், ஜனத்தார், தாய், தந்தைகள் முதலானவர்கள் நின்றுகொண்டு உன்னோடே பேசவேண்டிய காரியமிருக்கிறது வாவென்று அழைத்தபோதிலும், உன் இரக்ஷகர் சொன்னதுபோல உங்களைவிட அதிகக் கிட்டின இனத்தார் என்னோடு பேசிக்கொண்டிருக்கிறார்களென்று சொல்லவேண்டும். மேலும் பல இடங்களிலும் சிதறி நிற்கும் உன் மனதை ஓர்மைப்படுத்துவதற்கு இதுவே சமயம். நீ ஆண்டவரைப் பார்த்து "ஆ, தேவனே என்னிருதயம் ஆயத்தமாயிருக்கிறது" என்று சொல்லத்தக்கவனாயிருக்கவேண்டும். சகலவிதமான உலகக் கவலைகளையும் உன் இருதயமாகிய கதவுக்கப்புறப்படுத்தி, நீ சோதனையிற் பிரவேசியாதபடி விழித்திருந்து

ஜெயம்பண்ணு. பலிகளின்மேல் உராஞ்சின பக்ஷிகளை ஆபிரகாம் துரத்தினதுபோல உன் பலியைக் கெடுக்கவரும் பல கவலைகளாகிய பக்ஷிகளையுந் துரத்தவேண்டும்.

II. கோபமூர்க்க முதலியவைகளில்லாமல் அமரிக்கையுள்ள மனதோடு இந்தப் பந்தியைச் சேரவேண்டும். உலகக் கவலைகளாகிய பாரம் உன்னை யமிழ்த்தாமல் திவ்விய பயத்தோடும், விசுவாசத்தோடும், நித்தியஜீவன் பேரிலுள்ள நம்பிக்கையோடும் இதைச் சேரும்படி பார்.

தேவன் உன்னைச் சேருகிறதற்கும் நீ அவரைச் சேருகிறதற்கும் இதுவே தகுந்த வழி. "பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்றிலும், பூமி அதிர்ச்சியிலுமிராமல் அமர்ந்த மெல்லிய சத்தத்திலிருந்தார்" என்று சொல்லியிருக்கிறது. நமக்கு எத்தனையோ நெருக்கங்களும் இடுக்கண்களும் நேரிட்டபோதிலும், நம்முடைய இருதயங் கலங்குகிறதற்கு இடங்கொடாமல் தெளிவும் அமரிக்கையுமுள்ள ஆவியோடிருக்கக் கற்றுக்கொள்வோமாக.

நமக்குச் சஞ்சலத்தைக் கொடுக்கும் யாதாமொன்று நேரிடுங்காலத்தில் அது மட்டுக்கு மிஞ்சி மும்முரப்படும்படி நாமே காரணராயிராமல், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயத்தை ஆளும்படி மன்றாடிக்கொண்டிருக்கவேண்டும். வழக்கமாய் மனமுறிவுக்குஞ் சஞ்சலத்துக்கும் இடங்கொடுக்கிறவர்களுமுண்டு. அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தி, அவர் தங்களைவிட்டுப் போகும்படி இடங்கொடுக்கிறவர்களாயிராமல், தங்கள் மனதை அடக்கமாய்க் காபந்துபண்ணவேண்டும். விசேஷமாய்க் கர்த்தருடைய பந்தியைச் சேருங்காலங்களில் அதிக அமரிக்கையுள்ளவர்களாயிருக்கும்படி பார்க்கவேண்டும். "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும்" நம்மைவிட்டு நீங்கவேண்டும்.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.** பிரான்சிய தேச பட்டம் இழந்து இங்கிலந்தில் பிரவாசியாயிருந்த நப்போலிய சக்கரவர்த்தி சென்றமீ 8௳ தேகவியோகமானார். அவர் பிரேதம் சீமையைச்சேர்ந்த ஷிஸெல்ஹர்ஸ்ட் என்னுமிடத்தில் க்ஷேமிக்கப்படவிருந்தது. உரோமாபுரியிலுள்ள பிரதான தேவாலயங்களில் தேகவியோகமான சக்கரவர்த்தியைத்தொட்டு தேவாராதனைகள் செய்யப்பட்டன. இறந்துபோன சக்கரவர்த்தியின் பத்தினிக்கு நமது மகா ராணியவர்கள் துக்கம் விசாரிக்கும் கடிதமொன்றெழுதினார்கள். நிரியாணமானவர் சாமானியரல்ல. தமது சிறிய பிதாவாகிய முதலாவது நப்போலியன் போக்கடித்த ராஜமகத்துவத்தை திரும்ப அடையும்பொருட்டு இவர் விடாது சாதித்த முயற்சியும் அருஞ் சாமர்த்தியமும் லேசாய் மதிக்குந் தரமுள்ளதல்ல. 1851 வருஷத்தில் நடந்த உதிரப்பழியையும், சிடானில் அடைந்த மானபங்கத்தையும் ஏதாயினும் அற்புத உபாயத்தால் மறந்துவிட்டு, அவர் பிரான்சிய துரைத்தனம் நிர்வகித்த இருபது வருஷ கால வர்த்தமா



னங்களை மாத்திரம் சிந்தையிற்கொள்வோமானால், மன்னரும் வேந்தர் வகுப்பில் எந்நாளும் மறக்கொணா மகத்துவமிக்க வள்ளலென்று அவரைக் கொண்டாடுவோமென்று பத்திராதிபரொருவர் பகர்ந்திருக்கிறார்.

**ருஷியர்.** கைவாப் பிரதேசத்தின்மேல் படையெடுத்துப்போயிருக்கிற சமாசாரம் முன் தெரியவந்திருந்ததே. ருஷிய சக்கரவர்த்தி லண்டனுக்கு அனுப்பிய ஸ்தானாபதியானவர், கார்னவில் பிரபுவைக் கண்டு, ருஷிய துரைத்தனத்தார் கைவாப்பிரதேசத்தின்மேல் படையெடுத்துப்போனது அங்கிலேயர் அபிஸீனியாவின்மேல் படையெடுத்ததுபோலென்றும், கைவாத் துரைத்தனத்தார் சிறையில் வைத்திருக்கிற ருஷியரை விடுதலையாக்கின பின்பு, ருஷிய சேனாவீரர் அத்தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்றும் சொல்லுகிறார். ருஷியர் ஆப்கானிஸ்தானத்தின் அதிபதிக்கு ஆதீனமாயிருக்கிற புறத்தேசங்கள் மேல் படையெடுத்தால் அங்கிலேய துரைத்தனத்தார் விரோதங்காட்டுவார்களென்று கிரான்வில் பிரபு பிரதியுத்தரம் சொன்னார். ருஷியர் மத்திய ஆசியாவில் தங்கள் அதிகாரத்தை அதிகமதிகமாய்ச் செலுத்த அபேக்ஷித்து, பாரசிகரோடு ஐக்கிய உடன்படிக்கைசெய்திருக்கிறார்களென்றும்; அப்படியுண்டான சத்தம் பொய்என்றும் இருவகை வதந்தி பிறக்கின்றன. உண்மையின்னதென்று காலந் தெரிவிக்கும்.

**அமெரிக்க** துரைத்தனத்தார் ஜன்ஜிபாரில் வசிக்கும் தங்கள் ஸ்தானாபதிக்கு உத்தரவனுப்பி, சிறை வியாபாரத்தை அகற்றும்படி அவர் கூடியமட்டும் எத்தனிக்கவேண்டுமென்று கற்பித்திருக்கிறார்கள். இதற்காக அனுப்பப்பட்ட ஸ்ரீபாட்டில் பிரேயர் துரை யேறின கப்பல் போன டிசம்பர்மீ 21௳ ஆதேன் துறை சேர்ந்தது.

**சென்னை.** மகாகனம்பொருந்திய சென்னைக் கண்காணியாரவர்கள் திருநெல்வேலியிலுள்ள அந்தந்த மிஷன் ஸ்தானங்களுக்குப்போய் சபை விசாரணைசெய்து, சென்றமீ 23௳ பாளயங்கோட்டைக்கு வந்து, திடப்படுத்தல் கொடுத்தார்கள். 26௳ ஞாயிறில 6 பேருக்கு உதவிக் குருப்பட்டமும் 13 பேருக்கு குருப்பட்டமுங் கொடுத்தார்கள். 29௳ திருநெல்வேலி உதவி வேதாகம சங்கம், சன்மார்க்கபுத்தக சங்கம் என்ற இச்சங்கக்கூடுதல்கள் நடந்தன. மகாகனம் கண்காணியாரவர்களே முதலாளியாகவிருந்து இக்கூட்டங்களை நடத்தினார்கள்.

**மகா ராணியவர்கள் சரித்திரம்** பத்துப் படங்களுடன் சென்னைபட்டினம் பாபம்வீதியிலுள்ள சன்மார்க்க புத்தக சாலையில் விற்கப்படுகின்றது. விலை ரூபாய் ஒன்று. தபால்கூலி அணா 3. இப்புத்தகத்தையியற்றியவர் நமக்கு உபசாரமாக ஓர் பிரதி அனுப்பியதற்காக நன்றி சொல்லுகிறோம். இனிமையான தமிழில் அருமையான சங்கதியடக்கிச் செய்யப்பட்டிருக்கிற இப்புத்தகம் சென்னை பிரிசர்ச்சு மிஷியனைச்சேர்ந்த மிஸ்டிரிஸ்பாபு அவர்களாலியற்றப்பட்டது. "தெய்வபக்தியினாலும், ஜீவகாருண்யத்தினாலும், சற்சன சகவாசத்தினாலும், கல்விமிகுதியினாலும், பொறுமைமுதலிய திவ்வியகுணபூஷணங்களினாலும் இவ்வுலகத்திலுள்ள மங்கையர்க்கு அரசியாக விளங்கிவருகிற நமது காருண்ய இராணியவர்கள் சரித்திரத்தை" யாவரும் பிரீதியாய் வாங்கி, ஆவலாய் வாசித்து, அரும்பயனடைவார்களென்று நம்புகிறோம்.

---

### பெப்ருவரியீ நாள் 28. தையீ 21உ முதல், மாசியீ 19உ வரை.

| வாரம் | ஆங்கி. தேதி | தமிழ். தேதி | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௨௧ | எந்தமட்டும் இந்த மனிதன் கண்ணியாயிருப்பான். யாத் 10:7. |
| ஞா | 2 | ௨௨ | கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாய்ப் பாவஞ்செய்தேன். 16. |
| தி | 3 | ௨௩ | அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். 12:13. |
| செ | 4 | ௨௪ | முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து. 13:1. (22:43. |
| பு | 5 | ௨௫ | கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 1 இரா. |
| வி | 6 | ௨௬ | தேவனாகிய கர்த்தருக்குக் கோபமூண்டாக்கினான். 53. |
| வெ | 7 | ௨௭ | கர்த்தருடைய வார்த்தை அவனிடத்திலிருக்கிறது. 2 இரா. 3:12. |
| ச | 8 | ௨௮ | இது கர்த்தரின் பார்வைக்கு அற்பக் காரியம். 18. |
| ஞா | 9 | ௨௯ | தேவனே எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான். சங்கீதம் 74:10. |
| தி | 10 | ௧ | தேவன் பூர்வகாலமுதல் என்னுடைய இராசா. 12. |
| செ | 11 | ௨ | உமது எளியவர்களின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும். 19. |
| பு | 12 | ௩ | உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும். 20. |
| வி | 13 | ௪ | உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும். 23. |
| வெ | 14 | ௫ | தேவனே! உம்மைத் துதிக்கிறோம். 75:1. |
| ச | 15 | ௬ | நீதிமானுடைய கொம்புகள் உயர்த்தப்படும். 10. |
| ஞா | 16 | ௭ | இராசாவை உன் மனதிலும் நிந்தியாதே. பிரசங்கி 10:20. |
| தி | 17 | ௮ | மனிதன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும். 11:8. |
| செ | 18 | ௯ | இளவயதும் வாலிபமும் மாயையே 10. |
| பு | 19 | ௰ | வாலிபப்பிராயத்திலே உன் சிருட்டிகரை நினை. 12:1. |
| வி | 20 | ௧௧ | தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். 13. (4. |
| வெ | 21 | ௧௨ | எங்கள் மீட்பருடைய நாமம் சேனைகளுடைய கர்த்தர். ஏசா. 47: |
| ச | 22 | ௧௩ | என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லையென்றும். 10. |
| ஞா | 23 | ௧௪ | எப்பிராயீமே நான் உன்னை எப்படி கைவிடுவேன். ஓசி. 11:8. |
| தி | 24 | ௧௫ | என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. 8. (7:37. |
| செ | 25 | ௧௬ | ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வரக்கடவன். யோவா. |
| பு | 26 | ௧௭ | நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே. 8:11. |
| வி | 27 | ௧௮ | எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். உரோ. 3:12. |
| வெ | 28 | ௧௯ | அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை, 18. |

## விசேஷித்த நாட்கள்.

2. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப் பின்வரும் நாலாம் ஞாயிறு.
9. செப்துவகெசிமாவென்னும் ஞாயிறு.
12. பௌரணமி.
16. செக்சகெசிமாவென்னும் ஞாயிறு.
23. கின்குவகெசிமாவென்னும் ஞாயிறு.
26. லெந்தென்னும் நாட்களில் முதல் நாளாகிய புதன்கிழமை.
27. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. March. No. 3.

### Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 42
Christian Church History. ... ... ... ... ... 44
Notes on Genesis. ... ... ... ... ... ... 46
The Parables of Christ. ... ... ... ... ... 50
On the Liturgy. ... ... ... ... ... ... ... 52
Communicant's Companion. ... ... ... ... 54
Summary of News. ... ... ... ... ... ... 58


### அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௪௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௪௪
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௪௬
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௫0
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ௫௨
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ௫௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௫௮



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்.

௩. மார்கழி. ௲௮௱௯௰ ௵

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### யோர்தானைக் கடந்தது.

யோசுவா 3, 4 அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

நல்லது, கற்களை நிறுத்தினார்கள். அப்புறம் ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியையுங் கொண்டுவந்துவிடவே, ஒரு பெரிய இரைச்சல் உண்டாயிற்று. தூரத்தில் விழும் இடியின் சத்தம்போல் ஒரு சத்தங் கேட்கப்பட்டது. முன்பனி பெய்கிற காலத்திலிருப்பதுபோல் ஆகாயம் மந்தாரமாயிற்று. யோர்தான் வழக்கப்படி தன்னிடத்துக்குத் திரும்பவும் குதித்துக்கொண்டு வந்தது. என்னத்தினாலென்றால், கர்த்தர் அதிசயமான தமது கரத்தை மடக்கிக்கொண்டார். மகத்துவமான அவ்வற்புதமும் முற்றுப்பெற்றது. அன்றிரவில் சனங்கள் கானான்தேசத்திலே நித்திரைசெய்தார்கள். ஆகிலும் அன்று அவர்கள் கண்டது அவர்கள் பிற்சந்ததியாருக்குப் போதனையாக இருக்கவேண்டுமென்று யோசுவா திரும்பவும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான். அவர்கள் எப்பொழுதாகிலும் கர்த்தரை மறந்து, அவரை ஆராதிக்காமற்போவார்களாகில் கில்காலில் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கற்கள் எழும்பி, "கர்த்தருடைய கரம் மகத்துவமானதென்று அறியவும், என்றென்றைக்கும் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கவுஞ்சக்கதாக" அவர்களுக்கு விரோதமாய்க் கூப்பிட்டுச் சாக்ஷியிடுகிறவைகளாயிருக்கும்.

பிரியமான பிள்ளைகளே, அந்தக் கற்கள் சலத்தால் இழுபட்டோ, தூசியாய் நொறுங்கியோ வெகுகாலத்துக்கு முன்னமேயே காணாமற்போய்விட்டன. அவ்விடத்துக்கு நாம் பயணம்பண்ணிப்போவோமாகிலும், மேற்படி ஞாபகஸ்தம்பத்தைக் காணமாட்டோம். அந்த நதி பச்சையான காடுகளை யுருவிப் பரும்புகளுக்கூடாக வேகமாய்ப் பாய்ந்துகொண்டிருக்கிறதை மாத்திரம் காண்போம். என்றாலும் பூர்வத்தில் நடந்த அந்த அதிசயங்களைக்கொண்டு, நாம் சில விசேஷங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

முதலாவது. தேவன் தம்மைப் பற்றிக்கொண்டிருக்கிற சனங்களுக்கு எவ்வளவு உண்மையுள்ளவரென்று இதினால் அறிந்துகொள்ளலாம். மோசேயை அவர் தம்மிடத்துக்கு அழைத்துக்கொண்டாரோ. யோசுவாவை அவனுக்குப் பதிலாக அனுப்புகிறார். மோசேயைக்கொண்டு அவர் சிவப்புக்கடலை இரண்டாகப் பிளந்தார், யோசுவாவைக்கொண்டு யோர்தானைப் பின்னிட்டுப்போக அடித்தார். மோசேயின் நாட்களில் கர்த்தர் இஸ்ரவேலரோடு இருந்ததுபோல இப்பொழுது இல்லையென்று



நினைக்கவும் சொல்லவும் எவ்வளவேனும் நிமித்தமில்லை. முந்தியகாலத்து அற்புதங்களைப் பார்க்கப் பெரிய அற்புதங்களை இப்பொழுது தேவன் செய்துவருகிறாரே. ஆம், "மோசேயோடு இருந்ததுபோல உன்னோடுமிருப்போம், நாம் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று அவர் யோசுவாவுக்கு அருளின வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். எப்பொழுதும் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருப்போமாக. சிநேகிதர் மரித்துப்போனாலும் அநேக காரியங்கள் மாறுதலடைந்தாலும் அவரோ ஒருபொழுதும் மாறாமல் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு எக்காலமும் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

2. இந்தப் பெரிய அற்புதத்தை நடப்பித்த வேறொரு முகாந்தரம் யாதெனில், தேவன் இஸ்ரவேலருக்கு உத்தம சிநேகிதர் என்று அவர்கள் சத்துருக்களுக்கு உணர்த்துவதுதான். ஐந்தாம் அதிகாரத்தின் முதலாம் வாக்கியத்தை வாசிப்பீர்களாகில், இஸ்ரவேலர் எதிர்த்துப் போராடிச் செயித்துக் கீழ்ப்படுத்த இருந்த எமோரியர், கானானியர் முதலிய சாதியாரின் இராசாக்களைக்குறித்து "கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக யோர்தானின் சலத்தை வாண்டுப்போகப்பண்ணினாரென்று அவர்கள் கேள்வியானதோடு இஸ்ரவேல் புத்திரரினிமித்தமாய் அவர்கள் இருதயம் இளகிப்போய் முற்றும் தைரியமற்றவர்களானார்கள் என்று சொல்லியிருப்பதைக் காண்பீர்கள். இப்படி அவர்கள் பயந்துபோயிருந்ததினாலே அவர்களைச் செயிக்கிறது லேசாயிற்று. இஸ்ரவேலர் தேவன் வாக்கு அருளியிருந்த தேசத்தைச் சீக்கிரம் கட்டிக்கொள்வதற்கும் ஏதுவாயிற்று. ஆற்றில் வெள்ளம் வற்றிப்போகுமட்டும் அவர்கள் காத்திருந்து அப்புறம் அற்புதமில்லாமல் ஆற்றைக் கடந்துபோயிருப்பார்களாகில், அவ்வளவு பயமும் தத்தளிப்பும் உண்டாயிருக்கமாட்டாதே. மேலும் தேசத்துச் சனங்கள் அதிக சாவகாசமாய் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணிக்கொள்ளவும் சண்டைகளை அதிக மூர்க்கத்தோடு நடத்தவும் அனுகூலமுங் கிடைத்திருக்கும். இஸ்ரவேலர் வெற்றியடையும்பொழுது தங்கள் சுய சாமர்த்தியத்தினாலேயே அப்படியானதுபோல பாராட்டிக்கொள்ளவும் இடமுண்டாகுமே. இப்பொழுதோ தேவனே அவர்களை தேசத்துக்குள் நடத்திக்கொண்டுவந்தாரென்றும், அவரது வல்லமையினாலேயே தேசத்தைக் கட்டிக்கொண்டார்களென்றும் எல்லோரும் அறிந்து அறிக்கையிடவேண்டியதாயிற்று.

3. கடைசியாய் பரம கானான்தேசத்தைக்குறித்து ஒரு வார்த்தை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன். அருமைப் பிள்ளைகளே, உங்களில் சிலராவது அந்தத் தேசத்துக்குப் பயணம்பண்ணுகிறவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. பரதேசி மோட்சபிரயாணம் என்ற புஸ்தகம் வாசித்திருப்பீர்களாகில், பரதேசிகள் மோட்ச பட்டணத்தில் பிரவேசிக்குமுன் ஆற்றைக் கடந்துபோன விவரம் உங்களுக்கு ஞாபகமிருக்குமே. நிசந்தான், ஆறு அவர்களுக்காகப் பிரிக்கப்படவில்லை. ஆற்றில் இறங்கியே நடந்துபோனார்கள். நடந்துபோகும்போது பலமுறை அமிழத் தொடங்கினதுமுண்டு. என்றாலும் அவர்கள் கைவிடப்படாமலும் அமிழ்ந்துபோகாமலும் சுகமே கரையேறினார்களே. அதுபோல விசுவாசிகளெல்லாரும் மரணமாகிய யோர்தானைக் கடந்து தான் மோட்சலோகத்தற் சேரவேண்டும். அதைக் கடக்கப்போகிற விசுவாசி எப்படிச் சொல்லுவான் என்றால், "இந்த ஆறு அநேகருக்கு தத்தளிப்பை உண்டாக்கிற்று. அதின் நினைவினால் நானும் பயப்பட்டேன்

இப்பொழுதோ எனக்கு எவ்வளவேனும் கலக்கமில்லை. இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்கும்பொழுது கர்த்தருடைய பெட்டியைச் சுமந்த ஆசாரியர்களுடைய பாதங்கள் எதின் மீதில் நின்றதோ அதின் மீதிலேயே என் பாதமும் உறுதியாய் நிற்கிறது. நான் இப்பொழுது என் பிரயாணத்தின் முடிவுக்கு வந்துவிட்டதாகக் காண்கிறேன். துன்பமும் சஞ்சலமும் நிறைந்த என் நாட்கள் முடிகின்றன. எனக்காக முண்முடி தரித்த சிரசையும் என்னிமித்தம் துப்பப்பட்ட முகத்தையும் பார்க்கப் போகிறேன். இதுவரையும் கேள்வியினாலும் விசுவாசத்தினாலும் நடந்தேன். இப்பொழுதோ பிரிசமா நடக்கத்தக்க இடத்துக்குப் போய் என்னுத்தமா சிநேகிக்கிறவரோடுகூட என்றென்றைக்கும் வாழுவேன்" என்று சொல்லுகிறவனாய் இம்மையின் ஓட்டத்தை முடிப்பான்.

அருமைப் பிள்ளைகளே, இயேசுநாதரை நமக்கு இரட்சகராகப் பற்றிக்கொண்டு அவருடைய பரிசுத்தமார்க்கத்தில் நடக்கப் பிரயாசப்படுவோமாக. அப்படிச்செய்வோமாகில், இஸ்ரவேலின் தேவன் நமக்கும் சிநேகிதனாயிருப்பார். மூவாயிரம் வருஷத்துக்குமுன் அவர் தமது சனத்தை யோர்தான் ஆற்றைக் கடக்க நடத்திக்கொண்டுபோனது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் அவர் தமது வல்லமையினால் நம்மைத் தாங்கி தமது அன்பினாலே நம்மைத் தேற்றிக் கடைசியில் தமது நித்திய வீடாகிய மோட்சத்தில் நம்மைச் சுகமே கொண்டுபோய்ச் சேர்ப்பார். ஆமென்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோவின் கொள்கைக்காரர்.—ஒரிஜன் குருப்பட்டமடைந்து செசாரியாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தேனிய வகுப்பார்—இக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்.—ஆத்துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்.—பிலிப்புவின் அரசாட்சி இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

(தொடர்ச்சி.)

கிறிஸ்து பிறக்க இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் பழயஏற்பாட்டு வேதாகமங்கள் கிரேக்குப் பாஷையில் திருப்பப்பட்டிருந்தது. செப்துவகிந்து என்று பெயர் வழங்கிய மேற்படி திருப்புதலில் அநேக வேறுபாடுகளும் தவறுகளும் நுழைந்து கெட்டுப்போயிருந்தது. அதைத் திருத்திப் புதுப்பிக்கிற வேலையே இப்பொழுது ஒரிஜன் நடப்பித்து வந்தது. கிரேக்குப் பாஷையிற் செய்யப்பட்டிருந்த வேறு பல திருப்புதல்களுமிருந்தன. அவற்றுள் முக்கியமானவைகள் எவையெனில், ஆதி



ரியான் அரசுபுரிந்த காலத்திலிருந்த அக்குவிலா என்பவனுடையதும், கொமோது இராயன் நாட்களில் தியோடோஷன் பிரசுரம் செய்ததும், 202 ம் ௵த்தில் திருப்பப்பட்டதாகச் சொல்லப்படும் சிமக்கு என்பவனுடையதுமே. கடைசியிற் சொல்லப்பட்டதின் ஓர் பிரதியே மூலப் பிரதி தானே ஜூலியானாளிடத்திலிருந்து அவனுக்குக் கிடைத்தது. பேரில்லாத வேறிரண்டு திருப்புதல்களும் ஒரிஜனுக்கு அகப்பட்டனவாம். மேற்படி திருப்புதல்களையெல்லாம் எபிரேயுப் பாஷை மூலத்தோடு, ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்மியங்களை ஒருமிக்கப் பார்த்துக் கொள்ளத்தக்கவிதமாய் ஆறுபத்திகளாய் எழுதிப் பிரசுரஞ்செய்தான். இந்தப் பெரிய வேலை முடிகிறதற்கு இருபத்தெட்டு வருஷம் பிடித்ததாம். இதைக்கொண்டு அவனுடைய விடாமுயற்சியையும் அரிய உழைப்பையும் ஒருவாறு உணர்ந்துகொள்ளலாகுமே. அது மாத்திரமல்ல, இந்த வேலையை நடப்பித்துவரும்போது வேத வியாக்கியானங்களையும் விடாமல் தொடர்ந்தேற்றியாய் நடப்பித்துக்கொண்டு வந்தான். இதற்கு முன்னதாகவே வியாக்கியானங்களடங்கிய பல புத்தகங்கள் முடிந்திருந்தன. வெகுகாலம்வரையில் அவன் தன்னுடைய பிரசங்கங்களைப் பிரதிபண்ணிப் பிரசுரஞ்செய்யச் சம்மதிக்காவிட்டாலும், அவைகள் ஆயிரத்துக்கத்திகமாயிருந்தனவென்று தெரியவருகிறது.

கிரேக்குத் திருப்புதல்களடங்கிய அவனுடைய புஸ்தகம் நாளதுவரையிலிருக்குமாகில், எபிரேயுப் பாஷையிலுள்ள மூல வாக்கியத்தைத் தீர்மானிக்கிறதற்கு மிகவும் உதவியாயிருக்கும். செப்துவகிந்து திருப்புதலின் தற்காலப் பிரதிகளிற் காணப்படுகிற வித்தியாசங்கள் அனந்தம். அவைகளிற் சரியானவைகளைக் கண்டுபிடிப்பதற்கு ஒரிஜன் மிகுதியும் பிரயாசப்பட்டான். அவன் கொண்டிருந்த நோக்கம் நிறைவேறி, கிரேக்குப் பாஷாந்தரங்கள் முதலில் எழுதப்பட்ட பிரகாரம் நமக்குக் கிடைத்திருக்குமானால், தற்காலப் பிரதிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகிற இடங்களில் சரியான எபிரேயு மூலம் இன்னதென்று திட்டமாய் அறிந்துகொள்ள இடமிருக்குமே. மேற்படி திருப்புதல்களைச் செய்தவர்கள் ஈராயிரம் வருஷத்துக்கு முன்னிருந்தவர்கள். அவர்கள் காலத்துக்குப்பின் எபிரேயு வேதாகமப் பிரதிகளில் எத்தனையோ தப்பிதங்களும் மாறுதல்களும் நுழைந்திருக்கும். என்றாலும் அவர்கள் பார்த்துத் திருப்பின பிரதிகளில் அவைகளிருக்கமாட்டாதே. ஒரிஜன் கையாடின மற்றத் திருப்புதல்களைக் குறித்தும் இவ்விதமே சொல்லத்தக்கது. அவைகள் செப்துவகிந்து திருப்புதலுக்கு மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்குப்பின் தோன்றினவைகளென்றாலும், நம்மிடத்திலிருக்கும் எபிரேயுப் பிரதிகளைப் பார்க்க அதிக பழமையான பிரதிகளைப் பார்த்துச் செய்யப்பட்டவைகளல்லவா? ஆகையால் ஒரிஜன் என்பவன் செய்த இந்தப் பெரிய நூல் ஒழிந்துபோனது துக்கப்படத்தக்க காரியந்தான். செப்துவகிந்து திருப்புதல் ஒன்றுதான் நாளதுவரையும் முழுமையாயிருக்கிறது. ஆகிலும் மேலே காட்டியபடி எண்ணிறந்த தப்பிதங்களும் மாறுதல்களும் நாளாரம்பத்தில் நுழைந்துகொண்டதினால் அது முதலில் செய்தபடியே இருக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்ல ஏதுவில்லை. மற்றக் கிரேக்குத் திருப்புதல்களில் சில சில பகுதிகள் மாத்திரம் இப்பொழுது இருக்கின்றன. அவைகளால் மேற்படி பாஷாந்தரங்களைச் செய்தவர்கள் அநேக காரியங்களை வெகு வித்தியாசமாய் அர்த்தப்படுத்தியிருக்கிறார்களென்று தெரியவருகிறது. ஒரிஜன் என்பவனும் வெகுகாலம்வரையில் எபிரேயுப் பாஷையைக் கற்காதவனாயிருந்தும், அறிவின்பேரில் அவனுக்கிருந்த ஆசையி

ஞலே ஏவப்பட்டு ஒருவன் தானாய் நிறைவேற்றக்கூடுமென்று நினைக்க வொண்ணாத பல அரிய வேலைகளோடு இதையும் கற்றுக்கொண்டான்.

மாக்ஸிமினு இராயன் கி. பி. 238 ல் மரித்துப்போகவே, ஒரிஜெனும் அங்கங்கே ஓடிப்போய் மறைந்துகொண்டிருந்த மற்றவர்களும் தம்தம் வீடுகளுக்குத் திரும்ப வசதியாயிற்று. அவனுக்குப்பின் மகுடாபிஷேகம்பெற்ற கோர்டியன் அரசுபுரிந்த நாட்களில் கிறிஸ்தவர்கள் சுகமாயிருந்தார்கள். அவர்கள் பெரிய பெரிய சங்கங்களாய்க் கூடி தங்கள் காரியங்களை ஆலோசித்து திட்டஞ்செய்துகொள்ளக் கூடியவர்களாயிருந்ததே அதற்கு அத்தாட்சி. அவர்கள் கூடிவந்த சங்கங்களிலெல்லாம் இரட்சிப்புக்கு அவசியமான விஷயங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு சபைகளைச்சேர்ந்த எல்லோரும் ஏக ஐக்கியமுடையவர்களாயிருந்தது நாம் நன்றாய்க் கண்டுகொள்ளலாம். தோனேத்து என்பவன் கர்த்தாகோப் பட்டணத்தில் கண்காணியாயிருந்த நாட்களில், அவ்விடத்தில் சங்கமாகக் கூடிவந்திருந்த தொண்ணூறு கண்காணிமார்கள் பிரிவேத்து என்று பேர்கொண்ட ஒருவனை குற்றவாளியென்று தீர்த்தார்கள். பிரிவேத்து என்பவனுடைய விசேஷித்த தப்பறை இன்னதென்று குறிக்கப்படவில்லை. என்றாலும் இக்காலத்தில் ரோமாபுரியில் கண்காணியாராயிருந்த பேபியேனு என்பவன் கர்த்தாகோப் பட்டணத்துக்கு நிருபம் எழுதி அவர்கள் செய்த தீர்ப்பை முற்றும் சரிதானென்று ஒப்புக்கொண்டிருக்கிறான். ரோமாபுரிச் சபைக்கும் கர்த்தாகோப் பட்டணத்துச் சபைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்ததாகத் தோன்றுகிறது. மேற்படி சம்பந்தம் நடந்தேறுகிறதற்கு அவைகளிருந்த இடங்கள் அனுகூலமாயிருந்தன. மேற்கத்திச் சபைகளில் இவ்விரண்டிக்கும் மேலானதென்று பாராட்டத்தக்கது ஒன்றுமிருந்ததில்லை.

---

## Notes on Genesis.

---

# ஆதியாகம வியாக்கியானம்.

---

## ௰௨. அதிகாரம்.

### ஆபிராம் அழைக்கப்பட்டது.

---

1. "கர்த்தர் ஆபிராமை நோக்கி" கண் காணத்தக்கதாக வெளியரங்கமாய்க் காணப்பட்டாரென்று நினைக்கப்படுகிறது. எப்படியும் தம்மை அவனுக்குக் காண்பித்து, இது திவ்விய வெளிப்படுத்தலென்று அவன் சந்தேகமில்லாமல் அறிந்துகொள்ளும்படி செய்தார்.

"உன் தேசத்தையும்" அதாவது ஊர் என்ற கல்தேயருடைய பட்டணம். 11: 31. வியா. "ஊர்" என்ற எபிரேயு வார்த்தைக்கு ஒளி என்றர்த்தம். இது கீழ் மெசொப்பொத்தாமியாவில் அஸ்ரோயின் (Asrhoene) என்ற மலைகளடிவாரத்தை ஒட்டி, எருசலேமுக்கு வடகிழக்கே ஏறக்குறைய 400 மயில் தூரத்தில் கட்டப்பட்டது. தற்காலத்தில் 50,000 பேருள்ள வியாபார பட்டணமாயிருக்கிறது.

நாகோரின் மகன் கேசேது என்பவனால் கல்தேயா என்ற பேர் வந்ததென்றும், அவன் குடும்பத்தார் குடியிருந்த பட்டணம் வான



சோதிகளைக் குறிக்கும்படி "ஊர்" என்று அழைக்கப்பட்டதென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

"நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." எபி. 11: 8. உலகத்திலெங்கும் விக்கிரகாராதனை மிஞ்சிப்போகாதபடி தடுக்கவும், உலகத்தாருக்குத் தம்மைக்குறித்து சாட்சியிடும்படி தமக்கென்று ஒரு சனக்கூட்டத்தை உண்டாக்கவும், அவர்கள் மேசியாவைக் குறித்துள்ள அறிவைக் காத்து வெளிபபடுத்தும்படி தமது பிரமாணங்களையும் ஏற்பாடுகளையும் அவர்கள் நடுவே ஸ்தாபிக்கவும் நோக்கமாக சர்வலோக தயாபரர் ஆபிராமைத் தெரிந்துகொண்டார்.

"நான் உன்னைப் பெரிய சாதியாக்கி" "யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்?"

"உன்னை ஆசிர்வதித்து" இகபர நன்மைகளால் ஆசிர்வதித்தார்.

"உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்." உலகத்திற் பிறந்த மனுஷராகமாத்திரமிருந்தவர்களில் ஆபிராமே பெரியவன். இவன் வெற்றிவேந்தனல்ல, இராசனல்ல, நியாயப்பிரமாணிக்கனல்ல, சாஸ்திரியல்ல, யாதொரு நூலைச் செய்தவனல்ல; ஆனால் தன் ஜீவகாலமெல்லாம் கூடாரங்களிலே வாசஞ்செய்துவந்த ஒரு சாதாரண மேய்ப்பன். என்றாலும் யூதர் மகமதியர் கிறிஸ்தவர்களாகிய இவர்களுக்குள் ஏறக்குறைய 4000 வருடக் காலமாய் நாளதுவரையும் இவன் பேர் கனமாயெண்ணப்பட்டு, இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக நிறைவேறிவருகிறது. இவனே விசுவாசிகளுக்குப் பிதா. மோட்சம் "ஆபிரகாமின் மடி" என்னப்படுகிறது. ஆ இது எப்பேர்ப்பட்ட கனம்! இது இந்த வார்த்தைகள் தேவாவியின் ஏவுதலால் எழுதப்பட்டதென்பதை ரூபிக்கிற அத்தாட்சியல்லவா? கர்த்தருக்கு முன்பாக விசுவாசி தான் பெரியவன்.

"நீ ஆசீர்வாதமாயிருப்பாய்" மீ. இவன் போனபோன இடமெல்லாம் நன்மை உபகாரியாயிருந்தான். உலகம் முடியுமட்டுமுள்ள எல்லா விசுவாசிகளுக்கும் சிறந்த மாதிரியானான். எப்பேர்ப்பட்ட பேர்போன பத்திமான்களாலும் அவன் விசுவாசம் பின்பற்றி நடக்க அரிதாயிருக்கிறது. அவன் அழைக்கப்பட்டதுமுதலுள்ள அவன் ஜீவகாலத்தை விசுவாச ஜீவியம் என்று சொல்லலாம். ஆதி. XXII. எக்காலத்திலும் உலகத்துக்கு உண்டான நன்மையெல்லாம் அவன் சந்ததியாராலுண்டானது. பரிசுத்த வேதாகமங்கள் அவன் வகையருக்களால் எழுதப்பட்டு பிரசங்கிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கு மேலாக சர்வலோகத்துக்கும் ஆசீர்வாதமான இரட்சகர் ஏசுக்கிறிஸ்து அவன் சந்ததியிற் பிறந்ததினாலே ஆபிராம் ஆசீர்வாதமானான். ரோமர் 9: 4, 5. அவன் சந்ததியாராகிய யூதர் இப்பொழுது உலகத்திலெங்கும் சிதறடிக்கப்பட்டிருப்பது கூட உலகத்துக்கு ஐசுவரியமும் ஆசீர்வாதமுமாயிருக்கிறது.

4. "ஆரான்" மரித்துப்போன தன் மகனை நினைப்பூட்ட தேராகு இந்தப் பேரை இட்டானென்று நினைக்கப்படுகிறது. தேராகு இவ்விடத்தில் மரித்தபிற்பாடு ஆபிராம் மறுபடியும் அழைக்கப்பட்டான் என்று தோன்றும். நடபடி 7: 2, 3. ஆரான் என்ற எபிரேய வார்த்தையை "காரான்" என்றும் எழுதக் கூட்டலாம். அப்படியே செப்துவஜின்ட் திருப்புதலிலிருக்கிறது. நடபடி 7: 2. இது இப்பொழுது முன்போல பேரொடுப்பான பட்டணமாயில்லை. சில அரபர் மாத்திரம் அங்கே இருக்கிறார்கள்.

"போனான்" இந்த வார்த்தையில் தொகுத்திருக்கிற விசுவாசமும் வருத்தமும் மிகவும் கொஞ்சப்பேருக்குத் தெரியும்! கானான்தேசம் எப்படியிருக்குமென்று ஆபிராமுக்குத் தெரியாது. அது ஆரானுக்கு கொஞ்சங்குறைய 400 மயில் தூரத்திலுள்ளது. கடக்கவேண்டிய பெரிய பெரிய நதிகளும் விசாலமும் மோசமுமான வனாந்தரமுமுண்டு, என்றாலும் தனக்குண்டான அழைப்பும் வாக்குத்தத்தமும் கட்டளையும் ஜீவனுள்ள மெய்த்தேவனாலுண்டானதென்று பூர்த்தியான நிச்சயம்கொண்டு, "விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்." தேவன் சொல்வது சத்தியம். அவர் தமது வாக்கை நிறைவேற்ற உண்மையும் திறமையும் உடையவர் என்று உறுதியாய் விசுவாசித்தான். தான் தேவ உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து தன் இனசனம் வீடுவாசல் சொத்து சொம் சுயதேசத்தையும கூட ஒரடியாய் விட்டுவிடுவதால் உண்டாகும் நஷ்டத்துக்குச் சரிசெய்யவும், அவன் எதிர்பார்த்த துன்பங்களில் அவனைத் தாங்கவும், அவன் குறைவுகளை எல்லாம் நிறைவாக்கவும், அவன் விருப்பங்கள் ஆசைகளுக்கெல்லாம் அவன் நினைத்ததிலும் அதிகமாய்த் திர்ப்திசெய்யவும் சர்வவல்லவருடைய வாக்கே போதுமானது என்று திடநம்பிக்கைகொண்டு புறப்பட்டான். அவன் இப்படிப் போகிறதைக் கண்டவர்கள் இவன் வீண் தோற்றமாய் மனப்பிரமைகொண்டு போகிறான் என்று பரியாசம்பண்ணியிருப்பார்கள். ஆனால் பரியாசத்துக்கு அஞ்சுவது ஆபிராமின் விசுவாசமா!

5. "லோத்து" ஆபிராமூலமாய் விசுவாசியானானென்று நினைக்கப்படுகிறது. இவனும் தன் குடும்பத்தோடு புறப்பட்டான்.

"ஆரானிலே சவதரித்த சனங்கள்" மேற்படியார்களுடைய வேலைக்காரரென்று நினைக்கத்தக்கது. இவர்களில் அநேகர் அவர்களால் மெய்மார்க்கத்துக்குத் திருப்பப்பட்டுமிருக்கலாம்.

இப்படியாக ஆபிராமும் அவன் குடும்பத்தாரும் தெற்குமுகமாய் சற்று மேற்கே சாய்ந்துப் பயணம்பண்ணி தேவநடத்தலினால் "கானான் தேசத்திற் சேர்ந்தார்கள்." சேர்ந்தபின் ஒருபோதும் தான் விட்டுவந்த தேசத்திற்கு திரும்பவில்லை. திரும்பும்படி நினைக்கவுமில்லை. எபி. 11: 15.

கவனிப்பு. இதற்கு 64 வருஷத்துக்குப்பின் எலியேசரை அனுப்பினான். அதி. XXIV. 100 வருஷத்துககுப்பின் யாக்கோபு போயிருக்கிறான். 27: 43. 28: 10. 29: 4.

6. "சீகேம்" அதாவது பிற்காலத்தில் சீகேம் கட்டப்பட்ட இடம். யாக்கோபின் காலத்திலிருந்த ஏமோரின் குமாரன் சீகேம் இதைக் கட்டி இதற்கு தன் பேரையிட்டானென்று நினைக்கப்படுகிறது. இந்த இடத்தைக்குறித்தே ஆதி. 33: 18. நடபடி 7: 16. யோவான் 4: 5 பார். எப்பிராயீம் கோத்திரத்தில் ஏபால் கெரிசீம் மலைகளுக்கு இடையிலிருந்தது.

பலஸ்தீனாவின் மத்திக்கு இடப்பேராக "மோரே" என்று பூர்வமுதல் வழங்கப்பட்டது. "சமபூமி" என்று திருப்பப்பட்டிருக்கிற எபிரேயு வார்த்தை செப்ற்றியூஜின்ட் திருப்புதல்படி "உயர்ந்த கர்வாலி மரம்" என்றும் அர்த்தமாகும். இதுவே சரியானதாகவும் காணப்படுகிறது. ஆதி. 35: 4. யோசு. 24: 25, 26. நியா. 9: 6. அப்படியானால் மோரேயின் உயர்ந்த கர்வாலி மரத்தோப்புக்கு ஆபிராம் வந்து சேர்ந்தான்.

"அக்காலத்திலே கானானியர் அத்தேசத்திலிருந்தார்கள்." ஆபிராமின் பலத்த விசுவாசத்தையும் சோதனையையும விளக்குகிற



வகையாய் ஆவியின் ஏவுதலடைந்து வேதாகமங்களை ஒன்றாய்ச் சேர்த்த எஸ்றா அல்லது அப்படிப்பட்ட இன்னொருவனால் இவ்வார்த்தைகள் பிற்காலத்திற் கூட்டப்பட்டதென்று நினைக்கப்படுகிறது. கானானியர் அக்கிரமக்காரர், அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்கள் என்ற குறிப்பும் இதில் தொகுத்திருக்கிறதைக் காணலாம்.

7. "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி" இவன் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் தாம் அங்கீகரித்ததற்கு அத்தாட்சியாகவும், தாம் அவனைக் கைவிட்டுவிடாமல் எப்போதும் கண்ணோக்கி வருகிறதை அவனுக்கு ஞாபகப்படுத்தவும், தாம் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினது இந்தத் தேசந்தான் என்று சொல்லி உறுதிப்படுத்தவும், எவ்வகையிலும் அறிமுகமில்லாத அந்நிய தேசத்தில் பொல்லாதவர்கள் நடுவே வந்திருக்கிற அவனைத் தைரியப்படுத்தவுமாக இப்பொழுது தரிசனமானார்.

"ஒரு பலிபீடத்தைக் கட்டினான்." இதினாலே தன் மார்க்கத்தைக்குறித்து வெளியரங்கமான அறிக்கைசெய்தான். ஸ்திரீ வித்தின் பேரிலுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தி, அவருடைய பிராயச்சித்தத்துக்கு முன் குறிப்பாக பலிகளைச் செலுத்தினான். இனித்த ஆத்துமா தன்னை முகிப்பாற்றிக்கொள்ள இது நல்ல வழி. தன் குடும்ப சகிதம் ஓய்வுகாலை ஆசரித்தானென்றும் நினைக்கத்தக்கது. இப்படியாக இனிமேல் இது மெய்மார்க்கத்துக்கு பிரபலமான மூலஸ்தானமாகுமென்ற விசுவாசத்தினாலே இப்பொழுதே வாக்குத்தத்த தேசத்தைக் கையாட்சிசெய்கிறவனாக விளங்கினான்.

"பெத்தேல்" சீகேமுக்கு 20 மயிலுக்குத் தெற்கே பென்யமீன் கோத்திரத்து வட எல்லையிலிருந்தது. 1 இராசா 12: 29. இதற்கும் பிற்காலத்திலே தான் இந்தப் பேர் வந்தது. 28: 19. மோசே தன் காலத்தில் வழங்கினபடி எழுதுகிறான்.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்." அவன் பலியை அடுத்த ஆராதனை என்று காணப்படுகிறது. "அவன் கர்த்தருடைய நாமத்தைப்பற்றிப் பிரசங்கித்தான்" என்று சிலர் அர்த்தம் பண்ணுகிறார்கள்.

10. ஆபிராம் கொடிய பஞ்சத்தினால் நெருக்கப்பட்டபோது மெசொப்பொத்தாமியாவுக்குத் திரும்பவில்லை. கொஞ்சக்காலத்துக்கு தெற்கே 250, 300 மயில் தூரமான எகிப்துக்குப் போனான்.

13. "உன்னை என் சகோதரி என்று சொல்." இந்தப் பொய் சொல்ல ஆபிராமை ஏவினது அவிசுவாசமே. உன்னைப் பெரிய சாதியாக்குவேனென்று கர்த்தர் இப்போ தான் வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார். அப்படியிருக்க அவன் பிள்ளையில்லாதிருகையில் அவனைக் கொல்ல கர்த்தர் இடங்கொடுப்பாரா? இதை பட்சபாதமில்லாமல் எழுதுகிற மோசே எத்தனை உண்மையுள்ளவன்!

14. எகிப்தியர் பசலை நிறமுள்ளவர்களானதினாலே இப்போது சாராய் 65 வயதானபோதிலும் "மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள்."

17. "வாதித்தார்." இன்ன முகாந்தரத்துக்காக வாதிக்கப்படுகிறோமென்று வாதையின் தன்மையினாலேயே அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்தார். சாராயையும் உள்ளதைச் சொல்லும்படி கேட்டிருப்பார்கள். 18, 19.

படிப்பினை.

விசுவாசத்துக்கு அசல் மாதிரியை இக்கே காணலாம். விசுவாச

மாயதென்ன? அது தேவனுடைய இலவசமான ஈவாம். 1 வா. தேவ வாக்கை நம்புவதாம், தேவவாக்குக்குக் கீழ்ப்படிவதாம். 4. மெசொப் பொத்தாமியாவை ஓடிப்போய் விட்டுவிடுவதாம், கானானுக்குப் பயணம்பண்ணுவதாம். 5. தேவனுக்குத் தன்னை முழுவதுமாய் ஒப்புக் கொடுத்துவிடுவதாம். தேவவாக்குத்தத்தங்களின் மேல் சார்ந்து வாழ்வதாம். மெசொப்பொத்தாமியாவுக்குத் திரும்பாததாம். 10. நான் மடிந்தாலும் கிறிஸ்துவின் கிருபை [illegible] மடியேன் என்று ஓரே பிடியாய் அவரைப் பற்றிக்கொள்வதாம். 7.

உலகத்திலே அன்பும் [illegible] இல்லாமலில்லை. [illegible] படாத நெஞ்சில்லை. [illegible] தேவனுடைய [illegible] கிருபையினால் [illegible]! [illegible] என்று [illegible] வாக்கிலடங்கான். [illegible] விழுகிறான்! [illegible]! [illegible] எலியா!

ஆபிரகாமும் வாழ்கிறீரே! மோசேயும் வாழ்கிறீரே! எலியாவும் வாழ்கிறீரே! [illegible] வாழ்வாதே! உம்முடைய [illegible]! மாசில்லாத [illegible]! [illegible] பரிசுத்த [illegible]! [illegible]! நீர் பரி சுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்!

மாசில்லாமல் [illegible] [illegible]
சத்தியத்தை [illegible]!
செருபீன்கள் [illegible] பிரகாசம் [illegible]
முன்பாக [illegible]!
என் பூவை [illegible]! [illegible]!
ஆ. [illegible]! [illegible] கொண்டவரே!

The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XII-வது. இராசகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

(தொடர்ச்சி,)

பரலோக இராட்சியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு இராசாவுக்கு ஒப்பாயிருக்கிறது. கலியாணமென்பது கலியாண விருந்தைக் குறிக்கும். மத்தே. 25: 10. யோவான் 2: 18. 9: 22. இந்தக் கலியாண விருந்து ஏழு அல்லது பதினாலு நாளிருக்கும். [illegible] புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை விருந்தாகவும், ஏசாயா 25: 6. 65: 13. உன்ன. 5: 1. கலியாணமாகவும் ஏசாயா 61: 10. 62: 5. ஓசேயா 2: 19. மத்தே. 9: 15. யோவா. 3: 29. எபேசியர் 5: 32. 2 கொ. 11: 2. காட்டியிருக்கிறார்கள். தேவனோடு விசுவாசிக்கு இருக்கும் ஐக்கியத்தையும் குறிக்கும். இரண்டையும் சேர்த்து கலியாண உவமையாக இதில் காட்



டியிருக்கிறது. திவ்விய காரியங்களை உலகக் காரியங்களால் காண்பிக் கிறதில் இங்கே ஒரு சங்கடமுண்டு. சபையின் அவயவங்களானவர்களை விருந்தாடிகளாக மாத்திரமல்ல, ஏகக் கூட்டமாய் மணவாட்டியாகவும் இங்கே காட்டவேண்டியிருக்கிறது. சரித்திரம் போகப்போக கலியாணமானது நீங்கி, வரவர முற்றிலும் அற்றுப்போகிறது. அழைக்கப்பட்ட விருந்தாடிகளுடைய [illegible] முக்கியமாய்க் காட்டப் பட்டிருக்கிறது. எபேசியர் 5: 24 32 ல் கிறிஸ்துவுக்கும் சபைக்குமிருக் கும் ஐக்கியத்தைக் காட்டியிருந்தாலும், திவ்விய வார்த்தையாகிய கிறிஸ்து மனித சுபாவத்தோடு சேர்க்கையானதைக்கொண்டு இந்த உவமையை [illegible] இந்தச் சங்கடம் நீங்கிப்போம். இந்த உவமை முந்தின உவமையைப்போல பழையஏற்பாட்டின் சங் கதிகள் மேல் கட்டப்பட்டிருக்கிறது. 2 மோ. 24: 11. செப். 1: 7, 8. வாக். 9: 1. மேசியாவின் இராட்சியம் விசேஷித்த ஒரு விருந்தோடு தொடங்குமென்பது யூதருடைய அபிப்பிராயம். நம்முடைய இரட் சகர் தாமும் அந்த சந்தர்ப்பங்களைக் காட்ட இந்த உவமானத்தைப் பிர யோகிக்கிறார். லூக். 22: 18, 30. அப்படியே வெளி. 19: 7 லும் சொல் லியிருக்கிற கலியாணம் இந்த யுகத்தின் முடிவில் தான் நடக்கிறதாகச் சொல்லியிருக்கிறது மெய்யே. இங்கேயோ நம்முடைய இரட்சகர் இப் பொழுதே நடக்கிறதாகப் பேசுகிறார். இரண்டையும் லேசாக ஒரு மைப்படுத்தலாம்: இந்தச் சம்பவம் சம்பூரணஞ் செய்கிறதும் கலியாணமும் வெவ்வேறான காரியங்கள். அவருடைய முதல் வருகை பரிசம்போட வந்ததுபோலிருக்கிறது. இரண்டாம் வருகையில் தான் மணவாட்டியை அழைத்துக்கொண்டுபோக வருவார்.

அருந்த வேளையில் அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச் சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான். இவர்கள் அநேகம் பேராயிருக்கவேண்டும். அக்காலத்தில் இதைப்போலொத்த உவமையில் விருந்துக்கழைத்தவன் சாதாரணமான மனிதனாயிருந்த போதிலும் அநேகம் பேரை அழைத்தான். இங்கே விருந்துசெய்த வர் பெரியவர். அகாசுவேருவும் [illegible]. எஸ்தர் 2: 33 வரை. இரண் டாவது அழைத்தது ஒரு எச்சரிப்பு. இது கிழக்கத்தைய வழக்கம். எஸ்தர் ஆமானை மறுநாள் விருந்துக்கழைத்தாள். எஸ்தர் 5: 8. நேரம் வந்த போது விருந்துக்கழைக்க பிரதானி வருகிறான். 6: 16. தற்கால பிரயா ணிகள் எல்லாம் ஆயத்தமாயிருக்கும்போது மறுபடியும் விருந்துக்கு அழைக்கிறது வழக்கமென்கிறார்கள். ஆதலால் அழைக்கப்பட்டவர்கள் என்று சொல்லும்போது அந்தச் சமயத்தில் தான் அழைக்கப்பட்ட வர்களென்று சொல்லக்கூடாது. லூக். 14: 16, 17.

உவமையின் உள்ளான கருத்துக்கு முற்றிலும் விரோதம். விருந் தாடிகள் முன்னே அழைக்கப்பட்டிருந்தபடியால், அவர்கள் கீழ்ப்படி யவேண்டியது நூதனமான சட்டமல்ல. பழைய கட்டளை தான் இப் பொழுது நூதனமாய் ஏற்பாடானதென்று சொல்லக்கூடாது. அது தான் நியாயப்பிரமாணத்தின் முடிவு. சகலமும் அதினின்று தான் உற் பத்தியாயிற்று. அழைக்கப்பட்டவர்களை வரச்சொல்லுகிற வார்த்தை களால் அவர் போதிக்கிறதென்ன! அவருடைய இராட்சியம் திடீரென் று உண்டாகிறதல்ல. அதினுடைய மூல சத்தியங்கள் முன்னமே அஸ் திபாரப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முந்தின சரித்தி ரத்தில் மேன்மையானதெல்லாம் இப்பொழுது அவர்களுக்குக் கிடைத் திருக்கிற ஆசீர்வாதங்களை முன்னறிவித்ததுபோல தான். யூதசபை ஏற்பாடானபோது முதலாவது இந்த அழைப்பு உண்டாயிற்று. பிந்தி

வந்த தீர்க்கதரிசிகள் யாவரும் பின்வரும் கிறிஸ்து என்னும் இராசனைக் குறித்து தீர்க்கதரிசனமுரைத்து, அந்த நாளுக்கு ஆவியின் பிரகாரமாய் ஆயத்தப்பட்டிருக்கும்படி சனங்களை அழைத்தார்கள். அழைக்கப்பட்டவர்கள் பழையஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் அழைக்கப்பட்டவர்களல்ல. வரப்போகிற நற்காரியங்களைக்குறித்துத்தான் பேசினார்கள். யோவான்ஸ்நானனுடைய நாள்வரையில் இந்த இராட்சியம் வரவில்லை. இராசாவின் குமாரன் வெளிப்படவில்லை. கலியாணத்துக்கு முன்னேயே அழைக்கப்பட்டிருக்கிறவர்களை, விருந்துக்கு வரும்படி அழைக்கப்பட்டவர்களை விருந்துக்கு ஆயத்தப்பட ஒருவரும் சொல்லவில்லை. முந்திவந்த வேலைக்காரர் யோவான்ஸ்நானன், அப்போஸ்தலர்கள். இரட்சகர் உயிரோடிருந்த காலத்தில் பாவிகளை இரட்சகர் அண்டையில் அழைத்தார்கள். அவர் தாமே என்னிடத்தில் வாருங்களென்று பாவிகளை அழைத்தபோது விருந்தாடிகளைத் தாமே அழைத்தார். இது உவமையில் காட்டப்படவில்லை. இராசாவின் குமாரன் அழைக்கிறது அத்தனை செம்மையாயிராது. அப்படிப்பட்ட தாழ்மை இயல்புக்கு ஏற்றதல்ல. பரம இராசாவின் குமாரன் தான் இவ்வளவாகத் தாழ்மையைக் காண்பிக்கிறவர். அவர் அன்புக்குரிய எந்த ஊழியத்தையும் செய்யப் பின்வாங்குகிறவரல்ல. கலியாணம் தனக்கே நடந்தபோதிலும் விருந்தாடிகளை அழைக்க அனுப்பப்படுகிறவர்களில் ஒருவராக இருக்கிறார். முதலாவது வேலைக்காரர் போனபோது அவர்களுக்கு ஒருவரும் தீமை செய்யவில்லை. அழைப்பை வெறுத்தார்கள். அழைத்தவர்களை அந்நியரைப்போல எண்ணினார்கள். ஆனாலும் அவர்களைத் துன்பப்படுத்தவில்லை. இரட்சகர் உயிரோடிருந்தகாலத்தில் அப்போஸ்தலன்மார் துன்பப்பட்டதில்லை. யோவானஸ்நானனைக் கொன்றது ஒரு ஏரோதியன். அவன் அழைக்கப்பட்ட விருந்தாடியல்ல. சுவிசேஷத்தையல்ல, நியாயப்பிரமாணத்தைப் பிரசங்கித்ததினால் ஏரோது அவனைக் கொன்றான். நம்முடைய இரட்சகர் தாமும் துவக்கத்தில் துன்பப்படவில்லை. அவர்கள் வரமனமில்லாதிருந்தார்களென்று சொல்லியிருக்கிறது. நீங்கள் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி என்னிடத்திற்கு வரமாட்டீர்கள் என்று இரட்சகர் சொன்னார்.

---

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

ஒய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### XXV. திரித்துவ ஞாயிறைப்பற்றிச் சொல்லியது.

பழைய செபபுஸ்தகங்களில் எல்லாம் இது பரிசுத்தாவியின் பண்டிகையின் 8 ம் நாளாகக் கண்டிருந்தது. திரித்துவ ஞாயிறுக்குப் பிற்பாடு தான் ஆசரிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு நாளிலும் திரித்துவத்



துக்குரிய துதிகளை பாட்டுகளிலும், விசுவாசப்பிரமாணங்களிலும் சொல்லிவந்தபடியால், அடிக்கடி காட்டிவந்த இந்த உபதேசத்துக்காக ஒரு பண்டிகையை ஆசரிப்பது அவசியமல்லவென்றெண்ணியிருந்தார்கள். ஆரியரும் மற்ற பதிதரும் தோன்றினபிறகோ அவர்கள் தப்பான எண்ணங்களுக்கு எதிரிடையாக தம் கொள்கையை உறுதிப்படுத்தும்படிக்கு இந்த நாளை திரித்துவநாளாக ஸ்தாபித்தார்கள். சிலர் இதைப் பரிசுத்தாவியின் நாளுக்குப் பிந்தி ஆசரித்துவந்தார்கள். வேறு சிலர் அட்வெந்துக்கு முந்தின ஒய்வுநாளில் ஆசரித்துவந்தார்கள். 1305 ம் வருஷத்தில் இப்பொழுது நடக்கிறபடி தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது. இதற்கென்று இந்த நாளை ஸ்தாபிப்பதற்கு காரணமென்னவென்றால், இரக்ஷகர் பரத்துக்கேறி பரிசுத்தாவியை ஊற்றினவுடனே மகிமை நிறைந்த, புத்திக்கெட்டாத திரித்துவத்தைப்பற்றி சரியான அறிவுண்டாயிற்று. அதற்கு முன்னே அவ்வளவு தெளிவான அறிவு இருந்ததில்லை. இதுவரையில் சபையானது திரித்துவத்தில் ஏகத்துவத்தை வணங்கவேண்டுமென்று கருதி, திரித்துவத்தின் ஒவ்வொரு ஆளையும் கனப்படுத்த சில பண்டிகைகளைக் கொண்டாடி வந்தது. இப்பொழுது ஏகத்துவத்தில் திரித்துவத்தை வணங்கும்படியாக பண்டிகைநாளுக்குக் கடைசியாக இதைக் கூட்டியிருக்கிறது. கிரேக்குச் சபையார் பரிசுத்தாவியின் பண்டிகைக்குப் பின்வரும் திங்களை திரித்துவநாளாகக் கொண்டாடி பிந்தின ஞாயிறை சகல பரிசுத்தவான்களின் நாளாகக் கொண்டாடினார்கள்.

மூன்றாவது. திரித்துவத்தைப் பற்றின சத்தியம் யூதருக்குத் தெளிவாய் தெரிந்ததில்லை. விக்கிரகஆராதனைக்காரரால் சூழ்ந்திருந்தபடியால், அநேக தேவர்கள் உண்டென்கிற உபதேசத்துக்கு இது அனுகூலமுள்ளதாகத் தோன்றும். ஆகிலும் முற்றிலும் அவர்களுக்கு மறைக்கப்படவில்லை. ஞானக்கருத்தாய் பழையஏற்பாட்டை வாசிக்கிறவர்கள் அதைப்பற்றி மங்கலாய்ச் சொல்லியிருக்கிறதை இங்குமங்கும் காண்பார்கள். முதல் அதிகாரத்திலேயே தேவதத்துவத்தில் மூன்று ஆட்கள் இருந்ததாகத் தோன்றுகிறது. இரண்டாம் வசனத்தில் ஆவியானவர் தண்ணீர்மேல் அசைவாடிக்கொண்டிருந்ததாக வாசிக்கிறோம். 26 ம் வசனத்தில் சிருஷ்டி கர்த்தாவானவர் எல்லாவற்றிலும் சிறந்த சிருஷ்டியாகிய மனிதனை உண்டாக்குவதைக்குறித்து மற்றவர்களோடு யோசிக்கிற பாவனையாகக் காட்டியிருக்கிறது. தேவகுமாரனாகிய வார்த்தையென்பவர் இவர்களில் ஒருவர். சகலமும் அவரால் உண்டாயிற்று. அவரில்லாமல் சிருஷ்டிக்கப்பட்டதொன்றும் உண்டாகவில்லை. யோவான் 1; 3. இந்த இரண்டு வாக்கியங்களும் பிதா, குமாரன், பரிசுத்தாவியாகிய மூவரையும் தெளிவாய்க் காட்டுகிறபடியால், இது இந்த நாளுக்கேற்ற பாடம்தான். மற்ற முதலாம் பாடமாகிய 1 மோ. 18 ம் அதிகாரத்தில் கர்த்தர் ஆபிரகாமுக்குக் காணப்பட்டதைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. பூமிக்கெல்லாம் நியாயாதிபதியென்று ஆபிரகாம் அவனை அழைக்கிறான். திரித்துவத்தின் ஆட்களை அவன் பார்க்கவேண்டுமென்ற நோக்கமாய் அவர் பின்னும் இவனுக்கு காணப்பட்டார். காலை இரண்டாம் பாடமாகிய மத். 3 ல் இந்த சத்தியம் வெகு துலாம்பரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் அங்கே குமாரன் ஞானஸ்நானம் பெறுகிறதையும் பிதா சாக்ஷி கூறுகிறதையும் பரிசுத்தாவி இறங்குகிறதையும் காண்கிறோம். இவர்கள் மூன்று பேரும் வெவ்வேறு ஆட்களாயிருந்தாலும், மாலை இரண்டாம் பாடமாகிய யோவான் 5 ல் இம்மூவரும் ஒன்றென்று காட்டியிருக்கிறது.

நாலாவது. நிருப, சுவிசேஷ வாக்கியங்கள் முன்னிருந்தபடி தான் இருக்கிறது. இது ஞானஸ்நானம் கொடுக்கிற கடைசிநாளானபடியால், சுவிசேஷ வாக்கியம் இந்த நாளுக்கு மிகவும் ஏற்றது. திரித்துவ ஞாயிறுக்கு இரண்டும் ஏற்றதுதான். நிருப வாக்கியத்திலும் சுவிசேஷ வாக்கியத்திலும் திரித்துவத்திலுள்ள மூன்று ஆட்களைக்குறித்தும் சொல்லியிருக்கிறது. நிருபவாக்கியத்தில் தேவதூதர்கள் மோட்சத்தில் பாடும் பாட்டில் சர்வவல்லமையுள்ள கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரென்று கண்டிருக்கிறபடியால், அதுவே மூன்று ஆட்களையும் ஒரே தேவனையும் காட்டப் போதுமானது. சுருக்கசெபமும் இந்த நாளுக்கேற்றதுதான்.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### எ. அதிகாரம்.

நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.

பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

III. தேவனுடைய மகத்துவத்தையும் மாட்சிமையையும் கவனித்து, அதுக்குரிய பயத்தோடும் வணக்கத்தோடும் இந்தப் பந்தியைச் சேரவேண்டும்.

தேவனுடைய கண் எக்காலத்திலும் நம்மோடுகூடவிருந்து நம்முடைய செய்காரியங்களைக் கவனிக்கிறதால், நாம் எக்காலத்திலும் அவருக்குப் பயப்படவேண்டியவர்கள்தான். ஆகிலும் பரிசுத்தவான்களின் சபையில் அவர் அதிகமாய் பயப்படத்தக்கவராயிருக்கிறார். நாம் எத்தனைக்கு அதிகமாய் அவரைக் கிட்டிச் சேருகிறோமோ அத்தனைக்கதிகமாய் நாம் பயபக்தியோடே அவரை ஆராதிக்கவேண்டும். எப்போதும் அவருடைய திருமுகத்தை நோக்கிகொண்டிருக்குந் தேவதூதர்கள் முதலாய்த் தங்களுடைய முகங்களை மூடிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறதே. அவருடைய பந்தியில் அவரோடுகூட நாம் இருக்கும்படி இடம்பெற்றவர்களாயிருந்தபோதிலும், அவருடைய பாதப்படிக்கு முன்பாக விழுந்து, அவரை வணங்குகிறவர்களாக எண்ணிக்கொள்ளவேண்டும். நம்மைப்போலொத்த ஒரு மனுஷனைச் சேரும்போது அவனுடைய அந்தஸ்துக்குத்தக்கதாய் நாம் எவ்வளவு வணக்கத்தோடு வாய்பொத்திக் கைகட்டிக்கொண்டு சேருகிறோம். ராஜாதிராஜனும், கர்த்தாதிகர்த்தனும் கொல்லவும் உயிர்ப்பிக்கவுந்தக்கவருமான தேவனுக்கு முன்பாக நாம் சேரும்போது எவ்வளவு பயபக்தியுள்ளவர்களாய்ச் சேரவேண்டும்.

முதலாவது. அவர் மகிமையுள்ள தேவனென்றும், நித்தியருஞ் சர்வ



வல்லமையுள்ள தேவனென்றும் எண்ணி, அதற்குத்தக்க கனத்தோடு அவரைச் சேரவேண்டும். அவர் கிருபாசனத்திலிருக்கிறவராக மாத்திரம் எண்ணாமல், மகிமையாசனத்திலிருந்து நியாயந்தீர்க்கிறவராகவும் எண்ணி அதற்குத்தக்கதாய் அவரைச் சேவிக்கவேண்டும். "தேவன் பரமண்டலங்களிலிருக்கிறவர், நீயோ பூமியிலிருக்கிறவன். ஆகையால் உன் வார்த்தைகள் மட்டாயிருப்பதாக" என்று சாலோமோன் சொல்லியிருக்கிறார்.

இரண்டாவது. அவர் பரிசுத்தமுள்ள தேவனாயிருப்பதினாலும், பக்ஷிக்கிற அக்கினியாயிருக்கிறார் என்று சொல்லப்படுவதினாலும், எரிச்சலுள்ள தேவனானவர் என்கிற நாமத்தையுடையவராயிருப்பதினாலும், நாம் பயத்தோடும் வணக்கத்தோடும் அவரை ஆராதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் நாம் அவருக்குக் கோபத்தை மூட்டி அவருடைய விசனத்துக்குஞ் சாபத்துக்கும் உள்ளானவர்களாயிருப்பதால் நாம் அவருக்குப் பயந்து நடப்பது அவசியந்தானே. தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். நாம் அவரை நம்முடைய வஞ்சகமான ஆராதனையினாலே வஞ்சிக்கிறவர்களாயிருந்தால் நம்முடைய ஆத்துமத்துக்கு மோசத்தை வருவித்துக்கொள்ளுகிறவர்களாகவே அவரை வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். இந்த விஷயத்தில் நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய ஆத்தும இரக்ஷிப்பையடைய கவலைப்படவேண்டும்.

---

## சங்கைபொருந்திய ஷெப்பர்ட் அம்மாளவர்கள்

ஜீவிய விருத்தாந்தச் சுருக்கம்.

ஷெப்பர்ட் அம்மாளவர்கள் கனம்: டாக்டர் கால்டுவெல் ஐயரவர்களுடைய இரண்டாம் குமாரத்தி. அவர்கள் மாதா சங்கைபொருந்திய இலிசா கால்டுவெல் அம்மாளவர்கள். நாகர்கோவிலில் 30 வருஷத்துக்கதிகமாய் தேவவூழியம் நடப்பித்துவந்த கனம்: மால்ற்று ஐயரவர்கள் அவர்களுக்குப் பாட்டனார். அவர்கள் 1849 ம் வருஷம் டிசம்பர் மாசம் 7வ பாளையங்கோட்டையில் பிறந்தார்கள். சிறுவயதில் தானே அவர்களில் காணப்பட்ட அன்பும், பட்சமும், அவர்கள் வாயின் இனிய வசனங்களும் எவருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

1853 ம் வருஷத்தில் அவர்கள் மதா பிதா சீமைக்குப்போக நேரிட்டபோது அவர்களும் கூடவேபோனார்கள். அப்போது அவர்களுக்கு நாலு வயசானபடியால், எட்டுவயதாகுமட்டும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படாமல், வீடுமட்டுமாயிருந்து படித்துக்கொண்டிருந்தார்கள். ஏழு வயதிலேயே புத்தகங்களை வாசிக்கவேணுமென்ற ஆசை அவர்கள் மனதை எழுப்பிக்கொண்டிருந்தது. தாங்கள் கையில் எடுக்கும் சாதாரணமான எந்தப் புத்தகத்தையும் வாசித்தறிய அப்போதே திறமை உடையவர்களாய் இருந்தார்கள். எப்போதும் புத்தகமும் கையுமாயிருப்பார்கள். ஒருநாள் புத்தகம் எடுத்து வாசிக்கச் சமயம் நேரிடாதேபோனால் அந்தநாளில் அவர்களுக்குச் சமாதானம் இராது. அவர்கள் வாசித்துவரும் எந்தப் புத்தகங்களிலும் இங்கிலிஷ் செய்யுளின்மேல் அவர்களுக்கு அதிகப் பிரீதி. அந்தச் செய்யுள்களை முறையாய் வாசித்து, அவைகளின் கருத்தைக் கவனித்து வருவதோடே அவைகளில் விசேஷித்தவைகளையும் மனப்பாடம்பண்ணிக்கொள்வார்

கள். பாடம்பண்ணினவைகளை மனதில் வைத்துக்கொள்ளும் ஞாபக சக்தி அவர்களுக்கு அதிகம். இங்கிலிஷ் செய்யுள்களை வாசித்து அறிந்துகொள்ளும் திறமை சிறுவயதில் தானே அவர்களுக்கு இருந்ததென்று பின்வரும் திருஷ்டாந்தத்தினால் தெரியவரும். அவர்கள் இங்கிலாந்தில் இருந்தகாலத்தில், ஒருநாள் ஒரு அறையில் இருந்து தன் மகனை இழக்கக்கொடுத்த தகப்பனுடைய சரித்திரம் அடங்கிய செய்யுளை அவர்கள் வாசித்துக்கொண்டிருக்கவே, மற்றொரு அறையில் இருந்த அவர்கள் பந்துகள் ஒரு பிள்ளை ஏங்கி ஏங்கி அழுகிற சத்தம் கேட்டு ஓடிப்போய் அதென்னவென்று பார்த்தபோது, அழுதவர்கள் அவர்களே என்றும், அழுத முகாந்தரம் இன்னதென்றும் தெரிந்து ஆச்சரியப்பட்டார்கள்.

அவர்கள் சீமையில் படித்துக்கொண்டிருக்கும்போது தாங்கள் படித்த எந்த வகுப்பிலும் எப்போதும் முதல்பிள்ளையாகவே இருந்தார்கள். எந்தப் பாடமும் எந்தச் செய்யுளும் இரண்டு மூன்று தடவை வாசித்த உடனே மனதில் பதிந்துபோகும். தங்களோடொத்த மற்றெந்தப் பிள்ளைகளுக்கும் கருகலாயும் வருத்தமாயும் தோன்றும் எந்தப் பாடமும் இவர்களுக்கு வருத்தமாகக் காணப்படவே மாட்டாது. உபாத்தியாயர்கள் இவர்களுடைய திறமையையும், ஞாபக சக்தியையும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். பள்ளிக்கூடத்தில் இருந்த காலம் எல்லாம் உபாத்திமாருக்காவது, தம் உடன் மாணாக்கருககாவது எவ்விஷயத்திலும் ஆயாசம் வரத்தக்கதாய் நடந்துகொண்டவர்களல்ல. அவர்கள் சொற்கள் இனிமையும், யோசனைகள் ஆழமும், செய்கைகள் யாவரும் வியந்துகொள்ளத்தக்கதுமாய் இருக்கும்.

சீமையில் இருந்து அவர்கள் இந்தியாவுக்கு வருகையில் பதினாறு வயசு மாத்திரமுள்ளவர்களாய் இருந்தாலும், அறிவிலும் யுக்தியிலும் முதிர்ந்திருந்தார்கள். தன் தந்தையாகிய கனம்: டாக்டர் கால்டுவெல் ஐயரவர்களோடு எபபோதும் சம்பாஷிப்பதும், அவர்கள் சொல்லும் சரித்திர விசேஷங்கள் அவர்கள் பாஷை நடையில் விளங்கும் சிறந்த மொழிகள் இவைகளை அன்றுடகம் கேட்பதும் அவர்களுக்குப் பிரீதியாக இருந்தது. எதையும் வாசித்தறிந்து மனதில் பத்திரபடுத்தும் ஞாபகசக்தியுடையவர்களாய் இருந்ததோடு தாங்கள் அறிந்ததை மற்றவர்களுக்கு ஞானமாய்ச் சொல்லும் திறமையும் உடையவர்களாய் இருந்தார்கள். அவாகள் பேச்சு கேட்கக் கேட்க வெகு இன்பமாய் இருக்கும் என்று அவர்கள் பேசக்கேட்ட யாவருக்கும் தெரியும். சாமானிய சனங்களிடத்தில் மாத்திரமல்ல, கல்விமான்களிடத்திலும் சொன்னயம் பொருண்யம் விளங்கவும், கேட்பவர் மனம் களிககவும் பேசுவார்கள்.

சீமையில் கவிவல்லோராகிய ஓர் குருசிரோமணியால் இயற்றப்பட்ட “கிறிஸ்தவ வருஷம்” (Christian Year) என்ற பக்தி எழுப்புதலுக்கேதுவான சிறந்த செய்யுள் புத்தகம ஒன்றை ஒவ்வொரு ஞாயிறிலும், பரிசுத்தவான்களின் நாட்கள், மற்றும் திருநாட்களிலும் வாசித்து, மனப்பாடம்பண்ணி வருவார்கள். அவர்கள் கையாடிவந்த அந்தப் புத்தகத்தில் அவர்களே குறிப்பித்து அடையாளம் இட்டிருக்கும் பதங்களையும் வாக்கியங்களையும யாராவது பார்வையிடுகிறதானால், பார்ப்பவருடைய மனதுக்கு எழுப்புதலும், பக்திவிர்த்திககு ஏதுவானதுமாயிருக்கும்.

1870 ம் வருஷம் பெப்ருவரி மாசம் 9 ம் தேதி அவர்களுடைய 20 ம் வயசில் அவர்களுக்கும் சங்கைபொருந்திய கப்டன் ஷெப்பர்ட்



துரையவர்களுக்கும் இடையன்குடியில் விவாகம் நடந்தது. அதுமுதல் அவர்கள் இல்லற வாழ்க்கைக்குரிய பல கவலைகளும் தொல்லைகளும் உடையவர்களாய் இருந்தாலும், தங்கள் அறிவுக்கும் பக்திவிருத்திக்கும் ஏதுவானவைகளை நெகிழவிட்டவர்களல்ல. அவர்கள் பிறருக்கு என்ன நன்மைசெய்யலாமென்று யோசிக்கிறதும், அந்தப்படி செய்கிறதும் அவர்கள் வழக்கம். அவர்கள் பார்க்கும் அல்லது சந்திக்கும் எளியர், அநாதர் யாருக்காவது வேண்டிய உபகாரஞ்செய்யாமல் போகார்கள். தயாள சிந்தை பரோபகாரமுதலிய இலக்ஷணம் அவர்களிடத்தில் குடிகொண்டிருந்தது. அவர்கள் புதுக்குடியில் இருக்கையில், நாசரேத்தூரிலிருக்கும் கனம்: டாக்டர் ஸ்ற்றிரான் (Dr. Strachan) ஐயரவர்கள் வைத்தியசாலைக்கென்று ரூ 300 சேகரித்து, அவர்கள் கையில் கொடுத்து, அவ்விடம் வரும் ஏழைகளுக்கு மருந்து உணவுமுதலானது கொடுத்துப் பராமரித்து வரவேணுமென்று கேட்டுக்கொண்டார்கள். தாங்கள் வசித்த இடத்துக்குச் சமீபமாயுள்ள அநேக ஆதுலர்க்கு அன்னவஸ்திரம், பணம் முதலானது கொடுத்துப் பராமரித்து வந்ததுமன்றி, இல்லிடமும் கூடக் கட்டிக்கொடுத்தும் வந்தார்கள். அவர்கள் தங்கள் அன்பையும். பட்சத்தையும் யாதொரு வித்தியாசமின்றி எல்லாருக்கும் பாராட்டுவார்கள். பெறறோரைப்போலவே உற்றோரையும், உற்றோரைபபோலவே மற்றோரையும் நேசித்து, எல்லாருக்கும் சரியாக நடந்துகொள்வார்கள். அன்பென்னும் இலக்ஷணம் அவர்கள் நாவிலும் முகத்திலும் செய்கையிலும் இலங்கிக்கொண்டேயிருக்கும்.

அவர்களுக்குச் சேஷ்ட புத்திரி ஒன்று பிறந்து இறந்ததின் பின்பு அவர்கள் சம்பாஷணையும், சிந்தையும் முன்னிலும் அதிகமாய் பரவசப்பட்டிருந்தது. அப்போது அவர்களுக்குண்டாயிருந்த சோதனையினால், அவர்கள் பொன்னைப்போல சுத்திகரிக்கப்பட்டிருந்ததாக விளங்கிற்று. கிறிஸ்துவினிடத்திலிருந்து தமக்கு ஒரு சிலுவை அனுப்பப்பட்டதென்றும், அது தம்மிடத்தில் என்றும் நிலைத்திருக்கவேணுமென்றும், அத்தால் தாங்கள் கிறிஸ்துவின் திருவடிகளைத் தொடர்ந்து நடக்க ஏதுவாகுமென்றும் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எண்ணங்கள், நோக்கங்கள் எப்போதும் உன்னதத்துக்கு அடுத்ததும், பரிசுத்தமுள்ளதும், பரவசப்பட்டதுமாய் இருந்தது. தங்களுடைய துன்பத்திலும், துக்கத்திலும் தங்களுக்குண்டான ஆறுதலை துக்கப்படுகிற மற்றவர்களுக்கும் சொல்லி, அவர்கள் மனதை இனிய வசனங்களால் ஆற்றுவார்கள்.

சீமையில் இருக்கிற தங்கள் சகோதரர், சகோதரியினுடைய விஷயங்களில் அதிகப் பிரீதியும், கவலையுமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குத் தனித்தனி காகிதம் எழுதும்போதெல்லாம் அவைகள் நீண்டதாயும், அன்புநிறைந்ததாயும், ஞானமுள்ளதாயும், பக்திவிருத்திக்கேதுவானதாயும் எழுதுவார்கள். தங்கள் சகோதரரான் அன்றுடகம் படிப்புவேலை அல்லாத நேரங்களில் அவர்கள் மனோவிருத்திக்கேதுவாக இன்னின்ன புத்தகம் வாசிக்கவேணுமென்றும், பக்தியுயற்சிக்கும், சன்மார்க்கத்துக்கும் ஏதுவாக, இன்னின்ன புத்தகங்கள் வாசித்து, இன்னின்னபடி நடந்துகொள்ளவேணுமென்றும் நானாவித யுக்திக் குறிப்புகள் எழுதியனுப்புவது அவர்கள் வழக்கம்.

இவ்விதமாய் அவர்கள் உள்ளம் திவ்விய பரிமள சுகந்த ஞான நன்மைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தமையால், அவர்கள் வாய் மதுரமொழிகளால் நிறைந்து, அவர்கள் வதனம் மாறாத புன்சிரிப்புடைத்தாய், சந்திரோதயம்போல இலங்கிக்கொண்டிருந்தது.

1872 ம் வருஷம் செப்றெம்பர் மாசத்தில் தேகசுகத்துக்காக அசம்புமலைக்குப் போயிருந்தகாலத்தில் அவர்களுக்கு அசௌக்கியமுண்டாகி, அக்றோபர்௴ 6௳ யாரும் நினையாத வண்ணம் அகாலப் பிரசவம் நேரிட்டது. பிறந்தது இரட்டைப்பிள்ளைகள். அந்தப் பிள்ளைகள் இரண்டையும் பிறந்த மூன்றாம்நாள் தேவன் தமது இராஜ்யத்துக்கு எடுத்துக்கொள்ளச் சித்தமானார். பிரசவம் அகாலத்தில் நேரிட்டதினாலும், இரட்டைப் பிள்ளைகளானதாலும், மலையில் அப்போது குளிர் அதிகமாயிருந்ததினாலும், இறந்த பிள்ளைகளைப்பற்றிய துயரம் அவர்கள் மனதை எப்போதும் வருத்திக்கொண்டிருந்ததினாலும், தேகபலவீனத்தால் சுரமுண்டாகி, நாளுக்குநாள் பல வியாதிகள் அவர்களுக்கு அதிகரித்து, கனம்: டாக்டர் ஸ்றாகன் (Dr. Strachan) துரையவர்களால் வெகு யுக்தியோடு விடாமுயற்சியாய் வெகு மருந்துகள் பிரயோகிக்கப்பட்டும் சித்திபெறாமல், பெற்றோர் தலைதுடிக்க, சகோதரரின் உள்ளம் கொதிக்க, இஷ்டரின் மனம் பதைக்க, தம் இனிய நாயகர் ஏங்கித் தவிக்க, 1872 ம் வருஷம் அக்றோபர் மாசம் 28௳ இருபத்திரண்டு பிராயத்தில் தம் ஊனுடம்பை நீத்து, இப்புவியில் புகழுடம்பை நாட்டி, தம்மை ஆட்கொண்ட அருள்நாதனது திருவடி நிழலைப் பற்றிக் கொண்டு பொன்னகர்க்கு ஏகினார்கள்.

அவர்கள் மரணம் அகால மரணமாய் இருந்தபோதிலும், மரணத்துக்கு அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களை முற்றிலும் தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, அமைதலும் மனச்சமாதானமும் உள்ளவர்களாய் மரித்தார்கள். பூர்வம் மோசே பிஸ்காவின் சிகரத்தில் நின்று கானானை எட்டிப்பார்த்து மரித்ததுபோல சங்கைபொருந்திய ஷெப்பர்ட் அம்மாளவர்களும் அசம்புமலை உச்சியில் தங்கள் மரணப்படுக்கையிலிருந்து பரம கானானை எட்டிப்பார்த்து கர்த்தருக்குட்பட்டவர்களாய் மரித்தார்கள். அவர்கள் மரணம் அவர்களை அறிந்த யாவருக்கும் கனதுயரத்தைக் கொடுத்தாலும், அவர்கள் காட்டிய சிறந்த மாதிரியும், பக்தியுள்ள அவர்கள் நடக்கையும், பரோபகாரச் சிந்தையும் நமக்குமுன் துலாம்பரமாய் நிற்பதால், அவர்கள் மரித்தும் இன்னம் பேசுகிறார்கள்.

நம்முடைய ஆத்துமா அந்தப் புண்ணியவாட்டியின் மரணமாய் மரித்து, நம்முடைய முடிவும் அவர்கள் முடிவைப்போல இருப்பதாக.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—காலஞ்சென்ற நப்போலியன் சக்கரவர்த்தியின் மரணவிருத்தாந்தங்கள் பின்னிட்டு வந்தன. அவர் மரணமடைந்த ஜனுவரி௴ 9௳ காலை சுமார் ஒன்பதரை மணிவரையும் முன்னாள்போல லகுவாயிருந்தார். பத்தரை மணிக்கு சற்றுமுன் பெரிய மாறுதல் உண்டாய், பத்தேமுக்கால் மணிக்குமுன், தமது குமாரன் வந்துசேருமுன் தேகவியோகமானார். "புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை" யென்று கூறியபடி மானிடதேகம் எவ்வளவு நிலையாமையும் அநித்தியமுமுள்ளதென்பதற்கு இதுவுமொரு திருஷ்டாந்தமல்லவா? ஸ்பானிய ராச்சியபாரத்தை நிர்வகிக்க தம்மால் முடியாதென்று கண்ட இத்தாலிய அரசன் அமதேவஸ் என்பவர் தமது பரிவாரத்துடன் மெட்ரீட் ராஜதானியைவிட்டுப் புறப்பட்டார். அங்குள்ள பெரியோர்கள் பிரஜாதிபத்தியத்தை ஒழுங்குப்படுத்துகிறார்கள். ஔஸ்திரியாவின் சட்ட நிரூபண சபையார் இயேசு சங்கத்தைச் சேர்ந்த ரோம சபைக் குருமார் முதலானவர்களை அத்தேசத்தினின்று அகற்றிவிடும்படி ஆலோசனைபண்ணியிருக்கிறார்களாம். மே௴ 1௳யில் ஔஸ்திரிய ராஜதானியாகிய வியனாப்பட்டணத்தில் சர்வதேச வஸ்ததிசயக் காட்சி நடக்கும். வியனா ராஜதானியினின்று துர்க்கிதேசத்து ராஜதானியாகிய கானஸ்டாண்டிநோபிலுக்கு இருப்புப்பாதை யொன்று தற்காலத்தில் உண்டாக்கப்படுகின்றது. அதன் வேலை சீக்கிரம் முடியும். துர்க்காவின் சுல்த்தான் தமக்கு ஆதீனமாயிருக்கிற தேசங்களுக்கூடே இருப்புப் பாதைகளைத் தோற்றுவிக்கும்படி இரண்டரை கோடி ரூபாய் கடன்வாங்கப்போகிறார். அவர் உத்தேசிக்கிறபடி பாதைகள் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தால், லண்டன் தபாற் கட்டுகள் பத்துநாளுக்குள் இந்தியாவுக்கு வந்து சேருமாம்.



**ருஷியரும் கைவாப்பிரதேசமும்.**—சென்ற வருஷத்தில் கைவாப்பிரதேச துரைத்தனத்தார் ருஷிய பிரஜைகள் சிலரை நிர்ப்பந்தப்படுத்தி சிறையில் வைத்தமையால், ருஷிய துரைத்தனத்தார் அது காரியத்தை விசாரிக்கவும், வேண்டியிருந்தால், சிக்ஷைசெய்யவுந்தக்கதாக ஆறு பீரங்கிகளோடே ஆயிரம் பதாதி வீரரையும் மூந்நூறு குதிரை வீரரையும் அனுப்பினார்கள். தளகர்த்தராகவிருந்தவருடைய சாவதானக்குறைவினிமித்தம் குறித்த காரியம் நடவாமல் படைகள் புறங்காட்டியோட நேரிட்டது. ருஷிய சக்கரவர்த்தி முதலானோர் காரியத்தை சீர்தூக்கிப்பார்த்து, கைவாவின்மேல் போதுமான ஒரு சேனை வகுப்புப் படையெடுத்துப்போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவ்வாறே நாற்பது பீரங்கிகளோடு கொஞ்சங்குறைய பதினாயிரம் யுத்தவீரர் ருஷிய துரைத்தனத்தாரால் கைவாப்பிரதேசத்துக்கு அனுப்பப்படுவார்கள்.

**சர்ச்சுமிஷியன் சங்கம்.**—இச்சங்கத்தின் சீமை செக்ரற்றேரியாயிருந்த கனம்: வென்னையரவர்களும்; சென்னை செக்ரற்றேரியாயிருந்த கனம்: ஜான் டக்கரய்யரவர்களும்; திருநெல்வேலியில் வெகுகாலம் சுவிசேஷ போதகராகவிருந்து யாவராலும் அறியப்பட்டிருந்த கனம்: ஜார்ஜ் பெற்றிற்றய்யரவர்களும் சீமையில் தேகவியோகமானார்களென்கிற துக்கசெய்தியை விசனகரத்துடன் வெளியிடுகிறோம். மேற்கூறிய மூவரில் கனம்: வென்னையரவர்கள் வெகுகாலமாய் சர்ச்சுமிஷியன் சங்கத்தின் முக்கிய செக்ரற்றேரியாயிருந்து தேவநாம மகிமைக்கென்று சலிப்பற்று உழைத்தவர்கள். கனம்: ஜான் டக்கரய்யவர்கள் 1831 ம் ௵முதல் 1843 ம் ௵த்தில் சென்னை சர்ச்சுமிஷியன் செக்ரற்றேரியாகவும் போதகராகவுமிருந்து சுதேசரின் ஆத்தும க்ஷேமம், கல்விவிருத்திமுதலிய விஷயங்களில் முக்கிய சிரத்தையுடன் சலிப்பற முயன்றுவந்தவர்கள். பிற்கூறிய கனம்: பெற்றிற்றய்யரவர்களை நம்பத்திரிகை வாசிப்பவரில் அநேகர் அறிவார்களே. வெகுகாலமாய் அவர்கள் இத்திருநெல்வேலி நாட்டுச் சபைகளுக்காகப் பட்ட பிரயாசத்துக்கும் முயற்சிக்கும் போதுமான திஷ்டாந்தரங்கள் அங்கங்கு காணலாம்.

**இராணியார்** சரித்திரம் பத்துப் படங்களுடன் சென்னைபட்டணம் பாபம் வீதியிலுள்ள சன்மார்க்க புத்தகசாலையில் விற்கப்படுகிறது. விலை ரூபாய் ஒன்று. தபாற்கூலி அணா 2.

---

மார்ச்சுமீ நாள் 31. மாசிமீ 20உமுதல், பங்குனிமீ 20உவரை.

| வாரம். | சாதித் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | உ0 | தேவன் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார். யாத். 13:19. |
| ஞா | 2 | உக | கர்த்தர் அவர்களுக்கு முன்சென்றார். 21. |
| தி | 3 | உஉ | இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். 14: 10. |
| செ | 4 | உங | கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். 13. |
| பு | 5 | உச | கர்த்தருக்குப் பயந்து நடந்தான். 2 இராசா 4: 1. (27. |
| வி | 6 | உரு | அவளைத் தடுக்காதே, அவளுடைய இருதயம் துக்கமாயிருக்கிறது. |
| வெ | 7 | உசா | கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனோ ? 5: 7. |
| ச | 8 | உஎ | இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர வேறே தேவன் இல்லை. 15. |
| ஞா | 9 | உஅ | என் சத்தத்தைத் தேவனிடத்தில் உயர்த்தினேன். சங்கீதம் 77: 1. |
| தி | 10 | உகூ | என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன். 2. |
| செ | 11 | ௩0 | ஆதிகாலத்து வருஷங்களைச் சிந்திக்கிறேன். 5. |
| பு | 12 | க | ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ ? 7. |
| வி | 13 | உ | அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ ? 8. |
| வெ | 14 | ங | தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ. 9. |
| ச | 15 | ச | கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன். 11. |
| ஞா | 16 | ரு | உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம். உன்னதப். 1: 2. |
| தி | 17 | சா | உமக்குப் பின்னே ஓடிவருவோம். 4. |
| செ | 18 | எ | உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள். 4. |
| பு | 19 | அ | என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே. 2: 4. |
| வி | 20 | கூ | என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன். 3: 1. |
| வெ | 21 | க0 | உன் ஞானமும் உன் அறிவுமே உன்னைக் கெடுத்தது. ஏசா. 47. |
| ச | 22 | கக | உன் பிடரி நரம்பு இரும்பென்று அறிந்திருக்கிறேன். 48: 4. (10. |
| ஞா | 23 | கஉ | என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்திவைத்தேன். 9. |
| தி | 24 | கங | உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன். 10. |
| செ | 25 | கச | என் உக்கிரகோபத்தின்படியே செய்யமாட்டேன். ஓசி. 11: 9. |
| பு | 26 | கரு | எப்பிராயீமை அழிக்கும்படி திரும்பமாட்டேன். 9. |
| வி | 27 | கசா | நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். யோவான் 8: 12. |
| வெ | 28 | கஎ | என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும். 16. |
| ச | 29 | கஅ | ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது. உரோ. 4: 9. |
| ஞா | 30 | ககூ | தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். 5: 1. |
| தி | 31 | உ0 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். 6. |

## விசேஷித்த நாட்கள்.

2. லெந்தென்னும் நாட்களில் முதலாம் ஞாயிறு.
9. லெந்தென்னும் நாட்களில் இரண்டாம் ஞாயிறு.
14. பௌரணமி.
16. லெந்தென்னும் நாட்களில் மூன்றாம் ஞாயிறு.
23. லெந்தென்னும் நாட்களில் நான்காம் ஞாயிறு.
27. அமாவாசை.
30. லெந்தென்னும் நாட்களில் ஐந்தாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. April. No. 4.

## Contents:

Biography of the Right Rev. T. F. Middleton, D. D. 62
Christian Church History. ... ... ... ... ... 64
Communicant's Companion. ... ... ... ... 66
A Family Commentary on the Sermon on the Mount. 69
On the Liturgy. ... ... ... ... ... ... ... 71
The Parables of Christ. ... ... ... ... ... 73
Notes on Genesis. ... ... ... ... ... ... 75
Bishop's Prizes. ... ... ... ... ... ... 78
Summary of News. ... ... ... ... ... ... 79

## அட்டவணை:

மிடில்ற்றன் வேதசாஸ்திரியாருடைய சீவியவிருத்தாந்தம். ... ... ... ... ... ... ... சுஉ
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... சுச
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ... சுசா
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... சுகூ
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... எக
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... எங
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... எரு
பந்தயப் பரீட்சை. ... ... ... ... ... எஅ
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... எகூ

Palamcottah:
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS
BY L. DEVANAYAGAM PILLAY.
1873.

# நற்போதகம்.

௪. எப்பிரல்௴. ௲௮௱௵.

## Biography of the Right Rev. T. F. Middleton, D. D.

*FIRST BISHOP OF CALCUTTA.*

## கல்கத்தாவின் பிரதம அத்தியட்சராகிய மிடில்ற்றன் வேதசாஸ்திரியாருடைய சீஷிய விர்த்தாந்தம்.

பக்தியிலும் புத்தியிலும் சிறந்து விளங்கின உத்தமர்களுடைய சீஷிய விர்த்தாந்தங்களைக் கிறிஸ்தவர்கள் பிரியத்தோடு வாசித்து, புத்திவிர்த்திக்கேதுவாக நல்லெழுப்புதலும் அனுகூலமுமடைவார்களென்று நிச்சயித்து, அப்பேர்ப்பட்ட பலருடைய சரித்திரங்களைக் கூடிய அளவு சுருக்கியெழுதி நற்போதகத்தில் முறையாய்ப் பிரசுரஞ்செய்யத் தீர்மானித்திருக்கிறது. வாக்கியத்திலும் கட்டளையிலும் நன்மாதிரியே நன்றாய்ப் பயன்படும். மனுஷருடைய உள்ளத்தையும் சுபாவ பலவீனத்தையும் நன்றாய் அறிந்த தேவனும் நம்மைப்போல பாடுள்ள மனிதர்களுடைய சரித்திரங்கள் நமக்கு உசித போதனையாகுமென்று கண்டு, தமது திவ்விய வசனத்தில் அநேக மகாத்மாக்களுடைய விர்த்தாந்தங்களையும் எழுதுவித்திருக்கிறார். அவரே இந்த முயற்சியையும் ஆசீர்வதித்து இதினால் சபைக்கு மிகுந்த அனுகூலமுண்டாகும்படி அனுக்கிரகஞ்செய்வாராக. இந்தியாவுக்குப் பிரதம கண்காணியாராக இருந்த மிடில்ற்றன் வேதசாஸ்திரியாருடைய விர்த்தாந்தத்தை முதலாவதாகத் தெரிந்து விவரிக்கிறோம்.

கிறிஸ்தவர்களிடத்தில் காணப்படும் மார்க்க விரோதமான துர்க்கிருத்தியங்களும் அவலட்சண நடபடிகளும் எக்காலத்திலும் எத்தேசத்திலும் சுவிசேஷ சத்திய விர்த்திக்கு பலத்த தடையென்பதற்குச் சந்தேகமில்லை. அதினாலே இந்தியாவில் உண்டானதும் உண்டாகிறதுமான பிரதிகூல மிகுதியை அனுபவ பூர்வமாய் அறிந்துமிருக்கிறோம். ஐரோப்பியர் முதல்முதல் இந்துதேசத்தில் வந்து ஸ்தாபகமான நோக்கம் பொருள் சேர்க்கவேண்டுமென்பதுதான். அவர்கள் பின்னடியார்களும் வெகுகாலமாய் அந்நோக்கமாகவே ஏவப்பட்டு நடந்தார்கள். கூடிய சீக்கிரத்துக்குள்ளாக திரண்ட ஆஸ்திகளைச் சம்பாதித்துக்கொண்டு தங்கள் சுதேசத்துக்குத் திரும்பி சம்பிரமமாய் வாழவேண்டுமென்பதே அவர்களுடைய முழு ஆசை. மேலும் அனர்த்தமான இந்நோக்கமுடையவர்களாய் அஞ்ஞானிகள் நடுவில் சஞ்சரித்த இவர்களுக்கு, சிறுபிராயத்திலடைந்திருந்த கிறிஸ்துமார்க்கப் போதனைகளை நினைப்பூட்டும் ஏற்பாடுகளாவது, உலகக்கவலைகளையும் முயற்சிகளையுஞ் சற்று நிறுத்தி பரமசிந்தையாகி ஆத்தும காரியங்களைக் கவனிக்கும்படி ஏவும் மெய்த்தேவாராதனைகளாவது இருந்ததில்லை. அதினால் அவர்கள் கிறிஸ்தவர்களென்ற பெயர் ஒன்று தவிர மற்றயாவையும் அதிசீக்கிரம் மறந்துவிட்டு தங்களைச் சூழ்ந்திருந்த அஞ்ஞானிகளைப்



போல துர்ப்பழக்கமும் துர்நடத்தையுமுள்ளவர்களானது ஆச்சரியமல்ல.

ஐரோப்பியருடைய இந்த நிர்ப்பந்தச் சீரையும் இந்தியாவிலுள்ள லட்சாதிலட்சம் சனங்கள் விக்கிரகங்களைக் கும்பிட்டு அல்லது கள்ளத்தீர்க்கதரிசியை நமஸ்கரித்து அந்தகாரத்திலும் மரணநிழலிலுமிருக்கிறதையும் சொல்லமுடியாத பரிதாபத்தோடு பார்த்த உத்தமர் அநேகர் பார்லிமெந்து சங்கத்தாரையும் கம்பெனியாரையும் ஏவி, இந்தியாவில் கிரமமான அத்தியக்ஷ முறைமையை ஸ்தாபிக்கவேண்டுமென்று பலமாய்ப் போராடினார்கள். மேற்படி நற்காரியம் நடந்தேறாதபடிக்கு விரோதிகளும் அநேகர் வைராக்கியமாய் வாதாடினபோதிலும் கடைசியில் தேவானுக்கிரகத்தினாலே அவர்கள் செய்த பிரயத்தனங்கள் சித்தியாகி 1814 ௵த்தில் இந்தியாவுக்கு ஒரு அத்தியக்ஷனை அனுப்பவும் அவர் கல்குத்தாவிலிருந்துகொண்டு இந்துதேச முழுமையிலுமுள்ள கிறிஸ்து சபைகளையெல்லாம் கண்காணித்துக்கொள்ளவேண்டுமென்றும் இராசாங்கத்தாரால் ஒரு சட்டம் பிறந்தது. இந்தச் சட்டப்படிக்கு கல்குத்தாவின் முதல் கண்காணியாராக நியமிக்கப்பட்டவர், அக்காலத்தில் ஹண்டிங்டன் ஆர்ச்சு டீக்கனும் ஒரு தேவாலயத்துக்கு விக்கர் குருவாயுமிருந்த தோமாஸ் பானஷா மிடில்ற்றன் என்ற வேதசாஸ்திரியாரே.

இவர் தோமாஸ் மிடில்ற்றன் என்ற போதகருக்கு ஏக புத்திரன். 1769 ௵ ஜனுவரி௴ டேர்பிஷியா மாகாணத்திலுள்ள கெடில்ஸ்ற்றன் ஊரில் பிறந்தவர். அவக்கத்தில் லண்டன் பட்டணத்திலே கிறிஸ்துவின் ஆஸ்பிற்றல் என்று பெயர் வழங்கிய பாடசாலையில் கல்விப்போதனை அடைந்தபின் கேம்பிரிஜ் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அவ்விடத்தில் அதிக ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் கல்வியப்பியாசஞ்செய்து வந்ததினாலே 1792 ௵த்துப் பரீட்சையில் சிரேஷ்ட வித்தியார்த்திகளில் ஒருவராக விளங்கி, பி. எ. என்ற கல்விப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அப்புறம் அவருடைய அபூர்வ திறமையினாலே 1795 ல் எம். எ. பட்டமும் 1808 ல் பி. டி என்ற பட்டமும் டி. டி என்ற வேதசாஸ்திரப் பட்டமும் முறையே அருளப்பட்டன.

1792 ௵த்தில் லிங்கன் பட்டணத்துக் கண்காணியாரால் குருப்பட்டமடைந்து கேன்ஸ்பரோ பட்டணத்தில் திவ்விய ஊழியத்தை நடப்பித்துவந்தார். 1794 ல் லிங்கன் பட்டணத்து ஆர்ச்சு டீக்கன் போதகரான டாக்ற்றர் பிரற்றிமன் என்பவர் குமாரருக்கு ஆசிரியனானதுந்தவிர மறு வருஷத்தில் மேற்குறித்த கண்காணியாரால் நார்தாம்ற்றன் ஷீயர் மாகாணத்து தான்சா பட்டணத்துக்கு ரெக்ற்றர் குருவாக நியமகமும் பெற்றார். இக்காலத்திலே பரோபகாரச் சிந்தையினால் சனங்களுக்குள்ளே அறிவும் நல்லொழுக்கமும் பெருகவேண்டுமென்று அபேக்ஷித்து ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவந்தார். 1797 ல் மேற்படி கேன்ஸ்பரோ பட்டணத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ள ஒருவரையின் சிரேஷ்ட புத்திரியாகிய எலிசபேத்து என்ற கன்னிகையை மணம்புரிந்தார். 1798 ல் அங்கிலேயர் யுத்தத்திலடைந்த செயங்களை நன்றியறிதலான புத்தியோடு கொண்டாடும்பொருட்டு "ஆசீர்வாதமுஞ் சாபமும்" என்ற பேராய் சிறிய நூல் ஒன்று எழுதிப் பிரசுரஞ்செய்தார். 1802 ல் லிங்கன் பட்டணத்துக் கண்காணியாருடைய தாக்ஷணியத்தினாலே அதிக வருமானமுள்ள பைதம் என்ற இடத்துக்கு ரெக்ற்றராக நியமிக்கப்பட்டார். இதற்குமுன்னேயே அவர் கல்வியில் வல்லவனென்று கீர்த்தியடைந்திருந்தபோதிலும், 1808 ல் புதியஏற்

பாட்டு வியார்த்திக்கு அனுகூலமாக கிரேக்குப் பாஷையின் ஆர்ற்றிக்கிள் என்னும் சாரியைச் சொல்லின் பிரயோகத்தை விளக்கிக்காட்டிய அருமையான நூலை யெழுதிப் பிரசித்தஞ்செய்ததோடு அவருடைய பாண்டியத்தியம் துலாம்பரமாய்ப் பிரகாசிக்கவும். வித்வ சிரோமணிகளுக்குள் அதிகப் பிரஸ்தாபமடையவும் ஏதுகரமாயிற்று. 1811 ல் அவர் இதற்குமுன் தமக்குக் கிடைத்திருந்த சிலாக்கியங்களையெல்லாம் விட்டுவிட்டு, லண்டன் பட்டணத்தைச் சனம் அடர்த்தியாயிருந்த சாந். பான்கிராஸ் என்ற சேகரத்துக்குக் குருவானார். மறு வருஷத்திலேயே லிங்கன் கண்காணியாட்சிக்குள் ஹண்டிங்டனுக்கு ஆர்ச்சுடீகனாகவும் தெரிந்துகொள்ளப்பட்டார். இவ்வாறு அவருக்கு உத்தம சிநேகிதராயிருந்த லிங்கன் பட்டணத்துக் கண்காணியார் பொசிருலே அவர் மேன்மேலும் மேன்மையடைந்துகொண்டே வந்தார்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோவின் கொள்கைக்காரர்.—ஓரிஜன் குருப்பட்டமடைந்தது செசாரியாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தேனிய வகுப்பார்—ஐக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்.—ஆத்துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்.—பிலிப்புவின் அரசாட்சி இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

(தொடர்ச்சி.)

---

இந்தச் சங்கத்தில் கூடிவந்திருந்த ஆப்பிரிக்காக் கண்காணிமார்களுடைய தொகையைக் கவனிக்குமிடத்து, அத்தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் வெகுவாய்ப் பிரபலியமாகியிருக்கவேண்டுமென்று அறிந்துகொள்ளலாமே. மேலும் தெர்த்துல்லியன்தான் அத்தேசத்து முதல் கிறிஸ்தவ நூலாசிரியனென்று தற்காலத்திலிருக்கும் அவன் நூல்களைக்கொண்டு நாம் நினைக்க ஏவப்பட்டபோதிலும் அதற்கு வெகுகாலத்துக்கு முன்னமேயே சுவிசேஷம் அங்கே போதிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று உணர்ந்துகொள்ளலாம். ரோமாபுரியிலிருந்து கிறிஸ்துமார்க்கம் கர்த்தாகோப் பட்டணத்துக்குப் போயிருக்கவேண்டுமென்று மேலே ஓரிடத்திற் குறிப்பித்தோமே. அவ்விரண்டு பட்டணத்துக் கண்காணிமார்களும் மற்றும் கண்காணிமார்களோடாவது குருமார்களோடாவது ஒரு காரியத்தைக்குறித்து ஆலோசிக்கும்பொழுதெல்லாம் தங்களுக்குள் இணக்கமும் ஒற்றுமையுமுள்ளவர்களாயிருக்கப் பிரயாசப்படுகிறதை அநேக சமயங்களிற் காணபோம்.

மேற்காட்டியதைப் பார்க்க அதிக முக்கியமான ஓர் காரியத்தினிமித்தமாய் அரபிதேசத்துக் கண்காணிமார்கள் 240 ஹூபத்தில் சங்கங்



கூடினார்கள். அத்தேசத்து போஸ்திராப் பட்டணத்துக் கண்காணியான பெரிலு என்பவன் நமது இரட்சகர் பூமியில் அவதரிக்குமுன் அவர் ஒரு பெர்சனாயிராமல் பிதாவின் தேவத்தன்மையையுடையவராய் மாத்திரமிருந்தாரென்று சாதித்தான். முந்தின நூற்றாண்டின் கடைசியில் தவறு என்று கண்டிக்கப்பட்ட பிராக்சியாவின் கொள்கையும் கொஞ்சங்குறைய இத்தன்மையதுதானே. இந்தத் தப்பறை பற்பல வேஷம் பூண்டு பற்பல காலத்திலும் தோன்றினது நிசம். ஆசியா தேசத்தானான நோயித்து என்பவனும் மேற்படி கொள்கையுடையவனாயிருந்து, இப்போனாத்து என்பவன் எழுதி நாளதுவரையுமிருக்கப்பட்ட நூலினால் அவனது கொள்கைக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தப்பறை அரபிதேசத்தில் சிறிதுகாலமாய்ப் பிரபலியமாகியிருக்கலாம். ஆகிலும் போஸ்த்திராப் பட்டணம் அரபிதேசத்துக்கு சிரேஷ்ட நகரியானதாலும் அவ்விடத்துக் கண்காணியார் மேற்படி தப்பறையை அனுசரித்துக்கொண்டபடியாலும் பொதுவான சங்கம் ஒன்று கூடிவர ஏதுவாயிற்று. அநேக கண்காணிமார் அவனோடு தர்க்கம்பண்ணியும் அவன் தபிதத்தை உணரத்த அவர்களால் கூடவில்லையாம். ஓரிஜன் இந்தச் சங்கத்துக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்ததும் அவனுடைய கீர்த்திப் பிரஸதாபத்துக்குப் பெரிய அத்தாட்சிதான். அவன் அரபியாவுக்கு இந்தச் சமையத்தில் தான் முதல் விசையாய் வந்தானென்றல்ல. முந்தின விசையிற்போலவே இந்த விசையும் அவன் வந்ததினால் மிகுந்த நன்மையுண்டாயிற்று. எப்படியென்றால், அவன் எடுத்துக்காட்டின நியாயத்தினாலே பெரிலு என்பவன் தன் தவறை ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டான்: அரபிதேசத்துக் கிறிஸ்தவர்கள் யூகப்பிரியமுள்ளவர்களாய் அனர்த்தமான அபிப்பிராயங்களை அனுசரிக்கிறவர்களாயிருந்ததினாலே இரண்டொரு வருஷத்துக்குப் பின்னும் ஒரு விசை ஓரிஜன் அத்தேசத்துக்கு வந்து ஆத்துமத்தைக்குறித்து அவர்கள் கொண்டிருந்த தப்பெண்ணங்களைக் கண்டிக்க அழைக்கப்பட்டிருந்தான். ஆத்துமம் சரீரத்தோடே அழிந்துபோகிறதென்றும், உயிர்த்தெழுதலின் காலத்தில் இரண்டும் உயிர்ப்பிக்கப்படுமென்றும் அவர்களில் ஒரு வகுப்பார் சாதித்தார்கள். இந்தக்கொள்கையையும் தவறு என்று காண்பித்ததிலும் ஓரிஜன் சித்திபெற்றான் என்று அறிவது சந்தோஷமல்லவா?

ஓரிஜன் முதலாய் ஆத்துமத்தைக்குறித்து சில தப்பெண்ணங்களுள்ளவனாயிருந்தானென்று பலரும் நினைக்கிறதுண்டு. அவன் இவ்வகையான விஷயங்களில் மிஞ்சாராய்ச்சிபண்ணுங் குணமுடையவன்தானென்று அவன் எழுதிய நூல்களால் தெரியவருகிறது. மரணத்தினாலே ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தபின் அதின் நிலைப்பாறி வேதத்தில் அவ்வளவாய்ச் சொல்லப்படவில்லை. இதுகாரியத்தில் திருச்சபையார் தங்கள் தீர்மானத்தை வெளியிட இதுவரையும் அவசியம் நேரிடவுமில்லை. ஆதலால் அநேக கிறிஸ்தவர்கள் இது விஷயத்தைக் குறித்து வெவ்வேறு எண்ணங்கொண்டிருக்கலாம். அவர்கள் தங்கள் எண்ணங்களை எழுதிப் பிரசுரஞ்செய்தவனாயில் ஒரு தொல்லையும் நேரிடவில்லை. ஆகிலும் அரபிதேசத்துக்கு ஓரிஜன் போயிருந்த காரியத்தினாலும் தெர்த்துல்லியன் முதலியவர்களுடைய நூல்களினாலும், ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தபின் நித்திரையாய் அல்லது உணர்வற்றதாயிராமல் ஓர் வகை உணர்வும் அறிவுமுள்ளதாயிருந்ததென்று அக்காலத்தில் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. மேலும் நல்லவர்களுடைய ஆத்துமங்களும் பொல்லாதவர்களுடைய ஆத்துமங்களும் வெவ்வேறு இடங்களிலிருக்கின்றனவென்

று நினைத்ததாகவும் தோன்றுகிறது. பொல்லாதவர்களுடைய ஆத்துமங்கள் எப்படியிருக்கும் என்பதைக்குறித்து ஆதிக் கிறிஸ்தவர்களுடைய அபிப்பிராயத்தை அறிய வகையில்லை. என்றாலும் நீதிமான்களுடைய ஆத்துமங்கள் தனிப்பட ஓரிடத்திலிருந்து பிற்காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கப்போகிற பாக்கியத்தை ஒரு பாகமாக அனுபவித்துக்கொண்டிருக்குமென்று அவர்கள் நம்பியிருந்தது நிச்சயம்.

---

## Communicant's Companion.

---

# நற்கருணை விளக்கம்.

## ௭. அதிகாரம்.

*நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.*

---

### பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

---

IV. இந்தப் பந்தியை நாம் சேரும்போது நாம் இதற்குத் தகுந்தவர்களோ, இல்லையோவென்ற அபாத்திரத் தன்மையை நினைத்துச் சேரவேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் நாம் உட்காரும்போது தாவீது ராஜனுக்கிருந்த எண்ணம் நமக்குமிருக்கவேண்டும். அவன் என்னசொன்னானென்றால், "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே நீர் இம்மட்டும் என்னைக்கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம், என் வீடு எம்மாத்திரம்" என்றான்.

முதலாவது. நாம் நம்முடைய அபாத்திரத் தன்மையை உணர்ந்துவருவதற்கு முகாந்தரம் என்னவென்றால், நாம் பராபரனுடைய பிள்ளைகளோ இல்லையோவென்கிற சமுசயத்தை உண்டாக்கவும் அதினால் நமக்கு அவநம்பிக்கையும் ஓயாத சஞ்சலத்தையுமுண்டாக்குகிறதைக் குறியாமல் நாம் நம்மைத் தாழ்த்தவும் சோதனையிற் பிரவேசியாமல் எப்போதும் விழிப்புள்ளவர்களாயிருக்கவுந்தக்கதாகவே நம்முடைய அபாத்திரத் தன்மையைக்குறித்து நாம் நினைக்கவேண்டும். ஏனென்றால் கர்த்தருடைய அப்பம் போசித்து அவருடைய பாத்திரத்திற் பானம்பண்ணின எத்தனை பேர்களோ அவருக்கு விரோதமாய்த் தங்கள் குதிகாலை உயர்த்தியிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். அவரைக் காட்டிக்கொடுத்தவனுடைய கை அவரோடேகூட தாலத்திலிருக்கிறது என்று சொல்லத்தக்கவர்கள் எத்தனை பேர்களுண்டு. ஆகையினாலே சீஷர்களைப்போல நாமும் "ஆண்டவா நானோ அவன்" என்று கேட்கவேண்டியதிருக்கிறது. கிறிஸ்துவோடேகூட இந்தப் பந்தியிலிருந்து போஷித்த எத்தனை பேர்களோ அந்தப் பெரியநாளிலே அவராலே தள்ளப்படப்போகிறார்கள். ஆத்துமாவே உன்னுடைய முடிவும் அப்படிப்பட்ட முடிவாகாதபடிக்கு உன்னைக்குறித்து அப்படிப் பயப்படவேண்டிய அவசியமில்லையோ? இராஜா வந்து விருந்துச்சாலையைப் பார்க்கும்



போது நீ கலியாண வஸ்திரந் தரியாதவனாய்க் காணப்படாதபடி பார்.

உன்னைக்குறித்துப் பயப்படுகிறதற்கு இரண்டாவது முகாந்தரம் என்னவென்றால், நாம் எவ்வளவு நல்லவர்களாயிருந்தபோதிலும் இந்தப் பந்தியைச் சேரத்தகாதவர்களாயிருப்பதுதான். தேவனுடைய எந்த அற்ப நன்மையிலும் அற்ப நன்மைபெறத் தங்களை அற்பமென்று தேவனுடைய உத்தம பக்தர்சொல்லுவார்களானால் அவர்களுக்குக் கடைகோடியாயுள்ள நாம் நம்மையெத்தனைக்கு அற்பராக எண்ணிக்கொள்ளவேண்டும். நாம் இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். அது உள்ளதுதான். ஆனால் நம்மிலுள்ள எந்த நன்மையைப் பார்த்து இந்த விருந்துக்கு நம்மை அழைத்திருக்கிறார். இஷ்டர்களையும் இனத்தார்களையும் விருந்துக்கழைப்பது மனிதர்களுக்கு இயல்பு. ஆனால் நாம் நம்முடைய துற்கிரியைகளினாலே அந்நியருஞ் சத்துருக்களுமானவர்களுமாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

அந்தஸ்துள்ளவர்களையும் சரிசமானரையும் தங்களுடைய விருந்துக்கு அழைப்பது மனுஷருடைய இயல்பு. ஆனால் ஏழைகளும், கூனரும், குருடரும், நொண்டிகளும், சப்பாணிகளுமாய், கிறிஸ்துவின் பந்திக்கு இழுப்பத்தையுண்டுபண்ணுகிறவர்களுமாயிருந்த நம்மைச் சந்திகளிலும் தெருக்களிலுமிருந்து அழைத்துவந்திருக்கிறார்.

பிரதியுபகாரம் செய்கிறவர்களை விருந்துக்கழைப்பது மனுஷருடைய இயல்பு. ஆனால் கிறிஸ்து நம்மாலே பெறப்போகிற உபகாரமெது? அவர் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக நம்முடைய பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் அவருடைய நாமத்துக்கு அபகீர்த்தியுண்டுபண்ணினோமேயொழிய வேறில்லை. அப்படியிருக்க நாம் அவருடைய விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையினாலே தாவீதுடைய விருந்துக்கு மேவிபோசேத் அடிக்கடி அழைக்கப்பட்டபோது "என்னாண்டவன் இந்தச் செத்த நாயை நோக்கிப் பார்க்கிறதற்கு உம்முடைய ஊழியக்காரன் எம்மாத்திரம்" என்று சொன்னதைவிட நாம் அதிகமாய் நம்மைத் தாழ்த்தவேண்டியதுண்டு. இப்படித் தங்களைத் தாழ்த்துகிறவர்களே உயர்த்தப்படுவார்கள்.

V. நாம் இந்தப் பந்தியைச் சேரும்போது பிள்ளை தகப்பனண்டை வருகிறவிதமாய்ப் பிள்ளைக்குரிய நம்பிக்கையோடே வரவேண்டும். விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளியாத இடத்திற் சேர்க்கிறவருமான கடினமுள்ள எசமானைப்போல அவரை எண்ணுவதினால் நம்முடைய மனதுக்குச் சமாதானமில்லாமல் அடிக்கடி மனவேதனைப்படுவோம். இப்படிப்பட்ட எண்ணம் நம்மைவிட்டு நீங்கும்படியாகப் பிரயாசப்படவேணும். நம்முடைய பெலவீனங்களை அறிந்தவராகிய பிரதான ஆசாரியர் நமக்காகப் பரமண்டலத்திலிருக்கிறவரானதால் நாம் தைரியத்தோடே கிர்பாசனத்தண்டை சேரவேணும். சுயபுண்ணியத்தை நம்பி அந்த விருந்துக்குப்போவது தேவனுக்கு எப்படி கோபத்தை மூட்டுகிறதாயிருக்குமோ, அப்படிப்போல அவநம்பிக்கையோடே அதைச் சேர்கிறதும் அவருக்குக் கோபத்தை மூட்டுகிறதாயிருக்கும்.

இப்படிப்பட்ட குறைவு அநேக கிறிஸ்தவர்களுக்குண்டு. பிள்ளைகளைப் போலவுஞ், சிநேகிதரைப்போலவும் இந்தப் பந்திக்கு வராமல் நியாயாசனத்துக்கு முன்பாகப் போகுங் குற்றவாளியைப்போல வருகிறார்கள். இந்த விருந்தினுடைய மாட்சிமையையும், தகாதவிதமாய் அதற்கு வரும் மோசத்தையும் எண்ணுகிறதில் மட்டுக்கு மிஞ்சின பயத்தையுடையவர்களாய் விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவைகளை முயற்சிப்பதில் தடைப்படுகிறார்கள். ஆகையினாலே இப்படிப்பட்ட எண்ணத்துக்

கு விரோதமாய் எதிர்த்து நின்று போராடவேண்டும். நாம் செய்யும் எந்தக் குறைவுள்ள ஆராதனையையும் அங்கீகரிக்கிறவரும் நாம் செய்யும் பாவத்துக்குத்தக்கதாயல்ல, மட்டாய்த் தண்டிக்கிறவருமாகிய தேவனண்டை நாஞ் சேர்கிறவர்களாக நினைக்கவேண்டும்.

தீத்து இராயனைக்குறித்து ஒரு விசேஷஞ் சொல்லியிருக்கிறது. "ஒரு ஏழை மனுஷன் ஒரு விண்ணப்பம்பண்ணப்போனபோது கால், கை நடுக்கத்தோடு தன் மனுவை நீட்டினதை இராயன் பார்த்து விசனப்பட்டு, இவன் அரசனுக்கு முன்பாக விண்ணப்பம்பண்ண வரும்போது ஒரு சிங்கத்துக்குமுன் இரைகொண்டுவந்து போடுகிறவனைப்போல இருக்கலாமா" என்று சொன்னானாம்.

"என் ஆத்துமாவே ஏன் முறிந்துபோய் என்னிலே கொந்தளிக்கிறாய். கர்த்தருக்குள் நம்பிக்கையாயிரு, நான் இன்னும் அவரைத் துதித்துக்கொண்டேயிருப்பேன்."

VI. தேவன்பேரிலுள்ள ஆவலோடு இந்தப் பந்தியைச் சேரவேணும். இது ஆவிக்குரிய விருந்தானபடியால் ஆவிக்குரிய பசியோடும், தாகத்தோடும் இதைச் சேரவேணும். திர்ப்தியுள்ள ஆத்துமா தேனையும் அரோசிக்கும்." பசியுள்ள ஆத்துமாவுக்கோ கசப்புந் தித்திப்பாயிருக்கும். (அதாவது) சமாதானமும் பாவமன்னிப்பும் வேண்டிய விஷயத்தில் பாவத்திற்காக மனங் கசந்து துக்கப்படுவது பாவிக்கு இனிமையாகக் காணப்படும். நமக்குள் எழும்பும் உலகவாஞ்சையையும் மாம்ஷ இச்சையையும் அடக்கிக் கீழ்ப்படுத்தவேண்டும். ஏனெனில், வெகுகாலமாய் நாம் அப்பமில்லாததிலே நம்முடைய பணத்தைச் செலவிட்டிருக்கிறோம். மான் தண்ணீர் நதிகளின்பேரில் வாஞ்சையாய்க் கதறுமாப்போல நம்முடைய ஆத்துமா ஜீவனுள்ள தெய்வமாகிய இரக்ஷகரின் பேரிலே வாஞ்சையாயிருக்கவேணும். நீதியின்பேரில் பசியுந் தாகமுமுள்ளவர்கள் மாத்திரம் இந்தப் பந்திக்கு அழைக்கப்படுகிறார்கள்.

ஆகையால் இந்த வாஞ்சையாகிய கங்கை மூட்டி, அது கொழுந்துவிட்டெரியும்படி பார்ப்பது நம்முடைய கடமை. நாம் எத்தனைக்குத் தேவன்பேரில் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோமோ அத்தனைக்கதிகமாய் இந்தப் பந்தியைச் சேரத் தகுந்தவர்களாயிருப்போம். நம்மில் ஒவ்வொருவரும் நான் தேவனோடும், கிறிஸ்துவோடும் அதிகப் பழக்கமாகி பரமகாரியங்களின்பேரில் அதிக நாட்டமுள்ளவனாயிருந்தேனானால் எவ்வளவு பாக்கியம். தேவ தயவு எனக்குப் பூரணமாயிருக்கிறது. கிறிஸ்து இயேசு என்பேரில் அதிக பக்ஷமாயிருக்கிறாரென்று சொல்லக்கூடுமானால் நான் எவ்வளவு பாக்கியன். கிறிஸ்துவும் நானும் ஒன்றாயிருக்கிறோம் என்று சொல்லக்கூடுமானால் எனக்கெவ்வளவு ஆறுதல். தேவகிருபை யெனக்குள்ளே பூரணமாயிருக்கிறது. அவருடைய திருமுக வெளிச்சம் என்பேரில் ஏறெடுக்கபபட்டிருக்கிறது. முன்னைவிட நான் பரிசுத்தமும் தாழ்மையும் பரமசிந்தையுமுள்ளவனாயிருக்கிறேன். மோக்ஷத்துக்குப்போக ஆயத்தமாயிருக்கிறேனென்று சொல்லக்கூடுமானால் எனக்கெவ்வளவு சந்தோஷம். மீட்கப்படும்நாள்வரையும் முத்திரையாகக் கொடுககப்படும் பரிசுத்தாவியின் அச்சாரம் எனக்குள்ளிருக்கிறதென்று சொல்லக்கூடுமானால், எவ்வளவு நன்று என்று நம்மில் ஒவ்வொருவரும் பரிதாபப்படுகிறவர்களாகக் காணப்பட்டால் நாம் நீதியின்பேரிலே பசியுந் தாகமுமுடையவர்களென்று சொல்லலாம். இப்படியே நம்முடைய ஆத்தும தாபம் ஆண்டவரின்பேரிலும் அவரை ஞாபகப்படுத்தும் விருந்தின்பேரிலுமிருக்கவேண்டும்.

கர்த்தாவைத் தெய்வமாகக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இப்



படியே அவரை விரும்புவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில், அவர்களுக்குத் தேவையானவைகளெல்லாம் அவரிலிருந்து வருகிறது. ஆகையால் என் ஆத்துமாவே அழிந்துபோகிற போசனத்திற்காக உன் ஆத்தும பெலனையும், உன் சரீர பெலனையும் போக்காமல் நித்தியஜீவனுள்ளவரையும் நிலைநிற்கிற போசனத்திற்காகவே பிரயாசப்படு. விலக்கப்பட்டிருந்த நன்மை தீமை யறியத்தக்க விருக்ஷத்தின் கனி "புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்பட்டத்தக்க விருக்ஷமுமாயிருக்கிறது" என்று நமது ஆதித்தந்தைதாய் கண்டு தேவகற்பனையாகிய வேலியைத் தாண்டி அதைப் புசிக்கத் துணிந்தார்களானால், தடையில்லாததும் புசிக்கலாமென்று கட்டளையிடப்பட்டதும் நித்தியஜீவனைக் கொடுக்கத்தக்கதுமான ஜீவவிருக்ஷமானது நமது பார்வைக்கு இன்பமாய்க் காணப்படவேண்டியதில்லையா? உன் குறைவுகள் எல்லாவற்றையும் நீக்கத்தக்கவரும், சகல சம்பூரணமுமுடையவருமான தேவன் "உன் வாயை விரிவாய்த் திற நாம் அதை நிரப்புவோம்" என்கிறார்.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 7: 3—5.

(தொடர்ச்சி.)

---

நீ உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

நம்முடைய இரட்சகர் இங்கே தங்கள் கண்களில் உத்திரமுள்ளவர்கள் எவர்களோ அவர்கள் தான் பெரும்பாலும் தங்கள் சகோதரனுடைய கண்களிலுள்ள துரும்பைக்குறித்து முறையிடுவார்களென்று குறித்துக் காட்டுகிறார். கிறிஸ்து சொன்ன இந்தக்காரியம் சரியென்று நாமும் நாம் கவனிக்கிறவைகளைக்கொண்டு அறிகிறோம். பெரும்பாலும் மற்றவர்கள் மேல்துடுககான குரூரமான தீர்ப்பை எவர்கள் சொல்லுகிறார்கள். துன்மார்க்கரும் கட்டுக்கடங்காத மூர்க்கரும் அவபத்திக்காரரும் தான் சொல்லுகிறார்கள்;

துன்மார்க்கர் தாங்கள் நிந்திக்கும் பேர்கள் பக்தியுள்ளவர்களென்று மதிக்கப்பட்டவர்களாயிருப்பார்களானால், அவர்களை தங்கள் வாய் கொண்டமட்டும் அதிகமதிகமாய் தூஷிப்பார்கள். பரிசுத்தமாய் நடக்கவும் தனக்கென்றல்ல தனக்காக மரித்தவருக்கென்றே பிழைக்கவும் தீர்மானித்திருக்கும் தேவனுடைய உத்தம ஊழியக்காரன் தன்னைக்குறித்து வீணர், உலகத்தன்மையுள்ளவர்கள், துன்மார்க்கராகிய இவர்கள் குரூரமான தீர்ப்புச்சொல்வார்களென்று ஏற்கனவே அறிந்துகொள்ளவேண்டியது. அவன் எதிலே தவறுகிறானென்று காத்திருப்பார்கள். அவனிடத்திற் காணப்படும் சிறிது ஆசாரக்குறைவு அவன் பேச்சிற் காணப்படும் சில பிழைகள் இல்லற ஒழுக்கத்தில் அவனிடத்திற் காணப்படும் சில கவனத்தாழ்ச்சி இப்பேர்ப்பட்டவைகளே அவர்

களுடைய சம்பாஷணையாயிருக்கும். எச்சரிக்கைத் தாழ்வினாலே அவன் எது காரியத்திலாவது தவறினால் அவன் வேணுமென்று செய்தானென்று வைப்பார்கள். அந்தத் தவறு முற்கோபத்தினால் நடந்தால் அவன் யோசித்து மனதாரச்செய்ததென்று வைப்பார்கள். அவன் ருடாய் சிலவேளைகளில் பேசிவிட்டால் அதை மூர்க்கவெறியினால் பேசினதென்று வைப்பார்கள். அவன் மனக்குழப்பத்தினாலே எந்தப் பாவத்தையாவது செய்துவிட்டால், அதைப் பெரிய குற்றமென்று நிர்ணயித்து அதை உலகமெங்கும் தூற்றுவார்கள். பக்தியுள்ளவர்கள் பக்தியற்றவர்களை பழிக்கிறவர்களென்று அவர்கள்மேல் குற்றஞ்சொல்வார்கள். உள்ள எதார்த்தமென்னவென்றால், பொதுவாக பாவிகள் பரிசுத்தவான்கள்மேல் தீர்ப்புசொல்லும் அவ்வளவு கொடூரமாக பரிசுத்தவான்கள் பாவிகள்மேல் கடினத் தீர்ப்புச்சொல்லமாட்டார்கள்.

கிறிஸ்து இந்த வசனத்தைக்கொண்டு பக்தியுள்ளவர்கள்மேல் வீணாய்க் குற்றஞ்சொல்லும் துன்மார்க்கரைக் கடிந்துகொள்ளுகிறாரென்றறிக. மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை யெடுத்துப்போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை யெடுத்துப்போட வகைபார்ப்பாய். அதாவது, நீ தானே அசுத்தனும், விபசாரனும், வெறியனும், அநியாயக்காரனும், நிந்திக்கிறவனும் தேவவாக்கைத் தடுக்கிறவனுமாயிருக்க, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக அகோரமான தீர்ப்புச்சொல்லவும் அவர்களிடத்தில் காணப்படும் தப்புதவறுகளைச்குறித்து கண்டிப்பாயிருக்கவும் துணிகிறாயா? முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை யெடுத்துப்போடு. பின்பு உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பை யெடுத்துப்போட வகைபார்ப்பாய். தேவனை அறியாதவனே கிறிஸ்துவுக்குச் சத்துருவே துர்இச்சையுள்ள உலகத்தானே தேவாவியைப் பெறாதவனே! நீ ஆவிக்குரியவனை தன் பாவச்சுமையோடு போராடி வருந்துகிறவனை இரவும் பகலும் இரக்கத்துக்காக கெஞ்சுகிறவனை எங்கே தேவனை விசனப்படுத்திப்போடுவேனோ என்று நடுங்கிநிற்கிறவனை இரட்சகருடைய சிலுவைக்கு முன்னதாக விழுந்து கிடந்து சரணடைகிற ஆத்துமாவுள்ளவனை தேவனுக்கும் மனிதனுக்குமுன்பாக குற்றமற்ற மனச்சாட்சியைக் காத்துக்கொள்ள விழிப்புடன் முயற்சிசெய்கிறவனைக் குற்றப்படுத்தத் துணிகிறாயா? பாத்திரத்தின் உட்புறம் கேடுள்ளதாயிருக்கையில் அதன் வெளிபுறத்தை மாத்திரம் சுத்திகரிக்கிறவனும் புறம்பான வேதமுறைமைகளில் திட்டவட்டமாயிருந்தும் இருதயத்தில் அகந்தையும் மனக்கடினமுமுள்ளவனும் உன் அந்தரங்க நினைவுகளெல்லாம் அக்கிரமம் நிறைந்ததாயிருந்தும் உன் சுய நீதியைக்குறித்து பெருமைபாராட்டுகிறவனுமாகிய பரிசேயனே! புறம்பான சில வேத ஆசாரங்களில் உன்னைப்போல அவ்வளவு திட்டவட்டமாயிராதிருந்தும் மனிதருக்குள் உனக்கிருக்கிற கீர்த்தி அவ்வளவு கீர்த்தி பெறாதிருந்தும் இருதயத்திலோ மெய்யாகவே கர்த்தரண்டைக்கு மனந்திரும்பியிருக்கிறவனைக் குற்றப்படுத்தாதே. உன்னைத்தானே வஞ்சிக்கிற மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை யெடுத்துப்போடு, உன் அகந்தை, தற்பொழிவு, மேலாம்பர சன்மார்க்கம், கள்ளத்தேவபக்தி, இரகசியபாவம் இவைகளை விட்டு மனந்திரும்பு. அப்படிச்செய்தால் தேவனுடைய பிள்ளைகளின் தவறுகளைக் கிரகித்தறியவும் அவர்களுடைய தன்மைகளைக் குறித்து மதிப்புச்செய்யவும் உனக்குத் திராணியுண்டாகும். "உன் கண்ணிலிருக்கிற உத்தரத்தை யெடுத்துப்போடு. அப்போதுஉன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை யெடுத்துப்போட வகைபார்ப்பாய்."



On the Liturgy.

# செபபுஸ்தக வியாக்கியானம்.

## ௫. அதிகாரம்.

ஒய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### XXVI. திரித்துவ ஞாயிறுமுதல் அட்வெந்து ஞாயிறுவரையுமுள்ள ஒய்வுநாட்கள்.

வருஷத்தில் வரும் ஒய்வுநாட்களில் சுவிசேஷங்களிலுள்ள பொருளை சபையாருடைய மனதில் படத்தக்கதாக சுவிசேஷ வாக்கியங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது. அட்வெந்து முதல் திரித்துவ ஞாயிறுவரையில் நம்முடைய இரக்ஷிப்பை அடுத்த விசேஷித்த சங்கதிகளை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டி அந்தந்த பண்டிகைகளுக்கு ஏற்றதும், நமக்கு அதிக அறிவைத் தந்து நாம் கொண்டாடும் சங்கதியில் அதிக விசுவாசத்தை உண்டாக்கத்தக்கதுமான பங்குகளை வாசிக்கிறோம். திரித்துவ ஞாயிறுமுதல் அட்வெந்துவரையில் அந்தந்த பண்டிகைகளுக்கேற்ற பங்குகளை தெரிந்துகொள்ளக்கூடாததால் எக்காலத்துக்கும் உதவத்தக்கதும் பக்தியை எழுப்பத்தக்கதுமான சுவிசேஷ பங்குகளை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். நம்முடைய இரக்ஷகர் போதித்த போதனை அவர் செய்த அற்புதங்கள் இப்படிக்கொத்தவைகள். அவர் நன்மைசெய்கிறவராய் எப்பொழுதும் சுற்றித் திரிந்தபடியால், எப்பொழுதும் அவரையே நமக்கு மாதிரியாக சபை வைக்கிறது.

இரண்டாவது. அப்படியே நிருபவாக்கியங்களும் கிறிஸ்தமான சற்குணங்களுக்கு நம்மை ஏவிவிடத்தக்கவைகள். முதல் 5 ஞாயிறும் 8 ம் 25 ம் ஞாயிறும் தவிர, மற்ற ஞாயிறுக்குரிய நிருப வாக்கியங்களெல்லாம் புதியஏற்பாட்டில் கண்டிருக்கிற ஒழுங்கின்படி பவுல் அப்போஸ்தலன் நிருபங்களிலிருந்து நிருப அதிகார ஒழுங்காய் எடுக்கப்பட்டிருக்கிறது. முதல் 5 ஞாயிறுக்குரிய நிருபவாக்கியங்கள் நாலாம் ஞாயிறு ஒன்றுதவிர யோவான், பேதுரு நிருபங்களிலிருந்து எடுக்கப்பட்டது. பவுல் அப்போஸ்தலன் நிருபங்களிலிருந்து எடுக்கப்படும் பங்குகளின் ஒழுங்கை குலைக்காதபடி இதுகளை முந்தி வைத்திருக்கிறது.

18 ம் ஞாயிறுக்கு ஏன் வேறு நிருபவாக்கியம் வருகிறதென்றால் எம்பர் வாரங்களில் புதன் வெள்ளிகளிலும் முக்கியமாய் ஞாயிறுகளிலும் விசேஷித்த ஆராதனைகள் இருப்பது வழக்கம். அதிக நேரம் செபம் பண்ணி உபவாசித்தபிறகு ஒய்வுநாளின் ஒரு பாகமாயெண்ணப்பட்ட சனிக்கிழமை சாயந்தரத்திலாவது ஒய்வுநாள் அதிகாலையிலாவது குருப்பட்டம் கொடுக்கிற ஆராதனை நடத்துவார்கள். இந்தக் காரணத்தினிமித்தம் ஒய்வுநாளுக்குரிய சரியான ஆராதனையை நிறுத்துவார்கள். இதற்கு காலியான ஒய்வுநாட்களென்று பெயர். பிறகு ஒய்வுநாட்களில் சரியான ஆராதனை இல்லாமலிருப்பது நல்லதல்லவென்று எண்ணி, சனிக்கிழமைகளில குருப்பட்ட ஒழுங்கைச் சீக்கிரம் முடித்து ஒய்வு

நாளில் வழக்கப்படி ஆராதனை செய்வார்கள். துவக்கத்தில் இந்த ஒய்வுநாட்களுக்கு ஆராதனை ஒழுங்கில்லாததால் மற்ற சில ஒய்வுநாளுக்குரியதை எடுத்துச் செய்வார்கள். பிறகு இதற்கேற்ற ஒழுங்கும் ஏற்படுத்தப்பட்டது. திரித்துத்தில் வரும் 18 ம் ஞாயிறு இந்த காலியான ஞாயிறுகளில் ஒன்றானதால், அதற்கேற்ற நிருப சுவிசேஷ வாக்கியங்கள் ஏற்படுத்தப்பட்டது. நிருபவாக்கியத்தில் ஆக்கம போதகன்மார் இருப்பது அவசியமென்றும், குருப்பட்டம்பெறவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டிய இலக்ஷணங்களாகிய போதக சாமர்த்தியமும் சகல அறிவும் நல்வரங்களில குறைவில்லாமையையும் பற்றி சொல்லியிருக்கிறது. சுவிசேஷ வாக்கியத்தில் நம்முடைய இரக்ஷகர் தம்முடைய கேள்விகளினாலும் உத்தரவுகளினாலும கல்விமான்களாகிய யூதர்களுடைய வாயை அடைத்ததைப்பற்றி சொல்லியிருக்கிறபடியால், போதகன்மாரும் அப்படியே சமயத்துக்கேற்ற வார்த்தை சொல்லவும், தங்கள் விசுவாசத்துக்குத் தகுந்த காரணத்தைக் காட்டவும் தப்பிதமான கொள்கைக்காரருக்கு தப்பிதத்தை யெடுத்துக் காண்பிக்கவும் தக்கவைகளாயிருக்கவேண்டுமென்று காட்டுகிறது. கடைசியாக ஒழுங்கு தப்பிவருகிற நிருபவாக்கியம் 25 ம் ஞாயிறுக்குரியது. கிறிஸ்து பிறந்த பண்டிகைக்கு அடுவெந்து இருக்கிறதுபோல அடுவெந்துக்கு இது நம்மை ஆயத்தப்படுத்துகிற ஞாயிறானபடியால், முன்வந்த ஒழுங்கை நிறுத்தி இரக்ஷகரைக்குறித்து தெளிவாய் முன்னறிவித்த வாக்கியத்தை நிருபவாக்கியம் ஆக்கினார்கள். அந்த ஞாயிறுக்குரிய நிருபவாக்கியத்தில் கண்டிருக்கிறபடியே சனங்களும இதை இரக்ஷகருக்குரியதாகப் பாவித்தாாகள். இரக்ஷகர் செய்த அற்புதத்தை அவர்கள் கண்டபோது மெய்யாக இவர் உலகத்துக்கு வரவேண்டிய தீர்க்கதரிசியென்றார்கள். இந்த வாககியத்தினிமித்தமே இந்த பங்கை இங்கே சேர்த்துக்கொண்டார்கள். இது நாலாம் ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியமாக முன் கண்டிருககிறது. சனங்கள் சொன்ன அந்த வார்த்தை அடுவெந்துக்கு நம்மை ஆயத்தப்படுத்தத்தக்கதென்று நினைத்தார்கள். திரித்துவ ஞாயிறு குறைந்தாலும் அதிகப்பட்டாலும் இந்தக் கடைசி ஞாயிறுக்குரிய சுருக்கசெபம் நிருப சுவிசேஷ வாக்கியங்கள் அடுவெந்துக்கு முந்தின ஞாயிறில் வாசிக்கவேணுமென்ற சட்டம் இதுநிமித்தமேயுண்டாயிற்று. ஞாயிறுகளின் தொகை குறைந்தால் 25 க்கு முந்தின சில ஞாயிறுகளை விட்டுவிடவேண்டியது. ஞாயிறுகளின் தொகை அதிகப்பட்டால் வெளிபபடுத்தலுக்குப் பின்வரும் ஞாயிறுகளில் விட்டிருந்ததை வாசிக்கவேண்டும். இன்னின்னதை வாசிக்கவேண்டுமென்று திட்டமாய்ச் சொல்லாததினால் சிலர் அந்த வருஷத்தில் விட்டதிலிருந்து வாசிக்கிறார்கள். சிலர் தேவைக்குத்தக்கதாக கடைசி ஒன்றை இரண்டை வாசிக்கிறார்கள். இப்படிச்செய்கிறது தான் சரி. ஒரு வருஷத்தில் திரித்துவ ஞாயிறுகள் அதிகப்படும்போது மறு வருஷத்தில் வெளிப்படுத்தலுக்கு பிறகுவரும் ஞாயிறுகள் அதிகப்படும்: ஆதலால் விட்டதிலிருந்து வாசித்துக்கொண்டுபோனால் மறுபடியும் அவைகளை வாசிக்கவேண்டியதாய் நேரிடும். கடைசி ஞாயிறுகளை வாசிக்கப் பின்னொரு நல்ல நியாயமுண்டு. திரித்துவத்தில கடைசி ஞாயிறு அடுவெந்துக்கு நம்மை ஆயத்தபபடுத்துகிறதுபோல வெளிபபடுததலுக்குப் பின்வரும் கடைசி ஞாயிறும் திரித்துவத்தில் வரும் கடைசி ஞாயிறுக்கு அந்தககாலத்துக்கு இசைவாய் நமமை ஆயத்தப்படுத்தும்.

மூன்றாவது. சுருககசெபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் கிரகோரியென்பவர் செபபுஸ்தகத்திலிருந்தெடுக்கப்பட்டது. சிலது



செபபுஸ்தகம் கடைசியாக பார்வையிடப்பட்டபோது திருத்தப்பட்டது.

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XII-வது. இராசகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

(தொடர்ச்சி,)

அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அனுப்பினான். கிறிஸ்துவானவர் உயிரோடிருந்தபோது யூதர்களை அழைத்தார். அவர்கள் அதை அசட்டைசெய்தார்கள், அவர் உயிர்த்தெழுந்து பரத்துக்கேறினபிறகு மறுபடியும் அவர்களை அழைத்தார். அவர் மரித்து உயிர்த்தெழுந்ததைக் குறித்து உவமையில் ஒன்றுஞ் சொல்லவில்லை. உவமையில் அதுகளைச் சொல்ல இடமிராது. முதலாவது வந்தவர்களையே வேறு ஊழியக்காரர் என்று சொல்லுகிறது விபரீதமல்ல. முந்தினவர்களோடு வேறு பேருஞ் சேர்ந்திருந்தார்கள். ஸ்தேவான், பருனபா, பவுல் இவர்கள் பெந்தேகோஸ்துக்குப்பிறகு சபையிற சேர்ந்தவர்கள். முதலாவது வந்த அப்போஸ்தலன்மாரும் புது மனிதராய் பரிசுத்தஆவியால் நிறைந்து முன் கொண்டுபோன சங்கதியை அதிக நிறைவாய்ப் பிரசங்கித்தார்கள். முன்னே தேவனுடைய இராட்சியத்தைப் பிரசங்கித்தவர்கள் இப்பொழுது யேசுவையும் உயிர்த்தெழுதலையும் பிரசங்கித்தார்கள். முன்னே இப்போது சொன்னதுபோல எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது என்று சொல்லவில்லை. மனிதன் தேவ இராட்சியத்தில் பிரவேசிக்கிறதற்குப் பாவத்தாலுண்டான தடைகள் தேவகிருபையால் நீங்கிப்போயிற்றென்று தெரிவிக்கவில்லை, அப். 2: 38. 39. 3: 19. 26 வரை. 4: 12. அவர்கள் துராகிதமாய்ச் சிந்தின இரத்தத்தினால் பாவமன்னிப்பும் தேவனிடத்தில் தாராளமாய்ச் சேருதலும் உண்டென்று அறிவிக்கவில்லை. உவமையைப் பார்த்தாலும் அதின் ஞானக்கருத்தைப் பார்த்தாலும் முந்தி அசட்டைசெய்து நிந்தித்த விருந்தாடிகள் தேவகிருபையால் மனந்திரும்பி சேருகிறதற்கு இடமுண்டென்பதை நாம் மறந்துவிடலாகாது. இராசன் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறதென்று, தெரியாமையால் அல்லது வேறுவித அறிவீனத்தால் வரவில்லையென்கிறது போலெண்ணிக்கொண்டு எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது என்று அவர்களுக்கு நன்றாய் விளங்கும்படி அழுத்திச் சொல்லச்சொல்லுகிறார். 1 மோ. 18: 7, 8. 43: 16. வாக். 9: 15. அழைக்கப்பட்டவர்களிடத்திற்கு இப்படிச்சொல்லி அனுப்பினார். இரட்சகர் சிலுவையில்றையப்பட்ட பிறகு அப்போஸ்தலன்மார் இப்படியே சத்துருக்கள் செய்ததை பெரிதல்லவென்றெண்ணினவாகள்போல சாந்தமாய்ப் பேசினார்கள். சகோதரரே நீங்கள் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்றறிந்திருக்கிறேன். அப். 3: 17. செய்த பாவத்தைக்குறித்து அவ்வளவாய்ப் பேசாமல் தேவகிருபையைப் பற்றியே அதிகமாய்ப் பேசினார்கள்.

ழூன் ஊழியக்காரர் போய்ச் சொன்னபோது செவிகொடாமல் அச
ட்டைசெய்தவர்கள் இரண்டாவது அதிகமாய் வெறுப்பைக் காண்பித்
தார்கள். அதினால் அதிக தெண்டனையுமடைந்தார்கள். விருந்தாடிகள்
அடிக்கடி அழைக்கப்பட்டபோது அசட்டைபண்ணி ஒருவன் தன் வய
லுக்கும் ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய் விட்டார்கள். சுவிசே
ஷத்தை அசட்டைபண்ணுகிறவர்கள் இரண்டு வகையார். சிலர் அதைப்
பகையினால் விரோதிக்கிறார்கள். இவைகளைக்குறித்துப் பிறகு சொல்லு
வோம். வேறு வகையாரோ அதைப் பகைக்கிறதில்லை. உலகத்தை அதை
விட அதிகமாய் நேசிக்கிறார்கள். இவர்கள் தான் வயலுக்கும் வியாபா
ரத்துக்கும் போகிறவர்கள். இவ்விரண்டுக்கும் வித்தியாசமுண்டோ?
இரட்சகர் அப்படி எண்ணிப் பேசினாரோ? அப்படியிருக்கலாம். முந்தி
னவன் வயலுக்குப்போனவன். தன் ஆஸ்தியைப் பார்க்கப்போனான்
நிலச்சொந்தக்காரன். பிந்தினவன் வியாபாரி. முந்தினவன் தனக்குள்
ளதை யனுபவிக்கிறவன். பிந்தினவன் மேலாக அதிகச் சொத்தைத் தே
டுகிறவன். லூக். 14: 18, 19 ல் சொத்துவாங்கின விருந்தாடி அதைப்
போய்ப் பார்க்கவேணுமென்கிறான். இவன்தான் முந்தினவன். ஐந்தேர்
மாடுகளைச் சோதித்துப் பார்க்கப்போனவன் இரண்டாம் வகையைச்
சேர்ந்தவன். உள்ளதை யனுபவிக்கிறதும் இல்லாததைச் சம்பாதிக்கிற
தும் ஆகிய இவைகளை அடுத்த சோதனைகள் ஒரே வகையாய்த்தோன்றி
னாலும் வித்தியாசப்பட்டவைகள்தான். விருந்துக்கழைக்கப் பட்டவர்
களில் ஒருவன் சம்பாதித்திருந்த சொத்தைப் போக்காகச் சொல்லுகி
றான். பிந்தினவன் இனி சம்பாதிக்கப்போகிறதைப் போக்காக வைக்கி
றான். முந்தினவர்கள் நிறைவை அடைந்தவர்கள், பிந்தினவர்கள் உலக
மதிகம் வேணுமென்று எதிர்பார்த்தவர்கள். லூக். 6: 25 ல் இரட்சகர்
சொன்ன சாபம் அவர்கள்மேல் வரும். இந்த உலக ஆசையானது பரம
காரியங்களிலுள்ள நிறைவைப் பார்க்கவொட்டாமற் செய்தது. நீதியி
ன்மேலுள்ள பசிதாகமோ அவர்கள் ஆத்துமங்களில்தோன்றவேயில்லை.

இன்னும் காரியம் முடியவில்லை. மற்றவர்கள் அவன் ஊழியக்கார
ரைப் பிடித்து அவமானப்படுத்திக் கொலைசெய்தார்கள். சுவிசேஷத்
திற்குண்டாகும் விரோதம் இயல்பானது மாத்திரமல்ல, பிசாசுக்குரிய
தாகவுமிருக்கும். மனிதருடைய உலக சிந்தை சத்தியத்தை எதிர்க்கும்
ஆகிலும் இருதயத்திலுள்ள ஆழ்ந்த வெறுப்புகளை அது எழுப்பமாட்டா
து. அவர்கள் பெருமையைக் கொலைக்கும், சுய நீதியைத் தள்ளும். சம
யம் பார்த்து விரோதிக்கிறவர்களைக் கூடியமட்டும் கெடுக்கப்பார்க்கும்.
இங்கே மூன்று வகையான விரோதங்கள் சொல்லியிருக்கிறது. இரட்
சகர் சொல்லுகிற இந்த வார்த்தைகளுக்கு அப்போஸ்தலர் நடபடியி
லும் பிந்தின ஆகமங்களிலுமுள்ள சங்கதிகள் நல்ல வியாக்கியானம்.
ஊழியக்காரரைப் பலவந்தமாய்ப் பிடித்தார்கள். அப். 4: 3. 5: 19. 8: 3.
அவமானப்படுத்தினார்கள். அப். 5: 40. 14: 5, 13. 17: 5. 21: 30. 23: 2.
கொலைசெய்தார்கள். அப். 7: 58. 12: 3. மத். 23: 34. 2 நாளா. 30] 10
லுள்ள சங்கதி இதைத் தெளிவாக்கும். "இராசா அதைக் கேள்விப்பட்
டுக் கோபம் அடைந்து" அவருக்கு விரோதமாய் இவ்வளவுஞ் செய்தார்
கள். ஸ்தானாபதியைத் துன்பப்படுத்தும்போது அந்த அவமரியாதை
இராசாவுக்குத்தான். 2 சாமு. 10: உவமையிலேயும் அப்படித்தான்
இராசன் சேனைகளை அனுப்பினார். அதாவது, தேவன் பழிவாங்கும்
தூதர்களை வானசேனைகளை அனுப்பினார். வெளி. 19: 14. அவருடைய
சொற்படி நடக்கிற படைகள். மத். 27: 53. 1 இராசா 22: 19. 2 சாமு.
24: 16. அல்லது இது ரோம சேனைகளைக் குறிக்கும். தானியேல் 9: 26.



அதுகளும் சேவனுடைய சேனைகள் தான். துன்மார்க்கரும் தேவகரத்
தாலுண்டுபண்ணப்பட்ட மனுஷர்தான். அவர்களைக்கொண்டு பாவஞ்
செய்த தம்முடைய சொந்தச் சனங்களைத் தண்டிக்கிறார். அல்லது
அவர்களைவிட துன்மார்க்கர்மேல் அவர்களைக்கொண்டு பழிவாங்குகி
றார். என் கோபத்தின் பிரம்பாகிய அசூரியனேயென்கிறார். ஏசாயா 10:
4. ஏசா. 13: 3. எசேக். 16: 4. எரேமி. 25: 9. என் ஊழியக்காரனாகிய
நேபுகாத்நேச்சார் இரண்டும் ஒன்று தான். தேவகோபம் நிறைவேற
வேண்டியபோது பூமிக்குரிய கண்ணுக்குத் தோன்றும் ஊழியக்காரர்
மாத்திரமல்ல. கண்காணாதவரான சேனைகளும் ஒன்று கூடி ஆக்கினை
யை நிறைவேற்றும். சுபாவக் கண் முந்தினதை மாத்திரம் பார்க்கும்.
ஆவிக்குரிய கண்ணோ பின்னால் வருகிறதையுங் கவனிக்கும் அப்படிப்
பட்ட சமயங்களில இஸ்ரவேலருக்கு முன்னே நடந்ததுபோல தான்
நடக்கும். 1 நாளா. 21: 16. சாதாரண சனங்கள் ஆவிக்குரிய சுத்தக்
கண்ணில்லாததால் வெளியரங்கமான பெருவாரி நோயை மாத்திரம்
பார்த்தார்கள். தாவீதோ தன் கண்ணை உயர்த்தித் தேவதூதன் வானத்
துக்கும் பூமிக்கும் நடுவாக கையில் உருவின பட்டயம் பிடித்தவனாக
நிற்கக்கண்டான். கொலைபாதகருடைய பட்டணமென்று சொல்லப்
பட்டது எருசலேம் தான். யூதருடைய தேவஆலயம் தங்கின இடம்.
மத். 23: 34, 35. லூக்கா 13: 33, 34. அப். 7: 33. 12: 2, 3. இப்படி இதை
அழைக்கிறதில் பயங்கரமான எச்சரிப்புண்டு. இவர்களுடைய பட்ட
ணம் கொலைபாதகருடைய பட்டணம். பெரிய இராசாவின் பட்டண
மல்ல. அவர் அதை தம்முடையதாக ஒப்புக்கொள்ளுகிறதில்லை. கிறிஸ்
துவானவரும் இப்படியே பயமுறுத்துகிறார். உங்கள் வீடு உங்களுக்கு
பாழாக்கிவிடப்படும். மத். 23: 38. உங்கள் வீடு என் வீடல்ல. நான்
அதை விட்டுவிட்டேன். அதென் பேரால் அழைக்கப்பட்டாலும் என்னு
டையதல்ல. அப்படியே தேவன் மோசேக்குச் சொல்லுகிறார். உன்னு
டைய சனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். 2 மோசே 32:
7. உன்னுடைய சனங்கள் என் சனங்களல்ல, அவருக்கும் அவர்களுக்
கும் நடுவேயிருந்த உடன்படிக்கை அவர்களுடைய பாவத்தால் குலைந்
துபோச்சுது.

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### ௰௩. அதிகாரம்.

ஆபிராமும் லோத்தும் பிரிந்தது.

1. "தென் திசை" எகிப்துக்கு வடகிழக்கிலிருந்த கானான்தேசத்
தின் தென்பாகமாம்.

2. 12: 16.

7—9. 12: 6, 7. வியா. ஆபிராமும் லோத்தும் இப்பொழுது தங்
களை மெய்த்தேவபக்தராகப் பாராட்டி வருகிறார்கள். அப்படியிருக்க
இவர்களுக்குள்ளேயும் "வாக்குவாதம்" உண்டாகிறதென்று "கானா

வியரும் பெர்சியரும்" பார்த்து, இவர்கள் மார்க்கத்திலே யாதொரு விசேஷமில்லை என்று மெய்த்தேவனைக் கனவீனம்பண்ணுவார்களே என்று ஆபிராம் பயந்து, தான் மூத்தவனும் எவ்விஷயத்திலும் லோத்துக்கு மேலானவனுமிருந்தும் மகா விவேகமாய்ச் சமாதானத்தை விரும்பி "நீ இடதுபுறம்போனால் நான் வலதுபுறம் போகிறேன். நீ வலதுபுறம் போனால் நான் இடதுபுறம்போகிறேன் என்றான்." இது விசுவாச வார்த்தைகளே ஒழிய வேறல்ல. தேவநாமத்துக்குக் கனவீனம் வாராதபடி நம்முடைய நியாயத்தை இழந்துவிடுவதே உத்தமம். இப்பேர்ப்பட்டான கட்சியில் ஆபிராம் சொன்ன இந்த ஜட்ஜ்மென்றும் டிக்கிரியும் அநேக வியாச்சியங்களின் சிக்கை அறுக்கிற அசல் தீர்ப்பு என்று நினைத்து நடக்கக்கடவோம்.

10—12. "நீர்வளம்பொருந்தியதாயிருக்கக் கண்டான்." லோத்து தெரிந்துகொண்டதற்கு மூகாந்தரம! இந்தச் சமபூமி யோர்தான் நதியினால் நீர்ப்பாய்ச்சப்பட்டு தேவன் ஏதோட்டத்தைப்போலும், செழிப்பிலும் தோற்றத்திலும் எகிப்தைப்போலுமிருந்தது. ஆனால் 20 வருஷத்துக்குப்பின் எப்படியிருந்தது? XIX அதி. நீ தானும் ஒன்றைத் தெரிந்துகொள்ளாதே! லோத்தைப்போல கண்களின் இச்சையினால் இழுக்கப்படுகிறவர்கள் அநேகர்! மினுங்குகிறதெல்லாம் பொன்னல்ல.

"பிரிந்தார்கள்" பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவிலிருந்து பிரிந்து லோத்து சோதோமுக்கும் ஆபிராம் மம்ரேக்கும் போனார்கள். இனமப்பக்கம், பிரயாண வருத்தம், நேரிட்ட அபாயங்கள், அனுபவம், சோதனை, பஞ்சம், வறுமை ஆகிய இவை அவர்களைப் பிரிக்கவில்லை. "மயிர் ஊடாடாஉறவுப்பொருள் ஊடாடக் கெடும்!" ஆபிராமின் குடும்பத்தைவிட்டு பிரிந்ததற்காக லோத்து துக்கப்பட்டதாய்க் காணப்படவில்லை. ஆபிராமின் இனிய சம்பாஷணை, நல்லாலோசனை, நன்மாதிரி, புத்திபோதனை, தேவாராதனை ஆகிய இவற்றைவிட்டு லோத்து பிரிந்தான். பிற்பாடு பலிபீடம் கட்டினானென்று சொல்லப்படவில்லை.

14. லோத்து தன் கண்களை ஏறெடுத்தானே. 10 வா. "உன் கண்களை ஏறெடுத்துப்பார்" என்று ஆபிராமுக்கு கர்த்தர் தேறுதலின் வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

15. "என்றைக்கும்" 17: 7, 8. வியா. இந்த வார்த்தை பல இடங்களில், வரப்போகிற காலங்களிலும் என்றர்த்தப்படும்.

16. இந்த வாக்குத்தத்தம் ஆபிராமின் விசுவாசத்துக்கு பலத்த சோதனையாயிருந்தது. ஏனென்றால், இப்பொழுது அவனுக்குப் பிள்ளையில்லை. கிழவனும் போனான். இப்போ ஜலப்பிரளயமுண்டாகி, 430 வருஷ போலாயிற்று. உலகத்தில் சனங்கள் திரளாய்ப் பெருகியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவன் நம்பினான். யூதர், இஸ்ரவேலர், அரபர் ஆகிய ஆபிராமின் சந்ததியார் "பூமியின் தூளைப்போல" ஏராளமாய்ப் பெருகி மற்றச் சாதிகளோடு கலவாமல் இந்நாள்வரையும் தங்களை ஆபிராமின் சந்ததியாரென்று பிரத்தியட்சமாய் வெளிப்படுத்திவருகிறார்கள். உலகத்திலே வேறெந்தச் சாதியாரும் இப்படி ஒரு மூற்பிதாவரையும் தங்கள் வம்ச வரிசையைத் தொடர்ந்து திட்டமாய்க் கண்டுபிடிக்கமாட்டார்கள். மோசே இதை தேவநடத்தலினால் எழுதினானென்பதற்கு இது ஒரு அத்தாட்சியல்லவா!

படிப்பினை.

"போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். 9, 14—17. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் விழுகிறார்கள். பண ஆசை தீமை யாவுக்கும் வேராயிருக்கிறது." 10—13. "தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்." நீதி. 30: 7—9. 1 தீமோ. 6: 6—10.



## ௰௪. அதிகாரம்.

*லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்ததற்கு வந்த முதற்பலன்.*

1. "சிநேயார்" இதற்கு பாபேல் பிரதான நகரி. 10: 10. வியா.

"ஏலாசார்" அரபியிலுள்ள ஒரு இடமென்று நினைக்கப்படுகிறது. இதின் குடிகளுக்கு எலிசாரி என்று டிப்தோல்மி பேரிடுகிறார்.

"ஏலாம்" 10: 22. வியா. "ஏலாமின் இராசா" "சிநேயாரின் இராசா" என்று சொல்லும்போது பாரசீகத்துக்கும் பாபிலோனுக்கும் அப்போது இராசாக்களாயிருந்தவர்களைக் குறிக்கிறதாக நினைக்க வேண்டியது.

"சாதிகளின் இராசா" சாதிகளின் கலிலேயா என்று சொல்லப்படுகிற இடத்திலுள்ள இராசா என்று உத்தேசிக்கப்படுகிறது. யோசுவா 12: 23.

2. இந்த ஐந்து பட்டணங்களும் சித்தீம் பள்ளத்தாக்கிலிருந்தது. 13: 10. இவை அழிக்கப்பட்டபிற்பாடு "உப்புக்கடல்" அல்லது சவக்கடல் என்று சொல்லப்படுகிற பெரிய ஏரியாய்ப் போயிற்று.

"யுத்தம்பண்ணினார்கள்." இதுவே வேதத்திற் சொல்லப்படுகிற முதல் யுத்தம். ஆபிராமும் லோத்தும் இதிற் சம்பந்தப்படாவிட்டால் இதைப்பற்றி யாதொன்றும் தெரியவராது. இதினாலே வேதத்தை எழுதினவர்களுடைய நோக்கமெல்லாம் மேசியாவைச் சுற்றி வட்டமிட்டதேயல்லாது உலகவேடிக்கைகள் மேற்செல்லவில்லை என்றறியலாம்.

5. "ரெப்பாயீமியர்" கானான்தேசத்துக்கு வடகிழக்கில் சூசிமியர் ஏமியர் பக்கமாய் குடியிருந்தவர்கள். "ரெப்பாயீம்" என்ற வார்த்தைக்கு இராட்சதர் என்றர்த்தம்.

"சூசிமியர்" சம்சூமியர் என்றும் பேர். கானானுக்கு நேர்கிழக்கிலிருந்தவர்கள்.

"ஏமியர்" கானானுக்கு கிழக்கிலும் தென்கிழக்கிலுமிருந்தவர்கள்.

"ஓரியர்" கானானுக்குத் தெற்கிலிருந்தவர்கள்.

இவர்கள் எல்லாரும் இராட்சதர்களாயிருந்தார்கள். இவர்களுடைய உற்பத்தியைக்குறித்து திட்டமாய்த் தெரியாது. ஆபிராம் கானான் தேசத்தில் பரதேசியாய் சஞ்சரிக்கிற காலத்தில் இந்தச் சாதியார் மேற்காட்டியபடி குடியேறியிருந்தார்கள். இவர்களையல்லாமல் அவன் காலத்தில் கானானுக்குத் தெற்கிலும் தென்மேற்கிலுமாக ஏவியரும் வடக்கே கானானியருடைய சில வம்சத்தாரும் குடியேறியிருந்தார்கள். ஏவியர் குடியிருந்த இடத்தை பிற்பாடு பெலிஸ்தர் கைப்பற்றினார்கள்.

## Bishop's Prizes.

## வேதாகம கல்விவிருத்திக்கு அனுகூலமுண்டாக

மகா கனம்பொருந்திய சென்னபட்டணத்து கண்காணி யாரவர்கள் ஏற்படுத்திய.

## பந்தயப் பரீட்சை.

## 1873.

மேற்சொல்லிய பரீட்சை நடக்குங் காலம், இடம், அதற்குரிய விஷயம் விதிவழக்கம் பந்தயம் முதலானவைகளைக் குறித்து அறியவேண்டியவர்கள் யாவருக்கும் இதனால் அறிவிக்கப்படுகின்றதென்னவென்றால்,

காலம். 1873ஞ்ளு பரீட்சை, ஜூன்மாசத்தில் சங்கம் நடக்கும் வாரத்தில் நடக்கும்.

இடம். பாளையங்கோட்டை தெற்கு கல்விச்சாலை.

விஷயம். கிரேக்கு பாஷையில், "எபிரேயருக்கு எழுதிய நிருபம்."

தமிழ்பாஷையில், (1) வேதாகமங்களைப்பற்றிய பொது கேள்விகளுமன்றி, (2) பழையஏற்பாட்டில் சாமுவேலுடைய சனனமுதல், சாலோமோனுடைய மரணம் வரைக்குமுள்ள இஸ்ரவேலருடைய சரித்திரம், (3) புதியஏற்பாட்டில் எபேசியர், பிலிப்பியர் நிருபங்கள், (4) ஞாபக பாடம் ஏசாயா 40 ம் அதிகாரமும் பரி. யோவான் சுவிசேஷம் 14 அதிகாரமுமே.

விதிவழக்கம். (1) கிரேக்கு பரீட்சைக்கு ஏற்படுகிறவன் தமிழ் பரீட்சைக்கு ஏற்படக்கூடாது. (2) இதற்கு முன்னமே கிரேக்கு பந்தயமானாலும், தமிழ் பரீட்சைக்கு முதல் பந்தயமானாலும், பெற்றுக்கொண்டவர்கள் மறுபடியும் பரீட்சைக்கு ஏற்படக்கூடாது. (3) தமிழ் பரீட்சைக்கு இரண்டாம் பந்தயம் மாத்திரம் பெற்றவர்கள், முதல் பந்தயம் பெற ஏற்படலாம். தடையில்லை.

கவனிப்பு. 1873 வருஷத்தில் பரீட்சைக்கு ஏற்பட மனமுள்ளவர்கள் தாமதமின்றி, தங்கள் பேர், இடம் முதலியவைகளை பாளையங்கோட்டையிலிருக்கும் கனம்: ஆஷ்டன் டிப் ஐயரவர்களிடத்தில் உடனே எழுதி தெரியப்படுத்தவேண்டும்.

பந்தயம். கிரேக்கு பந்தயம் ரூ 50. இது சென்னபட்டணம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மலையாளம் நாலு நாட்டாருக்குள், முதலவர் ஒருவருக்கே கொடுக்கப்படும்.

தமிழ் பரீட்சைக்கு ஒவ்வொரு நாட்டிலும் இரண்டு பந்தயம் கொடுக்கப்படும். அவற்றில் முதல் பந்தயம் ரூ 35யும், இரண்டாம் பந்தயம் ரூ 25யுமாம்,

பட்டம்பெற்றவர்கள் மாத்திரம் தவிர, உபதேசிமார், உவாத்திமார், சபையாராகிய சுதேசக் கிறிஸ்தவர்கள் யாவருக்கும் தாராளமாய் விடப்பட்டது. ஆகலால் ஏப்பிரல் மாசம் முதல் தேதிக்குள்ளாக அநேகர் தங்கள் பேரை எழுதியனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—பிரிட்டிஷ் பார்லிமெந்தென்னும் மகா சங்கம் போனமாசம் கூடியபொழுது, பிரதான மந்திரியாகிய கிலாட்ஸ்டோன் துரை அயர்லாந்தின் சர்வகலாசாலையைப் பற்றிக்கொண்டு வந்த புதுச் சட்டம் ஒன்றையிட்டு வாதானுவாதம் உண்டாய் மந்திரி பக்ஷம் அபஜயமடைந்ததால் அவர் தமது உத்தியோகத்தைக் கைவிட்டார். ஆயினும் அவருக்கு விபக்ஷரானவர்கள் தங்கள் கருத்திற்குத்தக்க சபையொன்று ஏற்படுத்தக்கூடாதிருக்கிறபடியால், கிலாட்ஸ்டோன் துரை தம்மால் கூடியமட்டும் ஆலோசனை பாரத்தை நிர்வகிக்க சம்மதித்திருக்கிறாராம். மஹா ராணியவர்கள் புத்திரராகிய டியூக் ஆவ் எடின்பரோ ருஷிய சக்கரவர்த்தி குமாரத்தி ஒருவரை மணம்புரிவாரென்று சத்தம். பாரசீக அரசன் வியன்னா நகரத்தில் நடக்கும் சர்வதேச வஸ்துசேகரக் காட்சியைப் போய்ப் பார்த்துப், பின் ருஷிய ராஜதானியாகிய ஸாந்து பீற்றர்ஸ் புருகு என்னும் நகரத்திற்குப்போய் ருஷிய சக்கரவர்த்தியைக் கண்டபின்பு, அங்கிருந்து புருஷிய ராஜதானியாகிய பெர்லின் வழியாய் லண்டனுக்குப் போவாராம். பிரான்சிய ஆலோசனை காரியங்கள் அத்தனை திருப்திகரமான ஸ்திரமில்லாதிருந்தும் பிரஜாதிபத்தியத்துக்கு ஆதாரமான ஒழுங்குகள் இதுவரையும் நிலைபெற்றுவருகிறது. பிரான்சிய ஆலோசனை சபையார் தங்கள் ராணுவங்களைக் கிரமப்படுத்தி பத்து லக்ஷம் யுத்தவீரரை யேற்படுத்தப்போகிறார்கள். கைவாப்பிர தேசத்தின்மேல் படையெடுக்க மூன்று சேனை வகுப்பார் ருஷிய ராஜதானியினின்று புறப்பட்டிருக்கிறார்கள். கலைகண்ட கல்விமான்கள் சிலர் அச்சேனைகளோடு போகிறார்கள். அவர்கள் அங்கிருக்கையில் அந்தேசத்தின் இயற்கை செயற்கையான விஷயங்களை ஆராய்ந்துபார்ப்பார்கள்.

**அமேரிக்கா.**—போன பெப்ருவரி மாசத்தில் தென் அமேரிக்காவின் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த ஓர் வியாங்பட்டினத்தில் ஆறு பெரிய வீதிகளிலுள்ள கட்டிடங்கள் நெருப்புப்பற்றி எரிந்தன. இருநூறு குடும்பங்கள் வீடில்லாமல் அவதிப்பட்டார்கள். போஸ்டன் நகரத்திலும் வீடுகள் நெருப்புப்பற்றி எரிய, சிலர் பிராண சேதமடைந்தார்கள். பேசுகிற யந்திரமொன்று அமேரிக்காவில் சற்பிக்கப்பட்டது. அதைச்செய்தவர் பிரான்சியர். அது சகலவித பாஷைகளையும் பேசுமென்று சொல்லுகிறார்கள். வியன்னா நகரத்தில் நடக்கும் சகல தேச வஸ்துசேகர காட்சியில் அது காண்பிக்கப்படுமாம்.

**இந்தியா.**—போன மாசத்தில் கவர்னர்ஜெனரலவர்களுடைய சட்ட நிரூபண சபையார் கூடிவந்தபொழுது மதுபான விஷயத்தைப் பற்றி சம்பாஷணை நடந்தது. மதுபானப் பிரியம் ஒரு இடத்திலும், ஒரு வகுப்பாரிலும் மாத்திரம் அல்ல, எங்கும் எல்லாருக்குள்ளும் தலைப்படுகிறபடியால், அந்த மோசகரமான வழக்கத்தைத விலக்கும்படி வகை தேடுவது அவசியமென்று கவர்னர்ஜெனரல் முதலான பெரியோர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இது விஷயத்தைப்பற்றி சில புது ஏற்பாடுகளை அவர்கள் அகஸ்மாத் செய்வார்கள். இது மிக சந்தோஷகரமான செய்தியென்று சொல்லவும் வேண்டுமோ! "என்ஞான்று நஞ்சுண்பார்கள்ளுண்பவ" ரன்றோ?

## ஏப்பிரல்மீ நாள் 30. பங்குனிமீ 21உ முதல், சித்திரைமீ 19உ வரை.

| வாரம். | [illegible]த் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨௧ | கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார். யாத். 14:14. |
| பு | 2 | ௨௨ | நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள். 18. |
| வி | 3 | ௨௩ | ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்தார்கள். 31. |
| வெ | 4 | ௨௪ | கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர். 15: 1. (18 |
| ச | 5 | ௨௫ | கர்த்தர் உம்முடைய அடியானுக்கு மன்னிப்பாராக. 2 இரா. 5: |
| ஞா | 6 | ௨௬ | நாம் செய்கிறது நியாயமல்ல. 7: 9. |
| தி | 7 | ௨௭ | கர்த்தருக்காக எனக்கிருக்கிற பக்தி வைராக்கியத்தைப்பார். 10: 16. |
| செ | 8 | ௨௮ | என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச் செய்தாய். 30. |
| பு | 9 | ௨௯ | தேவனே, உமது வழி பரிசுத்தஸ்தலத்திலுள்ளது. சங். 77:13. |
| வி | 10 | ௩0 | அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே. 14. |
| வெ | 11 | ௩௧ | தங்களிருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள். |
| ச | 12 | ௧ | நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? 79: 13. |
| ஞா | 13 | ௨ | நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப் போனோம். 8. |
| தி | 14 | ௩ | எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும். 9. |
| செ | 15 | ௪ | உமது துதியைச் சொல்லிவருவோம். 13. |
| பு | 16 | ௫ | கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். நீதி. 1:7. |
| வி | 17 | ௬ | மூடர் போதகத்தை அசட்டைபண்ணுகிறார்கள். 7. |
| வெ | 18 | ௭ | உன் தகப்பன் புத்தியைக் கேள். |
| ச | 19 | ௮ | பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே. 10. |
| ஞா | 20 | ௯ | என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள். 23. |
| தி | 21 | ௧0 | இதோ, உன்னைப் புடமிட்டேன். ஏசாயா 48. 10. |
| செ | 22 | ௧௧ | உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன். 10. |
| பு | 23 | ௧௨ | என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடேன். 11. |
| வி | 24 | ௧௩ | என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும். 18. |
| வெ | 25 | ௧௪ | இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு. ஓசி. 12: 6. |
| ச | 26 | ௧௫ | இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு. 6. |
| ஞா | 27 | ௧௬ | உங்கள் பாவங்களிலே சாவீர்கள். யோவான் 8: 21. |
| தி | 28 | ௧௭ | சத்தியம் உங்களை விடுதலையாக்கும். 32. |
| செ | 29 | ௧௮ | பாவத்தின் சம்பளம் மரணம். உரோமர் 6: 23. (25. |
| பு | 30 | ௧௯ | இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார். 7: |

## விசேஷித்த நாட்கள்.

6. உயிர்த்தெழுந்த பண்டிகைக்கு முன்வரும் ஞாயிறு.
11. பெரிய வெள்ளிக்கிழமை.
12. பௌரணமி.
13. கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகிய ஈஸ்தர் பண்டிகை.
20. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
27. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
27. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. May. No. 5.

### Contents:


Biography of the Right Rev. T. F. Middleton, D. D. ... 82
Christian Church History. ... 84
Notes on Genesis. ... 86
A Family Commentary on the Sermon on the Mount. 89
On the Liturgy. ... 92
Communicant's Companion. ... 95
The Parables of Christ. ... 97
Summary of News. ... 98


### அட்டவணை:


மிடில்றன் வேதசாஸ்திரியாருடைய சீவியவிருத்தாந்தம். ... ௮௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ௮௪
ஆதியாகம வியாக்கியானம். ... ௮௬
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ௮௯
செபபுஸ்தக வியாக்கியானம். ... ௯௨
நற்கருணை விளக்கம். ... ௯௫
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ௯௭
சமாசாரத்திரட்டு. ... ௯௮



**Palamcottah:**
**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS.**
BY L. DEVANAYAGAM PILLAY.

**1873.**

# நற்போதகம்.

ரு. மேஸ். ௲௮௱௵.

## Biography of the Right Rev. T. F. Middleton, D. D.

FIRST BISHOP OF CALCUTTA.

## கல்கத்தாவின் பிரதம அத்தியட்சராகிய மிடில்த்றன்

வேதசாஸ்திரியாருடைய சீவிய விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

இராஜநகரியைச் சுற்றியிருந்த சபைகளில் சனங்கள் அடர்த்தியாய்க் குடியிருந்தும் தேவாலயங்கள் மிகவும் சுருக்கமாயிருந்ததினாலே, இங்கிலாந்துச் சபையின் க்ஷேமத்தை விரும்பினவர்களும் ஏராளமான சனங்கள் சுவிசேஷ சத்தியங்களை யறியாமல் அறிவீனத்திலே இருக்கவிடப்படுவதினாலுண்டாகும் கேடுகளை உணர்ந்தவர்களுமான பக்திமான்கள் அதைக்குறித்து மிகுதியும் பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். டாக்த்றர் மிடில்த்றன் சாந். பான்கிறாஸ் சேகரத்துக்கு விக்கர் குருவாய் நியமிக்கப்பட்டு வந்தபொழுது, அதில் ஐம்பதினாயிரத்துக்கதிகமான சனங்களிருந்தும், ஐஞ்ஞூறு பேர் கூடக் கொள்ளாத ஒரே ஒரு தேவாலயம் மாத்திரமிருந்தது. இந்தக் குறைவை நிவிர்த்திக்கிறதற்கு டாக்த்றர் மிடில்த்றன் தம்மாலியன்றமட்டும் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் முயற்சிசெய்தார். இராசாங்கத்தார் புதிதாய் ஒரு கோவில் கட்டும்படியாய் அவருடைய பிரயத்தனத்தினால் பார்லியமெந்து சங்கத்துக்கு மாசர் அனுப்பியிருந்தும், மேற்படி சங்கத்தார் அதை ஒப்புக்கொள்ளாமல் தள்ளிப்போட்டார்கள். இராசாங்கத்தார் ஆலயத்தில் தேவஆராதனைக்கு வரும் சனங்களுக்கு இடமில்லாததினாலே அநேகர் இங்கிலாந்து சபையைச் சேராத பிரிவினைக்காரர் கோவில்களுக்குப் போகிறதும் அவ்வாறு அவர்கள் பிரியத்தினாலே யல்லாவிட்டாலும் வழக்கத்தினாலே இங்கிலாந்து சபையை விட்டு நீங்கி தங்கள் பிள்ளைகளை அந்தவகையாய் வளர்க்கிறதும் ஆச்சரியமல்லவே. ஆனாலும் பிற்காலத்தில் லண்டன் பட்டணத்திலும் நாட்டுப்புறங்களிலும் எத்தனையோ எண்ணிறந்த ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தும், டாக்த்றர் மிடில்த்றன் நாட்களில் எவ்வளவோ செல்வாக்கும் பிரஸ்தாபமுமுள்ள அவர் ஐம்பதினாயிரம் சனங்களுள்ள அந்தச் சேகரத்தில் கூட ஒரு கோவில் கட்டிக்கொள்வதற்கு உத்தரவு கிடையாமற் போனது மகா பெரிய ஆச்சரியந்தான்.

இவ்விடத்தில் திவ்விய ஊழியத்தை நடப்பித்துக்கொண்டு வரும்பொழுது தான் நூதனமாய் ஏற்பட்ட கல்கத்தாக் கண்காணிப்புக்கு அவர் தெரிந்துகொள்ளப்பட்டது. கந்தர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷரால் அபிஷேகம்பெற்றவுடனே, இரட்சகருடைய இராச்சியத்தின் பிரபலியத்தையும் மனிதருடைய இகபர நன்மைகளையும் வாஞ்சித்துக்கொண்டிருந்த சகலருடைய நல்விருப்பங்களோடும் பிரார்த்தனைகளோடும் தமது விஸ்தாரமான ஆட்சியின் பாரமான கடமைகளைக் கைக்கொண்டார். இந்த உத்தியோகத்தை அவர் அங்கீகரித்துக்கொண்டதில் அவருக்கு நேரிட்ட பாரி நஷ்டங்கள் அநேகமுண்டு. சீமையிலேயே உயர்ந்த அந்தஸ்துகளும் அதிகமான வருமானங்களுங் கிடைக்கிறதற்கேதுவிருந்தது. என்றாலும் அவர் காரியங்களை நன்றாய் விசாரித்துப் பார்த்ததில், இது கர்த்தராலுண்டான அழைப்பென்றும், அதிகப் பிரயாசத்துக்கும் பிரயோசனத்துக்கும் ஏதுவாகவிருக்கிறதென்றும் ஐயமின்றி மனச்சாட்சியில் அவர் உணர்ந்தபடியால், மற்ற எண்ணங்களையெல்லாந் தள்ளிவிட்டு, மனப்பூர்வமாய் இந்தப் பொறுப்பான அலுவலுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

அவர் இந்தியாவில் கரைபிடித்து, உத்தரவாதம்பொருந்திய தமது உத்தியோகத்தைக் கைக்கொண்டதுமுதற்கொண்டு, ஒரு பெரிய கவலை அவர் மனதை ஓயாமல் வாதித்துக்கொண்டேயிருந்தது. அதென்னவென்றால் சுவிசேஷ பிரபலியத்துக்கு அனுகூலமாக, கல்வித் துறைகளோடு விசேஷமாய் வேதபோதனை செய்யத்தக்க கலாசாலையொன்று கட்டவேண்டுமென்பதுதான். சுதேசப் பிரசங்கிகளுடைய உதவியின்றியும் சுதேச பாஷைகளில் வேதாகமத்தைத் திருப்பிப் பதியாமலும் அதிக நன்மையுண்டாகமாட்டாதென்பது அவருடைய அபிப்பிராயம். அதினாலே சுவிசேஷ பிரபலிய சங்கத்தாருக்கு அவர் எழுதியனுப்பின ஓர் கடிதத்தில், கல்கத்தாவில் மிஷன் கலாசாலை ஒன்று ஏற்படுத்துவது இன்றியமையாத அவசியமென்று வற்புறுத்தி உணர்த்தினார். இந்த விசேஷ நோக்கம் நிறைவேறுதற்கென்று, அவர் இரவும் பகலும் முழுச் சிரத்தையோடும் மிகுந்த கவலையோடும் முயற்சிசெய்து வந்ததின்பேரில் இரண்டொரு வருஷங்களுக்குப்பின் அதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகள் கிடைக்க, 1820 ௵ டிசம்பர் ௴ 15 ௳ கல்கத்தா மிஷன் கலாசாலையைக் கட்டத்தொடங்கி அஸ்திவாரம் போடும் சந்துஷ்டியடைந்தார். மேற்படி கட்டிடம் சமைந்திருக்கிற வகை, கொண்டிருந்த நோக்கத்துக்கு எவ்விதத்திலும் தகுதியானதுதான். கல்கத்தாவுக்கு சுமார் மூன்று மைல் தூரத்தில் ஊக்லிநதியின் வலப்புறமாய் இராசாங்கத்தார் நன்கொடையாய்க் கொடுத்த மனையில் கட்டப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்து சபை சம்பந்தமான சங்கத்தார்கள் இந்தக் கலாசாலையின் கட்டுமானத்திற்கும் அதிற் போதனையடையும் வித்தியார்த்திகள் உபகாரத்துக்குமாக உதாரமாய்த் திரவியங்கொடுத்தார்கள். அஸ்திபாரக்கல்லின் கீழ் நேர்த்தியான ஒரு பித்தளைத்தகடு வைக்கப்பட்டது. அதில் கிறிஸ்தவ கல்விவிர்த்திச் சங்கத்தாரும் சர்ச்சுமிஷன் சங்கத்தாரும் செய்த உதவியின்னதென்று வரைந்திருக்கிறது. வேதாகம சங்கத்தார் பொருள் சகாயஞ்செய்த செய்தி அதுவரையும் அவருக்கு வந்து எட்டவில்லை. எட்டியிருக்குமாகில் அதையும் மேற்படி தகட்டில் பதிப்பியாமலிரார். மேலும் இவ்விஷயத்தை இங்கிலாந்திலுள்ள மற்றும் பெரியோர்கள் அநேகரும் புகழ்ந்து நன்குமதித்து தேசமெங்குமுள்ள சபைகளிலெல்லாம் அதற்கென்று காணிக்கைகள் சேர்க்கும்பொருட்டு இராஜ உத்தரவுபெற்று பிரயாசப்பட்டதில் ஐந்து லட்சம் ரூபாய்க்கதிகம் சேர்ந்தது. முக்கியமான இந்தக் காரியத்தில் அத்தியக்ஷர் அதிகக் காலத்தைச் செலவிட்டதல்லாமலும், மிகுந்த கவலையையும் பிரயாசத்தையும் எடுத்துக்கொண்டார். அவர் தாமே கட்டுமான் வேலைகளை மேற்பார்த்து வந்ததோடு அதற்கு வேண்டிய பிளான்

கள் முதலிய சகல நுட்பமான திட்டங்களையும் அவரே செய்தார். இவ்விதம் அந்த வேலையை முடிக்கவேண்டுமென்று அவருக்கிருந்த மிகுந்த கவலையும் பிரயாசமுமே அவருடைய சடுதி மரணத்துக்கு ஏதுகரமாயிற்றென்று மனிதப்பிரகாரம் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்த முயற்சியினாலுண்டாகுமென்று தாம் எதிர்நோக்கியிருந்த நன்மையனுகூலங்களை அவர் கண்ணாரப் பார்த்துக் களிகூர அவருக்கு அருளப்படாதேபோனாலும், அத்தியக்ஷ கலாசாலையின் வெளிவேலைகள் முடிந்து தீர்ந்ததையும், அதின் சிரேஷ்ட ஆசிரியன் நியமிக்கப்பட்டதையும் கண்ணாரக்காணவும் அதை நடத்தவேண்டிய முறையைப் பற்றி சட்டதிட்டங்கள் ஏற்படுத்தவும் போதுமான காலம் அவர் உயிரோடிருந்தார். கிறிஸ்துமார்க்கம் இந்தியாவில் நிலைத்திருக்கும்பரியந்தம் அதைக் கட்டினவருடைய பக்தியுள்ள புத்திக்கும் அதை ஸ்தாபித்த சங்கத்தாருடைய உதார குணத்துக்கும் இந்தக் கலாசாலை மகத்தான ஞாபகார்த்தமாயிருக்கும்.

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

அதன்றியும் நியாயத்தீர்ப்புநாளில் சர்வலோகத்தாரும் உயிரோடெழுந்திருக்குமுன்னே நீதிமான்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று கிறிஸ்தவர்களில் அநேகர் நம்பியும் வந்தார்கள். இரண்டாம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவ நூலாசிரியரிற் பலர் ஆயிரம் வருஷ ஆளுகையுண்டென்று எழுதியிருக்கிறதாகக் குறிப்பித்தோமே, அந்த உபதேசமே இது. முதலாம் உயிர்த்தெழுதலைப்பற்றி அவர்கள் பேசும்போது, நீதிமான்கள் முதலாவது உயிர்த்தெழும்பி, ஆயிரம் வருஷம் பூலோகத்திலே கிறிஸ்துநாதரோடு அரசாளுவார்களென்றும் அவ்வாயிர வருஷக் கடைசியில் பொதுவான உயிர்த்தெழுதலிருக்குமென்றும் கருத்துக் கொண்டிருந்தார்களென்று அறியவேண்டும். இப்படி நம்பியிருந்த அவர்கள் நீதிமான்களுடைய ஆத்துமங்கள் பிரிந்து தனித்திருக்கிற காலத்தில் தாங்கள் அவ்விடத்தைவிட்டு விடுதலையடைவோமென்று நினைத்த முதலாம் உயிர்த்தெழுதலுக்கு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றன என்று நம்புகிறதும் இயல்புதானே. அதினாலேயே தேவனைப்பற்றிய பயமும் விசுவாசமுமுடையவர்களாய் இம்மையைவிட்டுப்போன தங்கள் சிநேகிதர்களும் பெந்துக்களும் மோக்ஷராச்சியத்திற் பிரவேசிக்கிற காலத்தைச் சீக்கிரம் வருவித்தருளும் என்று தங்கள் ஜெபங்களில் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது தப்பென்று நினைத்ததுமில்லை.

பூர்வ கிறிஸ்தவர்கள் இறந்துபோனவர்களுக்காகப் பிரார்த்தித்தார்களென்று சொல்லப்படுவது இந்தக் கருத்தாகத் தான். தங்கள் ஜெபங்களால் இம்மையை விட்டுப்போனவர்களுடைய தற்கால ஸ்திதியாவது



பிற்கால ஸ்திதியாவது வேறுபடுமென்று அவர்கள் நினைத்தவர்களேயல்ல, மரித்தவுடனே அவர்கள் பாக்கியமுள்ள நிலைமைக்குட்பட்டிருக்கிறார்களென்றும், பிற்காலத்தில் அதிகப் பாக்கியத்தை யனுபவிப்போமென்று நிச்சயமுடையவர்களாயிருக்கிறார்களென்றும் அவர்கள் விசுவாசித்தவர்கள். அவர்கள் பூரண பாக்கியமடையுங்காலந்தான் ஒருவேளை உயிரோடிருக்கிறவர்கள் ஜெபத்தினால் மாறும் என்று அவர்கள் நினைத்திருந்தது. அதினாலேதான் அவர்கள் தங்கள் சிநேகிதர்களுடைய கல்லறைகளில் கூடிவந்து அவர்கள் மரித்துப்போனநாளில் அவர்களை நினைத்து, மேற்காட்டியவிதமாய் அவர்களுக்காகச் ஜெபித்துவந்தார்கள்.

மரித்துப்போனவர்கள் தங்களுக்காகச் செய்யப்படும் ஜெபங்களைக் கேட்கிறார்களென்றாவது அவர்கள் உலகத்திலுள்ள தங்கள் சிநேகிதர்களுக்காக தேவனிடத்தில் பரிந்துபேசுகிறார்களென்றாவது இதுவரையும் ஒருவரும் நினைத்ததில்லை. இந்த விஷயத்தைப்பற்றி யூகித்து உத்தேசிக்கத் தொடங்கினவன் ஒரிஜன் தான். அவன் இதுகாரியத்தில் நிலைநிறுத்த விரும்பின அபிப்பிராயங்கள் இவையென்று திட்டமாய்ச் சொல்லுவது கூடியதன்று. அவனுடைய அபிப்பிராயங்கள் முடிவானவைகளாயிராமலிருந்தாலும் இருந்திருக்கலாம். வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாமல் விட்டிருக்கிற இக்காரியத்தின் பேரில் அவன் யூகிக்கத் தொடங்கினதே துக்கப்படவேண்டியது. ஆகிலும் நாம் மேலே குறிப்பித்தபடிக்கு இப்பேர்ப்பட்ட கருகலான விஷயங்களில் மனோராச்சியஞ் செய்வதற்கு மிகவும் பிரியங்கொண்டவன். ஒவ்வொருவனுடைய ஆத்துமமும் பாவத்தினால் கறைப்பட்டிருப்பதுதொட்டு அது மோக்ஷ பாக்கியத்துக்குத் தகுதியுள்ளதாகும்படி சுத்திகரிக்கப்படவேண்டுமென்றும், மேற்படி சுத்திகரிப்பு அக்கினியினாலே செய்யப்படுமென்றும், தேறின பரிசுத்தவான்களுடைய ஆத்துமங்களும் இந்த அக்கினிப்பிரவேசம் செய்யவேவேண்டுமென்றும் அவன் நினைத்திருந்ததுபோல தோன்றுகிறது. இந்தச் சுத்திகரிப்பு மரித்தவுடனே நடவாமல் உயிர்த்தெழும்புங் காலத்தில் நடக்கும் என்பதும் அவன் எண்ணம். ஆகையினாலே ஒரிஜனுடைய இந்த அபிப்பிராயம் பிற்காலத்தில் உத்தரிக்கும் ஸ்தலத்தைப்பற்றிய தப்பறை உற்பத்தியாகிறதற்கு ஏதுவாய் மாத்திரமிருந்திருக்குமேயல்லாமல், அதுவே இது அல்லவென்று நிர்ணயிக்கத்தக்கது. மேலும் கிறிஸ்தவர்களில் பெரும்பாலார் ஆத்துமம் சரீரத்தைவிட்டு பிரிந்தபின் அக்கினிப்பிரவேசஞ் செய்யவேண்டும் என்பதைக்குறித்து இக்காலத்திலே ஒன்றுங் கேட்டவர்களும் நினைத்தவர்களுமல்லவென்றும் சொல்லத்தக்கது தான்.

பிலிப்பு என்று பெயர்கொண்ட ஒருவன் கோர்டியன் இராயனைக் கொலைசெய்வித்து 244 ல் சிம்மாசனமேறினான். சிலர் சொல்லிக்கொள்ளுகிறபடி அவன் கிறிஸ்தவனாயிருந்தானென்று ரூபிக்கக்கூடுமாகில் அதற்குமுன் அரசுபுரிந்தவர்களைப் பார்க்க இவனுடைய இராச்சியபாரம் அருமையானதாயிருக்கும். ஆகிலும் அவன் கிறிஸ்தவனல்லவென்பது நிச்சயம். இக்காலத்தில் படித்த எவர்களாவது கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்து அறிவில்லாதிருப்பது கூடியதல்லவே. பிலிப்புவும் ஒரு காலத்தில் அதை அனுசரிக்க மனங்கொண்டிருக்கலாம். கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்து அவனுடைய அபிப்பிராயம் எப்படிப்பட்டதாயிருந்தபோதிலும், அவன் சிங்காதனமேறினபிறகு அவனிடத்தில் விளங்கிய நடபடிகளுக்கு அவனுடைய விக்கிரகபக்திதான் காரணமாயிருக்கவேணடும். ஒரிஜன் என்பவன் அவனுக்கு ஒரு நிருபமும் அவன் மனைவிக்

கோ தாய்க்கோ ஒரு நிருபமும் எழுதியிருப்பதைக்கொண்டு அவனை தன் மார்க்கத்துக்கு இழுத்துக்கொண்டான் என்று சாதிப்பது தகுதியோ? மேற்படி நிருபங்களின் பொருளடக்கம் இன்னதென்று நாலும் நமக்குத் தெரியாதே. பிலிப்பு என்பவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தப் பிரியங்கொள்ளவில்லையென்பதும், அவன் அரசுபுரிந்த காலமெல்லாம் அவர்கள் காரியம் ஒருவாறு க்ஷேமமாயிருந்ததும் மெய்யே. ஆகிலும் மாக்ஸிமினு மடிந்ததுமுதல் இப்படியே நடந்து வந்தது. ஆகையால் இவ்விராயன் கிறிஸ்தவர்கள் பக்ஷத்திலிருந்தானென்பதற்கு அது போதுமான அத்தாட்சியல்ல.

இந்த இராயனுடைய நாட்களில் கிறிஸ்தவர்கள் அநுபவித்த சமாதானத்துக்கு ஒரே ஒரு இடையூறு மாத்திரம் நேரிட்டது. அதென்னவென்றால் அலெக்சந்திரியாவிலே 246 லோ 247 லோ எரக்கிலாவுக்குப் பதிலாக தியோனிசியு கண்காணியானபின் அவ்விடத்திலுண்டான துன்பமே. தியோனிசியு தேறின வித்வானாயிருந்ததுமன்றி சகலவிதத்திலும் அந்த அந்தஸ்துக்கு தகுதியுள்ளவனுயுமிருந்தான். இது மெய்யென்பது அவன் நடப்பித்த தர்க்கங்களினாலும் சபையில் துன்பம் நேரிட்டகாலத்தில் அவன் நடந்துகொண்ட விதத்தினாலும் தெளிய விளங்கும். விக்கிரகாராதனைக்காரரான பட்டணத்துக் குடிகள் 248 ல் யாதோ ஒரு காரணத்தினிமித்தம் மூர்க்கத்தோடு எழும்பி கிறிஸ்தவர்களுக்குப் பலவகையான நிஷ்டூரங்களைச் செய்தார்கள். இது சனங்களுடைய மூர்க்கத்தினாலே உண்டானதேயன்றி துரைத்தனத்தாருடைய உத்தரவின் பேரிலுண்டானதாகத் தோன்றுகிறதில்லை. கிறிஸ்து மார்க்கம் ஆச்சரியமானவிதமாய்ப் பிரபலியமாகிக்கொண்டு வந்ததே கிறிஸ்தவர்களுக்கு இப்பேர்ப்பட்ட நிஷ்டூரங்கள் நேரிட ஏதுவாயிற்று என்று சொல்லலாகும். தேவசெயலால் இந்தத் துன்பம் வெகுகாலம் நிலைக்கவில்லை. கி. பி. 249ஆம் ஈஸ்தர் பண்டிகைக்குப்பின் அஞ்ஞானிகள் தேசகாரியங்களைக்குறித்து தங்களுக்குள்ளே சண்டைபண்ண ஆரம்பித்ததினாலே கிறிஸ்தவர்களுக்குத் திரும்பவும் சற்று சௌக்கியமுண்டாயிற்று.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௰௪. அதிகாரம்.

### லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்ததற்கு வந்த முதற்பலன்.

(தொடர்ச்சி.)

---

அப்படியே சூசிமியர் குடியிருந்த இடத்தை அம்மோனியரும், ஏமியர் குடியிருந்த இடத்தை மோவாபியரும் கைப்பற்றினார்கள்.

"அஸ்தரோத் கர்னாயீம்" பாஷானிலுள்ள அஸ்தரோத். உபா. 1: 4. யோசு. 9: 10. 12: 4. இது மனாசேயின் கோத்திர எல்லைக்குள்ளிருந்த லேவியர் பட்டணம். "கர்னாயீம்" என்றால் "இரண்டு கொம்புள்ள" என்றர்த்தம்.



"சாவேகிரியத்தாயீம்" அல்லது கிரியத்தாயீம் சமபூமி. கிலேயாத்திலுள்ள பேர்போன பட்டணம். எரே. 48: 1.

6. "சேயீர்" ஏதோமியர் குடியிருந்த மலைத்தேசத்துக்குப் பேர். இது சவக்கடல்முதல் எலானிற்றிக் குடாக்கடல்வரையுமுள்ளது. ஏதோமியருக்குமுன் இவ்விடத்தில் குடியிருந்தவர்களுக்குத் தான் ஓரியர் என்று பேர்.

"எல்பாரான்" அல்லது பாரானின் சமபூமி. 21: 21. எண். 12 16 13: 3. யூதேயாவின் தென் எல்லைமுதல் சீனாய் எல்லைவரையும் எட்டியிருந்த வனாந்திர திசைக்குப் பேர்.

"முறியடித்து" பக்கத்திலுள்ள சிற்றரசர்களையெல்லாம் ஜெயித்துக் கீழ்ப்படுத்தி கடைசியாக சோதோம் இராசாவையும் அவன் துணையாட்களையும் ஜெயிக்கவந்தார்கள்.

7. "காதேஸ் என்னும் என்மிஸ்பாத்" யூதேயாவுக்குத் தெற்கேயிருந்த மெரிபா என்று நினைக்கப்படுகிறது. எண். 20: 1, 14. "ஆமலேக்கியருடைய நாடனைத்தையும்" அதாவது பிற்காலத்தில் இவர்கள் கையாட்சிக்குள்ளான இடம் என்றர்த்தம். இது கால வழு. ஆதி. 12: 7. வியா.

"அத்சாத்சோன்தாமார்" யூதேயா வனாந்தரத்தில் பேரீச்சுமரங்களால் விசேஷிக்கப்பட்ட பட்டணம் பிறகாலத்தில் எங்கேதி என்றழைக்கப்பட்டது,

"எமோரியர்" 10: 15—19. வியா.

10. "நிலக்கீல்" 11: 3, 4. வியா. எகிப்தியர் பிரேதங்களுக்குக் கந்தவர்க்கமிடும்படி இவ்விடத்து நிலக்கீல் அதிகமாய்ச் செலவானதால், இதை தோண்டி எடுப்பதில் பெரிய பெரிய படுகுழிகளாகிய "கேணிகள்" உண்டாயின. இவற்றில் சத்துராதிகளை விழத்தட்டவோ அல்லது தோற்றுப்போனால் ஒழித்துக்கொள்ளவோ சோதோமின் இராசா இந்த இடத்தைப் போர்க்களமாகத் தெரிந்துகொண்டான்.

12. 13: 10—12. வியா.

13. "எபிரோயன்" ஆபிராமின் முற்பிதாவாகிய ஏபேர் என்பவனால் இந்தப் பேர் வந்ததென்று நினைக்கப்படுகிறது. 11: 1 வியா.

"எஸ்கோல், ஆநேர்" அந்நியோன்னிய ஆதரவுக்காகவும் காவலுக்காகவும் ஆபிராம விவேகமாய் இவர்களோடு "உடன்படிக்கை" செய்திருந்தான்.

"மம்ரே என்னும் சமபூமி" எபிரோனுக்கு சமீபத்தில்.

14. "தாண்" பலஸ்தீனாவுக்கு வடக்கே நப்தலிக் கோத்திரத்தில் லேசேம் அல்லது லாயிஷ் என்னப்பட்ட பட்டணம்.

15. "இடது" அதாவது மேல் புறம்.

ஆபிராம் எத்தனை தயாளசாலி. எத்தனை உண்மையுள்ளவன். லோத்தின் விவேகத் தாழ்ச்சியான நடபடியையிட்டு தன் மனதில் கொஞ்சமென்கிலும் களங்கம் வைக்கவில்லை. லோத்து பேராசைப்பட்டுப் போனானே இப்போ அகப்பட்டுக்கொண்டான் நன்றாய்ப் படட்டும் என்று ஆகடியம்பண்ணவில்லை. அல்லது லோத்தின் வீட்டில் கொள்ளைபோனதுபோக மீந்திருப்பதைப் போய் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று உலோபித்தனமாய் எண்ணவுமில்லை. சிறைப்பட்டவன் பிராணனைக் காப்பாற்றும்பொருட்டு உடனே புறப்பட்டு தன் சிறியசேனையை நடத்தி படைமுகத்தில் நின்று போராடி சத்துருக்களை ஜெயித்துவெற்றிவேந்தனாய்த் திரும்பினான். மெய்விசுவாசி தான் மெய்யான வீரன்.

"சாவே" எருசலேமில் வடபக்கமாயிருந்தது.

"மெல்கிசேதேக்கு" இவனைக்குறித்து பல அபிப்பிராயங்களுண்டு.

1. இவனை சேம் என்று சிலர் உத்தேசித்து இவன் ஆபிராமுக்கு விசேஷித்த முற்பிதாவாயிருந்ததினாலே இந்தப் பெரிய கனத்துக்குப் பாத்திரனாயிருந்தானென்று சொல்லுகிறார்கள். 11: 10—25. விடா. இது சரியல்ல. சேமின் வம்சவரிசை தெளிவாய்த் தெரியும். மேலும் லேவி ஆபிராமின் வம்சத்தானாயிருப்பதுபோல சேமின் வம்சத்தானுமிருக்கிறான். இது பவுல் அப்போஸ்தலன் எடுக்கிற நியாயத்துக்கு விகற்பமாகிறதே. எபி. 7: 1—10.

2. மனுஷனாக மாத்திரமிருக்கிறவன் ஆபிராமுக்கு மேலானவனாயிருப்பதெப்படி என்று வேறு அநேகர் நினைத்து, மெல்கிசேதேக்கு என்பது தேவனுடைய குமாரன் தாம் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் எபி, 7: 3, 15, 17 ல் "தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றும்," நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராயிருக்கிறீர் என்றும் அப்போஸ்தலன் ஒருபோதும் சொல்லமாட்டாரே. ஒருவர் தமக்குத் தாமே முன்னடையாளமாயிருப்பதெப்படி! அல்லாமலும் மெல்கிசேதேக்கு சாலேம் (அதாவது எருசலேமுக்கு) இராசாவாயிருந்தானென்று சொல்லியிருக்கிறது. நமது கர்த்தர் உலக இராசாவாக அப்போது சாலேமிலாவது வேறெந்தப் பட்டணத்திலாவது அரசாளவில்லை என்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். மேலும் மெல்கிசேதேக்கு மனுஷனாகமாத்திரமிருந்தானென்பது தெளிவாயிருக்கிறதே.

மெல்கிசேதேக்கு நோவாவின் மக்களில் யாருடைய வம்சத்தான் என்றும் இவனுடைய முன்பின் வரலாறு இன்னதென்றும் சொல்லப்படவில்லை. விசேஷித்த நோக்கங்களையிட்டு தேவன் அதை மறைத்திருக்கிறார். என்றாலும் இவனைக்குறித்து புத்திபூர்வமாய்த் தீர்மானிக்கத்தக்கதென்னவென்றால், இவன் பெரிய வயசாளி, தேவபக்தியிற் சிறந்தவன், கொடுங்கோன்மையும் பலாத்காரமும் மிஞ்சிப்போயிருந்த அந்தக்காலத்தில் தன் குடிகளை நீதியாய் ஆண்டான். அவர்கள் இவன் அரசாட்சிக்குள் சமாதானம்பெற்றிருந்தார்கள். இதினாலே தான் ஒருவேளை அவனுக்கும் அவன் இராசதானிக்கும் இந்தப் பேரிட்டிருக்கலாம். மேலும் இவன் மெய்த்தேவாராதனையை விடாமல் நடத்திவந்தான். இராசாவாயிருந்ததுமல்லாமல் மெய்த்தேவனுக்கு ஆசாரியனுமிருந்தான். இப்படிப்பட்ட விஷயங்களில் கிறிஸ்துவுக்கு விசேஷித்த முன்னடையாளமாயிருந்தான். சங்கீ. 110: 4. எபி. 7: ஆபிராம் தேவெத்தனமாக இவனுடைய பெரிய வயசு, இராச அந்தஸ்து, தேவபக்தி, ஆசாரிய உத்தியோக கண்ணியம் ஆகிய இவற்றை மதித்தவனாய் இவனை கனம்பண்ணி, இவனாலே ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, தான் திருப்பிக்கொண்டுவந்த எல்லாக் கொள்ளையிலும் தசமபாகம் கொடுத்தான். இப்படியாக ஆரோன் வம்சத்து ஆசாரியரைப் பார்க்கிலும் மேலான ஒருவர் எழும்புவார் என்று ஆபிராமின் சந்ததியார் இந்தச் செய்கையினாலே போதிக்கப்படும்படி பரிசுத்தாவியானவர் சித்தமானார். ஆரோன் வரிசை ஆசாரிய முறை ஏற்படுத்தப்படுமுன் மெய்த்தேவனுடைய ஆசாரியனென்று மெல்கிசேதேக்கு ஒருவனே சொல்லப்பட்டிருக்கிறான். இந்த உத்தியோகத்தில் இவனுக்கு முன்னும் பின்னும் ஒருவருமிருக்கவில்லை. விசேஷித்த நோக்கங்களையிட்டு தேவன் தாமே இவன் ஒருவனை ஏற்படுத்தியிருக்கிறார்.

ஆபிராமும் மெல்கிசேதேக்கும் ஒருவரோடொருவர் கலந்துபே



சியிருப்பது இந்த ஒரே விசைதான் என்று தீர்மானிக்கக்கூடாது. மற்றும் அநேக வேளைகளில் பேசியிருப்பார்கள். ஆனால் அதைக்குறித்து இங்கே சொல்லப்படவில்லை. எதுபோலென்றால், ஏறக்குறைய ஆபிராம் உயிரோடிருந்த காலம்வரையும் சேம் உயிரோடிருந்தான். இவர்களிருவரும் வேதமார்க்க முதலான எத்தனையோ காரியங்களைப்பற்றி கலந்துபேசியிருப்பார்கள். அப்படியிருந்தும் அதைப்பற்றி வேதசரித்திரக்காரன் யாதொன்றும் எழுதவில்லையே.

22. ஆபிராம் எத்தனை ஞானமாய்ப் பேசுகிறான் பாருங்கள். இது கிறிஸ்தவர்களெல்லாரும் பின்பற்றி நடக்க ஏற்ற மாதிரி.

23. பிரமாணம் அல்லது பொருத்தனைபண்ணும்போது அதற்கு அடையாளமாகவும் உறுதியாகவும் கர்த்தருக்கு நேராக கையை உயர்த்துகிறது பூர்வீக வழக்கம். உபா. 32: 40.

### படிப்பினை.

மனிதருடைய இருதயத்தின் சீர்கேட்டை என்ன சொல்ல! "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்!" லோத்து இத்தனை அவதிப்பட்டானே. இப்போ எங்கே போகிறான். மறுபடியும் சோதோமுக்குப் போகிறான்! ஆனாலும் இதைக்குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. நாமும் இந்தப்படியே அநேக விசை சோதோமுக்குத் தான் படப்போகிறோம். உலக வாழ்வு தேவபக்திக்குப் பெரிய தடை. நம்முடைய மெல்கிசேதேக்கே நம்முடைய இருதயத்தின் கேட்டிலின்று நம்மை இரட்சித்து ஆசீர்வதிப்பாராக.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 7: 6.

(தொடர்ச்சி.)

பரிசுத்தமானதை நாய்களுக்குப் போடாதேயுங்கள். உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

பரிசுத்தமானது என்றால், வேத விஷயத்துக்காக நியமித்துவைக்கப்பட்டதாம். யூதர்கள் சில போசனங்களைப் பலிக்கென்றும் தேவாலய ஆராதனைக்கென்றும் நியமித்துவைத்து வந்தார்கள். பரிசுத்தமானதை நாய்களுக்குப் போடாதேயுங்கள் என்றால், தேவாலயத்திலே படைக்கும்படி நேர்ந்துகொண்டதை நாய்களுக்குப் போடக்கூடாதென்பது கருத்தென்று யூதன் அறிந்துகொள்வான். மேலும் உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும் என்றுஞ் சொல்லியிருக்கிறது. முத்தை மனிதர்கள் அதிக விலையுள்ளதென்று மதிப்பார்கள். பன்றியோ அதை அப்படி மதிக்கமாட்டாது. ஆகையால் முத்துக்களைப் பன்றிகள்முன் போடுவது விலையுயர்ந்ததை

வீணிலே எறிந்துவிடுவது என்றும், சிலருக்கு நாம் உபகாரமென்று எண்ணி செய்யுங் காரியங்களை அவர்கள் அபகாரம் என்றெண்ணி எரிச்சல் அடையும்போது அவர்கள் திரும்பிக்கொண்டு நம்மைப் பீறுவார்கள் என்றும் அர்த்தமாகும். கிறிஸ்து சொன்ன இந்த வசனத்திலே கனசிந்தைக்கேற்ற காரியங்களை நாம் திடீரென்றும், நிதானித்துப் பாராமலும் விவேகமில்லாமலும், எவ்வகைப்பட்டவர்களுக்கும், கண்டமட்டும் சொல்லக்கூடாதென்றுபடிக்கிறோம். அப்படிக்கில்லாமல் எண்ணமற்றவர்கள் காமாதுரிகள் தூஷணைக்காரர் ஆகிய இப்பேர்ப்பட்டவர்களோடு அப்படிப்பட்ட காரியங்களைக்குறித்து நாம் தாராளமாய்ப் பேசுவோமானால், அதினால் அவர்கள் எந்த நன்மையையும் அடையாமல் போவதுமல்லாமல் நமக்கும் நமது வேலைக்கும் அநேகக் கெடுதியுஞ் செய்வார்கள். அது முத்துக்களைப் பன்றிகள்முன் போடுவதுபோலாகும். யாராவது சிலருக்கு நாம் சொல்லுங் காரியம் தன்னிலே மிகவும் விலையுள்ளதாயிருந்தும், அது விலையுயர்ந்தென்று அறிந்து ஒத்துக்கொள்ளாதவர்களுக்கு நாம் அதைத் திடீரென்று சொல்லும்போது அவர்கள் விசனமடைந்து நமக்குச் சத்துருக்களாகி திரும்பிக்கொண்டு நம்மைப் பீறுவார்கள். நம்முடைய கடிந்துகொள்ளுதலைக் கேட்டு சீர்ப்படமாட்டாதவர்கள் சிலருண்டு. அப்படிப்பட்டவர்களைக் காணும்போது நமது இரட்சகர் தமது சிஷருக்கு நீங்கள் பாம்புகளைப்போல விவேகமுள்ளவர்களும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாயிருங்கள் (மத்தேயு 10: 16) என்று சொல்லியிருக்கிற எச்சரிப்பை நினைத்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கிறிஸ்து இரட்சகனைக்குறித்துந் தப்பெண்ணங்கொண்டு இடறலடைந்தவர்களிருந்த ஓரிடத்தில் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை (மத். 13: 8) என்று அவனைக் குறித்தே சொல்லியிருக்கிறது. எழுபது சிஷர்கள் முதலாவது அனுப்பப்பட்டபோது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையும் கவனிக்கத்தக்கது. அதாவது நீங்கள் உங்களுக்குத் தற்செயலாய் எதிர்ப்படும் எந்த வீட்டுக்குள்ளும் போகக்கூடாது. ஒவ்வொரு இடத்திலும் பாத்திரவான்கள் உண்டாவென்று முதலாவது விசாரித்து அப்படிப்பட்டவர்களிடத்தில் தங்கவேண்டும். வீடுகள்தோறும் போகக்கூடாது. உங்களை ஏற்றுக்கொள்வார் இல்லாத இடத்திலே தாமதியாமல் அவர்களை விட்டுப் புறப்படும்போது அவர்களுக்கு விரோதமான சாட்சியாக உங்கள் கால்களில் ஒட்டிய தூளையும் கூட உதறிப்போட்டுப் போங்களென்று அவர்களுக்கு கற்பித்தார்.

இந்தக் கற்பனை இக்காலத்துக்குமேற்றது. வேதசத்தியத்தை எவ்வளவு வலுவாகவும் பகிரங்கமாகவும் கூறக்கூடுமோ அவ்வளவு வலுவாகவும் பகிரங்கமாகவும் கூறலாம் என்ற இந்தப் பிரமாணத்தைப் பிடிவாதமாய்ப் பிடித்திருக்கிறவர்களுண்டு. கேட்க சனங்கள் மாத்திரம் வந்து கூடுவார்களானால் அவர்கள் அதைத் தெருக்களிலும் வீட்டின் மேலும் நின்று கூறுவார்கள். அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இடத்தகுதி காலத்தகுதிகளை யோசிக்கவேண்டியதில்லையென்று நினைக்கிறார்கள். இப்பிடிப் பிரசங்கிப்பதையிட்டு நேரிடும் எந்த மோசத்துக்கும் அஞ்சமாட்டோமென்கிறார்கள். ஆனால் இந்த திடாரிக்கம் இயல்புக்குரிய துணிகரமாகவும் உக்கிரமாகவுமிருக்கிற குணத்தைச் சேர்ந்ததேயல்லாது வேறில்லை. இது கிறிஸ்துமார்க்கத்தால் திருந்தி அடங்கவேண்டிய குணம். வேறு காரியங்களில் அவர்கள் சனங்களைப் பலவந்தம்செய்வதுபோல இதிலும் பலவந்தம்செய்கிறார்கள்.



பொதுவாக இந்த வசனம் சுவிசேஷ உபதேசங்களைப் பொருந்தாத காலங்களிலும் இடங்களிலும் கூறுகிற பிரசங்கிகளுக்கு, திருட்டாந்தமாக பட்டண வீதிகளில் பிரசங்கித்து, போக்குவரத்தாயிருக்கிற பரியாசக்காரர் சுவிசேஷத்தைக்குறித்து நகைக்க இடம்பண்ணி வைக்கிறவர்களுக்கு விரோதமானது. அவர்களைப் பன்றிகள்முன் முத்துக்களைப் போடுகிறவர்களென்று சொல்ல தடையில்லை. கிறுக்குப் பிடித்தவர்கள் சுவிசேஷத்தைக்குறித்து கேலிபண்ணவும் அவபத்தியுள்ளவர்கள் நிந்தித்துப் பழித்துப் பேசவும் இவர்கள் ஏதுகொடுக்கிறவர்கள். இந்தக் கிறுக்குப்பிடித்த அவபத்திக்காரர் சில தருணங்களில் திரும்பிக்கொண்டு மேற்படி பிரசங்கிகளைப் பீறவும் செய்வார்கள். இப்படிப் பிரசங்கிப்பது சிலசில தருணங்களிலும் இடங்களிலும் சரியாகவும் அகத்தியமானதாகவுமிருந்தும் விலையுயர்ந்த தமது சத்தியத்தை உலகத்தாருக்கு இவ்விதமாய்ப் பிரசங்கிக்க கிறிஸ்து உத்தரவாவது அதிகாரமாவது கொடுக்கவே இல்லை. ஆதலால் இப்படிப் பிரசங்கிக்கிறவர்களுக்கு நேரிடும் துன்பங்களை மார்க்கத் துன்பமென்று சொல்லவேகூடாது.

இந்த வசனத்தில் அடங்கிய எச்சரிப்பு தங்கள் கிறிஸ்தவ விவேகத்தைவிட தேவவைராக்கியத்துக்கு அதிகமாய் இடங்கொடுத்துப் பேசுகிறவர்களுக்கு, திருட்டாந்தமாக அவபத்தியுள்ளவர்கள் கலந்திருக்குங் கூட்டத்தில் வேதசம்பாஷணையை விவேகமில்லாமல் கொண்டுவந்து நுழைக்கிறவர்களுக்குச் சொல்லப்படத்தக்கது. உலகத்திலிருக்கிறவர்களெல்லாரும் மெய்க்கிறிஸ்தவர்களல்லவே. சாதாரணமான சபைகளில் எவனையாவது விசனப்படுத்தாமல் கனசிந்தைக்கடுத்த காரியங்களையெடுத்துப் பேசுவது லேசல்லவென்பது யாவருக்கும் நன்றாய்த் தெரிந்த காரியம். அப்படிப்பட்ட சபைகளில் சில தருணங்களில் கனசிந்தைக்கடுத்த காரியங்களையெடுத்துப் பேசாது விடுவது அகத்தியமாகும். மற்றுஞ் சில தருணங்களில் அப்படிப்பட்ட காரியங்களை நாம் எடுத்துப்பேசப் புகுந்தால், மெத்த எச்சரிக்கையாய்ப் பேசவேண்டும். இப்படிச்செய்வது கிறிஸ்துவின் கட்டளைக்கேற்றிருப்பதால் இந்தக் கிறிஸ்தவ விவேகத்தை யசட்டைசெய்யாமற் கையாடுவோமாக.

வேதசம்பந்தமான ஒவ்வொரு வார்த்தையும் நல்லதாயிருக்குமென்று நினைக்கக்கூடாது. வந்துகூடியிருக்கும் ஆட்களையும் காலத்தையும் இடத்தையுங் கவனித்துப் பேசுவது காரியம். பிரயோசனப்படத்தக்க விதமாய்ப் பத்திக்குரிய சம்பாஷணையை செய்யத்தான் வேணும். என்றாலும் அதைக் கேட்கும்படி யாரையாவது கட்டாயஞ்செய்வது அவசரமில்லை. எங்குமில்லாத நூதனமானதும், தனக்கில்லாததை இருப்பதுபோல பாவித்துப்பேசுவதும் மதபேதமானதுமான பேச்சுக்களை பேசாதபடி மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட பேச்சுக்களை பத்தியற்றவர்கள் கேட்கிறதினால் அவர்களுக்கு யாதொரு பிரயோசனமுமுண்டாகாமல் அதிக விசனந்தான் உண்டாகும்.

மேலே வர்ணித்துச் சொல்லப்பட்ட தன்மைக்கு எதிர்த்தன்மையுள்ள வெறுவெறுப்புள்ளவர்கள், கோழைகள், சமயங்கண்டு நடக்கிறவர்கள் ஆகிய இவர்கள் இந்த வசனம் தங்கள் தன்மைக்கொத்திருக்கிறதென்று தங்களைத் தேற்றிக்கொண்டு கிறிஸ்துவின் காரியங்களினிமித்தம் வரும் அபாயங்களுக்கு விலகப் பார்ப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் அறியவேண்டியதாவது, துன்மார்க்கரைப் பகிரங்கமாய் கடிந்துகொள்ளவேண்டிய சமயங்களுண்டு. அவபத்தியுள்ளவர்கள் கூடிய பெரிய சபையிலும் கூட ஒரு கிறிஸ்தவன் தான் தன்னைச் சுற்றியிருக்

கிற மற்றவர்களைப்போல அவபத்தியுள்ளவனல்ல, கிறிஸ்துவின் காரியத்தில் நெறியுள்ளவனென்று எல்லாருக்குமுன்பாக தெளிவாகவும் வெளியரங்கமாகவும் அசத்தியம் அறிக்கையிடவேண்டிய கடமைக்குட்படுவான். அவிசுவாசிகளுடைய கூட்டத்தில் சனசிரத்தையுள்ள வேத சத்தியங்களை கெட்டியாய் அழுத்திச்சொல்லவேண்டிய சமயங்களும் நேரிடும். பவுல் அப்போஸ்தலன் அகிரிப்பா இராசாவுக்குமுன் கைதியாகக்கொண்டு வந்துவிட்டிருந்தபோதும் கூட கிறிஸ்தவ விசுவாசத்தைக்குறித்துப் பிரசங்கித்தான். அப்படி அவர் அந்தச் சமயத்தில் பிரசங்கித்ததை பன்றிகள்முன் முத்தைப்போட்டதுக்கு சரியாக எண்ணக்கூடாது. எப்போது பேசவேண்டுமென்றும் எப்போது மௌனமாயிருக்கவேண்டுமென்றும் பவுல் நன்றாய் அறிந்திருந்தார். ஒரு பட்சத்தில் அவர் கடூரப் பிரசங்கியாயிருந்ததில்லை. மறு பட்சத்தில் அவர் மனிதபயமுள்ளவராயிருந்ததில்லை. அவர் தப்பெண்ணமற்றவராயிருந்தால், மற்றவர்களுடைய தப்பெண்ணங்களை நிர்வாகிக்கும் வகையினதென்று அறிந்திருந்தார். யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி யூதனைப்போலவும், நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படி அவர்களுக்கு நியாயப்பிரமாணமில்லாதவனைப்போலவும், பலஈனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி பலஈனருக்குப் பலஈனனைப்போலவுமானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் (1 கொரி. 9 : 50—22.) என்கிறார். இந்தத் தன்மையைக் கற்றுக்கொள்வோமாக. வேஷமான விவேகத்தினாலே நம்முடைய உற்சாக குறைவை மறைக்காமலும், மட்டுமிஞ்சின உற்சாகமாகிய பிடிவாதத்தினாலே விவேகத்தை அசட்டைசெய்யாமலுமிருப்போமாக.

---

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ௫. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

#### XXVII. நிலைபேராப் பண்டிகைகளைக்குறித்து.

இதுகள் இன்னின்ன நாளில் வருமென்று குறித்திருக்கிறது. மற்ற பண்டிகைகளோடு இந்தச் சேர்க்ககூடாது. கிறிஸ்து பிறந்த பண்டிகை முதல் எப்பிப்பானேவுவரையில் உள்ளவைகள் தவிர மற்றவைகள் ஈஸ்தர் பண்டிகையைக்கொண்டு ஒழுங்குப்படுத்தப்படுகிறவைகள். அது வருஷாவருஷம் வேறுபடுகிறபடியால் இதுகளும் ஒரு வருஷத்தில் பிந்தியும் முந்தியுமாய் வரும் நிலைபேராப் பண்டிகைகளை இதுகளோடு சேர்த்தால் குழப்பமுண்டாகுமென்று இதுவரையில் நிறுத்தி இப்பொழுது அவைகளை செபபுஸ்தகத்தில் கண்டிருக்கிற ஒழுங்காய் விசாரிப்போமாக.



இரண்டாவது. இந்த நாட்கள் முக்கியமாய் அப்போஸ்தலன்மாருக்கும் முந்தின இரத்தசாக்ஷிகளுக்கும் உரியது. இதுகளைக்குறித்து முன் பேசியிருக்கிறோம். ஆதலால் விபரம் சொல்லவேண்டியதில்லை.

#### XXVIII. அந்திரேயாவின் நாள்முதல் வைக்கப்பட்டிருக்கிறது.

அவன் தான் மேசியாவை முதல் கண்டது. யோ. 1: 38. மற்றவர்களை மேசியாவுக்கு இவன் தான் முதல் கொண்டுவந்தவன். 42. இதற்காக இவனுக்குரிய நாளை அட்வெந்தின் துவக்கத்தில் வைத்திருக்கிறது. இரக்ஷகருடைய வருகைக்குரிய செய்கையை முந்திச் சொல்ல இவைகள் மிகவும் ஏற்றது.

இரண்டாவது. தோமாசுடைய நாள் இரண்டாவதாக வருகிறது. இவன் ஏசுவை மேசியாவென்று இரண்டாவது விசுவாசித்தவனல்ல. அவர் உயிர்த்தெழுந்தாரென்று கடைசியாய் விசுவாசித்தவன். அதைப்பற்றி அவன் முந்திச் சந்தேகித்தபோதிலும் அதற்குரிய அத்தாட்சியைப் பெற்றான். இரக்ஷகருடைய பிறப்புக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படிக்கு இக்காலத்தில் இதைப்பற்றி சிந்திக்க நாம் ஏவப்படுகிறோம். பிறந்தாரென்று நாம் கொண்டாடுகிற இயேசு தோமா சொன்னது போல, கர்த்தரும் தேவனும் என்று நாம் அறியாவிட்டால், அவர் பிறந்ததும் மரித்ததும் உயிர்த்தெழுந்ததும் நமக்கு ஒன்றுக்கும் உதவாது.

மூன்றாவது. மற்ற அப்போஸ்தலன்மார் மரித்து இரத்தச்சாக்ஷியானதைக்குறித்து சிந்திக்கிற நாம் பவுல் அப்போஸ்தலன் மனந்திரும்பினதைக்குறித்து வாசிக்கிறோம். இது ஆச்சரியமானதும் சபைக்கு அதிக நன்மையை வருவித்ததுமான காரியம். மற்ற அப்போஸ்தலன்மார் இந்த அந்த சபையைக்குறித்து கவலைப்பட்டபோது எல்லாச் சபைகளையும் பற்றிய கவலை இவன் மேலிருந்தது. உலகமெங்கும் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு இவன் அதிகமாய் உழைத்தவன்.

நாலாவது. மற்ற சபைகளில் கன்னிமரியாளுக்குரிய நாட்கள் நாலு. பிறப்பு, அறிவிப்பு, சுத்திகரிப்பு, எடுத்துக்கொள்ளப்பட்டது. நடுவே இருக்கிற இரண்டை மாத்திரம் நம்முடைய சபை ஆசரிக்கிறது. அவ்விரண்டையும் அவ்வளவாய் கன்னிமரியாளுக்கு அடுத்ததாயல்ல, நம்முடைய இரக்ஷகரை அடுத்ததாய்த் தான். அறிவிப்பு அவருடைய மனித அவதாரத்தைப் பற்றினது. பிதாவின் நித்திய வார்த்தையானவர் இக்காலத்தில் மாம்சமானார். சுத்திகரிப்பு தேவாலயத்தில் அவர் கொண்டுவரப்பட்டதை ஞாபகப்படுத்துகிறது. இச்சமயத்தில் விருத்தாப்பியனான சிமேயோன் அவரைப் புறத்தேசத்தாருக்கு பிரகாசிக்கிற ஒளியென்று அழைத்தபடியால் கோவிலில் அநேக விளக்குகளை வைத்து இதை ஞாபகப்படுத்திக்கொள்ளுவார்களாம். சிமேயோன் சொன்னதை சுவிசேஷ வாக்கியமாகவும் வாசிப்பார்கள். இதனால் அந்த நாளுக்கு விளக்குத் திருநாளென்கிற பெயரும் வந்தது. 6 ம் எட்வார்டின் இரண்டாம் வருஷம்வரையில் இங்கிலாந்திலும் இப்படி ஆசரித்து வந்தார்கள். கிரான்மர் இந்த வழக்கத்தை நிறுத்திப்போட்டார்.

ஐந்தாவது. பரி. மத்தியாவின் நாள். இதை சிலர் பெப்ருவரி 24 ம் தெய்தியிலும் நாலு வருஷத்துக்கொரு விசை 25 ம் தெய்தியிலும் ஆசரித்துவருவார்கள். இப்பொழுது எந்த வருஷத்திலும் 24 ம் தெய்தியிலேயே அதை ஆசரிப்பார்கள்.

ஆறாவது. பிலிப்பு, இயாக்கோபு என்பவர்கள் நாள். கடைசியாக செபபுஸ்தகம் திருத்தப்பட்டதுவரையில் இந்நாளில் அப்போஸ்தலர் 8 ம் அதிகாரத்தை காலை இரண்டாம் பாடமாக வாசித்து வந்தார்கள்.

அதில் உதவிக்காரனாகிய பிலிப்புவைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இப்பொழுதோ பிலிப்பு அப்போஸ்தலனையும் சின்ன இயாக்கோபையும் ஞாபகப்படுத்திக்கொள்ளும்படிக்கு யோவான் சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தின் ஒரு பங்கை வாசிக்கிறோம். இந்த இயாக்கோபு கர்த்தருடைய சகோதரன் என்று அழைக்கப்படுகிறான். எருசலேமின் முதல் கண்காணியார் தன் பெயர்கொண்ட நிருபத்தை யெழுதினவர். இந்த நாளுக்கு நிருபவாக்கியம் இந்த நிருபத்திலிருந்தெடுக்கப்பட்டது. செபதேயுவின் மகனாகிய மற்ற இயாக்கோபு வயதின் நிமித்தமோ வளர்த்தியின் நிமித்தமோ பெரிய இயாக்கோபென்று அழைக்கப்பட்டான். அவனுக்குரிய நாள் ஜூலைமாசத்தில் வருகிறது.

ஏழாவது. யோவானஸ்நானனுடைய நாளில் அவனுடைய பிறப்பை விசேஷித்து சிந்திக்கிறோம். இதில் அநேகம் ஆச்சரியமான சங்கதிகளும் உண்டு. மேசியாவை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இவன் பிறப்பு காரணமாயிருந்தது. ஆகஸ்து மாசம் 29 ம் தெய்தியில் அவன் சிரச்சேதம்பண்ணப்பட்டதை நினைப்பதன்றி. இப்பொழுது அவன் பிறப்பையும் மரணத்தையும் ஒரேநாளில் சிந்திக்கிறார்கள். அவன் பிறப்பைக் குறித்து தியானித்து அவனுடைய சரித்திரம், மரணம் முதலியவைகளைப் பற்றின சுவிசேஷ பங்குகளை இந்தநாளில் வாசிக்கிறோம்.

எட்டாவது. பர்த்தலோமேயு நாளில் லூக். 22: 24—31 வரை. சுவிசேஷ வாக்கியம். இந்த சரித்திரம் மத்தேயு சுவிசேஷத்தில் வருகிற பங்கை இயாக்கோபின் நாளிலும் வாசிக்கிறோம். அந்த நாளுக்குத்தான் இது மிகவும் ஏற்றது. செபதேயுவின் மக்கள் கேட்ட மனு இதிலே அடங்கியிருக்கிறது. இயாக்கோபு அவர்களில் ஒருவன். பருத்தலோமேயு நாளுக்கேற்ற சுவிசேஷ வாக்கியம். யோவான் 1: 43—கடைசிவரை. இதில் நாத்தானுவேல் இரக்ஷகரண்டை வந்ததைக்குறித்து வாசிக்கிறோம். இவன்தான் பருத்தலோமேயு என்பது சாதாரண அபிப்பிராயம். பருத்தலோமேயு உயர்ந்த அந்தஸ்தில் பிறந்தவனென்றும் அதினால் தான் அந்த போராட்டம் சீஷருக்குள்ளிருந்ததென்றும் எண்ணினபடியால், லூக்காவிலுள்ள பங்கை ஏற்படுத்தினார்கள். மத்தேயு, மாற்கு என்பவர்கள் இந்த சச்சரவைப்பற்றியே எழுதியிருப்பார்களானால் அதற்கு முகாந்தரம் வேறெ உண்டென்று காணலாம்.

ஒன்பதாவது. தேவதூதர்களுடைய பணிவிடைகளால் சபைக்குண்டாகும் நன்மைகளை நினைத்து அவர்களுக்கென்று நன்றியறிதலாக ஒரு நாளைக் குறித்திருக்கிறது. மிகவேல் தூதன் அதிக வல்லமையும் மகத்துவமுமானவரானபடியாலும் சபையை வெகு விழிப்பாய்ப் பார்த்து வருகிறபடியினாலும், தானி. 10: 13. பிசாசை ஜெயித்தபடியினாலும், யூத. 9. வெளி. 12: 7 லும் இந்தப் பேர் இந்த நாளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பத்தாவது. சகல பரிசுத்தவான்களின் நாள் அதிக பூர்வீகமானதல்ல. 610 ம் வருஷத்தில் போர்க்காஸ் என்கிற இராயன் சகல தேவதைகளையும் வணங்கிவந்த உரோமருடைய அஞ்ஞான கோவிலை அவர்களிடத்திலிருந்து பிடுங்கி சகல இரத்தசாக்ஷிகளுடைய பெயருக்கு அதைப் பிரதிஷ்டைப்படுத்தினான். சகல பரிசுத்தவான்கள் என்கிற பெயர் இதினின்று தான் வந்தது. இது முதலில் மெய்மாசம் முதலாம் தெய்தியில் வந்தது. 834 ம் வருஷமுதல் நவம்பர்மீ 1 ம் தெய்தியில் வருகிறது. மார்க்கத்தைச் சீர்திருத்தினவர்கள் அநேக இரத்தசாக்ஷிகளுடைய நாட்களைத் தள்ளினபோது அவர்களெல்லாருக்காகவும் தேவனைத் தோத்தரிக்கும்படிக்கு இந்த நாளை மாத்திரம் வைத்துக்கொண்டார்கள்.



பதினோராவது. இந்த நாட்களுக்குரிய பாடங்களும் சுருக்கசெபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் அந்தந்த சங்கதிக்கு ஏற்றது. அந்தந்தக் காலத்துக்கு உபயோகமானது பரிசுத்தமான நடத்தைக்கு நம்மை எழுப்பிவிடத்தக்கது. பரிசுத்தவான்களுடைய மாதிரியை அடிக்கடி முன்வைத்து அவர்களைப் பின்பற்ற நம்மை ஏவிவிடுகிறது. இதுகளெல்லாம் முக்கியமாய் பழைய செபபுஸ்தகத்திலிருந்தெடுக்கப்பட்டது. சிலது மார்க்கம் சீர்திருத்தம் உண்டானபோது திருத்தப்பட்டது.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### ௭. அதிகாரம்.

நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.

பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

VII. நாம் இந்தப் பந்தியைச் சேரும்போது நாம் விரும்புகிறதெல்லாங் கிடைக்குமென்ற நம்பிக்கையோடே சேரவேணும். ஆண்டவர் விருதாவாக நம்மை இந்தப் பந்திக்கழையார். நாம் பசியோடுந் தாகத்தோடும் இந்தப் பந்தியைச் சேரும்போது நாம் அரைகுறையாய்த் திரும்பாமல் நம்முடைய ஆத்துமா திர்ப்திகரமாய்த் திரும்புமென்பதற்குச் சந்தேகமில்லை. ஜீவதண்ணீராகிய வற்றாத நீரூற்று அவரிடத்திலுண்டு. அதினண்டை போகிறவர்களெல்லாரும் திர்ப்திகரமாய்த் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு வரலாம். எத்தனை ஆயிரம் பேர் அவரண்டை போனபோதிலும் அவர்களுக்கெல்லாம் போதுமானது தான். எப்பேர்ப்பட்ட குறைவுள்ளவனும் போய்த் திர்ப்திகரப்பட்டவனாய்த் திரும்பலாம். என்னைப்போல அபாத்திரனும் போய்த் தேவையானதைப் பெற்றுக்கொண்டு வரலாம். ஆகையால் என் ஆத்துமாவே, கர்த்தருடைய பந்தியில் நீ தேடுகிறதென்ன? இந்த விருந்துக்கு எசமான் உன் தேவன் தானே. அவர் நீ கேட்கிறதற்கும், நினைக்கிறதற்கும் அதிகங் கொடுக்க வல்லவராயிருக்கிறார். அவர் கொடுக்கும்போது அரைகுறையாய்க் கொடாமல் அவர் எப்படிப் பூரணமுள்ளவராயிருக்கிறாரோ தம்மண்டை வருகிறவர்களுக்கும் பரிபூரணமாய் அளிக்கிறார். நன்றிகெட்ட நிர்ப்பந்த பாவியாகிய எனக்கு என்ன கிடைக்கப்போகிறதென்றெண்ணாமல் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரும் அவை இரண்டிலுமுள்ள சகல பொக்கிஷங்களையுடையவருமாயிருக்கிறவருமாகிய ஆண்டவர் நான் பாவியென்றும் பாராமல் என்னை இந்த விருந்துக்கழைப்பதால் என்னை வெறுமையாய் அனுப்பார். கிறிஸ்துஇயேசுவின் இரத்தத்தாற் கொள்ளப்பட்ட அளவற்ற ஐசுவரியத்

தில் எனக்குப் பங்கு உண்டு என்ற உயிருள்ள விசுவாசத்தோடே இந்தப் பந்தியைச் சேரவேணும். கிறிஸ்துவும் அவரால் சம்பாதிக்கப்பட்ட புண்ணிய பலன்களுமே இந்த விருந்தில் நாம் அருந்துகிற போசனங்களாம். நம்முடைய சகல நிற்பந்தங்களையும் நீக்கி நமக்குப் பூரண சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டியவைகளெல்லாம் அவரிலுண்டு. இன்னும் அதிக மகிமையான காரியங்களெல்லாம் சகல சம்பூரணமும் வாசம்பண்ணும் அவரிலிருந்து வரும். நம்முடைய நம்பிக்கை மாத்திரம் சரியான ஆதாரத்தின் பேரிலே கட்டப்பட்டதாயிருக்கவேணும். நம்முடைய சுயபுண்ணியத்தின் பேரிலே எள்ளளவேனும் நம்பிக்கை வையாமல் தேவனுடைய இரக்கத்தின் மேலும் கிறிஸ்துவினுடைய மத்தியஸ்தத்தின்பேரிலும் நம்பிக்கை வைப்பதே அந்த ஆதாரமாம். அப்படியானால் தான் புதிய உடன்படிக்கை எவ்வளவு விஸ்தீரணமுள்ளதோ அவ்வளவு விஸ்தீரணமாய் நம்முடைய நம்பிக்கை யதின்பேரில் கட்டப்படலாம். அது எவ்வளவுக்கு வானத்தையளாவிய உயரமுள்ளதாயிருக்கிறதோ அவ்வளவு உயரத்தில் நம்முடைய நம்பிக்கை அதிற் கட்டப்படலாம். இந்த விருந்திலடங்கிய ஞான போசனங்கள் ஜென்மச்சுவாபியின் கண்ணுக்கு ஐயாயிரம் பேருக்குள்ளே பங்கிட்ட ஐந்து அப்பத்தைப்போல அற்பமாய்க் காணப்பட்டாலும் இயேசு அதைப் பங்கிடும்போது எல்லாரும் திர்ப்திகரமுண்டாகத்தக்கதாகப் புசிக்கவும் மீதிவைக்கவும் ஏதுகரமானதாகும். இந்த விருந்தில் தான் நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் எண்ணெய் பெருகும். அந்த கைம்பெண்ணானவள் அதை ஊற்றஊற்றப் பெருகிக்கொண்டிருந்ததுபோல இது பெருகிக்கொண்டிருக்கும். என் ஆத்துமாவே, அவள் செய்ததுபோல நீயுஞ் செய்யப்பார். வெறும் பாத்திரங்களைக் கொண்டு வந்து நிரப்பிக்கொண்டு போ. எனக்கதிகமாய்க் கிடைக்குமென்ற விசுவாசமாத்திரம் உனக்கிருக்கவேணும். அப்படியானால் நீ எத்தனை பாத்திரங்களைக்கொண்டு வந்தாலும அதுகளெல்லாம் நிரப்பப்படும். அதினால் உன் கடன்களெல்லாந் தீர்ந்து உனக்கும் உன் அடுத்தவர்களுக்கும் உரிய குறைவுகளெல்லாம் நீக்கத்தக்கதாயிருக்கும். நாம் உலகத்தில் அதிக நன்மைபெறும்படியாய் விரும்புகிறதே நம்மிடத்திலுள்ள குறைவு. கடைசியாய் அது வீணும் மனதை யரிக்கிறதுமாய் முடியும். அப்படிக்கில்லாமல் தேவனிடத்திலிருந்து அதிகமான நன்மையைப் பெறும்படியாய்ப் பிரயாசப்படு. உன் விசுவாசத்தின்படியே உனக்காகும்.

இஸ்ரவேலின் இராஜன் ஐந்தாறுதரம் எய்கிறதற்குப் பதிலாக மூன்றுதரம் மாத்திரம் எய்ததினால் சூரிய இராஜனை முற்றிலுங் கீழ்ப்படுத்த ஏதுகரமற்றவனாய்ப் போனான். நம்முடைய காரியமும அப்படித்தானிருக்கிறது. நாம் விரும்புகிறவைகளையுங் கேட்கிறவைகளையும் தேவன் கொடுப்பாராவென்ற அவிசுவாசமிருக்கிறபடியினாலே தான் நமக்குத் தேவையானவைகளெல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர்களுடைய அவிசுவாசத்துக்காக கிறிஸ்துவானவர் அவர்களுக்குள்ளே அநேக அற்புதங்களைச் செய்யவில்லையென்று நசரேயனைகுறித்துச் சொல்லியிருக்கிறது.

VIII. நாம் சந்தோஷத்தோடும் நன்றியறிதலோடும் இந்த விருந்துக்கு வரவேணும். இது இரண்டும் ஒன்றுகூடியிருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்க காரியம் எதுவோ அது நன்றியறிதலைக் கொடுக்கத்தக்கதாயுமிருக்கிறது.



## The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XII-வது. இராசகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

(தொடர்ச்சி.)

பின்பு அவன் தன் ஊழியக்காரரை நோக்கி கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். அப். 13: 46. அழைப்பை அசட்டைபண்ணினதினால் அவர்கள் அபாத்திரரானார்கள். விருந்தில் இடம்பெற்றவர்களோ முந்தின நிலைமையின்படி இராசாவோடு விருந்து சாப்பிடுகிற கன்யத்துக்கு அபாத்திரராயிருந்தாலும் அழைப்பை ஏற்றுக்கொண்டபடியால் பாத்திரரானார்கள். ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளிலே போய் காணப்படுகிற யாவரையும் கலியாணத்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். யூதர்கள் வெறுத்த உபதேசம் இங்கே தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் காண்பித்த கீழ்ப்படியாமையினால் புறச்சாதியார் அழைக்கப்பட ஏதுவாயிற்று. அப். 22: 21, 22. நல்ல ஒலிவமரத்தின் சரியான கொப்புகள் ஒடிக்கப்பட்டதினால், காட்டொலிவமரத்தின் கொப்புகள் ஒட்டப்பட இடமுண்டாயிற்று. ரோமர் 11 அதி. இரட்சகர் விருந்தாடிகள் தள்ளப்பட்டார்கள் என்பதில் விளக்குவிக்கிற உபதேசத்தை பவுல் அப்போஸ்தலன் இந்த உவமையினால் தெளிவாய்க் காட்டுகிறான். இந்த விருந்தாடிகள் தான் கலியாணத்துக்குச் சரியானபடி உரியவர்கள். அதற்கு அழைக்கப்பட்டவர்கள். இவர்களுக்குப் பதிலாகத் தான் வழிச்சந்தியிலுள்ள மற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மத். 8: 10—12 வரையிலுள்ள வாக்கியங்களுக்கு இந்த உவமை நல்ல வியாக்கியானம்.

இராசன் இப்படிச் சொன்னதின்மேல் ஊழியக்காரர் புறப்பட்டு வழிகளிலே போய் தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையுங் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இந்தக் கற்பனையை நிறைவேற்றத்தான் பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்தைக்குறித்துப் பிரசங்கித்தான். அப். 8: 5. பேதுரு கொர்நேலியுவுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் ஞானஸ்நானங்கொடுத்தான். எங்குமுள்ள யாவருங் குணப்படவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டதாக பவுல் அத்தேனருக்கு அறிவித்தான். நல்லார் பொல்லாரென்று சொல்லியிருக்கிறது. இது உள்ளான குணங்களைக் காட்டுகிறது. விருந்தாடிகளுடைய கெட்டதும் நல்லதுமான குணங்களைச் சொல்லுகிறது சரியல்ல. இதினால் கலியாண வஸ்திரந் தரியாத ஒருவனைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை நாம் விளக்கிக்கொள்ளவேண்டியதில்லை. அந்தச் சங்கதி வருமென்று நாம் எதிர்பார்க்கவும் அதற்கு முகாந்தரஞ் சொல்லவும், விருந்தாடிகளுடைய குணகுணங்கள் இங்கே சொல்லப்படவில்லை. இங்கே பொல்லாதவர்களெனகிறது பின்னாலே கலியாண வஸ்திரந் தரித்திராதவர்களென்றர்த்தங்கொள்ளும். அழைக்கப்பட்டபொழுது அநேகர் பொல்லாதவர்கள் அழைப்

தார்கள். அழுக்காயிருந்தவளை அழகுள்ளவளாக்கும்படி சிநேகித்தாரென்று கிறிஸ்து சபைக்குக் காட்டின அன்பைச்குறித்து அகுஸ்தின் நன்றாய்ச் சொன்னார். நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்கிற வித்தியாசத்தை நாம் இங்கே அதிசமாய்க் கவனிக்கவேண்டியதில்லை. சரியானபடி சொல்லவேண்டுமானால், கிறிஸ்துவின் சரீரத்தோடு ஐக்கியப்பட்டு அவருடைய ஆவியைப் பெறாமலாயில் ஒருவரும் நல்லவர்களல்ல. சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குள்ளும் சிலர் அதிக சன்மார்க்கரும் சிலர் குறைவான சன்மார்க்கரும் உண்டு. நல்லவர்கள் கொருநேலியுவைப் போலொத்தவர்கள், தங்களுக்குத் தானே நியாயப்பிரமாணமாயிருந்த புறச்சாதியார். ரோமர் 2: 14. லூக்கா 5: 15. சிற்கருத்தகூடாதபடிக்கு அக்கிரமத்தில் அமிழ்ந்தியிருப்பவர்கள் பொல்லாதவர்கள். அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதும்போது மிகவுங் கெட்ட சில துன்மார்க்கரைக்குறித்துப் பேசினபிறகு உங்களிலுஞ் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்களென்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய இழுப்பு வலையானது நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதியைச் சன்மார்க்கத்தினால் தேடுகிறவர்களை மாத்திரமல்ல, அக்கிரமத்திலும் பாவத்திலுஞ் செத்தவர்களையும் இழுத்துக்கொள்ளுகிறது. இருவகுப்பிலுள்ளவர்களும் அதின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். கலியாணசாலை விருந்தாடிகளால் நிறைந்தது.

லூக்கா 14: 16 லுள்ள உவமையின் கடைசி பங்கு இந்த உவமையின் முதற் பங்கு. நியாயவிசாரணை பின்னால் வருகிறது. மனிதருடைய அக்கிரமத்தைக்குறித்தும் தேவநீதியைக்குறித்தும் உவமையில் தீர்க்கதரிசனமாக இதுவரையிற் சொல்லப்பட்ட குறிப்புகள் பிரதான ஆசாரியர்களுக்கும் பரிசேயருக்கும் சொல்லப்பட்டது. இராட்சிப்பின் சுவிசேஷ சங்கதியைக் கேட்க யூதசாதியார் சம்மதிப்படாமல் அதை வெறுத்துத் தள்ளினார்கள். இப்பொழுது சொல்லப்போகிறதோ சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது. வந்தவர்களுக்கும் வரமாட்டோமென்றவர்களுக்கும் வித்தியாசமிருக்கிறதுபோல வந்தவர்களுக்குள்ளே அழைப்புக்குப் பாத்திரமாய் நடந்தவர்களின்னார் நடவாதவர்களின்னாரென்று விசாரணை நடக்கும். இதற்குத்தக்கதாகத் தான் பிரிவினையுண்டாகும். வெளியரங்கமான சத்துருவுக்கு ஆக்கினை கிடைத்ததைப் பார்த்தோம். கள்ளச் சிநேகிதருக்கு வரும் ஆக்கினையை இனிப் பார்ப்போம். விருந்தாடிகளை பரம விருந்தில் ஒன்றாய்ச் சேர்ப்பது தான் ஊழியக்காரருடைய அலுவல் பாத்திரவான்களையும் பாத்திரமில்லாதவர்களையும் பிரிக்கிறது. களைகளின் உவமையில் காட்டியிருக்கிறதுபோல இந்த உவமையிலும் அவர்களுடைய அலுவலல்ல. எப்படி அவர்கள் இதைச் செய்வார்கள். இவர்களிலிருந்து அவர்களை வித்தியாசப்படுத்துகிறது வஸ்திரம். அது சரீரத்தையல்ல, இருதயத்தை மூடுகிறது. இருதயத்தை ஆராய்கிறவர் கர்த்தர் தான்.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—அங்கிலேய தேசத்தின் வருமானம் முந்திய வருஷ வருமானத்திற்குக் கொஞ்சங்குறைய இரண்டு கோடி ரூபாய் அதி



கம். அது மிகவும் திர்ப்திகரமான காரியமென்று பத்திராதிபரொருவர் வெளியிடுகிறார். ஸ்பானியதேசத்தில் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட பிரஜாதிபத்தியம் தாழ்ச்சியடைந்திருப்பதினால் விபக்ஷத்தார் அங்கங்கே ஜெயம்பெறுகிறார்கள். பிரான்சிய தேச எல்லைகள் பிரான்சிய சேனைகளால் பந்தோபஸ்துச் செய்யப்பட்டிருக்கின்றன. கலகக்காரர் சில இடங்களில் தேவாலயங்களையுங் கொள்ளையாடினார்கள்.

பிரான்சிய ஜர்மானிய யுத்தம் நடந்தபொழுது, பிரான்சிய சேனைத் தலைவராகிய மார்ஷல்பஸேன் என்பவர் சில காரியங்களில் துரோகஞ் செய்தாரென்று பிரான்சிய துரைத்தனத்தார் அவர்மேற் குற்றம்பாரித்து விசாரணைக்கு ஒப்புவித்திருக்கிறார்கள்.

கைவாப்பிரதேசத்தார் மேல் படையெடுக்கப்போகிற ருஷியப் படைவகுப்புகளிலொன்று சென்ற மார்ச்சுமீ 16உ மத்திய ஆசியாவைச் சேர்ந்த கஸ்லிங்ஸ் என்னும் பாளயத்திலிருந்து புறப்பட்டுப்போயிற்று. ருஷியர் அந்தேசத்தைக் கட்டிக்கொள்ள சம்பவித்தால், விடப்படாதென்று ருஷிய பத்திராதிபர் வற்புறுத்துகிறார்கள். ஐரோப்பாவின் மற்ற இராச்சியத்தாரோ, அங்கிலேயர் அபிஸினியாவிற் பிரவேசித்து அங்கே நடந்த துரோகத்திற்குப் பழிவாங்கித் திரும்பியதுபோல, ருஷியரும் செய்யவேண்டுமென்கிறார்கள். எப்படி முடியுமென்று காலந் தெரிவிக்கும். கைவாப்பிரதேச அதிபதி ருஷியர் தன் மேல் படையெடுத்த செய்தி கேட்டு பயந்து, தான் சிறையில் வைத்திருக்கிற ருஷிய பிரஜைகளை ருஷியனாத் தன் எல்லையில் கண்டவுடன் விடுதலைசெய்ய நினைத்திருக்கிறானும்.

ஆப்பிரிக்க சிறையியாபாரத்தைத் தடுக்கப் பிரயத்தனிதுப்போன ஸ்ரீ பார்ட்ஸ்ல்பிரேயர் துரை திரும்பி பம்பாயில் வந்திறங்கியிருக்கிறார். அவர் போன காரியம் சித்திபெறவில்லை. ஜன்ஜிபார்சுல்தான் மகாராணியவர்கள் அனுப்பிய சிறைத்தனச் சட்டத்திற்குக் கையெழுத்து வைக்கமாட்டேனென்று மறுத்துவிட்டான். சிறையியாபாரம் நெடுநாள் ஜன்ஜிபாரில் நடந்துவந்ததென்றும், அதில் தர்மத்திற்கு விரோதமாக ஒன்றும் இல்லையென்றும் சொல்லிவிட்டான். இனி இது விஷயத்தைப்பற்றி இன்னது நடக்குமென்று இப்போது சொல்ல இடமில்லை.

ரோமா சபைத்தலைவராகிய பாப்பானவர் மிகவருத்தமாயிருந்து இப்போது லகுவடைந்திருக்கிறார். வியன்ன ராஜதானியில் நடக்கும் பொருட்காட்சியைப் பார்க்க பாரசீக அரசன் தமது ராஜதானியை விட்டுப் புறப்பட்டுப்போனார்.

**இந்தியா.**—இத்தேச பிரஜைகளுக்கு திர்ப்தியில்லாத வருமான வரி ஏற்பாடு ஒழிந்துபோயிற்று. பிரதேசநிதி யேற்பாடு அங்கங்கே சித்திபெறுகிறது. இவ்வேற்பாட்டினால் சேகரமாகும் பொருளைக்கொண்டு தெருக்களையும் பள்ளிக்கூடங்களையும் போலீஸையும் ஆதரிப்பார்கள்.

**சர்ச்சுமிஷியன் சங்கம்.** பாளயங்கோட்டை இங்கிலீஷ் கல்விச்சாலையையும் நல்லூர், சிவகாசி இச்சேகரங்களையும் விசாரித்துவந்த கனம்பொருந்திய தோ. ஸ்பிராட்டையரவர்கள் சுகவீனத்தினிமித்தம் சீமைக்குப்போய் வரும்படி சென்ற மீ 12உ பாளயங்கோட்டையை விட்டு தூற்றுக்குடிக்கு பிரயாணமானார்கள். மெஞ்ஞானபுரம் சேகரத்தை விசாரித்துவந்த கனம்: டேவிஸ் தோமாஸ் ஐயரவர்களும் சீமைக்குப்போய் வரும்படி சென்ற மீ 11உயில் மெஞ்ஞானபுரத்தை விட்டார்கள்.

---

## மேமீ நாள் 31. சித்திரைமீ 20உமுதல், வைகாசிமீ 20உவரை.

| வாரம் | [illegible] | [illegible] | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | உ0 | கர்த்தர் எனக்கு இரட்சிப்பானவர். யாத். 15:2. |
| வெ | 2 | உக | அவரே என் தகப்பனுடைய தேவன். 2. |
| ச | 3 | உஉ | தேவர்களில் உமக்கொப்பானவர் யார்? 11. |
| ஞா | 4 | உங | கர்த்தர் என்றென்றைக்கும் இராசரிகம்பண்ணுவார். 18. |
| தி | 5 | உச | கர்த்தர் அவனுக்குச் செவிகொடுத்தார். 2 இராசா 13:4. |
| செ | 6 | உரு | அது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பு. 17. |
| பு | 7 | உசு | அந்நிய தேவர்களுக்குப் பயந்து நடந்தார்கள். 17:7. (11. |
| வி | 8 | உஎ | கர்த்தருக்குக் கோபமுண்டாகத் துர்க்கிரியைகளைச் செய்தார்கள். |
| வெ | 9 | உஅ | இஸ்ரவேலின் மேய்ப்பரே செவிகொடும். சங்கீதம் 80:1. |
| ச | 10 | உகூ | தேவனே எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும். 3. |
| ஞா | 11 | ங0 | உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம். 18. |
| தி | 12 | க | நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய். 7. |
| செ | 13 | உ | நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும். 8. |
| பு | 14 | ங | உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன். 10. |
| வி | 15 | ச | அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன். 12. |
| வெ | 16 | ரு | என் ஆவியை உங்களுக்கு அருளுவேன். நீதிமொழி 1:23. |
| ச | 17 | சு | என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். 25. |
| ஞா | 18 | எ | உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைப்பேன். 26. (29. |
| தி | 19 | அ | கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற் போனார்கள். |
| செ | 20 | கூ | என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை. 30. |
| பு | 21 | க0 | உன் சமாதானம் நதியைப்போலிருக்கும். ஏசா. 48.18. |
| வி | 22 | கக | துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை. 22. |
| வெ | 23 | கஉ | நான் உன்னில் மகிமைப்படுவேன். 49:3. |
| ச | 24 | கங | என் பலன் என் தேவனிடத்திலிருக்கிறது. 4. |
| ஞா | 25 | கச | இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு. ஓசியா 12:6. |
| தி | 26 | கரு | என்னையன்றி இரட்சகர் ஒருவருமில்லை. 13:4. |
| செ | 27 | கசு | திருப்தியானபின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று. 6. |
| பு | 28 | கஎ | ஒருவனும் கிரியைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. யோ. |
| வி | 29 | கஅ | மாம்சசிந்தை மரணம். உரோமர் 8:6. (9:4. |
| வெ | 30 | ககூ | ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். 6. |
| ச | 31 | உ0 | கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. 9. |

## விசேஷித்த நாட்கள்.

4. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு.
11. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு.
12. பௌரணமி.
18. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு.
22. கிறிஸ்து பரத்துக்கேறின பண்டிகை நாள்.
25. பரத்துக்கேறின பண்டிகைக்குப் பின்வரும் ஞாயிறு.
26. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 25.** **June.** **No. 6.**

**Contents:**


Biography of the Right Rev. T. F. Middleton, D. D. ... 102
Christian Church History. ... ... ... ... ... 104
Communicant's Companion. ... ... ... ... 107
The Parables of Christ... ... ... ... ... ... 109
Notes on Genesis. ... ... ... ... ... ... 113
Summary of Notes. ... ... ... ... ... ... 118


அட்டவணை:


மிடில்ற்றன் வேதசாஸ்திரியாருடைய சீவியவிருத்தாந்தம். ... ... ... ... ... ... ... க0உ
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... க0ச
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... க0எ
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... க0கூ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ககங
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ககஅ



**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS.**
BY L. DEVANAYAGAM PILLAY.

**1873.**

# நற்போதகம்.

௬. சூன்மீ. ௲௮௱௭௰ ௵

## Biography of the Right Rev. T. F. Middleton, D. D.

*FIRST BISHOP OF CALCUTTA.*

## கல்கத்தாவின் பிரதம அத்தியட்சராகிய மிடில்ற்றன்

வேதசாஸ்திரியாருடைய ஜீவிய விர்த்தாந்தம

(தொடர்ச்சி.)

அத்தியக்ஷர் 1822. ஜூலை 8உ இம்மையின் ஓட்டத்தை முடித்தார். அவருக்கு மரணம் எதிர்பார்த்திராதவிதமாயும் சடுதியிலும் நேரிட்டது. முந்தின செவ்வாய்க்கிழமையில் வழக்கப்படி நற்சுகமுள்ளவராய்க் காணப்பட்டு கலாசாலையையும் பார்க்கப்போனார். மறுநாள் புதன் கிழமையில் சூரியன் அஸ்தமிக்க ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக தமது பத்தினியோடு உலாவிவரும்படி சவாரிபோனார். வீட்டுக்கு அரைமைல் தூரத்தில் ஒரு முடங்கு திரும்பும்போது சூரியன் அத்தியக்ஷர்பேரில் பூரணமாய்ப் பிரகாசித்தது. உடனே அவர் சூரிய இடிபட்டதுபோல நினைத்து அதினால் தாம் வருத்தப்படவேண்டியதிருக்கும் என்பதாய்ச் சொன்னார். இரதம் வீடுவந்து சேர்வதற்குள்ளாக அகோரமான தலைநோய் கண்டது. அத்தியக்ஷர் பலமான அவிழ்தங்களைப் பிரயோகித்தும் வைத்தியரை வரவழைக்கவேண்டாமென்று கற்பித்து, அமரிக்கையில்லாதவராகக் காணப்பட்டார். அவர் படுக்கைக்குப் போகும்போது சொன்னது, இதற்குமுன் ஒருக்காலும் எனக்கிப்படியில்லை, இது எப்படி முடியுமோ கர்த்தருக்குத் தான் தெரியுமென்றார். மரணத்தைப்பற்றி அவர் பேசினதெல்லாம் அவ்வளவுதான். சுகவீனமாயிருக்கிற காலத்தில் இது அவருடைய வழக்கத்துக்கு முழுவதும் விபரீதம். அன்றிரவிலே தாம் கையிட்டுக்கொண்ட வேலையை முடிப்பதற்கு இரவும் பகலும் வேலைசெய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு படுக்கையைவிட்டு எழுந்திருக்க விரும்பினார். மறுநாள் அவர் எட்டுமணிநேரம் மேசையிலுட்கார்ந்திருந்து, துரைத்தனத்தார் அனுப்பியிருந்த சில கடுதாசிகளுக்கு பதிலெழுதினார். இரவில் வைத்தியனை வரவழைக்கச் சம்மதித்தும் வேறொருவரும் தம்மை வந்து பார்க்க இடங்கொடுக்கவில்லை. அதுமுதல் எவ்வளவேனும் அமைச்சலில்லாமல், தாம் செய்யவேண்டிய வேலை மிகுதியாயிருக்கிறதாக எண்ணி கிலேசமுற்றிருக்கிறவர்போல் கடைசிவரையும் காணப்பட்டார். திங்கள் சாயந்தரத்தில் அவர் சற்று சுகப்பட்டு வருகிறாரென்று வைத்தியர் நிச்சயித்து தமது வீட்டுக்குப்போக, உடம்பு நடுக்கங்கொண்டவராக உலாவிக்கொண்டு நின்றார். அப்புறம் படுத்துக்கொள்ள நேரிட்டதின்பேரில், ஜீவன் தேகத்தைவிட்டுப் பிரியப்போகிறதுபோல தோற்றி நாவும் விழு



ந்துபோயிற்று. உடனே ஆர்ச்சு டீக்கன் போதகரும் அத்தியக்ஷர் குடும்பச் சாப்பிளான் போதகரும் வந்துசேர, ஆர்ச்சு டீக்கனை இனமறிந்து பேசப் பார்த்தும் அவர் பேசினது கொஞ்சமும் விளங்கவில்லை. அப்புறம் சீக்கிரம் மாறுதலடையத் தொடங்கி, பதினொரு மணியளவில் அவருடைய ஆவி தேகத்தைவிட்டுப் பிரிந்து பரம இளைப்பாறுதலிற் பிரவேசித்தது.

அத்தியக்ஷர் இறந்துபோன செய்தி இங்கிலாந்தில் எட்டினபொழுது, அங்குள்ள அவருடைய சிநேகிதர்களும் அவர் இந்தியாவுக்கு வருமுன் மார்க்க விஷயத்தில் அவரோடு கூடி உழைத்தவர்களுமான யாவரும் அவருக்காக மிகுதியும் துக்கப்பட்டார்கள். அவருக்கு மிகவும் அருமையாயிருந்த இரண்டு சுவிசேஷ பிரபலிய சங்கத்தார்களும் அவருக்காகக் கொஞ்சம் பொருள் சேர்த்து, அவருடைய மேலான குணங்களுக்கும் உயர்ந்த அந்தஸ்துக்குமேற்ற ஞாபகசின்னம் ஒன்று சமைப்பித்து, லண்டன் பட்டணத்து பிரதான அத்தியக்ஷ ஆலயத்தில் நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

மிடில்ற்றன் அத்தியக்ஷருடைய குணம் நடக்கைகளில் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது யாதெனில், சுவிசேஷ பிரபலியத்துக்காக அவர் காண்பித்த கரிசனையும் பட்ட பிரயாசமுந்தான். மிஷன் காரியத்தில் அவர் தமது முழு உள்ளத்தையும் சிரத்தையையும் செலுத்தினாரென்பதற்குச் சந்தேகமேயில்லை. புரொளண் மார்ட்டின் பகேனன் என்ற பக்தமான்கள் தொடங்கின நற்கிரியை தேவானுக்கிரகத்தால் வளர்ந்தேறும்படிக்கு வேண்டியிருந்த அனுகூலம் இவரால் கிடைத்தது. துரைத்தனத்தார் அனுமதியும் கல்விமான்களுடைய சம்மதியும் மிஷன்களுக்குத் தேவையாயிருந்தது. துவக்கத்தில் மிஷன்களை துரைத்தனத்தார் தேச சமாதானத்துக்கு இடையூறானவைகளென்றும், உபதேசத்தில் விபரீதமுள்ளவைகளென்றும் பாவித்தார்கள். இங்கிலாந்துச் சபையினுள் பிரிவினைக்காரரென்று எண்ணப்பட்டார்கள். இங்கிலாந்து தேசத்து இராசாங்கத்தார் அவைகளுக்கு எவ்வளவேனும் அனுகூலஞ் செய்யவில்லை. சர்வகலாசாலைகளில் ஒருவரும் மிஷன்களுக்கென்று தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. மிஷன் காரியம் இப்பேர்ப்பட்ட நிலையிலிருக்கையில் மிடில்ற்றன் அத்தியக்ஷர் அதற்கு என்னென்ன அனுகூலம் என்னென்ன ஒத்தாசை என்னென்ன சாக்ஷி என்னென்ன சிபார்ஸு தம்மால் கொடுக்கக்கூடுமோ அதையெல்லாம் மனப்பூர்வமாயும் ஊக்கத்தோடும் செய்தார். இராசாங்கத்தார் மிஷன்களை மோசத்துக்கேதுவானவைகளென்று எண்ணியிருக்க, அவரோ இந்தியாவிலுள்ள இங்கிலீஷ் காணியாட்சிகளுக்கு அவைகளே பெலன்என்று நியாயத்தோடு ஒப்புவித்ததுமல்லாமல், இங்கிலீஷ்க்காரர் இந்தியாவில் ஸ்தாபகமாகியிருப்பது தேவகுமாரனை அறியாத சனங்களுக்கு அவரை அறிவிப்பதற்கேயன்றி வேறு நோக்கமென்று நினைப்பது மதியீனமென்றும் நன்றாய் உணர்த்தினார்.

அத்தியக்ஷர் இந்தியாவில் தமது உத்தியோகத்தைக் கைக்கொண்டபோது அவருக்கு பலத்த தடைகளும் பெரிய இடையூறுகளுமிருந்தன. என்றாலும் அவைகளால் அவர் அதைரியப்படாமல், தமது புத்தி பலத்தினாலும் விவேக சாமர்த்தியங்களினாலும் அவைகளையெல்லாம் மேற்கொண்டு, சீர்கெட்டுப்போயிருந்த அங்கிலேயருடைய சுகவாழ்வுக் கடுத்தவைகளை விசாரிப்பதிலும், மிஷனரிமார்கள் பிரயாசத்தால் அங்கங்கே சபையைச் சேர்ந்திருந்த அறிவீனமுள்ள கிறிஸ்தவர்களை ஸ்திரப்படுத்துவதிலும், தம்மைச் சுற்றிலும் அஞ்ஞானமும் அவபத்தியுங்

குடிகொண்டிருந்த இந்துக்களும் மகம்மதியரும் மெய்த்தேவனை அறிந்துகொள்ளும்படி முயற்சித்ததிலும் எத்திறத்தோரும் மெச்சிக்கொள்ளத்தக்கவிதமாய் நடந்துகொண்டார். ஆகிலும் இந்தியாவின் கண்காணியாராக தமதுபேரில் வைக்கப்பட்டிருந்த உத்தரவாதம் பெரிதென்று மேன்மேலும் நினைத்து கவலைகொண்டதினாலும், தமக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமைகளை உண்மையாய் நிறைவேற்றுவதில் அவர் எடுத்துக்கொண்ட அரிய பிரயாசத்தினாலும், மனிதப்பிரகாரம் நிதானிக்கையில், அவருடைய வாழ்நாள் குறுகி சடுதியில் அவருடைய சேவஓட்டம் முடிந்தது. அவர் ஒருவராய்ச் செய்யவேண்டியிருந்த வேலையை இப்பொழுது மூன்று பங்காக்கி மூன்றுபேர் சுமக்கும்படி திட்டஞ்செய்திருப்பதைப் பார்த்து, இங்கிலாந்து சபையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அவ்வாறே இந்தியாவில் சுவிசேஷ பிரபலியத்தை விரும்புகிற எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். இந்தியாவில் அமைந்திருக்கிற சபைகளுக்கு தேவானுக்கிரகத்தினால் அநேக அனுகூலங்கள் கிடைத்திருக்கின்றன. இந்துதேசம் முழுமையும் சீக்கிரம் கிறிஸ்துநாதருடைய இராச்சியமாகிவிடும் என்று நினைக்கவும் இடமுண்டு. ஆகையால் சுவிசேஷம் அனுகூலமாய்ப் பிரபலியமாகிக்கொண்டு வருகிறதைப் பார்த்து சந்தோஷப்படுகிற நாமனைவரும், சாத்தானுடைய இராச்சியம் சமூலமாய் அழிவதற்கு இன்னஞ் செய்யவேண்டியது மிகுதியாயிருக்கிறதென்று உணர்ந்துகொண்டு, அதற்கு நம்மால் கூடியதையெல்லாம் செய்யக் கருத்துள்ளவர்களாயிருப்போமாக.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 15. அதிகாரம்.

*சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப்போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்.—கர்த்தாகோ பட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வலீரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்னிய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.*

---

அலெக்சந்திரியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்குச் சொற்ப இளைப்பாறுதல் மாத்திரங் கிடைத்ததென்று முந்தின அதிகாரத்தின் கடைசியிற் குறித்தோமே. செப்திமியூ செவேரு இராயன் 202ல் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் சட்டம் பிறப்பித்தது முதற்கொண்டு இதுவரையும் நேரிடாத கொடிய துன்பம் இப்போது ஆரம்பிக்கப்போகிறது. மேற்காட்டிய இராயன் இறந்து, முனைபின் நாற்பது வருஷமாயிற்று. இடையில் மகவீமினு அரசுபுரிந்த சொற்பக்காலம் நீங்கலாக, இந்த நாற்பது வருஷமும கிறிஸ்தவர்களுக்கு அதிகத் தொல்லையில்லாமல்



சுகமே மேலிட்டிருந்தது. விக்கிரகபக்தி விரைவில் கட்டோடு அற்றுப்போகிறதுபோல தோன்றியது. ஞானிகளும் கல்விமான்களும் அதின் அனர்த்தங்களை நிலைநிறுத்தப் பார்க்கவில்லை. கிறிஸ்துமார்க்க உபதேசங்களுக்கும் பிளேத்தோவின் கொள்கைகளுக்கும் ஒற்றுமையுண்டென்று காண்பிப்பதினால் மாத்திரம் சுவிசேஷ விர்த்தியைத் தடுக்க முயன்றார்கள். பிளேத்தோவின் நூல்களை முற்றும் மாற்றிப் புரட்டினாலேயல்லாமல் இக்காரியம் நடக்கக்கூடியதோ? கிறிஸ்துமார்க்கத்துக்கோவென்றால், அக்காலத்து யூகசாமர்த்தியமும் ஆழ்ந்த புத்தியுமுள்ள வித்வசிரோமணிகள் அதைப் போதிக்கிறவர்களாயும் நிலைநிறுத்துகிறவர்களாயுமிருந்தார்கள். கீழ்மக்களும் உலகத்தில் அந்தஸ்தில்லாதவர்களுமாத்திரம் அதை யனுசரிக்கிறார்கள் என்ற இழப்பச்சொல் வெகுகாலமாய் அற்றுப்போயிற்று. இரண்டாம் நூற்றாண்டின் பாதிக்குமேல் கிறிஸ்துமார்க்கம் இராணுவத்திலும் நியாயஸ்தலங்களிலும் ஆலோசனைச் சங்கத்திலும் இராஜ அரண்மனையிலும் கூட நுழைந்துகொண்டது. துன்பகாலமோ இன்பகாலமோ யாது கிறிஸ்துமார்க்க அபிவிர்த்திக்கு அனுகூலமானதென்று சொல்வது எளிதல்ல. கிறிஸ்தவர்கள் துன்பகாலத்தில் காண்பித்த உறுதியையும் மனத்தைரியத்தையும் அஞ்ஞானிகள் பார்த்து, அவர்கள் மதவெறிகொண்டவர்களுமல்ல, வஞ்சகருமல்லவென்று நன்றாய் உணர்ந்திருப்பார்களே. மகா உத்தமமும் உண்மையுமுள்ள கிறிஸ்தவர்களில் பலர் இவ்விதமாய் மார்க்கத்திற் சேர்ந்தவர்கள். அதுபோலவே நாற்பது வருஷமாய்ச் சபைக்குக் கிடைத்திருந்த சமாதானத்தினால், கிறிஸ்தவர்கள் பயமின்றி பகிரங்கமாய்த் தங்கள் உபதேசங்களைப் பிரபலியப்படுத்த அனுகூலமடைந்திருப்பார்களே. இக்காலத்திலே கோவில்கள் கட்டுவதற்கு ஆரம்பித்தார்கள் என்று கவனித்தோமே. அது காரியம் கிறிஸ்தவர்களை நாஸ்திகரென்று அஞ்ஞானிகள் தொன்றுதொட்டு எண்ணிவந்த தப்பெண்ணத்தை நன்றாய்க் கண்டித்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பொந்துதேச நியோசெசாரியாப் பட்டணத்தில் கிறிஸ்தவ கோவிலுக்கு அருகிலிருந்த கட்டிடங்களெல்லாம் பூகம்பத்தினால் அழிந்துபோனபோது மேற்படி கோவில் காப்பாற்றப்பட்டதை நாம் அற்புதமென்று சொல்லாவிட்டாலும், அக்காலத்திலுள்ளவர்கள் அதைக் கவனிக்காதிருப்பார்களோ? இதற்குமுன் அஞ்ஞானிகள் நினைத்ததுபோல் பூகம்பங்கள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் வெளிப்படும் தேவர்களுடைய கோபாக்கினையென்று இதைப் பார்த்த யாராவது சொல்லத் துணிவார்களோ? மேலும் ஒவ்வொரு சபையிலும் ஏழைக்கிறிஸ்தவர்களின் ஆதரிப்புக்காக பொதுவான பொக்கிஷம் ஒன்று ஏற்பட்டிருந்ததே. இப்பேர்ப்பட்ட உதாரத்துவமும் தர்மசிந்தையும் பிறப்பிக்கத்தக்க மார்க்கத்தை அஞ்ஞானிகள் வியந்துகொள்ளாதிரார்களே. சிலர் இந்தப் பொக்கிஷத்திலிருந்து உதவிபெறலாமென்ற நம்பிக்கையினால் ஒருவேளை மார்க்கத்திற் சேர ஏவப்பட்டபோதிலும், உதவிசெய்தவர்கள் அப்பேர்ப்பட்டவர்களுடைய மாய்மாலத்தைக் கண்டுகொள்ளக் கூடியவர்களாயிருந்தார்களென்று நினைக்கவேண்டும். மார்க்கத்தைச் சேர்ந்த ஒருவன் மெய்ப்பக்தியில்லாதவனென்றாலும் வருத்தமில்லாதவிதமாய்த் தன் பழைய மார்க்கத்தை விட்டுவிட்டானே.

கி. பி. 249௵ ஜூலையில் தேசியு என்பவன் உபாயத்தினால் பிலிப்பு மரணமடைந்த காலத்தில் சபையின் காரியம் இந்தச் சீரிலிருந்தது. கிறிஸ்துமார்க்கம் இவ்வளவுகாலமாய் அபிவிர்த்தியாகிக்கொண்டே வந்தாலும், விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே சிந்தையுமுள்ளவர்

களாயிருந்த ஆதிச்சபையிற்போல ஒவ்வொரு விஷயமும் பரிசுத்தமாயும் நற்சீர்பொருந்தியதாயுமிருக்கவில்லை. இக்காலத்தில் சபையைச் சேர்ந்திருந்த கிறிஸ்தவர்களில் அநேகர் பயங்காலிகளாயும் உறுதியற்றவர்களாயுமிருந்ததினால் துன்பத்தில் நிலைக்கவும் சோதனையை மேற்கொள்ளவும் கூடியவர்களல்ல. சுகத்தினாலும் செல்வத்தினாலும் உண்டாகும் பிரதிகூலங்கள் காணப்படத் தொடங்கின. சன்மார்க்கத்துக்கும் உலக ஒழுக்கத்துக்குமுரிய கடமைகளை நிறைவேற்றுவதில் கிறிஸ்தவர்களுக்குள்ளும் அஞ்ஞானிகளுக்குள்ளும் விளங்கின வித்தியாசம் இப்பொழுது அவ்வளவு துலாம்பரமாய் பிரகாசிக்கவில்லை. திவ்விய காரியங்களில் மட்டுமிஞ்சி யூகிக்கும் குணம் சபையில் தோன்றி சபையின் ஐக்கியத்தைக் குலைத்துவிட்டது. மார்க்க விஷயமாய்ச் சீவனை இழந்த அக்காலத்துக் கண்காணியார் ஒருவர், கிறிஸ்தவர்களுடைய குணம் நடத்தைகளும் குருக்கள்மாருடைய குணம் நடத்தைகளுங்கூட நாளாசறுதியில் சீர்கெட்டுக்கொண்டே வருகிறது என்று எழுதியிருக்கிறார். மேலும் உலகசிந்தையும் ஆடம்பரமும் சபையில் நுழைந்துகொண்டதாகவும் அவர் குறிப்பித்திருக்கிறார். அஞ்ஞானிகளோடு விவாக சம்பந்தங்கள் செய்யப்பட்டன. கண்காணிமார்களும் பணஞ்சம்பாதிக்க விரும்பி, தங்கள் சபைகளை அசட்டைசெய்து சாதாரண லௌகீக காரியங்களிலே முயற்சியாயிருந்தார்களாம்.

மேற்படி கண்காணியார் புதிய இராயனுடைய நடபடிக்கையை சபையிலுண்டான சீர்கேட்டைத் திருத்தும்படிக்கு தேவன் இரக்கமாய் அனுப்பின தண்டனையென்பதுபோலவுங் குறிப்பித்திருக்கிறார். இராயனை ஏவின முகாந்தரங்கள் இன்னவையென்று தெரியவில்லை. கி. பி. 249 ம் வருஷ கடைசியிலோ 250ன் துவக்கத்திலோ கிறிஸ்தவர்களைத் தேவர்களுக்குப் பலியிடும்படி பலவந்தஞ்செய்யத்தக்க ஒரு சட்டத்தை இராயன் பிறப்பித்தான். கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் சகலவிதமான கொடுமைகளும் நிஷ்டூரங்களும் செய்யப்படுவதற்கு 202 ம் வருஷத்திற்போல சிரேஷ்ட அதிகாரியின் உத்தரவு ஒன்றுதான் வேண்டியிருந்தது. ஒவ்வொரு திசையிலுமிருந்து துன்பப்பட்டவர்கள் மரணமடைந்தவர்கள் விர்த்தாந்தம் தெரியவருகிறது. எருசலேமின் விர்த்தாப்பிய கண்காணியாரான அலெக்சந்தர் நாற்பது வருஷம் தமது உத்தியோகத்தை நடப்பித்தபின் சிறைச்சாலையிற் போடப்பட்டு அங்கேயே சிறிதுகாலத்துக்குள் மரித்தார். ஓரிஜன் என்பவனும் சிறைச்சாலையிலடைபட்டு இராயன் மரித்ததுவரையில் அந்நிலைமையிலேயேயிருந்தான். அந்தியோகியாக் கண்காணியாரான பாபிலா என்பவருக்கும் இந்த அவமானமே செய்யப்பட்டது. ஆகிலும் எருசலேம் கண்காணியாரைப்போல் இவரும் விடுதலையாகுமுன் பரகதியடைந்தார். பொந்து தேசத்து நியோ செசாரியாக் கண்காணியும் ஓரிஜனுடைய சிநேகிதனுமான கிரகொரி என்பவன் ஒளித்துக்கொள்ளவேண்டியதாயிற்று அவன மந்தையைச் சேர்ந்த அநேகர் காவலில் வைக்கப்பட்டார்கள். பட்டையத்துக்கு இரையானவர்களும் பலருண்டு. சின்ன ஆசியாவில்தான் துன்பம் மும்முரமாய் நடந்தது. சிமிர்னாப்பட்டணத்து ஐடமன் என்ற கண்காணி பயத்தினாலே விசுவாசத்தை மறுதலித்ததாகச் சொல்லியிருக்கிறது. ஆகிலும் மற்ற அநேகர் தைரியமாய் நின்று நிர்வகித்து இரத்தச்சாக்ஷிகளாய் வாடாத மகிமையின் கிரீடத்தைப்பெற்றார்களாம்.





# நற்கருணை விளக்கம்.

## எ. அதிகாரம்.

நாம் எப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இந்தப் பரிசுத்த பந்தியைச் சேரவேண்டுமென்பதைக் காட்டும் சில குறிப்புகள்.

பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

இந்தப் பந்தியிலடங்கியவைகள் சந்தோஷத்தையுந் துதியையும் நமக்குள்ளுண்டாக்குவது மாத்திரமல்ல, நாம் அதைச் சேரும்படியான இடம்பெற்றதே நமக்குப் பெரிய கனமும் தேவதயவுமானதால் அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களிற் புகழ்ச்சியோடும் பிரவேசிக்கும்படியாய் நம்மை ஏவுகிறது. இந்தப் பந்தியைச் சேரும்போது சந்தோஷத்தோடும் நன்றியறிதலோடும் சேர்வதற்கு இரண்டு நியாயங்களுண்டு.

இந்தப் பெரிய பொக்கிஷத்தைக் கர்த்தர் நம்முடைய வசத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவன் நம்முடையபேரில் தயவாயிருக்கிறாரென்பதற்கு இது ஒரு விசேஷித்த குறிப்பு. இதற்காக நாம் களிப்படைந்து நன்றியறிதல்செலுத்தவேண்டியது நம்முடைய கடமை. ஞானத்தின் விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். அதின் சத்தம் நம்முடைய தெருக்களிலே கேட்கப்படுகிறது.

தேவன் நம்மை அழித்துப்போடச் சித்தமாயிருந்தால் இவ்வளவு பெரிய தயவை நமக்குக் காண்பிக்கமாட்டார். கிறிஸ்துவோடேகூட விருந்து பொசித்துக் குடிக்கும்படியாய் அழைக்கப்பட்டிருப்பது எவ்வளவு பெரிய தயவு. அவருடைய மந்தையின் நாய்களோடுகூட அவருடைய மேசையின் உச்சிட்டங்களைத் தின்னத்தக்கவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகளின் அப்பத்தைச் சாப்பிட அழைக்கப்படுவது லேசான காரியமா? அது மாத்திரமல்ல, நாம் அவருடைய ஆசாரியரோடெண்ணப்படவும் பரிசுத்த அப்பங்களைச் சாப்பிடவும இடம்பெற்றிருக்கிறோம. இது அவருடைய மட்டற்ற இரக்கம். என் ஆத்துமமே கர்த்தரைத் துதி.

இரண்டாவது. இந்தப் பெரிய விருந்தை நாம் அருந்தும்படி அழைக்கப்பட்டிருப்பது மாத்திரமல்ல, அதை யேற்றுக்கொள்ளும்படியான மனதையும் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறா. அவர் நம்முடைய பேரில் தயவாயிருக்கிறாரென்பதற்கு இதுவும் ஒரு நல்ல குறிப்பு. இதற்காகவும் நாம் களிப்படைந்து அவருக்குத் தோத்திரஞ்செலுத்தவேண்டும்.

இதற்கென்று அழைக்கப்பட்ட எத்தனை பேர்களோ இதை அசட்டைபண்ணி, சிலர் தங்கள் வயல்களுக்கும் மற்றவர்கள் தங்கள் வியாபாரத்துக்குமாகப் போகிறார்கள். நம்முடைய இஷ்டத்துக்கு நாம் விடப்பட்

டிருந்தால் நாமும் அவர்களுக்கொப்பாகவேயிருந்திருப்போம். அவருடைய பராக்கிரமத்தின் நாளில் நாம் மனப்பூர்வமாயிருந்து அவருடைய சுவிசேஷ விருந்தை யேற்றுக்கொள்ளும்படியாய்ச் செய்வது அவருடைய சுயாதீனக் கிருபையே.

கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் மறைக்கப்பட்டிருந்தவைகள் பாலகருக்கு வெளிப்பட்டிருப்பது அவருடைய விசேஷித்த கிருபைதான். இந்தக் கிருபைக்கே மகிமையுண்டாவதாக. நாம் அதிற் சந்தோஷப்படுவோமாக.

IX. எல்லா மனிதரோடும் விசேஷமாய் உத்தம கிறிஸ்தவர்களோடும் பக்ஷமாயிருந்து இந்தப் பந்தியைச் சேரக்கடவோம். இது அன்பின் விருந்து. யாவரோடும் அன்பாயிருந்து இதைச் சேராவிட்டால் கலியாணவஸ்திரந் தரியாதவர்களாயிருந்து இந்த விருந்தின் பலனுக்கு அந்நியராவோம். நாம் பலிப்பீடத்தினிடத்தில் நம்முடைய காணிக்கையைக் கொண்டுவரும்போது இதைப்பற்றின பாரதூரமான எண்ணத்தோடே வருகிறவர்களாயிருக்கவேண்டும். ஒருவனைப் பற்றியும் துர்எண்ணமில்லாமலும் யாவரைப்பற்றியும், விசேஷமாய் விசுவாச வீட்டாரைப்பற்றி நல்லெண்ணங்கொண்டவர்களாய் வரவேணும்.

(1) ஒருவனைப்பற்றியுந் தீமையான எண்ணங்கொள்ளக் கூடாது. நமக்குக் கோபத்தை மூட்டிக் கெடுதி நினைப்பவர்களுக்கு முதலாய்த் துர்எண்ணங்கொள்ளக் கூடாது. எவ்வளவாய் அவர்கள் நமக்குச் சளவீனத்தை வருவித்து நம்முடைய காரியங்களுக்குக் கெடுதியுண்டுபண்ணி நம்மையிகழ்ந்து நஷ்டத்தையுண்டுபண்ணினபோதிலும், அவர்களைப் பகைக்கவாவது அவர்கள்பேரில் வர்மம்வைக்கவாவது துணியலாகாது. அவர்களுக்குத் தீமைசெய்யாதிருப்பது மாத்திரமல்ல, பூரண மனதோடே அவர்கள் குற்றங்களை மன்னித்து அவர்கள் நன்மையை விரும்புகிறவர்களாயிருக்கவும்வேணும். தேவன் நம்முடைய குற்றங்களை மன்னிக்கவேணுமென்கிற விருப்பமிருக்குமானால் அப்படியே செய்வோம். பிறர் நமக்குச் செய்திருக்கும் எப்பேர்ப்பட்ட இரண்டகத்தையும் விட நாம் தேவனுக்கு விரோதமாய்ச் செய்திருக்கும் பாவங்கள் எண்ணிறந்த மடங்கு அதிகமாயிருக்க, பிறருடைய குற்றங்களை மன்னியாதிருப்போமானால் தேவனுடைய தயவைப் பெறுவோம் என்றெப்படி எண்ணலாம். இந்த எண்ணம் நம்மொவ்வொருவருடைய மனதிலும் ஏற்றபடி பதிந்திருந்தால் நல்லது. நாம் மற்றவர்களைப் பற்றிக் கசப்பான எண்ணங்கொண்டு அவர்களை நினைக்கும்போது மனதிலே எரியந்தமுண்டாகவும் அவர்களைப் பார்க்கவாவது அவர்களோடே பேசவாவது மனங்கொள்ளவில்லையென்று சொல்பவர்களாயிருந்தால், நாம் தேவனுடைய சந்நிதிக்குமுன்பாக எப்படிப்பட்ட முகத்தோடே சேரலாம். அவருடைய பந்தியைச் சேரத் துணிவதெப்படி! நம்முடைய மனதினெண்ணங்கள் மனிதருக்கு மறைந்திருப்பதுபோல தேவனுக்கு மறைந்திருக்குமோ நாம் தேவனுடைய சந்நிதானத்துக்கு முன்பாகச் சொல்லுமெந் நியாயமும் அங்கீகரிக்கப்படுமோ இப்படிப்பட்டவர்களாகிய நாம் அவருடைய ஆசீர்வாதத்தையல்ல, கோபாக்கினையையே பெறுகிறவர்களாயிருப்போம்.

ஆகையால் நாம் சரியான எண்ணத்தோடே இந்தப் பந்தியைச் சேர்கிறவர்களாயிருப்போமாக.

நாம் அதைச் சேரும்போது ஒன்றை நினைத்துக்கொள்ளவேணும். அவர் நம்முடைய சமாதானப் பிரபுவாயிருக்கிறாரென்றும் சகல பகை



யையுஞ் சிலுவையிலே சேர்த்து ஆணியறைந்தாரென்பதையும் நினைத்துக்கொள்ளவேணும்.

(2) சகல மனிதரோடும் அன்பாயும் உத்தம கிறிஸ்தவர்களோடு பக்ஷமாயுமிருக்கவேணும்.

கிறிஸ்தவன் பாராட்டவேண்டிய அன்பு மற்றவர்களுடைய குற்றங்களை மன்னிக்கிறது மாத்திரமல்ல, அவர்களோடு பக்ஷமாயுஞ் சிநேகமாயுமிருப்பதையுங் குறிக்கும். எல்லா மனிதரும் நன்றாயிருக்கவேணுமென்பதே கிறிஸ்தவனுடைய முக்கிய நோக்கமாயிருக்கவேணும். நம்முடைய ஆத்தும இரக்ஷிப்பைப் பற்றிய யதார்த்தமான கவலை நமக்கிருக்குமாகில் பிறருடைய நன்மையை விரும்பாதிருப்பது அசாத்தியம். "எல்லா மனிதரும் இரக்ஷிக்கப்படவுஞ் சத்தியத்தை அறிகிற அறிவுக்கு வரவும் தேவன் சித்தமாயிருக்கிறார்." எல்லாருடைய நன்மையையும் விரும்புவதோடேகூட தாவீதைப்போல பூமியிலுள்ள பரிசுத்தவான்கள் பேரிலும் மகாத்துமாக்கள்பேரிலும் பாசம்வைக்கவேணும். ஏனெனில், அவர்கள் தேவனுடைய பார்வைக்கு அருமையும் பெருமையுமானவர்கள். பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் ஐக்கியமாயிருக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களோடு நாம் ஐக்கியமாயிருக்கவேண்டியது நம்முடைய விசேஷித்த கடமை.

ஆகையால் நாம் கர்த்தருடைய பந்தியைச் சேரும்போதெல்லாம் மாயமற்ற பரிசுத்த அன்போடு சேரக்கடவோம். நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுநாதரும் நம்மை தம்முடைய இருதயத்திலே பதித்திருக்கிறதுபோல நாமும் மற்றவர்களை நம்முடைய இருதயமாகிய மார்பின் பதக்கத்திலே பதித்திருக்கவேணும். கிறிஸ்து நம்மைச் சிநேகித்திருப்பது நாம் மற்றவர்களைச் சிநேகிக்கவேண்டியதற்குத் தகுந்த முகாந்தரம். கிறிஸ்தவர்கள் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவுமுடையவர்களாய் ஒருவரோடொருவர் இசைந்திருப்பது எத்தனை நன்றும் எத்தனை இன்பமுமானது.

---

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XII-வது. இராசகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

(தொடர்ச்சி,)

இராசா மேன்மையுள்ளவராதலால் விருந்துச்சாலையில் யாவரும் வந்து அவரவர் தங்கள் தங்களிடங்களில் உளுக்கார்ந்தபிறகு தான் வருகிறார். விருந்தாடிகளைப் பார்க்கும்படி இராசா உள்ளே பிரவேசித்தபோது கலியாணவஸ்திரம் தரித்திராத ஒரு மனிதனைக் கண்டார். இராஜவிருந்துக்கு வருகிற விருந்தாடிக்குரிய வஸ்திரமில்லாத ஒருவனை உடனே கண்டார். அவனோடே அன்பாய்ப் பேசுகிறார். அவனிடத்தில் காணப்பட்ட அசட்டைக்கு அவன் என்ன காரணஞ் சொல்லுவானென்று பார்க்கிறார். "சிநேகிதனே நீ கலியாணவஸ்திரமில்லாதவ

னாய் இங்கே எப்படி வந்தாய்." பதில்சொல்ல ஒன்றுமில்லாததால் அவன் பேசாமலிருந்தான். நான் தெருச்சந்திகளிலிருந்து கொண்டு வரப்பட்டவன். திடீரென்று என்னைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவசரத்துக்குக் கலியாணவஸ்திரம் எப்படிக் கிடைக்குமென்றாவது கலியாணவஸ்திரஞ் சம்பாதிக்கத் தான் ஏழை என்றாவது வீட்டிற்குப் போய்க் கொண்டுவரச் சமயமில்லையென்றாவது ஏன் அவன் போக்குச் சொல்லவில்லை? இராசாவுடைய கண்டிப்பான தண்டனைக்குத் தகுந்த நியாயங் காட்டும்பொருட்டாய் கீழ்த்திசைகளில் இராசாக்களாவது பெரியோர்களாவது விருந்துசெய்யும்போது விருந்தாடிகளுக்கு விலையேறப்பெற்ற வஸ்திரத்தை இனாமாகக் கொடுக்கிறது வழக்கமென்றும் அந்த வழக்கத்தின்படி இங்கே நடந்ததென்றும் கொடுத்த வஸ்திரத்தை அசட்டைசெய்ததினால் இந்தக் கோலமாயிருந்தானென்றுஞ் சொல்லுகிறார்கள். இதுவிஷயத்தில் இவனிடத்தில் இரண்டு குற்றங்களுண்டு. வஸ்திரக்கொடையால் தனக்குச் செய்யப்பட்ட கனத்தை அசட்டைசெய்தான். அப்படி அசட்டைசெய்ததினால் வேலைத்தருணத்தில் உடுத்தியிருந்த அழுக்கான வஸ்திரமே இராசனுடைய சந்நிதியில் வருகிறதற்குப் போதுமானதென்று காட்டினான்.

வேறு சிலரோ அப்படிப்பட்ட வழக்கமில்லையென்றுஞ் சுல்த்தான் தன்னிடத்தில் வருகிறவர்களுக்கு ஒரு வஸ்திரங் கொடுக்கிற வழக்கம் ஒன்றுதான் இதற்கு ஒத்திருக்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். மேற்சொன்ன வழக்கத்திற்கு நியாயாதிபதிகள் 14: 13 ல் சொல்லியிருக்கிறது ஆதாரமாகமாட்டாது. கீழ்திசைகளில் விசேஷித்த கலியாணவிருந்துகளில் வஸ்திரங்கள் கொடுக்கிறது வழக்கமாயிருக்கலாம். இப்படிப்பட்ட வழக்கங்களை அறிந்திருந்தவர்களுக்கு இரட்சகர் இந்த உவமையைச் சொன்னபடியால், அதை வைத்துக்கொண்டு உவமையை லேசாய் விளக்கிக்கொள்வார்கள். அப்படியிராவிட்டால் இந்த மனுஷனுக்கு நேரிட்ட தண்டனை எவ்வளவோ கடுமையாகத் தோன்றும். கீழ்த்திசையிலுள்ள இராசாக்களும் பெரியோரும் பெருமைக்காக அநேக வஸ்திரங்களைச் சேர்த்துவைத்திருக்கிறதுண்டு. இக்காலத்திலும் அவர்களுடைய ஆஸ்தி முக்கியமாய் அப்படிப்பட்ட பட்டாடைகளும் சரிகை வஸ்திரங்களுந் தான். யோபு 28: 16. ஏசாயா 3: 6. யாக். 5: 2. 2 இராசா 10: 22. ஒரு பெரியவருடைய உடுப்புப்பெட்டிகளைச் சோதிக்கும்போது (5,000) ஐயாயிரம் வஸ்திரங்களைக் கண்டார்களாம். இதை மனதில் வைத்துக்கொள்வோமானால் விருந்தாடிகளுடைய பெருந்தொகையினால் சங்கடமுண்டாக ஏதுவிராது. விலையேறப்பெற்ற வஸ்திரங்கள் கனத்துக்குரிய வெகுமானங்களாகவும் விசேஷ தயவுக்கடையாளங்களாகவுங் கொடுக்கப்பட்டது நமக்குத் தெரியும். 1 மோசே. 45: 22. 1 சாமு. 18: 4. 2 இராசா 5: 15. தானியேல் 5: 7. எஸ்தர் 6: 8. முன்போல இப்பொழுதும் இப்படிப்பட்ட வெகுமானங்கள் அதிகத் தாராளமாய் கலியாணவிருந்துகளிலும் எஸ்தர் 2: 18. மற்றுஞ் சந்தோஷ சமயங்களிலும் 2 சாமு. 6: 19. கொடுக்கப்படுகிறதுண்டு. விலையேறப்பெற்ற வஸ்திரத்தைக் கொடுக்கும்போது அதை உடனே போர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அதைக் கொடுத்த நோக்கம் வியர்த்தமாய்ப் போம். கொடுத்தவருடைய மேன்மையையும் உதாரத்துவத்தையுங் காட்டவும் விருந்தின் மகிமையை சிறப்பிக்கவுந் தானே அது கொடுக்கப்படுகிறது. அதை அசட்டைசெய்கிறது, அல்லது அற்பமாயெண்ணுகிறது கொடுக்கப்பட்ட வஸ்திரத்தை மாத்திரமல்ல, கொடுத்தவனையும் ஈனப்படுத்துகிறதற்குச் சமானம்.



இந்த வஸ்திரத்தை ஒரு இனாமாகவெண்ணும்போது அதை அசட்டைசெய்கிறது குற்றந்தான். இந்த மனுஷன்மேல் இதோடு வேறொரு குற்றமுமுண்டு. விருந்துக்குக் கேவலமான அழுக்கான வஸ்திரத்தோடு வந்தான். நமக்குள்ளும் இப்படிப்பட்ட நடக்கை மரியாதைக்குறைச்சலாகவெண்ணப்படும். பூர்வீக சாதியாருக்குள் எவ்வளவதிகம். கீழ்திசையாருக்குள்ளோ அதிலும் அதிகந்தான். அவர்களுக்குள் வெளியரங்கமான குறிப்புகள் விசேஷித்த கருத்தைக் கொடுக்கத்தக்கவைகள். ஆருடைய கனத்துக்கு அந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளவேண்டுமோ அவருக்கு எவ்வளவோ அவமரியாதையாய் நடந்தான். அவரெவ்வளவு பெரியவரோ அவ்வளவாகக் குற்றமும் பெரியது. மற்றவர்கள் இவனுக்காக எத்தனையோ போக்குக்களைச்சொல்ல ஏதுவிருக்கலாம். கலியாணவஸ்திரத்தோடு வர முடியவில்லை. அவன் செய்தது அற்பக்குற்றமெனலாம். அவனோ ஒன்றுஞ் சொல்ல ஏதுவில்லாதவனாய் மவுனமாயிருந்தான். அல்லது அவன் வாயடைபட்டது. அவனுக்குப் போக்குச்சொல்ல இடமில்லை. தன்னைத்தான் குற்றவாளியாக்கிக்கொண்டான், உடனே அவனுக்கு ஆக்கினையும் வந்தது. இராசா பணிவிடைக்காரரை நோக்கி இவனைக் கையுங் காலும் கட்டிக் கொண்டுபோய் அழுகையும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்களென்றான். அரமனைக்குள்ளே வெளிச்சமுஞ் சந்தோஷமும் புறம்பேயோ கூதலும் அந்தகாரமும். இங்கே இந்தக் கெட்ட விருந்தாடியைப் போட்டார்கள். அதை எதிர்க்க அவனால் முடியாது. ஏனென்றால், கையுங் காலுங் கட்டப்பட்டுப்போச்சுது. நஷ்டப்பட்டு வெட்கமடைந்து, சந்தோஷமான விருந்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியால், அழுகையும் பற்கடிப்புமுண்டாச்சுது.

உவமை இதோடு முடிந்தபோதிலும் நாம் நன்றாய் விசாரிக்கவேண்டியது இன்னும் இந்தப் பின்பங்கிலுண்டு. விருந்தாடிகளைப் பார்க்க அல்லது சோதிக்க இந்தப் பெரிய இராசா வருகிறதெப்போ? கடைசி நியாயத்தீர்ப்பில் மாத்திரமல்ல, முக்கியமாய் அப்போதுதான், ஆகிலும் மாய்மாலக்காரர் வெளிப்படும்போதெல்லாம் தங்களை வஞ்சித்துக்கொள்ளுகிறவர்கள் வெளியாகும்போதெல்லாம் ஒவ்வொரு சோதனைகாலத்திலும் பிரிவினையுண்டாகும்போதெல்லாம் அநேகருடைய எண்ணங்கள் வெளியாகும். கடைசி நியாயத்தீர்ப்பின்நாளிலே தான் சரியான பிரிவினையுண்டாகும். அப்பொழுது குறைவாய் இங்குமங்கும் நிறைவேறினது எல்லாருக்குள்ளுஞ் சரியாய் நிறைவேறும்.

சில வியாக்கியானிகள் கலியாணவஸ்திரமில்லாமல் ஒருவன் மாத்திரமென்கிறதை விசேஷித்து இது யூதாஸ்காரியோத்தென்று அர்த்தப்படுத்துகிறார்கள். யூதர்கள் ஏசாவென்றும், ஒபதியா 4: 6. அர்த்தப்படுத்துகிறார்கள். கர்த்தர் கிருபையுள்ளவரானபடியால் அநேக பிரயத்தனங்கள்செய்து ஒருவனை இரட்சிக்கிறவரானபடியால் இரக்கமாக இவனை இப்படி எச்சரித்திருக்கலாம். சிலர் பாவமனிதனாகிய பாப்புவென்றர்த்தப்படுத்துகிறார்கள். ஒரு தனியாளைக்குறித்து அர்த்தப்படுத்துகிறது சரியல்ல. பெரிய கூட்டத்தை இந்த மனிதன் குறிக்கலாம். அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர் என்று சொல்லும்போது தள்ளப்பட்டவர்கள் அநேகராயிருக்கவேண்டும். தள்ளப்பட்டவர்கள் அநேகராயிருக்க ஒருவனென்று மாத்திரங் குறிப்பாய்ச் சொல்லுவானேன் என்பதற்கு பல நியாயங்களுண்டு. இரட்சகர் தம்முடைய உவமைகளில் உத்தேசிக்கிறது ஒருவனைத்தான். ஒரு வேலைக்காரன் தான் எசமானுடைய பணத்தை வீணாய் வைத்திருந்

தான். மத். 25: 18. வேறொருவர் சொல்லுகிறபடி கலியாணத்திலிருந்த அனேகர் விலக்கப்பட்டிருப்பார்களானால் விருந்து கெட்டுப்போம். மேலும் ஒவ்வொருவனும் தன் தன் மனச்சாட்சியைச் சோதித்துக் கொள்வதற்கு இது நல்ல வகை. கடைசிநாளிலே அத்தனை பெரிய கூட்டத்திலே நியாயாதிபதி அவ்வளவு கூர்ந்து பார்த்து ஒவ்வொருவனுடைய நிலைமையையும் எவ்வளவோ நுட்பமாய்க் கண்டுபிடிப்பாரே. தீமைசெய்கிற பெருங்கூட்டத்தாரை ஒருவனாகப் பாவிக்கிறதில் யாதொரு சங்கடமுமில்லை. நீதிமான்களெல்லாரும் கிறிஸ்து என்னும் ஒரே சிரசுக்குள் சேர்கையாகிறார்கள். அப்படியே துன்மார்க்கர் யாவருஞ் சாத்தானாகிய தங்கள் தலைவனுக்குள் ஏகமாகிறார்கள். பரம எருசலேம் ஒன்றாயிருக்கிறதுபோல கெட்ட பாபிலோனும் ஏகமாய்த் தானிருக்கிறது. தேவனுடைய இராட்சியமொன்றிருக்கிறதுபோல அந்தகாரத்தின் இராட்சியமும் ஒன்றுண்டு. மத். 12: 25. இதற்கு எதிரிடையாகத் தெரிந்துகொள்ளப்பட்ட யாவரும் ஒருவனாகப் பாவிக்கப்படுகிறார்கள். ஒருவனே பந்தயத்தைப் பெறுவான். 1 கொரி. 9: 24.

கலியாணவஸ்திரத்தின் தாற்பரியத்தைச் சரியானபடி அறிந்துகொள்ளுகிறது அவசியம். அதில்லாதவனுக்கு எந்த ஆவியின் வரங் குறைவுபட்டது என்று தீர்மானிக்கவேண்டும். விசுவாசம் அன்பு என்பவைகளின் சரியான தாரதம்மியத்தைப் பற்றின வழக்கில் ரோமான் மார்க்கத்தார்கள் இந்த வாக்கியங்களைத் தங்களுக்கு அனுகூலமாக உபயோகிக்கிறார்கள். இவனுக்குக் குறைவுபட்டது விசுவாசமல்ல, அன்பு என்கிறார்கள். அவனுக்கு விசுவாசமிராவிட்டால் அவன் அந்த விருந்துக்கே வந்திருக்கமாட்டானென்கிறார்கள். இப்படி அவர்கள் சொல்லும்போது விசுவாசத்தின் உபயார்த்தத்தைக்கொண்டு தங்கள் காரியத்தை யனுகூலப்படுத்தப் பார்க்கிறார்கள். விசுவாசம் என்கிற வார்த்தை அறிவோடொட்டின சம்மதத்தை மாத்திரமல்ல, அதைவிட ஆழ்ந்த பொருளையும் உணர்த்தும். இவனுக்கு விசுவாசமில்லையென்று சொல்லும்போது இந்த ஆழ்ந்த கருத்தின்படியே தான் அதைச் சொல்லவேண்டும். புஷ்பமானது வேரிலிருந்துண்டானதென்று சொல்லலாம். புஷ்பத்திலிருந்து வேருண்டாகிறதென்று சொல்லவே கூடாது. அதுபோல விசுவாசத்திலிருந்து அன்புண்டாகிறதேயொழிய அன்பிலிருந்து விசுவாசமுண்டாகிறதில்லை. விசுவாசம் காரணம் அன்புதான் காரியம். ஆகிலும் ஒன்றைத் தள்ளி ஒன்றை தனித்து இப்படி அர்த்தம்பண்ணவேண்டிய அவசியமில்லை. பூர்வீக திருச்சபையிலிருந்த ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாய் சிலர் கலியாணவஸ்திரம் அன்பைக் குறிக்குமென்றுஞ் சிலர் விசுவாசத்தைக் குறிக்குமென்றும் தர்க்கித்ததுண்டு. ஒரே ஆசிரியன் சிலவேளை இதையுஞ் சிலவேளை அதையுங் கலியாணவஸ்திரமென்று அர்த்தப்படுத்துகிறதுண்டு. இந்த விருந்தாடிக்கு வேண்டியிருந்தது நீதிதான். அதினுடைய வேராகிய விசுவாசமும், அதினுடைய புஷ்பமாகிய அன்பும் இவனிடத்தில் குறைவுபட்டது. பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிற அந்த நல்ல உவமானத்தின்படி கிறிஸ்துவை அவன் தரித்துக்கொள்ளவில்லை. ரோமர் 13: 4. கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறதில் அன்பும் விசுவாசமுஞ் சேர்ந்திருக்கிறது. விசுவாசம் உடுத்துகிற வல்லமை. அன்பு அல்லது பரிசுத்தம உடுக்கப்பட்ட வஸ்திரம. விசுவாசத்தினால் நமக்குள்ளிலாமல நமக்கு மேற்பட்டும் நம்மோடு சேர்ந்த நீதியைக் குறிக்கும். இதினால் நம்முடைய ஆத்துமா உடுத்தப்படும். இந்த நீதி கிறிஸ்துவிலுள்ளது. அவர் தான் நம்முடைய நீதியாகிய கர்த்தர். இந்த நீதி விசுவாசத்தின் வல்லமையால் நம்மோடு சார்ந்து நம்முடையதாகிறது. அதினால் நாமும் உடுத்தப்படுகிறோம். அது நம்முடைய உடுப்பாகிறது, வேதவசனத்தில் இது பல வகையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ரோமர் 13: 14. கொலோ. 3: 10. எபே. 4: 22. எபே, 6: 13—16 வரை. 1 தெச. 5: 8. கலா. 3: 27. ரோமர் 13: 12. எசேக். 16: 10. ஏசா. 61: 10. இந்த வாக்கியங்கள் யூதருக்குள்ளும் இந்த உவமானம் வழங்கப்பட்டதென்று காட்டுகிறது. வெளி. 3: 5. 4: 4. 6: 11. 7: 9. நமக்குச் சாட்டப்பட்ட நீதி நமக்குள் ஊற்றப்பட்ட நீதியாகிறது. அதுதான் அன்பு அல்லது பரிசுத்தம் அல்லது கிறிஸ்தவனுக்குள் இருந்து அவனுடைய நடக்கையில் விளங்குகிற கிறிஸ்தமான குணங்கள் யாவற்றின் தொகையாயுமிருக்கும்.



# Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௧௫. அதிகாரம்.

*சந்தானத்தைக்குறித்த வாக்குத்தத்தத்தின் உறுதிக்கு அடையாளமாக தேவன் ஆபிராமோடு செய்த உடன்படிக்கை.*

1. "கர்த்தருடைய வார்த்தை" என்று முதல் விசையாய் இவ்விடத்திலேயே சொல்லப்படுகிறது.

"தரிசனத்திலே" தீர்க்கதரிசிகள் தேவ வெளிப்படுத்தல்களை தரிசனத்திலே அடைந்தபொழுது அவர்கள் நித்திரையாயிராவிட்டாலும் அவர்கள் ஐம்பொறிகள் புறம்பான காரியங்களில் செல்லவில்லையென்று காணப்படும். ஆனால் இதிற் சொல்லப்படுகிற தரிசனம் அப்படியல்ல. ஏனென்றால், எல்லாம் பிரத்தியட்சமாகவே நடந்தது.

"பயப்படாதே" அவனால் தோல்வியடைந்த இராசாக்கள் பழிவாங்கும்படி மூர்க்கத்தோடு திரும்பிவருவார்களென்று பயப்பட்டிருப்பான்.

2. 3. இவ்வளவு நாளாகியும் பிள்ளையில்லாததினாலே அதைக் குறித்த வாக்குத்தத்தத்தை தான் தப்பிதமாய் அர்த்தம்பண்ணியிருக்கலாம் என்று காலதாமதத்தினாலே சந்தேகத்துக்கு இடம்கொடுத்திருப்பான். அதினாலே கர்த்தர் அந்த வாக்குத்தத்தத்தை மறுபடியும் அருளினார். 4, 5.

6. மேசியா தன் வழியில் தோன்றுவார் என்ற விசுவாசத்தினாலே 4, 5 ல் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டது எவ்விதமும் நடக்கும் என்று தேவவல்லமையின்பேரிலும் உண்மையின்பேரிலும் முழுவதும் சார்ந்தவனாய் "கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர்" ஏசுக்கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் "அவனுக்கு நீதியாக எண்ணினார்." உரோ. 3: 25. 4: கலா. 3: கிரியையினாலே எவனாவது நீதிமானாக்கப்பட்டிருக்குமானால் ஆபிராமே அதற்கு அசல் திருஷ்டாந்தமாயிருக்கவேண்டும். அவன் மகனை பலியிட்டதே அதற்கு அசல் கிரியையாயிருக்கவேண்-

டும். ஆனால் அவன் செய்த அரிய கிரியைகளுக்கெல்லாம் முன்னதாக நீதிமானானான்.

9. அதிகாலையில் நட்சத்திரங்கள் மறையுமுன் இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. மூன்று வயதில் இந்த மிருகங்கள் சரியான பிராயமாகும். பலியிடுக்கும்படி மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டவைகளும் இவைகளே.

10. உடன்படிக்கைசெய்கிறவர்கள் துண்டிக்கப்பட்ட மிருகங்களுக்கு நடுவாகக் கடந்துபோகிறது வழக்கம். உடன்படிக்கையை மீறுகிறவன் தேவநீதியினாலே இப்படி துண்டிக்கப்படுவான் என்ற அர்த்தமாக அப்படி நடந்திருக்கும். புறச்சாதியாருக்குள்ளும் இந்த வழக்கமிருந்தது. இது இந்தச் சங்கதியிலிருந்து உற்பத்தியாகியிருக்கலாம். அல்லது இதற்குமுன் நடந்துவந்த வழக்கத்தை வைத்து கர்த்தர் தயவாய் இப்படிச்செய்திருக்கலாம்.

11. ஆபிராம் பலிகளைத் துண்டித்து தயாராய் வைத்தபின் அவைகளைச் செபத்தோடு காத்துக்கொண்டிருந்தான். மாம்ச பக்ஷணிப் பறவைகள் அவற்றைப் பட்சிக்கும்படி இறங்கினபொழுது துரத்தினான்.

12. "சூரியன் அஸ்தமிக்கும்போது" (5 வா. வாசி) ஆபிராம் தீர்க்கதரிசிகளைப்போல் இப்பொழுது தரிசனமடைந்தான் என்று நினைக்கிறவர்கள் பகலில் நட்சத்திரங்களைக் காணககூடாதே என்று இந்த நியாயமாகச் சொல்லுகிறார்கள். 9 வியா.

ஆபிராமுக்கு தேவெத்தனமாய் ஆதாமுக்குப்போல் "அயர்ந்த நித்திரை வந்தது. அப்பொழுது அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் இனி நடக்கப்போகிறதைக் குறித்து முக்கியமான தீர்க்கதரிசன அறிவிப்படைந்தான். அதாவது 1. அவன் சந்ததியாருடைய துன்பநிலைமை. 2. அவர்கள் சத்துருக்களுடைய அழிவு. 14 வா. 3. அவர்கள் மகத்தான விடுதலை. 4. அவர்கள் கானானை சுதந்தரித்துக்கொள்வது. 5. ஆபிராம் முதிர்வயதிலே அடையும் சமாதான மரணம். இடிலும் காரிருளும் எகிப்திலும் பிற்காலங்களிலும் அவர்களுக்குண்டான கொடுந் துன்பத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் அடையாளம்.

13. "நானூறு வருஷம்" ஈசாக்கு பிறந்ததுமுதல் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டதுவரையுமுள்ள காலமாம். எப்படியெனில், ஆபிராம் அழைக்கப்பட்டதுமுதல் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டதுவரையும் சரியாய் 430 ௵. ஆபிராம் அழைக்கப்பட்டு 25 வருஷத்துக்குப்பின் ஈசாக்கு பிறந்தான். இதில் 5 ௵ வித்தியாசப்படுகிறதே என்றால் வேதத்தில் பெருந்தொகையைச் சொல்லும்போது அதோடு சேர்ந்த சில்லறை லக்கத்தை விட்டுவிடுவது வழக்கந்தான். சிலர் ஈசாக்கு பால்குடி மறந்து எகிப்தியனான இஸ்மவேல் அவனைப் பரியாசம்பண்ணினதுமுதல் இதைக் கணக்கிட்டு 400 ௵ சரிதான் என்கிறார்கள். இந்தச் சங்கதி ஈசாக்கின் சந்ததியாரை முக்கியமாய்க் குறித்ததால அவன் பிறப்புமுதல் இந்தக் காலக்கணக்குச் சொல்லப்படுவது சரியே. ஆபிராம் சந்ததியார் எகிப்தில் சஞ்சரித்தது 215 வருஷந்தான். மற்றக் காலமெல்லாம் அவர்கள் கானான்தேசத்தில் பரதேசிகளாய்த் திரிந்தார்கள். எப்படியெனில், மேற்காட்டியபடி ஆபிராம் கானானுக்கு வந்த 25 ம் ௵ ஈசாக்கைப் பெற்றான். 12: 4. 17: 1, 12. ஈசாக்கு தன 60 ம் வயதில் யாக்கோபைப் பெற்றான். 25: 26. யாக்கோபு 130 ம் வயதில் எகிப்துக்குப் போனான். ஆகையால் (25+60+130=) 215 ௵ சரி.

16. "நாலாந் தலைமுறையிலே" எகிப்துக்குப்போன இஸ்ரவேலரின் நாலாம் தலைமுறையார் அந்த 400 வருஷமுடிவிலே கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொண்டார்கள்.



17. "புகைகிற சூளை" இஸ்ரவேலர் எகிப்தில் அடையும் கொடிய துன்பங்களையும், "அக்கினிசுவாலை" அவர்கள் மகத்தான விடுதலையையும் குறித்தது. இவைகள் துண்டங்களின் நடுவே கடந்துபோன தேவசமுகத்தின் அறிகுறிகளாம். இப்படியாக தேவன் கடந்துபோனபின் ஆபிராமும் கடந்துபோயிருப்பான். பிற்பாடு அந்தப் பலி அக்கினியினால் பட்சிக்கப்பட்டதென்று நினைக்கத்தகும்.

18—21. "எகிப்தின் நதி" நீல்நதியல்ல. கானான்தேசத்தின் தென்கரையோரமாய் ஓடின ஒரு சிற்றாறும், தாவீது சாலோமோன் நாட்களில் இங்கே சொல்லப்பட்ட விஸ்தாரமான எல்லைவரையும் ஆண்டார்கள். 2 நாளா. 9: 26. உடனே அவ்வளவு தூரம் கட்டியாளாமற்போனதும், சட்டி ஆண்டவர்களும் நெடுங்காலம் கையாட்சிசெய்யாமற்போனதும் அவர்கள் பாவத்தினால்தான்.

"கேனியர்" மீதியானியரில் ஒரு வகுப்பார். ஆமலேக்கியர் நடுவே குடியிருந்தார்கள். "கெனிசியர்" கானானியரில் ஒரு வகுப்பார். குடியிருந்த இடம் தெரியாது. "கத்மோனியர்" பலஸ்தீனாவுக்கு வடகிழக்கிலிருந்த கானானியர். "ஏத்தியர்" 10: 15 வியா. "பெரிசியர்" யூதேயாவின் மலைகளில் வாசமாயிருந்த கானானியர். "ரெப்பாயீமியர்" 14: 5 வியா. "எமோரியர்" கானானியரில் மிகவும் பலத்த சாதியார். கானானின் நாலாம் மகனுடைய சந்ததியார். 10: 16 வியா. "கானானியர்" பலஸ்தீனாவின் மேல்புறத்திலும் பேனிக்கியாவிலும் குடியிருந்தவர்களுக்கு விசேஷப்பேர். "கிர்காசியர்" தீபேரியாக் கடலின் தென்கிழக்கிலிருந்தவர்கள். ஏர்மோன் மலைப்பக்கத்திலிருந்த ஏவியரின் ஒரு கிளை என்று நினைக்கப்படுகிறது. "எபூசியர்" கானானியரில் ஒரு பலத்த சாதியார். இவர்கள்தான் எருசலேமைக் கட்டி, அதற்கு தங்கள் முற்பிதாவின் பேராலே "எபூஸ்" என்று பேரிட்டார்கள்.

இப்படியாக ஆபிராமின் வித்துக்கு கானான்தேசத்தைக் கொடுப்போமென்ற வாக்குத்தத்தத்தை தேவன் உடன்படிக்கையினாலே உறுதிப்படுத்தினதுமல்லாமல் அதிலடங்கியதின்னதென்றும் தெளிவாய்ச் சொன்னார். இந்தச் சாதியார் அநேகர் மேற்காட்டிய 400 வருஷக்காலத்துக்குள் அற்றுப்போயிருக்கவேண்டும். அல்லது ஒரு சாதி இன்னொரு சாதிக்குள் கலந்துபோயாவது, தங்கள் பேரை மாற்றியாவது இருக்கலாம்.

## படிப்பினை.

கர்த்தரை நம்பி அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் எந்தச் சத்துருக்களுக்கும் பயப்படவேண்டியதல்ல. 1 வா—"நெடுங்காலமாய்க் காத்திருககுதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். "ஆபிராமும் விசுவாசத்தில் தளர்ந்துபோனான். நமது செபங்களுக்கு கர்த்தர் உடனேக்குடனே உத்தரவு அருளாததையிட்டு நாம் சோர்ந்துபோகக் கூடாது. 4, 5—தேவஅன்பு எவ்வளவு உருக்கமும் தயாளமுமானது! பிள்ளைக்கு இளக்காரம்கொடுக்கிற தகப்பனுடைவான அன்பை தேவன் அநேக விசை பாவிகளுக்குப் பாராட்டுகிறார். 7—21.

# ௰௬. அதிகாரம்.

## இஸ்மவேல் பிறந்தது.

---

1. "ஆகார்" பார்வோன் ஆபிராமுக்குக் கொடுத்த வேலைக்காரிகளில் ஒருத்தி என்று நினைக்கத்தக்கது.

2. ஆபிராமின் "கர்ப்பப்பிறப்பாயிருப்பவன்" மூலமாய் சனங்கள் பெருகி ஆசீர்வதிக்கப்படுவார்களென்று திரும்பத் திரும்ப வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்தும் அவன் சாராயிடத்தில் பிறப்பானென்று இதுவரையும் சொல்லப்படவில்லை. இப்போது அவனுக்கு 75 வயதும் ஆகிவிட்டது. அதினாலே அவள் விசுவாசியாயிருந்தும் இந்தக் கெட்ட யோசனைசொல்ல ஏவப்பட்டாள். மனிதசாதிக்குத் தகப்பன் தன் "மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்தானே." விசுவாசிகளுக்குத் தகப்பனும் அந்த மாதிரியைப் பின்பற்றி பாவஞ்செய்கிறான்! தேவபக்தியுள்ள எவனாவது இதற்குமுன் இரண்டு பெண்சாதிகளை வைத்திருந்ததாக நாம் வாசிக்கிறதில்லை. என்றாலும் அக்காலத்தில் இவ்வகை நடபடி சாதாரணமாயிருந்ததினாலே ஆபிராம் அதற்குச் சம்மதித்தான்.

3. "பத்துவருஷம்" ஆபிராம் கானானில் வந்து சேர்ந்ததுமுதல்.

4. ஆபிராமின் பட்சத்துக்கு ஆளாகிவிட்டேனென்றும், ஒருவேளை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்துக்குத் தாயாகிவிட்டேன் என்றும் ஆகார் நினைத்ததினாலே வீண்பெருமைகொண்டாள்.

5. சாராய் தன் குற்றத்தை உணராமல், ஆகார் இத்தனை ஆங்காரங்கொள்ள ஆபிராமே இடங்கொடுத்ததுபோல அவன்மேல் அநியாயமாய்க் குற்றஞ்சுமத்துகிறாள். தேவன் நியாயந்தீர்க்க அவரை அழைக்கிறாள். முற்கோபி எத்தனை குற்றஞ்செய்திருந்தாலும் தேவனைப் பார்த்து முறையிடுவது வழக்கந்தான்.

6. இந்தத் திகைப்பான சமயத்தில் ஆபிராம் வெகு ஞானமாய் நடந்துகொண்டான். தான் தேகஇச்சைகளால் ஏவப்பட்டு நடந்தவனல்ல என்று காட்டும்படி ஆகாரை கைவிட்டுவிட்டான். ஆனால் அவளுக்கு விரோதமாய்த் தீராக்கசப்பும் எரிச்சலும் அடைந்திருக்கிற சாராய் கையில் தான் ஆதரிக்கவேண்டியவளை முற்றும் ஒப்புக்கொடுத்துவிட்டது சற்றுப் போதாது. அதினாலே சாராய் பழய வழக்கம்போல அடிமைவேலை வாங்கி "கடினமாய் நடத்தினாள்." ஆகார் இப்பொழுது மனைவிக்கொத்த சலாக்கியத்தை நாடியிருந்தபடியினாலே மனம் பொறுமல் கோபத்தோடும் ஆங்காரத்தோடும் புத்தியீனமாய் ஆபிராம் வீட்டைவிட்டு ஓடிப்போனாள்.

7. ஏகோவா தாம் இவ்விடத்தில் "கர்த்தருடைய தூதனானவர்" என்று சொல்லப்படுகிறார். 10 வா. அதினாலேதான் நான் என்று பேசுகிறார். வேதத்தில் அநேக இடங்களில் இப்படிச் சொல்லப்படும்போதெல்லாம், தேவகுமாரனும் நித்திய வார்த்தையுமாகிய உடன்படிக்கையின் தூதனானவரைக் குறிக்கிறதென்று காணப்படுகிறது. தேவதூதன் காணப்பட்டதாக வருகிற முதலாவது இடம் இதுவே.

ஆகார் எகிப்துதேசத்தாளானதினாலே அந்தத் திசையை நோக்கிப்போனாள். ஆனால் பயணவருத்தத்தினால் இளைத்துப்போய் மனக்கிலேசத்தில் மூழ்கி, அப்புறம்போக ஏலாமல் ஆயாசத்தினால் ஒரு நீரூற்றண்டையிலே உட்கார்ந்தாள்.



8. "சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே" ஆபிராமின் மனைவியே என்கவில்லை. இதினாலே அந்த விவாகத்தை அவர் ஒப்பவில்லை என்றாகிறதே. மேலும் இந்த வார்த்தைகள் அவள் நாச்சியாரை அற்பமாயெண்ணின பெருமையைக் கண்டிக்கிறதாயுமிருந்தது.

"எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?" நீ இருந்த இடத்தை விட்டுப்போவது சரியல்ல, தீமைக்கேதுவாகும்.

"திரும்பிப்போய் நீ" இதினாலே அவளுக்குண்டான தொந்தரவுகளெல்லாம் பாவத்தினாலே வந்ததென்றும் அவள் பொறுமையாய்ச் சகிக்கவேண்டுமென்றும் புத்திசொல்லுகிறார்.

11. "இஸ்மவேல்" தேவன் கேட்பார் என்றர்த்தம்.

12. "துஷ்டமனுஷன்" என்பது எபிரேயு மூலத்தில் "காட்டுக்கழுதை மனுஷன்" என்றிருக்கிறது. ஒருவேளை இது அவன் குணத்தைக் காட்டும் குறிப்பாயிருந்தாலும், முக்கியமாய் அவன் சந்ததியாருடைய நிலைமையே குறிக்கப்படுகிறது. சரசேனர் முதலான அரபர் அவன் சந்ததியார். உலகத்திலுள்ள எச்சாதியாருக்கும் வித்தியாசமாக இவர்கள் நாகரீகமற்ற மூர்க்கராய் கொள்ளையாடி சீவனம்செய்துவருகிறார்கள். பார்சர், மக்கெதோனியர், உரோமரானவர்கள் முறையே இவர்களைக் கீழ்ப்படுத்தப் பார்த்தும் கூடாமற்போனார்கள். கடைசியாக மகமது எழும்பி அவனும் அவனுக்குப் பின்வந்தவர்களும் அடித்ண்டமாய் சனங்களைக் கீழ்ப்படுத்தி உலகத்தின் மிகுதியான பாகத்தைஜெயித்து ஆண்டார்கள். துருக்கர் அவர்களைக் கீழ்ப்படுத்த முயன்றும் கூடாமற்போனது மாத்திரமல்ல, அவர்கள் மெக்காவுக்கு யாத்திரைசெய்கிறதில் இப்போ 300 வருஷமாய் மிகுதியான இறைகொடுத்தும் வருகிறார்கள். நாளதுவரையும் வாக்கியத்தில் சொல்லப்பட்டபடியே நடந்துவருகிறது. 12 வாசி.

மேலும் இஸ்ரவேலர் ஏதோமியர் முதலிய ஆபிராமின் சந்ததியார் குடியிருந்த பக்கத்தில் இஸ்மவேலின் சந்ததியார் கொள்ளையடித்துசீவனமசெய்தார்கள். என்றாலும் அவர்களில் எவனாவது இவர்களைக் கீழ்ப்படுத்தினதில்லை.

13. "என்னைக் காண்பவரை" எனக்கு நன்மையாக காட்சியளித்த இரக்கமுள்ள தேவனை, அபாத்திர பாவியாகிய "நானும் இவ்விடத்தில்" அதாவது என் நாச்சியார் வீட்டுக்கும் தேவனுடைய ஏற்பாடுகளுக்கும் தூரமாயிருக்கிற இந்த வரட்சியான வனாந்தரத்தில் "கண்டேனல்லவா" என்று தேவன் இவளுக்குப் பாராட்டின தயாளத்தையும் இரக்கத்தையும் குறித்து அதிசயப்படுகிறவளாய் இப்படிச் சொல்லுகிறாள்.

"கர்த்தருக்கு" தூதனானவர் தவிர வேறொருவரும் இவளோடு பேசவில்லை. ஆகையால் அவர் கர்த்தர் என்பது தெளிவாகிறதே. 7 வியா.

"என்னைக் காண்கிற தேவன்" நாம் பாவஞ்செய்யத் தூண்டப்படும்போதும்; தரித்திரம, கிலேசம், துன்பம், சோதனை இவற்றால் அலைசடிப்படும்போதும்; நோய் நொடியால் வருந்தும்போதும்; கடைசியாக மரணஉபாதையும் மனஇருளும் வந்து நெருக்கும்போதும் இந்தச் சத்தியத்தை மறக்கவேண்டாம்.

14. "பெயர்லகாய்ரோயீ" என்னைப்பார்க்கிற ஜீவனுள்ளவரின் கிணறு என்றர்த்தம். இதுமுதல ஆகார் புத்தியடைந்து தன் நாச்சியார் வீட்டுக்குத் திரும்பிப்போய் சீராய் நடந்தாளென்று தோன்றும்.

15. நடந்த காரியத்தையெல்லாம் ஆகாரால் சொல்லக்கேட்டு "ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்டான்."

### படிப்பினை.

எந்த நிலைமையிலிருந்தாலும் துன்பமுண்டு.—பெரிய பெரிய பக்திமான்களுக்கும் அருவருப்பான தப்பிதக்குற்றங்களுண்டு. வழக்கம் என்ற முகாந்தரத்தினாலே உலகத்தில் அநேக தீமைகள் விளைகின்றன.—"எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?" இந்தக் கேள்விகளை நம்மைப் பார்த்துக் கேட்டு இதற்கு உத்தரவு சொல்லவேண்டும்.—நம்முடைய தேவன் ஆபத்துக்கு உதவுகிற தேவனாயிருக்கிறார். எப்பேர்ப்பட்ட ஈனபாவியையும் அவர் கவனிக்கிறார். நாம் ஆபத்தில் அகப்பட்டிருக்கும்போது கர்த்தர் நம்மைப் பார்க்கிறார் என்று நினைக்கக்கடவோம்.—நம்முடைய இஷ்டகாரியங்களைக் கர்த்தர் கவனிக்கிறதில்லை என்று நினைப்போம். இது தப்பிதம். அவருக்குத் தெரியாமல் நாம் பசிதாகமாயிருக்கிறதில்லை. அவருக்குத் தெரியாமல் நாம் பட்டினியாயிருக்கிறதுமில்லை. சாராயின் அடிமைப்பெண்ணுக்குத் தாகமெடுக்க கர்த்தருக்குப் பொறுக்கவில்லையே! சாராள் பட்டினியாயிருக்கச் சம்மதிப்பாரா? அவருடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடார். நமது ஆத்துமாவுக்காக அவர் செய்திருக்கிறதை என்ன சொல்ல? எல்லா நன்மையும் ஏசுக்கிறிஸ்து நாதராலும் அவர் மூலமாகவும் நமக்கு வருகிறதென்று திடச்சித்தமாய் எண்ணிக்கொள்ளக்கடவோம். ஆனால் அவருடைய அன்பில் எவ்வளவு சொற்பமாத்திரம் நமக்குத் தெரியும் என்பதுதான் துக்கம்!

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** அங்கிலேய தேசத்தின் வருமானவரி விபக்ஷத்தாரான பர்மிங்கம் பிரஜைகள் அதுவிஷயமாய்க் குறித்து தங்கள் பிரதிநிதிக்கு எழுதின கடிதத்துக்கு அவர் எழுதின பதிலில் வருமானவரி இதமானதல்ல, ஆயினும் அதை நிவர்த்திக்கத்தக்க காலம் இன்னும் வரவில்லை. துரைத்தனத்தார் யதார்த்தமும் கிரமுமாய்க் காரியங்களை நடப்பித்தால், வருமானவரியும் மற்றும் சில வரிகளும் இல்லாமல் நிர்வகிக்கலாமென்றாராம்.

சென்ற ஏப்பிரில்௴ ஸ்ப. பி. ஜீ. என்னும், சுவிசேஷ மிஷன் சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டம் சீமையிற் கூடிற்று. காண்டர்புரி மகா அத்தியக்ஷ குரு அக்கிராசனாதிபதியாகவிருந்தார். சென்னைக் கவர்னராயிருந்த நேபியர் பிரபு, மிஷியன் சங்கங்களால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட குருக்கள்மார் செய்துவருகிற முயற்சி இந்துக்கள்முதலானவர்களுக்கு அறிவு கொளுத்தவும் அவர்களைச் சீர்ப்படுத்தவும் மிக உதவியாயிருக்கிறதென்று வற்புறுத்திப்பேசினார்.

பிரான்சிய பிரஜாதிபத்தியத்தின் அதிபதியாகிய தேயர் துரை, அக்கிராசனத்தைவிட்டு நீங்க, நப்போலியன் சக்கரவர்த்திக்கு அதிகப் பிரியரும் சேனாபதியுமான மக்மேஹன் துரை தேசசபையின் அக்கிராசனாதிபதியானார். தற்கால பரிவர்த்தனம் ஏகாதிபத்தியத்திற்கு விபக்ஷமல்ல. பிரான்சிய தேசத்தார் யாவரும் ஏகாதிபத்தியப்பிரியர். காலஞ்சென்ற சக்கரவர்த்தியின் குமாரர் அங்கிலேய துரைத்தன வித்தியாசாலையில் ஜாக்கிரதையோடே படித்துவருகிறார். அவர் இனி நாலாவது நப்போலியன் சக்கரவர்த்தியாகவுங்கூடும். மக்மேஹன் துரை



தாம் சர்வதேசசபையாருடைய விதிப்படி நடக்கவும், தேசத்தை அநுகூலமாய்ப் பரிபாலனம்பண்ணவுந் தக்கதாக எத்தனிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

சென்ற௴ 1௳ வியன்னா பொருட்காட்சிச்சாலைப் பிரதிஷ்டை நடந்தது.

ஆபிரிக்க சிறை வியாபாரத்தைத் தடுக்கும்படி யத்தனித்துப் போன ஸ்ரீ பார்ட்டில் பிரேயர் துரை திரும்பி வந்தாரென்று முன் சொன்னோமே. ஜன்ஸீபார் சுல்த்தான் மஹாராணியவர்கள் தனக்குச் சமாதானமாய்ச் சொல்லியனுப்பிய நற்புத்தியைப் புறக்கணித்துவிட்டதினால், "அடங்காப் பாம்பிற்கு மூங்கிற்றடி ஔஷதம்" என்பதற்கிசைய, மஹாராஜ ஸ்திரீயவர்கள் பம்பாய், ஆதேன், திருக்கோணமலை, மொரீஷத்தீவு முதலான துறைமுகங்களில் நங்கூரம்போட்டு தங்குகிற பல யுத்த கப்பல்கள் ஜன்ஸீயாருக்குத் தீவிரித்துப் போய் நெருங்கக் கூடவேண்டுமென்று உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

பாரசீக அரசன் சென்ற மாசம் 18௳ லண்டனில் போய்ச்சேர்ந்தார்.

கைவாவின் கான் தன்மேல் படையெடுத்துவருகிற ருஷியரை எதிர்க்கப் பதினாயிரம் யுத்தவீரரை மூன்று சேனைவகுப்பாக ஏற்படுத்தியிருக்கிறானாம்.

**இந்தியா.** மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னரவர்கள் சென்ற௴ 6௳ பிறப்பித்த உத்தரவொன்றில், பிரஜைகள் உயர்ந்த படிப்புக் கற்றுக்கொள்வதற்கு துரைத்தனத்தார் இனி அதிக உதவிப்பணம் கொடுக்கமாட்டார்களென்று சொல்லியிருக்கிறார்கள். காரியம் நிதானந்தானே. இதுவரை துரைத்தன உதவியைக்கொண்டு உயர்ந்த கல்விகற்று உயர்ந்த சம்பளம் பெற்றிருக்கிறவர்களும், ஸ்திதிவந்தரான இந்துக்களும் தங்கள் சொந்தச் செலவினால் வேண்டிய பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துக்கொள்ளலாமே. அவர்கள் அப்படிச்செய்துகொண்டால், அறிவீனராயிருக்கும் எண்ணிறந்த ஏழைப் பிரஜைகளுக்கு துரைத்தனத்தார் சாமானிய கல்வியுண்டாக முயற்சிசெய்வதெளிதாகும்.

---

## நோட்டீஸ்.

### மகாகனம்: சென்னபட்டணம் கண்காணியாரவர்களுடைய பந்தயப் பரீட்சை.

நாளது 1873ம் ௵ ஜூன்௴ 19௳ வியாழக்கிழமை 10 மணிமுதல், பாளையங்கோட்டை தெற்குக் கல்விச்சாலையில் நடத்தப்படும். பரீட்சைக்கு வருகிறவர்களெல்லாரும் அந்த நேரத்தில் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

Ashton Dibb.

நாளது ௵ ஜூலாய்௴ 3௳ வியாழக்கிழமையன்று கைம்பெண் சங்கம் கூடும்.

---

ஜூன் மீ நாள் 30, வைகாசி மீ 21உ முதல், ஆனி மீ 18உ வரை.

| வாரம். | [illegible] | [illegible] | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௨௧ | கர்த்தர் மகிமையாய் வெற்றிசிறந்தார். யாத். 15:21. |
| தி | 2 | ௨௨ | நானே உன் பரிகாரியாகிய கர்த்தர். 26. |
| செ | 3 | ௨௩ | வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன். 16:4. |
| பு | 4 | ௨௪ | கர்த்தருடைய மகிமையைக் காண்பீர்கள். 7. |
| வி | 5 | ௨௫ | அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதில்லை. 2 இராஜா 17:34. |
| வெ | 6 | ௨௬ | கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக. 39. |
| ச | 7 | ௨௭ | நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கையென்ன? 18:19. |
| ஞா | 8 | ௨௮ | கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக்கேளும். 19:16. |
| தி | 9 | ௨௯ | தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள். சங்கீதம் 81:12. |
| செ | 10 | ௩௰ | என் ஜனம் எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும். 13. |
| பு | 11 | ௩௧ | தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார். 82:1. |
| வி | 12 | ௩௨ | சிறுமையானவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதிசெய்யுங்கள். 3. |
| வெ | 13 | ௧ | அறியாமலும் உணராமலுமிருக்கிறார்கள். 5. |
| ச | 14 | ௨ | நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர். 8. |
| ஞா | 15 | ௩ | தேவனே, பேசாமலிராதேயும். 83:1. |
| தி | 16 | ௪ | பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும். நீதிமொ. 1:32. |
| செ | 17 | ௫ | மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும். 32. |
| பு | 18 | ௬ | உன் செவியை ஞானத்திற்குச் சாய். 2:1. |
| வி | 19 | ௭ | கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். 6. |
| வெ | 20 | ௮ | நீ நல்லவர்களின் வழியிலே நடப்பாயாக. 20. |
| ச | 21 | ௯ | கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார். ஏசா. 49:5. |
| ஞா | 22 | ௰ | கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல்செய்தார். 13. |
| தி | 23 | ௧௧ | என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன். 16. |
| செ | 24 | ௧௨ | நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய். ஓசியா 13:9. |
| பு | 25 | ௧௩ | என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு. 9. |
| வி | 26 | ௧௪ | குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன். யோவா. 9:25. |
| வெ | 27 | ௧௫ | தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? 35. |
| ச | 28 | ௧௬ | மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். உரோமர் 8:13. |
| ஞா | 29 | ௧௭ | நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாம். 17. |
| தி | 30 | ௧௮ | நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? 31. |

## விசேஷித்த நாட்கள்.

1. பரிசுத்த ஆவியின் பண்டிகையாகிய ஞாயிறு.
8. திரித்துவத்தின் பண்டிகையாகிய ஞாயிறு.
10. பௌரணமி.
15. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
22. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
24. அமாவாசை.
29. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 25.** **July.** **No. 7.**

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 122
Notes on Genesis. ... ... ... ... ... ... 125
Christian Church History. ... ... ... ... ... 131
The Parables of Christ... ... ... ... ... ... 134
Summary of Notes. ... ... ... ... ... ... 138


**அட்டவணை:**


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௨௨
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௧௨௫
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௧௩௧
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௧௩௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௩௮



**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS.**
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்.

எ. ஜூலை. ௲அ௱அ௰எ.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### முன்னிலைமையும் பின்னிலைமையும்.

யோபு 1; 2; 42: 10—17.

உலகத்திலுள்ள சரித்திரங்களில் மகா பழமையான ஓர் சரித்திரத்தோடு இந்தப் பகுதியைத் தொடங்குகிறோம். ஆதியோடு அந்தமாய் அதை விவரிக்கிறதானால் வெகு நேரம் பிடிக்கும். யோபின் ஆகமம் முழுமையும் அதுதான். விளங்குதற்கரிய அநேக காரியங்களும அதில் அடங்கியிருக்கின்றனவே.

முதல் இரண்டு அதிகாரங்களையும் நாற்பத்திரண்டாம் அதிகாரத்தையும் வாசித்துக்கொண்டு, இக்கடைசி அதிகாரத்தின் பன்னிரண்டாம் வாக்கியத்தை விசேஷமாயக் கவனியுங்கள். "கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்."

யோபின் முன்னிலைமை யென்ன? இருநூறு முன்னூறு வீடுகளுள்ள ஒரு பட்டணத்தைச் சற்று யோசித்துப்பாருங்கள். அதைச் சுற்றிக் கோட்டையும் வாசல்களுமிருக்கின்றன. தூரத்திலே எப்பக்கமும் மலைகள் காணப்படுகின்றன. பட்டணமோ ஒரு மைதானத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அதின் கோபுரங்களொன்றிலே ஏறி நின்றுகொண்டு நாற்றிசையும் சுற்றிப்பாருங்கள். மலைகளின் அடிவாரமட்டும் பச்சையுள்ள இடமெல்லாம் கூடாரங்கள் கறுப்பாய்க் காணப்படுகின்றனவே. அவைகளைச் சுற்றிலும் ஆடுமாடுகள் ஏராளமாய் மேய்ந்துகொண்டிருக்கிறதையும் மேய்ப்பர்கள் இங்கும் அங்கும் நடந்துதிரிகிறதையுங் காண்கிறோமே. இதோ ஒரு மந்தை ஒட்டகங்கள் வெயிலில் படுத்துக்கிடக்கிறது. அதோ ஒரு கூட்டம் கழுதைகள் பந்தயக்குதிரைகளைப்போல மைதானத்திலே குதித்து ஓடுகிறது. அதோ ஐந்தாறு வண்டில்களில் நேர்த்தியான காளைகள் பூட்டிப்போகிறதையும வண்டிற்காரர் தாற்றுக்கோலால் குத்தி அவைகளைச் சத்தங்காட்டி ஓட்டுகிறதையும், நூறு இருநூறு ஏர்கள் இங்கும் அங்கும் உழுகிறதையும் பார்க்கிறீர்களே.

நல்லது இப்பொழுது கோபுரத்திலிருந்து இறங்கி அந்தக் கூடாரங்களுக்கு நேரேபோய்ச் சற்று உலாவிவருவோம். இந்த ஒட்டகங்கள் யாருடையவைகள்? யோபினுடையவைகள். அந்த நேர்த்தியான கழுதைகள் யாருடையவைகள்? அவைகளும் யோபுடையவைகள்



தான். அந்த வண்டிற்காரரிடத்தில் மாடுகள் யாருடையவைகளென்று கேளுங்கள், அவைகளும் யோபினுடையவைகள்தான். இந்தத்திக்கு எங்கும் காணப்படுகிற ஆடுமாடுகளனைத்தும் அவனுடையவைகள்தானா? ஆம். மேய்ப்பர்களெல்லாரும் அவனை "எங்கள் எசமான்" என்று சொல்லி எவ்வளவு சந்தோஷத்தோடு அவனுடைய ஆஸ்திபாஸ்திகளை ஒவ்வொன்றாய் விவரிக்கிறார்கள். "அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும் மூவாயிரம் ஒட்டகங்களும் ஐந்நூறு ஏர்மாடுகளும் ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்களிருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரருமிருந்தார்கள்."

இப்பொழுது பட்டணத்துக்குள்ளே போங்கள். அங்குள்ள வீடுகளில் பெரிதும் அலங்காரமுமான வீடு அவனுடையது. அதோ கதவு திறந்திருக்கிறது. அவன் வெளியே வருகிறான். அவன் செல்வனாயிருந்ததினாலே மற்றவர்களைப்பார்க்க தான் பெரியவனென்று எண்ணி மேட்டிமையாய் வருகிறதில்லை. தயாளசிந்தையும் அன்பான குணமும் அவன் முகத்தில் விளங்குகிறது. தனக்கு எதிர்ப்படுகிற அயலகத்தார் யாவரையும் பட்சமாய் விசாரிக்கிறான். குழந்தைகள் அவனைக் கண்டவுடனே ஓடிப்போய் அவன் வஸ்திரத்தின் ஓரத்தைப் பிடித்துக் கொள்ளுகிறதைப் பாருங்கள். வாலிபர் அவன் கடந்துபோகுமட்டும் நிற்கிறார்கள். வீட்டுத் திண்ணைகளிலும் வீட்டு முகப்பில் பந்தல்களிலுமிருக்கிற விருத்தாப்பியர்முதலாய் எழுந்து நின்று அவனுக்கு மரியாதைசெய்கிறார்கள். ஏழைகள் பலரும் தங்கள் வருத்தத்தை அவனிடத்தில் அறிவிக்கிறார்கள். அவர்கள் சொல்வதுக்கெல்லாம் பட்சமாய்ச் செவிகொடுத்து, அவர்களுக்கு உதவிசெய்வேனென்று வாக்குக்கொடுக்கிறான். அவன் நடந்துபோகும்போது எங்கும், "கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பாராக," "அவர் குமாரரையும் ஆசீர்வதிப்பாராக" அவர்களெல்லாரும் தங்கள் பிதாவைப்போலிருப்பார்களாக," "அவருடைய மூன்று குமாரத்திகளையும் அப்படியே ஆசீர்வதிப்பாராக" என்கிற சத்தமாகவே இருக்கிறது.

ஆம், இதுதான் யோபுக்கு உண்டாயிருந்த பாக்கியம். அவன் பாக்கியவானாயிருந்ததற்கு ஏது, பட்டணத்துக்கு வெளியேயிருந்த செழிப்பான மேய்ச்சல் நிலங்களுமல்ல, அங்கிருந்த கூடாரங்களும் ஏராளமான வேலையாட்களுமல்ல, ஆடுமாடுகள் கழுதை ஒட்டகங்களுமல்ல, அவனுக்கிருந்த மிகுந்த சிறப்பும் மேன்மையுமல்ல. பின்னை எதுதான் ஏதுவென்றால், அவனைச் சுற்றிக் குடியிருந்தவர்கள் காண்பித்த மரியாதை அன்பு, அவனுடைய அருமையான பத்துப் பிள்ளைகளிடத்தில் விளங்கின பக்தி பட்சம், அவன் ஆராதித்த தேவனுடைய அன்பு தயை ஆகிய இவைகள்தான். யோபின் முன்னிலைமை இதுவே. ஆ எவ்வளவு சிறந்த பாக்கியமான நிலைமை.

இப்பொழுது இரண்டாவதாக யோபின் பின்னிலைமையை விசாரிப்போம். ஆ, இரண்டுக்கும் இடையில் மிகுந்த சஞ்சலமான காலமாயிருந்தது. அதைப்பற்றி இப்பொழுது பேசவேண்டியதில்லை. யோபை மறுபடியும் நோக்கிப்பாருங்கள். பட்டணத்தின் மதிலினின்று பார்க்கும்போது இப்பொழுதும் முன் கண்ட கறுப்புக் கூடாரங்களை மலையடிவாரமட்டும் எத்திசையிலுங் காண்கிறோம். அவைகளின் தொகைமாத்திரம் முன்னையிலும் அதிகமாயிருக்கிறது. மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள், கழுதைகள்முதலிய மிருகஜீவன்கள் மைதானமெங்கும் இப்பொழுது மேய்ந்துகொண்டிருக்கின்றன. அவைகளின் தொகையை விசாரிக்கும்பொழுதோ, முன்னிருந்ததற்கு இரட்டிப்பு என்று

செரியவருகிறது. ஏழாயிரம் ஆட்டுக்குப் பதினாலாயிரம் ஆடும், மூவாயிரம் ஒட்டகத்துக்கு ஆறாயிரம் ஒட்டகமும், ஐந்நூறு சோடு ஏர்மாட்டுக்கு ஆயிரம் சோடு மாடும், ஐந்நூறு கழுதைக்கு ஆயிரம் கழுதையுமிருக்கிறது. அவன் தன் வீட்டிலிருந்து புறப்பட்டு அதோ வெளியே வருகிறானே, அதையும் கவனியுங்கள். அவன் முன்போலவேயிருக்கிறான், என்றாலும் சில மாறுதல்களும் காணப்படுகின்றன. அவன் இப்பொழுது அதிக வயசுள்ளவன்போல் தோன்றுகிறான். அவன் முகத்தில் கொஞ்சம் துக்கமும் விளங்குகின்றது. அவன் யாரைக்கண்டாலும் சிரித்த முகமாய்ப் பேசுகிறான். ஆகிலும் மற்றவர்கள் அவனோடு பேசுகிற சாடையைப்பார்த்தால் ஓர்விதமான உருக்கமும் துக்கமுங் காணப்படுகின்றது. அவன் குமாரரைப் பாருங்கள். முன்போல ஏழு சௌந்தரியமும் குணசீலமுமான பிள்ளையாண்டார்தான். ஆகிலும் எவ்வளவு சிறு பிராயமாயிருக்கிறார்கள். அவர்கள் தொகையில் முன்போலவென்றாலும் முன்னிருந்தவர்களல்ல.

வீட்டில் தாயண்டையில் சௌந்தரிய ரூபமான மூன்று பெண்குழந்தைகளுமிருக்கிறார்களே. இவர்கள் ஆகையில் யோபின் இருதயத்தைப் பூரிப்பித்து மகிழ்ச்சியாக்கின மூன்று குமாரத்திகளுமல்ல. எந்தக் காரியங்களைப் பார்த்தாலும் அந்த வீட்டில் சஞ்சலம் நேரிட்டிருந்ததுபோல அறிகுறி காணப்படுகிறது. ஆகிலும் சந்தோஷநாள் திரும்ப வந்துவிட்டது. யோபுவுக்கு நேரிட்ட தீமையெல்லாம இரட்டிப்பான நன்மையைப்பெற்றுக்கொண்டான். "பிள்ளைகளின் தொகை தவிர மற்றெல்லா வற்றிலும் இரட்டிப்புப் பெற்றுக்கொண்டானென்று சொல்லவேண்டும். என்னத்தினாலெனில் முன் அவனுக்கு ஏழு குமாரரிருந்தார்கள், இப்பொழுதும் ஏழுபேர்தானே. பின்னையெப்படி அவனுக்கு முன்னிருந்த பிள்ளைகளுக்கு இரட்டிப்பான பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டானென்று சொல்லலாம்" என்பதுபோல் உங்களிற் சிலர் ஒருவேளை நினைப்பீர்கள்.

இந்தக் கேள்விக்கு சிறுவன் ஒருவன் சொன்ன உத்தரவை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். யோபினுடைய பிற்காலச் சரித்திரத்தை நான் அவனுக்கு விவரித்துக்கொண்டுவந்தேன். வரும்பொழுது அச்சிறுவன் "யோபுக்கு இருபது பிள்ளைகளிருந்தார்கள்" என்றான். "அது எப்படி" என்று கேட்டேன். அதற்கு அவன் "யோபுக்குப் பதினாலு குமாரரும் ஆறு குமாரத்திகளுமிருந்தார்களே" என்றான். "அப்படியல்ல, ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் தானேயிருந்தார்கள்" என்றதற்கு, "ஆம், பூமியில் ஏழும் மூன்றும் பத்துப்பெயரிருந்தார்கள், மோக்ஷத்திலும் ஏழும் மூன்றும் பத்துப்பெயரிருந்தார்களே" என்றான்.

இந்தப் பையனுடைய கருத்து, இறந்துபோன பிள்ளைகளை யோபு இழந்துபோகவில்லையென்பதுதான். ஆகையால் அவர்களும் அவன் துன்பத்துக்குப்பின் பிறந்தவர்களுமாக அவனுக்கு முன்னிருந்த பிள்ளைகளுக்கு இரட்டிப்பான பிள்ளைகளிருந்தார்கள் என்று கணக்காகும்.

நல்லது, இந்தச் சிறுவன் சொன்னது சரியென்றும். பூமியிலே யோபு இழந்துபோன பிள்ளைகள் மோட்சலோகம் சேர்ந்தார்களென்றும் நம்பத்தக்கதுதான். யோபு அவர்களுக்கு நல்ல தகப்பனாயிருந்து அவர்கள் பாவங்களை மன்னிக்கவும் அவர்களைப் பரிசுத்தமாக்கவும் தேவனைநோக்கி அடிக்கடி பிரார்த்தித்துவந்தானென்று அறிவோமே. அவன் பண்ணின செபங்களை தேவன் கேட்டிருப்பாரென்று நினைக்கலாம். அப்படியானால் அவர்களெல்லாரையும் தேவன் மோட்சத்திற்



சேர்த்திருப்பாரே. ஆகையால் எதார்த்தமாய் யோபு அவர்களில் ஒருவரையும் இழந்துபோகவில்லை.

யோபின் பின்னிலைமை இதுதான். முன்னிருந்ததற்கு இரட்டிப்பான மாடுகளும், ஆடுகளும், ஒட்டகங்களும், கழுதைகளும் அவனுக்குக் கிடைத்தது. இரட்டிப்பான குமாரரும் குமாரத்திகளும் அவனுக்கு உண்டாயிருந்தார்கள். ஆகிலும் அவனுக்குண்டான நன்மைகளில் உச்சிதமானது இதுவல்ல. அந்த உத்தமன் தனக்கு நேரிட்ட பெரிய துன்பத்தின்மூலமாய் அருமையான பல படிப்பினைகளைப் படித்துக்கொண்டான்.

முதலாவது, யோபு கற்றுக்கொண்ட படிப்பினையென்னவென்றால், தனக்குள்ள யாவும் தேவனாலேயே கிடைத்தது என்பதுதான். தேவனால் அருளப்பட்டதென்றால் அவருக்குச் சித்தமான வேளையில் எடுத்துக்கொள்ளலாமே. யோபு மிகுந்த சஞ்சலத்துக்குள் அகப்பட்டிருந்தபொழுது அவன் சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள். "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்துக்கொண்டார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக."

பிரியமானவர்களே, உங்களிற் சிலருக்கு அதிகச் சுகமும் பாக்கியமுமுண்டு. அவைகளினிமித்தம் பெருமைபாராட்டாதிருங்கள். அவைகளெல்லாம் தேவனால் உங்களுக்கு அருளப்பட்ட நன்மைகளேயல்லாமல் வேறல்லவே. அதுகளுக்காக தேவனை நன்றியறிந்த புத்தியாய் ஸ்தோத்திரித்து, அவைகளை வீணாய்ச் செலவிடாமல் அவைகளைக் கொண்டு நன்மைசெய்யப் பிரயாசப்படுங்கள்.

இதை வாசிக்கிறவர்களிற் பலர் தரித்திரராக்கும். நீங்கள் அடிக்கடி கஷ்டப்படுகிறவர்களாயிருக்கலாம். சில வேளைகளில் உங்களுக்குச் சாப்பிட ஆகாரமும் உடுக்க நல்ல வஸ்திரமுமில்லாதிருக்கும். உங்கள் வீடும் ஒருவேளை சுகமில்லாததாயிருக்கலாம். என்றாலும் அதனிமித்தம் மட்டுமிஞ்சிக் கிலேசப்படாமலும் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்காமலுமிருங்கள். உங்கள் துக்கமே சந்தோஷமாயிருக்கலாம்.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### ௰௭. அதிகாரம்.

#### விருத்தசேதன உற்பத்தி.

1. "தரிசனமாகி" ஆபிராம் ஆகாரை விவாகம்பண்ணி கொஞ்சங்குறைய 14 ௵ சென்றபின் இத்தரிசனமுண்டானது. இவ்வளவு நீண்ட காலமாய் அவன் விசுவாசம் சோதிக்கப்பட்டது ஆகாரை விவாகஞ்செய்த தப்பிதத்தைக் கண்டிக்கிறதாயிருக்கலாம்.

2. "சர்வவல்லமையுள்ள தேவன்" என்பது "உத்தமனாயிரு" என்ற கட்டளைக்கு மூலாதாரமாக வருகிறது.

"உத்தமனையிரு" இனி அவிசுவாசமான உபாயங்களுக்கு இடங்கொடாதே. நீதியின் பாதைகளைக் காத்துநட. நாம் உனக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற நமக்கு இஷ்டமான காலத்துக்கும் வழிவகைக்கும் ஒப்புவித்துப்போடு என்றர்த்தம்.

4. முன் உறுதிப்படுத்தின உடன்படிக்கைக்கு என்னென்ன தடைதாமதங்கள் நேரிட்டாலும் எவ்விதமும் நிறைவேற்றப்படுமென்று அதை மறுபடியும் உறுதிப்படுத்தி முத்திரையிடுகிறார். எபி. 6: 13—20.

5. "ஆபிராம்" உயர்ந்த பிதா என்றர்த்தம். "ஆபிரகாம்" பலசன பிதா என்றர்த்தம்.

6. இஸ்மவேலர், மீதியானியர் முதலான சாதியார் ஆபிரகாமுக்கு ஆகாராலும் கேத்தூராளாலும் பிறந்தவர்கள். இஸ்ரவேலரும் ஏதோமியரும் சாராளாலே உண்டானவர்கள். இவர்களெல்லாரும் வெகுகாலம் பலத்தசாதியாராயிருந்து தங்கள் சுய பிரபுக்களால் ஆளப்பட்டார்கள். இஸ்ரவேல் இராசாக்களல்லாமலும், தாவீது, சாலோமோன், ரெகொபெயாம் முதலானவர்கள் ஏறக்குறைய 600 ஞூறு பேர்போன இராசாக்களாய் ஆண்டார்கள்.

7, 8. ரோமர் 3: 2. 9: 4, 5. வாசி. "நித்திய" என்ற வார்த்தை உலக சலாக்கியங்களை அடுத்து வழங்கும்போது அவை தவறாமல் நிறைவேறுவதையும், ஆவிக்குரிய உள்ளான காரியங்களை அடுத்துவரும்போது முடிவில்லாத காலத்தையும் குறிக்கும்.

9—12. இந்த உடன்படிக்கைக்குட்பட்டதற்கு அத்தாட்சியாகவும், எகோவாவைப்பற்றிய விசுவாசத்தின் அறிக்கையிடவும், தேவ சித்தத்துக்கு இணங்கி நடப்பதற்கு ருசுவாகவும் ஆபிரகாமும் அவன் சந்ததியாரும் விருத்தசேதனம் செய்யும்படி கட்டளைபெற்றார்கள். அவர்கள் எகோவாவை வழிபட்டவர்கள் என்பதற்கு இது அடையாளமாயிருந்தது. இப்படியாக விருத்தசேதன சடங்கு உற்பத்தியானது.

மனுஷர் கெட்ட சுபாவத்தோடு பிறந்திருப்பதையும், இந்தக் கெட்ட சுபாவமாகிய "பழைய மனிதனை" விசுவாசிகள் களைந்துபோடவேண்டும் என்பதையும் குறிப்பாய்க் காட்டும்படி "நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்பண்ண" ஏற்பாடுசெய்தாரென்று தோன்றும். எபே. 4: 20—24. இது மறுபிறப்புக்கு அடையாளமாயும் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாயுமிருந்தது. ஏனென்றால் ஆபிரகாமைப்போல் "விசுவாசத்தினாலுண்டாகும் தேவ நீதி"யினாலே ஒரு பாவி நீதிமானாக்கப்பட்டதற்கு இருதய விருத்தசேதனம் உள்ளான முத்திரையாயிருக்கிறது. ரோமர் 4: 9—12.

விருத்தசேதனம் இரத்தஞ்சிந்தும் நியமமாம். இது: பரிசுத்த ஆவியின் சுத்திகரித்தல் கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே பாவிகளுக்கு அருளப்படுவதையும், பாவத்துக்கும் மாம்ச இச்சைக்கும் விலகி நடப்பது மாம்சதேகத்துக்கு மிகவும் வருத்தம் என்பதையும் சுட்டிக்காட்டினது. எல்லாருக்காகவும் கிறிஸ்துவின் இரத்தம் ஒரேதரம் சிந்தப்பட்டது வரையும் தேவ நியமங்களெல்லாம் இரத்தம் சிந்தும் சடங்குகளோடு ஏற்படுத்தப்பட்டிருந்ததைக் கவனிக்கத்தக்கது. கிறிஸ்துவுக்குப்பின் அவை எல்லாம் அற்றுப்போயிற்று.

ஆபிரகாமும் ஈசாக்கும் இஸ்ரவேலருமாத்திரமல்ல, இஸ்மவேலும் ஆபிரகாமின் "வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும் அப்படியே(தேவ கட்டளைப்படி) விருத்தசேதனம்பண்ணப்"பட்டார்கள். ஏனென்றால் இஸ்ரவேலருக்கு கானான்தேசம் கொடுக்கப்படுவதைமாத்திரமல்ல, தேவனுடைய சர்வலோக சபைக்கும் கிறிஸ்துவினிமித்தம் பரம கானான் கொடுக்கப்படுவதையும் சேர்த்துச் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு விருத்தசேதனமானது முத்திரையாயிருந்தது. அதின் புறம்பான அடையாளம் தேவனைத் தொழுதுகொள்ளும் வெளியரங்கமான சபைக்குரியது. பரிசுத்தாவியின் உள்ளான முத்திரையோ, தேவனுக்குமாத்திரந் தெரிந்திருக்கிற மெய் விசுவாசிகளாகிய அந்தரங்க சபைக்கே உரியது.



பிள்ளைகளும் வெளியரங்கமான சபைக்குட்பட்டவர்களானதாலும், பிள்ளைகளை விருத்தசேதனம் செய்வது பெற்றோருடைய விசுவாச அறிக்கைக்கு ஏற்றிருப்பதாலும், பிள்ளைகளை பெற்றோர் பத்தியாய் வளர்த்துப் போதித்துவர இது அவர்களைக் கடமைப்படுத்துகிற சடங்காயிருப்பதாலும் பிள்ளைகளும் விருத்தசேதனம்பண்ணப்பட்டார்கள். பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது இயல்பான புத்திக்கும் தேவவசனத்துக்கும் ஏற்றதுதானென்று இதினால் விளங்குகிறதே.

"எட்டாம் நாளிலே" எட்டாம் நாளுக்குமுன் மரித்துப்போகிற குழந்தைக்குப் போக்கென்ன? இதினாலே இந்தப் புறம்பான நியமம் இரட்சிப்புக்கு அவசியமாய் ஏற்படுத்தப்படவில்லை என்று விளங்கும்.

15. "சாராய்" என் நாச்சியார் என்றும், "சாராள்" நாச்சியார் என்றும் அர்த்தமாம். ஆபிரகாமின் குடும்பத்தில் மாத்திரமல்ல சர்வலோக சபையாலுந் இவளுக்கு கனமுண்டாவதைக் காட்டுகிறது.

16, 17. 16: 2. வியா. இதற்கு முந்தி தேவ வாக்குத்தத்தங்கள் இஸ்மவேல் மூலமாய் நிறைவேறுமென்று நினைத்திருந்தான். இப்பொழுது இந்தத் தெளிவான வார்த்தைகளைக் கேட்டபொழுது பிரமிப்பான விசுவாசத்தோடும் சந்தோஷமான நன்றியறிதலோடும் வணக்கமாய் முகம் குப்புறவிழுந்து நகைத்தான்.

18. விசுவாச பெலவீனத்தினாலே இப்படிச் செய்திருக்கலாம். அல்லது இவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தாயிராவிட்டாலும் இவனுக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும்படி மன்றாடியிருக்கலாம்.

20. 16: 12. வியா.

### படிப்பினை.

ஆபிரகாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கை மாறாதது. தேவ வல்லமையின்பேரிலும் உண்மையின்பேரிலும் ஸ்தாபிக்கப்பட்டது. அவனோடு மாத்திரமல்ல அவன் வித்தாரோடும் அவன் ஞான சந்ததியாரோடும் செய்யப்பட்டது. ஆகையால் இதில் நமக்கும் பங்குண்டு. ஆ. நாம் வாக்குத்தத்தத்தின் புத்திரராயிருக்கிறது எத்தனை பெரிய சலாக்கியம்.—கிருபையின் எத்தனங்களை நாம் லேசாய் எண்ணக்கூடாது.—விசுவாசம் எந்த வருத்தத்தையும் சகிக்கும்.—நம்முடைய இருதயம் கிறிஸ்துவைச் சிநேகிக்கும்படி விருத்தசேதனம்பண்ணப்பட்டிருக்கிறதா?

---

## ௰அ. அதிகாரம்.

### ஆபிரகாம் சோதோமுக்காக மன்றாடினது.

---

1. "கர்த்தர்" அதாவது எகோவா. 13, 15, 22, 33. வா.

2. "மூன்று புருஷர்" இதில் 2 பேர் சிருட்டிக்கப்பட்டவர்கள். ஒருவர் எகோவாதாமே. 1 வா. 16: 7, 13. வியா.

3—8. இவர்களை வழிப்போக்கர் என்றெண்ணி உபசாரம் செய்தான். எபி. 13: 2.

12. "என் ஆண்டவன்" மனைவிகள் தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பதற்கு பேதுரு அப்போஸ்தலன் இதை நியாயமாக எடுத்துக் காட்டுகிறார். 1 பேதுரு 2: 6.

17. லோத்து சோதோமிலே குடியிருந்ததினாலும், வாக்குத்தத்த தேசம் அதை அடுத்திருந்ததாலும் ஆபிரகாம் இது காரியத்தில் சம்பந்தப்பட்டிருந்தான்.

20, 21. தேவனுடைய நீடிய பொறுமை விளங்குகிறது.

23—32. ஏன் பத்திலே வந்தவுடன் நிறுத்திவிட்டான்? உரோமர் 8: 27. வாசி. இந்த ஊக்கமான செபம் பலனில்லாமற்போகவில்லை. 19: 16, 17, 29. பார். லோத் சோதோமில் ஒரு ஆத்துமாவையாவது மெய்மார்க்கத்துக்கு இழுத்துக் குணப்படுத்தவில்லை.

## படிப்பினை.

ஊக்கமான செபத்துக்கு மாதிரியைக் கற்றுக்கொள்வோமாக. நம்மைச் சூழ இருக்கிறவர்களுக்காக நாம் கருத்தாய் மன்றாடவேண்டியது கடமை.—"கர்த்தர்" நமது செபத்தைக் கேட்க எவ்வளவு தயாளமுள்ளவர் என்று கவனிப்போமாக.—பழைய ஏற்பாட்டின் காலத்தில் பல தடவை காட்சியளித்த இந்த எகோவா இப்போது அவருடைய திருவசனத்தாலும், ஏற்பாடுகளினாலும், வாக்குத்தத்தங்களினாலும், மத். 18: 20. 28: 20. அவருடைய ஆவியினாலும் நம்மோடிருக்கிறார். "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்."

---

## ௰௯. அதிகாரம்.

### சோதோம் கொமோராவின் அழிவு.

---

5. உரோமர் 1: 27. இது முகாந்தரத்தினாலே இந்த அவலட்சண பாவத்துக்கு சோதோமி என்று பேர் வழங்கும்.

8. அந்தப் பொல்லாதவர்கள் நடுவில குடியிருந்து நாடோறும் அவர்கள் அக்கிரமங்களைக் கண்டு கேட்டிருந்ததினாலே அவனுடைய ஏகாந்த உணர்ச்சிகளெல்லாம் குறைந்துபோயிற்று. ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்குமே. 1 கொரி. 15: 33.

16. "தாமதித்து" தான் அங்கலாய்த்து நாடிப்போய்க் குடியிருந்த இடத்திலுள்ள தன் சொத்துக்களையும் செழிப்பையும் விட்டுவிட மனம் வரவில்லை. கைதியைப்போல் பிடித்து இழுக்கப்படவேண்டியதாயிற்று! "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்."

17. இந்தக் கட்டளை ஒவ்வொரு பாவிக்கும் கூறப்படுகிறது.

17, 19. ஆபிரகாமோடு பேசின எகோவா இப்போது இங்கே வந்து சேர்ந்துகொண்டார் என்று சிலர் நினைக்கிறார்கள். 21. வா. ஆனால் அதற்குப் போதுமான நியாயமில்லை. லோத்து தன்னைப் பட்டணத்



துக்கு வெளியே கொண்டுவந்த தூதனோடுதான் பேசுகிறான். இன்னொரு தூதன் அவன் வீட்டாரை வெளியே கொண்டுவர மல்லாடுகிறான்.

21. இந்தத் தூதன் சோவாரைத் தப்புவிக்க தேவனாலே அதிகாரம்பெற்றிருக்கலாம்.

22. "சோவார்" என்பதற்கு சின்னது என்றர்த்தம். இந்த சம்பவத்துக்குமுன் அது பேலா என்றழைக்கப்பட்டது.

24, 25. "கர்த்தர்...கர்த்தராலே" அதாவது எகோவா எகோவாவினாலே வருஷிக்கப்பண்ணினார். ஆபிரகாமோடு பேசின எகோவா சோதோமுக்கு வந்து அக்கினியை வருஷித்தாரென்று அநேகர் நினைக்கிறார்கள். மேலும் இவ்வார்த்தைகள் திரித்துவத்துக்குக் குறிப்பாயுமிருக்கிறது. இது பெரிய சம்பவம் என்றும் காட்டுகிறது. ஒரு ஞானமுள்ள வைத்தியன் ஒரு மனுஷனுடைய தேகமுழுவதையும் தப்புவிக்கும்படி, தீராநோயுள்ள ஒரு அவயவத்தை எடுத்துப்போடுகிறது போல, இந்த சீர்ப்படாப் பாவிகளுடைய அக்கிரமம் பூமியிலே பரவிப்போகாதபடி இப்படி நிர்மூலமாக்கிப்போட்டார். இவர்களுடைய பாவத்தை (உரோமர் 1: 27.) தாம் முழு வெறுப்போடு அருவருக்கிறதைக் காட்டும்படி "கந்தகத்தையும் அக்கினியையும்" சோனாமாரியாய் வருஷிக்கப்பண்ணி க்ஷணப்பொழுதிலே சாம்பலாக்கிப்போட்டார். ஐயோ! "வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்."

அந்த சமபூமி இப்படி அழிக்கப்பட்டதுமுதல் உப்புக்கடலாய் மாறிப்போயிற்று. நாளதுவரையும் இந்தக் கடல் மற்றெந்தக் கடல் ஏரிகளுக்கும் வித்தியாசமும் விநோதமுமாயிருக்கிறது.

26. அவிசுவாசத்தில் மூழ்கி, தான் விட்டுவந்த ஆஸ்தி செல்வம் போகுதே என்று அங்கலாய்த்து தனக்குக் கிடைத்த கிருபையைக் கரத்தைத் தள்ளி தேவ கட்டளைக்கு நேர்விரோதமாய்ப் "பின்னிட்டுப்பார்த்து" சிலர் நினைக்கிறபடி திரும்பி சோதோமுக்குப் புறப்பட்டாள். லூக். 17: 31, 32. உடனே தேவகோபத்தால் பளிச்சென்று அடிபட்டு, பேராவலினால் ஏங்கி ஏங்கி ஏமாந்தபடியே "உப்புத்தூண் ஆனாள்." சோதோமில் பெய்த அக்கினி கந்தகத்தால் நீற்றப்பட்டுப்போனாள் என்று சிலர் இதை அர்த்தம்பண்ணுகிறார்கள். இப்படியாக பின்னடியாருக்கு மிகவும் எச்சரிப்பான ஞாபகசின்னமுமானாள். இவள் சோதோம் பட்டணத்தாளென்று தோன்றும். லோத்து இவ்விடத்தில் 20 வருஷம் குடியிருந்தான். நீர்ப்பாய்ச்சலைத் தெரிந்துகொண்டானே! இப்போது ஆபிரகாமின் ஆஸ்திக்கும் இவன் ஆஸ்திக்குமிருக்கிற தாரதம்மியமென்ன? பேராசை தரித்திரமாம்,

28. "சூளையின் புகை" நரகத்துக்கு அறிகுறி. யூதா 7. வெளி. 21: 8. பாவிகள் இதில் போய் விழும்படி பாய்கிறார்கள். உடன்படிக்கையின் தூதனானவர் அவர்களைப்பார்த்து, நீங்கள் ஏன் சாகவேண்டும், திரும்புங்கள் திரும்புங்கள் என்று வருந்தி அழைக்கிறார்.

30. "மலையிலே" அவன் போகும்படி உத்திரவுபெற்ற மலை என்று நினைக்கத்தக்கது. ஆனால் ஏன் ஆபிரகாமிடத்திற்போகவில்லை. நிர்வாணியாய் ஏழையும் இரப்பனுமாய்ப் போனாலும் சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளுவானே.—முன்னே இவன் நன்றாயிருக்கும்போது இவனை அறிந்தவர்களுடைய கண்ணில் விழிக்க வெட்கப்பட்டதினாலும், மனதில் இருந்த தீரா வியாகுலத்தினாலும், இருதயம் கடினப்பட்டதினாலும் அவனிடத்திற்போகவில்லை என்று நினைக்கவேண்டியதிருக்கிறது. ஐயோ! "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயி

ருக்கிறது. சிலர் அதை இச்சித்து அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்." 1 திமோ. 6: 6—14.

31—38. லோத்துக்காவது அவன் குமாரத்திகளுக்காவது இப்படிச்செய்ய யாதொரு போக்குச்சாக்கிருந்ததில்லை. இவர்கள் சோதோமின் துன்மார்க்கங்களை ஓயாமல் கண்டு கேட்டு மனச்சாட்சியில் சுரணை அற்றுப்போனார்கள். மானம் மரியாதை மழுங்கி இருதயமும் கறைப்பட்டுப்போயிற்று. அதினாலேதான் இந்த முறைகேடான பாவஞ்செய்யத் துணிந்தார்கள். எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?

லோத்தையாவது அவன் குமாரத்திகளையாவது குறித்து இதற்குப்பின்னான சரித்திரங்களிற் சொல்லப்படவில்லை. அவன் குணப்பட்டானென்று பேதுரு அப்போஸ்தலன் சாட்சியால் அறிந்துகொள்ளுகிறோம். ஆனால் மண்ணாசை பொன்னாசைகொண்டவர்களில் இவன் ஒருவன். இவன் கடைசிக்காலத்தில் சகலத்தையும் இழந்தவனாய்ப்போனான். வெகு ஆயாசத்தோடும் மனக்கவலையோடும் மரித்திருக்கவேண்டும். அவன் சந்ததியார் அவனுடைய அவகீர்த்தியை வெளிப்படுத்துகிற ஞாபக சின்னங்களானார்கள். அவர்களுடைய பேரோ அவர்களுடைய அவமான உற்பத்தியைப் பாரம்பரையாய்க் காட்டிவருகிறது.

கவனிப்பு. XIV அதி. வியா. வாசி. சோதோம் கொமோராவின் அழிவைப்பற்றி கிரேக்கு, லத்தீன் சரித்திரக்காரரில் பேர்போனவர்களும் திட்டமாயெழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியிருப்பது வேதத்திற் சொல்லியதற்கு, உப்புக்கடலின் ஸ்திதிக்கும் ஒத்திருக்கிறது. உப்புக் கடலின் நீளம் 72 மயில். அதிகமான அகலம் 18 மயில். தண்ணீர் சுத்தமும் தெளிவுமுள்ளது. ஆனால் மட்டுக்குமிஞ்சின உப்பும் கசப்பும் உவட்டலுமுள்ளது. தண்ணீரை நுட்பமாய்ச் சோதிக்கும்பொழுது கடலின் பூர்வோத்திரம் நன்றாய் விளங்குகிறது. அதில் கப்பல் போக்குவரத்தேயில்லை. அதைச் சூழ்ந்த நிலமும் உப்புத் தரையானதால் யாதொரு பயிர் பச்சை கிடையாது. எக்காலத்திலுமுள்ள பாவிகள் எச்சரிப்படையும்படி' இந்த அழிவு தேவ கோபாக்கினைக்கு நிலையான அடையாளமும் மாதிரியுமாக வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியே வேதத்தின் பிந்தின ஆகமங்களிலும் எடுத்துக் காட்டப்படுவதைக் காணலாம். திருஷ்.. இஸ்ரவேலருடைய அழிவுக்கு மாதிரியாக. உபா. 29: 24.—பாபிலோனியருக்கு ஏசா. 13: 19.—ஏதோமியருக்கு எரேமி. 49: 18.—மோவாபியருக்கும் அம்மோனியருக்கும், செப். 2: 9.—அவபக்தருக்கு 2 பேதுரு 2: 9.—சுவிசேஷத்தை அலட்சியம்பண்ணுகிறவர்களுக்கு மத். 10: 15. ஆ! "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே."

## படிப்பினை.

தேவ இரக்கமும் நீதியும் அளவில்லாதவைகள்.—பொருளாசை எத்தனை கேடுள்ளது. நீதிமானை சோதோமுக்கு வெளியே கொண்டுவர தேவதூதன் அவன் கையைப்பிடித்து மல்லாடவேண்டியதாயிருந்ததே. எந்த நீதிமானும் "கர்த்தர் அவன்மேல்வைத்த இரக்கத்தினாலே"தான் இரட்சிக்கப்படுகிறான். 16.—இந்த உலகம் சோதோமுக்கு ஒப்பானது. ஆகையால் உன் சீவன்தப்ப கிறிஸ்துரட்சகரிடத்திற்கு



ஓடிப்போ? பின்னிட்டுப்பாராதே. இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே. லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்.

---

# Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 15. அதிகாரம்.

சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப்போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—கர்த்தாகோபட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வேலீரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.

(தொடர்ச்சி.)

அலெக்சந்திரியாவிலும் அப்படியே எகிப்து தேசமுழுமையிலும் சகலமான கொடுமைகளும் நிஷ்டூரங்களும் திரும்பவும் நடக்கத்துவக்கின. அவ்விடத்து ரோம தேசாதிபதியாகிய சேபினு என்பவன் தியோனிசியுக் கண்காணியாரைத் தந்திரமாய்ப் பிடித்து தேப்போசிரிஸ் என்னப்பட்ட ஓரிடத்துக்குச் சிறையாயனுப்பினான். கண்காணியாரோ தப்பியோடிப்போய்ச் சிறிதுகாலம் மறைந்திருந்து பின்பும் பல துன்பங்களுக்குள்ளானார். எகிப்துதேசமும் அதைச் சூழ்ந்திருந்த இடங்களும் மறைந்திருக்கிறதற்கு மிகவும் வசதியாயிருந்தன. துன்பத்துக்குத் தப்பியோடின கிறிஸ்தவர்களுக்கு அங்குள்ள பெரிய மலங்காடுகளும் வனாந்தரங்களும் நல்ல அடைக்கல ஸ்தானங்களாயின. இப்படி துன்பத்தினிமித்தம் ஓடிப்போன பலர் அப்புறம் தங்கள் முந்தின தொழில்களைச் செய்யும்படி திரும்பினதேயில்லை. சன்னியாசம் வனவாசம் என்பது ஆரம்பிப்பதற்கு இதுவே காரணம். ஓடிப்போயிருந்தவர்களில் பவுல் என்று பெயர்கொண்ட ஒருவன் முதல் சன்னியாசியென்று பிரஸ்தாபமடைந்தான். அவன் உயர்ந்த தரத்துக் கல்விப்போதனையடைந்தவன். தாய்தந்தைகளிருவரும் பெருஞ் செல்வம் வைத்துவிட்டு அவன் சிறுவனாயிருக்கையிலேயே மரித்துப்போனார்கள். இக்காலத்திலுண்டான துன்பத்தினிமித்தமாய் அவன் இருபத்திரண்டு வயசாயிருக்கையில் வனாந்தரத்துக்கு ஓடிப்போய் ஒரு கெபியில் ஒளித்திருந்து அடுத்த நூற்றாண்டுவரையும் அதிலேயே தனிவாசஞ்செய்துகொண்டிருந்தான்.

துறவறத்தற் பிரவேசிப்பதற்குக் கிறிஸ்தவர்களை வெகுகாலம் ஏவின வேறு காரணங்களுமுண்டு. நோஸ்தியரில ஒரு வகுப்பாரும் அவர்களுக்குப்பின் மொந்தனியரும் தேகத்தை ஒடுக்கி வருத்தும்படிக்கான அநேக கடினமான சட்டங்களை ஏற்படுத்திக் கைக்கொண்டுவந்தார்

களே. புறம்பான சடங்காசாரங்களைத் திட்டமாய் நிறைவேற்றிவருவதே தேவபக்தி என்று எண்ணுவது மனுஷருக்கு எப்போதும் இயல்புதான். அதினால் மெய்யான பக்தியினாலே ஆரம்பமான அநேக ஆசாரங்கள் நாள்வட்டத்தில் புகழ்ச்சிக்காகவும் வழக்கத்தினித்தமும் அனுசரிக்கப்படுமே. அவ்வாறே கிறிஸ்தவர்களில் அநேகர் நோஸ்தியர் மொந்தேனியரைப் பார்த்தே சுய விருப்பத்தினாலோ கடமை என்னும் உணர்ச்சியினாலோ இம்மைக்குரிய அநேக அனுபவங்களும் முயற்சிகளும் தேவனுக்கு உகந்தவைகளல்லவென்று நினைக்க ஏவப்பட்டார்கள். திருச்சபையானது இது விஷயத்தில் ஒருக்காலும் தீர்ப்புச்சொல்ல நேரிடவேயில்லை. இப்பேர்ப்பட்ட காரியங்களில் அவனவன் தன்தன் பக்திக்கும் புத்திக்கும் ஏற்க நடக்கும்படி விவேகமாயும் இரக்கமாயும் விட்டிருந்தார்கள். துன்பகாலம் இவ்வகையான கோட்பாடுகளைக்கொண்டு நடத்துகிறதற்கு அனுகூலமான காலம். மூன்றாம் நூற்றாண்டின் முதற்பங்கிலே சபையிலுண்டாயிருந்த அமரிக்கையினாலே கிறிஸ்தவர்கள் லௌகிக சிந்தையுள்ளவர்களாகி சிற்றின்பப்பிரியராக ஏதுவாயிருந்ததுபோல, தேசியு இராயன் காலத்துத் துன்பம் அவர்கள் பரமசிந்தையுள்ளவர்களாகவும் உலகத்தை வெறுப்பது கிறிஸ்தவர்கள் கடமையென்று பலமாய் உணர்த்தப்படவும் அனுகூலமாயிற்று.

துறவறத்திற் பிரவேசித்து சன்னியாசிகள் என்று சொல்லப்பட்டவர்கள் எகிப்து தேசத்தில் ஆதிமுதலே இருந்தார்களென்பதும் நிச்சயந்தான். முதலாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் அப்புறம் சிறிது காலமாயும் அலெக்சந்திரியாவுக்கு அருகாண்மையில் காணப்பட்ட அநேகர் உலகசகவாசத்தை முற்றும வெறுத்துத் தள்ளிவிட்டு, நூதனவகையாய்க் காலட்சேபம் செய்துவந்ததினாலே அவர்களைக் கிறிஸ்துமார்க்கத்தமைந்தவர்களென்று பலரும் குறிப்பித்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் முற்றும் தவறு என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அவர்கள் காலட்சேபஞ்செய்த வகையைக் கிறிஸ்தவர்கள் பார்த்து வியந்துகொண்டதோடு சிலர் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றிச் சன்னியாசத்திற் பிரவேசித்திருப்பார்களென்று நினைப்பது அனர்த்தமன்று. துன்பத்துக்குத் தப்பிக்கொள்ளவேண்டுமென்ற ஆசை அதைப்பார்க்க முக்கிய காரணமாயிருக்கும். நாம் விவரிக்கிற இக்காலத்தில் எகிப்து தேசத்திலே சன்னியாசம் அதிகப்படுவதற்கு இதுவே காரணமென்று காண்பித்தோமே. இத்தாலியா, சின்ன ஆசியா முதலிய தேசங்களைப்போல கிறிஸ்தவர்கள் நெருக்கமாய்க் குடியிருந்த தேசங்களில் ஒளித்திருந்து தனிவாசஞ்செய்வதற்கு வசதியிராது. எகிப்து தேசத்தைச் சூழ்ந்த வனாந்தரங்களோ மகா விஸ்தீரணமானவைகள். அவ்வாறே கிறிஸ்துமார்க்கம் ஸ்தாபிக்கப்பட்ட தேசங்களிலெல்லாம் நாள்வட்டத்தில் பரவிப்போனதும் நாளதுவரையும் அநேகரை விடாமற் பிடித்திருப்பதுமான சன்னியாசம் அவ்விடத்திலேயே ஆரம்பித்ததாகத் தோன்றுகிறது.

இந்தத் துன்பம் ஆரம்பமானபொழுது சபைத் தலைவர்களையே முக்கியாய்ப் பிடித்ததென்று கவனித்திருப்பீர்கள். ரோமாபுரியிலும் காத்தாகோப் பட்டணத்திலும் அந்தப்படியே சம்பவித்தது. இராச்சியத்திலே தனக்கு எதிரி ஒருவனிருந்தாலும் பெரியகாரியமல்ல, ரோமாபுரியில் கண்காணியிருக்கவே விடமாட்டேனென்று தேசியு இராயன் சொன்னானும். இதினால் இராயன் கிறிஸ்துமார்க்கத்தை விரோதித்து அதை அழித்துவிடத் தீர்மானித்திருந்தானென்று அறிந்துகொள்ளலா



மே. அக்காலத்துக் கிறிஸ்தவ கண்காணிமார்களுக்கும் ரோம இராயனுக்குமிருந்த மகா பெரிய சர்வசம்மியத்தைக் கவனிக்குமிடத்து, இராயன் இப்பேர்ப்பட்ட கோபம் பாராட்டக் காரணமின்னதென்று அறிவது லேசல்ல. இராயன் கண்காணியார்பேரில் எரிச்சலடையவாவது அவரைக்குறித்து பயந்திருக்கவாவது நிமித்தமில்லை. அவரை அலட்சியமாய் நடப்பித்திருந்தால் ஆச்சரியமாய விளங்கமாட்டாதென்று எண்ணுவோம். ஆகிலும் நாம் நினைத்துக்கொள்ளவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதென்னவென்றால் இக்காலத்தில் ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் ஏராளமாயிருந்தார்கள் என்பதுதான். அவர்கள் தொகை ஐம்பதினாயிரத்துக்குக் குறையாதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாரும் ஒரே தலைவனுக்கு மனோற்சாகமாய்க் கீழடங்கினவர்களாய், ஒரே ஆளுகை முறைமைக்குட்பட்டு திரண்ட பொதுவான பொக்கிஷமுமுடையவர்களாயிருந்தார்கள். இவ்வகையான கூட்டத்தார்களை இராசாக்களும் அதிகாரிகளும் வன்கண்ணாய்ப் பார்த்து அவர்களைக்குறித்து எப்போதும் சந்தேகங்கொண்டிருப்பது வழக்கந்தான். இத்தனை ஏராளமான சனங்கள் பலமுறையும் தகாததென்று தீர்க்கப்பட்ட மதாசாரத்தினாலே அன்னியோன்னியமாய்க் கட்டுண்டிருப்பது அவர்கள்பேரிலுள்ள விரோதத்தை அதிகப்படுத்துமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ரோமாபுரிச் சபையிலுள்ள கிறிஸ்தவன் ஒருவன் அதிகாரிக்குமுன் விசாரணைக்கு வருவானாகில், கண்காணியாருக்குக் கீழ்ப்பட்டவனென்று தெரியவருமே. இவ்வொருவனுடைய செல்வாக்கும் அதிகாரமும் ஒருவேளை இராயனுடையதுக்கு மிஞ்சினதாயிருந்திருக்கலாம். இராயனுடைய அதிகாரம் பயத்தினால் மாத்திரம் செல்லுகிறதென்று உணர்ந்திருப்பானால், அன்பினாலே மனோற்சாகமாய்க் கீழ்ப்படியப்பண்ணும் அதிகாரம் செலுத்துகிற மனிதனைப்பற்றி அவன் பொறாமைகொள்ளுகிறது இயல்புதானே. இதுவரையுஞ் சொல்லிவந்திருக்கிற முகாந்தரங்களினாலே தேசியு இராயன் கண்காணியாரைக்குறித்து மேற்காட்டியபிரகாரஞ் சொல்லியிருப்பான். இந்தத் துன்பத்தின் வரலாறுகளால் அவனுடைய கொடிய விரோதம் வாய்வசனத்தோடு மாத்திரம்போகவில்லையென்று விளங்கும்.

கி. பி. 235வரு முதல் ரோமாபுரியிற் கண்காணியாராயிருந்த பேபியு என்பவர் மரண ஆக்கினையடைந்தார். அவருக்குட்பட்ட குருமார்களிற் சிலர் காவலிலடைபட்டார்கள். துன்பம் அவ்விடத்தில் மகா மும்முரமாய் நடந்தபடியால், ஒரு வருஷத்துக்கு அதிகமாய் அந்தச் சபை கண்காணியாரில்லாமலிருந்தது.

சபையின் அதிகாரிகளையே விசேஷமாய்ச் சங்கரிக்கவேண்டுமென்று இராயன் நோக்கங்கொண்டிருந்ததாக மேலே குறிப்பித்த விசேஷம் இந்நடபடிக்கையினால் உறுதிபெறுமே. மரண ஆக்கினையடைந்த கண்காணியாருக்குப் பதிலாக அவ்வளவு காலமாய் வேறொருவரை ஏன் நியமிக்கவில்லையென்று கேட்டால், துன்பம் அவ்வளவு மும்முரமாய் நடந்துகொண்டிருந்த அக்காலத்தில் அயலிடங்களிலுள்ள கண்காணிமார் அது காரியத்துக்கென்று கூடிவருவது கூடாதகாரியமானதினாலேதான். அவர்களால் நியமிக்கப்பட்டாலேயல்லாமல் மற்றப்படி அந்த நியமனம் அங்கீகாரமாகாதென்று மேலே காண்பித்தோமே. மேலும் கண்காணியார் ஒருவர் நியமிக்கப்பட்டபோதிலும் அவர் வெகுநாள் உயிரோடிருந்திருக்கமாட்டாரென்பதும் நிச்சயம். அவர் நியமிக்கப்படுவதும் துன்பம் அதிக மும்முரமாகிறதற்கு ஏதுவாகத்

தானிருந்திருக்கும். இதுவரையில் எந்தச் சபையும் சிரேஷ்ட அதிகாரியாகிய கண்காணியாரில்லாதிருக்கவில்லையென்பது மெய்யென்றாலும், ரோமச் சபையில் அப்படியிருந்ததற்கு போந்த நியாயங் காண்பிக்கக்கூடியதாயிருந்ததே. ஆகையால் அக்காலத்தில் பிரஸ்பிற்றர் என்னப்பட்ட குருக்கள்மாரே சபையின் காரியங்களை விசாரித்துவந்தார்கள் என்று தோன்றுகிறது. இக்காலத்தில் ரோமைச் சபையில் பிரஸ்பிற்றர்கள் நாற்பத்தாறு பேர்வரையுமிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவரவர் சபையில் போதுமான வேலையிருந்திருக்கும். ஆகிலும் நூதனமான யாதாயினும் ஓர் காரியம் சம்பவிக்கும்பொழுதும் பிறதேசங்களிலிருந்து எந்த விஷயத்தைப்பற்றியாவது நிருபங்கள் வரப்பெறும்பொழுதும், பிரஸ்பிற்றர்கள் எல்லாரும் சங்கங்கூடிக் காரியத்தை யோசிக்கிற வழக்கமிருந்ததாகவும் தெரியவருகிறது. மேலே விவரித்திருக்கிற விசேஷங்களால், கிறிஸ்தவர்களுடைய காரியாதிகள் துவக்கத்திலேயே எவ்வளவு சீராயமைந்து நடந்தனவென்றும், அவர்களை அழிக்கத்தேடின அஞ்ஞானிகள் அவர்களுடைய பெலனைக்குறித்து எவ்வளவு அறிவீனமுள்ளவர்களாயிருந்தார்களென்றும் துலாம்பரமாய் உணர்ந்துகொள்ளலாகும்.

சிப்பிரியன் என்பவர் இக்காலத்தில் கார்த்தாகோ பட்டணத்துக் கண்காணியாராயிருந்தார். இவர் 248 லோ 249 லோ தோனேத்து என்பவனுக்குப்பின் மேற்படி ஆதிக்கத்தையடைந்தவர். நோவேத்து என்பவனும் வேறு நாலு பிரஸ்பிற்றர்களுஞ் சேர்ந்து, அவரைக் கண்காணியாராக நியமிக்காமல் தடுக்கப்பார்த்தும் பலிக்கவில்லை. மேலும் அவர்களால் அக்கண்காணியாருக்கும் அவ்வாறே சபை முழுமைக்கும் நேரிட்ட தொல்லையும் கெடுதியுங் கொஞ்சமல்ல. கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி இராயன் பிறப்பித்த சட்டம் கார்த்தாகோப் பட்டணம் வந்துசேர்ந்தவுடனே, சிப்பிரியன் என்பவர் தமது சீவன்தப்ப ஓடிப்போய்ப் பதினாறு மாதம்போல தமது மந்தையைவிட்டுப் பிரிந்து மறைந்திருக்கவேண்டியதாயிற்று. என்றாலும் அக்காலத்தில் தமது அதிகாரத்துக்குட்பட்ட குருக்கள்மார்களுக்கு பலமுறையும் நிருபங்களனுப்பி, அநேக முக்கியமான விஷயங்களில் அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய வகைக்குத் திட்டங்கள் எழுதியிருக்கிறதைப் பார்க்கும்போது, சபையைப்பற்றி அவருக்கிருந்த கவலையையும் வைராக்கியத்தையும் ஒருவாறு கண்டுகொள்ளலாமே.

---

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XII-வது. இராஜகுமாரனுடைய கலியாணத்தைக்குறித்து.

மத்தேயு 22: 1—14.

(தொடர்ச்சி,)

கலியாண வஸ்திரமென்பது நீதியென்றர்த்தங்கொள்ளும். ஆவிக்



குரிய புது மனுஷனுடைய அலங்காரந் தேவனைப் பிரியப்படுத்துகிறதற்கு அவசியமாகிய விசுவாசமும் தேவனைக் காண்கிறதற்கு அவசியம்வேண்டிய பரிசுத்தமும் இதிலடக்கம். இதில்லாதவன் இந்த விருந்தாடியைப்போல அவருடைய சந்நிதானத்தில் நிர்மூலமாவான். எல்லாக் கிருபைகளுக்கும் வேர் விசுவாசம். எல்லாச் சற்குணங்களுக்குந் தாய் அதுவே. அதுவே அந்தக் கிருபைகள். அந்தச் சற்குணங்கள். இந்த விருந்தாடி சுயநீதிக்காரனென்று வைத்துக்கொள்ளுவோம், தன் சொந்த நீதியில் நம்பிக்கைவைக்கிறவன் தனக்குச் சாட்டப்பட்ட, தனக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் நீதிக்குப் பதிலாக தன் நீதியையே பெரிதென்று பாவிககிறவன். அல்லது பரும்படியான பாவியென்று வைத்துக்கொள்ளுவோம். கிறிஸ்தவனுக்குரிய பெயருஞ் சலாக்கியங்களுமிருந்தும் மாமிச இச்சைகளாகிய அசுத்தத்திலும் பாவத்திலும் நடந்துகொண்டிருக்கிறவன் இரண்டுஞ் சரிதான். அவன் ஏதோ ஒன்றை அசட்டைசெய்கிறான். தன் ஆவிக்குரிய போர்வையே ஞானஸ்நானத்தில் அவனுக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டது. பிறகு அவன் அதை இழந்துவிட்டாலும் பிறகு எந்தச் சமயத்திலுந் தாராளமாய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடியது. தேவனுடைய சந்நிதியிலே ஆவியின்பிரகாரமாகவல்ல, மாமிஷப்பிரகாரமாய் இருக்கிறவண்ணமாகவே வரப்பாத்திரனென்று தன்னை எண்ணுகிறவன். வாக். 16 : 2. எந்த மனிதனுந் தன் ஆத்துமாவுக்கு வேறு போர்வை வேண்டுமென்று அறிந்துகொள்ளுங் காலம் வரும். அதைச் சம்பாதிக்கக்கூடாத காலத்தில் இந்த விருந்தாடியைப்போல தன் குறைவை அறிவானாகில் அது அவனுக்குக் கேடாகமுடியும். அப்பொழுது திடனொன்று தன்னுடைய நிருவாணத்தோடும் அசுத்தத்தோடும் நிற்கவேண்டிவரும். இராசாவின் வார்த்தைதான் அவனை பேச்சுமூச்சற்றவனாக்கிப் போட்டது. கடைசிநாளில் தெய்வப்பிரகாசம் பாவியின்மேல் அவனைச் சூழப் பிரகாசிக்கும்பொழுது, இருதயத்தில் மறைந்திருந்த சகலத்தையுந் தான் வேண்டுமென்று அறியாமலிருந்த சகல தீமையையும் அவனுக்கு வெளியாக்கும். இனி அவன் அவைகளை அறியாமலிருக்கமாட்டான். அவனும் இந்தக் கெட்ட விருந்தாடியைப்போல பேச்சற்றவனாயிருப்பான். மற்றவேளைகளில் எவ்வளவு போக்குச்சொன்னபோதிலும் அந்த நாளில் அவன் வாய் அடைபட்டிருக்கும். தன்மேல் ஆக்கினைவராதபடிக்கு எந்தப் போக்கையுஞ் சொல்ல வாய்திறக்கமாட்டான்.

இங்கே சொல்லியிருக்கப்பட்ட ஊழியக்காரர் பேரிலும் அலுவலிலும் விருந்தாடிகளை அழைத்துவந்த வேலைக்காரருக்கு வித்தியாசப்பட்டவர்கள். இவர்கள் தேவதூதர்கள். அவருடைய இராட்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும அக்கிரமஞ்செய்கிறவர்களையுஞ் சேர்க்கிறவர்கள். மத். 13 : 41, 49. லூக். 19 : 24. இவனைக் கையுங் காலுங் கட்டிக் கொண்டுபோக உத்தரவுண்டாச்சுது. அதாவது, சிலர் அர்த்தம்பண்ணுகிறபடி, பாவிக்கு ஒருவருங் கிரியைசெய்யக்கூடாத இராத்திரி வருகிறது. தான் நன்மைசெய்யத்தகக காலம் முற்றிலும் போய்விட்டது. அல்லது வேறு சிலர் நினைக்கிறபடி தேவனுக்குவிரோதமாய்ப் போராடுகிற பெருமைகொண்ட பாவி ஒரே நிமிஷத்தில் தன்னால் ஒன்றும் ஏலாதென்றறிந்துகொள்ளுகிறதை இது குறிக்கும். சகரியா 5 : 5 முதல் 11 வரையிலுள்ள உவமானம் இதை நன்றாய் விளக்கிக்காட்டும், கைகள் தடுக்கத்தக்க கருவிகள். கால்கள் ஓடித் தப்பத்தக்க கருவிகள். இரண்டும் அசைவற்று பெலனற்றுப்போச்சுது. அப்.

91:11. கொண்டுபோங்கள் என்கிற வார்த்தை தேவனுடைய பரிபூரண இராச்சியமாகிய மோட்சத்திலுள்ள மகிமை நிறைந்த பெறுதி சிறந்த சபையினின்று பாவி தள்ளப்படுவதைக் குறிக்கும். செப்பனியா 1:7. 8. இதற்கேற்ற வாக்கியம். மத். 13:48, 2 தெச. 1:9. அவனுக்கு வந்தது நஷ்டமாத்திரமல்ல தெண்டனையும், தனக்கிருந்த நன்மையை இழந்துவிட்டதுமாத்திரமல்ல தீமையுங்கிடைத்தது. புறம்பான இருளிலே போட்டார்கள். புறம்பானது தேவனுடைய இராச்சியமாகிய வெளிச்சத்துக்குஞ் சந்தோஷத்துக்கும் முற்றிலும் அப்புறப்பட்டது. தேவனுடைய இராச்சியத்தில் விசேஷித்தது வெளிச்சம். அதற்கப்புறமுள்ளது அந்தகாரம். புறம்பான இருள் வெளிச்சமாகிய இராச்சியத்தைச் சூழ்ந்திருக்கிறது. தேவ சத்தியமாகிய வெளிச்சத்தில் நடக்கமாட்டோமென்கிறவர்கள் அந்த இருளில் விழுவார்கள். நித்தியஜீவனாகிய ஒளியை அடையாமற்போவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்புமுண்டாயிருக்கும். இதைப்பற்றி முன்னே சொல்லியாச்சுது.

இராச்சத்தோட்டத்தின் உவமையின் கடைசியில் வருகிற வார்த்தைகள் இங்கும் வருகிறது. அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர். இது அந்த அபாத்திரனாய்ப்போன விருந்தாடியைமாத்திரங் குறிக்கமாட்டாது. இவனுமது அழைக்கப்பட்டவன்தான். அழைக்கப்பட்டும் வராமலிருந்து தங்களையுந் தங்கள் பட்டணத்தையும் அழிவுக்குள்ளாக்கினவர்கள் அழைக்கப்பட்டுந் தெரிந்துகொள்ளப்படாதவர்கள்தான். இந்த வார்த்தைகள் நெடுநாளாய் எப்பொழுதும் பராபரனுடைய இராச்சியத்தில் நிறைவேறிவருகிற ஒரு சத்தியத்தைத் தெளிவாய்க் காண்பிக்கிறது. எகிப்தைவிட்டுப் புறப்பட்ட அந்தச் சந்ததியாரில் இது நிறைவேறிற்று. அவர்களெல்லாரும் ஒரு இராச்சியத்தற்கு அழைக்கப்பட்டாலும் முடிவில் அதற்கென்று தெரிந்துகொள்ளப்படவில்லை. தேவன் ஏறக்குறைய எல்லார்பேரிலுங் கோபமாயிருந்தார். அவர்கள் வனாந்தரத்தில் அழிந்தார்கள். 1 கொரி. 10:1—10. எபி. 3:7 முதல் 13 வரை. யூதா 5. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை முதலாவது காண்கிற சலாக்கியத்தைப் பெற்ற பன்னிரண்டு பெயருக்குள்ளும் இது நிறைவேறிற்று. இரண்டு பெயர்தான் அதைப்பார்த்துத் தயிரியம் அடைந்தார்கள். அவர்கள்தான் அதைச் சுதந்தரிக்கத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். கிதியோனுடைய சேனையிலிருந்த (32000) பெயரிடத்திலும் இது நிறைவேறிற்று. இவர்களெல்லாரும் அழைக்கப்பட்டவர்கள்தான். (300) பெயர்தான் பாத்திரராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். இவர்கள்தான் யுத்தத்தில் உதவிசெய்து ஜெயத்தில் பங்கடைந்தார்கள். நியாயாதி. 7. பெர்சிய இராசனுடைய அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்ட எல்லாப் பெண்களிலும் எஸ்தர்மாத்திரந் தெரிந்துகொள்ளப்பட்ட சங்கதியிலும் இது நிறைவேறிற்று. அவள்தான் கடைசியில் இராசனுடைய கண்களில் தயவுபெற்றாள். எஸ்தர் 2.

---

## XIII பத்துக் கன்னிகைகள்.

மத்தேயு 25: 1—13.

அப்பொழுது அதாவது, தீர்ப்புச்சொல்லுகிற அந்தப் பெரிய நா



ளிலே கர்த்தர் அவிசுவாசியையும் மாய்மாலக்காரனையும் நியாயந்தீர்க்கிற நாளிலே, 24:51. தம்முடைய ஊழியக்காரருடைய விசுவாசத்தை வேறுவகையாய்ச் சோதிப்பார். அவர்கள் அந்தச் சோதனையைச் சகிக்கிறதற்குத்தக்கதாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அல்லது தள்ளப்படுவார்கள். அந்தச் சமயத்தில்தான் பரலோக இராச்சியந் தீவெட்டிகளைப்பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப்புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. யூதர்களுக்குள் நடக்குங் கலியாணத்தைப்பற்றின விபரங்கள் இந்த உவமையோடு சம்பந்தப்பட்டவைகள் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. யூத புராதனங்களை எழுதினவர்கள் அதை விஸ்தரித்திருக்கிறதுமல்லாமல், தற்காலம் கீழ்த்திசைகளில் பிரயாணஞ்செய்தவர்களும் அதை விளக்கியிருக்கிறார்கள். அந்த வழக்கங்கள் இப்பொழுதும் நடந்துவருகிறது. முற்காலத்தில் நடந்ததுபோல இக்காலத்திலும் அதைக் காணலாம். மணவாளனோடு மணவாளனுடைய தோழராகிய சிநேகிதர்கள் கூடி, மத். 9:15. யோவான் 3:29. நியாயாதிப. 14:2. மணவாட்டியின் வீட்டுக்குப்போய் அவளை ஆடம்பரத்தோடும் ஆரவாரத்தோடும் தன் வீட்டுக்குக் கொண்டுவருவார்கள். அவன் வீடு பெரிதாயிராவிட்டால் அந்தச் சமயத்துக்கென்று பெரிய இடமொன்றை ஆயத்தம்பண்ணுவான். அவள் தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்படும்போது அவளுடைய தோழிகள் அவளோடு வருவார்கள். சங்கீதம் 45:15. உவமையில் கன்னிகைகளென்று சொல்லப்பட்ட மற்றவர்களோ ஒரு தகுந்த இடத்தில் அவர்களைச் சந்தித்து மணவாட்டியோடு வருகிறவர்களை விருந்துச்சாலைக்கு அழைத்துக்கொண்டுபோவார்கள். இதுதான் கலியாணத்தில் நடக்கிறது. சிலர் உவமையின் சங்கதிகளை சற்றே வித்தியாசப்படுத்திச் சொல்லுவார்கள். மணவாட்டியோடு திரும்பி வரும்போதல்ல, மணவாட்டியைக் கொண்டுவரப்போகும்போதுதான் அவரை எதிர்கொண்டுபோய் முந்த மணவாட்டி வீட்டிற்குள் சென்று பிற்பாடு மணவாளனுடைய வீட்டுக்குக் கூடவேபோவார்களாம். இது சரியல்ல. உவமையை இது கலக்கடிக்கிறதுமல்லாமல் அதினுடைய சத்தைக் குறைத்துப்போடுகிறது. நம்முடைய மனதில் படுகிறதென்னவென்றால், மணவாட்டியோடு வருகிறவர்களை எதிர்கொண்டு விருந்துவீட்டுக்குப்போகிறது தாமதமின்றி உடனே செய்யவேண்டிய காரியமென்றும், அந்தச் சமயத்தை விட்டுவிட்டால் மறுபடியும் அது கிடையாதென்றும் நாம் விசேஷமாய் எண்ணவேண்டியிருக்கிறது. முந்தி மணவாட்டியைக் கூட்டிக்கொண்டுவரப்போய் அவள் வீட்டில் தாமதப்பட்டுப் பிறகு மணவாளனுடைய வீட்டுக்கு வருகிறதானால் இது விசேஷித்து மனதில் படாது. இந்த ஆட்சேபனையை நீக்க அவளுடைய பெற்றோர் அல்லது சிநேகிதர் வீட்டில் கலியாணம் நடக்கிறதென்று சொல்லுகிறது யூதருடைய வழக்கத்துக்குங் கிரேக்கருடைய வழக்கத்துக்குங்கூட முற்றிலும் விரோதம். யோவான் 2:10. இந்த அபிப்பிராயம் உவமையின் ஞானக்கருத்தைக் குறைவாக்கிப்போடும். கன்னிகைகள் பத்துப்பெயரென்று முகாந்தரமில்லாமற் சொல்லியிருக்கவில்லை. பத்துப் பெயர்தான் ஒரு கூட்டமாய்ப் போவார்கள். அதற்குக் குறைந்துபோகிறதில்லை. பத்து யூதர்கள் இருக்கிற இடத்தில்தான் ஒரு ஜெபாலயமிருக்கும். இவர்கள் தீவெட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள். கீழ்த்திசைகளில் விவாகங்கள் இக்காலத்தில் நடக்கிறதுபோல முற்காலத்திலும் இரவில்தான் நடக்கும். அதனால்தான் சிநேகிதருங் கூட்டாளிகளும் விளக்குகளும் தீவெட்

டிகளும் அடிக்கடி கொண்டுபோனதாகச் சொல்லியிருக்கிறது. வெளி. 18: 23. விளக்கின் ஒளியும் மணவாளன் மணவாட்டியினுடைய சத்தமும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது. இதுகள் அவசியம் வேண்டியது மாத்திரமல்ல அந்தக் காட்சியைச் சிறப்பிக்கவுமேற்றது. கிரேக்கர், ரோமருக்குள்ளே ஆகக் கிறிஸ்தவர்களுக்குள் அநேகம் காணப்பட்டதுபோல மார்க்கத்துக்குரிய கருத்தொன்றும் யூதருக்குள்ளிருந்ததில்லை. தீவெட்டிகளோடுகூட மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்டார்கள்.

இவர்கள் ஏன் கன்னிகைகளென்று அழைக்கப்படுகிறார்கள்? இவர்கள் ஆரைக் குறிக்கிறார்கள்? கன்னிகைகளென்கிற வார்த்தையிலிருந்து இரண்டு தப்பறையான அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கிறது. எல்லாருங் கன்னிகைகளென்று சொல்லியிருக்கிறபடியால், எல்லாருங் கிறிஸ்துவை உண்மையாய்ப் பற்றிக்கொண்டவர்கள் என்று அபிப்பிராயம். சிலர் கடைசி நேரத்தில் ஆயத்தமில்லாதவர்களாய்க் காணப்பட்டு நஷ்டமடைகிறார்கள். 1 கொரி. 13: 13. அவர்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் அதிகமாய்த் தாமதித்துத்தான் கிடைக்கும். ஆகிலும் இரட்சகர் அவர்களைக் கன்னிகைகளென்று அழைக்கிறபடியால் அவர்களில் ஒருவரும் பரலோக இராட்சியத்துக்கு அதாவது அவர்களுடைய இரட்சிப்புக்கு முற்றிலும் அபாத்திரராய்த் தள்ளப்பட்டுப்போகிறதில்லை. புத்தியீனராகிய கன்னிகைகளைக்குறித்து இப்படி அபிப்பிராயங்கொள்ளுகிறவர்கள் இரட்சகருடைய ஆயிர வருஷ பூலோக ஆளுகையையும் முதலாவது உயிர்த்தெழுதலையும் சாதாரணமாய் அதோடு சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அந்தக் கன்னிகைகள் ஆயத்தமில்லாதவர்களாகக் காணப்பட்டபடியால் மரணவேளையிலோ, கிறிஸ்துவானவருடைய இரண்டாம் வருகையிலோ அவர்கள் அந்தப் பாக்கியத்திற்கு நீங்கலாவார்கள். அவர்களுடைய குறைவுகளும் அவர்களிடத்திற் சுத்தமாக்கப்படாமற் செயிக்கப்படாமல் இருந்ததெல்லாம் இப்படி அவர்கள் கொஞ்சக்காலம் புறம்பாக்கப்படுகிறதனால் சுத்தமாக்கப்படும். அவர்களுக்கு வரும் பெரிய துன்பங்களாலும் அவர்கள் குறைவுகள் நீங்கிப்போம். ஆனாலும் ஆத்தும சீவன் அவர்களுக்குளிருக்கிறபடியால் அவர்கள் சகலத்தையும் இழந்துவிடுகிறதுமில்லை. மோட்ச பாக்கியத்துக்கு முற்றிலும் அபாத்திரராய்ப்போகிறதுமில்லை. எல்லாருங் கன்னிகைகளென்று சொல்லியிருக்கிறது இந்த அபிப்பிராயத்துக்கு அநுகூலமாம். ஆகிலும் இது சரியான அபிப்பிராயமென்று சொல்ல இடமில்லை.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** சென்ற மேமீ கடைசியில் மஹா ராணியவர்கள் புத்திரியாகிய அலீஸ் என்பவரின் மூத்த குமாரன் மேன் மாடத்தி குமா[illegible] தவறிவிழுந்து பிராணசேதமடைந்தார். பாரசீக அரசன் விருந்து என்னும் துறைமுகத்தில் பிரின்ஸ் ஆப்வேல்ஸ்முதலிய பெ போத்ஸ்மத



ரியோரால் அங்கிகரிக்கப்பட்டு லண்டன் நகரத்துக்குப் போனார். அங்கிலேயர் தமமை அங்கிகரித்தவிதத்தைப்பற்றி மிக அகமகிழ்ச்சியுடையவராயிருக்கிறார். அதிகமாய் அலங்கரிக்கப்பட்ட கத்தியொன்று டியூக்ஆவ்கேம்பிரிட்ஜ் என்பவருக்குக் கொடுத்ததுமன்றி ரத்னமிழைத்த தமது படமொன்று மஹா ராணியவர்களுக்கும், வேறொன்று பிரின்ஸ் ஆப்வேல்ஸ பத்தினியாருக்குங் கொடுத்தார். சென்றமீ 25வ அவருக்கு நடந்த விருந்தொன்றில் 700 பேர்வரை பந்தியிருந்தார்கள். கிறிஸ்தவ கலவியபிவிர்த்தி சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டம் மேமீ 5வ லண்டனிற்கூடிற்று. அப்போது வாசிக்கப்பட்ட அறிக்கையில் ஷை சங்கத்தாரால் பல பாஷைகளிலும் நாலு கோடி புஸ்தகங்கள் வரையச்சிட்டுப் பிரசுரஞ்செய்யப்பட்டதென்று பிரஸ்தாபிக்கப்பட்டது. ரோமாசபைத் தலைவராகிய பாப்பானவர் வியாதிப்பட்டு வருத்தமுற்றிருந்து இப்போது சுகமேயிருக்கிறார். ஆயினும் விருத்தாகிய அவர் வெகுநாள் இக்கரையில் நிற்கமாட்டாரென்றும, அவர் அக்கரை சேர்ந்தபின்பு ரோமா திருச்சபையின் காரியர்காரியமெப்படியிருக்குமென்பது இப்போது உத்தேசிக்கத்தக்கதல்லவென்றும் பத்திராதிபரொருவர் பிரஸ்தாபித்திருக்கிறார். பிரான்சிய துரைத்தன விஷயத்தில் நிலைவரமான காரியம ஒன்றும் காணப்படவில்லை. பெரும்பாலும் பிரான்சியர் பிரஜாதிபத்தியப்பிரியரே. ஸ்பானியாவில் புது மந்திரிமார் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சமாதானத்தை அபேக்ஷித்திருக்கிறார்கள். ராஜதானி அமர்ந்திருக்கின்றது.

**கைவாப்** பிரதேசத்துக்கு அனுப்பப்பட்ட ருஷிய சேனைகளுக்கும் கைவா அரசனின் சேனைகளுக்கும் சண்டைகள் நடந்தன. ருஷியா தம சத்துருக்களை முறியடித்து பல பட்டணங்களைக் கட்டிக்கொண்டார்கள். கைவா துரைத்தனத்தார் ருஷிய பிரஜைகளுக்கு முன் செய்த அக்கிரமசெய்கைகளினிமித்தம் அவர்களைச் சிக்ஷைசெய்தபின்பு ருஷியா அதைவிட்டு நீங்குவார்களென்று உத்தேசிக்கலாம். ருஷியருக்கு நேரிட்ட செலவு கைவாப்பிரதேசத்தார் கொடுக்கநேரிடும். கொடாவிடில் ருஷியர் அத்தேசத்தில் இருந்துகொண்டு கோட்டைகளைக் கட்டி ஆண்டுவருவார்கள்.

**ஐஞ்சிபார்** சுல்த்தான் அங்கிலேய மஹா ராஜாத்தியவர்கள் அனுப்பிய உடன்படிக்கைக்குக் கையெழுத்துவையாதபோனால், ஐஞ்சிபார் தீவின் சமீபத்தில் கப்பல் போக்குவரவு இராதபடிக்கு மஹா ராணியவர்களுடைய போர்க்கப்பற்கூட்டத்தால் தடையுண்டாகுமென்று அறியப்பெற்றதின்பேரில் குறித்த உடன்படிக்கைக்குக் கையெழுத்துவைத்துவிட்டார். “கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியா!”

**அமேரிக்கா**வைச் சேர்ந்த போஸ்டன் பட்டணத்தில் எண்ணிறந்த வீடுகளையும் பொருட்களையும் பக்ஷிக்கும் அக்கினி எரிந்துகொண்டேயிருக்கின்றதாம். அதனால் உண்டான பொருள் நஷ்டம் ஏறக்குறைய இரண்டரைக்கோடி ரூபாய்.

**தென்னிந்தியா.** திருநெல்வேலி ஸ். பி. ஜி. மிஷியனைச்சேர்ந்த கனம்: டாக்டர் கால்டுவேலையரவர்கள் தேகசுகத்துக்காக அம்மாளவர்களுடன் சென்றமாசாரம்பத்தில் சீமைக்குப் பிரயாணப்பட்டுப் போனார்கள்.

---

ஆகஸ்டுமீ நாள் 31. ஆடிமீ 19உ முதல். ஆவணிமீ 18உ வரை.

| வாரம். | தேதி. | தமிழ் தேதி. | அனுதினத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௧௯ | உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார். யாத். 16:7. |
| பு | 2 | ௨௰ | கர்த்தருடைய சந்நிதியில் சேருங்கள். 9. |
| வி | 3 | ௨௧ | கர்த்தருடைய மகிமை மேகத்தில் காணப்பட்டது. 10. |
| வெ | 4 | ௨௨ | இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம். 15. |
| ச | 5 | ௨௩ | உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். 2 இராசா 20:5. |
| ஞா | 6 | ௨௪ | இதோ நான் உன்னைக் குணமாக்குவேன். 5. |
| தி | 7 | ௨௫ | தன் பிதாக்களின் தேவனுடைய கர்த்தரை விட்டுவிட்டான். 21:22 |
| செ | 8 | ௨௬ | கர்த்தருடைய உக்கிரம் பெரியது. 22:13. |
| பு | 9 | ௨௭ | உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். சங். 84:1. |
| வி | 10 | ௨௮ | எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும். 9. |
| வெ | 11 | ௨௯ | கர்த்தர் கிருபையை அருளுவார். 11. |
| ச | 12 | ௩௰ | உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். 11. |
| ஞா | 13 | ௩௧ | கர்த்தரை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான். 12. |
| தி | 14 | ௧ | உமது சனத்தின் அக்கிரமத்தை மன்னித்தீர். 5:2. |
| செ | 15 | ௨ | உமது கோபத்தின் எரிச்சலை விட்டுத் திரும்பினீர். 3. |
| பு | 16 | ௩ | உத்தமர்கள் பூமியிலே தங்கியிருப்பார்கள். நீதி. 2:21. |
| வி | 17 | ௪ | துரோகிகள் பூமியிலிராதபடி நிர்மூலமாவார்கள். 22 |
| வெ | 18 | ௫ | என் மகனே என் போதகத்தை மறவாதே. 3:1. |
| ச | 19 | ௬ | கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக. 3. |
| ஞா | 20 | ௭ | உன் வழிகளிலெல்லாம் கர்த்தரை நினைத்துக்கொள். 6. |
| தி | 21 | ௮ | உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்வேன். ஏசாயா 49:25, |
| செ | 22 | ௯ | உங்கள் அக்கிரமங்களினிமித்தம் நீங்கள் விற்கப்பட்டீர்கள். 50:1. |
| பு | 23 | ௰ | மீட்கக்கூடாதபடிக்கு என் கரம் குறுகிற்றோ? 2 |
| வி | 24 | ௧௧ | ஆண்டவர் என் செவியைத் திறந்தார். 5. |
| வெ | 25 | ௧௨ | அவன் பாவம் பத்திரப்படுத்தியிருக்கிறது. ஓசியா 13:12. |
| ச | 26 | ௧௩ | அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன். 14. |
| ஞா | 27 | ௧௪ | ஆண்டவரே, விசுவாசிக்கிறேன். யோவான் 9:38. |
| தி | 28 | ௧௫ | நல்லமேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். 10:11. |
| செ | 29 | ௧௬ | தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். உரோமர் 8:33. |
| பு | 30 | ௧௭ | நமக்காக வேண்டுதல் செய்கிறவர் அவரே. 34. |
| வி | 31 | ௧௮ | கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? 35. |

## விசேஷித்த நாட்கள்.

6. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு.
10. பௌர்ணமி.
13. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
20. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், ஆறாம் ஞாயிறு.
24. அமாவாசை.
27. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், ஏழாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. August. No. 8.

### Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 142
A Family Commentary on the Sermon on the Mount. 143
Notes on Genesis. ... ... ... ... ... ... 147
Christian Church History. ... ... ... ... ... 151
The Parables of Christ... ... ... ... ... ... 153
Farewell address to Rev. Dr. Caldwell. ... ... 154
Summary of News. ... ... ... ... ... ... 158


### அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௪௨
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ௧௪௩
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௧௪௭
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௧௫௧
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௧௫௩
கனம்: கால்டுவெல் ஐயரவர்களுக்கு பிரயாணோபசார பத்திரம். ... ... ... ... ... ... ... ௧௫௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ... ௧௫௮



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS.
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்.

அ· ஆகஸ்டுமீ. ௲அளகூ வருடம்

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### முன்னிலைமையும் பின்னிலைமையும்.

(தொடர்ச்சி.)

யோபு 1; 2; 42: 10—17.

அமெரிக்காவிலுள்ள ஒரு சிறு பெண்ணின் சரித்திரம் வாசித்திருக்கிறேன். அவள் தாய் இறந்துபோனாள். தகப்பனோ குடிகாரன். அப்படியிருந்தும் அநேக வருஷமாய்க் கஷ்டப்பாடுபட்டு அவனைப் பராமரித்துக்கொண்டுவந்தாள். இப்படியவள் பட்ட பாடுகளுக்கு சில வேளைகளில் கிடைத்த பலன் அடியும் வசவுந்தான். கடைசியில் அவள் விவாகம் செய்துகொண்டாள். அப்பொழுதும் தகப்பனைக் கைவிடாமல், பலவீனனும் உதவியற்றவனுமிருந்த அவனைத் தன் புதிய வீட்டுக்குக் கொண்டுபோய், ஒரு சிறு பிள்ளையைப் பராமரிக்கிறவண்ணமாய், நாலு வருஷத்துக்குப்பின் அவன் இறந்துபோகிறவரையில் அவனை உருக்கமாய் விசாரித்துப் பராமரித்துக்கொண்டேவந்தாள். என்றாலும் அவள் மொறுமொறுக்கவில்லை. அப்புறம் தேவன் அவளுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தார். அந்தப் பிள்ளை தவிர வேறு பிள்ளைகளில்லை. அந்தப் பிள்ளைமுதலாய்ச் சப்பாணியாயிருந்தது. இப்பொழுதாவது முறையிட்டாளோ? முறையிடவேயில்லை. பின்னை எப்படிச் சொன்னாளென்றால், "இந்த ஏழைப்பிள்ளை இப்பொழுதே வருத்தப்படுகிறது, உருக்கமும் பட்சமுமுள்ளதாய் அதற்கில்லாவிட்டால் எத்தனை அதிகமாய் வருத்தப்படவேண்டியிருக்கும். அதைப் பராமரிக்கிறதற்குப் போதுமான பெலனும் சுகமும் எனக்கில்லாதேபோனால் எனக்கு எவ்வளவு மன வேதனையிருக்கும்" என்றாளாம். அந்தப்படியே அவள் வருஷாவருஷம் தினந்தோறும் வியாதியாய்க் கிடந்த அந்தப் பையனண்டை உட்கார்ந்து, அன்பாயும் மகா உருக்கமாயும் ஆதரித்து வந்ததுமல்லாமல், சிறு பிராயத்திலேயே அந்தப் பிள்ளைக்கு தேவனைக்குறித்தும் மோட்சத்தைக்குறித்தும் பொறுமையோடு போதித்துக்கொண்டுவந்தாள். அந்தச் சிறுவனும் சாந்தமும் பொறுமையுமுள்ளவனாகி, தேவனை அறியவும் நேசிக்கவும் கற்றுக்கொண்டான். அவன் படுத்துக்கிடந்த சிறு அறை அக்கம் பக்கம் குடியிருந்த யாவருக்கும் சீக்கிரம் ஆசீர்வாதமான இடமாகிவிட்டது. அவ்விடத்துக்கும் சமீபமான ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துக்கும் நாலு மைல் தூரமுண்டு. அதினால் அவ்வூர்ப் பிள்ளைகள் அந்தச் சப்பாணிப் பையனுடைய அறைக்குப்போய் ஞானமான போதனையையும் செபம்பண்



ணும் வழக்கத்தையும் கற்றுக்கொண்டுவந்தார்கள். அங்கே கூடிவந்த யாவருக்கும் தாய் வாத்திச்சிபோலானாள். துன்பப்பட்ட மகன் எல்லோருக்கும் நல்ல மாதிரியும் சிநேகிதனுமாயிருந்தான்.

அவ்விருவரும் இன்னமும் உயிரோடிருக்கிறார்கள். அந்தச் சப்பாணிப் பிள்ளையாண்டான் இப்பொழுது நடுப்பிராயமுள்ள புருஷனாயிருக்கிறான். அவன் தாயின் தலைமயிர் வயசினாலும் விழிப்பினாலும் நரைத்துப்போயிற்று. வாடின அவள் முகத்திலோ இன்னம் பொறுமையும் சந்தோஷமும் விளங்குகிறது. மொறுமொறுப்பான சுபாவமுள்ள அயலகத்தாருக்கு அவளால் நல்ல படிப்பினையுண்டாகிறது. அவள் எப்பொழுதும் தனக்குச் சூரியனும் கேடயமுமாயிருக்கப்பட்ட தேவனையே நோக்கிக்கொண்டிருக்கிறாள். ஒன்றினாலும் அவள் அசைக்கப்படவேமாட்டாள்.

அருமைப் பிள்ளைகளே, துன்பகாலத்தில் பொறுமைத்தாழ்ச்சியாய் நடக்கத் தூண்டிவிடப்படும்போது, இப்பேர்ப்பட்ட நல்ல திருஷ்டாந்தங்களை நினையுங்கள். உங்களுக்கு நேரிடும் ஒவ்வொரு துக்கமும் ஒவ்வொரு சந்தோஷமும் தேவனாலேயே வந்ததாக உணர்ந்து நடந்துகொள்ளும்படி அவரைப் பிரார்த்தியுங்கள்.

இரண்டாவது. தேவன் எப்பொழுதும் கோபத்தினாலேயே துன்பத்தை அனுப்புகிறதில்லையென்றும் யோபு கற்றுக்கொண்டான். யோபு துன்பப்பட்ட நாட்களில் அவனைப் பார்க்கவும் அவனைத் தேற்றவுமென்று மூன்று சிநேகிதர் வந்தார்கள். ஆகிலும் அவனுக்குண்டாயிருந்த பெரிய தரித்திரத்தையும் நிர்ப்பந்த ஸ்திதியையும் அவர்கள் கண்டபோது, தேவன் இப்பேர்ப்பட்ட காரியங்களை அவனுக்கு வரவிட்டபடியால் அவன் மகா பொல்லாதவனாயிருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். அதினாலே அவனை ஆறுதற்படுத்தவந்த அவர்கள் தங்கள் விபரீதப்பேச்சுகளினால் அவனுக்குச் சொல்லமுடியாத கசப்பையும் வேதனையையுமே உண்டாக்கினார்கள்.

தேவன் தமக்குப் பிரியமான பிள்ளைகளுக்கும் பலமுறை பெரிய துன்பங்களை அனுப்புகிறாரே. அது ஏன்? அவர்களைத் தண்டிக்கவோ? அல்ல, அவர்களுக்கு அதிக நன்மையுண்டாகத்தான். கிறிஸ்துநாதர் ஒருவிசை தம்மை திராட்சச்செடியென்றும், தமது சீஷர்கள் அதின் கொடிகள் என்றும் பேசினது உங்களுக்கு ஞாபகமிருக்குமே. அப்பொழுது அவர் சொன்ன ஒரு வசனத்தை நினைத்துக்கொள்ளுங்கள். "கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்."

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 7: 7—11.

(தொடர்ச்சி.)

கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்போது கண்டடைவீர்கள்.—பரலோகத்தில் இருக்கிற உங்கள் பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளை அதிக நிச்சயமாய்க் கொடுப்பார் அல்லவா?

சுவிசேஷமானது உச்சாகப்படுத்துந் தன்மையுள்ளது. இந்த வசனங்களில் கிறிஸ்து சொல்லிய இந்த வார்த்தைகளைவிட வேறெது அதிக உச்சாகமுந் தைரியமுங் கொடுக்கும்? ஒருவன் தான் கேட்க விரும்புவதெல்லாம் அவனுக்குக் கிடைப்பதும், அவன் தேடுங் காரியத்தைச் சந்தேகமில்லாமல் கண்டுபிடிப்பதும், அவன் தட்டுங் கதவு தவறாமல் அவனுக்குத் திறக்கப்படுவதுமுண்டானால், அவன் விரும்பக்கூடியதெல்லாம் அவனுக்குக் கிடைத்ததாகையால் அவன் அதிஷ்டமுள்ளவனென்று எண்ணப்படுவான். இவ்விதமாகவே சுவிசேஷத்தின்மூலமாய் நமக்கறிவித்திருக்கிற ஞான செல்வங்களையும் கிடைக்குமென்ற நிச்சயத்தோடு தேடும்படி நமது இரட்சகர் நம்மை ஏவுகிறார். கிறிஸ்து சொன்ன முக்கிய வசனங்களிலொன்று, "கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்பதாம். கேட்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுவது நிச்சயமென்பதைக்குறித்துக் காட்ட அவர் பின்னுஞ் சொல்வது "கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கபபடுமென்கிறார்." நாம் தேவனிடத்தில் கேட்கிறதென்றால் செபம்பண்ணுவதையும், நாம் கேட்டால் பெற்றுக்கொள்வோமென்ற வாக்குத்தத்தம் நாம் செபத்திற் கேட்கிற காரியங்களை அதாவது, நமக்கு முக்கியமாய்த் தேவையாயிருக்கிற ஞானநன்மைகளை நாம் தேவனிடத்தில் பிரதானமாய்க் கேட்டால் அவர் கொடுப்பாரென்பதையுங் குறிக்கும். தேடுங்கள் என்ற கட்டளையினாலே நாம் கிருபையின் சகல எத்தனங்களையும் சாக்கிரதையோடும் ஆவலோடும் கையாளவேண்டுமென்று போதிப்பதாக இருக்கிறது. "தேடுங்கள் அப்போது கண்டடைவீர்கள்." இது நாம் கையாளும் ஆவிக்குரிய எத்தனங்கள் மூலமாய் தேவ ஒத்தாசையால் தகுந்த ஞானநன்மைகள் உண்டாகுமென்று அவர் பண்ணும் வாக்குத்தத்தமாயிருக்கிறது. "தட்டுங்கள் அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்" என்ற வசனமும் கிட்டத்தட்ட அந்தக் கருத்தாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இது செபம்பண்ணுவதும் கிருபையின் எத்தனங்களைக் கையாளுவதும் நியாயமென்பதையும் அவைகளை அசட்டைசெய்வது அநியாயம் என்பதையும் முக்கியமாய்க் குறித்துக் காட்டுகிறது. ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்க விரும்புகிறவன் கதவைத் தட்டுகிறான். அதுபோலவே நாம் கிறிஸ்துவின் இராச்சியத்துக்குள் பிரவேசிக்க விரும்பினால் நாமுந் தட்டவேண்டும். அதாவது அதற்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்பட விரும்பினால் அதற்கென்று ஏற்படுத்தியிருக்கிற ஏற்பாடுகளை அனுசரிக்கவேண்டும். திருஷ்டாந்தரமாக வெளியிலே நிற்கிறவன் தான் உட்பிரவேசிக்க விரும்புகிற வீட்டுக் கதவைத் தட்டாவிட்டால் என்றென்றைக்கும் வெளியிலேயே நிற்பானே. அதுபோலவே செபத்தின்மூலமாகவும், கிருபையின் எத்தனங்கள்மூலமாகவும் நாம் கிறிஸ்துவின் இராச்சியத்துக்குட் பிரவேசிக்கத் தேடாவிட்டால் சுவிசேஷ ஆசீர்வாதங்களுக்கு நாமும் என்றென்றைக்கும் அன்னியராயிருப்போம். நாம் கேட்டால் நமக்குக் கிடைக்கும், கேளாவிட்டால் நமக்கு மிகவுந் தேவையாயிருக்கிற காரியங்களும் நமக்குக் கிடையாமல் குறைவடைவது நியாயமல்லவா. நாம் தேடினால் கண்டடைவோம். தேடாவிட்டால் நமக்குத் திரவியம் கிடையாது. தட்டினால் நமக்குத் திறக்கப்படும். உட்பிரவேசிக்கும்படியான எத்தனங்களைக் கையாளப் பிரியமில்லாவிட்டால் நாம் என்றென்றைக்கும் வெளியேதான் நிற்போம்.

மேலும் "உங்களில் எந்த மனிதனாலும் தன்னிடததில் அப்பத்



தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா" என்கிறார். இதினாலே தேவன் செபத்தைக் கேட்கத் தமக்கு மனமுண்டு என்பதை பூமிக்குரிய தகப்பனொருவன் தன் பிள்ளைகளின் விண்ணப்பத்தைக் கட்டளையிட மனதாயிருக்கிறதைச் சொல்லிக்காட்டிப் போதிக்கிறார். அதிலும் அதிகப் பலமாகச் சொல்லுகில், "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கும்படி அறிந்திருக்க, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளை" (இன்னொரு இடத்திற் சொல்லியிருக்கிறபடி, "பரிசுத்த ஆவியை") "அதிக நிச்சயமாக கொடுப்பாரல்லவா."

இதுவரைக்கும் இந்த வசனத்துக்கு விஸ்தரிப்புச் சொன்னோம். இனிமேல் இதின்பேரில் சில கவனிப்புகளைச் சொல்லுவோம். முதலாவது, சுவிசேஷம் கடினமானது என்று சொல்லி மூறையிடுகிறவர்களுடைய தப்பிதத்தை எடுத்துக் காட்டுவோம். சுவிசேஷம் சொல்லுகிறபடி உலகத்தை வெறுத்து பூமிக்குரிய உங்கள் ஆசாபாசங்களை ஒறுத்தடக்குவதும் அது சொல்லுகிற தன்மையை அடைந்து, அது செய்யச் சொல்லிப் போதிக்கிற கிரியைகளை நிறைவேற்றுவதும் ஒருவேளை உங்களுக்குக் கடினமாகத் தோன்றுகிறதாக்கும், அதாவது வேத ஆசாரத்தை நீங்கள் கடின ஊழியமாகப் பாவித்து எண்ணுகிறீர்கள். ஆனால் தான் விதிக்கிற விதிகளை நிறைவேற்றுவதற்கு நமக்குப் போதுமான வழிவகைகளைக் காட்டுகிற வேதத்தைக் கடினமானதென்று சொல்லலாமா? சுவிசேஷமானது அதிசயிக்கத்தக்கவிதமாய் முற்றுப் பெறுவதற்கு இசைநத வழிவகைகள் சொல்லுகிற சமயம். அதிற் சொல்லப்பட்ட உபதேசங்கள் சரியாய் விசுவாசிக்கப்படும்போது அது விதிக்கிற கடமைகளை நிறைவேற்ற அவைகள் தாமே சுயமாய் ஏவும். மாமிசத்துக்கும் இரத்தத்துக்கும் கடினமாயிருப்பதுகள் அநேகம் சுவிசேஷத்திலுண்டென்பது நிசந்தான். ஆனால் ஒருவன் தேவனுடைய பரிசுத்த ஆவியின் ஒத்தாசையைச் செபத்தின்மூலமாய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளும்போது அவைகள் அப்புறம் கடினமாயிராது. தன்னிடத்தில் அப்பங் கேட்டு அழுகிற பிள்ளைக்கு தகப்பன் அதைக் கொடுக்கிறதுபோல இந்தப் பரிசுத்த ஆவியைக் கொடுக்கவும் தேவன் ஆயித்தமாயிருக்கிறார் என்று நமக்கு உறுதி சொல்லியிருக்கிறது. போதுமான திடநம்பிக்கை கொடுக்கப்படாத ஒரு காரியத்துக்காக உழைப்பதும் கண்டுபிடிப்போமென்று நம்புவதற்கேதுவல்லாத காரியத்தைத் தேடுவதும், எவருந் திறக்க மனமில்லாத கதவைப் பிடிவாதமாய்த் தட்டுவதுந்தான் மெய்யான வருத்தமாம். பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர் வைககோலில்லாமல் செங்கல் செய்யவேண்டியதாயிருந்ததே, அது மெய்யாகவே வருத்தந்தான். பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினாலே மாத்திரம் கனியுண்டாகக்கூடியதாயிருக்கத் தேவன் தம்மைக் கேட்டுக்கொள்ளுகிறவர்களுக்கு அந்த ஆவியின் ஒத்தாசையைக் கொடாதிருக்கையில் ஆவியின் கனிகளைப் பிறப்பிக்கச்சொல்லிக் கேட்பது நிசமாகவே கடினந்தான்.

இவ்வகையான வருத்தம் இச்சீவனுக்குரிய காரியங்களில் மிகுதியாயுண்டு. உலகத்தார் தங்களுக்குக் கிடைக்குமென்று நம்ப ஏதுவில்லாத காரியங்களுக்காக உழைக்கிறார்கள். பிச்சைக்காரர் தாங்கள் கேட்கிற பிச்சை கிடைப்பது நிச்சயமில்லாவிட்டாலும் வாஞ்சையாக் கேட்கிறார்கள். உயர்வை நாடுகிற மனிதன் அது கிடைக்குமென்ற நம்பிக்கையில்லாவிட்டாலும் அதைப் பெற்றுக்கொள்ளலாமென்

று தனக்கெட்டின முயற்சிகளையெல்லாம் செய்கிறான். பொருளாசைக்காரர் திரவியத்தையும், கனத்தை விரும்புகிறவர்கள் கனத்தையும் தாங்கள் விரும்புகிற அவைகள் கிடைக்குமோ கிடையாதோவென்பதைப்பற்றி அவர்களுக்கு நிச்சய அறிவில்லாவிட்டாலும், அவைகளை நாடித் தேடுகிறார்கள். ஆவிக்குரிய காரியங்களோ இப்படி நிச்சயமற்றவைகளல்ல. நாம் அவைகளைத் தேடினால் அவைகள் நமக்குத் தவறாமல் கிடைக்குமென்று கிறிஸ்து உறுதியாய்ச் சொல்லுகிறார். இந்த நம்பிக்கையோடு இவைகளைத் தேடப் பிரயாசப்படுவோமாக. நாம் கிருபையின் எத்தனங்களை கையாளவேண்டுமென்று தேவன் கற்பிக்கிறார். அவைகள் நம்முடைய பெலவீனத் தன்மைக்கேற்ற எத்தனங்களாயிருக்கின்றன. அவைகளைக் கையாளுவது நமது காரியம். அவைகள் நியமிக்கப்பட்ட நோக்கமாக அவைகளைப் பலிதப்படுத்துவது தேவனுடைய காரியம்.

ஆனால் கேட்கிறதற்கு தேவன் நம்மை இணங்கச்செய்கிறவரைக்கும் நாம் காத்திருக்கவேண்டாமா? "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15: 5.) என்று கிறிஸ்துதாமே சொல்லவில்லையா? எங்களால் ஏதாவது ஆகும் என்பதுபோல, "ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலேயே தகுந்தவர்களல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கின்றது" (2 கொரி. 3: 5) என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லவில்லையா? என்று சிலர் சொல்லவருவார்கள்.

இதற்கு உத்தரவாக வேதவாக்கியங்கள் ஒவ்வொன்றையும் அதது நிற்கிற சம்பந்தப்படி வியாக்கியானஞ்செய்யக் கவலையாயிருப்போமாகவென்று இதற்குமுன் சொன்னதுபோல இப்போதும் சொல்லுகிறோம். இப்போது இந்த வசனத்தின் கருத்தென்னவென்று மாத்திரஞ் சிந்திப்பது நமக்கடுத்தது. இந்த வசனம் நமக்குத் தைரியத்தையும் சொல்லி நம்மை ஏவுகிறது. அப்படி இது தைரியங்கொடுக்கிறதல்லவென்று சொல்லுவோமானால் சந்தேகமில்லாமல் இதைப் புரட்டுகிறோம். கிறிஸ்து கற்பித்திருக்கிற தெளிவான புரட்டற்ற கற்பனைகளுக்கும், அதோடு சேர்க்கப்பட்ட மனித வியாக்கியானத்துக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. முந்தினது தெளிவுள்ளதும் தைரியப்படுத்துவதுமாயிருக்கிறது. பிந்தினதோ திகைப்புண்டாக்குகிறதும் அதைரியம் கொடுக்கிறதுமாயிருக்கிறது.

இந்தக் கற்பனையானது சந்தேகமும், தாமதமும், பயமும், அவநம்பிக்கையுமில்லாமல் கேட்கும்படி நமக்குப் போதிக்கவில்லையா? இந்த வார்த்தைகளைவிட அதிகத் தெளிவான வார்த்தைகளை எங்கே காணலாம். இவைகளில் ஈரருர்த்தமிருக்குமென்று சந்தேகப்படுகிறேனென்று நீ சொல்லுகிறாயோ. அப்படியானால் கிறிஸ்து புரட்டுக்காரரா? தொனியில் தைரியங்கொடுக்கிறதும், கருத்திலோ அதைரியங்கொடுப்பதும்; தெளிவான அர்த்தத்தைக் கெடுத்து தெளிவும் அருமையுமான இந்த வாக்குத்தத்தத்தை அபத்தமாக்கும் மறைவான அர்த்தமுள்ளதும், தோற்றத்தில் எல்லாருக்குந் தைரியங்கொடுப்பதாயிருந்தும், எதார்த்தத்தில் சிலருக்குமாத்திரம் தைரியங்கொடுப்பதுமான இரட்டைமொழிகளையா கிறிஸ்து பிரயோகித்திருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து இப்படி அவநம்பிக்கைகொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக. இயல்பான அர்த்தப்படி கிறிஸ்துவின் வார்த்தைகளை நம்பி முன்னும் பின்னும் யோசியாமல் நம்முடைய ஆத்துமாவை அவருடைய வசனத்துக்கு ஒப்புவிக்கும்போது அவருக்கு அதிகக் கனம்



உண்டாகச் செய்கிறோம். ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அசமந்தமாகவும் மேன்பராக்காகவும் தேடுவது போதாது. அனலற்ற செபம் செபமுமல்ல. அசமந்தத் தேட்டம் தேட்டமுமல்ல. அலட்டிக் கெஞ்சிக் கேட்கும் செபமாத்திரம் கேட்கப்படுமென்று தமது சீஷருக்குப் போதிக்கும்படியாக இரட்சகர் ஒரு உவமையும் சொல்லியிருக்கிறார். "மகனே ஞானத்தை வாவென்று கூப்பிட்டு, புத்தியை சத்தமிட்டழைத்து அதை வெள்ளியைப்போல நாடி புதையல்களைத் தேடுகிறதுபோல தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்" (நீதிமொ. 2: 3—5) என்று சாலோமோன் சொல்லுகிறார். ஆகையால் தேவன் நம்மைக் கேட்கத்தக்கவிதமாக அவரை நோக்கி கூப்பிட்டு முழு இருதயத்தோடு அவரைத் தேடுவோமாக. அப்போது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வோம். அவருக்குள் சகல ஞான ஆசீர்வாதங்களும் அடங்கியிருக்கின்றது.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### உ௰. அதிகாரம்.

#### ஆபிரகாம் இரண்டாந்தரம் பொய்சொன்னது.

1. "அவ்விடம்" மம்ரேயின் சமபூமி. 13: 1, 18: 1. 24: 62.

"காதேசு." (பரிசுத்தம்) அல்லது காதேசுபர்னியா. 16: 7, 14. உபா. 1: 19. 1 சாமு. 15: 7. பலஸ்தீனாவுக்குத் தெற்கே வனாந்தரத்திலுள்ள பட்டணம். எண். 27: 14.

"சூர்." (கிணறு) எகிப்தின் கரையோரத்தில் சூவேஸ் பட்டணத்துக்குச் சமீபமாய் பலஸ்தீனாவை அடுத்த பட்டணம். 16: 7.

"கேரார்" பெலிஸ்தருடைய பிரதான பட்டணம். 10: 19.

2. "அபிமேலேக்கு" (இராசாவாகிய என் தகப்பன்.) இவன் சமுசார வாழ்க்கையுள்ளவனாயிருந்தும் (17 வா.) சாராளைக் கலியாணம் செய்யும்படி நோக்கமாய் அழைப்பித்தான். 12: 14 வியா. இப்பொழுது சாராள் கர்ப்பவதியாயிருந்தாளென்று நினைக்கத்தக்கது. இதினாலே அவளுக்கும் ஆபிரகாமுக்கும் வெகு கவலையுண்டாயிருக்கும்.

4. "அழிப்பீரோ" சோதோம் கொமோராவின் திகில் பக்கத்திலுள்ள சாதிகளுக்கு சீர்ப்பாட்டை உண்டாக்கினது.

6. "எனக்கு" சங்கீ. 51: 4. மனுஷன் தேவசாயலாகப் படைக்கப்பட்டான். விபசாரக்காரன் தேவனோடு எதிர்த்து நின்று உம்முடைய சாயலை அலைக்கழித்துப்போட்டேன் பாரும் என்று அவர் கட்டளைக்கு நேர்விரோதஞ்செய்கிறதினாலே தேவனுக்கே விரோதமாய் பாவஞ்செய்கிறான்.

7. "தீர்க்கதரிசி" என்கிற பேர் வேதத்தில் முதலாவது ஆபிரகாமுக்குச் சொல்லப்படுகிறது. ஒருவன் பின்வரும் காரியங்களை முன்

னறிவித்தாலும் சரி முன்னறிவியாவிட்டாலும் சரி, தேவ வெளிப்படுத்தலை தன் சொந்தக்காரியமாயாவது மற்றவர்களுக்குக் கூறும்படியாயாவது பெற்றுக்கொண்டவன் தீர்க்கதரிசியாம்.

12. 11: 29-ல் சொல்லப்படுகிற இஸ்காள்தான் சாராளென்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறதே. அப்படியானால் அவள் ஆரானின் குமாரத்தி.

“என் தகப்பனுக்குக் குமாரத்தி” அதாவது பேத்தி என்றர்த்தம். இப்படி பேரன் பேத்திகளை பிள்ளைகளென்று சொல்வது வழக்கந்தானே. 31: 28. யாத்தி. 2: 18. மேலும் ஆரான் தன் தகப்பனுக்கு முந்தி மரித்துப்போனதினாலே அவன் பிள்ளைகள் தேராகு வீட்டில் வளர்ந்து இவன் பெற்ற பிள்ளைகள்போல எண்ணப்படுவது இயல்பாகவேயிருக்கிறது. ஆபிரகாம் அந்தப் பிள்ளைகளை சகோதரி, சகோதரன் என்று கூப்பிடுவதும் இயல்புதான். இந்த முறைப்படி சாராளை “அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்” என்று சொல்லுகிறான். ஆனால் அவன் அவிசுவாசத்தினாலே ஏவப்பட்டுத் தீர்மானத்தோடே பொய் சொன்னதற்கு இது போக்காகமாட்டாது.

16. “சகோதரனுக்கு” அவள் சொன்ன பொய்யைத் தூண்டிக் காட்டி கண்டிக்கிற வகையாய்ச் சொல்லுகிறான். நீதி. 27: 5.

“ஆயிரம் வெள்ளிக்காசு” 1000 சேக்கல் என்று நினைக்கத்தகும். உத்தேசம் 1160 ரூக்குச் சரியாயிருக்கும்.

“இது” அதாவது இந்த 1000 வெள்ளிக்காசு “உன் முகத்து முக்காட்டுக்காவதாக.” நீ ஆபிரகாமுக்கு மனைவியாகிய வாழ்வரசி என்று எல்லாரும் அறிந்துகொள்ளத்தக்கதாக இந்தப் பணத்தினாலே உனக்கு முக முக்காடு வாங்கிக்கொள்ளும்படி அவனுக்குக் கொடுத்தேன் என்றர்த்தம். புருஷனுக்குக் கீழ்ப்பட்ட மனைவிகள் அக்காலத்தில் இப்படிப்பட்ட முக்காடுபோடுவது வழக்கம்.

இது என்ற வார்த்தையை இவன் என்றும் திருப்பலாம். அப்பொழுது: “இவன்” உன் முகமுக்காட்டுக்காவதாக என்றிருக்கும். சிலர் இந்தக் கருத்தைப்பிடித்து, நீ எவ்விடத்திலும் இவனை உன் புருஷன் என்று அறிக்கையிடுவதினாலே உனக்கு மோசமில்லை என்று அபிமேலேக்கு சொன்னதாக அர்த்தம்பண்ணுகிறார்கள்.

“இப்படி” என்பதுமுதலான வார்த்தைகளுக்குப்பதிலாக செப்டியுஜின்ட் திருப்புதலில் “எந்தக்காரியத்திலும் உண்மையைப் பேசு” என்றிருக்கிறது.

17. அபிமேலேக்கு கூடியமட்டும் யோக்கியன் என்று காணப்படுகிறது. அப்படியிருந்தும் அவன் எவ்வளவேனும் இந்தப் பாவத்துக்கு இடங்கொடாதபடி இந்த வாதை உண்டானது. இதினாலே தேவன் இந்தப் பாவத்தைக்குறித்து எத்தனை கண்டிப்பாயிருக்கிறாரென்று விளங்கும்.

இந்தச் சங்கதிகளாலே மெய்த்தேவனைப்பற்றிய அறிவு பெலிஸ்தருக்குள் பரவும்படி இந்த வாதை ஏதுவாயிருந்தது. 1 சாமு. 5: 6.

### படிப்பினை.

வேதசரித்திரக்காரன் எத்தனை உண்மையுள்ளவன்! இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் எழுதினால் குறைச்சல் அல்லவா என்று நினைக்கவில்லை. விசுவாசிகளுக்குத் தகப்பனுடைய பாவங்களையும் யாதொரு பட்சபாதமில்லாமல் காட்டுகிறான்.—நமக்கு ஆபத்து நேரிடும்போது நம்முடைய சொந்த ஞானத்தைப் பிரயோகிக்கிறதில் பிரயோ



சனமில்லை. 13 வா. நம்மை கர்த்தருக்கு ஒப்புவித்துப்போட்டு செபத்தினாலே அவரிடத்தில் ஆலோசனைகேட்டு நடக்கவேண்டும். சத்தியத்தைப்பேசி நீதிநேர்மையாய் நடப்பதே சோதனைக்கு நீங்கும் வழி. உபாய தந்திரங்கள் பெரும்பாலும் கேட்டையும் வெட்கத்தையுமே வருவிக்கும்.—பொய்சொல்லுகிறவர்கள் தங்கள் மனதைத் தேற்றிக்கொள்ளும்படி ஆபிரகாமைப்போல ஒரு வீண் போக்கை வைத்துக்கொள்ளுகிறது வழக்கந்தான். (12 வா.) சாராளுடைய சங்கதியினால், கர்த்தர் தமது பிள்ளைகளைக்குறித்து எவ்வளவு கவலையாயிருக்கிறார் என்றறியலாம்.

## ௨௰௧. அதிகாரம்.

### ஈசாக்கு பிறந்தது.

3. “ஈசாக்கு” என்பதற்கு சந்தோஷம் என்றர்த்தம். 17: 17. 18: 12. “நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போலிருக்கும்.

9. ஈசாக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தாய் முக்கியப்படுவது இஸ்மவேலுக்குப் பொறாமையாயிருந்ததினாலே பரியாசம்பண்ணினான். இது தேவனுடைய உடன்படிக்கையையும் வாக்குத்தத்தத்தையும் அசட்டைசெய்கிற அவபத்தியாயுமிருந்தது. 12. வா.

10. இந்த வார்த்தைகளைக்கொண்டு பவுல் அப்போஸ்தலன் ஒரு பெரிய உபதேசத்தை திருஷ்டாந்தப்படுத்துகிறார். கலா. 4: 21—31. “அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்.” (24 வா.) அதாவது சாராள் கிருபை உடன்படிக்கைக்குக் குறிப்பு. ரோமர் 10: 6—9. ஆகார் கிரியை உடன்படிக்கைக்குக் குறிப்பு. ஆதி. 2: 17. ரோமர் 10: 5. எப்படியென்றால்,

(1) ஆபிரகாமுக்கு சாராள் முந்தின மனைவி. ஆகார் இடையிலே வந்தவள். அப்படியே கிருபை உடன்படிக்கைதான் முந்தினது. இது ஆதியாய்க் கிறிஸ்துநாதரோடு செய்யப்பட்டது. கிரியை உடன்படிக்கை ஏதேன்தோட்டத்தில் முதலாவது ஆதாமோடு செய்யப்பட்டது.

(2) ஆபிரகாமுக்கு சாராள் முந்தின மனைவியாயிருந்தாலும் ஆகாரோ முந்திப் பிள்ளைபெற்றாள். அப்படியே முதலாவது உலகத்திலே வந்த ஆதாம், ஆகாரின் மகனாய் கிரியை உடன்படிக்கைக்குத் தலைவனாயிருந்தான்.

(3) சாராள் ஆபிரகாமுக்கு மனைவி. ஆகார் சாராளுக்கு பணிவிடைக்காரி. அப்படியே நியாயப்பிரமாணம் கிருபைக்குப் பணிவிடைக்காரி. நியாயப்பிரமாணம், மனுஷர் இரட்சிப்புக்கு அவசியமாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அது சாராளின் பணிவிடைக்காரியாக நமது இருதயமாகிய வீட்டைப் பெருக்கி தூசியைக் கிளப்பி திக்குமுக்கிடச்செய்து, பின்பு அந்தத் தூசி மங்கும்படியாக இரத்தம் தெளிக்கப்பட நாம் கூப்பிட்டு அலறப்பண்ணுகிறது. கலா. 3: 24.

(4) சாராள் சுயாதீன ஸ்திரீ. ஆகார் அடிமை. அப்படியே கிருபை உடன்படிக்கை சுயாதீனம். நியாயப்பிரமாணமோ அடிமைத்தனம். கிருபை உடன்படிக்கைகுள்ளானவர்கள், “குமாரனால்” விடுதலையாக்கப்பட்டு சுயாதீனராயிருக்கிறார்கள். ஆகாரோ அடிமைத்தனத்துக்குள்

ளாகவே பிள்ளைப்பெறுகிறாள். நியாயப்பிரமாணத்துக்கு எவ்வளவாய்க் கீழ்ப்படிந்து நடந்தாலும், அது சவுக்கால் அடித்து இன்னம் செய் இன்னம் செய் என்றே சொல்லும். தலையின் சுமையும், முதுகின் பாரமும், மனதின் விசாரமும் ஒருநாளும் அதால் நீங்கப்போகிறதுமில்லை, சுயாதீனமாகப்போகிறதுமில்லை. கலா. 3: 10, 11.

(5) சாராளும் அவள் மகனும் நிலையான சுதந்தரவாளிகள். அடிமையானவளும் அவள் மகனுமோவென்றால் புறம்பே தள்ளப்பட்டார்கள். அப்படியே "தேவனாலே பிறந்தவர்கள்," "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்தை" அடைவார்கள். "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள்." நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யூதர்கள் புறம்பே தள்ளப்பட்டிருக்கிறார்களே! அதுபோல "மாம்சத்துக்குட்பட்டவர்கள்" எல்லாரும் புறம்பே காரிருளிலே தள்ளப்படுவார்கள். விசுவாசிகளான "நாம் ஈசாக்கைப்போல (சாராளுக்குப்பிறந்த) வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்."

14. ஆபிரகாமுடைய விசுவாசத்துக்கு இதுவும் ஒரு திருஷ்டாந்தம். "பெயெர்செபா" பலஸ்தீனாவின் தென் எல்லையோரமாயுள்ள பட்டணம். நாளதிலும் இந்தப் பேர்தான் வழங்குகிறது. நல்ல தண்ணீருள்ள 2 கிணறுகள் இப்போதும் அங்கேயிருக்கிறது. ஆகார் எகிப்துக்குப்போக அனுப்பப்பட்டவளானதினாலே அந்த வழிக்கு இவ்விடத்துக்கு வந்தாள். இப்பொழுது இஸ்மவேல் 16 அல்லது 19 வயதாயிருப்பான். என்றாலும், இவள் வேலைசெய்து அப்பியாசப்பட்டவளானதால் சாமான்களை இவள் தோள்மேல் ஏற்றினான்.

19. எண். 22: 31. 2 இரா. 6: 17—20. லூக். 24: 16.

20. இவனைப்பற்றிச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேற ஆரம்பமாகிறது. 16: 12 வியா.

21. "பாரான்" 14: 6 வியா. ஆபிரகாமும் இஸ்மவேலும் ஒருவரிடத்துக்கு ஒருவர் வரத்துப்போக்காயிருக்கவில்லை என்று நினைக்க நியாயமில்லை. 25: 9, 10 வியா.

22. இந்த அபிமெலேக் முந்தின அதிகாரத்திற் சொல்லப்பட்டவனே. 20: 2. "பிகோல்" 26: 26 வியா.

25, 26. வறட்சியான அத்தேசங்களிலே நல்ல ஊற்றுள்ள கிணறுகள் கிடைப்பது மிக அபூர்வமாயிருந்தது.

30. துரவுதோண்டப்பட்ட நிலம் அபிமெலேக்குக்குப் பாத்தியப்பட்டதாயிருக்கும். ஆகையால் அந்தத் துரவு ஆபிரகாமுக்குப் பாத்தியப்பட்டதற்கு உறுதியாகவும் அடையாளமாகவும் இந்த 7 பெண்ணாட்டுக்குட்டிகளைக் கொடுத்திருக்கலாம்.

31. "பெயெர்செபா" ஆணையின் கிணறு, அல்லது (அந்த 7 குட்டிகளைக் குறிக்கிறவகையாய்) ஏழின் கிணறு என்றர்த்தமாகும்.

32. "பெலிஸ்தருடைய தேசத்துக்கு" அதாவது கேராருக்கு.

33. பெயெர்செபா அக்காலத்தில் பெலிஸ்தர் ஆளுகைக்குட்பட்டிருந்ததாகக் காணப்படுகிறது.

படிப்பினை.

இந்த உலகத்தில் சந்தோஷம் அனுபவித்த உடனே மனவியாகுலமான சம்பவங்கள் தொடர்ந்துவருவதை அடிக்கடி காணலாம். 6, 8, 9—12. தேவ கட்டளை அநேகவிசை நமது மனதுக்கு நோவாயிருக்கும். இருந்தாலும் ஆபிரகாமைப்போல அதற்குக் கீழ்ப்படியவே



ண்டும். 14. ஆபிரகாம் எவ்வளவு தாழ்மையான விசுவாசி. எவ்வளவு கரூர்க்காரன். ஆகாரையும் அவள் மகனையும் அனுப்பிவிடு என்ற, மனதுக்கு ஆயாசமான இந்தக் கட்டளையை நிறைவேற்ற "அதிகாலையில்!" எழுந்திருந்தான்.—ஆபத்துக் கிட்டியிருக்கிறது, சகாயருமில்லை, கைவிடப்பட்டுப்போனேன் என்று அங்கலாய்க்கிற சமயந்தான், பூரணசகாயம் செய்ய கர்த்தருக்கு ஏற்ற சமயம். 15—19. யாத்தி. 3: யோவான் 11: விசுவாசிகளுடைய செபத்துக்கும், ஆபத்திலிருந்து அலறுகிறவர்களுக்கும் கர்த்தர் ஆச்சரியமாய்ச் செவிகொடுக்கிறார்.—வேலைக்காரரும் பிள்ளைகளும் அநேகவிசை சண்டைக்கு முக்கியகாரணரும் கெடுதிக்காரருமாயிருக்கிறார்கள்.—சிறுபிள்ளைகள் விளையாட்டாயும் பரியாசமாயும் பேசுகிறதைக்கூட தேவன் கவனிக்கிறார்! 9, 12.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 15. அதிகாரம்.

சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப்போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—கர்த்தாகோ பட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வலீரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.

(தொடர்ச்சி.)

நோவேத்து என்பவனும் அவனைச் சேர்ந்தவர்களும் கண்காணிய
ருக்கு விரோதம்பாராட்டிக்கொண்டேயிராதிருப்பார்களாகில், அவர்
தாகோப் பட்டணத்துக்கு வெகுகாலத்துக்குமுன்னமேயே திரும்
வந்திருப்பார். தேசியு இராயனுடைய சட்டத்தினாலே கிறிஸ்தவர்
ளிற் பலர் துன்பத்துக்குத் தப்பும்படியாக விக்கிரகங்களுக்குப் ப
யிட்டதில் சம்பந்தப்பட்டார்கள். பலியிடாத வேறு சிலர் பலியிட்
வர்கள் பெயர் எழுதிய டாப்பில் தங்கள் பெயர்களையும் எழுதுவி
து ஒரு அதிகாரியிடத்தில் உறுதிச்சீட்டுப்பெற்றுக்கொண்டு துன்ப
துக்குத் தப்பிக்கொண்டார்கள். இவ்விதமாய் விக்கிரகங்களுக்கு ப
யிட்டும், அதிகாரியின் உறுதிச்சீட்டுப்பெற்றும், மறுதலித்துப்போ
வர்களாக எண்ணப்பட்டவர்கள் தொகை முன் ஒருக்காலுமில்லா
பிரகாரம் அதிகப்பட்டிருந்ததுமன்றி அவர்களைத் திரும்பவும் ச
யிற் சேர்த்துக்கொள்வதைக்குறித்து மிகுந்த தொல்லையும் நேரிட்ட
அப்பேர்ப்பட்டவர்கள் குறிக்கப்பட்ட திட்டப்படி தபசுசெய்தபின்
கண்காணியாரும் குருக்கள்மாரும் அவர்கள்மேல் தங்கள் கை
வைத்ததின்பேரில் அவர்கள் சபையின் ஐக்கியத்திற் சேர்த்துக்கொ

ளப்படுவது வழக்கமாயிருந்தது. மார்க்கத்தினிமித்தமாய் வேதனையைச் சகித்தவர்களும் மரண ஆக்கினைத்தீர்ப்படைந்தவர்களும் மறுதலித்துப்போன எவர்களுக்காவது, சமாதான நிருபம் என்று பேர்வழங்கிய சீட்டு எழுதிக்கொடுக்கும் சலாக்கியமுடையவர்களாயிருந்தார்கள். அப்பேர்ப்பட்ட சீட்டுப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு சபையிலே விதிக்கப்படும் தண்டனையில் ஒரு பாகம் மாப்புச்செய்வதும் வழக்கந்தான்.

துன்பகாலத்தில் மறுதலித்துப்போனதினிமித்தம் மனஸ்தாபப்பட்டுத் திரும்பவும் சபையிற் சேர்ந்துகொள்ள விரும்பின இவர்களைச் சேர்த்துக்கொள்வதில் கண்காணியார் தலத்திலில்லாததினால் சற்று தொல்லைநேரிட்டது. அவர்களில் அநேகர் சபையின் ஐக்கியத்துக்கு நீங்கலாகியிருக்கும்பொழுதே இறந்துபோவோமோவென்று பயந்து மிகுதியுங் கிலேசமுற்றிருந்தார்கள். இத்தறுவாயில் நொவேத்து என்பவனும் அவன் வகையருக்களும் கண்காணியாரையன்றி காரியத்தை நடப்பிக்கத்துணிந்து, சபைக்குப் புறம்பாக்கப்பட்டிருந்த சிலரைச் சபையின் ஐக்கியத்திற் சேர்த்துக்கொண்டார்கள். துன்பத்தில் பின்வாங்காமல் உறுதியாய் நின்று நிர்வகித்தவர்களிற் சிலரும் அவர்களுக்கு அனுசரணையாயிருந்து யோக்கியம் அயோக்கியம் விசாரியாமல் பலருக்குச் சமாதான நிருபங்கள் கொடுத்தார்கள். சபையில் இப்பேர்ப்பட்ட ஒழுங்கீனங்கள் நடக்கிறதை சிப்பிரியன் கேள்விப்பட்டபோது, அவருக்குச் சொல்லமுடியாத கவலையும் மனச்சஞ்சலமுமுண்டாயிற்று. ஆகிலும் இவ்விஷயத்தைபற்றி அவர் தம் அதிகாரத்துக்குட்பட்ட குருக்கள்மாருக்கு அவர் எழுதின நிருபங்களில் இரக்கமான ஓர் திட்டம் அடங்கியிருக்கிறது. அதென்னவென்றால், ஒருவன் சமாதான நிருபம்பெற்றிருந்து மரணத்துக்கேதுவாயிருப்பானாகில் அப்பேர்ப்பட்டவனை தாமிதமின்றிச் சபையிற் சேர்த்துக்கொள்ளலாம் என்பதுதான். சிப்பிரியனைப்போல துன்பத்துக்குத் தப்பி மறைந்திருந்த தியோனிசியு என்னும் கண்காணியாரும் அலெக்சந்திரியாவிலுள்ள குருமார்களுக்கு இந்தத் திட்டத்தையே குறித்திருந்தார்.

இந்தக் கண்காணிமார்கள் மேற்காட்டிய திட்டத்தினாலே ஒருவன் மரணப்படுக்கையிலிருக்கும்பொழுது குணப்படுகிறது என்கிற காரியத்தை ஊர்ச்சிதப்படுத்தப்பார்த்தார்களென்று நாம் நினைக்கலாகாது. மரணத்தறுவாயில் மனஸ்தாபப்படுகிறவனுடைய பாவத்தை தேவன் மன்னிப்பாரென்றாவது மன்னிக்கமாட்டாரென்றாவது தீர்மானிக்க மனிதனாற் கூடியதல்லவென்பது மெய்தான். என்றாலும் ஒருவன் அச்சமயத்தில் கிறிஸ்துநாதருடைய சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் அடையாளங்களாயிருக்கப்பட்ட அப்பத்தையும் திராட்சரசத்தையும் வாங்குவதினால் தன் விசுவாசத்தை வெளிப்படுத்த விரும்பும்போது, அவனைத் தடுப்பது சரியோ? ஒருவன் சாகும் சமயத்தில் இரட்சகரை அறிக்கையிடுவானாகில், அப்பேர்ப்பட்டவன் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்குவதற்கு அயோக்கியனாயிரான் என்று தர்மசிந்தையாய் நம்பினார்கள். அவன் இன்னம் உயிரோடிருப்பானென்று நினைக்கவும் சபையார் அவனுடைய உண்மையைப் பரிசோதித்தறியவும் ஏதுவுண்டானால், அப்பொழுது கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறுதலை நிறுத்திவைக்கவேண்டுமென்றும் விவேகமாய்த் தீர்மானித்தார்கள். இந்த ஞானமான திரவியம் உத்தம விசுவாசிகளுக்கேயுரிய சலாக்கியமாயும் அவர்களுக்குமாத்திரம் அது நன்மையும் ஆறுதலுமாயுமிருக்கிறதென்றும் நிதானித்தார்கள். மறுதலித்தவர்கள் சோ



தனைகாலத்தில் தங்கள் விசுவாசம் உண்மையுள்ளதல்லவென்று காண்பித்தார்களே. அப்பேர்ப்பட்டவர்களைச் சபையார் முழுவதுமாய்த் தள்ளிப்போடாவிட்டாலும், அவர்கள் உத்தமமனஸ்தாபப்பட்டார்களென்று பரிஷ்காரமாய்க் காண்பிக்குமளவும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களோடு அவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள்.

## The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

## XIII. பத்துக் கன்னிகைகள்.

மத்தேயு 25: 1—13.

(தொடர்ச்சி,)

கிறிசொஸ்தமும் மற்றும் சிலரும் 2-ம் தப்பிதத்திற்குட்பட்டார்கள். மற்றதுக்கு ஞானக்கருத்துண்டென்று சொன்னவர் கன்னிகைகளென்பதைப் பிரத்தியக்ஷமான கருத்தின்படி வியாக்கியானம்பண்ணுகிறார். கன்னிகையென்கிறது சுத்தவிசுவாச அறிக்கையைக் குறிக்கும். ஆவிக்குரிய வேசித்தனத்துக்கு விலகினவர்கள் ஒரே தேவனைவிட்டு விலகாதவர்கள். எல்லாக் கன்னிகைகளுக்கும் இதுவுண்டு. தேவகுமாரன் பரலோகத்திலிருந்து வர எதிர்பார்த்து, அவருடைய பிரசன்னமாகுதலை விரும்புகிறோமென்று சொல்லுகிறவர்கள், உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருகிற கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று தங்கள் உதடுகளால் அறிக்கைசெய்கிறவர்கள், தங்களுடைய செய்கைகளால் வெளியரங்கமாய் இந்த நம்பிக்கையை வெறுக்காதவர்கள், விசுவாசிகளின் தொகையில் சேரவேண்டுமென்று விரும்புகிற யாவரும் இந்தக் கன்னிகைகளென்கிறதில் அடக்கமாயிருக்கிறார்கள். கன்னிகைகளெல்லாரும் ஒன்றுபோல தீவெட்டிகளை எடுத்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோனதுபோல இவர்களெல்லாரும் ஒரே கர்த்தரை அறிக்கையிட்டு அவரில் வைத்த ஒரே நம்பிக்கையை பிரசித்தப்படுத்துகிறார்கள்.

அவர்களில் ஐந்து பெயர் புத்தியுள்ளவர்கள். ஐந்து பெயர் புத்தியீனர். தொகையில் ஒன்றுமில்லை, பிரிவினையைத்தான் கவனிக்கவேண்டும். நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்று இவர்களைப் பிரியாமல் மத்தேயு 7: 25 முதல் 27 வரையிலுள்ள வசனத்தைக் கேட்டவர்கள்போல் புத்தியுள்ளவர்கள் புத்தியீனர்களென்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வசனத்தைக் கேட்க விரும்பினதில் கட்டிடம் எவ்வளவு பலவீனமாயிருந்தாலும் மேல்கட்டுமானத்தில் புத்தியீனர்களுக்குள்ளும் சத்தியத்தைப்பற்றி நல்மனம் காணப்பட்டதுபோல, இவர்களுக்குள்ளும் மணவாளனைச் சந்திக்கப்போகவேண்டுமென்கிற எண்ணத்தில் நல்மனங்காணப்பட்டது. புத்தியுள்ளவர்களைப்பற்றி 2 பேது. 1: 5-முதல் 8-லும், புத்தியீனரைப்பற்றி 2 பேதுரு 1: 9-லும் பார். எதினால் புத்தியுள்ளவர்களென்றும் புத்தியீனரென்றுங் காட்டினார்கள்? உவமையில் இதற்கு உத்தரவிருக்கிறது. புத்தியீனர்கள் தங்கள் தீவெட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள். எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவெட்டிகளோடுங்

கூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையுங் கொண்டுபோனார்கள்.

இதுதான் உவமையில் கவனிக்கவேண்டிய விசேஷம். எண்ணெயைக் கூடக் கொண்டுபோகிறது இன்னதென்று விஸ்தரித்தால்தான் இதின் சரியான தாற்பரியம் விளங்கும். இதிலேயுங் கலியாணவஸ்திரத்தைக் குறித்துப் பார்த்ததுபோல ரோமான் மார்க்கத்தாரும் புரோட்டஸ்ற்ருன் மார்க்கத்தாரும் தர்க்கம்பண்ணுகிறதற்கு இடமுண்டு. புரோட்டஸ்ற்ருன் மார்க்கத்தார் இந்தக் கன்னிகைகளுக்கு இல்லாமலிருந்தது விசுவாசம் என்கிறார்கள். கிறிஸ்துமார்க்கத்துக்குரிய வெளியரங்கமான செய்கை அவர்களிடத்திலிருந்தது. இதுதான் மனிதருக்கு முன்பாக பிரகாசித்துக்கொண்டிருந்த அவர்கள் விளக்குகள். உயிருள்ள விசுவாசமாகிய ஆத்தும சீவன் அவர்களுக்கில்லை. அவர்களிடத்திலிருக்கவேண்டிய எண்ணெய் இதுதான். இதிருந்தால்தான் கிறிஸ்துவானவர் வரும்போது அவர்களுடைய விளக்குகள் நன்றாய்ப் பிரகாசிக்கும். ரோமான்மார்க்கத்தாரோ அவர்களிடத்தில் விசுவாசமிருந்ததென்றும், அந்த விசுவாசம் கிரியைகளில்லாமல் தனித்திருந்ததால் செத்ததென்றும், விசுவாசமாகிய விளக்கைப் பாதுகாக்க நற்கிரியைகளைச் செய்ய அவர்கள் பிரயாசப்படவில்லையென்றும், (யாக். 2: 17.) தேவனுக்குமுன்பாக அவருக்காகச் செய்த ஒளியின் கிரியைகளால் மனிதருடைய பார்வையில் அந்த விசுவாசத்தைக் காட்டிவந்தார்களென்றும் சொல்லுகிறார்கள். நன்மைசெய்கிறதினால் தங்களிலுள்ள தேவகிருபையை எழுப்பிவிடாமற் சோம்பலுக்கு இடங்கொடுத்தபடியால் அந்தக் கிருபை அவர்களைவிட்டு எடுபட்டுப்போயிற்றென்றுஞ் சொல்லுகிறார்கள். அவர்கள் விளக்கு மங்கி எரிந்து முற்றிலுங் கடைசியாக எரிந்துபோனபடியால் மறுபடியும் அதுகளைக் கொழுத்த அவர்களால் கூடவில்லை.

---

## கனம்பொருந்திய டாக்ற்றர் கால்டுவெல் ஐயரவர்களுக்கும், சங்கைபொருந்திய கால்டுவெல் அம்மாளவர்களுக்கும் இடையன்குடி கீழ், மேல் சேகரத்து சுதேச குருமார், உபதேசி உபாத்திமார், உபாத்திச்சிமார் 1873-ம் ௵ மே௴ 27௳ எழுதிக்கொடுத்த வந்தனோபசாரப் பத்திரம்.

---

கனம்பொருந்திய ஐயாவே! அம்மாளே!

முப்பது வருஷத்துக்கதிகமாய் எங்களுக்குள் தேவ ஊழியத்தைச்செய்து எங்கள் இகபர நன்மைகளைக் கருதி பிரயாசப்பட்டு எங்கள்நலநஷ்டங்களில் உரிமைபாராட்டிவந்த எங்கள் குருவாகிய தாங்களும் குருபத்தினியாகிய அம்மாளவர்களும் எங்களைவிட்டு உங்கள் ஜெனன தேசத்துக்குப் போகிற இச்சமயத்தில் எங்கள் நன்றியறிதலையும், குரு விசுவாசத்தையும் வெளியிடுவது நாங்கள் செலுத்தவேண்டிய கடமையும், நாங்கள் காட்டவேண்டிய குரு மரியாதையுமேயன்றி வேறல்ல.

தாங்கள் எங்களுக்குச் செய்துவந்திருக்கிற உபகாரங்களுக்குப் பதில் ஈடுசெய்வது எங்களால் அசாத்தியமாயினும், நாங்கள் எங்கள் அன்புக்கு அறிகுறியாக தங்களுக்குமுன் கூடிவந்து எங்கள் நன்றியை இப்படிப் பாராட்டுவதும், தாங்கள் பட்ட பிரயாசங்களின் பலனாக 70 பேருக்கு அதிகமான நாங்கள் தாங்கள் நாட்டின சபைக



ளில் தங்கள் சீஷராய் விளங்குவதுமே நாங்கள் செலுத்தக்கூடிய கைம்மாறு என்று அறிக்கையிடுகிறோம்.

தாங்கள் எங்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளை நினைக்க நினைக்க எங்களுக்குள் எழும்புகிற நன்றியறிதலான அன்பையும், தாங்கள் எங்களைவிட்டுச் சிலகாலமாயினும் பிரிந்துபோக நேரிட்டிருக்கிறதை நினைத்து நினைத்து எங்களுக்குண்டாயிருக்கிற மனத்துயரத்தையும் வெளியிடவந்திருக்கும் இச்சந்தியில், உபசார வந்தனம் எப்படிச் செய்வோமென்றும், உபசார வசனம் என்ன சொல்லுவோமென்றும் மலைந்து நிற்கிறோம். ஆயினும் தேவ கடாக்ஷத்தினாலே தங்களைக்கொண்டு எங்களுக்கும் இந்தப் பிராந்தியத்திலுள்ள ஜனங்களுக்கும் கிடைத்திருக்கிற ஆத்ம சரீர நன்மைகளை இப்போது ஞாபகப்படுத்திக்கொள்வதும், தங்களைப்பற்றி நாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைத் தாராளமாய் வெளியிடுவதுமே எங்கள் சந்தோஷத்தை விளக்கும் வகையென்று கருதி நிற்கிறோம்.

கிழமேல் 35 மயில் நீளமும், தென்வடல் 15 மயில் அகலமுமுள்ளதும் ஏறக்குறைய 60,000 ஜனத்தொகை அடங்கியதுமான இந்தப் பெரிய சேகரம் 1841-ம் ௵ தங்களாலேயே ஸ்தாபகமாகி கடந்த 32 வருஷங்களுக்குள் தங்கள் பிரயாசத்தினாலும், முயற்சியினாலும் அநேக விஷயங்களில் விர்த்தியாகிவந்திருக்கிறது. முன் ஒரே சேகரமாயிருந்த இது, கீழ்பாகம் அல்லது இடையன்குடிச் சேகரமென்றும், மேல்பாகம் அல்லது இராதாபுரம் சேகரமென்றும் இரு சேகரமாகப் பிரிந்ததும், பேர்பெற்றதும் தேவாசீர்வாதத்தினாலே தங்களைக்கொண்டு ஆனகாரியம். ஆரம்பத்தில் 8 சபைகள் மாத்திரம் இருக்க, இப்போது 60 சபைகளுண்டாயிருக்கிறது. அப்போது கிறிஸ்தவர்களான ஆத்துமாக்களின் தொகை 929: இப்போதோ 5146. துவக்கத்தில் ஞானஸ்நானம்பெற்றிருந்தவர்களின் தொகை 651: இப்போதோ 3246. இதில் தேவ நற்கருணை பெறுகிறவர்கள் 700 பேருக்கதிகம். அப்போது வாசிப்பறிந்த புருஷர் 20 க்குக்கீழிருக்க இப்போதோ 600 பேருக்கதிகமிருக்கிறார்கள். ஸ்திரீகளில் வாசிப்பு அறிந்தவர்கள் அப்போது யாருமில்லாத இடத்தில், இப்போது பள்ளிக்கூடங்களில் படிக்கிற பெண்பிள்ளைகள் 354-ம் படித்துத் தேறிப்போயிருக்கிற ஸ்திரீகள் 314-ம் ஆக 668 பேர் உண்டு.

ஸ்திரீகளுக்குள் இவ்வளவாய் அறிவு விர்த்தியும் நாகரீகமுமுண்டாவதற்கு அம்மாளே! தாங்கள் 1844-ம் வருட மத்தியில் பெண்பிள்ளைகளுக்காக ஏற்படுத்தின போர்டிங் பள்ளிக்கூடம் ஏற்ற உதவியாயிருந்துவந்திருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் தற்சமயத்தில் படித்துவருகிற பெண்பிள்ளைகள் டேஸ்காலர்கள் உள்பட 163. போர்டிங் ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகள் 131. இவர்களை வேத அறிவிலும், லௌகீக படிப்பிலும், நற்பழக்கங்களிலும் தேற்றிவருகிறதுமல்லாமல், முன்னுக்கு வருகிற ஆண்பிள்ளைகளை சாயல்புரம் சென்னபட்டணம் கல்விச்சாலைகளுக்கு அனுப்பியும்; பெண்பிள்ளைகளை ஊசித் தையல், ரோந்தாத் தையல் முதலான பிரயோஜனமுள்ள கைத்தொழில்களிலும்; இராட்டின வேலை, வீட்டு வேலை முதலிய சாதாரண வேலைகளிலும் பயிற்றுவிக்கிறீர்கள். தங்கள் நானாவித முயற்சிகளினாலும், சீமைதேசத்துத் தருமசாலிகளான சிமோட்டிகளுக்கு எழுதித் தருவிக்கும் தருமசகாயத்தைக்கொண்டும் நாளுக்கு நாள் அதிகமதிகமான பிள்ளைகளைச் சேர்த்து, ஆதரித்துப் படிப்பிக்க இடம்பண்ணிவந்திருக்கிறீர்கள்.

இந்த மிஷியன் உண்டான ஆரம்பத்தில் கிராமப்பள்ளிக்கூடங்கள் 5-ம் அதில் படித்த பிள்ளைகளுடைய தொகை 115 மாக இருக்க: இப்போது பள்ளிக்கூடங்கள் 34 ஆகவும், அதில் படிக்கிற பிள்ளைகள் 1456 ஆகவும் அதிகரித்திருக்கிறது. பள்ளிக்கூடங்களை முன்னுக்குக் கொண்டுவரவும், படிப்பின் அருமையை அறியாத ஜனங்களுக்குள் கல்விப்பிரியத்தை உண்டாக்கவும், பெண்பிள்ளைகள் கல்வி கற்பதைப்பற்றி வெறுப்புற்றிருந்த ஜனங்களுக்குள் கல்விப்பயிற்சியை உண்டுபண்ணவும், ஒழுங்கற்றவர்களை நாகரீகமுள்ளவர்களாக்கவும், ஏழைகளை உயர்த்தவும், அறிவிலிகளைக் கல்விமான்களாக்கவும் தாங்களும் அம்மாளவர்களும் கொண்ட கவலையையும், பட்ட பிரயாசத்தையும், செய்த முயற்சிகளையும்பற்றி நாங்கள் என்ன சொல்ல!

மேலும் இச்சேகரத்துக்குச் சம்பந்தப்பட்ட சுதேச குருமார் பதினொருபேருண்டு. அவர்களில் 6 பேர் நம்முடைய சேகரத்திலும், 3 பேர் அயல் சேகரங்களிலும் உழைக்கிறார்கள். இரண்டு பேர் கர்த்தருடைய இராச்சியத்தில் இளைப்பாறுகிறார்கள், இவர்களும் 16 உபதேசிமார், 45 உபாத்திமார், 5 உபாத்திச்சிகள். இவர்களில் சிலர் நீங்கலாக மற்றெல்லாரும் தாங்கள் அறியப் பிறந்து வளர்ந்தவர்களாயும, தங்களாலேயே சிறுவயதுமுதல் படிப்பிக்கப்பட்டவர்களாயும், தங்களாலேயே முன்னுக்குவந்தவர்களாயும் இருப்பது எங்களுக்கு மாத்திரமல்ல, தங்களுக்கும் சந்தோஷமாயும், பெருமையாயுமிருக்கவேண்டியது.

இந்தச் சேகரத்தின் மிஷியன் வேலை இப்படிப் புறம்பானபடி காள்வட்டத்திலே அதிகரித்துக்கொண்டுவந்திருப்பதோடே ஆவிக்குரிய உள்ளான வகையிலும் அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதற்கு நாங்களே சாக்ஷிகள். பக்திவிசுவாசத்திலும், வேத வாசிப்பிலும், ஜெபதியானத்திலும, கிருபையின் எத்தனங்களை அனுசரிப்பதிலும், ஓய்வுநாளைப் பக்தியாய் ஆசரிப்பதிலும், வைராக்கியத்தோடு அஞ்ஞானிகளுக்குப் புத்திசொல்லுவதிலும், உற்சாகமாய்க் காணிக்கை கொடுப்பதிலும் பலர் அங்கங்கே வருஷாவருஷம் முன்னுக்குவருகிறார்களென்பது தங்களுக்கும் தெரிந்த காரியமே. பொதுப்பட சபையார் தருமவிஷயத்தில் காட்டிவருகிற உற்சாகம், மார்க்கவைராக்கியத்துக்கும், சபைகளின் உறுதிப்பாட்டுக்கும் வெளியரங்கமான அத்தாட்சியாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக: சென்றவருஷ இச்சேகரத்து சுதேச கிறிஸ்தவர்களால் தருமவிஷயமாகச் சேர்க்கப்பட்ட தொகை ரூ 4036—11—3. இது பொதுப்பட சபையாருடைய உதாரகுணத்துக்கு நல்ல குறிப்புத்தான்.

இதன்றியும் இந்த மிஷியன் தோன்றின ஆரம்பத்தில் இந்தச் சேகரமெங்கும் 8 கோவில்கள்மாத்திரம் இருக்க, இப்போதோ பெரிதும் சிறிதுமான 52 ஆலயங்கள் கட்டப்பட்டு, அதில் காலைமாலை ஜெபமும், பிரசங்கங்களும்; ஓய்வுநாட்களிலும் மற்றும் திருநாட்களிலும் ஆராதனைகளும் ஜெபக்கூட்டங்களும் முறையாய் நடத்தப்பட்டுவருகிறது. அந்த ஆலயங்களில் மிச்சமானவைகள் சபையாருடைய செலவால் கட்டப்பட்டும், அவசியமானபோதெல்லாம் சபையாரால் பழுதுபார்க்கப்பட்டும் வருகிறது. இம்மட்டுங் கட்டப்பட்டிருக்கிற கோவில்களையல்லாமல் புறஸ்தானங்களிலுள்ள இரண்டு சபைகளில் பலமும் பெரிதுமான ஆலயங்கள் கட்டப்பட்டுவருகிறதுந்தவிர, தாய்ச்சபையாகிய இடையன்குடியில் விசித்திரமும், விஸ்தாரமுமான சிறந்த ஆலயமொன்று தங்களுடைய பிரயாசத்தினாலே சமைந்துவருவதை எங்கள் கண் பார்த்துவருகிறது. தாங்கள் இப்போது சீமைக்குப் புறப்பட்டுப்போகவேண்டிய பல காரணங்களில் இந்த ஆலயத்



தைக் குறைதீர்ப்பதற்கு வேண்டிய பொருள் சேகரிப்பதும் ஒரு காரணமென்று நாங்கள் கேள்வியாகி சந்தோஷப்படுகிறோம். தங்கள் நோக்கம் சித்தியாகவும், எங்கள் ஆசை தீரவும் தேவமகிமைக்குப் புகழ்ச்சியாக தாங்களே துவக்கின அந்த மாளிகை தங்களாலேயே முடிவாகவும் தேவனைப் பிரார்த்திக்கிறோம்.

இப்படியாக கர்த்தருக்குள் தாங்கள் எங்களுக்குள்ளே பட்ட பிரயாசம் விருதாவாய்ப்போகவில்லை. இந்தச் சேகரத்தில் இன்னும் நடக்கவேண்டிய கிரியைகள் அநந்தமிருந்தாலும் உண்டாயிருககிற நன்மைகளும் கொஞ்சமல்ல.

இந்தச் சேகரத்தார்க்கு ஆத்மவிஷயங்களில் அநேக நன்மைகள் உண்டாயிருப்பதுமன்னியில், சரீர விஷயத்திலும் பல நன்மைகள் தங்களால் உண்டாயிருக்கிறது. இடையன்குடி உள்ளூரில் பத்தி பத்தியாகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகளும, நல்ல நல்ல தெருக்களும், நேர்த்தியான சாலைகளும், சுகத்துக்கேதுவான தோப்புகளும், திரள்திரளாய் வருகிற வியாகிஸ்தருக்குப் பிரயோசனமாக சற்கார் ஆஸ்பத்திரியும், இலேசாய் காயிதப்போக்குவரத்துக்கு உதவியாக தபால் ஆபீசும், அதோடு சம்பந்தப்பட்ட வெண்டர் ஆபீசும், கொடுக்கல் வாங்கல் பண்ணுகிறவர்களுக்கு உபயோகமாக Saving's Bank என்னப்பட்ட திரவியசாலையும் ஏற்படுத்தப்பட்டிருப்பதுமல்லாமல், ஜனங்களுடைய போக்குவரத்துக்கு வசதியாயிருக்கும்பொருட்டு இடையன்குடியிலிருந்து பாளையங்கோட்டைக்குப போய்வாத்தக்க நல்ல ரஸ்தாவும் உண்டாயிருக்கிறது. இனமும் என்னென்ன நன்மைகள் இந்த ஊருக்கும், இந்தச் சேகரத்துக்கும, இந்த நாட்டுக்கும் தங்களால் உண்டாகப்போகிறதோ தெரியவில்லை.

தங்களாலும் அம்மாளவர்களாலும் எங்களுக்கு விளைந்திருக்கிற நன்மைகளைக்குறித்து இன்னும் என்ன சொல்லுவோம். 32 வருடக் காலமாய் தாங்கள் உழைத்த உழைப்பையும், தங்கள் விடாமுயற்சியையும் உருக்கமான அன்பையும், பட்சபாதமில்லாத நீதியையும், பரோபகார சிந்தையையும், தீமைசெய்தவர்களுக்குச் செய்த நன்மைகளையும், எவருக்கும் வித்தியாசமில்லாமல் பாராட்டின பட்சத்தையும், நன்றிமறந்தவர்களுக்குச் செய்த உபகாரங்களையும், தவறினவர்களைத் தாங்கினதையும், வருத்தப்பட்டவர்களுக்குச் செய்த ஆறுதலையும், ஏழைகள், வியாதிஸ்தர், விதவைகள, அனாதபிள்ளைகள் இவர்களுக்குச் செய்த உபகாரங்களையும், வியாதி துன்பகாலங்களில் விசேஷமாய் கொடிய கொள்ளைநோயுண்டான காலங்களில் எல்லாம் தாங்கள் இருவரும் பட்ட பிரயாசங்களையும், கொண்ட கவலைகளையும், அடைந்த கண் விழிப்புகளையும், பண்ணின பொருள் சகாயங்களையும், விசேஷமாய் எங்கள் குருவாக தங்களில் விளங்கிய சிறந்த மாதிரியையும், தங்கள் ஞானமான பிரசங்கங்களையும், அருமையான போதகங்களையும் குறித்துப் பேசப்போனால் எங்களுக்குச் சமயம் போதாது.

இவ்வளவு சிறந்த நன்மைகள் தேவானுக்கிரகத்தினாலே தங்களைக் கொண்டு எங்களுக்குக் கிடைத்திருக்கும்போது தாங்கள் எங்களைவிட்டுச் சீமை தேசத்துக்குப் புறப்பட்டிருக்கிறீர்களென்கிற விசேஷம் எங்கள் மனதுக்கு வெகு வருத்தத்தையும், சங்கடத்தையுங் கொடுப்பது இயல்புதான். என்றாலும் தேவகிருபையால் சீக்கிரத்தில் சுகத்துடனே திரும்புவீர்களென்கிற நம்பிக்கையும், தாங்கள் இல்லாத காலத்தில் இந்தச் சேகரம் தங்கள் பிள்ளைகளாலேயே நடத்தப்படுகிறதென்கிற எண்ணமும், தாங்கள் வருமட்டும் தாங்கள் இருப்பதுபோ

லவே சகலமும் சீரும் சமாதானமுமாய் நடந்துவருமென்கிற நிச்சயமும், தாங்கள் சீமைக்குப் போயிருக்கிற காலத்திலும் இச்சேகரத்தின்மேலும் எங்கள்மேலும் தங்களுக்குண்டாயிருக்கிற கரிசனமும் பட்சமும் அற்றுப்போகாமல் எக்காலமும் நிலைபெற்றிருக்குமென்கிற நம்பிக்கையும் ஒருவாறு எங்கள் ஆறுதலுக்கும் சந்தோஷத்திற்கும் இடமாயிருக்கிறது.

தங்கள் குடும்பத்தில் போன வருஷம் தேவாதீனமாய் நேரிட்ட பெரிய துக்கமும், தாங்கள் புறப்படுகிற இந்தச் சந்தியில் கனம்: Wyatt அம்மாளவர்களுக்குண்டாயிருக்கிற சுகவீனமும் அதினிமித்தம் அவர்களும் சீமைக்குத் தங்களோடே கூடப் புறப்படும்படி பண்ணியிருக்கிற தீர்மானமும் தங்களுக்குத் துயரமும் சஞ்சலமுமாயிருப்பதுபோலவே எங்களுக்குமிருக்கிறது. ஆகிலும் அன்று காற்றையுங் கடற்கொந்தளிப்பையும் அமர்த்தி நான்தான் பயப்படாதிருங்களென்று சொன்ன ஆண்டவர் தம்முடைய கிருபைப்பெருக்கத்தினாலே நம்முடைய கிலேசங்களை நீக்கி நிலத்திலும் நீரிலும் சமாதானமுள்ள பிரயாணத்தை உங்களுக்கு அருளவேணுமென்று மன்றாடுகிறோம். தாங்கள் 18 மாசங்களுக்குள் திரும்பி வருவீர்களென்று கேள்வியாகிச் சந்தோஷப்படுகிறோம். ஆகிலும் அவ்வளவு காலத்துக்குள் என்ன நடக்குமோ, என்னென்ன மாறுதல்களுண்டாகுமோ நாங்கள் அறியோம். என்ன நடந்தாலும் தங்களுக்கும் எங்களுக்கும் பொதுப்பிதாவாகிய சருவவல்லமையுள்ள தேவனுடைய சித்தமில்லாமல் ஒன்றும் நடக்கமாட்டாதென்பதே எங்கள் ஆறுதல். அவரே தங்களையும், அம்மாளவர்களையும் சமுத்திரப் பிரயாணத்திலும், சீமைதேசத்திலும் சுகத்துடனே காப்பாற்றி தமக்குச் சித்தமான காலத்தில் திரும்ப இவ்விடம் கொண்டுவந்து சேர்க்கவும், கனம்: Wyatt அம்மாளவர்களுக்கு இரங்கிக் கூடிய சீக்கிரத்தில் சரீர ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டு குறித்த காலம் அவர்கள் இவ்விடம் வந்து சேரவும், சீமையிலும் இவ்விடத்திலுமுள்ள தங்கள் பிள்ளைகளுக்குத் தீர்க்காயுளைக் கட்டளையிடவும் நாங்கள் இப்படியே இன்னும் உங்களெல்லாரையும் கண்டு சந்தோஷப்படவும் கருணைக்கடலாகிய அவரைப் பார்த்து மன்றாடுகிறோம். இப்பவும் நாங்கள் தங்களையும் அம்மாளவர்களையும் Wyatt அம்மாளவர்களையும் தலைபணிந்து வணங்கி தங்கள் ஆசீர்வாதம்கேட்டு வழிவிட்டு அனுப்பிக்கொள்ளுகிறோம். சபா நாயகராகிய இயேசு சுவாமி சகலத்தையும் நன்றாய் நடத்துவாராக.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** அங்கிலேய மஹா ராணியவர்கள் குமாரரில் டியூக் ஆவ்எடின்பரோ பிரபு ருஷிய சக்கரவர்த்தியின் புத்திரியையும், ஆர்தர் பிரபு டென்மார்க்கு தேசாதிபதியின் மூன்றாவது குமாரத்தியையும் விவாகஞ்செய்யத் தீர்மானித்திருப்பதாய்ச் செய்தி. பெயர்பெற்ற உவின்செஸ்டர் அத்தியக்ஷ குரு குதிரை யேறி ஓட, அபாயமாகவிழுந்து இறந்துபோனார். சீமையில் நிலக்கரி விலை அதிகமாய் உயர்ந்துபோயிற்று. அதின் காரணத்தை விசாரிக்கையில் நிலக்கரி செலவு அதிகமாயிருப்பதுதான் ஹேதுகரமென்று தெரியவந்தது. பாரசீக அரசனாகிய ஷா என்பவர் மிக ஆடம்பரமாய் உபசரிக்கப்பட்டார். லண்



டன் நகர மண்டபத்தில் அவருக்குச் செய்யப்பட்ட விருந்தொன்றில் மூவாயிரம் பேர் அழைக்கப்பட்டார்கள். பாரசீக தேசத்தில் இருப்புப் பாதைகளை உண்டாக்கவும், கனிஜங்களைத் தோற்றுவிக்கவும், பலவிதமாய் அத்தேசத்தில் பிரஜைகளுக்கு உபயோகமான சீர்திருத்தங்களைச் செய்யவுந்தக்கதாக பரன் ருட்டர் என்னும் துரை ஒருவர் ஷா அரசனிடத்தில் உத்தரவுபெற்றிருக்கிறார். பின்னிட்டு ஷா அரசன் மாட்சிமையோடு மஹா ராணியவர்களுடைய போர்க்கப்பற்கூட்டத்தால் நடத்தப்பட்டு பரீஸ் நகரத்தில் சேர்ந்தார். அவர் அந்த அலங்கார நகரத்திற் பிரவேசித்தபொழுது பிரான்சிய சேனாவீரரில் எண்பதினாயிரம் பேர் அவருக்குமுன் ஓரே இடத்தில் அணிவகுக்கப்பட்டார்கள். இந்த எண்பதினாயிரம் பிரான்சிய சேனை மொத்தத்தில் ஆறிலொரு பங்கு. ஜர்மானிய யுத்தத்தால் பிரான்சியருக்கு உயிர் நஷ்டம் பொருள் நஷ்டம் எவ்வளவோ நேரிட்டிருந்தும், வீரதீரரான பிரான்சியர் முன்போல்தலையெடுத்து வாழ்வடைந்திருக்கிறார்களென்று இதினால் விளங்கும். பிரான்சிய துரைத்தன பழய உத்தியோகஸ்தர்கள் ஒழிந்தபின்பு ஏற்பட்ட மக்மேஹன் என்னும் அக்கிராசனாதிபதிமுதலானவர்கள் அதிக உற்சாகங்காட்டுகிறார்கள். ஸ்பானிய துரைத்தன விஷயமின்னும் சீருக்கு வந்ததில்லை. விபக்ஷத்தார் அங்கங்கே அதிக்கிரமித்து ஊர்களை அக்கினிக்கு இரையாக்கி சண்டைசெய்துவருகிறார்கள். காரியம் எவ்வாறு முடியுமென்று தெரியாது. ஆயினும், இப்போதிருக்கிற துரைத்தனத்தார் அடங்காத துஷ்டரை அடக்கப் பிரயத்தனம்பண்ணுகிறார்கள். வெனீஸ் நகரத்திலும் அதின் அயலிடங்களிலும் பூகம்பம் உண்டாயிற்று. அங்குள்ள கோவில் ஒன்றில் முப்பத்தெட்டுப் பெயர் பிராணசேதமடைந்தார்கள். உப நகரத்திலும் பதினாலு பேர் மாண்டுபோனார்கள்.

**ஜஞ்சிபார்** சுல்த்தான் மஹா ராணியவர்கள் அனுப்பிய உடன்படிக்கையின் சங்கேதங்களை அங்கங்கே பிரசித்தம்பண்ணியதுந்தவிர, தம் தீவிலும அடுத்த கரையிலுமுள்ள சிறைக்கடைகளை மூடும்படிக்கும் கட்டளையிட்டாராம். ஜஞ்ஜிபார் தீவில் சிலகாலம் வசித்திருந்த சென்னைபட்டினத்தாரொருவன் சிறை வியாபாரத்தில் கையிட்டானென்று அங்குள்ள துரைத்தன ஸ்தானாபதியால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியென்று கண்டு உடனே அத்தீவைவிட்டுப் போகவும், ஐஞ்ஞூறு ரூபாய் அபராதங்கொடுக்கவும் தீர்ப்புப்பெற்றான். சுல்த்தானானவர் சிலமாசத்திற்குள் காஸ்மீரம் என்னும் நீராவிக்கப்பலிலேறி சீமைக்குப் போய்வருவாரென்று சத்தம்பிறந்தது. இந்திய கவர்னர் ஜெனரலவர்களுக்கு அவர் ஆப்பிரிக்க ஆனைகள் இரண்டு அனுப்பினார்.

**கைவாப்** பிரதேசத்தில் பிரவேசித்திருக்கிற ருஷிய சேனைகள் ஜூன் மீ 10௳யில் கைவா நகரத்தைக் கட்டிக்கொண்டார்கள். கைவாவின்கான் முந்தி தப்பி ஓடியும் பின் தன்னுடைய மந்திரிமாரோடு ருஷிய சேனைத்தலைவரிடத்தில் புகலிடம் தேடி மன்னிப்புக்கேட்டான். அவர்களைக் காவல்பண்ண யுத்தவீரர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ருஷியர் அப்பிரதேசத்தை முன்னிருந்தபடியே விட்டுப்போய்விடுவார்களோ அல்லவோவென்பது தெரியவில்லை. அதிற் சிறைப்பட்டிருந்த ருஷிய பிரஜைகளை விடுவித்த பின்பு அதைவிட்டு நீங்குவோமென்று அங்கிலேய மஹா ராணியவர்களின் மந்திரிக்கு முன் தெரிவித்திருந்தார்கள். அப்படியே நடப்பார்களென்பது இப்போது சந்தேகமாயிருக்கிறது.

**இந்திய** கவர்னர் ஜெனரலவர்கள் வருகிற ஜனுவரிமாசத்தில் சென்னைபட்டினத்துக்கு வருவாரென்று செய்தி.

ஆகஸ்தும்ீ நாள் 31. ஆடிமீ 19உமுதல், ஆவணிமீ 18உவரை.

| வாரம். | ஆங். தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௧௯ | மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதுமில்லை. யாத். 16: 18. |
| ச | 2 | ௨௰ | கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை. 18. |
| ஞா | 3 | ௨௧ | இன்று கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு. 23, 25. |
| தி | 4 | ௨௨ | கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள். 17: 2. |
| செ | 5 | ௨௩ | என் உக்கிரம் இந்தஸ்தலத்தின்மேல் பற்றியெரியும். 2இரா. 22: 17. |
| பு | 6 | ௨௪ | கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது. 24: 8. |
| வி | 7 | ௨௫ | கர்த்தர் மன்னிக்கச் சித்தமில்லாதிருந்தார். 4. |
| வெ | 8 | ௨௬ | எங்கள் மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும். சங். 85: 4. |
| ச | 9 | ௨௭ | உமது கோபத்தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ ! 5. |
| ஞா | 10 | ௨௮ | எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ ! 6. |
| தி | 11 | ௨௯ | உமது கிருபையை எங்களுக்குக் காண்பியும். 7. |
| செ | 12 | ௩௰ | உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும். 7. |
| பு | 13 | ௩௧ | கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். 10. |
| வி | 14 | ௩௨ | நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும். 10. |
| வெ | 15 | ௧ | கர்த்தர் நன்மையானதைத் தருவார். 12. |
| ச | 16 | ௨ | நம்முடைய தேசம் தன் பலனைத் தரும். 12. |
| ஞா | 17 | ௩ | நீ உன்னை ஞானியென்று எண்ணாதே. நீதிமொழி 3: 7. |
| தி | 18 | ௪ | கர்த்தருக்குப் பயந்து தீமையைவிட்டு விலகு. 7. |
| செ | 19 | ௫ | உன் பொருளால் கர்த்தரைக் கனம்பண்ணு. 9. |
| பு | 20 | ௬ | கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. 11. |
| வி | 21 | ௭ | கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார். ஏசா. 50: 7. |
| வெ | 22 | ௮ | என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார். 8. |
| ச | 23 | ௯ | என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார் ? 9. |
| ஞா | 24 | ௰ | தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன். 10. |
| தி | 25 | ௧௧ | உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு. ஓசியா 14: 1. |
| செ | 26 | ௧௨ | நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். 1. |
| பு | 27 | ௧௩ | நானே நல்ல மேய்ப்பன். யோவான் 10: 14. |
| வி | 28 | ௧௪ | ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். 15. |
| வெ | 29 | ௧௫ | இஸ்ரவேல் வம்சத்தாரெல்லாரும் இஸ்ரவேலரல்ல. உரோ. 9: 6. |
| ச | 30 | ௧௬ | தேவனிடத்தில் அநீதியுண்டென்று சொல்லலாமா ? 14. |
| ஞா | 31 | ௧௭ | தேவனோடே எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார் ? 20. |

## விசேஷித்த நாட்கள்.

3. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு.
8. பௌரணமி.
10. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், ஒன்பதாம் ஞாயிறு.
17. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், பத்தாம் ஞாயிறு.
22. அமாவாசை.
24. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், பதினோராம் ஞாயிறு.
31. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், பன்னிரண்டாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 25.** **September.** **No. 9.**

**Contents:**

Bible Sketches and their Teachings. ... ... ... 162
Notes on Genesis. ... ... ... ... ... ... 164
A Family Commentary on the Sermon on the Mount. 170
Christian Church History. ... ... ... ... ... 173
The Parables of Christ... ... ... ... ... ... 174
Summary of News. ... ... ... ... ... ... 178

அட்டவணை:

பாலபோதனை. .... ... ... ... ... ... ௧௬௨
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௧௬௪
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ௧௭௰
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௧௭௩
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். , ... ... ௧௭௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௭௮

**Palamcottah:**
**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,**
BY L. DEVANAYAGAM PILLAY.
**1873.**

# நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௱௯ ௵.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### முன்னிலைமையும் பின்னிலைமையும்.

(தொடர்ச்சி.)

யோபு 1; 2; 42: 10—17.

ஒரு சிறுபிள்ளை, தன் தகப்பனுருடைய தோட்டக்காரன் ஒருநாள் தான் மிகவும் அருமைபெருமையாய் எண்ணிவந்த முந்திரிகைச்செடியில் கொடிகளை நறுக்கி நறுக்கி யெறிகிறதைக் கண்டு, அலறிக்கொண்டு ஓடிப்போய், "தோட்டக்காரா, தோட்டக்காரா அப்படி ஏன் செய்கிறாய்" என்று கேட்டது. நீளமான கொப்புகளும் அகலமான இலைகளும் மேலும்மேலும் அதின் பாதத்தண்டை விழுந்துகொண்டேயிருந்தது. அவைகளைப் பார்க்க அதற்குச் சகிக்கவில்லை. அது கண்ணீர்விட்டு, அழுதுகொண்டு, போனவருஷத்தில் குலைகுலையாய்க் காய்த்த இந்த நேர்த்தியான கிளைகளை இப்படி யறுத்துப்போட்டாயே, என்ன பைத்தியம் என்று கடுகடுத்துப் பேசினது. தோட்டக்காரனோ அந்தப் பிள்ளை கோபிக்கிறதைப் பார்த்து நகைத்துக்கொண்டு, நறுக்கிக்கொண்டே போனான். செடி சேதப்பட்டுப்போயிற்றென்று அந்தப் பிள்ளை நினைத்து, அதைத் திரும்ப நோக்கிப் பார்க்க சற்றென்கிலும் மனமில்லாதிருந்தது. ஆகிலும் ஏற்றகாலத்திலே முந்தின வருஷத்தைப் பார்க்க பரும்பரும் பழங்களுள்ள பெரியபெரிய குலைகளால் அந்தச் செடி நிறைந்திருந்தது. அப்பொழுது அந்தப் பிள்ளையின் தகப்பனார் அதை யழைத்து, உன்னுடைய அந்தச் செடி முன்னைப் பார்க்க இரட்டிப்பாய்க் கனிகொடுத்ததற்கு தோட்டக்காரனுடைய கத்திரியே காரணமென்று, அனுகூலமானவிதமாய் அதற்கு உணர்த்தினாராம்.

தோட்டக்காரன் அந்தச் செடிக்குச் செய்தபிரகாரமே, தேவனும் அன்பினாலே யோபுக்குச் செய்தார். அந்த இலைகளையும் கிளைகளையும் போலவே அவன் பொருட்களும் பிள்ளைகளுமெல்லாம் எடுபட்டுப்போயின. ஆயினும் இதற்காக அவன் தேவனை ஸ்தோத்திரித்த நாள் கடைசியில் வந்தது. அவன் அதிகத் தாழ்மையும் பொறுமையும் பரிசுத்தமும் உண்மையுமுள்ளவனாய் விளங்கச்செய்த அந்தத் துன்பம் அளவில்லாத நன்மைக்கேதுவாயிருந்ததென்று அறிந்தானே.

கடைசியாக இன்னம் ஒரு படிப்பினை மாத்திரம் சொல்லுகிறேன். தேவனுடைய பிள்ளைகளுக்கு நேரிடும் துக்கம் சந்தோஷமாக முடியும் என்பதுதான். யோபின் விஷயத்தில் அவன் மரிக்கிறதற்குமுன்னேயே அந்த முடிவு வந்தது. துன்பம் நீங்கினபிறகும் அவன் அநேக வருஷக்



காலமாய்ச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்ந்துகொண்டிருந்தானே. ஆகிலும் எப்பொழுதும் அப்படியல்ல. சிலர் விஷயத்தில் கடைசிவரையும் துக்கமேயிருக்கலாம். இச்சீவனுக்குப்பின்பு தான் அவர்களுக்கு இளைப்பாறுதலும் சந்தோஷமுங் கிடைக்கும். ஆம், பிரியமானவர்களே உங்களிற் சிலருடைய சீவகாலம் ஒருவேளை மிகுந்த துக்கம் நிறைந்ததாயிருக்கலாம். தேவனுக்குப் பயந்து அவரை நேசித்து நடந்த உங்கள் அருமைத்தாய் தந்தைகள் வெகுகாலம் துன்பப்பட்டு மரித்ததைப் பார்த்துமிருப்பீர்கள். அதோடு எல்லாம் முடிந்துபோகவில்லையென்று அவர்களும் அறிந்திருந்தார்கள். நீங்களும் அறிவீர்கள். அவர்கள் கடைசிக் கண்ணீர்விட்டார்கள், கடைசி துக்கத்தை உணர்ந்தார்கள். இந்த துக்கங்களும் கண்ணீர்களும் அதுகள் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றின. அதுகளால் உண்டாகவேண்டிய நன்மைகள் உண்டாயின. உடனே தேவன் "இளைத்துப்போன என் பிள்ளைகளே என்னிடத்தில் வாருங்கள், சமாதானம்பொருந்திய என் வீடுவந்து சேருங்கள். இங்கே துக்கமும் அழுகையுமிராது. இங்கே உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் யாவும் அறத் துடைக்கப்பண்ணப்படும்" என்று சொல்லி அவர்களை தம்மண்டைக்கு அழைத்துக்கொண்டார்.

### யோசுவாவின் அந்தியம்.

யோசுவா அதி. 24.

சிலகாலத்துக்குமுன் ஒருநாள் விருத்தாப்பியனான போர்ச்சேவகன் ஒருவன் தன் வீட்டுவாசலில் உட்கார்ந்திருக்கக் கண்டது என் ஞாபகத்திலிருக்கிறது. அவன் முகம் சுருங்கி வதங்கினதாயும் தலைமயிர் நரைத்ததாயுமிருந்தது. வெளியே போகும்போது கம்பு ஊன்றி நடந்துபோகிறவன்போலுந் தோன்றினது. வீட்டுக்குள் வாசலுக்கு நேரே போர்ச்சேவகனுக்குரிய தன் கத்தி கச்சை தொப்பிமுதலிய சாமான்கள் தொங்குகிறதையுங் கண்டேன்.

அவன் அவைகளைத் தரித்து வெகுகாலமாயிற்று. ஆகிலும் விருத்தாப்பியனான அவன் அவைகளைப் பார்க்கும்பொழுதெல்லாம், அவன் செய்த அநேக சண்டைகளும் அவற்றில் அடைந்த வெற்றிகளும் அவன் ஞாபகத்தில் வந்தபடியால், அவைகளைப் பார்க்கிறது அவனுக்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கும். அவ்வூரிலுள்ள பிள்ளைகளிற் சிலர் அவனைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு அவன் முகத்தை நன்றாய் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு கதை சொல்லிக்கொண்டிருந்தானென்று நினைக்கிறேன். அவ்வளவுகாலம் சீவித்திருந்து அத்தனையான காரியங்கள் நடப்பித்த அவன் அநேக கதைகள் சொல்லத்தக்கவனாயிருப்பானே. ஆம், அவன் தலைமுழுவதும் கடந்தகாலத்திலுள்ள அதிசயமான கதைகளால் நிறைந்திருந்தது. அதோடு அவன் கண்டு கேட்டவைகளை நன்றாய்ப் பிரயோசனப்படுத்தப் பார்த்தான். ஆகையால் அவன் சொன்ன ஆச்சரியமான கதைகளைக் கேட்ட அந்தப் பிள்ளைகள், "ஒரு புத்தகத்தைப்போல நேர்த்தியாய்ப் பேசுகிறான்" என்று சொல்லிக்கொள்வார்கள்.

இந்த விருத்தாப்பியனுடைய கதைகளிற் சிலவற்றைக் கேட்கிறதற்கு நீங்களும் விரும்பமாட்டீர்களா? தங்கள் வீட்டையும் ஊரையும் விட்டு

எங்கும் போயிராத தன் அயலகத்தாரைப்பார்க்க, அவன் எத்தனையோ அநேக காரியங்களைக்குறித்துப் பேசக்கூடியவனாயிருப்பான். தேவனைப்பற்றிக் கேட்க விருப்பமுள்ளவர்களுக்கு அவருடைய இரக்கத்தை வெளிப்படுத்திய எண்ணிறந்த அதிசயங்களை விவரிப்பான்.

மேலும் அவன் சிறுவர்களுக்கு அருமையான புத்திமதிகள் சொல்லத்தக்கவனாயுமிருப்பானே. அந்தப் பிள்ளைகள் கேட்ட ஆச்சரியமான கதைகளைப் பார்க்க அவன் அவர்களுக்குச் சொல்லத்தக்க யோசனைகளும் புத்திகளுமே அதிகப் பிரயோசனமானவைகள் என்பதற்குச் சந்தேகமில்லை.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௨௨. அதிகாரம்.

### ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்டது.

1. "இந்தக் காரியங்கள் நடந்தபின்பு" அதாவது 25 வருஷம் காத்திருந்தபின்பு.—ஈசாக்கைப்பற்றிய வாக்குத்தத்தங்கள் அடிக்கடி உறுதிப்படுத்தப்பட்டபின்பு.—நம்பின காரியம் கைகூடி மனதுக்கு ரம்மியமான பிள்ளையும் பிறந்தபின்பு.—பிள்ளை பிராயமாகி ஆபிரகாமுக்குப் பிள்ளையாசைபூண்டபின்பு.—பிள்ளை சற்புத்திரனாக பத்தியும் புத்தியுமாய்த் தகப்பனுக்கு மிகவும் பக்ஷமாய் நடந்துவருங்காலம் வந்தபின்பு என்றர்த்தமாம்.

"சோதித்தார்." ஆபிரகாமை விசுவாசிகளுக்குத் தகப்பனாகவும் மாதிரியாகவும் வைத்து கண்யப்படுத்தும்படி, அவனுடைய கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தைப் பெருகப்பண்ணவும், விளங்கப்பண்ணவுமாக அவனைச் சோதிக்கச் சித்தமானார். மற்றப்படி அவன் மனதில் பொல்லாத எண்ணங்களை நுழையவிட்டு, அவனுடைய பாவ ஆசையை எழுப்பி, தீமைக்கேதுவாகச் சோதிக்கவில்லை. யாக்கோபு 1: 13—15.

2. இந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஆபிரகாமின் விசுவாசத்தைப் புடமிட்டு அவன் மனதைப் பிளக்கத்தக்கதாயிருந்தது. ஏனென்றால், அவ்வளவு உருக்கமான அன்பினால் ஈசாக்கை நேசித்திருந்தான்.

"உன் புத்திரன்!" வேலைக்காரனல்ல, ஒரு ஆடுமாடு அல்ல. ஈசாக்கை மீட்கும்படி எத்தனையோ ஆடுமாடுகளைக் கொடுக்க ஆபிரகாம் சம்மதித்திருப்பான்!

"உன் ஏகசுதன்!" உன் மனைவி சாராள் பெற்ற மகன்.

"உன் நேச குமாரன்!" வெகுகாலம் காத்திருந்து பெற்ற மகன். உன் செபத்திற்கு உத்தரவாக நரைவயதில் உனக்குக் கொடுக்கப்பட்டவன்.

"ஈசாக்கை!" இஸ்மவேலை அல்ல. சந்தோஷம் என்று பேரிட்டாயே, அவன் வழியாய்த் திரள் சாதியுண்டாகுமென்று மேசியா



வைப்பற்றிய உடன்படிக்கையும் உறுதிப்பட்டதே. அந்த வாக்குத்தத்தத்துப் புத்திரனை.

"நீ!" உன் வேலைக்காரனைக்கொண்டாவது, மற்ற அன்னியனைக்கொண்டாவது பலியிடாமல் நீயே உன் கையினாலே நிறைவேற்றவேண்டும்.

"இப்பொழுது!" இனிமேல் வரப்போகிற ஒரு காலத்திலல்ல. தாமதம்பண்ணாமல் உடனே செய்.

"மோரியாதேசத்துக்குப் போய்!" ஆறி அமர்ந்து சாவகாசமாய்ச் செய்யவேண்டும். வடக்கே மூன்றுநாள் பயணம்போ. போனபின்பும் திடீரென்று ஒன்றும் செய்யாமல் என் உத்தரவுக்குக் காத்திரு.

"நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல்" என் கட்டளைப்படி செய்ய வெட்கப்பட்டு அஞ்சுகிறவன்போல் ஒளிப்பிடத்திலே நடத்தாமல், வானத்துக்கும் பூமிக்கும் நடுவே பகிரங்கமாய் நிறைவேற்றவேண்டும்.

"தகனபலியாகப் பலியிடு!!" "ஈசாக்கைக்கட்டி" "பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தி" அவனை "வெட்டி" இரத்தத்தைச் சிந்தி துண்டுதுண்டாக்கி, நெருப்பு வைத்து எல்லாவற்றையும் சமூலமாய்ச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிப்போடு என்று எகோவா ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டார். லேவி. 1: 5—9.

இந்தக் கட்டளையைக் கேட்டவுடனே ஆபிரகாமுக்கு எப்படியிருக்கும். இக்கேபட்டு அங்கே பாய்ந்ததுபோலிருக்குமல்லவா?

ஆபிரகாம் தன் மகனைக் கொலைசெய்யாதபடிக்கு என்னென்ன போக்குகளை எல்லாம் சொல்லலாம். நீதியுள்ள எகோவாவே! பழிசெய்யப்படாதென்று சொல்லியிருக்கிறீரோ?—என்னைக் காணுகிறவர்களெல்லாரும் நான் வணங்குகிற தேவரீரைப் பழிப்பார்களே.—நீர் சொன்ன வாக்குத்தத்தங்களுக்கு நான் என்னசெய்வேன்.—என்னைச் சூழ்ந்திருக்கிற அஞ்ஞானிகளுக்குள்ளே நான் தலைநீட்டப்படாதே. என் மனைவி சாராளுக்கு நான் என்ன சொல்லுவேன்.—என் மகன் ஈசாக்குடைய கழுத்தை அறுக்க என்னமாய்த் துணிவேன்! நீர் வாக்குச் சொன்ன உம்முடைய அளவிறந்த கிருபைகளெங்கே! சுவாமி! இந்த ஒருவேளைக்கும் எனக்கு மன்னிக்கவேண்டும். இந்த [illegible] சொல்லும் என்று மன்றாடலாம்.

அவிசுவாசமானது அவனைப் பார்த்து: உனக்குக் காணப்பட்டது தேவனோ யாரோ? உன் மகனை மறுபடி எழுப்புவானென்று எப்படித் தெரியும்.—இதற்குமுன் எப்போதாவது இப்படி நடந்திருப்பதைக் கண்டிருக்கிறாயா.—நீ ஏமாற்றப்பட்டுப்போனால் என்ன மோசமெல்லாம் நேரிடும்.—உன் "நரைமயிரை சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணு"வாயே என்று சொல்லும்.

ஆனால் ஆபிரகாம் இந்தச் சோதனைவேளையில் எப்படி நடந்துகொண்டான் என்று பார்ப்போம். அவன் "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனைபண்ணவில்லை."

3. "ஆபிரகாம் அதிகாலையில் எழுந்திருந்து!" மனதுக்கு உற்சாகமான காரியத்தைச் செய்யப்போகிறவனைப்போலும், என்னத்தையோ வாரியெடுக்கப்போகிறவன்போலும், மனதுக்கு ஆயாசமான இந்தக் கட்டளையை நிறைவேற்ற அதிகாலையில் எழுந்திருந்தான்! இதற்குமுன்னும் இது இவனுக்கு வழக்கந்தான். 21: 14.

ஆபிரகாம் தனக்குண்டான இந்தக் கட்டளை: தன்னை அழைத்து ஆதரித்து நன்மைசெய்துவந்த மெய்த்தேவனாலுண்டானதென்று யா

தொரு சந்தேகமற நிச்சயித்து; அவருடைய அளவற்ற ஞானம், நீதி, பரிசுத்தம், உண்மை, தயாளம், சர்வவல்லமை ஆகிய அவரது மகத்தான இலட்சணங்களின்மேல் தன் நம்பிக்கையை ஸ்தாபித்து; "ஈசாக்கினாலே உன் சந்ததி விளங்கும் என்று அவனோடு சொல்லப்பட்டிருந்த" வாக்குத்தத்தத்தை உறுதியாய்ப் பற்றிப்பிடித்துக்கொண்டான். அதினாலே இந்தக் கட்டளையைச் சந்தேகிக்கவுமில்லை. ஆட்சேபிக்கவுமில்லை. இவனைச் சுட்டுச் சாம்பலாக்கிப்போட்டாலும், உடனே மரித்தோரிலிருந்து எழுப்பித் தருவாரென்று பூர்த்தியான விசுவாசத்தோடு புறப்பட்டான். இதற்குமுன் தேவன் இவனுக்குச் செய்திருந்த நன்மைகளும், கொடுத்தும் நிறைவேற்றியுமிருந்த வாக்குத்தத்தங்களும் இவனைத் தைரியப்படுத்தினது. எபி. 11: 17—19.

இந்தக் கட்டளை இயல்பாய் வியாகுலத்தையும், மனச்சஞ்சலத்தையுங் கொடுக்குமே. ஆனால் ஆபிரகாம் அப்படிப்பட்டவனாகத் தன்னைக் காட்டவில்லை. சாராள், ஈசாக்கு, அவன் வேலைக்காரர், இவர்கள் ஏதாவது வித்தியாசமான நடக்கையை அவனிடத்திற் காணவுமில்லை. சாராள் பலவீன விசுவாசமும், இளகின நெஞ்சுமுள்ளவளானதினாலே, இதைக் கேட்டால் தேவகட்டளைக்கு இடையூறுசெய்வாளென்று அவளுக்கு அறிவிக்கவுமில்லை.

4. "கண்டான்" பிரத்தியட்சமான அடையாளத்தினாலே கண்டான். ஒருவேளை தேவன் தமது மகிமைப் பிரசன்னத்தினாலே அந்த இடத்தைக் குறித்துக் காட்டியிருப்பார்.

5. வேலைக்காரர் கூட இருந்தால் அவர்கள் அன்பினால் ஏவப்பட்டுத் தடைசெய்வார்கள்.

"வருவோம்" தகனமாக பின் சாம்பலிலிருந்து ஈசாக்கை உயிரோடெழுப்பித் தருவார் என்ற விசுவாசத்தினாலே சொல்லுகிறான். ஈசாக்குக்கு இப்போது 25 வயதுக்கு அதிகமிருக்கும்.

6. "ஈசாக்கின்மேல் வைத்து" கிறிஸ்துநாதர் தமது சிலுவையைச் சுமந்ததற்கு முன்னடையாளம்.

7. ஈசாக்கு கேட்ட கேள்வி ஆபிரகாமின் இருதயத்தையுடையப் பண்ணுகிறதற்கேதுவாயிருந்தது. ஆனாலும் அவன் பின்வாங்கவில்லை. [illegible]னமான உத்தரவு: "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி [illegible] யிருந்தது. "இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல்" பரிசுத்தாவியினாலே ஏவப்பட்டுப் பேசினான்.

9, 10. இந்தக்காரியங்கள் நடக்குமுன் ஆபிரகாம் ஈசாக்குக்கு: தேவகட்டளையின்னது.—அதற்கு இருபேரும் கீழ்ப்படியவேண்டிய அவசியம்.—அவனை உயிரோடெழுப்பித் தருவாரென்று தான் முழு நம்பிக்கையாயிருப்பது ஆகிய இந்தக் காரியங்களையெல்லாம் விவரமாய்ச் சொல்லியிருப்பானென்று நினைக்கத்தக்கது. அதினாலே ஈசாக்கு உடன்பட்டு, தப்பிப்போகவாவது, எதிர்க்கவாவது துணியாமல், உற்சாகத்தோடு தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். அவனைக் கட்டி கட்டைகளின்மேல் கிடத்தி, திரும்பப் பெற்றுக்கொண்ட வகையில், குற்றம்போக்கும் பலியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த கிறிஸ்துநாதர் சிலுவையில் ஆணிகளாலறையப்பட்டு பிதாவினால் நொறுக்கப்பட்டதற்கும், உயிர்த்தெழுந்ததற்கும் விசேஷித்த முன்னடையாளமாக இருந்தான். இப்போதான் ஆபிரகாம் மேசியாவின் நாளைக் "கண்டு களிகூர்ந்தான்." ஏனென்றால், மேசியாவின் நாட்களில் அவர் மரித்து உயிர்த்தெழுந்த காலமே மகா விசேஷம்.



உள்ளக்கருத்தை வள்ளல் அறியும். ஆகையால் "இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்." ஆபிரகாம் தன் இருதயத்திலே ஈசாக்கைப் பலியடித்தாயிற்று என்று கண்டார். 12வா. அதினாலே கடவுள்: பின்னாலே பலியிடப்படப்போகிற மகா திவ்விய நரபலியின்மேல் மகிழ்ந்தவராய் அதற்குமுன் நரபலியின்மேல் வெறுப்புற்று, "பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே" என்றார்.

12. தேவபயம் தேவபக்திக்கு ஆதாரமாகையால், தேவபக்திக்குப் பதிலாக வழங்கப்படுவதுண்டு. அப்படியே இவ்விடத்திலுங் காணலாம். கடவுள் தமது கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவும், ஆபிரகாமுக்கு நிறைந்த ஆறுதலுண்டாகவும், எக்காலத்துத் திருச்சபைக்கும் பிரயோசனமாகவும் அவன் விசுவாசத்தை ருசுப்படுத்தி விளக்குவிக்கச் சித்தமானார்.

18. ஈசாக்கு மூன்றுநாள் மரணத்தீர்ப்புக்குள்ளாயிருந்து விடுதலையாகி, வாக்குத்தத்தமபண்ணப்பட்ட திரள் சாதிக்கு முற்பிதாவானான். இது: கிறிஸ்துநாதர் மரித்து மூன்றுநாள் பூமியின் இருதயத்திற்குள்ளிருந்ததற்கும், தமது ஞானசந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருக்கும்படி மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்ததற்கும் முன்னடையாளமாயிருந்தது,

14. "யெகோவாயீரே" கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார். 8 வா.

18. இந்த வாக்குத்தத்தம் முன்னமே கொடுக்கப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தது. இப்போது மறுபடியும் ஆணையோடு சொல்லப்பட்டது. தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாததினால் தேவன் தம்முடைய மேல் ஆணையிட்டார். எபி. 6: 18, 14. சந்தேகமில்லாமல் இந்த வாக்குத்தத்தம் மேசியாவையும் அவரது ஞான சந்ததியையுங் குறித்தும் சொல்லப்பட்டது. கிறிஸ்துவின் பாதப்படிக்குச் சகலமும் கீழ்ப்படுத்தப்படும்போது இந்த வாக்குத்தத்தம் முற்றுப்பெறும்.

20—24. ஈசாக்கு ரெபெக்காளையும்; பிற்பாடு யாக்கோபு லேயாளையும் ராகேலையும் விவாகஞ்செய்த சங்கதிகளுக்கு முகவுரையாக இவ்விடத்தில் இந்த விவரம் காட்டப்படுகிறது.

கவனிப்பு. சாலோமோன் தேவாலயம் கட்டப்பட்ட இடமாகிய மோரியா (காட்சி) மலைமேல்தான் ஈசாக்கைப் பலியிட்டது. இந்த மலை மோரியாதேசத்திலிருந்தது. 2 நாளா. 3: 1.

## படிப்பினை.

நாம் இந்த உலகத்திலிருக்கையில் சோதனைக்கு நீங்கியிருக்கலாமென்று நினைக்கவேகூடாது. பெரிய சோதனைகள் தான் அடிக்கடி கடைசியில் வருகிறது. ஆகையால் நாம் போராட அழைக்கப்படும்போது "இதோ அடியேன்" என்று சொல்லத்தக்கதாக, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எப்போதும் தரித்துக்கொண்டிருக்கவேண்டும்.—தேவன் எவனுக்குத் தமது கிருபையை அதிகமாய்க் கொடுக்கிறாரோ அவனைச் சோதனையினால் புடமிடுகிறார் என்று நன்றாய் அறிந்துகொள்ளக்கடவோம். சோதனை பெரிதாயிருந்தாலும் முடிவு மகிமையாயிருக்கும்.—கர்த்தர் நம்மை வருத்தமான காரியத்தைச் செய்ய ஏவும்போது காரியம் எப்படியிருந்தாலும், தேவனையும் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியத்தையும் நன்றாய் உணரவேண்டும். உணர்ந்து "என் பிதாவே! இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கமாட்டாதாகில் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவதென்று செபம்பண்ண"வேண்டும். அவருடைய கிருபையை உனக்குப் போதக்கொடாமல் உன்னை யுத்தக்களத்துக்

கு அழைக்கமாட்டார். 2 கொரி. 12: 7—9.—தேவன் அநேகவிசை நாம்
நினையாத வகையாய் நமக்கு நன்மைசெய்கிறார். 11 வா.

உயிருள்ள விசுவாசம் எவ்விதமுங் கிரியைசெய்யும். ஆபிர
காம் தேவனை அறிந்தவன், அவர்மேல் விசுவாசமும் அன்புமுள்ளவ
னென்பதை அவனுடைய கிரியையினால் காட்டினான். "நாம் தேவனு
டைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவ
தாம்."—தேவன் ஈசாக்கைத் தமக்கென்று பலியிடக் கேட்டது, ஆபிர
காமையும், அவனுக்குள்ள யாவற்றையுங் கேட்டதற்குச் சரி. ஆடுமாடு
ஆஸ்திபாஸ்தியைக் கேட்டிருப்பாரானால் இன்னம் பாக்கியிருக்கும்.
ஈசாக்கைக் கேட்டதில், சகலமும் அடங்கியிருக்கிறது. அவர் கேளாத
ஒரு பொருள் பாக்கியில்லை. அப்படியே நமக்கும் ஒரு ஈசாக்குண்டு.
ஆபிரகாமிடத்திற் கேட்டதுபோலவே நம்மிடத்திலும் அந்த ஈசாக்
கைக் கேட்கிறார். அந்த ஈசாக்கு தெரியுமா! நம்முடைய இருதயந்
தான். "என் மகனே! உன் இருதயத்தை எனக்குத் தா" எனகிறார்.
நாம்நம்முடைய இருதயத்தை அவருக்குக் கொடுத்தால், நமக்குள்ள
யாவற்றையுங் கொடுத்ததற்குச் சரி.—தன்னைச் "சுற்றிநெருங்கிநிற்
கிற பாவத்தைத் தள்ளி"விடாதவன் மெய்விசுவாசியல்ல. ஆ, மோ
க்ஷத்திற்குப்போகிற வழி எத்தனை நெருக்கமானது. அவரவர் கண்
மணிபோல் நேசித்துவரும் அருமையான பாவமும் உண்டு. கை கால்
போல் உதவிசெய்து லாபம் தரும் பாவமும் உண்டு. ஒருவன் அநேக
விஷயங்களில் யோக்கியனாய் நடந்தும், "அதிக ஐசுவரியமுள்ள"
அந்த வாலிபனைப்போல் தன் ஈசாக்கை ஒப்புக்கொடுத்துவிட மனதில்
லாதிருக்கலாம்.—நாம் கிறிஸ்துவுக்காக "எல்லாவற்றையும்" விட்டு
குப்பையுமாக எண்ணவேண்டும். அவர் சொல்லிய வசனம் மிகவும் கவ
னிக்கப்படத்தக்கது. "மகனையாவது மகளையாவது, என்னிலும் அதி
கமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. என்னிமித்தம் தன்
ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்."

நாஸ்திகரும் அவிசுவாசிகளும், மோக்ஷத்தைக் கண்டதார், நரகத்
தைக் கண்டதாரென்று சொல்லுகிறவர்களும், பழையஏற்பாட்டை
ஆட்சேபிக்கிறவர்களும் வந்து இந்த அதிசயக் காட்சியைச் சற்று கவ
னிக்கட்டும்.—கிரியையினாலே நீதிமான்களாக்கப்படலாமென்கிறவர்க
ளுக்கு ஒரு வார்த்தை. ஆபிரகாம் செய்த இந்தக் கிரியையைப் பார்க்
கிலும் பெரிய நற்கிரியையுண்டா? ஆனால் அவன் எப்படி நீதிமானானா
னென்று பாருங்கள். ஈசாக்கு பிறக்கிறதற்கும் வெகுகாலத்துக்கு முன்
னே "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு
நீதியாக எண்ணினார்."

ஆபிரகாம் விசுவாசிகளுக்குத் தகப்பன் என்னப்படுவது தகுதியே.
அவன் விசுவாசத்தின் மாட்சிமையை என்ன சொல்ல. ஏறக்குறைய
அவன் ஜீவகாலமெல்லாம் "சோதனைக்கோர்வையாயிருந்தது" என்று
நியூட்டன் கண்காணியார் சொல்வது வாஸ்தவமே. தன் சுய தேசத்தை
யும், இனசனத்தையும் விட்டான்.—தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்
பட்ட தேசத்தில் பரதேசியாய் ஜீவனம்பண்ணினான்.—பஞ்சத்தினால்
நெருக்கப்பட்டபோது தான் விட்டுவந்த இடத்தை நினையாமல் எகிப்
துக்குப்போனான்.—அவனுக்குள் திரள் சாதியுண்டாகும் என்று வாக்
குத்தத்தமிருக்க 99 வயதுவரையும் பிள்ளையில்லை.—இரத்தம்சிந்தும்
விருத்தசேதனச் சடங்கை அனுசரித்தான்.—ஆகாருக்கும் சாராளுக்
கும் வீட்டிலே சண்டை.—ஆகாரையும் இஸ்மவேலையும் தேவஉத்தரவுக்
குக் கீழ்ப்படிந்து அனுப்பிவிட்டான்.—எல்லாவற்றிலும் முக்கியமாகத்



தன் மகனைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.—அவனுடைய மற்றக் குமா
ரருக்குப் பிள்ளைப் பாக்கியம் பெருகிவர, ஈசாக்கு கல்யாணம்பண்ணி
20 வருஷமாய்ப் பிள்ளையில்லை.—அவனுக்குப் புறம்பே போராட்டம், உள்
ளே திகில். காரியம் இப்படியிருக்க, நாங்கள் வேதக்காரராயிருப்பதி
னாலே எங்களுக்கு வியாதி துன்பம் சோதனை நேரிடப்படாது. சொத்
துசொம் நன்றாய்ப் பெருகிவரவேண்டும். பிள்ளைப் பாக்கியம் குறைவு
படக்கூடாது. செல்வாக்கும் கனமும் அதிகரிக்கவேண்டும். பகைவர்
விரோதிகளிருக்கப்படாது. மனதுக்கு ஆயாசமான காரியங்களே சம்
பவிக்கப்படாது என்று அநேக கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள்! இது
தப்பிதமான எண்ணம். "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்
தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்." "இவர்கள் மிகுந்த
உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்." சிலுவை இல்லாமல் கிரீடமில்லை.

ஆபிரகாம் தன் மகனை தகனபலியாக ஒப்புக்கொடுத்தது ஆச்சரி
யமான காரியம், அரியகிரியை, நடக்கமாட்டாத சம்பவம் என்கிறோம்.
தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை பாவத்துரோகிகளுக்காகச்
சிலுவையில் மரணமடையும்படி ஒப்புக்கொடுத்ததை என்ன சொல்ல!!!
"நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை
ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து
நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை
விளங்கப்பண்ணினார்." "அறிவுக்கெட்டாத" இந்த அன்பின் விசாலத்
தை விளக்க வார்த்தைகளுமில்லை. விவரிக்க நாவுகளுமில்லை. கிரகிக்க
மூளையும் இல்லை. சொல்லிமுடிய காலமும் இல்லை!

---

## உந. அதிகாரம்.

### சாராள் மரித்தது.

---

1. பெண்களில் சாராளுடைய வயது மாத்திரமே முழுவதும்
சொல்லியிருக்கிறது. இவள் மரிக்கிறதற்கு சிலகாலத்துக்குமுன் ஆபிர
காம் பெயெர்செபாவைவிட்டு எபிரோனில் வந்து வாசம்பண்ணினான்.
"ஆபிரகாம் வந்து" சாராள் மரித்துக்கிடக்கிற கூடாரத்திற்கு.
2. "எபிரோன்" (ஐக்கியம் அல்லது சட்டம்.) எருசலேமுக்குத்
தெற்கே 20 மயில் தூரத்திலிருக்கிறது. பூர்வத்தில் இதற்கு "கீரியாத்
அர்பா." (அர்பாவின் நகரம்) என்று பேர். யோசு. 15: 13. மம்ரே என்
றும் பேர். 13: 18.

3. "ஏத்" அதாவது ஏத்தியர். 10: 15 வியா.
4. அநேக இடங்களில் பிரேதங்களைச் சுட்டெரிக்கிற வழக்கமிருந்
தாலும் திருச்சபையில் மரித்தோரை அடக்கம்பண்ணுகிறது எக்காலத்
திலும் வழக்கமாயிருந்து வருகிறது. "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்ட
படியால், பூமிக்குத் திரும்புமட்டும்.... நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்
குத் திரும்புவாய்" என்ற அந்த ஆதித் தீர்ப்புக்கு, பிரேதங்களைப் புதைக்
கிறதுதான் இசைவாயும் உடன்படுகிறதாயுமிருக்கிறது.
6 "மகா பிரபு" ஆபிரகாம் அநுசரித்த மெய்மார்க்கமும் அவனு
டைய பக்தியுள்ள நடக்கையும் அவனைக் கனப்படுத்தினது.
9. ஆபிரகாம் தன்னிடத்தில் மரித்தவர்களை மற்ற உலகத்தாரோடு
அடக்கம்பண்ண மனமில்லாமல் அலாதியான இடமிருக்கவேண்டுமெ
ன்று இப்படிக் கேட்டான்.

19. நிறுக்கிறது என்ற அர்த்தமுள்ள எபிரேயு வினைச்சொல்லிலிருந்து "சேக்கல்" என்ற வார்த்தை வந்தது. அந்தப் பூர்வீக காலங்களில் முத்திரையிடப்பட்ட நாணயங்கள் வழங்கப்படவில்லை. விலையுயர்ந்த உலோகங்களை நிறுத்துக்கொடுப்பார்கள். ஒரு சேக்கல் ஏறக்குறைய அரை அவுன்ஸ் அல்லது கால் பலத்துக்குச் சரியாயிருக்கும்.

20. அந்தத் தேசமெல்லாம் அவனுக்குச் சொந்தமாகும் என்பதற்கு இது அச்சாரமாயிருந்தது.

படிப்பினை.

ஜீவகாலம் எவ்வளவு நீளமானபோதிலும் முடிவு வெகு சுருக்கமாய்த் தானிருக்கும்! விசுவாசிகளுக்குத் தகப்பன் வீட்டிலும் மரணம் தன் கிரியையை நடப்பிக்கிறது. கிறிஸ்துநாதரோடு பூரண ஐக்கியமுள்ளவர்களாயிருக்கக் கடவோம். இந்த உலகத்தில் நேரிடுகிற துன்பம் துக்கங்களுக்குத் தப்ப இதுவே வகை.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

(தொடர்ச்சி.)

மத்தேயு 7: 12.

"ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசனங்களுமாம்."

இது கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிற தங்கமான பிரமாணங்களில் ஒன்று. இது லேசாய் ஞாபகம்பண்ணிக்கொள்ளக் கூடியதும் நன்றாய் அறிந்துகொள்ளக்கூடியதுமான விதி. இந்த விதி ஆயிரத்தாயிரம் காரியங்களுக்குச் செல்லும். இதின் விரிவான அர்த்தப்படி இது பிறனுக்குச் செய்யவேண்டிய கடமை முழுவதையுங் குறிக்கும். யூத பிரமாணத்தில் தேவனுக்குரியதும், மனிதனுக்குரியதுமான இரண்டு பங்கு அடங்கியிருந்தது. தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையைக்குறித்துப் பத்துக்கற்பனைகளில் முதல் நாலு கற்பனைகளிலும்; பிறனுக்குச் செய்யவேண்டிய கடமையைக்குறித்து மற்ற ஆறு கற்பனைகளிலும் போதித்திருக்கிறது. இவ்விரண்டு கற்பனைகளிலே நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறதென்று" கிறிஸ்து வேறொரு இடத்திற் சொல்லுகிறார். இந்த இடத்தில் "இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்" என்கிறார். அவ்விரண்டு கற்பனைகளில் பிறனுக்குச் செய்யவேண்டிய கடமை முழுமையையும் இந்த வசனத்தில் தொகுத்துச் சொல்லியிருக்கிறது.

இதற்கு வியாக்கியானமாவது.

"மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற இந்த விதியையே, (மாற்கு 12: 31.) "உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோல பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக" என்று சொல்லியிருக்கிறது. மட்டுமிஞ்சின தற்சிநேகமே சகல அநியாயங்களுக்கும் ஊற்றாயிருக்கிறது. தற்சிநே-



கத்தால் உற்பத்தியாகியிருக்கிற அநியாயங்களை எவ்விடத்திலுங் காணலாம். மற்ற மனுஷரிலும் தனக்கு அதிக ஆதாயமும், இன்பமும் கனமுமுண்டாயிருக்கவேணுமென்று விரும்பாதவனார். மட்டுமிஞ்சின தற்சிநேகம் ஒருவனை ஆளும்போது அவன் ஒரு காரியத்தில் மாத்திரமல்ல, ஆயிரத்தாயிரங் காரியங்களிலும், சொத்து விஷயத்தில் மாத்திரமல்ல, தனக்கும் பிறனுக்குமுண்டாயிருக்கும் எந்த விஷயங்களிலும் அகத்தியம் அநியாயஞ்செய்வான். அவன் இந்தத் தப்பிதங்கள் யாவையும் செய்தாலும் தற்சிநேகம் அவனைக் குருடாக்கியிருப்பதால் தான் தப்பிதஞ்செய்ததாக அவனுக்குத் தெரியாது. முற்றிலும் அநியாயமாயிருக்கிற காரியம் நியாயம்போலவும், நியாயமான காரியம் பெரிய புண்ணியம்போலவும் உதாரத்துவம்போலவும் தற்சிநேகமுள்ளவனுக்குத் தோன்றும்.

ஆகையால் புறம்பான நடத்தைகளை ஒழுங்குப்படுத்தத்தக்கசட்டங்கள் மாத்திரமல்ல, இருதயத்தை நீதிநெறியிற் காத்துக்கொள்ளத்தக்க போதனையுமுண்டாயிருப்பது மிகவும் அகத்தியம். "உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோல பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக" என்பது கிறிஸ்துமார்க்க சன்மார்க்க ஒழுக்கத்துக்குப் பிரதான சட்டமாயிருக்கிறது. நம்மிடத்தில் அன்புகூர்வதுபோல பிறனிடத்திலும் அன்புகூர்வோமாக, அப்போது நமக்கிரங்குவதுபோல மற்றவர்களுக்கு மிரங்கி மற்றவர்கள் நமக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறவைகளை அவர்களுக்கும் செய்வோம். அன்பாகிய மூல காரணத்தினால் மாத்திரம் ஒருவன் மற்றவர்கள் தனக்குச் செய்ய விரும்புவதைத் தானும அவர்களுக்குச் செய்வானாகையால், தான் அப்படி விரும்புவதை மற்றவர்களுக்கும் செய்யும் வாடிக்கையுள்ளவன் அவர்களிடத்தில் அன்புகூராமற்போவது அரிது. "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." அதாவது, உன்னை உன் பிறனுடைய தலத்திலே நிறுத்தி சகலவிதத்திலும் நீ அவனுடைய நிலைமையிலும் அவன் உன் நிலைமையிலும் இருக்கிறதாகப் பாவித்துக்கொண்டு அப்புறம் நீ உன்னைக் கேட்கவேண்டியதாவது, இப்போது நான் எப்படி நிதானிப்பேன்? என்னென்னது எனக்குச் செய்யப்படவேணுமென்று விரும்புவேனென்று உன்னைத்தானே கேள். இந்தக் கேள்வியையும் வெகு காரியங்களைச் சிந்திக்கும் சிந்தனையோடு கேட்கவேணும். திருட்டாந்தரமாக, பிறனைப்போல நாமும் தப்பெண்ணமுள்ள போதனையடைந்திருப்பதுபோலவும், அவன் உட்பட்டிருக்கிற சோதனைகளில் நாமும் உட்பட்டிருப்பதுபோலவும், அவனுக்கிருக்கிற சுபாவபெலவீனம் நமக்குமிருக்கிறதுபோலவும், அவனுக்கு இருக்கிற அறிவு அம்மாத்திரமே நமக்குமிருக்கிறதுபோலவும் அவன் வாசம்செய்கிற சிநேகிதக் கூட்டத்தாருக்குள்ளே நாமும் வாசஞ்செய்கிறதுபோலவும் அவனைப்போல நாமும் கள்ளச் சிநேகிதருடைய ஏய்ப்புக்கும் எத்துக்கும் உள்ளாயிருப்பதுபோலவும், மொத்தமாக சகலவிதத்திலும் அவனிருக்கும் நிலைமையில் நாமுமிருக்கிறதுபோலவும் பாவனைசெய்துகொண்டு அப்புறம் மேற்படி கேள்விகளை உங்களைத் தானே கேளுங்கள் என்பதாம்.

இந்தச் சொர்ணப் பிரமாணத்தை பற்பல நிலைமையுள்ள மனுஷருக்குச் சம்பந்தப்படுத்திச் சிந்திப்போமாக. முதலாவதாக—அதிகாரிகள் தங்கள் அதிகாரத்துக்குட்பட்டவர்களுடைய நிலைமையில் தாங்கள் இருப்பதுபோல பாவித்து நடந்துகொள்வார்களானால் எவ்வளவு நன்மையாயிருக்கும். அப்போது சனங்களுடைய சுகவாழ்வைச் செலவு

பண்ணிக்கெடுத்தாவது இராசாவைப் பெரியவனும் பேர்போனவனுமாக்கவேணுமென்ற வீம்பு எவ்வளவோ பெரிய குற்றமாகத் தோன்றுமே. அப்போது அந்த அதிகாரிகள், தாங்கள் பெரிய உத்தரவாதம்செய்யவேண்டியவர்களென்பதை மிகவும் உணருவார்களே; எந்தச் செலவையும் மட்டுத்திட்டமாய்க் கடத்துவார்களே; ஏழைகளுக்கு நயமாயிருக்கும் யாவையும மிகவுங் கண்டிப்பாய் மதித்து நடத்துவார்களே; மறுபட்சத்தில் சனங்களும் தங்கள் இராசாக்கள் மந்திரிமார்களுக்கு இருக்கிற சோதனைகளையும் வருத்தங்களையும் சிந்தித்து அநேகரைப் பிரியப்படுத்துவது அவர்களுக்கு எவ்வளவு வருத்தமென்பதையும், எல்லாரையும் பிரியப்படுத்துவதோ எவ்வளவுங் கூடாத காரியமென்பதையும், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாத, மனரம்மியமற்ற குணம் எவ்வளவு கோபத்தை மூட்டத்தக்கது, குரூரத் தண்டிப்புச்செய்ய அவர்களை எவ்வளவு பலமாய் ஏவத்தக்கது என்பதையும் உய்த்துணர்ந்துகொள்வார்களானால் பெரியோரைக்குறித்து அவர்கள் சரியாய் நிதானிக்கவும் அவர்களுக்கு இணங்கி அடங்கி நடக்கவும் கற்றுக்கொள்வார்கள்.

மேலும் எஜமான்கள் தங்கள் பணிவிடைக்காரருடைய நிலைமையில் தாங்களிருப்பதாகப் பாவித்து மற்றவர்கள் கையின் கீழிருக்கும் மிகத் தாழ்வான நிலைமையில் அவர்களுக்கிருக்கும் பிரயாசங்களைச் சிந்திப்பார்களானால், அப்படியே பணிவிடைக்காரரும் நாங்கள் எஜமான்களாயிருந்தால் பணிவிடைக்காரர் என்னென்ன செய்ய நாங்கள் விரும்புவோம், அவர்களிடத்தில் காணப்படும் மெட்டிமை, உண்மைத்தாழ்வு, இரண்டகம், சோம்பல், மறதியிவைகள் எங்களுக்கு எவ்வளவு குற்றமுள்ளவைகளாகத் தோன்றும் என்று யோசித்துப் பார்ப்பார்களானால், ஒருவருடைய நடத்தையைக்குறித்து மற்றவர்கள் நிதானமாய் வியார்த்தபண்ணி அவரவர்க்குரிய கடமைகளை வெகு கண்டிப்பாய் நடத்துவார்களே.

அந்தப்படியே பெற்றோரும், உபாத்தியாயரும் தங்கள் அதிகாரத்துக்குளிருக்கும் பிள்ளைகளின் நிலைமையில் தாங்களிருப்பதாக எண்ணி ஒரு பிள்ளையினுடைய தப்பிதத்தை அந்தத் தப்பிதத்தால் தங்களுக்கு நேரிட்ட வருத்தத்தின் அளவைக்கொண்டு நிதானியாமல், சிறு பிள்ளைப் புத்திக்குரிய அறிவீனத்தையுங் கவனத்தாழ்ச்சியையும் எண்ணி, தண்சாலையாயிருப்பார்களானால், சிறுவர் செய்யும் அநேக பிழைகளைக்குறித்துச் சாந்தமாய் எண்ணவும் அவர்களை மட்டாய்த் தண்டிக்கவும் படித்துக்கொள்வார்கள். பிள்ளைகளுந் தங்கள் முரட்டுத்தனம், கீழ்ப்படியாமை, அசட்டைக்குணம், நன்றிகேடு முதலான துற்குணங்களால தங்கள் பெற்றோருக்கு எவ்வளவு மனவருத்தமுண்டாகுமென்பதையும் இவைகளுக்கு எதிரிடையான நல்ல குணங்களைத் தங்களிடத்திற் காணுவார்களானால் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாகுமென்பதையும் சிந்திப்பார்களானால், அதிக கவனமாகவும் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் நடந்துகொள்வார்களே.

மேலும் கொள்வோரும் விற்போரும் ஒருவரிடத்தில் மற்றவர் இருப்பதாக எண்ணுவதுண்டானால், வியாபாரத்தில் கள்ளத்தனமும அநியாயமும் நடக்கமாட்டாதே.

அதிகாரமுடையோர் தங்கள் அதிகாரத்துக்குட்பட்டவர்கள் நிலைமையிலும், அடிமைகொள்ளுகிறவன் அடிமையின் நிலைமையிலும், ஒடுக்கிறவன் ஒடுக்கப்படுகிறவனுடைய நிலைமையிலும் தங்களை நிறுத்தி, மற்றவர்கள் தங்களுக்குச்செய்ய விரும்புகிறபடி தாங்களும் அவர்களுக்குச் செய்யப் பிரயாசப்படுவார்களானால், இலட்சாதி இலட்சம் சனங்கள் துன்பத்துக்கு நீங்கி சுகபத்திரமாயிருப்பார்களே.'



அல்லாமலும் பிறரோடு வாதாட விருப்பமுள்ளவர்கள், முறையிடுகிறவர்கள், குற்றம்பிடிக்கிறவர்கள், தப்பெண்ணங்கொள்ளுகிறவர்களெல்லாரும் தாங்கள் குறைகூறும் பேர்களுக்கு விரோதமாக ஏதாவது சொல்லுமுன், தங்களை அவர்களிடத்தில் வைத்துச் சிந்திப்பார்களானால், சமாதானமும் ஒருமையும் எங்குந் தழைத்தோங்குமே. ஆ! கிறிஸ்து சொன்ன இந்தக் கற்பனை எவ்வளவு விரிவானது. உலகத்தின் சுகவாழ்வுக்கு இது எவ்வளவு அனுகூலமானது.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 15. அதிகாரம்.

சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப் போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—கர்த்தாகோ பட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வெலீரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.

(தொடர்ச்சி.)

---

இதுகாரியத்தில் பற்பல சபைகள் ஏக சம்மதமாய் நடந்தது அதிசயிக்கத்தக்கது. இப்பேர்ப்பட்ட துன்பகாலத்தில் ஒன்றோடொன்று நிருபப் போக்குவரவு செய்து கலந்து பேசிக்கொண்ட வகையும் அதிசயிக்கத்தக்கதுதான். ரோமாபுரிக் கிறிஸதவர்களும் கர்த்தாகோப் பட்டணத்துச் சபையாரும் அடிக்கடி ஒருவரோடொருவர் கலந்துகொண்டு எக்காரியத்திலும் ஒன்றுபோல நடந்துவந்தார்கள். ரோமைச் சபையிலே இன்னம் கண்காணியார் நியமிக்கப்படாதிருந்தும், அத்தேசத்துக் கண்காணிமார் சிப்பிரியனுடைய தீர்ப்பை அங்கீகரித்துக்கொண்டதுமன்றி, அவர்களுக்குள்ளே ஒரு சங்கங் கூடி, மறுதலித்துப்போனவர்களில் எவர்கள் மரணத்துக்கேதுவான நிலைமையிலிருந்தார்களோ அவர்களைச் சபையின் ஐக்கியத்திற் சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொண்டார்கள். சிப்பிரியன் கண்காணியாருடைய குருக்கள்மாரிலும் மிகுதியானவர்கள் அவருடைய திட்டங்களை யனுசரித்து நடந்தார்கள். அவர் எழுதியிருந்த திட்டங்களுக்குள் வேறொரு திட்டமும் கவனிக்கத்தக்கது. அது யாதெனில் மார்க்க விஷயமாய் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தவர்களில் யாராவது இறந்துபோனால், துன்பம் நீங்கியபின் இறந்த தேதியை பண்டிகை நாளாகக் கொண்டாடிவரும் பொருட்டு அதைக் குறித்துவைக்கும்படி கற்பித்திருந்ததுதான்.

சபையில் இவ்வழக்கம் கைக்கொள்ளப்பட்டு வந்ததற்கு இதற்கு முன்னும் பல திருஷ்டாந்தங்கள் பார்த்தோமே. இரத்தச்சாக்ஷியாய்

மரித்தவனுடைய நடபடிகளைப் பெரும்பாலும் எழுதுவித்து. வருஷாந்தரம் அவன் மரித்த தேதியில், அவன் அடக்கம்பண்ணப்பட்ட இடத்திலாவது செபஆராதனை நடத்துகிற இடத்திலாவது சபையார் கூடிவந்து அதை வாசிக்கக் கேட்பது வழக்கம். இவ்வாறு எழுதப்பட்ட விர்த்தாந்தங்களில் அநேகம் நாளதுவரையுமிருக்கின்றன. அவைகளிற சில நூல்கள் இரண்டாம் நூற்றாண்டிலே எழுதப்பட்டவைகளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அவைகளின் தொகைப் பெருகப்பெருக, அநேக அற்புத சங்கதிகளும் கலந்துகொண்டபடியால் அவைகளில் இவ்வளவு மெய் இவ்வளவு பொய்யென்று தீர்மானிப்பது பெரும்பாலும் பிரயாசமான காரியம். கட்டுக்கதைகள் அடங்கிய நூல்கள அநேகம் எழுதப்பட்டிருப்பது உள்ளதுதான். அதினிமித்தமாய் அந்த வகையான நூல்களையெல்லாம் தள்ளிப்போடுவது சரியோ? துன்பம் நிறைந்த அக்காலங்களில், மரணபரியந்தம் உண்மையாய் நிலைத்து நின்றவர்களை ஞாபகப்படுத்திக்கொள்வதினால் கிறிஸ்தவர்களுடைய விசுவாசமும் வைராக்கியமும் பலப்பட்டுவந்தது நிச்சயம். துன்பம் நீங்கியபிறகும் சுகத்தினாலே நேரிடும் சோதனைக்குள்ளாகத்தக்கவர்களுக்கு அப்படிப்பட்டவர்களுடைய மாதிரியைக் காண்பிப்பது நன்மைக்கேதுவாகவேயிருக்கும்.

கி. பி. 251ஹுடத் துவக்கத்தில அஞ்ஞானிகளாலுண்டான துன்பம் சற்று தணிந்தபடியால், சிப்பிரியன் கார்த்தாகோப் பட்டணத்துக்குத் திரும்பிவரத்தக்கதாயிருந்தது. ஆனால் நோவேத்து என்பவன் மறுதலித்தவர்கள் விஷயத்தில் இன்னமுந் தாறுமாறாகவே நடந்துவந்ததுமல்லாமல் ஈஸ்தர் பண்டிகைக்குச் சற்றுமுன்னதாக கண்காணியார் அதிகாரத்துக்கு விரோதமாக பகிரங்கமான பிரிவினையையும் உண்டுபண்ணினான். அஞ்ஞான துனைத்தனமாயிருந்த காலத்தில் இவ்வகையான பிரிவினைகளைத் தடுப்பது கூடியதன்று. சிப்பிரியனும் மற்றுங் கண்காணிகளும் சங்கங் கூடி எவர்களையாவது சபைக்குப் புறம்பாக்கலாம். அவர்கள் எவ்வளவு கொஞ்சப்பேரானாலும் அந்தத் தீர்ப்புக்கு இணங்காமல் மீறி நடந்தால் மற்றவர்கள் அவர்களைத் தண்டிக்கக் கூடுமோ? இப்படி ஒழுங்கீனமாய் நடக்கிறவர்களையும் மறுதலித்துப்போனவர்களைப்போல சபைக்குப் புறம்பாக்கிப்போட்டபோதிலும், அவர்களெல்லாரும் ஒன்றுகூடிக்கொள்ளாதிருக்கவும் அவர்களோடு சேரப்பிரியமுள்ளவர்களை சேர்த்துக்கொள்ளாதிருக்கவும் பண்ண அவர்களாலாகாது. இவ்விதமாய் சபையில் ஐக்கியம் நிலைபெறும்படி செய்த பிரயத்தனம் பிரிவினைக்கேதுவாயிற்று. மறுதலித்தவர்கள் விஷயத்தில் கண்காணியார் செய்யத்தக்கதைப் பார்க்க நோவேத்து என்பவன் அதிக இளக்காரங்கொடுத்து அவ்வகையாய் தனக்கும் தன் வகையராக்களுக்கும் பிரியத்தைத் தேடிக்கொண்டான்.

---

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XIII. பத்துக் கன்னிகைகள்.

மத்தேயு 25: 1—13.

(தொடர்ச்சி.)

இவ்விரு வகையாரும் விசுவாசமென்னும் வார்த்தையை இரண்டு



வித்தியாசமான கருத்தில் வழங்கினார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. ரோமான் மார்க்கத்தார் சத்தியத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடுதலே விசுவாசமென்கிறார்கள். புரோட்டஸ்டான் மார்க்கத்தார் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய சீவனுக்கு வேறாயிருக்கிறதைத் தான் விசுவாசமென்கிறார்கள். இப்படி இவர்கள் கருத்துகள் வித்தியாசப்படாவிட்டால், இரண்டு வியார்த்திகளும் ஒன்றுக்கொன்று விரோதப்படாது. இரண்டையும் லேசாய் ஒன்றுபடுத்தலாம். எண்ணெயில்லாத புத்தியீனராகிய கன்னிகைகள் வெளியரங்கமான கடமைகளை, ஆசையில்லாமல், தேவகற்பனையைக் கைக்கொள்ளவேணுமென்று பிரயாசப்படாமல் செய்துவருகிறவர்கள். அவர்களுக்கு வேதம் ஒரு வெறுந்தோடுபோலிருக்கிறது. உள்ளான கனியில்லாதது, அல்லது உதடுகளால் கிறிஸ்துவை அறிக்கையிட்டு சத்தியத்தின் ரூபத்தைப் பிடித்துக்கொண்டு கர்த்தருக்கேற்ற கிரியைகளில் அன்பு, தாழ்மை, தன்னை வெறுத்தல் என்னுஞ் செய்கைகளில் சுறுசுறுப்பில்லாதவர்கள். இந்த முகாந்தரத்தையிட்டு இல்லாதவர்களிடத்திலிருந்து இருக்கிறதும் எடுத்துக்கொள்ளப்படுமென்கிற சட்டப்படி கொஞ்சங்கொஞ்சமாக கிடைத்த கிருபையையும் இழந்து அது அதிகமாய் வேண்டிய சமயத்தில் முற்றிலுமில்லாமற்போகிறவர்கள். கிறிஸ்துமார்க்கத்தில் வெளியரங்கமானது மாத்திரம் ஏதேதுண்டோ, அதுதான் விளக்கு. உள்ளான ஆவிக்குரியது ஏதேதுண்டோ அதுதான் பாத்திரத்திலிருக்கிற எண்ணெய். யாக்கோபு சொல்லுகிறபடி விசுவாசம் உடலும், கிரியைகள் உயிர்ப்பிக்கிற ஆத்துமாவைக் காட்டுகிற அத்தாட்சியானால், விசுவாசத்தை விளக்கென்றும் கிரியைகளை பாத்திரத்திலுள்ள எண்ணெயென்றுஞ் சொல்லலாம். ஆனால் பவுலப்போஸ்தலன் சொல்லுகிறபடி கிரியைகள் விசுவாசத்தினின்று தோன்றுகிறதினால் மேன்மையுள்ளவைகளானால் அப்பொழுது கிரியைகள் விளக்கு. விசுவாசம் அதை யெரியச்செய்கிற எண்ணெய். இரண்டிலும் எண்ணெயின் கருத்தை முற்றிலும் சொல்லிமுடியுமுன்னே கிரியைகள், விசுவாசம் இவ்விரண்டுக்கு மேலான வேறொன்றை நாம் பிடித்துக்கொள்ளவேண்டும். தேவஆவிதான் வேலைசெய்ய நம்மை ஏவுகிறது. விசுவாசத்தை உயிர்ப்பிக்கிறது. வேதாகமத்தில் ஆவியை எண்ணெய்க்கு அடிக்கடி ஒப்பிட்டிருக்கிறது. 2 மோசே 30: 22—33 வரை. சகரியா 4: 2, 12. அப். 10: 38. எபி. 1: 9,

விளக்கிலும் பாத்திரத்திலுமிருந்த எண்ணெயின் சம்பந்தத்தை என்னவிதமாய் நாம் பார்த்தாலும் உவமையின் நோக்கமென்னவென்றால் இரட்சகர் கடைசியாகச் சொல்லுகிற வார்த்தையின்படி சபையின் அவயவங்களானவர்கள் விழிப்பாயிருக்கவேண்டுமென்று காட்டத்தான். ஒரு பட்சத்தில் பார்த்தால் அவர்கள் நற்கிரியைகளைச் செய்ய கவலைகொள்ளவேணுமென்றும் நன்மைசெய்கிறதில் தளர்ந்துபோகக் கூடாதென்றும், கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லி அவர் சொல்லுகிறபடி செய்யாதவர்களாயிருக்கக் கூடாதென்றும் அவர்களை எச்சரிக்கிறது. மறுபட்சத்தில் பார்த்தால் அவர்கள் உள்ளான நிலைமையைக்குறித்து விழிப்பாயிருக்கவும் தங்கள் விருப்பங்களைக்குறித்து மனிதர் கண்ணுக்குத் தென்படாமல் தேவன் மாத்திரங் கவனிக்கிற உள்ளான காரியங்களைக்குறித்து கவலையாயிருக்க எச்சரிக்கிறது. உள்ளாக மகிமையுள்ளவர்களாயிருக்கத் தேடவும் கிறிஸ்துவின் ஆவியை உள்ளான இருதயத்தில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளவும் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தகுதியுள்ளவர்களென்று காண்பித்து மனிதருக்கு முன்பாகக் குற்றமில்லாத நடத்தையுள்ளவர்களாயிருக்க நம்மை

எச்சரிக்கிறது. எப்படிப் பார்த்தாலும் புத்தியீனமான கன்னிகைகள்
மாய்மாலக்காரரல்ல, வேணுமென்று மோசம்போக்குகிறவர்களல்ல,
வெளியரங்கமாய் அக்கிரமஞ்செய்கிறவர்களுமல்ல. செபத்தை அசட்
டைசெய்கிறவர்கள். அலுவலில் அசதியாயிருக்கிறவர்கள். அந்தரங்கத்
தில் பார்க்கிற தேவனையல்ல, மனிதர் கண்ணுக்குப் பிரியத்தையுண்
டாக்கத் தேடுகிறவர்கள். இதை நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும்.
அவர்களுக்கு எண்ணெய் சுத்தமாயில்லையென்றல்ல, இருக்கிறது. ஆனா
லும் போதுமான அளவில்லை. அவர்கள் புறப்பட்ட துவக்கத்தில் விளக்
குகள் எரிந்துகொண்டிருந்தது. இல்லாவிட்டால் மணவாளன் வருகிற
சமயத்தில் அவைகள் அணைந்துபோகத்தக்கதாகவிருந்ததென்று சொல்
லக்கூடாது. பாத்திரத்தில் எண்ணெயில்லாமலிருந்தது மத். 13: 5-ல்
ஆழமான மண்ணில்லாதிருந்ததுக்குச் சூரியனால் விதை தீய்ந்துபோ
கும்வகையில் அது முளைக்கிறது. மணவாளன் வர தாமதிக்கிறதினால்
எண்ணெய் அற்றுப்போகும்வகையில் விளக்குகள் எரிகிறது. இவ்விரு
வகையிலும் வெளியரங்கமான அறிக்கையோடே அது ஒன்றுபட்ட
தென்று அறிந்து வேறொன்றைத் தேடுகிற குணமிருக்கிறது. அவர்
களுக்கு விசுவாசமில்லையென்றல்ல, ஆனால் அந்த விசுவாசம் சோதனை
யைச் சகிக்கத்தக்கதல்ல. நெடுநாளிருக்கத்தக்கதுமல்ல. வெளியரங்
கமாகிற ஆவிக்குரிய சீவனாயிருந்தாலும் அதைப் பிழைப்பூட்டுகிறதற்கு
உள்ளான ஆழ்ந்த ஊற்றுகளில்லை. புத்தியுள்ள கன்னிகைகளோ மண
வாளன் வர அதிகத் தாமதஞ்செல்லுமென்று அறிந்து, சபையானது
தங்கள் நாளிலே சீக்கிரத்தில் மகிமைக்குள் பிரவேசியாதென்று உணர்
ந்து, தங்களுக்கு வருத்தமான நீண்ட பிரயாசத்தை எதிர்பார்த்து அதற்
கப்புறந்தான் தங்களுடைய பிரயாசத்தினின்று ஓய்வார்களென்றும்
தங்களுக்கு இராச்சியங் கிடைக்குமென்றும் அறிந்து நடக்கிறவர்கள்.
சில நல்லெண்ணங்களால் இதுகளெல்லாவற்றையுங் கடந்து முடிவுபரி
யந்தம் நிலைநிற்கக் கூடாதென்று அறிகிறவர்கள். அப்படி அந்த எண்
ணங்கள் வைக்கோலுக்குள்ளிருக்குந் தீயைப்போலிருக்கும். சீக்கிரம்
எரியும். சீக்கிரம் அணைந்துபோகும். எண்ணங்கள் மாத்திரம் போதா
து. உறுதியான தீர்மானங்கள் வேண்டும். அவர்களுடைய முந்தின
எண்ணங்களும் விருப்பங்களும் கொஞ்சக்காலந்தான் நிற்கும். தேவ
ஆவியானவரால் அதுகள் உயிர்க்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பலப்ப
டுத்தப்பட்டால் தான் வெகுகாலமிருக்கும் [illegible] வரு
கிறதானால் காரியம் வேறே. வரத் தாமதிப்பாரென்று அறிந்தபடியால்
அதற்கேற்றவிதமாய் விவேகத்தோடு ஒழுங்குசெய்துகொண்டார்கள்.

மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்களெல்லாரும் நித்திரை
மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். மணவாளன் தாமதித்தது இரட்
சகர் தம்முடைய சீஷர்கள் நினைத்ததுக்கு அதிகமாக தம்முடைய இர
ண்டாம் வருகை தாமதப்படுமென்று காட்டத் தாம் சொன்ன அநேக
குறிப்புகளிலொன்று. அது ஒரு குறிப்பு மாத்திரந்தான். தாம் வர
அநேக நூற்றாண்டுகள் செல்லுமென்று தெளிவாய்ச் சொல்லியிருப்பா
ரானால் ஆதித் திருச்சபைக்கு அது பிரதிகூலமாயிருக்கும். தங்கள் கா
லத்திலே இரட்சகர் வந்து விடுவாரோ என்கிற எண்ணத்தினாலே தான்
ஒவ்வொரு தலைமுறையிலுள்ள பரிசுத்தவான்களும் பரிசுத்தமுஞ் சாக்
கிரதையுமுள்ளவர்களாக நடக்க ஏவப்பட்டார்கள். ஒவ்வொரு தலை
முறையிலுள்ளவர்களுந் தங்கள் தங்கள் காலத்திலேயே இரட்சகர்
வருவாரென்று விசுவாசிக்கவேண்டுமென்பது அவருடைய விருப்ப
மல்ல. தப்பான எண்ணத்தை வைத்துக்கொண்டு நாம் விசுவாசித்து



நடக்கவேண்டுமென்பது அவருடைய கருத்தல்ல. அப்படி அவர் விரும்
புவாரானால் கடைசித் தலைமுறையார் தவிர மற்றவர்களுடைய விசு
வாசமும் நடத்தையுந் தப்பிதமான எண்ணத்தின்மேல் தானிருந்திருக்
கவேண்டும். ஆகிலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த
போதனையின் முக்கியமென்னவென்றால், அதெந்தச் சமையத்திலும்
நடக்கத்தக்கது. எந்தத் தலைமுறையாரும் தங்கள் காலத்தில் அது நட
வாதென்றெண்ணக் கூடாது. அகுஸ்தீன சொல்லுகிறபடி எந்தநாளும்
கடைசிநாளாயிருக்கலாம். ஆதி கிறிஸ்தவர்களுடைய அன்பும் வாஞ்
சையும் இரட்சகருடைய வருகையை வெகு சமீபமென்றெண்ணச்
செய்தது. இந்த விசுவாசத்தின் பெலத்திலுஞ் சந்தோஷத்திலும் பிழை
த்தார்கள். துன்பங்களைச் சகித்தார்கள். அவர்கள் மரித்தபோது அவர்
களுக்கு இராட்சியம் வந்ததுபோல தானிருந்தது. இரட்சகர் வருஞ்
சரியான நேரஞ் சபைக்குத் தெரியப்படுத்தப்படாதிருந்ததற்கு இன்
னொரு காரணமிருக்கலாம். அந்தக்காலம் இன்னம் தீர்மானிக்கப்படா
தது தான். தீர்க்கதரிசனம் விதிக்கப்பட்ட காரியமல்ல, எந்தக்காலத்
துள்ளவர்களும் விசுவாசத்தினாலுஞ் செபத்தினாலும் அந்த வருகை
தீவிரிக்கும்படி செய்யலாம். விசுவாசிகள் அப்போஸ்தலன் சொல்லு
கிறபடி தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவ
லோடே காத்திருக்கிறார்கள். 2 பேதுரு 3: 12. இதோடு அப்போஸ்தலர்
3: 19ஐ ஒத்துப்பார். கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து ஆறுதல்செய்
யுங் காலங்கள் வரும்படிக்கு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்.
ஆறுதல்செய்யுங் காலங்களென்பது 21ம் வசனத்தில் கண்டிருக்கிற
எல்லாவற்றையுஞ் சீர்ப்படுத்துகிற காலங்கள்தான். அதாவது கிறிஸ்து
வின் மகிமையான இராட்சியம் ஏற்படுகிற காலம். இந்தச் சத்தியம்
அதாவது, நம்முடைய நடக்கைக்குத்தக்கதாக இரட்சகர் வரத் தாம
திக்கும், அல்லது தீவரிக்குமென்பது 2 பேதுரு 3: 9 ல் தெளிவாய்க்
கண்டிருக்கிறது. இந்த வாக்கியங்களுக்கு இசைவாக நாம் தேவனைப்
பார்த்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய தொகையை நிறை
வாக்கி தம்முடைய இராட்சியத்தைத் தீவரிக்கச் செய்யவேணுமென்று
செபிக்கிறோம். தேவன் ஞானமாக இந்தக் காரியத்தைச் சந்தேகத்தில்
விட்டபோதிலும் ஆதிக் கிறிஸ்தவர்களுடைய எதிர்பார்க்குதல் அபத்
தமாய்ப்போனபிறகு வேதத்தை ஆராய்ந்தவர்கள் காரியமிப்படித்தா
னிருக்குமென்று அறிந்துகொள்ளுகிறது விசேஷித்தது. இப்படிப்பட்ட
குறிப்புகள் அநேகமுண்டு. தற்கால குறிப்பும் இதிலொன்று.

உவமையைப் பார்ப்போம். மணவாளன் தாமதித்தபோது, கன்னி
கைகளெல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். அவர்
கள் படிப்படியாய்த் தூக்கத்தில் விழுந்ததை இங்கே காட்டியிருக்கிற
து. முதலாவது தலை அசைந்தது. அதுதான் நித்திரை மயக்கம். பிறகு
நன்றாயத் தூங்கிவிட்டார்கள். எல்லாருந் தூங்கினார்களென்று சொல்
லியிருப்பதால் சபை முழுவதும் ஆயத்தமில்லாமல் விசுவாசிகளுங்
கூட தற்கால கிருத்தியங்களையே நாடித் திரிவார்களென்று காட்டுகிற
து. வித்தியாசமுண்டு. அவர்களுடைய ஆயத்தமில்லாமை சீக்கிரம்
லேசாய் நீங்கக்கூடியது. அவர்கள் தீவெட்டிகளை ஆயத்தப்படுத்தி எண்
ணெய் ஊற்றினதினால் இது விளங்குகிறது. மற்றவர்களோ அவ்வளவு
லேசாய் தங்கள் ஆயத்தமில்லாமையை நீக்கிக்கொள்ளவில்லை. யாக்.
3: 2. ரோமர் 13: 2. அகுஸ்தீன் என்பவர் எல்லாருந் தூங்கினார்களென்
று சொல்லியிருப்பதினால் எல்லாருடைய அன்புங் கொஞ்சம் கொஞ்
சம் குளிர்ந்துபோவதைக் குறிக்குமென்று சொல்லுகிறது சரியல்லவெ

ன்கிறார். புத்தியுள்ள கன்னிகைகளுடைய அன்பு குளிர்ந்துபோகாததினால் தானே அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்களென்கிறார். ஆகிலும் அவர் சொல்லுகிறபடி இந்த வார்த்தைகளில் சொல்லியிருக்கிற தூக்கம் யாவருக்கும் வருகிற தூக்கம். அது மரண நித்திரை. நல்ல கிறிஸ்தவர்களுக்குள்ளுங் காணப்படும் அசட்டையையுங் குறைவையுங் குறிக்குமென்று சொல்வதைவிட இது நல்ல வியாக்கியானம். எவ்வளவாக சுறுசுறுப்புக்கு நம்மை ஏவத்தக்க எத்தனையோ முகாந்தரங்களிருந்தும் நம்முடைய மனம் சோம்பலையே நாடுகிறதினால் கொஞ்ச அசட்டைக்கு நம்முடைய இரட்சகர் இப்படி இடங்கொடுத்திருக்கமாட்டார். நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டுமென்றும் ஆயத்தமில்லாதவர்களாய்க் கண்டுபிடிக்கப்படக்கூடாதென்றும் போதிக்கிற உவமையைச் சொல்லும்பொழுது இப்படிப்பட்ட அசட்டைக்குக் கொஞ்சமாவது இடங்கொடுக்கமாட்டார். ஒருவேளை நித்திரை மயக்கங்கொண்டு தூங்கினார்களென்று சொல்வது மணவாளனைச் சந்திக்க அவசியமான பிரயத்தனங்களைத் தங்கள் மனப்படி செய்து அவருடைய வருகைக்கு அமைதலோடு காத்திருக்கிறதைக் குறிக்கும். உவமைப் போக்கைக் கவனிக்கும்போது இது அவசியமாக நடக்கத்தக்க சங்கதிதான். புத்தியீனராகிய கன்னிகைகள் காத்திருக்கிறதையும் விளக்குகள் வரவர மங்குகிறதையுங் கவனிப்பார்களானால் தங்களுக்கு எண்ணெய் காணாதென்று அறிந்தபடியால் சரியான நேரம் வருகிறதற்கு முன்னே எண்ணெயைச் சம்பாதித்துக்கொள்வார்கள். எல்லாருந் தூங்கினதையும் மணவாட்டியோடு வந்தவர்களுடைய சத்தத்தைக் கேட்டு விழித்ததையுங் கவனிக்கும்போது அவர்களுக்கு எண்ணெய் வேண்டியிருந்தபோது சுத்தமாய் எண்ணெய் இல்லாமல்போனது இன்னதென்று காட்டுகிறது. புத்தியுள்ளவர்களும் தூங்காவிட்டால் மற்றவர்கள் தூங்கும்போது இவர்கள் விழித்திருப்பார்களானால் அவர்கள் அன்புத்தாழ்ச்சியுள்ளவர்களென்று விளங்கும். குறைவு நீங்கக்கூடிய சமயத்தில் தாமதிக்கிறதையும் அவர்கள் விளக்குகள் மங்கியெரிகிறதையுங் குறித்து அவர்களை எச்சரியாமல்போனதாகத் தோன்றுமே.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.** மகாராஜாத்தியவர்கள் குமாரராகிய டியூக் ஆவ் எடின்பரோவுக்கும் ருஷிய சக்ராவர்த்தி குமாரத்திக்கும் நடக்கும் விவாகச் சடங்கு வருகிற ஜனுவரி மாசம் பீற்றர்ஸ்புர்க் ராஜதானியில் நிறைவேறும். டியூக் ஆவ் எடின்பரோவுக்கு தற்காலத்தில் கிடைத்து வருகிற வருமானத்துக்குமேல் வருஷாந்தரம் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க பார்லிமெண்டார் உத்தரவுசெய்தார்கள். பிரதான மந்திரியாகிய கிலாட்ஸ்டோன் துரை வருத்தமாயிருக்கிறாரென்று செய்தி. ஆபிரிக்காவின் மேல்பாகத்தைச் சேர்ந்த அஷான் தீவிராஜா அங்கிலேயருடைய தேசத்தில் சென்று பல அக்கிரமங்கள் செய்ததினால் அவனுக்கு விரோதமாய் அங்கிலேய ராணுவங்கள் அனுப்பப்பட்டிருக்கிறது. அங்கிலேய தேசத்திலும் பிரான்சிய தேசத்திலும் நாளது வருஷத்தின் கோதுமை



விளைச்சல் சாதாரண விகிதத்திற்கு ஐந்தில் ஒரு பங்கு குறைந்தது. லண்டன் நகரத்திலும் பெர்லின் நகரத்திலும் வாந்திபேதி கண்டது.

**பாரசீக** அரசன் வியனா ராஜதானியைவிட்டுக் கன்ஸ்தாந்திநோபிலுக்குப்போகப் புறப்பட்டார்.

**பிரான்சிய** தேச மகா சபையைச் சேர்ந்த சில பிரதானிகள் ஒருவருக்கொருவர் கடிதம்போக்கி, பிரான்சிய தேசத்தில் மீண்டும் ராஜாதிகாரத்தை ஸ்தாபிக்கும்படி ஆலோசனைபண்ணிவருகிறார்களாம்.

**ஸ்பானிய** தேசத்திலுண்டான கலகம் சற்றே தணிந்திருக்கிறதென்றும், என்றாலும் அந்தத் தேசத்தின் துரைத்தன காரியம் கொஞ்சமும் திர்ப்திகரமான ரீதியில்லையென்றும் செய்தி.

**ஐஞ்சிபா**ரினின்று வந்த சமாசாரத்தினால், மத்திய ஆபிரிக்காவின் குடிஜனமுதலிய விவரங்களை விசாரித்துவருகிற டாக்டர் லிவிங்ஸ்டனோடு அங்கங்கே பயணம்பண்ணி, அவருக்கு உதவிசெய்து வந்த மோபாத் துரை ஜுரங் கண்டு இறந்துபோனாரென்று தெரியவந்தது. இவர் ஐம்பது வருஷக்காலமாய் ஆபிரிக்காவின் மிலேச்ச ஜனங்களிடத்தில் வாசம்பண்ணி சுவிசேஷத்தை பிரசித்தப்படுத்திவந்த மொபாத் ஐயர் குமாரரென்று உத்தேசம். ஸ்ரீ பார்ட்டில் பிரோயர் துரை ஜஞ்ஜிபார் முதலிய இடங்களுக்குப்போய், சிறைவியாபாரத்தை அகற்றிவிடச் செய்த முயற்சி அனுகூலமாய் முடிந்தபடியினாலே மஹா ராணியவர்கள் அவருக்கு பிரபுப் பட்டம் தரிப்பிக்கப்போகிறார்களாம்.

**அமேரிக்கா**வைச் சேர்ந்த பால்ட்டிமோர்ப் பட்டணத்தில் நூறு வீடுகள், கட்டிடங்கள், நாலு தேவாலயங்கள் இவை நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டன.

**கைவாப்**பிரதேசத்தார் ருஷியருக்கு யுத்தசெலவுத் தொகை ஏழு வருஷத்துக்குள் கொடுக்கவேண்டுமென்றும், அந்தத் தொகையைக் கொடுத்துத் தீர்க்குமளவும் ருஷியர் கூன்குராட், ஸ்குரோரியன் பிரதேசங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறதென்றும், கைவா ராஜதானியில் பாளயமிறங்கியிருக்கிற ருஷியச் சேவகர் ஆகஸ்டுமீ 27௳ அதைவிட்டு நீக்குகிறதென்றும் உடன்படிக்கைசெய்யப்பட்டது.

**இந்திய** கவர்னர்ஜெனரலவர்கள் வருகிற ஜனுவரி மாசம் பங்களூரில் நடக்கும் யுத்தாப்பியாசத்தைப் பார்க்க வருவாரென்கிற சப்தம பிறந்திருக்கிறது. நமது சென்னைக் கவர்னரவர்கள் அக்டோபர் மாசமட்டும் நீலகிரியில் வசித்திருந்து, அப்புறம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலியவிடங்களைச் சுற்றிப்பார்த்து நொவெம்பர் மாசம் சென்னையில சேர்வார்களாம். சென்னை அத்தியக்ஷராவர்களின் சகாயகுருவாகிய டேலர் ஐயர் கூனூருக்கும் வெலிங்டனுக்கும் நடுவேயிருக்கிற பெருஞ்சாலையில் குதிரையினின்று தள்ளுண்டு விழுந்து அபாயமரணமடைந்தார்.

---

செப்தெம்பர்மீ நாள் 30. ஆவணிமீ 18உ முதல், புரட்டாசிமீ 17உ வரை.

| வாரம். | சாஸ்திர தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | கஅ | உனக்குமுன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன். யாத். 17: 6. |
| செ | 2 | ககூ | கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர். 11. (11. |
| பு | 3 | உ0 | அவர்கள் இடும்புசெய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார். |
| வி | 4 | உக | நீங்கள் எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். 19: 5. |
| வெ | 5 | உஉ | எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். எஸ்றா 1: 3. |
| ச | 6 | உங | கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது. 11. |
| ஞா | 7 | உச | கர்த்தர் அவர்களை மகிழ்ச்சியாக்கினார். 22. |
| தி | 8 | உரு | கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேட்டருளும். சங். 86: 1. |
| செ | 9 | உசு | நான் சிறுமையும் எளிமையுமானவன். 1. |
| பு | 10 | உஎ | என் ஆத்துமாவைக் காத்தருளும். 2. |
| வி | 11 | உஅ | உம்மை நம்பியிருக்கிற உமதடியானை இரட்சியும். 2. |
| வெ | 12 | உகூ | உமது அடியானுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும். 4. |
| ச | 13 | ங0 | ஆண்டவரே நீர் மன்னிக்கிறவராயிருக்கிறீர். 5. |
| ஞா | 14 | க | துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். 7. |
| தி | 15 | உ | உமது வழியை எனக்குப் போதியும். 11. |
| செ | 16 | ங | அவர் கடிந்துகொள்கையில் சோர்ந்துபோகாதே. நீதி. 3: 11. |
| பு | 17 | ச | ஞானத்தைக் கண்டடைகிற மனிதன் பாக்கியவான். 13. |
| வி | 18 | ரு | என் மகனே, மெய்ஞ்ஞானத்தைக் காத்துக்கொள். 21. |
| வெ | 19 | சு | கர்த்தர் உன் நம்பிக்கையாயிருப்பார். 26. |
| ச | 20 | எ | அயலானுக்கு விரோதமாக தீங்கு நினையாதே. 29. |
| ஞா | 21 | அ | என் கரத்தினால் இது உங்களுக்குண்டாகும். ஏசாயா 50: 11. |
| தி | 22 | கூ | கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள். 51: 1. |
| செ | 23 | க0 | கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல்செய்வார். 3. |
| பு | 24 | கக | கர்த்தரிடத்தில் திரும்புங்கள். ஓசியா 14: 2. |
| வி | 25 | கஉ | எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும். 2. |
| வெ | 26 | கங | ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். யோவான் 10: 16. |
| ச | 27 | கச | என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. 27. |
| ஞா | 28 | கரு | புறசாதிகளிலிருந்து நம்மை அழைத்திருக்கிறார். உரோ. 9: 24. |
| தி | 29 | கசு | அவர் நீதியோடே காரியத்தை நிறைவேற்றுவார். 28. |
| செ | 30 | கஎ | நீதியைத் தேடாத புறசாதியார் நீதியை யடைந்தார்கள். 30. |

## விசேஷித்த நாட்கள்.

6. பௌர்ணமி.
7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதின்மூன்றாம் ஞாயிறு.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினான்காம் ஞாயிறு.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினைந்தாம் ஞாயிறு.
21. அமாவாசை.
28. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினாறாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. October. No. 10.

Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 182
Christian Church History. ... ... ... ... ... 184
Notes on Genesis. ... ... ... ... ... ... 187
Pope's Cursing.... ... ... ... ... ... ... 191
The Parables of Christ... ... ... ... ... ... 193
Report of the Bishop's Prize Examination. ... ... 195
Summary of News. ... ... ... ... ... ... 199


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... கஅஉ
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... கஅச
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... கஅஎ
இத்தாலி அரசனுக்கு பாப்புவின் சாபம். ... ... ககூக
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ககூங
அத்தியட்சர் வேதவித்தியா பந்தயப் பரீட்சை. ... ககூரு
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ககூகூ



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்

௰. அக்டோபர்மீ. ௲௮௱௯௰௫.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### யோசுவாவின் அந்தியம்.

யோசுவா அதி. 24.

(தொடர்ச்சி.)

நல்லது, இப்பொழுது விருத்தாப்பியனான வேறொரு போர்ச்சேவகன் பேசுகிறதைக் கேட்போம். அவனைப்போல அத்தனை ஏராளமாய்ச் சண்டைசெய்தவர்கள் வேறொருவருமில்லை. அவைகளெல்லாம் இப்பொழுது முடிந்துபோயின. இந்தப் போர்ச்சேவகனுக்கு யோசுவா என்று பெயர்.

சில விஷயங்களிலே, உலகத்தில் தோன்றின போர்வீரர்களிலெல்லாம் அவன் சிறந்தவன். அவன் செய்த சண்டைகள் தேவனுடைய சண்டைகள். தேவனுடைய சத்துருக்களுக்கு விரோதமாய்ப் போர்செய்து, தேவனுடைய சனங்களுக்கு வாக்குத்தத்த தேசத்தைச் செயித்துப் பகிர்ந்துகொடுக்கும்படி அவன் அனுப்பப்பட்டவன். இதற்கு இருபத்தைந்து வருஷத்துக்குமுன்னே அவன் முதலாவது யுத்தத்துக்குப் புறப்பட்டபொழுது, ஒருநாள் தேவதூதன் ஒருவன் வழியில் அவனுக்குத் தரிசனையாகி, தான் அவனுக்குத் துணை நின்று செயம் அளிப்பேனென்று வாக்கு அருளினான். (யோசு. 5: 13.) அந்தத் தூதன் தேவசுதனே. அவ்வாறே யோசுவாவும் அவன் படையிலுள்ள போர்வீரரும் தேசத்தைச் செயித்துக் கட்டிக்கொள்ளுவோமென்ற பூரண நிச்சயத்தோடு யுத்தத்தை நடத்தினார்கள். அதன்பேரில் செயமடைந்து, சனங்கள் தேசத்தைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு சமாதானத்தோடு சுகமாய்க் குடியிருந்தார்கள். வனாந்தரத்தில் நேரிட்ட வருத்தங்களையும் சஞ்சலங்களையும் அறியாத இளைஞர் இப்பொழுது புருஷரும் ஸ்திரீகளும் ஆகிவிட்டார்கள். ஆகிலும் வனாந்தரத்திலே இஸ்ரவேலர் அலைந்து திரிந்ததையும் அக்காலத்தில் தேவன் அவர்களுக்குக் காண்பித்த மகா இரக்கத்தையும் மூப்பர்கள் அடிக்கடி அவர்களுக்கு விவரித்திருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அவர்களெல்லாருக்குள்ளும் அதிக வயசுசென்றவன் அவர்களுக்கு தளகர்த்தனாயிருந்த யோசுவாதான். அவனுக்கு இப்பொழுது நூற்றுப்பத்து வயசு. அவன் மரிக்கவேண்டிய காலம் சமீபித்துவிட்டது. அதினால் புத்தியும் வீரமுமுள்ள விருத்தாப்பியனான அந்தப் போர்ச்சேவகன் தன் கடைசி வார்த்தைகளைக் கேட்கும்படியாகச் சனங்களை ஓரிடத்திலே கூடிவரச்செய்தான்.



அதோ விஸ்தாரமான சீகேமின் அழகிய பள்ளத்தாக்கிலே அவர்கள் கூடிவந்திருக்கிறதைப் பாருங்கள். அந்தப் பள்ளத்தாக்கு நல்ல மேய்ச்சலால் மூடியிருக்கிறது. ஆடுமாடு முதலிய மிருகசீவன்கள் அங்கங்கே மேய்ந்துகொண்டு நிற்கின்றன. இருபுறங்களிலும் செங்குத்தும் உயரமுமான இரண்டு மலைகள் அமைந்திருக்கின்றன. ஒன்றின் பேர் ஏபால், மற்றது கெரிசீம் மலை. இவ்விடத்திலே சிறிதுகாலத்துக்குமுன் வேதப்பிரமாணத்தை வாசிக்கக் கேட்கும்படி இஸ்ரவேல் கோத்திரத்தார் கூடிவந்திருந்தார்கள். பாதிப்பெயர் கெரிசீம் மலையில் நின்று, தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கிறவர்களுக்கு உண்டாகும் ஆசீர்வாதங்களைக் கூறினார்கள். பாதிப்பெயர் ஏபால் மீது நின்று கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் சாபங்களைக் கூறினார்கள்.

அந்தக் கூட்டம் மகா சனபத்தியாயிருந்திருக்கும். லேவியர் நியாயப்பிரமாணத்தை பயபக்தியாய் வாசிக்கிற சத்தமும், இப்புறத்திலிருந்தும் அப்புறத்திலிருந்தும் சனங்கள் மாறிமாறி உரத்து ஆமென் என்கிற சத்தமும் இப்பொழுது கேட்கிறதுபோலிருக்கிறதே. அன்று கூடிவந்திருந்த சனங்கள் அதை ஒருபொழுதாகிலும் மறப்பார்களோ! இன்று அவர்கள் வயல்வெளியேயும் மலைக்கணவாய்கள் வழியாயும் கூட்டம் கூட்டமாக யோசுவா குறித்த இடத்துக்கு வரும்போதும், அந்த வார்த்தைகளையே திரும்பவும் கேட்கிறதுபோலும், அவைகளைக் கைக்கொண்டோமோ இல்லையோவென்று ஒருவரையொருவர் விசாரித்துக்கொள்ளுகிறதுபோலும் காணப்படுகிறார்கள்.

நல்லது யோசுவா அவர்களுக்கு என்ன சொல்லப்போகிறான்? இந்த இருபத்துநாலாம் அதிகாரத்தில் அவன் சொன்ன வார்த்தைகள் அடங்கியிருக்கிறது. தேவனுடைய பராமரிப்பையும் அன்பையும் விளக்கிய பழைய கதையை மறுபடியும் ஒருவிசை சொல்லுகிறான். ஆபிரகாம் விக்கிரகங்களுள்ள தேசத்தைவிட்டு கானானில் வந்து குடியிருந்ததையும், ஈசாக்கை அவன் அருளப்பெற்றதையும், யாக்கோபும் ஏசாவும் பிறந்து வளர்ந்ததையும், யாக்கோபின் குமாரர் ஆச்சரியமானவிதமாய் எகிப்துதேசத்துக்குப்போனதையும், மோசே ஆரோன் எனபவர்களால் சனங்கள் விடுதலையடைந்ததையும், அவர்களுக்காக சிவப்புக்கடல் இரண்டாய்ப் பிரிக்கப்பட்டதையும், அவர்கள் சத்துருக்கள் ஒருவர் ஒருவராய்ச் செயிக்கப்பட்டதையும், யோர்தானை அற்புதமாய்க் கடந்ததையும், அப்புறம் ஏமோரியர் பெரிசியர்முதலிய சாதியாரையெல்லாம் ஒருவர் ஒருவராகச் செயித்துக் கீழ்ப்படுத்திக்கொண்டதையும், கடைசியில் இஸ்ரவேலர் காணியாட்சிகள் பெற்று இளைப்பாறினதுவரையுமுள்ள முக்கிய விசேஷங்களையெல்லாம் அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தான்.

மகத்தான இந்தச் சரித்திரத்திலடங்கிய விசேஷங்களை மாட்சிமை தங்கிய அவர்கள் தளகர்த்தன் ஒவ்வொன்றாய் விவரித்துக்கொண்டு வரும்போது, அந்தச் சனங்களுடைய இருதயங்கள் எவ்வளவாய்ப் பூரித்திருக்கும். அவர்களில் யாராவது அதைக் கேளாதபடிக்குக் கவனத்தாழ்ச்சியாயிருந்திருப்பார்களோ? யோசுவாவின் பிரசங்கம் இம்மட்டில் முடிந்துபோகவில்லை. அதை முடிக்குமுன் இஸ்ரவேலருக்கு நன்மையும் பிரயோசனமுமான வேறொரு காரியமுஞ் சொன்னான். அது நமக்கும் பிரயோசனமுள்ளதுதான். அதைச் சற்றுக் கவனிப்போமாக.

"ஆகையால் கர்த்தருக்குப் பயப்படுங்கள்" என்று சொல்லுகிறான். என்ன! அந்தச் சனத்துக்கும் இப்பேர்ப்பட்ட புத்திசொல்லவேண்டி

யது அவசியமா? அவர்கள் நிமித்தம் இப்பேர்ப்பட்ட மகத்தான காரியங்களை நடப்பித்த தேவன்பேரிலுள்ள அன்பினுல் அவர்கள் ஒவ்வொருவர் இருதயமும் நிறைந்திருக்கமாட்டாதா! அந்தச் சனங்களுடைய காரியத்தை யோசுவா திட்டமாய் அறிந்திருந்தான். தேவன் தங்களுக்குக் காண்பித்திருந்த பெரிய இரக்கங்களையெல்லாம் அவர்கள் அதிசீக்கிரம் மறந்துபோய் நன்றிகெட்டவர்களாகி அவருக்கு துரோகஞ்செய்வார்களென்பதை அவன் நன்றாய் அறிந்திருந்தான்.

நாமும் இஸ்ரவேலரைப்போல நடக்கிறதில்லையா? தேவன் உங்களுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லையா? பிசகுதான். அவர் உங்களுக்காக ஏமோரியரையும் எபூசியரையும் செயிக்கவில்லை. கரைபுரண்டு ஓடின நதியைக் கடக்கச் செய்யவுமில்லை. என்றாலும் உங்களுக்கும் எத்தனையோ ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறார். தினந்தினம் உங்களுக்கு வேண்டிய நன்மைகளை யருளிச்செய்து ஓய்வுநாடோறும் அநேக கிருபையின் எத்தனங்களைக் கட்டளையிட்டுவருகிறதுமல்லாமல், அவர் தமது ஏகசுதனை உங்களுக்காகப் பாடுபட்டுமரிக்கும்படி ஒப்புக்கொடுத்திருக்கிறாரே. இவைகளையெல்லாம் நீங்கள் நினைக்கவேண்டிய பிரகாரம் நினைத்து, "தேவனே இவ்வளவு பெரிய நன்மைகளை எனக்கு அனுக்கிரகித்திருப்பதற்காக, நான் என்னையே உமக்கு காணிக்கையாகப் படைக்கிறேன்" என்று மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறீர்களா!

---

# Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 15. அதிகாரம்.

சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப் போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—சர்த்தாகோ பட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வெலீரியன் இராயனுல் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.

(தொடர்ச்சி.)

---

ஈஸ்தர் பண்டிகை கழிந்தவுடனே கண்காணியார் பட்டணத்துக்குத் திரும்பிவந்தார். அவர் வந்துசேர்ந்து முதலாவது நடப்பித்த காரியம் என்னவென்றால், மறுதலித்தவர்கள் விஷயத்தைப்பற்றி ஒரு பிரபந்தம் எழுதிப்பிரசுரம் செய்ததும் அதுநிமித்தம் பல கண்காணிமார்களை அழைப்பித்து ஒரு சங்கங் கூடினதுமேயாம். விக்கிரகங்களுக்கு பலியிட்டவர்கள் சிறிதுகாலம் குறிக்கப்பட்ட பிரகாரம் தபசுசெய்யவேண்டுமென்றும், அதிகாரிகளிடத்தில் உறுதிச்சீட்டு மாத்திரம் பெற்றுக்கொண்டவர்கள் உடனே சபையின் ஐக்கியத்தைச் சேர்ந்துகொள்ளலாமென்றும் மேற்படி சங்கத்தார் தீர்ப்புச்செய்து, மேற்காட்டிய பிரி



வினைக்குக் காரணமாயிருந்தவர்களைச் சபைக்குப் புறம்பாக்கினார்கள்.

கர்த்தாகோ பட்டணத்தில் இந்தச் சங்கம் கூடுகையில், கொர்நேலியு என்பவர் ரோமைக் கண்காணியாராக நியமனம்பெற்ற செய்தி அவ்விடம் வந்து எட்டியது. தேசியு இராயன் படையெடுத்து வந்த கொத்தரைத் தடுக்கப்போயிருந்த வேளையில் ரோமைக் குருக்கள்மார் மேற்படி காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள அவகாசங் கிடைத்தது. ஆயினும் கர்த்தாகோ பட்டணத்தில் ஆரம்பமான கீழ்ப்படியாமையாகிய துர்க்குணம் ரோமைபுரிவரையும் பரவிவிட்டது. எப்படியென்றால் நோவேத்து என்பவன் ரோமைபுரிக்குப்போயிருந்தான். அங்கிருக்கையில் தன்னைப்போல ஒழுங்கீனமாய் நடக்கத்தக்க ஒருவனைக் கண்டு அவனோடு உறவுகொண்டான். இவன் முன் அவ்விடத்தில் பிரஸ்பிற்றராக இருந்தவன், நோவேஷன் என்று பெயர். விசுவாசத்தை மறுதலித்தநிமித்தம், கண்காணியாரில்லாத காலத்திலே குருமார்களால் சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவன்.

ரோமாபுரியிலும் கர்த்தாகோ பட்டணத்திலும் தோன்றின பிரிவினைக்காரர்களுக்குத் தலைவர்களாயிருந்த இவ்விருவருடைய பெயர் ஒற்றுமையினுல் கொஞ்சங் குழப்பம் நேரிட்டிருக்கிறது. நோவேத்து என்றும் நோவேஷன் என்றும் வெவ்வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டிருப்பது ஒருவன் தான் என்றும் அவன் ஒருவனே குறித்த இரண்டு பட்டணங்களிலும் சபையின் அதிகாரிகளை யெதிர்த்து ஒழுங்கீனமாய் நடந்தவனென்றும பலர் சாதிக்கிறதுண்டு. இது தப்பெண்ணம் என்பதற்குச் சந்தேகமேயில்லை. நோவேஷன் என்று பெயர்கொண்டவன் ஒருவன் ரோமாபுரியில் பிரஸ்பிற்றராக இருந்தானென்றும் அவனும் நோவேத்து என்பவனைப்போல சபையில் பிரிவினையுண்டுபண்ணினனென்றும், அவனைப் பார்க்க அதிகப் பிரஸ்தாபமடைந்திருந்தானென்றும் நாளது வரையுமிருக்கிற சிப்பிரியன் என்பவரின் நிருபங்களைக்கொண்டு திட்டமாய் ரூபகாரப்படுத்தலாம். நோவேஷன் என்பவன் கொர்நேலியு கண்காணியாராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து, இத்தாலியாவின் தூரமான இடங்களிலுள்ள படிப்பும் புத்தியுமில்லாத மூன்று கண்காணிமாரை வரவழைத்து நயப்படுத்தி, கொர்நேலியு என்பவருக்கு எதிரியாகத் தன்னையுங் கண்காணியாக ஏற்படுத்துவித்துக்கொண்டான். ஒரே சபையில் ஏககாலத்தில் இரண்டு கண்காணிமாரிருப்பது இதுவரையும் ஒருநாளுமில்லாத காரியம். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ஒருவிசை மாத்திரம் எருசலேமில் நார்சிசு என்ற கண்காணியாருக்கு உதவியாக அலெக்சாந்தர் என்பவர் நியமிக்கப்பட்டதுண்டு. ஆகிலும் இது காரியத்தில் நார்சிசு என்பவர் வயசுசென்றவராயிருந்ததினுலே, தமது கடமைகளை நிறைவேற்றக் கூடாதவராயிருந்தார். ஆகையால் அவருக்கு உதவியாக ஒருவரை நியமித்ததில் சபையாரும் அவரும் ஏகசம்மதமாய்ச் செய்திருப்பார்களென்று நிதானிக்கத்தக்கது. மேற்படி நடபடிக்கை நூதனமானதாயிருந்தபோதிலும், சர்வ சம்மதமாயும் சபையின் அனுகூலத்துக்கு ஏதுவாயும் நடந்தது. கொர்நேலியு நோவேஷன் என்பவர்களுடைய விஷயத்திலோவென்றால், கொர்நேலியு ஒழுங்குப்படி நியமிக்கப்பட்டவருயும், நோவேஷன் சிலருடைய அனுமதிபெற்று எதிராளியாக தன்னை யேற்படுத்திக்கொண்டவனுயுமிருந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் இந்தப் பிரிவினை பரவிப்போகாமல் தடுப்பது அவசியந்தானே. ஆகையால் கொர்நேலியுவும் அவனைச் சேர்ந்த குருக்கள்மாரும், கொர்நேலியு கண்காணியாக நியமிக்கப்பட்டதைக் குறித்து கர்த்தாகோ பட்டணத்துக்குச் செய்தி யனுப்பி

னார்கள். சிப்பிரியன் கண்காணியார் காரியத்தைத் திட்டமாய் விசாரித்து கொர்நேலியு நியாயப்படி ஏற்படுத்தப்பட்டவன்தானென்று நிச்சயித்துக்கொண்டார். அப்புறம் ரோமைக் கண்காணியார் ஒரு சங்கம் கூடிவரச்செய்தார். அதற்கு அறுபது கண்காணிமார்களும் அநேக பிரஸ்பிற்றர்களும் வந்திருந்தார்கள். மேற்படி சங்கத்தார் நோவேஷனுடைய நடபடிக்கைகளைக் கண்டித்துத் தள்ளி, மறுதலித்தவர்களைக் குறித்து கர்த்தாகோ பட்டணத்திற் கூடின சங்கத்தார் செய்திருந்த தீர்ப்பை அங்கீகரித்துக்கொண்டதோடு, கண்காணிமார்களிலாவது குருக்கள்மார்களிலாவது யாராயினும மறுதலிக்கிற பட்சத்தில் அவர்கள் சாதாரண கிறிஸ்தவர்களாக சபையிற் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமேயன்றி, அவர்கள் தங்கள் உத்தியோகங்களை நடப்பிக்கவேபடாதென்றும் கூட்டிக்கொண்டார்கள். இந்தத் தீர்ப்புக்கு நகல்கள் எழுதி தூரமான சபைகளுக்கும் அனுப்பினார்கள். அப்படியே சிப்பிரியன் என்பவரும் சபையில் ஒருமைப்பாடு உண்டாகத்தக்கதாக, கொர்நேலியு என்பவர் ரோமைக் கண்காணியாராக நியமகமானதை ஆப்பிரிக்காவிலுள்ள சபைகளுக்கெல்லாம் தெரியப்படுத்தினதுமல்லாமல், சபையின் ஐக்கியத்தைக்குறித்து ஒரு பிரபந்தமும் எழுதிப் பிரசுரஞ்செய்தார்.

துன்பகாலத்தில் மறுதலித்தவர்களை பலவிடங்களிலும் மகா கண்டிதமாய் நடத்த ஏவப்பட்டபடியால், அவர்கள் விஷயத்தில் சபையின் அதிகாரிகளெல்லாம் ஒன்றுபோல நடப்பிக்கிறது மிகவும் அவசியம். பாரியான குற்றங்களைச் செய்தவர்களுக்கு மன்னிப்பில்லையென்று மொந்தேனிய வகுப்பார் போதித்துவந்தார்களென்பது ஞாபகமிருக்குமே. அதுபோல மறுதலித்த கிறிஸ்தவர்களுக்கு மன்னிக்கிறதற்கு சபைக்கு அதிகாரமில்லையென்று சாதித்தவர்களும் அநேகராயிருந்தார்கள். நோவேஷன் என்பவனும் இந்த உபதேசத்தைக் கண்டிப்பாய் அனுசரித்துக்கொண்டான். கொர்நேலியு என்பவருக்கு எதிர்த்தனம் பாராட்டவேண்டுமென்ற பிரியமே இப்படிச்செய்ய அவனை ஏவினதாகத் தோன்றுகிறது. அவன் பிரிவினை உண்டுபண்ணுவதற்குக் காரணனாயிருந்த நோவேத்து என்பவன், மறுதலித்தவர்களை எச்சரிப்போடு சபையில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சிப்பிரியன் கற்பித்ததினிமித்தம் அவனை யெதிர்க்கும் நோக்கமாய் நோவேஷன் போதித்ததற்கு முற்றும் விரோதமாக, மறுதலித்தவர்களைத் தாராளமாய் ஏற்றுக்கொண்டான். ஆகையால் இவ்விரண்டு பிரிவினைக்காரரும் சபையின் அதிகாரிகளை யெதிர்க்கும் நோக்கமாகவே மறுதலித்தவர்கள் விஷயத்தில் நேர் விரோதமான கொள்கைகளைச் சாதித்தார்களென்பது பரிஷ்காரமாய் விளங்கும். இந்தக் காலந்தொடங்கி சபையில் ஒரு பிரிவாருக்கு நோவேஷன் கொள்கைக்காரர் என்று பெயர் வழங்கிவந்தது. அகோரமான பாவங்களும் அப்படியே துன்பகாலத்தில் மறுதலிப்பதும் மன்னிக்கப்படவேமாட்டாது என்பது இந்தப் பிரிவினைக்காரருடைய கொள்கை. குற்றஞ்செய்தவன் எவ்வளவு பட்சாதாபங் காண்பித்தாலும், சபையார் என்ன தபசுசெய்யும்படி அவனுக்குக் கற்பித்தாலும், இவர்கள் அபிப்பிராயப்படி, அவர்கள் சபையின் ஐக்கியத்தற் சேரப் பாத்திரரேயல்லவாம். இது காரியத்தில் நோவேஷியர் பொதுவான சபையாருடைய கொள்கைக்கு விரோதமாய்ப் போதித்துவந்தபோதிலும், அவர்கள் பதிதரென்று அடிக்கடி சொல்லப்பட்டுவந்தாலும், விசுவாசத்துக்குரிய முக்கிய உபதேசங்களிலே அவர்கள் தவறவில்லை. நோவேஷன் தானே கல்விமானாயிருந்தபடியால் திரித்துவத்தைப்பற்றி ஒரு



நூல் எழுதிப் பிரசுரஞ்செய்தான். அந்த நூல் இன்னமிருக்கிறது. அதில், அக்காலத்தில் மேற்படி இரகசியத்தைக்குறித்து உண்டாயிருந்த பல தப்பறைகளைக் கண்டித்திருக்கிறான். சபையில் அமைந்திருந்த முறைமைகளையே அவனுடைய வகையராக்களும் அனுசரித்துக்கொண்டார்கள். இவர்கள் பிரிவினைக்காரரானபடியால் இதுவரையிலும் சபையில் நிலைத்திருந்த ஐக்கியம் குலைந்தது. ஆகிலும் சபையின் புறம்பான ஏற்பாடுகளில் இவர்கள் வேறுபாடுசெய்யவேயில்லை. அதினால் பிற்காலங்களில நோவேஷன் கண்காணிமார்களிருந்ததாகவும் வாசிக்கிறோம். இவர்களும் ஒரோர்வேளை சபையின் கண்காணிமார்களோடு சேர்ந்து சங்கமாகக் கூடி சபைக்குரிய பல முக்கியமான விஷயங்களைப் பேசித் தீர்மானிக்கிறதற்கு இடம்பெற்றதாகவும் விளங்குகிறது.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௨௪. அதிகாரம்.

### ஈசாக்கு ரெபேக்காளை விவாகம்பண்ணினது.

1. சாராள் மரித்து (3) ௵மானபின் இந்தக் காரியங்கள் நடந்தது. இப்போது ஈசாக்குக்கு (40) வயது. ஆபிரகாமுக்கு (140) வயது. ஈசாக்கினாலே திரள் சாதி உண்டாகுமென்ற விசேஷமான வாக்குத்தத்தமிருந்தும் அவனுக்கு இவ்வளவுகாலமாய்க் கலியாணம்பண்ணாமலிருந்தது ஆச்சரியம். இது ஆறி அமர்ந்து செய்யவேண்டிய காரியம் என்பதை எல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டும்.

2. "வயதில் மூத்தவன்." "தமஸ்கு ஊரானாகிய எலியேசர்" இவன் தான் என்பதற்குச் சந்தேகமில்லை. (15: 2.) ஆபிரகாம் இவனைக் குறித்து: "என் வீட்டு விசாரணைக் கர்த்தனாய் இருக்கிறான்" என்று சொல்லி ஏறக்குறைய (60) ௵ ஆயிற்று. அதினாலே இவன் வயது சென்றவன் என்பது வெளியாகிறது. விசேஷித்த பத்தியும் புத்தியுமுள்ளவனாயுமிருந்தான். இவனோடு மற்றும் வேலைக்காரரும் மெசொப்பொத்தாமியாவுக்குப் போனார்கள். 32: 69.

3. கானானியர் விக்கிரகாராதனைக்காரரும் அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்களுமானதினாலே அவர்களுக்குள் பெண்கொள்ளவில்லை. ஆபிரகாமின் இனத்தார் ஒருவாறு மெய்த்தேவனைத் தொழுதுகொண்டு வந்தார்கள். அவன் தன் மகனுக்குப் பெண்கொள்ள யோசித்ததில் பொருளாசை, வீண்பெருமை, உலக ஆடம்பரம் இப்படிப்பட்டது ஒன்றையும் பாராமல் தேவபக்தியையே நாடிச்செய்தான்.

4. கையை தொடையின் கீழ் வைப்பது தாழ்மைக்கும் உண்மைக்கும் உறுதியான செய்கையாயிருக்கலாம்.

10. "மெசொப்பொத்தாமியா" (இருநதியின் ஆராம்) திகிரீஸ் ஐபிராத்து நதிகளுக்கு இடையிலுள்ள தேசம். 10: 22 வா.

11. "நாகோருடைய ஊரில்" அதாவது ஆரானில். 11: 31. 29: 4 வியா.

12—14. விவாகமானது இம்மைக்கும் மறுமைக்கும் அடுத்தது. ஆத்துமாவுக்குரிய காரியங்களையும் பற்றியது. ஆனதால் விவேகத்தோடும் கவலையோடும் செய்வது அகத்தியம். "ஐந்து லட்சணமுடைய பெண்" என்று வழக்கமாய்ச் சொல்லுவார்களே. அதென்னவென்று தெரியுமா? (1) நற்குணம். நீதிமொழி 31: 10. (2) ஜாக்கிரதை. நீதி. 31: 11—25. (3) தர்மசிந்தை. நீதி. 31: 20. (4) அடக்கம். நீதி. 31: 26. (5) எல்லாவற்றுக்கும்மேலாக தேவபக்தி. நீதி. 31: 30.

22. எல்லாங் கூடி (6) அவுன்ஸ் அல்லது (36) களஞ்சு தங்கமிருக்கும்.

28. ரெபெக்காளுடைய தகப்பன் மரித்துப்போயிருக்கவேண்டுமென்று சரித்திர நடையினால் விளங்கும், பெத்துவேல் என்ற பேர் வருவது லாபானுடைய தம்பி. 50: 53. 22: 20—24.

படிப்பினை.

விவாகமானது யாவருக்குள்ளும் கனம்பொருந்தியதாயிருக்கக்கடவது. கர்த்தரை முன்னிட்டுச் செய்கிற விவாகம ஆசீர்வாதமாயிருக்கும். 2 ம் அதிகாரம் படிப்பினை வாசிக்கவும்.

---

## உரு. அதிகாரம்.

ஆபிரகாம் மரித்தது. ஏசா யாக்கோபு பிறந்தது.

---

1—4. சாராள் மரிக்கையில் ஆபிரகாமுக்கு (137) வயது. அவள் மரித்தபின்னும் (38) வருஷம் ஜீவித்திருக்கிறான். ஆகையால் கேத்தூராளின் பிள்ளைகள் அவன் உயிரோடிருக்கும்போதே நல்ல பிராயமுள்ளவர்களாகி, அனுப்பிவிடப்பட்டு, அவரவர் ஸ்தானத்திற் போய்க் குடியேறினார்கள். இவர்கள் பிற்காலத்தில் இஸ்மவேலரோடு சேர்க்கையானார்கள்.

"மீதியான்," மோசேயின் மாமனான எத்திரோ இவன் சந்ததியான். யாத். 2: 15—22. 18: 1—4. எண். 22: 4. 25: 17, 18. 31: 2, 8. நியா 6: 7, 8.

யோபும் அவன் சிநேகிதரில் சிலரும் கேத்தூராளின் மற்றப் பிள்ளைகள் சந்ததியிலாவது, இஸ்மவேல் அல்லது ஏசாவின் சந்ததியிலாவது பிறந்திருக்கவேண்டும். யோபு 2: 11.

"சேபா" 1 இரா. 10: 1. யோபு 6: 19. சங். 72: 10. "தேதான்" எரே. 25: 23. 49: 8. எசே. 25: 13. 27: 20. "அசூரீம்" எசே. 27: 6. "ஏப்பா" ஏசா. 60: 6.

5, 6. ஈசாக்கு எக்காலத்து விசுவாசிகளுக்கும் குறிப்பு. தேவன் தமது பிள்ளைகளுக்கு நிலையான ஆஸ்தியை எல்லாம் சுதந்தர பாத்தியமாய்க் கொடுத்துவருகிறார். "எல்லாம் உங்களுடையதே." உலகத்தாருக்கு அவர் இம்மையில் பல "நன்கொடைகளைக்" கொடுக்கிறது அவருடைய நீதிக்கும் இரக்கத்திற்கும் விகற்பமல்ல.

7. "தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்." 49: 33. எண். 20: 24. 37: 13. நியா. 2: 10. நடபடி 13: 36. இந்த வாக்கியங்களில் உத்தமரைக் குறித்தே இப்படிச் சொல்லியிருக்கிறது. ஏசா யாக்கோபு பிறந்து 15 வருஷமானபின்பு ஆபிரகாம் மரித்திருந்தும், சம்பந்தத்துக்காக அவன் சரித்திரத்தை இவ்விடத்தில் முடித்துக் காட்டியிருக்கிறது. சரியாய்



(100) வருஷ காலவில் பரதேசியாய் சஞ்சரித்து பூரண சமாதானத்தோடு மரித்தான்.

9, 10. இஸ்மவேலும் ஈசாக்கும் ஒருவாறு சிநேகபாந்தமாயிருந்தார்களென்று தோன்றும்.

18. இஸ்மவேலர் யூதேயாவுக்குக் கிழக்கும் தென்கிழக்குமாக
எகிப்தின் எல்லைமுதல் ஐபிராத்து நதிவரையும் குடியேறியிருந்தார்
கள். எகிப்திலிருந்து அசீரியாவுக்குப்போகும் நேர்பாதை ஒருவேளை
அவர்கள் தேசத்துக்கு ஊடே சென்றிருக்கும்.

22. "மோதிக்கொண்டிருந்தன." ஏசாவும் யாக்கோபும், ஏதோ
மியரும் இஸ்ரவேலரும் ஒருவருக்கொருவர் முதன்மைக்காகப் போரா
டினதற்குக் குறிப்பு. இது: உலகத்தாருக்கும் திருச்சபையாருக்கும்,
சர்ப்பத்தின் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும், மாம்சத்துக்கும் ஆவிக்
கும் நடக்கும் ஞானபோராட்டத்துக்கும் அடையாளமாயிருந்தது.
ஆதி. 3: 15 வியா.

"போனாள்" இதினாலே தேவனை ஆராதிக்கிற விசேஷித்த இடம்
அக்காலத்திலுமிருந்ததென்று அநுமானமாய் விளங்கும்.

23. "மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்." தாவீதின் கா
லத்திலும், அதிலும் அதிகமாய்ப் பிற்காலத்திலும் ஏசாவின் சந்ததியார்
யாக்கோபின் சந்ததியாருக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள்.

25. "ஏசா" என்பதற்கு உருவாக்கப்பட்டவன் என்றர்த்தம்.

26. "குதிங்காலைப் பிடித்துக்கொண்டு" யாக்கோபின் பின்
நடபடிக்கு நல்ல குறிப்பு. ஏசாவின் குதிங்காலைத் தட்டி விழுத்தி அவன்
மேலே ஏறியிருந்துகொள்ளுகிறவன்போல் புறப்பட்டான். இது முகாந்
தரமாய் அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள். யாக்கோபு என்
பதற்குத் தட்டிவிழுத்துகிறவன் அல்லது குதிங்காலில் எத்துகிறவன்
என்றர்த்தம்.

27. ஏசா காட்டுமிருகங்களை வேட்டையாடி, வரவர நிம்ரோதைப்
போல யுத்தவீரனும் வெற்றிவேந்தனுமானான். அப்படியே யாக்கோபை
எதிர்க்க (400) பேரோடு வந்தான். யாக்கோபு "குணசாலியும்" சுறு
சுறுப்புள்ளவனுமாயிருந்து தன் ஜீவகாலமெல்லாம் மந்தை மேய்த்து
வந்தான்.

30. "சிவப்பு" இதையிட்டே ஏசாவுக்கு ஏதோம் என்ற பேர்
உண்டாயிற்று. ஏதோம் என்பது கிட்டத்தட்ட ஆதாம் என்ற வார்த்
தைக்குச் சரி. அர்த்தம் சிவப்பு.

31. "சேஷ்ட புத்திரபாகம்" கானான்தேசத்தையும் முக்கிய
மாய் மேசியாவையும் குறித்து தேவன் அருளியிருந்த வாக்குத்தத்தங்
களும், அவற்றுக்குரிய ஞானநன்மைகளும் இதில் அடங்கியிருந்தது.
இதின் அருமை யாக்கோபுக்கு நன்றாய்த் தெரியும்.

32. ஏசா உள்ளபடி சாகத்தக்க பசியாயிருந்ததாக நினைக்கவேண்
டியதில்லை. வேட்டைக்குப்போனதில் இளைத்துப்போய் பசியோடும்
ஆயாசத்தோடும் வந்து சேர்ந்தான். ஈசாக்கு வசம் வேறே போசன
மில்லை என்றல்ல, அவன் வீட்டுக்குட்போனவுடனே இவன் கண்டது
அந்தக் கூழ்தான். அதினாலே அதின்பேரில் இச்சைப்பட்டு என்னத்தைக்
கொடுத்தாலும், விற்றாலும், அதை வாங்கிச் சாப்பிட்டுப் போட
வேண்டும் என்று தீர்மானித்துப்போட்டான். "இதோ நான் சாகப்
போகிறேனே" என்று அவன் சொன்னதில்: கானான்தேசத்தையும் மற்
றும் ஆசீர்வாதங்களையும் நான் ஒருக்காலும் சுதந்தரிக்கப்போகிறதில்
லை! நான் செத்தபின்பு அவைகள் யாருக்கிருந்தாலென்ன என்ற அர்த்த

மாகக் காணப்படுகிறது. இதையிட்டே அப்போஸ்தலன் அவனை "சீர்கெட்டவன்" என்கிறார்.

படிப்பினை.

போசனவிஷயமாய் உலகத்தில் நடந்துவருகிற கேடு மிகுதி. வயிற்றை நோக்கினவன் பெரிய மனுஷனாகப்போகிறதில்லை. ஏசா சற்கால இன்பத்தை நாடி "ஒரேவேளைப் போசனத்துக்காக தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டான்." இப்படிப்பட்ட ஏசாக்களை இப்பொழுதும் காணலாம். தெய்வத்தை இரண்டாவது காரியமாக மதித்து நடக்கிறவர்களெல்லாரும் இப்படிப்பட்டவர்கள்தான். அநேகர் பணம், பொருள் இவைகளின்பேரில் ஆசைப்பட்டும், அநேகர் பெருமையைத் தேடியும்; அநேகர் பேருண்டி, குடி, துர்இச்சைமுதலான சிற்றின்பத்தை நாடியும், தங்கள் அருமையான காலம், மனம் புத்தி சித்தம் எல்லாம் சிலவேளை தங்கள் உயிரையுங்கூட அதற்கு இரையாக்கிவருகிறார்கள். இவர்கள் அந்த ஏசாவைப்போல ஒரேவேளை போசனத்துக்காக தங்கள் ஆத்துமாவை விற்றுப்போட்டவர்கள்!

## ௨௯. அதிகாரம்.

### ஈசாக்கு பொய்சொன்னது.

1. ஆபிரகாம் கேராரிலே சஞ்சரித்தது ஈசாக்கு பிறந்ததற்குச் சற்றுமுன்னாகவும், அவன் அபிமெலேக்குடன் உடன்படிக்கைசெய்ததற்குச் சற்றுப்பின்னாகவுமிருந்தது. ஏசா, யாக்கோபு பிறந்தபோது ஈசாக்குக்கு (60) வயது. அந்தப் பிள்ளைகள் பெரியவர்களானதாக முந்தின அதிகாரத்திற் சொல்லியிருக்கிறது. ஏசா விவாகம்பண்ணும்போது ஈசாக்குக்கு (100) வயது. 34 வா. ஆகையால் இந்த அதிகாரத்திலுள்ள சங்கதி: தேவன் முந்தி ஆபிராமோடு உடன்படிக்கைசெய்ததற்கு (90) வருஷத்துக்குமேல் நடந்திருக்கவேண்டும்.

"அபிமெலேக்கு" என்பது பெலிஸ்தருடைய இராசாக்களுக்குப் பட்டப்பேர். இவன், ஆபிரகாம் உடன்படிக்கைசெய்த அபிமெலேக்குக்குப் பின் பட்டத்துக்கு வந்தவன்.

2—5. 22: அதி— படிப்பினை பார். "நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்" என்பது மெய்யே.

7. தேவஉத்தரவினாலே இவ்விடத்துக்கு வந்து அவர் ஆதரவுக்குள்ளிருக்கிற இவன் இந்தப் பொய்சொல்ல யாதொரு போக்கிருந்ததில்லை. 12: 10—20. 28:

17. இந்தப் பள்ளத்தாக்கு அபிமெலேக்குடைய இராச்சியத்தின் எல்லையிலிருந்தது.

20. "ஏசேக்கு" தர்க்கம் என்றர்த்தம்.

21. "சித்னா" (விரோதம்) இந்த வார்த்தை மூலத்திலிருந்து, எதிரி என்றர்த்தமுள்ள சாத்தான் என்ற வார்த்தை உண்டானது.

22. "ரெகொபோத்து" (இடம்) சமாதான குணத்தை விரும்புவது எத்தனை நேர்த்தி. 23. 21: 14, 31.

24. பெலிஸ்தருடைய விரோதத்துக்கு பயப்படாமலிருக்கும்படி.

26. "பிகோல்" பெலிஸ்தருக்குள் மேன்மையைக்குறித்த ஒரு பட்டப்பேர் என்று தோன்றுகிறது. ஏனென்றால் 21: 22 ல் சொல்லிய பிகோல் இதற்குள்ளாக மரித்துப்போயிருக்கவேண்டும்.



29—31. பெலிஸ்தர் வஞ்சகமும் அநியாயமுமாய் நடந்திருக்க ஒழுங்குள்ளவர்கள்போல் பேசுகிறார்கள். ஈசாக்கு சமாதானத்தை நாடி உடன்பட்டான்.

33. சேபா என்றால் ஆணை.

35. "மனநோவாயிருந்தார்கள்." சண்டைபண்ணினார்கள்.

படிப்பினை.

பாலுந் தேனும் ஓடுகிற தேசத்திலும் பஞ்சமுண்டானது. ஐசுவரியவான் வீட்டிலும் பசியிருக்கும். பேர்போன விசுவாசிகளும் அவிசுவாசத்தைக் காட்டினார்கள். அவனவன் ஏதேதிற் பேரெடுப்பாயிருக்கிறானோ ஏதேதை அதிகமாய் வாஞ்சிக்கிறானோ, அதுவே அவனுக்குச் சோதனையும் கண்ணியுமாகிறது. கிறிஸ்துநாதரே நமக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருந்தால் மற்றக் காரியங்களெல்லாம் சீராய் வரும்.

## The Pope's Curse.

## உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.

விக்தர் இம்மானுவேல் அரசன் பாப்புவின் இராச்சியத்தை 1871 ம் வருஷத்தில் கட்டிக்கொண்டபோது, அவர்பேரில் பாப்பானவர் போட்ட நித்திய சாபம்.

சருவவல்லமையுள்ள தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் அதிகாரத்தினாலும்; பரிசுத்த கனோன், நம்முடைய இரட்சகரின் தாயும் அவரை வளர்த்தவளுமாகிய கன்னிமரியாள், விண்ணுலகின் புனிதாகிய தூதர்கள், பிரதான தூதர்கள், ஆசனங்கள், கர்த்தத்துவங்கள், வல்லமைகள், கேருபீன்கள், சேராபீன்கள் அதிகாரத்தினாலும்; பரிசுத்த முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர், சுவிசேஷகர்கள் அதிகாரத்தினாலும்; பரிசுத்த ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகப் புதியபாட்டைப் பாட பாத்திரவான்களாகக் காணப்பட்டிருக்கிற மாசற்ற தூயவர்கள் அதிகாரத்தினாலும்; பரிசுத்த இரத்தச்சாட்சிகள், பரிசுத்த தைரிய சேனைகள் அதிகாரத்தினாலும்; பரிசுத்த கன்னிகைகள் அதிகாரத்தினாலும்; தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டும் பரிசுத்தமாக்கப்பட்டுமிருக்கிற எல்லா பரிசுத்தவான்கள் அதிகாரத்தினாலும் நாம் அவனைத் திவ்விய சபைக்குப் புறம்பே தள்ளி அவனைச் சபிக்கிறோம். தாத்தான், அபிராமோடும்; கர்த்தராகிய தேவனிடத்தில், நீர் எங்களை விட்டுப்போம், உம்முடைய வழிகள் ஒன்றிலும் எங்களுக்குப் பிரியமில்லை என்று சொல்லுகிறவர்களோடும்; நித்தியகொடிய வேதனைகளால் உபத்திரவப்படும்படி சருவவல்லமையுள்ள தேவனுடைய பரிசுத்த சபையின் வாசற்படியினின்று அவனைப் புறம்பாக்குகிறோம். தீயானது தண்ணீரால் அவிக்கப்படுவதுபோல் அவனுடைய வெளிச்சமும் என்றைக்கும் அவிக்கப்படக்கடவது. அவனைச் சிருஷ்டித்த பிதா அவனைச் சபிப்பாராக. நமக்காகப் பாடுபட்ட குமாரன் அவனைச் சபிப்பாராக. நம்முடைய ஞானஸ்நானத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்தாவியானவர் அவனைச் சபிப்பாராக. நமது இரட்சணியத்துக்காகச் சத்துருக்களை ஜெயிக்கும்படி கிறிஸ்துவானவர் ஏறின பரிசுத்த சிலுவை அவனைச் சபிப்பதாக. பரிசுத்தமுள்ள நித்திய தேவமாதாவா

கிய கன்னிமரியாள் அவனைச் சபிப்பாராக. தூதர்களும், சிரேஷ்ட தூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும், எல்லா வானசேனையும் அவனைச் சபிப்பார்களாக. முன் தூதனாகிய யோவான்ஸ்நானகன், பரிசுத்த யோவான் அப்போஸ்தலன், பரிசுத்த பேதுரு, பரிசுத்த பவுல், பரிசுத்த அந்திரேயா, கிறிஸ்துவின் அப்போஸ்தலர் எல்லாரும் ஏகமாய் அவனைச் சபிப்பார்களாக. தங்களுடைய பிரசங்கத்தால் சமஸ்த உலகத்தையும் குணப்படுத்தின அவருடைய மற்ற சீஷர்களும், நாலு சுவிசேஷகர்களும், தங்களுடைய பரிசுத்த கிரியைகளால் சருவவல்லமையுள்ள தேவனிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொண்டிருக்கிற பரிசுத்தமும் அதிசயமுமுள்ள சேனைகளாகிய இரத்தச்சாட்சிகள் தைரியசேனைகளும் அவனைச் சபிப்பார்களாக. கிறிஸ்துவின் மகிமைக்காக இவ்வுலககாரியங்களை எண்ணுமற்போன பரிசுத்த கன்னிகைகளின் பாட்டுச் சபையார் அவனைச் சபிப்பார்களாக. உலகதோற்றமுதல் நித்திய யுகங்களாய்த் தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா பரிசுத்தவான்களும் அவனைச் சபிப்பார்களாக. வானங்களும், பூமியும், அவைகளிலிருக்கிற பரிசுத்த வஸ்துக்களெல்லாம் அவனைச் சபிப்பதாக. வீட்டிலும், வெளியிலும், பெரும்பாதையிலும், சிற்றடிப்பாதையிலும், வனத்திலும், தண்ணீரிலும், ஆலயத்திலும் எங்கேயிருந்தாலும் சபிக்கப்படக்கடவானாக. பிழைத்தாலும், செத்தாலும், போசனம்பண்ணினாலும், பானம்பண்ணினாலும், உபவாசம்பண்ணினாலும், தாகமாயிருந்தாலும், உறங்கினாலும் தூங்கினாலும், விழித்திருந்தாலும், நடமாடினாலும், நின்றாலும், இருந்தாலும், படுத்திருந்தாலும், வேலைசெய்தாலும், யுத்தம்செய்தாலும், சபிக்கப்படக்கடவானாக. அவனுடைய சரீர அவயவங்கள் எல்லாவற்றிலும் சபிக்கப்படக்கடவானாக. உள்ளேயும் புறம்பேயும் சபிக்கப்படக்கடவன். அவன் ரோமத்திலும் சாபம். மூளையிலும் சாபம். அவன் உச்சந்தலையிலும், சென்னிப்பொருத்திலும நெற்றியிலும், காதிலும் சாபம். கண்புருவத்திலும், கன்னத்திலும், தாடையிலும், நாசியிலும், முன்பல்லிலும், கடைவாய்ப் பல்லிலும், உதட்டிலும், தொண்டையிலும், தோளிலும், மணிக்கட்டிலும், புயத்திலும், கையிலும், கைவிரலிலும் சாபம் இறங்குவதாக. வாயிலும், மார்பிலும், இருதயத்திலும், சரீரத்தின் எல்லாக் குடல்களிலும் சாபம். நரம்பிலும், நாளத்திலும், அரையிலும், முழங்காலிலும், காலிலும், பாதத்திலும், கால்விரலிலும் சாபம். எல்லா மொழிப்பொருத்துகளிலும் அவயவங்களின் சப்தகருவிகளிலும் சாபம். உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரைக்கும் அவனில் ஆரோக்கியம் காணப்படாதேபோவதாக. ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் தமது மகத்துவத்தின் எல்லா மகிமையோடே அவனைச் சபிப்பாராக. வானமும் அதில் அசைவாடுகிற எல்லா வல்லமையும் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனைச் சபித்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதாக. ஆமன் அப்படியே யாகக்கடவது. ஆமன்.

மேலே காட்டிய சாபம் ஒரு அங்கிலேய சமாசார பத்திரிகையிலிருந்து பேர்த்தெழுதப்பட்டது. இதை வாசிக்கிறவர்களே! "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம்பண்ணுங்கள்" என்று அன்புள்ள இரட்சகர் திருவாய்மலர்ந்தருளிய வசனம பாப்புவின் குணத்துக்கு எவ்வளவு விரோதமாயிருக்கிறது என்று பாருங்கள்.



"அடைக்கலான்குருவி அலைந்துபோவதுபோலும், தகைவிலான் குருவி பறந்துபோவதுபோலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது."

---

The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

## XIII. பத்துக் கன்னிகைகள்.

மத்தேயு 25: 1—13.

(தொடர்ச்சி.)

நடுஇராத்திரியிலே, அப்போதுதான் இதோ மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தமுண்டாயிற்று. இது முன்னே ஓடுகிறவர்களாலேயாவது சந்தோஷங் கொண்டாடுஞ் சனங்களாலேயாவது உண்டான சத்தம். அந்நேரம்வரையில் சனங்கள் மணவாளன் தெருவழியே ஊர்கோலம்போகிறதைப் பார்க்கக் காத்திருந்து, தங்கள் சந்தோஷத்தை இவ்விதமாய்க் காட்டியிருப்பார்கள். இதின் ஞானக்கருத்தைப் பலவிதமாய்ச் சொல்வாருண்டு. வானத்திலிருந்து கர்த்தர் ஆரவாரத்தோடிறங்குஞ் சமயத்தில் கேட்கப்படும் பிரதான தூதனுடைய தேவஎக்காளச் சத்தமென்று அநேகர் எண்ணுகிறார்கள். 1 தெச. 4: 16. அக்காலத்தில் சபையைக் காக்கிறவர்களுக்குக் குறைவிராததால் அவர்களிடுஞ் சத்தமென்று சிலர் எண்ணுகிறார்கள். அவர்கள் காலத்தின் குறிப்புகளைக் கவனித்துப், பரம மணவாளனுடைய வருகையைப் பிரசித்தஞ்செய்வார்களாம். அவர் தேவதூதர்களாகிய மணவாளனுடைய சிநேகிதரோடு கிட்டிவந்து தம்முடைய மனையாட்டியாகிய வெற்றிசிறந்த சபையைச் சேர்த்துக்கொள்ளும்போது பூமியிற் போராடுஞ் சபையானது தன்னைச் சந்தித்து வாழ்த்துமென்று எதிர்பார்ப்பாராம். இவர்களும் மனையாட்டியோடு சேர்ந்தவர்கள்தான். இவ்விதமாய் அவளுக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய சந்தோஷமும் மகிழ்ச்சியுமான மகிமைபான மாளிகைக்கு அவளை அழைத்துக்கொண்டுபோவாராம். இந்தச் சத்தம் நடுஇராத்திரியிலுண்டாயிற்று. யூதர்கள் தங்களுடைய முற்பிதாக்கள் எகிப்தைவிட்டு நடுஇராத்திரியில் விடுதலையடைந்ததுபோல 2 மோசே 12: 29. மேசியாவானவருந் திடமொன்று நடுஇராத்திரியில் வருவாரென்று எண்ணினார்கள். இந்த எண்ணத்தின்படியே அப்போஸ்தலர் காலமுதல் உயிர்த்தெழுந்த பண்டிகைக்கு முந்தின இரவில் நடுஇராவரையில் சனங்களை வைத்திருக்கிற வழக்கமுண்டாச்சுதென்று எரோம் என்பவர் சொல்லுகிறார். அந்த இராத்திரியில் கர்த்தர் வருவாரானால் தாங்கள் ஒன்றாய்க் கூடியிருக்கிறவர்களாகக் காணப்படவேண்டுமென்று அவ்வளவு நேரங் காத்திருப்பார்களாம். அந்த இரவைக் கர்த்தர் இரண்டு வகையாய் மகிமைப்படுத்தினார். முதலாவது தம்முடைய சீவனை மறுபடியும் எடுத்துக்கொண்டதினாலே இரண்டாவது அந்த இரவில் உலகஆளுகையைத் திரும்ப ஏற்றுக்கொண்டபடியினாலே. உவமையில் கண்டிருக்கிறதைக் கொண்டு இரட்சகர் நடுஇராத்திரி தான் வருவாரென்று அநேகர் அபிப்

பிராயப்படுகிறார்கள். காரணம் வேறே: அந்த நேரத்தில் தான் அயர்ந்த நித்திரை மனுஷர்களுக்கு வருகிறது. உவமையில் கண்டிருக்கிற சங்கதி நடக்குமென்று அந்நேரத்தில் ஒருவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வருவதால் ஒருவரும் அசதியாக ஆயத்தப்பட்டிருக்கமாட்டார்களென்பதைத் தெளிவாய்க் காட்டும்படிக்குத் தான் இப்படிச் சொல்லியிருக்கிறது. 1 தெச. 5: 2. அப்பொழுது, அந்தச் சத்தமுண்டானபொழுது கன்னிகைகளெல்லாரும் எழுந்திருந்து தங்கள் திவெட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். ஆயத்தப்படுத்துகிறதில் இரண்டு செய்கைகளுண்டு. எரிந்துபோன திரிமுதலானதை நீக்குகிறது. எண்ணெய்விட்டு நன்றாய் எரியச்செய்கிறது. அப்பொழுது தான் புத்தியீனமுள்ள கன்னிகைகள் தங்களுடையது அணைந்துபோகிறதையும் அதை யெரியப்பண்ண எண்ணெயில்லாமலிருந்ததையும் கண்டு பயந்தார்கள். வேறு கருத்தாய்ச் சொல்லவேணுமானால் ஒவ்வொருவனுந் தன் கிரியைகளைக்குறித்துக் கணக்குக் கொடுக்கக் கடைசியிலே ஆயத்தப்படுகிறான். தன்னுடைய விசுவாசத்துக்கு ஆதாரமின்னதென்று விசாரிக்கிறான். தன்னுடைய நடக்கை தேவனால் புகழ்ப்படத்தக்கதா என்று ஆராய்கிறான். மனிதருடைய புகழ்ச்சி ஒன்றுக்கும் உதவாதென்று அவனுக்குத் தெரியும். அநேகர் தங்களுடைய விசுவாசம் நம்பிக்கையென்பவைகளின் ஆதாரத்தை மரணபரியந்தம் விசாரிக்கிறதில்லை. சிலர் கல்லறைக்குப் பிறகு நியாயத்தீர்ப்புநாள்வரையில் அந்த விசாரணையைக் கடத்தப் பார்க்கிறார்கள். அதற்கப்புறம் அதைக் கடத்தக்கூடாது. கிறிஸ்துவின் நாள் வரும்போது தங்களுடைய சரியான நிலைமையை அறியாமல்போகமாட்டார்கள். அந்தநாளில் மனிதருக்கு மறைவான காரியங்கள் தங்களுக்கே மறைவான காரியங்களும் வெளிப்படும். இருதயத்தின் அதிக இருட்டான அறைகளிலிருக்கிறவைகளும் வெளிக்கு வந்து ஒவ்வொருவனுடைய நிலைமையைத் தெளிவாய்க் காண்பிக்கும். ஒருவனும் அப்புறந் தன்னை வஞ்சித்துக்கொள்ளக்கூடாது.

புத்தியீனமுள்ள கன்னிகைகள் ஞானமுள்ள கன்னிகைகளைப் பார்த்துத் தங்கள் வருத்தத்தில் உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள். எங்கள் திவெட்டிகள் அணைந்துபோகின்றனவே என்றார்கள். இவர்கள் கேட்டதும் அவர்கள் மாட்டோமென்றதும் ஆபிரகாமுக்கும் ஐசுவரியவானுக்கும் நடந்த சம்பாஷணையைப்போல உவமைக்கு ஏற்றவிதமாய்ச் சொல்லப்பட்டது. ஆகிலும் இதில் விசேஷித்த ஒரு சத்தியமுண்டு. தேவன் மாத்திரங் கொடுக்கத்தக்க கிருபையை மனுஷர்களிடத்தில் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறது வீண். கருத்தான செபத்தினாலும் சுறுசுறுப்பான பிரயாசத்தினாலும் பெற்றுக்கொள்ளவேண்டியதைச் சோம்பல்தனமாய் லேசில் கடன்வாங்கலாமென்று எண்ணினோமானால் நம்முடைய நம்பிக்கை எவ்வளவோ அபத்தமாய்ப்போம். கொடுக்கக்கூடாது, கொடுத்தால் எங்களுக்கும் உங்களுக்கும் போதாதேயென்று புத்தியுள்ள கன்னிகைகள் சொன்னதிலும் ஒரு நல்ல படிப்பினையுண்டு. எவனுந் தன் சொந்த விசுவாசத்தால் பிழைக்கவேண்டும். மற்றவர்களுக்குங் கொடுக்கிறதினால் அதிகம் பெற்றுக்கொள்ளுகிறதுண்டு. மற்றவனுக்கு வெளிச்சங்கொடுக்கிறதினால் கொடுக்கிறவனுடைய வெளிச்சங் குறைந்துபோகிறதில்லை. அப்படிக்கொடுத்தவன் இரண்டு திவெட்டியின் வெளிச்சத்தையுடையவனாவான். திவ்விய தன்மையான வஸ்துண்டு. அதை ஒருவன் இன்னொருவனுக்குக் கொடுக்கக்கூடாது. அது உன்னதத்திலிருந்து தான் வரவேணும். அதை ஒவ்வொருவனும் தனக்காகத் தான் பெற்றுக்கொள்ளக்கூடும். விலையேறப்பெற்ற லோகத்தையெடுக்க தோண்டவேண்டிய இடத்தை ஒருவன் மற்றொருவனுக்குக் காட்டலாம். ஆகிலும் ஒவ்வொருவன் தன்தன் சுய பிரயாசத்தினாலே தான் அதை தன்னுடையதாக்கிக்கொள்ளவேணும்.



புத்தியுள்ள கன்னிகைகள் தங்களுடைய துர் அதிஷ்டமுள்ள கூட்டாளிகளுக்காகச் செய்யவேண்டியதெல்லாஞ் செய்தார்கள். சொல்லக்கூடிய நல்ல புத்திமதியைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? நீங்கள் விற்கிறவர்களிடத்தில் போய் உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். அதாவது தேவன் தம்முடைய கிருபைகளை சபைக்குக் கொடுக்கும்படி கருவிகளாக நியமித்திருக்கிற தேவபணிவிடைக்காரரிடத்தில் போகும்படி சொல்லுகிறார்கள். அல்லது வேறு சிலர் நினைக்கிறபடி தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலரண்டைக்குப்போய் இன்னும் காலமிருக்குமானால் தங்களுடைய ஆத்துமங்களில் நடந்திருக்குந் தேவகிருபையை அவர்களுடைய போதனையால் சீர்ப்படுத்தும்படி போகச்சொன்னார்கள். இந்த வார்த்தைகளைப் பரியாசமாகச் சொன்னதாகவும் சிலர் அர்த்தம்பண்ணுகிறார்கள். ஆகிலும் சகலத்தையும் நம்புகிற அன்புக்கு இது விரோதமாயிருக்கும். புத்தியுள்ள கன்னிகைகள் மனுஷனையல்ல, தங்களுடைய இருதயத்தில் நடக்கும் ஆவியின் கிரியையை ஸ்திரப்படுத்தும்படிக்கு சகல கிருபைக்கும் ஊற்றாயிருக்கிறவரண்டைக்குப் போகச் சொல்லத்தக்க அன்புடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் எண்ணெய் கொடுக்கக்கூடாதென்று சொல்லுகிறதற்கு நியாயமென்ன? கொடுத்தால் உங்களுக்கும் எங்களுக்கும் போதாதே. இது மிச்சப் புண்ணியக் கிரியைக்கு எவ்வளவோ விரோதமாயிருக்கிறது. நீதிமானே இரட்சிக்கப்படுகிறது அரிதாயிருக்கும். தங்களுக்கு அவசியம்வேண்டியதற்கு மிச்சமாக மற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக தங்களிடத்தில் ஒன்றுமில்லையென்றும் மணவாட்டியைச் சேர்ந்தவர்களோடு கூடப்போய் கலியாண வீட்டில் பிரவேசிக்கத்தக்கதாக இடங்கிடைக்கத் தங்களுடைய விளக்குகள் பிரகாசமுள்ளவைகளாகவிருந்தால் போதுமென்றெண்ணினவர்கள்போல பேசினார்கள்.

---

## Report of the Bishop's Prize Examination.

## 1873 ௵

## அத்தியட்சர் வேதவித்தியா பந்தயப் பரீட்சை.

இது நாளதுவருஷம் ஜூலை மீ 2௳ பாளையங்கோட்டையில் நடந்தது. இப்பரீட்சைகொடுக்க கருதிமுன்னறே பேர் விபரமெழுதி அனுப்பினவர்கள் தொகை 32 மாத்திரம். பரீட்சைக்கு வந்தவர்கள 44. (இனிமேல் பரீட்சைக்கு வருகிறவர்கள் குறிக்கப்பட்ட வாயுதாவுக்குள் பேர் விபரம் தெரிவிக்காவிட்டால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.) இதில் சர்ச்சுமிஷியனைச் சேர்ந்தவர்கள் 28. சுவிசேஷ பிரபல்லிய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 16. சர்ச்சுமிஷியன் சேகரங்களில் சுவிசேஷபுரத்திலிருந்து வந்தவர்கள் 6. டோனாவூரில் 4. நல்லூரில் 4. பாளையங்கோட்டையில் 6. மெஞ்ஞானபுரத்தில் 3. பண்ணைவிளையில் 2. சுரண்டையில் 2.

பன்றிகுளத்தில் 1. சுவிசேஷ பிரபல்லிய சங்கத்தைச் சேர்ந்த சேகரங்களில் நாசரேத்திலிருந்து வந்தவர்கள் 7. இடையன்குடியில் 5. இராதாபுரத்தில் 4. மேலே காட்டிய கணக்கைப் பார்க்கும்போது அநேக சேகரங்களிலிருந்து பரீட்சைக்குச் சுத்தமாய் ஒருவரும் வரவில்லை என்றும், வந்தவர்கள் தொகையும் சில சேகரங்களில் மெத்தச் சொற்பமென்றும் தெரியவருகிறது. அடுத்த வருஷத்தில் இதற்கு அநேகர் வைராக்கியத்துடன் வருவார்களென்று நம்புகிறோம்.

இந்த வருஷம் பரீட்சைக்குத் தெரிந்துகொண்ட பாகங்கள். சாமுவேல் இரண்டாம் ஆகமம் முதல் சாலொமோன் அரசன் மரணபரியந்தமுள்ள இஸ்ரவேலர் சரித்திரமும், எபேசியருக்கும் பிலிப்பியருக்குமெழுதிய நிருபங்களும், மனப்பாடமாக ஏசாயா 40ம் அதிகாரம் பரிசுத்த யோவான் 15ம் அதிகாரம் இவ்விரண்டு அதிகாரங்களுமே. குறிக்கப்பட்ட பாடங்களில் விசேஷ வினாக்கள் கேட்கப்பட்டதுமன்றி, சாதாரண வேதப்பொருள் வினாக்களும் கேட்கப்பட்டது. பரீட்சைக் காகிதங்களைத் திட்டமாய்ப் பார்வையிட்டதில் பந்தயம் பெற யோக்கியர் இன்றொன்று தெரியவந்திருக்கிறது. முதல் பந்தயம் 35 ரூபாய் பெற வேண்டியவர் 30 ம் நம்பர், இடையன்குடிச் சேகரம் பிச்சைமுத்துப தேசியார். இரண்டாம் பந்தயம் 25 ரூபாய் பெறவேண்டியவர், 11 ம் நம்பர் இராதாபுரம் சேகரம் சுவாமியடியானுபதேசியார். கேட்கப்பட்ட வினாக்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய பூரண லக்கம் 159 ல் முந்தினவர் பெற்ற தொகை 106¼. பிந்தினவர் பெற்ற தொகை 97¼. பரீட்சைகொடுத்த மற்றவர்களுடைய தாரதம்மியம் இதனடியில் காட்டப்பட்டிருக்கும் கணக்கினாலே துலங்கும்.

அந்தப்படி பார்க்கில் பரீட்சைகொடுத்தவர்களை ஐந்து தரமாக வகுக்கலாம். பூரண லக்கத்தில் மூன்றிலிரு பங்குபெற்றவர்கள். முதல்தரம். பாதிக்குமேல் பெற்றவர்கள். இரண்டாம்தரம். பாதிபெற்றவர்கள், மூன்றாம்தரம். மூன்றிலொரு பங்குபெற்றவர்கள். நாலாம்தரம். நாலிலொன்று பெற்றவர்கள். ஐந்தாம்தரம். அதிலுங் குறைந்து பெற்றவர்கள். கடைசித்தரம், மூன்றிலிரு பங்குபெற்றவர் ஒருவர்தான். இவர் 30 ம் நம்பர். பாதிக்குமேல் பெற்றவர்கள் 8 பேர். இவர்கள் லக்கங்கள் முறையே 11, 12, 19, 36, 10, 24, 33, 39. ஏறக்குறைய பாதிபெற்றவர்கள் 8 பேர். இவர்கள் லக்கங்கள் முறையே 26, 4, 35, 3, 44, 14, 42, 25. ஏகதேசம் மூன்றிலொன்று பெற்றவர்கள் 17 பேர். இவர்கள் லக்கங்கள் முறையே 13, 34, 22, 29, 17, 31, 6, 18, 38, 37, 41, 8, 43, 9, 2, 27. 1. ஏறக்குறைய நாலிலொரு பாகம் பெற்றவர்கள் 8 பேர். இவர்கள் லக்கங்கள் முறையே 5, 28, 15, 21, 40, 23, 20, 16. ஐந்திலொரு பாகம்பெற்ற கடைசித்தரமானவர்கள் 2 பேர். இவர்கள் லக்கங்கள் முறையே 7, 32, மொத்தமாய்ச் சொன்னால் 4 ல் 3 பங்கு பேர் ஒருமட்டுக்கு திர்ப்திகரமாய்ப் பரீட்சைகொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களைப்பற்றித் திர்ப்திக்கிடமில்லையென்று சங்கடத்தோடே சொல்லுகிறோம்.

கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு எழுதப்பட்ட உத்தரங்களைப் பார்வையிட்டதில் கவனித்த இரண்டொரு குறைவுகளை எடுத்துக் காட்டுவது அடுத்த முறை பரீட்சைக்கு வருபவர்களுக்குப் பிரயோசனமாயிருக்குமென்று நம்புகிறோம். குறிக்கப்பட்ட பாகங்களில் கேட்கப்பட்ட விசேஷ வினாக்களுக்கு விடைகள் திர்ப்திகரமாய் எழுதினதுபோல சாதாரண வேதப்பொருள் வினாக்களுக்கு பாதிப்பேர் திர்ப்திகரமாய் எழுதவில்லை. இவர்கள் நாடோறும் வேதத்தை வாசித்து அப்பியாசித்துக்கொண்டு வந்திருப்பார்களேயானால், இவ்வகை குறைவு நேரிட இடமிராது. புதியஏற்பாட்டிலும் பழையஏற்பாட்டிலும் வியாக்கியானத்துக்கடுத்த வினாக்களுக்குத் திர்ப்திகரமாய் உத்தரம் எழுதியிருக்கிறவர்கள், வேதப்பொருளின் மேலே மாத்திரம் குறிப்பாய்க் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பூரணமாய் உத்தரம் எழுதத் தவறியிருக்கிறார்கள். இவர்கள் வியாக்கியானங்களையே குறியென்று வாசித்து மனப்பாடம் பண்ணி, வேதாகமத்தின் மூலவாக்கியங்களைப் படியாமல்விட்டதே இதற்குக் காரணம். இப்படிச்செய்வது, அரங்கின்றி வட்டாடுவதை ஒக்குமல்லவா? மேலும் பரீட்சைகொடுத்த பலரிடத்திலும் காணப்பட்ட வேறொரு விசேஷித்த குறைவு. கேட்ட கேள்விக்கு உத்தரமெழுதாமல் சொன்னதிருக்கச் சுரையைப் பிடுங்கினாற்போல தாங்கள் நினைத்ததையும் அவசியமற்றவைகளையும் எழுதியிருக்கிறார்கள். திருஷ்டாந்தரமாக ஒருவர், யோத்தாமுடைய உவமைக்குப் பொருள் கேட்டதற்கு, நாத்தானுடைய உவமையை எழுதினர்.

பரீட்சைகொடுத்தும் பந்தயம்பெருமற்போனவர்கள் யாவருக்கும் மனவருத்தமிருந்தாலும், இதனாலே தைரியத்தையும் முயற்சியையும் விடலாகாது. "பந்தயச்சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா." இந்த வருஷம் அவர்கள் முறையானால் உங்கள் முறையும வரும். பணப்பந்தயம் கிடையாவிடினும், உங்கள் அறிவோடே அறிவு கூடினது, நீங்கள் பெற்றுக்கொண்ட அருமையான பந்தயமல்லவா? திருநெல்வேலி நாட்டுக்கிறிஸ்தவர்களைப் பணத்திலே செல்வராக்குவது அத்தியட்சர் பந்தயப் பரீட்சையின் நோக்கமாயிராமல், இரட்சணிய ஞானமாகிய வைதிகக் கல்விப்பொருளில் செல்வராக்குவதே, அதின் நோக்கமென்றுணர்ந்து, "அநேகம் ஆயிரம் பொன்வெள்ளியைப்பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" என்ற திருவாக்கையும் மனதில் வைத்துக்கொண்டு, வேதவித்தியார்த்திகளாயிருப்பீர்களாக.

"தொட்டனைத்தூறுமணற்கேணி-மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு."

## Result of the Bishop's Prize Examination.

## 1873ளு

## அத்தியட்சர் வேத வித்தியா பந்தயப் பரீட்சை-

பரிட்சித்த வர்கள். { புதியேற்பாடு, கனம்: A. டிப் ஐயரவர்கள்.
பழையேற்பாடு கனம்: D. சாமுவேல் ஐயரவர்கள்.

| நம்பர். | பெயர். | புதிய ஏற்பாடு. | பழைய ஏற்பாடு. | மொத்தத் தொகை. | இடம். |
|---|---|---|---|---|---|
| | Maximum. | 59. | 100. | 159. | |
| 1 | விசுவாசம், பண்ணைவிளை — — — — — | 15 | 35½ | 50½ | 33 |
| 2 | சாமுவேல், மேற்படி. — — — — — | 26 | 25½ | 51½ | 31 |
| 3 | ஈசாக்கு சுவாமியடியான், மெஞ்ஞானபுரம் — | 31 | 45¼ | 76½ | 13 |
| 4 | யோசுவா பவுல், டோனாவூர் — — — — | 46 | 31½ | 77½ | 11 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | ஏசுவடியான், சுரண்டை — — — — — | 16 | $32\frac{1}{2}$ | $48\frac{1}{2}$ | 34 |
| 6 | தானியேல் அமிர்தநாயகம், நல்லூர். — — | 25 | $39\frac{3}{4}$ | $64\frac{3}{4}$ | 23 |
| 7 | வேதமாணிக்கம் சாலோமோன், ஆள்வாநேரி | 20 | $11\frac{1}{4}$ | $31\frac{1}{4}$ | 41 |
| 8 | சுவாமிதாசன், மேற்படி. | 33 | 28 | 61 | 28 |
| 9 | யோவான் கிரிபித், டோனாவூர் — — — | 30 | 27 | 57 | 30 |
| 10 | A. தாவீது, சுரண்டை — — — — — — | 40 | $48\frac{3}{4}$ | $88\frac{3}{4}$ | 6 |
| 11 | சுவாமியடியான், இராதாபுரம் — — — — | 33 | $64\frac{1}{4}$ | $97\frac{1}{4}$ | 2 |
| 12 | திரவியம், மேற்படி. — — — — | 33 | 63 | 96 | 3 |
| 13 | மோசே, சுவிசேஷபுரம் — — — — — | 23 | $45\frac{1}{4}$ | $68\frac{1}{4}$ | 18 |
| 14 | பவுல் காபிரியேல், பாளையங்கோட்டை. | 44 | $31\frac{1}{4}$ | $75\frac{1}{4}$ | 15 |
| 15 | A. சவரிமுத்து, பன்றிகுளம் — — — — | 22 | $25\frac{3}{4}$ | $47\frac{3}{4}$ | 36 |
| 16 | ஆசீர்வாதம், சுவிசேஷபுரம் — — — — | 24 | $14\frac{3}{4}$ | $38\frac{3}{4}$ | 40 |
| 17 | பாக்கியநாதன் ஆபிரகாம், மேற்படி. — — | 30 | $35\frac{1}{2}$ | $65\frac{1}{2}$ | 22 |
| 18 | யோவான், சுவிசேஷபுரம்— — — — — | 32 | $31\frac{3}{4}$ | $63\frac{3}{4}$ | 24 |
| 19 | அருளானந்தம், இராதாபுரம். — — — — | 30 | 64 | 94 | 4 |
| 20 | யோசேப்பு சீமோன், நல்லூர் — — — — | 25 | $16\frac{1}{4}$ | $41\frac{1}{4}$ | 39 |
| 21 | சீமோன்; ஆள்வாநேரி — — — — — | 25 | $22\frac{3}{4}$ | $47\frac{3}{4}$ | 36 |
| 22 | சாமுவேல் மாசில்லாமணி, டோனாவூர் — — | 35 | $31\frac{3}{4}$ | $66\frac{3}{4}$ | 20 |
| 23 | சாமுவேல் ஸ்தேவான், பாளையங்கோட்டை | 19 | 26 | 45 | 38 |
| 24 | விசுவாசம், நல்லூர். — — — — — — | 33 | $50\frac{1}{4}$ | $83\frac{1}{4}$ | 7 |
| 25 | வேதமாணிக்கம், மெஞ்ஞானபுரம் — — — | 28 | $42\frac{1}{4}$ | $70\frac{1}{4}$ | 17 |
| 26 | வேதமுத்து, டோனாவூர் — — — — — | 44 | $34\frac{3}{4}$ | $78\frac{3}{4}$ | 10 |
| 27 | தானியேல் பவுல், பாளையங்கோட்டை — | 26 | $24\frac{3}{4}$ | $50\frac{3}{4}$ | 32 |
| 28 | ஞானப்பிரகாசம், நல்லூர். — — — — — | 20 | 28 | [illegible] | [illegible] |
| 29 | யோவான் கோயிற்பிள்ளை, மெஞ்ஞானபுரம். | 26 | $40\frac{1}{4}$ | [illegible] | [illegible] |
| 30 | பிச்சைமுத்து, இடையன்குடி. — — — — | 43 | $63\frac{1}{4}$ | [illegible] | [illegible] |
| 31 | லாசரு, சுவிசேஷபுரம் — — — — — — | 28 | $26\frac{3}{4}$ | [illegible] | [illegible] |
| 32 | S. மோசே, மேற்படி. — — — — — — | 16 | 11 | [illegible] | [illegible] |
| 33 | மதுரம், இராதாபுரம், — — — — — | 27 | $55\frac{1}{4}$ | [illegible] | [illegible] |
| 34 | சுவாமியடியான், இடையன்குடி — — — | 31 | $37\frac{3}{4}$ | [illegible] | [illegible] |
| 35 | காலேப், மேற்படி— — — — — — | 39 | 37 | [illegible] | [illegible] |
| 36 | தானியேல், மேற்படி. — — — — — — | 38 | 54 | [illegible] | [illegible] |
| 37 | அருமைநாயகம், மேற்ப. — — — — — | 33 | $29\frac{1}{2}$ | [illegible] | [illegible] |
| 38 | யோசேப்பு, நாசரேத் — — — — — — | 32 | $32\frac{3}{4}$ | [illegible] | [illegible] |
| 39 | N. ஆபிரகாம், மேற்படி. — — — — — | 40 | $32\frac{1}{4}$ | [illegible] | [illegible] |
| 40 | G. பிச்சைமுத்து, மேற்படி. — — — — | 18 | $29\frac{3}{4}$ | [illegible] | [illegible] |
| 41 | A. ஞானப்பிரகாசம், மேற்படி. — — — — | 25 | $37\frac{3}{4}$ | [illegible] | [illegible] |
| 42 | Y. சுவாமியடியான், மேற்படி. — — — — | 39 | 34 | [illegible] | [illegible] |
| 43 | A. மாணிக்கம், மேற்படி. — — — — — | 31 | 29 | [illegible] | [illegible] |
| 44 | G. ஏசுவடியான், மேற்படி. — — — — — | 43 | 33 | 76 | 14 |



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** இங்கிலந்து மஹா ராஜாத்தியவர்கள் தமது குமாரத்தியாகிய புருஷிய சக்கரவர்த்தினியைக் காணும்படி அம்பூர்ப் பட்டணத்திற்குப் போகவிருந்தார்கள். இராணியவர்கள் குமாரனாகிய ப்ரின்ஸ் ஆர்தர் பிரபு ட்ருவில் என்னும் ஊருக்குப்போய்க் கடலில் நீந்திஸ்நானம்பண்ணுகையில், மோதி அடித்த பிரமாண்டமான அலையின் கீழ் அகப்பட்டு மாணமடையச் சற்றுத் தப்பினார். அயர்லாந்தில் உள்ள பெல்பாஸ்ட் நகரத்தில் நெருப்புப்பற்றிச் சேதமாய்ப்போன வீடுமுதலான கட்டிடங்களினால் பொருட்சேதம் மிகுதி. 130 குடும்பத்தார் வீடுமுதலானவைகள் இல்லாதவர்களானார்கள். பிரான்சுதேசத்தில் பாளயமிறங்கியிருந்த ஜர்மானிய யுத்தவீரர் யாவரும் அத்தேசத்தைவிட்டுத் திரும்பிப்போனார்கள். அவர்கள் ஜர்மானியருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தொகை கொடுபட்டுத் தீர்ந்தது. பரீஸ் நகரத்தில் வாந்திபேதி கண்டு சிலர் மாணமடைந்தார்கள். பிரான்சுதேசத்தில் தானிய விளைச்சல் மிக குறைந்தபக்ஷமானபடியால், அரைத்தனத்தார் பிரஜைகளுக்கு உதவிசெய்யும்படி ஆலோசனைசெய்கிறார்கள். ஸ்பானிய தேசத்திலுண்டான கலகம் இன்னும் நீங்கவில்லை. பிரஜாதிபத்திய விபக்ஷத்தார் 28.000 சேனாவீரரைச் சேகரித்து, அங்கங்கே ஜனங்கள் தங்களுக்குக் கீழ்ப்படியும்படி பலாத்காரப்படுத்துகிறார்கள். அரைத்தனத்தார் தங்கள் சேனைகளை அதிகரிக்கச்செய்து, தங்களுக்கு விரோதமாயெழும்பிய விபக்ஷத்தார்மேல் விழுந்து முறியடித்து, அவர்களுக்குள்ளே கனசேதமுண்டாக்குகிறார்கள். பாரசீக அரசன் டிப்லிஸ் என்னும் இடத்துக்குச்சேர்ந்து தமது தேசத்திற்குத் திரும்பிப்போனார். பாரசீக ராஜதானியாகிய தெகிரான் நகரத்தில் அங்கிலேய சர்ச்மிஷியன் சங்கத்தார் ஒரு சங்கம் ஸ்தாபிக்கும்படி எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த அஷன்தி பிரதேசத்திலுள்ள மிலேச்சர் கலகமெழுப்பினதினால், சீமையிலும் மேற்கிந்தியாவிலுமிருந்து யுத்தவீரரையும் யுத்தமுஸ்திபுகளையும் அங்கே அனுப்புவது ஆவசியமாயிற்று. லமா என்னும் இடத்தில் மிலேச்சர் கப்பலிலிருந்து இறங்குகிறபடுகிற படவுகளில் துப்பாக்கிக் குண்டுகளைப் பிரயோகித்து, அவைகளிலிருந்த யுத்தவீரரை அதிகமாய்க் காயப்படுத்தினார்கள். அதனால், அந்த மிலேச்சருக்கு அதிக உற்சாகமுண்டாயிற்று. ஆபிரிக்க தேசாந்திரியாகிய டாக்டர் லிவிங்ஸ்டோன் துரை ஜூலை மாசாரம்பத்தில் அந்தசேதத்தில் உயிருடன் சௌக்கியமாயிருந்தாராம்.

கபூல்—பாலுக்ஷானில் சுல்த்தான் மொராதகானுக்கும் மஹமத்ராஹீமகானுக்கும் சண்டை நடந்ததென்று செய்தி.

**இந்தியா.** நியாயாதிபதியாகிய நார்மன் துரை கல்கத்தாவில் கொலைசெய்யப்பட்ட பின்பு, அங்குள்ள மகமதிய பிரபுகள் சிலர் அவருக்கு ஞாபகக்குறியாய் ஏதாவது ஒன்றைத் தோற்றுவிக்கும்படி தீர்மானித்து, அதன் செலவிற்குத்தக்க பணம் சேகரித்திருக்கிறார்கள். வெகுநாள் ஆலோசனைபண்ணின பின்பு, மஹமதியருக்குரிய மட்ரிஸா என்னும் வித்தியாசாலையில் கல்விகற்கும் எளிய மாணாக்கர் நால்வருக்கு வருஷாந்தரம் நன்கொடைகொடுக்கும்படி தீர்மானித்தார்கள். இது எக்காலமும் நிலைபெறும்பொருட்டு, அதின் விவரத்தைச் செப்புத்தகட்டில் எழுதி வித்தியாசாலையில் நிலைப்படுத்த லெவ்டினண்ட் கவர்னர் உத்தரவுசெய்தார்.

அக்டோபர்மீ நாள் 31. புரட்டாசிமீ 18உ முதல், அற்பசிமீ 17உ வரை.

| வாரம். | ஆங்கிலத் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௮ | நீங்கள் எனக்கு பரிசுத்தசாதியாயிருப்பீர்கள். யாத். 19: 6. |
| வி | 2 | ௧௯ | உன் தேவனாகிய கர்த்தர் நானே. 20: 2. |
| வெ | 3 | ௨0 | கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. 7. |
| ச | 4 | ௨௧ | ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. 8. |
| ஞா | 5 | ௨௨ | கர்த்தருடைய கரம் அவன் மேலிருந்தது. எஸ்றா. 7: 6. |
| தி | 6 | ௨௩ | எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். 10. |
| செ | 7 | ௨௪ | எங்கள் பிதாக்களின் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 27. |
| பு | 8 | ௨௫ | எங்கள் தேவனிடத்தில் அதைத் தேடினோம். 8: 23. |
| வி | 9 | ௨௬ | நான் உமது சத்தியத்திலே நடப்பேன். சங்கீதம் 86: 11. |
| வெ | 10 | ௨௭ | என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும். 11. |
| ச | 11 | ௨௮ | உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன். 12. |
| ஞா | 12 | ௨௯ | நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது. 13. |
| தி | 13 | ௩0 | என் ஆத்துமாவைப் பாதாளத்துக்குத் தப்புவித்தீர். 13. |
| செ | 14 | ௩௧ | நீர் மனவுருக்கமும் இரக்கமுமுள்ள தேவன். 15. |
| பு | 15 | ௧ | என்மேல் நோக்கமாகி எனக்கிரங்கும். 16. |
| வி | 16 | ௨ | உமது வல்லமையை உமதடியானுக்கருளும். 16. |
| வெ | 17 | ௩ | மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன். நீதி. 3: 32. |
| ச | 18 | ௪ | நீதிமான்களோடே கர்த்தருடைய இரகசியம் இருக்கிறது. 32. |
| ஞா | 19 | ௫ | துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தருடைய சாபமிருக்கிறது. 33. |
| தி | 20 | ௬ | இகழ்வோரைக் கர்த்தர் இகழுகிறார். 34. |
| செ | 21 | ௭ | தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். 34. |
| பு | 22 | ௮ | வேதம் என்னிலிருந்து வெளிப்படும். ஏசாயா 51: 4. |
| வி | 23 | ௯ | என் நீதி சமீபமாயிருக்கிறது. 5. |
| வெ | 24 | ௧0 | எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம். ஓசி. 14: 2. |
| ச | 25 | ௧௧ | திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம்பெறுகிறான். 3. |
| ஞா | 26 | ௧௨ | நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன். 4. |
| தி | 27 | ௧௩ | நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். யோவான் 10: 30. |
| செ | 28 | ௧௪ | நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான். 11: 3. |
| பு | 29 | ௧௫ | தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். ரோமர் 10: 3. |
| வி | 30 | ௧௬ | கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். 4. |
| வெ | 31 | ௧௭ | உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். 9. |

## விசேஷித்த நாட்கள்.

5. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதினேழாம் ஞாயிறு.
6. பௌரணமி.
12. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினெட்டாம் ஞாயிறு.
19. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பத்தொன்பதாம் ஞாயிறு.
21. அமாவாசை.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபதாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

162398

Vol. 25. November. No. 11.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 202
Notes on Genesis. ... ... ... ... ... ... 204
Christian Church History. ... ... ... ... ... 209
A Family Commentary on the Sermon on the Mount. 212
The Parables of Christ... ... ... ... ... ... 216
Summary of News. ... ... ... ... ... ... 218


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௨0௨
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௨0௪
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௨0௯
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ௨௧௨
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௨௧௬
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௨௧௮



**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்.

௰௧. நவம்பர்மீ. ௲௮௱௯௰௨.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### யோசுவாவின் அந்தியம்.

யோசுவா அதி. 24.

(தொடர்ச்சி.)

இன்னம் யோசுவா சொல்லுகிறதைக் கேளுங்கள். இஸ்ரவேலர் தேவனுக்கு ஆராதனைசெய்ய விரும்பவில்லையென்று பாவித்துக்கொள்வோம். அப்பொழுது அவர்கள் என்னசெய்வார்கள்?

"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ?" இது மகா புத்தியான வார்த்தை. நீங்கள் தேவனைச் சிநேகித்து, அவருக்குப் பயப்படாத பட்சத்தில், வேறு எந்த வஸ்துவைத் தெய்வமாகக் கொள்வீர்கள்?

இஸ்ரவேலரைப் பார்த்துக் கேட்கப்பட்ட இந்தக் கேள்வி உங்களைப் பார்த்தும் கேட்கத்தக்கதுதான். நீங்களும் எந்த தெய்வமாவது ஒரு தெய்வத்தைச் சேவிப்பீர்கள். பிள்ளைகள் வணங்குகிற விக்கிரகங்களில் அநேகம் நானிப்பொழுது எடுத்துச்சொல்லலாம். அவைகளும் எமோரியருடைய தேவர்களைப்போல அவலட்சணமும் அனர்த்தமுமானவைகள்தான். அவைகளில் இரண்டொன்றை இங்ஙனம் யோசித்துக்கொள்வோம்.

இதோ ஒன்றிருக்கிறது. அது புறம்பே அழகாயும் டம்பமாயுந்தோன்றுகிறது, உள்ளேயோ ஒன்றுமில்லை. அதற்குப் பெயர் ஆடையாபரணம். அதோ வேறொன்று. அது அவலட்சணமாயும் அருவருப்பாயுமிருக்கிறது. அதின் கைகள் நீட்டப்பட்டவைகளாயும் அதன் வாய் விரிவாய்த் திறந்ததாயுமிருக்கின்றன. அது மாமிச இச்சையென்னப்படும். எல்லாவற்றிலும் மகா தீட்பான விக்கிரகம் யாதெனில், அதோ கள்ளத்தனமாயும் கர்வமுகமாயும் காணப்படுகிறதே அதுதான். அதின் கண் யார் தன்னைப் பார்க்கிறார்கள், யார் தன்னைப் புகழுகிறார்கள், மற்றவர்கள் தன்னைக்குறித்து என்ன பேசுகிறார்களென்று இங்கும் அங்கும் பார்த்தவண்ணமாயும், மற்றவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் நேரி



ட்டபோதிலும் நன்மையானதெல்லாம் தனக்கே கிடைக்கவேண்டுமெ
ன்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. ஏராளமான பிள்ளை
கள் கும்பிடுகிற அந்த அரோசிகரமான விக்கிரகத்துக்கு தற்பொழிவு
என்று பெயராம். இப்படியாக உங்களில் ஒவ்வொருவருக்கும் யாதோ
ஒரு தெய்வமிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. அது உங்களைப்
படைத்துக் காப்பாற்றி நேசித்துக்கொண்டுவருகிற தெய்வமாயிரா
விட்டால், விக்கிரகமாகவேயிருக்கும், அவ்விக்கிரகங்கள் உங்களை
இரட்சிக்குமோ?

தேவனையல்லாமல் ஆடையாபரணத்தையோ, மாமிச இச்சையை
யோ, தற்பொழிவையோ வேறு எந்தப் பொருளையாவது ஞ்சரி பற்
றிக்கொண்டு நடப்பீர்களாகில் நித்தியமாய்க் கெட்டுப்போவீர்கள்.
ஆகையால் யோசுவாவைப்போல நானும் உங்களைப் பார்த்து. "நீங்
கள் யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்" என்
பதாய்க் கேட்கப்படாதோ! "இன்று" என்கிற வார்த்தையை மறந்து
விடாதிருங்கள். "நாளைக்கு இதைக்குறித்துப் பார்த்துக்கொள்ளு
வேன்" என்று சிறுவர் பலமுறையுஞ் சொல்லுகிறார்களே அது எவ்வ
ளவு துக்கமான காரியம். அவர்கள் "நாளை" என்பது அநேகம் விசை
அவர்களுக்குக் கிடைக்கிறதேயில்லையென்று நிச்சயித்துக்கொள்ளுங்
கள். நாளை ஒருவேளை நீங்கள் சாகலாம. விளையாட்டினாலோ, வேலை
யினாலோ நீங்கள் இன்று கேட்டவைகளை நாளை மறந்துபோகலாம்.
ஆகையால் "இப்பொழுதே தகுதியான காலம், இதுவே இரட்சண்
ணிய நாள்."

யோசுவா சொல்லுகிறதை இன்னம் ஒருவிசை கேளுங்கள். "நா
னும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரைச் சேவிப்போம்." எவ்வ
ளவு நேர்த்தியும் உத்தமமுமான தீர்மானம். மற்றவர்கள் எப்படி நடந்
தாலும் சரி, நான் தேவனைச் சிநேகித்து, அவருக்குப் பயந்து நடப்
பேன் என்று சொல்லுகிறதல்லவா? இதில் எவ்வளவு தைரியம் விளங்
குகிறது. அநேக வாலிபர் பரலோக ராச்சியத்துக்கு நேரே வெகுதூ
ரம் கிட்டிவந்தவர்கள்போல காணப்பட்டும் அம்மட்டில் நின்றுபோகி
றார்கள். என் தோழர் பக்தியாய் நடப்பார்களாகில் நானும் அப்படி
யே செய்வேன். அவர்களோடுகூட மோட்சத்துக்குப் போகிறது என
க்குப் பிரியந்தான். ஆகிலும் நான் ஒன்றியாய்ப் போவதெப்படி? மற்
றவர்கள் என்னைக்குறித்து விபரீதமாய் நினைப்பார்களே. ஒருவேளை
என்னைப்பார்த்துப் பரியாசமும்பண்ணுவார்களே, என்று சொல்லுகிற
வர்கள்போலவிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வேறு நல்ல தீர்
மானம்பண்ணும்படி தேவன் இரக்கமாயேவாதபட்சத்தில் அவர்கள்
ஆத்துமம் கெட்டுப்போகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

யோசுவாவின் தீர்மானமே நாம் எல்லோரும் செய்யவேண்டிய தீர்
மானமென்று நிச்சயித்துக்கொள்வோமாக. "சிநேகிதர்களே, சகோ
தரரே, சகோதரிகளே, தகப்பனாரே, தாயாரே, நான் உங்களெல்லா
ரையும் வெகுவாய்ச் சிநேகிக்கிறேன். உங்களெல்லாரோடுங்கூட மோ
க்ஷத்துக்குப்போவது எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும். ஆகி
லும் நீங்கள் பின்வாங்கி நிற்பீர்களாகில் நான் அப்படிச் செய்யக்கூ
டாது. நான் தேவனைச் சேவிக்கவேண்டும். அழிவின் பட்டணத்தில்
நீங்கள் தாமதிக்காதபடிக்கு உங்களைக் கெஞ்சுகிறேன். நீங்கள் தாம
திப்பீர்களானால், நான் உங்கள் நிமித்தம் தாமதிக்கக்கூடாது. நானின்
னம் பரதேசியாகவே இருப்பேன். தேவன் எனக்குப் பிதாவும் கிறிஸ்
துநாதர் என் மீட்பரும் பரிசுத்தாவி என்னை வழிநடத்துகிறவருமாயி

ருப்பார்கள். மோட்சம் எனக்கு வீடாகும் என்று சொல்லுங்கள்.

இன்னம் ஒரு விசேஷம் மாத்திரம் சொல்லி முடிக்கிறேன். சனங்கள் யோசுவாவின் வார்த்தைகளைக் கேட்டுக் கீழ்ப்படிகிறதற்கு எவ்வளவு ஆயத்தமாயிருக்கிறார்களென்று பாருங்கள். அவர்களெல்லாரும் ஏகோபித்து உடனே "நாங்கள் கர்த்தரைச் சேவிப்போம்" என்றார்கள். ஆகிலும் இப்படிச் சொல்லுகிற வார்த்தையைச் சீக்கிரம் மறந்துபோவார்களேயென்று யோசுவா உணர்ந்து, அவர்களைச் சோதிக்கும்படியாக உங்களாற் கூடாது என்று சொன்னான். என்ன! தேவனைச் சேவிக்கக்கூடாதா? உங்கள் சுய பலத்தினாலே கூடாது. அவருடைய உதவியில்லாமல் அவரைச் சேவிக்க உங்களாலாகாது, அவரை இடைவிடாமல் நம்பிச் சகாயத்துக்காகப் பிரார்த்திப்பதினாலே மாத்திரம் அது கூடிய காரியம். "அல்ல, நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்" என்று இஸ்ரவேலர் சொன்னதைப் பார்க்கும்போது, அவர்கள் அதை உணர்ந்துகொண்டார்களென்று தோன்றுகிறது. ஆயினும் அம்மட்டில் யோசுவாவுக்கு பூரண திர்ப்தியுண்டாகவில்லை. ஆகையால் மறுபடியும் அவர்களை நோக்கி, கனபத்தியாய் மேற்படி கேள்வியைக் கேட்டான். "எங்கள் கர்த்தராகிய தேவனையே நாங்கள் சேவிப்போம், அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்" என்று அவர்களெல்லாரும் மறுபடியும் பிரதியுத்தரம் சொன்னார்கள்.

இவ்வாறு அவர்கள் செய்துகொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றினார்களா? ஆம், சிறிதுகாலம் நிறைவேற்றினார்கள். யோசுவாவும் யோர்தானை அற்புதமாய்க் கடந்துவந்த காரியத்தைப் பார்த்திருந்த முதியோர்களும் உயிரோடிருந்த காலமெல்லாம் தேவனைச் சேவித்தார்கள். அப்புறம் அவர்கள் தேவனை மறந்து, தங்கள் கொடிய பாவங்களாலே அவருக்குக் கோபமூட்டினார்கள். அதுபோலவே, சிறுவரும் பலமுறை செய்கிறதுண்டு. அவர்கள் தாய்தந்தைகளோ உபாத்தியாயர்களோ அவர்களோடு கூடவிருக்கிறவரையில், நல்லொழுக்கமாய் நடப்பார்கள். அவர்கள் இறந்துபோனபின்போ, கவலையீனமுள்ளவர்களாகி இயலாதவைகளைச் சிந்திக்கவும் செய்யவும் ஏற்படுகிறார்கள். பிரியமானவர்களே, நீங்கள் பண்ணியிருக்கிற நல்ல தீர்மானங்களை விடாதபடிக்கு எப்பொழுதுங் கைக்கொண்டு நடக்க உதவிசெய்யவேண்டுமென்று தேவனைப் பிரார்த்தியுங்கள். அவரைமாத்திரம் நம்பிப் பற்றிக்கொள்வீர்களாகில், அவர் உங்களை ஒருபொழுதும் கைவிடாமல், உங்களோடேயிருந்து, நீங்கள் முடிவுபரியந்தம் கீழ்ப்படிந்து அன்போடும் உண்மையோடும் நடக்க உங்களுக்கு அனுக்கிரகம் செய்யாநிரார்.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௨௭. அதிகாரம்.

### ஒரு வீட்டாரெல்லாரும் தப்பிதம் செய்தது.

1. இந்த அதிகாரத்திலுள்ள சங்கதி நடந்து (14) வருஷத்துக்குப் பின் யோசேப்பு பிறந்தானென்று பின் நடபடிகளால் தெரியும். 29:



20, 30. 30: 24—26. யோசேப்பு பார்வோனுக்கு முன் நிற்கையில் அவனுக்கு (30) வயது. 41: 46. செழிப்புள்ள 7 வருஷங்களும் பஞ்சமுள்ள 7 வருஷங்களில் இரண்டு மூன்று வருஷமும் கடந்தபின் யாக்கோபு பார்வோனைப்பார்த்து தனக்கு (130) வயது என்று சொன்னான். 47: 9. ஆகையால் யோசேப்பு பிறக்கும்போது யாக்கோபுக்கு ஏறக்குறைய 90 வயதும் (130—30+7+3=90) இந்தச் சங்கதி நடக்கும்போது ஏறக்குறைய 75 வயதுமாயிருக்கவேண்டும். (90—14). ஏசா, யாக்கோபு பிறக்கையில் ஈசாக்கு (60) வயதுள்ளவனாயிருந்தபடியால் இப்போது அவன் ஏறக்குறைய 135 அல்லது 136 வயதுள்ளவனாயிருக்கவேண்டும். (60+75). ஏசா 2 மனைவிகளை விவாகம்பண்ணி 36 வருஷமாகியிருந்தும் (26: 34) அதுகாரியத்தைப்பற்றி யாதொன்றும் எழுதப்படவில்லை.

2. ஈசாக்கு இதற்குப்பின்னும் 44 வருஷம் சீவந்தனாயிருந்தும் இப்பொழுது தனக்கிருக்கிற தேக பலவீனத்தை உணர்ந்து, மரணத்தைத் தேடி, தன் ஆத்துமா பிரியும் வேளையில் மனக்கலக்கமுதலானது நேரிடாமல் ஆயத்தமாயிருக்கும்படி இப்பொழுதே தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குப்படுத்தத் தீர்மானித்தான்.

3, 4. "ஆசீர்வதிக்க" இது தகப்பன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிற பொதுவான ஆசீர்வாதமல்ல. மேசியாவையும் கானானையும் குறித்து எகோவா ஆபிரகாமுக்கு அருளினதும், ஈசாக்குவழியாய் இறங்கி வருகிறதுமான விசேஷித்த ஆசீர்வாதம் என்றறியவேண்டும். இந்தக் காரியத்தைக்குறித்து 25: 23-ல் தேவன் ரெபெக்காளுக்கு அருளியிருந்த உத்தரவை ஈசாக்கு மறந்துபோயாவது, பொருளறியாமலாவது, கவலைப்படாமலாவது போனதாகத் தோன்றும். அவன் ஏசாவை அதிகமாய் நேசித்த பட்சபாதத்தினாலும், மூத்தவனே சுதந்தரவாளியாகிற வழக்கத்தினாலும் ஏவப்பட்டு இப்படிச் செய்தான்.

6—10. ஆசீர்வாதம் யாக்கோபுக்கு வரவேண்டியதென்று ரெபெக்காள் நினைத்தது சரிதான். ஆனால் அதற்காக அவள் தன் சொந்தப் புருஷனையும் மகனையும் வஞ்சித்து ஏமாற்றும்படி செய்த கபடான தந்திரோபாயங்கள் பொறுக்கப்படாதவைகள். தான் நினைத்த காரியம் கைகூடிவர ஈசாக்கிடத்தில் காரியத்தைச் சொல்லலாம். அப்படி ஆகாதபக்ஷத்தில் செபத்தின்மூலமாய்த் தன் காரியத்தை தேவனுக்கு ஒப்புவித்துவிடவேண்டியது.

யாக்கோபு வெள்ளாட்டுக்குட்டியினாலே தன் தகப்பனை வஞ்சித்தானே. அந்த சம்பந்தமாய் பிற்பாடு தன் மக்களால் வஞ்சிக்கப்பட்டான். 37: 32, 33.

11—14. வஞ்சனை வெளிப்பட்டு தனக்குச் சாபம் வந்தாலும் வரும் என்ற பயத்தினால் தடுத்துப்பேசினானேயல்லாது, இப்படிச் செய்கிறது தேவனுக்கு ஏற்காத பாவம் என்று நினைக்கவில்லை.

19, 20. யாக்கோபு படிப்படியாய் (5) பொய்சொல்ல நேரிட்டது. தேவ நாமத்தையும் தேவ தூஷணமாக உச்சரிக்கிறான். அநேகர் தேவ நாமத்தையும் அவரது மார்க்கத்தையும் மேற்போட்டுக்கொண்டு துணிந்து அக்கிரமம் செய்வதை இப்பொழுதும் காணலாம். ஊமைபோலிருக்கிறவர்களை நம்பப்படாது. குணசாலியும் கூடாரவாசியுமான இந்த யாக்கோபு இப்படியெல்லாம் கபடுசெய்வானென்று யார் நினைத்தது. "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது அதை அறியத்தக்கவன் யார்?"

22. ஈசாக்கின் ஐம்பொறிகள் இப்பொழுது வெகுவாய்த் தளர்ந்

துபோயின. "அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போ
ன"படியினாலே, காதிற்கேட்ட சத்தத்தினால் உண்டான சமுசயத்தைப்
பிடிக்க அவருக்கு மனமில்லை. இதினாலே ரெபெக்காளின் தந்திரம்
சித்திபெற்றது.

சிருட்டிப்பில் விளங்கிய தேவனுடைய வல்லமை, ஞானம், தயா
ளம் இவற்றை என்னசொல்ல! இந்த உலகத்திலிருக்கிற எத்தனையோ
கோடி சனங்களில் 2 பேருடைய சத்தம் முதலாய், வித்தியாசம் அறி
யக்கூடாதபடி ஒன்றுபோலிருக்கிறதில்லை.

"சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள்"!
மாயக்காரருடைய காரியமும் இப்படியே இருக்கிறது. நீதிமான்களு
டைய பேச்சு அவர்கள் வாயிலிருக்கும், அவர்கள் கிரியைகளோ துன்
மார்க்கம்.

கடைசிநாளிலே தேவனுடைய நியாயத்தீர்ப்பும் யாக்கோபு தீர்த்
தபடியே இருக்கும். மத். 7: 21—28. 25: 34—46.

27—29. இந்தச் சமயத்தில் அவன் சொன்ன ஆசீர்வாதம் தீர்க்
கதரிசனமாக ஏசா, யாக்கோபு சந்ததியாரில் நிறைவேறுதல் அடைந்
திருக்கிறது.

இந்த ஆசீர்வாதம் ஏசாவுக்கென்று சொல்லப்பட்டதினாலே பொ
து நடையாயிருக்கிறது. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தையும்
வாக்குத்தத்த தேசத்தையும் குறித்து உரைக்கப்படவில்லை. மேலான
ஆவிக்குரிய ஆசீர்வாதம் யாக்கோபுக்குரியதென்று நினைத்ததினாலோ,
ஏசா விற்றுப்போட்ட சேஷ்டபுத்திரபாகத்தில் இது அடங்கியிருக்கி
றதென்று நினைத்ததினாலோ, அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை
ஏசா மதிக்கமாட்டானென்றறிந்ததினாலோ இப்படிப் பொது நடை
யாய் வசனித்தான்.

33. ஆசீர்வதிக்கப்பட்டவனை மறுபடியும் ஆசீர்வதித்ததுபோலிருக்
கிறது. 37. வா.

34. இந்த வாக்கியத்தில் சில காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

(1) எப்பேர்ப்பட்ட பொல்லாதவனுக்கும் ஞானகாரியங்களின்
மேல் பேராவல் இருக்கும். ஆனால் அதற்கேற்ற குண நடத்தையுமாத்
திரமிராது. எண். 23: 10.

(2) ஏசா இந்தச் சமயத்தில் "மிகவும் மனங்கசந்து உரத்த
சத்தமிட்டு அலறி" ஆற்றாத்துயரமடைந்தது நரகவாசிகளுடைய வே
தனைக்குக் குறிப்பாயிருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் இப்படியே
இருப்பார்கள்.

(3) புத்தியில்லாத கன்னிகைகளைப்போல் நரகத்துக்குப் போன
வர்கள் வியாகுலமடையும் முகாந்தரமும் ஏசா வியாகுலமடைந்த
முகாந்தரத்துக்கு ஒப்பாயிருக்கும். ஏசா கவலைத்தாழ்ச்சியினாலும்
பொறுமைத்தாழ்ச்சியினாலும் புத்தியீனமாய்க் கெட்டுப்போனான்.
அவன் கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமற்போயிற்று. அப்படியே
நரகவாசிகளுக்குமிருக்கும். இவர்கள் அலறுதலை அதிகப்படுத்துகிற
மூன்று இடி இவர்களுக்கு இருக்குமாம்.

I. இரட்சிப்பையும் கிருபையின் ஆசீர்வாதங்களையும் பெறக்கூடிய
நிலைமையிலிருந்தும் தப்பிப்போயிற்றே. மோட்ச வாசல்வரையும் வந்
தெட்டியும் உட்பிரவேசித்தோமில்லையே என்ற ஏக்கம். மத். 7: 21—23.

II. நித்தியத்தின்பேரிலுள்ள பூரண அறிவும் நிச்சயமும் முந்தின
திலும் பெரிய இடியாம். இவ்வுலகத்திலுள்ள மணல்களையெல்லாம்
பரலோகத்தில் சேர்க்கும்படி ஒரு தேவதூதன் 1000வருஷத்துக்கு ஒரு



முறை இவ்வுலகத்துக்குவந்து, முறைக்கு ஒரு பொடி மணலாக எடுத்
துச் சேர்த்துக்கொண்டேயிருந்தால் மணல்களெல்லாம் போய்ச்சேர
எத்தனையோ கோடி கோடி வருஷங்கள் செல்லும்! ஆனாலும் அந்த
மணல்களுக்கும் காலத்துக்கும் ஒரு முடிவு இருக்கும்! நித்தியத்துக்
கோ முடிவில்லை! "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவி
யாமலுமிருக்கும்.!"

III. "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி"
இல்லையே என்று காண்பது எல்லாவற்றிலும் பெரிய இடியாம். ஏசா
"கண்ணீர்விட்டு கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணமற்
போனான்." அப்படியே இவர்களும் தேவனிடத்தில் கொஞ்சமெனகி
லும் ஈவு இரக்கத்தைக் காணமாட்டார்கள்! "இதோ இப்பொழுதே
அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சண்ணிய நாள்."

30. 2 சாமு. 8: 14.

41. தன் நோக்கத்தை மற்றவர்களுக்கு வெளியிட்டிருப்பான்.

## படிப்பினை.

நீண்ட ஆயுசு வேண்டுமென்று எல்லாரும் விரும்புவார்கள். ஆனால்
அது, துன்பத்தை விரும்புவதற்குச் சமானந்தான்,—ஈசாக்கைப்போல
ஏற்கனவே மரணத்துக்கு ஆயத்தப்பட உமக்குப் பிரியமா? அப்படி
யானால் அவனைப்போல "உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்
தும்." யோபைப்போல், "மாறுதல் எப்போது வரும் என்று" காத்தி
ரும். இதற்கெல்லாம் முந்தி சிமியோனைப்போல், "கர்த்தருடைய
கிறிஸ்துவை" நீர் காணவேண்டும். லூக். 2: 26—32.—ஒருவிசை அற்
பமாயெண்ணித் தள்ளின நன்மையை மறுபடி பெறுகிறது மகா அரி
து.—இந்த உலகத்தில் அக்கிரமம் மிகுத்திருக்கிறதென்பது மெய்.
ஆனால் அதைப்பார்க்கிலும் அதிகமாய் நம்முடைய இருதயத்திலுண்டு.
இயல்பான இருதயம் நரகக்குழிதான். யாக்கோபு 3: 6. தேசசட்டம்,
மனச்சாட்சி, சுபாவ பயம், வெட்கம் ஆகிய இவற்றால் அந்த அக்
கிரமம் அடக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இந்த உலகம் இரத்
தப்பிரளயமாகிவிடும். 18—25.—மோட்சம் சேரவேண்டுமென்ற விருப்
பத்தோடேதான் ஏராளமானவர்கள் நரகத்துக்குப் போகிறார்கள்!

---

## உஅ. அதிகாரம்.

### யாக்கோபு கண்ட ஏணியின் தரிசனை.

---

2. "வீட்டுக்கு" பெத்துவேல் மரித்து வெகுகாலமாயிற்று.
9. இஸ்மவேல் முன்னமே மரித்துப்போனான். தேவனாலே சுதந்
தரத்துக்குப் புறம்பாக்கப்பட்ட இவன் குடும்பத்தில் ஏசா சம்பந்தங்
கொண்டது சரியானகாரியமல்ல.
10, 11. யாக்கோபை பரிவாரத்துடன் அனுப்பினால் ஏசா பொறா
மையால் மூர்க்கவெறிகொண்டு அவனைக் கொன்றுபோடுவானென்று
ரெபெக்காள் நினைத்து ஒன்றியாய் அனுப்பினாள்.
12. தேவன் மனிதர்பேரில் விசேஷமாய் தமக்கு பயந்து நடக்கி

றவர்கள்பேரில் காட்டுகிற தயவுள்ள பராமரிப்புக்கும் உறவுக்கும் இந்த ஏணி அடையாளமாயிருந்தது. சம்மனசுகள் தேவபணிவிடைக்காரராக அவருடைய திருச்சித்தத்தை நிறைவேற்றிவருகிறார்கள்.

தேவனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தராகிய இம்மானுவேலுக்கு இந்த ஏணி குறிப்பாயிருந்தது. அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் சேரமாட்டான்.

13—15. யாக்கோபு இத்தருணத்தில் தன் தமையனுக்குப் பயந்தவனாயும், தான் ஒருநாளும் அறியாத அந்நிய தேசத்துக்கு தனிமையாய் நீண்ட பிரயாணம்போகிறவனாயும், தான் போய்ச் சேரும் இடத்தில் நேரிடப்போகிற துன்பங்களை அறியாதவனாயும், தகப்பன் வீட்டு நினைவும் திவ்ய வாக்குத்தத்தங்கள்பேரிலுள்ள கவலையுமுள்ளவனாயுமிருந்ததால் கலக்கமும் திகைப்புமுற்றுப் படுத்திருந்தான். ஆபத்துக்கு உதவும் கருணைக்கடவுள், கண்ணுக்குக் காணக்கூடிய ரூபத்தோடு ஏணிக்குமேலாக நின்று இவனுக்குக் காணப்பட்டு, இவன் பிதாக்களுக்குப் பண்ணின உடன்படிக்கையை இவனுக்கு உறுதிப்படுத்தினதுமல்லாமல், தற்சமயத்துக்குவேண்டிய ஆறுதலான வாக்குத்தத்தங்களையும் அருளிச்செய்தார்.

16, 17. தான் அடைந்த தரிசனையைப்பற்றி கலக்கமும் சந்தோஷமுமுள்ளவனாய் தன் அபாத்திர தன்மையை உணர்ந்து இப்படிச் சொல்லுகிறான்.

18. "கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி" தேவன் இச்சமயத்தில் தனக்குச் செய்த உபகாரத்துக்காக தன் பிதாக்களைப்போல பலிபீடம் கட்டி அவரைத் துதிக்க ஆசையாயிருந்தான். ஆனால் அதற்குச் சமயமும் ஏதுவுமில்லை. ஆகையால் அவருடைய இரக்கத்தை ஞாபகம்பண்ணும்படியாயும், தான் பண்ணின பொருத்தனைகளை நிறைவேற்றும்படி திரும்பிவரும்போது தேவன் தனக்குக் காணப்பட்ட இந்த இடத்தை மயக்கமில்லாமல் அறியத்தக்க ஒரு ஞாபக சின்னமாயிருக்கும்படியாயும் இப்படிச் செய்தான்.

"அதின்மேல் எண்ணெய் வார்த்து" அந்தப் பூர்வீககாலத்தில் பலிபீடத்தைப் பிரதிஷ்டைசெய்யும்படி எண்ணெய் வார்க்கிற வழக்கமிருந்ததாக நினைக்கப்படுகிறது. ஆகையால் தான் திரும்பிவரும்போது தேவனுக்கு எவ்விதமும் பலிபீடம் கட்டவேண்டுமென்பதற்கு அடையாளமாக, தனக்கிருந்த அவாவினாலே இப்படிச்செய்தான்.

19. இவன் படுத்திருந்த இடத்துக்குச் சமீபமாய் லூஸ் என்ற ஊரிருந்ததாகத் தோன்றும். இதில் வாதுமை மரம் அதிகமாயிருந்ததினாலே இந்தப் பேருண்டானதென்று நினைக்கத்தக்கது. ஏனென்றால் லூஸ் என்ற வார்த்தை 30: 37-ல் வாதுமை என்று திருப்பப்பட்டிருக்கிறது. பெத்தேல் என்றால் தேவ வீடு என்றர்த்தம்.

20—22. தேவன் இவனுக்கு அருளின வாக்குத்தத்தங்களை நம்பி, சந்தோஷத்தினாலும் நன்றியறிதலினாலும் ஏவப்பட்டு இந்தப் பொருத்தனைபண்ணினான்.

"தசமபாகம்" தேவனுக்குத் தசமபாகம் கொடுக்கிறதைப்பற்றி வேதத்திற்சொல்லப்படுகிற முதல் திருஷ்டாந்தம் இதுவே. இதற்குமுந்தி ஆபிரகாம் மெல்கிசிதேக்குக்கு தசமபாகம் கொடுத்திருக்கிறான். பிற்காலத்தில் நியாயப்பிரமாணமாய்க் கற்பிக்கப்பட்டது. ஆகையால் இதைப்பற்றிப் பாரம்பரையாயாவது நேராயாவது தேவனுடைய சித்தம் முற்பிதாக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவேண்டுமென்று நினைக்கத்தக்கது.



### படிப்பினை.

நமக்கு வரப்போகிற துன்பங்கள் நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் அதற்கு எதிர்பார்த்திருக்கவேண்டும்.—தங்கள் பாவங்களை உணருகிறவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருந்து அவர்களுக்குச் செவிகொடுக்கிறார். அதிக நெருக்கமான துன்பத்தின் மத்தியில் இன்பமான ஆறுதல் அளிக்கப்படுவதை அநேகவிசை காண்கிறோம்.—தேவன் தமது மகிமைகளை அதிகமாய் வெளிப்படுத்திய இடங்களும் ஏற்பாடுகளும் கண்ணியமாய் எண்ணப்படவேண்டியது.—கிறிஸ்துவே நமக்கு வழிகாட்டியும், ஆறுதலும், மத்தியஸ்தரும், இம்மானுவேலுமாகிய மெய்யான ஏணியாயிருக்கிறபடியால், துன்மனச்சாட்சி நீங்க தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 15. அதிகாரம்.

சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சந்நியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப் போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—கர்த்தாகோபட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வேலீரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.

(தொடர்ச்சி.)

---

மறுதலித்தவர்கள் காரியத்தைக்குறித்து முயற்சியாயிருந்தவர்கள் கொர்நேலியு, சிப்பிரியன் என்ற கண்காணிமார் இருவர்மாத்திரமல்ல. அலெக்சந்திரியாக் கண்காணியாரான தியோனிசியு என்பவரும் மேற்படியார்களோடு பூரணமாயிணங்கியிருந்து, தமக்குச் சமீபமான சபைகளுக்கேயன்றி லவோதிக்கேயாவிலும், அர்மினியாவிலுமுதலாயிருந்த சபைகளுக்கும் நிருபங்கள் அனுப்பினார். நோவேஷனுடைய கொள்கைக்குச் சற்று சார்பாயிருந்ததாகச் சொல்லப்படுகிற பிரபலமுள்ள கண்காணியார் அந்தியோகியாவின் கண்காணியாரான பேபியு என்பவர் ஒருவர்தான். கொர்நேலியு என்பவர் கண்காணியாராக நியமகம் பெற்றவுடனே அவருக்கு நிருபம் அனுப்பினதல்லாமலும், தியோனிசியு என்பவரும் அவருக்கு எழுதியிருந்தார். அதன்பேரில் 252௵த்துவக்கத்தில் நோவேஷன் காரியத்தை யோசிப்பதற்காக அந்தியோகியாவில் ஒரு சங்கங்கூடினது. பேபியு என்பவர் சங்கங்கூடுவதற்குமுன்னதாகவே சிவித்துப்போனார். ஆகிலும் அவருக்குப்பின் அந்த ஆதிக்

கத்தையடைந்த தேமேத்திரியேனு என்பவர் தியோனிசியு கண்காணியாருடைய அபிப்பிராயத்துக்கு இணங்கினவரானபடியால், மேற்படி சங்கத்தாருடைய தீர்ப்பு நோவேஷனுக்குப் பிரதிகூலமாகவேயிருந்திருக்குமென்று நினைக்கத்தக்கது. முக்கியமான சபைகளிலெல்லாம் ஒருமைப்பாடு இருந்தது ஆச்சரியம். கப்பதோக்கியாவிலுள்ள செசாரியாவின் கண்காணியாரான பர்மிலியேனு என்பவரைப்பற்றியும், பலஸ்தீனாவிலுள்ள செசாரியாக் கண்காணியாரான தேவுதிஸ்து என்பவரைப்பற்றியும் மேலே கவனித்திருக்கிறோமே. எருசலேம் கண்காணியாராகிய மாசபேனே, தீருவில் மாரினு, இலவோதிக்கேயாவில் எலியடோரு, தருசுவில் எல்லேனுமுதலியவர்களும் பிரபலமான கண்காணிமார்கள்தான். இவர்களெல்லாரும இது விஷயத்தில் ஏக ஐக்கியமாய் நடந்தார்கள். அதுமாத்திரமல்ல, சிரியா, அரோபியா, மெசாப்பொத்தாமியா, பொந்து, பிசினியா இந்தேசங்களிலுள்ள சபைகளெல்லாம் மேற்காட்டிய பிரகாரமே நடந்ததாகவுஞ் சொல்லியிருக்கிறது.

ஆரமான இந்தச் சபைகளுக்குள் மேறகாட்டிய நிருபப்போக்குவரவு நடந்தது 251 ௵ துன்பம் வெகுதூரம் தணிந்தபின்புதான். குறித்த வருஷம் டிசம்பர் மாதத்தில் தேசியு இராயன் கொலையுண்டான். அதன்பேரில் கல்லு, ஒஸ்திலியேனு என்ற இருவர் மகுடாபிஷேகம் பெற்று இராச்சியபாரங் கைக்கொண்டார்கள். அவர்களில் ஒஸ்திலியேனு என்பவன் கொஞ்சக்காலத்துக்குள்ளாக பயங்கரமான ஒரு கொள்ளை நோயினால் மரித்தான். மேற்படி கொள்ளை நோய் பதினைந்து வருஷமாய் நிலைத்து, அநேகாயிரம் பேரை வாரிக்கொண்டுபோனதல்லாமலும், சனங்கள திரும்பவும் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவதற்கு முக்கிய ஏதுவாயிற்று. சிப்பிரியன் கண்காணியார் 252 ௵ மே மாசத்தில் ஒரு சங்கம் கூடிவரச்செய்து, மறுதலித்தவர்கள் செய்யவேண்டிய தபசுமுதலிய திட்டங்களை ஏற்படுத்தியிருந்தார். ஆகிலும் மறுதலித்து, அப்புறம மெய்மனஸ்தாபமடைந்து சபையிற்சேர விரும்பினவர்கள் மறுபடியும் துன்பப்பட ஏதுவானபடியால், மேற்படி வருஷத்தில் திரும்பவும் ஓர் சங்கங்கூடிவரச்செய்து, துவக்கமுதலே உத்தம மனஸ்தாபமடைந்தவர்களை உடனே சபையின் ஐக்கியத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் தேவர்களுக்கு பலியிடவேண்டுமென்று தேசியு இராயன் பிறப்பித்திருந்த சட்டத்தை கல்லு இராயன் திரும்பவும் ஏற்படுத்தினான். அதனால் கொர்நேலியு கண்காணியார் செப்டெம்பர் மாசத்தில் மரணாக்கினையடைந்தார். அவருக்குப் பின் அந்த ஆதிக்கத்தையடைந்த லூசியு என்பவர் ரோமாபுரியைவிட்டு ஓடிப்போக நேரிட்டது. அவர் அவ்வருஷக்கடைசியில் திரும்பிவந்தபோதிலும், பிற்பாடும் அவருக்குத் துன்பம் நேரிட்டு மறுவருஷம் மார்ச்சு மாசத்தில் அவரும் இரத்தச்சாட்சியானார்.

இதனிடையில் சிப்பிரியனுக்குட்பட்ட குருக்கள்மாரில் அநேகர் சிறையிற்போடப்பட்டும், மரண ஆக்கினையடைந்தும் வந்தும், கண்காணியார் பட்டணத்தைவிட்டு ஓடிப்போகாமல் அங்கேயிருந்து உபாயமாய்த் தப்பிக்கொண்டார். இந்தத் துன்பகாலத்தில் கிறிஸ்தவர்களுடைய உதாரகுணம் வெகுவாய் விளங்கினது. மிலேச்சர் கூட்டம் ஒன்று நுமிதியாவின் ஓர் பாகத்தில் படையெடுத்துவந்து, அங்குள்ள அநேகரை சிறைபிடித்துக்கொண்டுபோய்விட்டார்கள். உடனே அவர்களை மீட்டுக்கொள்ளும்படிக்கு சிப்பிரியன் கண்காணியார் 30,000 ரூபாய்வரையுஞ் சேர்த்தார். கண்காணியார் அதிஷ்டம், இந்த இரண்டாம் துன்பம் வெ



குகாலம் நிலைக்கவில்லை. கல்லு இராயன் பதினேழு மாதம் அரசபுரிவதற்குள்ளாக கொலையுண்டு செத்தான். அதின்பேரில் வலீரியன் என்பவன் தனக்கிருந்த வேறொரு எதிரியையும் முறியடித்து இராச்சியபாரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். வலீரியனுக்கு இக்காலத்தில் எழுபது வயசு. அவன் எப்பொழுதும் கிறிஸ்தவர்களுக்கு தயைதாக்ஷணியங் காண்பித்துவந்தவன். ஆகையால் அவன் சிம்மாசனம் ஏறினது கிறிஸ்தவர்கள் துன்பத்துக்கு நீங்கலாவார்கள் என்பதற்கு குறிப்பாயிருந்தது. அவர்களுக்கு நேரிட்ட வருத்தமெல்லாம் பெருவாரி நோயினால் அஞ்ஞானிகளுக்கும் நேரிட்டதுதான். இவ்விஷயத்தின்பேரில் சிப்பிரியன் என்பவர் ஒரு நூல் எழுதிப் பிரசுரஞ்செய்தார். இந்தக் கொடிய ஆபத்துக்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் காண்பித்த உருக்கமான பட்சமும், அஞ்ஞானிகளிடத்தில் விளங்கிய மனக்கடினமும், அன்புத்தாட்சியும ஒன்றையொன்று துலாம்பரமாய்க் காண்பிக்காநின்றதே. ஒரிஜன் என்பவர் ஏககாலத்திலேயே தமது இம்மையின் ஓட்டத்தை முடித்தார் என்று சொல்ல நியாயமுண்டு. தேசியு இராயன் கொலையுண்டு செத்ததுவரையில் அவர சிறைச்சாலையிலேயேயிருந்து, அப்புறம் தீருபட்டணத்திற்போய் வசித்ததாகத் தோன்றுகிறது. அவர் எழுபது வயசாயிருக்கையில் சீவித்துப்போனதாகச் சொல்லியிருக்கிறபடியால், 253-ம் வருஷம்போல் அப்படி நடந்திருக்கவேண்டும்.

அவருடைய அபிப்பிராயங்களை ஆட்சேபித்ததற்கும் அதனிமித்தமாய் அவருக்குக் கொஞ்சந் தொல்லைகள் நேரிட்டதற்கும் மேலே குறிப்புகள் கண்டோமே. என்றாலும் அவருடைய சீவகாலத்திலாவது மரித்தபின்னும் சில வருஷங்களாயாவது, மேற்படி விபரீதம் அதிகப்பட்டிருந்ததாக நினைக்க இடமில்லை. அவர் தேறின வித்வானாக மதிக்கப்பட்டதுமன்றி, கிறிஸ்துமார்க்க சார்பான வீரசிரேஷ்டர்களில் ஒருவனாகவுமிருந்தார். அதினால் வெகுகாலமாய் அவருடைய பேர்பிரஸ்தாபம் நிலைபெற்றிருந்தது. அநேகர் அவர் எழுதின நூல்களைப் படிக்கிறதோடும், பிரதியெழுதுவதோடும் திருப்திகொள்ளாமல் அவரை ஒரு கலாசாலைத் தலைவராகப் பாவித்து மட்டுமிஞ்சினவிதமாய் அவரைக் கனிசப்படுத்திவந்தார்கள். இந்த நூற்றாண்டின் கடைசியிலே தீருப்பட்டணத்துக் கண்காணியாராகிய மெதோடியஸ் என்பவர் ஒரிஜனுடைய நூல்களைத் தாக்கினதாக வாசிக்கிறோம். அதுமுதல் பல விஷயங்களில் அவரை தப்பிதக்காரன் என்றெண்ணினதுமல்லாமல், கண்காணிமார்களும் சங்கத்தார்களும் அவருடைய நூல்களைத் தவறானவைகளென்றும் தீர்த்தார்கள். ஆகிலும் இப்பொழுதிருக்கிற அவருடைய நூல்களைப்பார்க்க அதிகமான நூல்களை வாசித்துப்பார்க்கக்கூடியவர்களாயிருந்தவர்கள் அவருடைய அபிப்பிராயங்களைக்குறித்து இவ்வளவு கடினமான தீர்ப்புச்சொல்ல ஏவப்படவில்லை. கட்சிக்காரருக்குரிய குணத்தோடு விசாரிக்கப்படுகிற எந்தக்காரியமும் விபரீதமான நினைவுகளுக்கும் பேச்சுக்களுக்கும் இடமுள்ளதாகுமே; அதுபோலவே இவர் காரியமுமிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. எப்படியும் ஒரிஜன் என்பவருடைய உத்தேசயூகங்களையெல்லாம் சரியானவைகளென்று சொல்லக்கூடாவிடினும், விசுவாசத்துக்குரிய மூலாதாரமான உபதேசங்களில் அவரைத் தவறினவரென்று தீர்க்கவேபடாது.

## A Family Commentary on the Sermon on the Mount.

# மலைப்பிரசங்க வியாக்கியானம்.

(தொடர்ச்சி.)

மத்தேயு 7: 13, 14.

"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; ஏனெனில், கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் :—சீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."

இரட்சகர் சொன்ன இதைப்போலொத்த வசனமொன்றை லூக்கா 13 ம் அதிகாரத்திற் காண்கிறோம். அவருடைய சீஷரில் "ஒருவன் அவரை நோக்கி, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தானோவென்று கேட்டான்; அதற்கு அவர் சொன்னது: இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்; ஏனென்றால், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். கிறிஸ்து தமது சீஷர்கள் மற்றவர்களைக்குறித்து அறியவிரும்பின விருப்பத்துக்குத் திருத்திசெய்ய அத்தனையாய் விரும்பாமல், அவர்களே தங்களுக்காகத் தெரிந்துகொள்ளவேண்டிய பாதையின்னதென்று அவர்களுக்கு உணர்த்த விரும்பினாரென்று இந்த வார்த்தைகளால் துலங்குகிறது. அவர் என்னசொல்வது போலிருக்கிறதென்றால், வாசல் நிச்சயமாகவே இடுக்கமானதுதான்; அந்த வாசல் இதுதானென்று அதின் இடுக்கத்தினால் அறிந்துகொள்வீர்கள். அது எவ்வளவு இடுக்கமாயிருந்தாலும், அந்த வாசலால் நீங்களே தவறாமல் உட்பிரவேசிக்க வாஞ்சையாய்ப் பிரயாசப்படுங்கள். முக்கியமான இந்த விஷயத்தில், அநேகர் தங்களை வஞ்சிக்கிறார்கள். அந்தப் பெரிய நியாயத்தீர்ப்புநாளிலே மோட்சஇராச்சியத்திற் பிரவேசிக்கலாமென்று அவர்கள் எண்ணி யெதிர்பார்த்திருந்தாலும், உட்பிரவேசிக்க அவர்களுக்கு இடங்கொடுக்கப்படாதென்பதையும் நினையுங்களென்று சொல்வதுபோலாயிற்று.

நாம் சிந்தித்துவருகிற இவ்வசனத்திலடங்கிய இரட்சகருடைய வார்த்தைகளிலும், மேலே சொன்னதுக்கொத்த எச்சரிப்பு அடங்கியிருக்கிறது. இரண்டு மூல வாக்கியங்களின் பொருட்களையும் ஒன்றாய் வைத்து, அவைகளிலடங்கிய எச்சரிப்பை நமக்கு உபயோகப்படுத்தப் பார்ப்போமாக. மறுமையில் மோட்சானந்தத்தை அடையலாமென்று எண்ணிக்கொண்டிருக்கிற இக்காலத்தோராகிய அநேகர், அதை அடையமாட்டார்களென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவர்களுடைய இந்த ஏமாற்றத்துக்கு மூலகாரணமென்னவென்றால், அநேகர் நாங்கள் எங்கள் அயலாராகிய திரள்கூட்டத்தைப்போல் நல்லவர்களாக இருக்கிறோம். இந்தத் திரள்கூட்டம் இரட்சிக்கப்படாமற்போவது கூடாத காரியமென்று எண்ணுவதே அதற்கு மூலகாரணம். "சீவனுக்குப்போ



கிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்பதை அநேகர் நம்புகிறதில்லை. திரளான பேர் அழிவடைகிறது கூடாத காரியமென்பதுபோலும், தேவன் தமது சிருட்டிகளில் பெரும்பான்மையோருக்குத் தண்டனைத் தீர்ப்புச்செய்வாரென்று உத்தேசிப்பது, அவருடைய பேருக்கே அபகீர்த்தியென்பதுபோலும், அநேகர் எண்ணுகிறார்கள். மேலே எடுத்துக்காட்டிய இரு வசனங்களிலும் அடங்கிய வார்த்தைகள், இந்த எண்ணத்துக்கு விரோதமாயிருக்கிறது. எப்படியென்றால், ஒரோருவன் அவனது பாவங்களினிமித்தந் தண்டிக்கப்படுவது நீதியென்று எண்ணுவோமானால், அவனுடைய பாவங்களுக்கொத்த பாவங்களைச்செய்து, அவனைப்போல் பாவத்துக்காகத் துயரப்படாதிருக்கிற பேர்களின் தொகை, பெரிதானாலுஞ் சரி, சிறிதானாலுஞ் சரி; அவர்களும் அவனைப்போல் தண்டனைக்கேதுவானவர்களாகவேயிருக்கிறார்களென்று எண்ணுவதற்குத் தடையேயில்லை. அவர்களுந் தண்டிக்கப்படுவது எதார்த்தம்.

ஆனால் இந்த வசனத்தில் கிறிஸ்து சொல்லியிருக்கிற போதகம் அப்போஸ்தலருடைய காலத்துக்கு மாத்திரம் அடுத்ததாயிருக்கமாட்டாது; இந்தக்காலத்துக்கும், தேசத்துக்கும், நாம் வசிக்கும் இடத்துக்கும் நம்மைச் சூழ்ந்திருக்கும் சிநேகிதர் அறிமுகமானவர்களுக்கும் வாக்கியத்தின் சப்தார்த்தப்படி பூரணமாய்ச் செல்லாதென்று சொல்ல எவ்வளவும் இடமில்லையாவென்று யாராவது கேட்பதாயிருக்கும். ஆம்! இந்தக் காரியத்தைத் திட்டமாய் அறிந்துகொள்வது மிகவும் அவசரந்தான். ஆனதால், ஒவ்வொருவனுந் தன் காலத்திலிருக்கிறவர்களுடைய தன்மை ஆசாரங்களையும், விசேஷமாய்த்தான் சேர்ந்திருக்கும் கூட்டத்தின் இயற்கை, ஒழுக்க வழக்கங்களையும் கூர்மையாய்க் கவனித்துப் பார்க்கக்கடவன். அப்படிக் கவனிக்கும்போதும், அநேகர் இரட்சிப்புக்கு அவசியமானதின்னதென்பதைத் தங்கள் அயலாருடைய புழக்கங்களை மாதிரியாக வைத்துக்கொண்டு தப்பிதமாய்த் தீர்மானிப்பதுபோல தீர்மானியாமல், தான் நம்புவதாகச் சொல்லுகிற வேதஎழுத்துக்களைக்கொண்டு தீர்மானிக்கக்கடவன். மேலே சொல்லிய ஆட்சேபனைகளுக்குச் சமாதானமின்னதென்று அறிய, ஆவலோடும், கவனத்தோடும், பயபத்தியோடும் ஆராயும் மனமுடையவனாய், அவன் புதிய ஏற்பாட்டை தன் கையிலெடுத்துக்கொண்டு, இரட்சகர் உரைத்திருப்பதும், நாம் சிந்தித்துவருவதுமாகிய மலைப்பிரசங்கத்திற் சொல்லியிருக்கிறபடி, அவருடைய உத்தம சீஷருக்கு இருக்கவேண்டிய குறிப்புகளைச் சிந்தித்துப் பார்ப்பார்களானால், இந்த வசனத்திற் சொல்லியிருக்கிற காரியம் இக்காலத்துக்குஞ் செல்லத்தக்கதென்பது தெளிவாயிருக்கிறதென்று அவனுக்குத் தெரியவரும். பத்தியுள்ள ஒரு வேதசாஸ்திரி சொல்லியிருக்கிறதாவது, "நீங்கள் வசிக்கிற பட்டணம், கிராமங்களிலும், உங்கள் அயலிலுமிருக்கிறவர்களுடைய நிலைமையைச் சற்று கவனித்துப் பாருங்கள். அவர்களுக்குள்ளே பேரோதினவர்களைத் தெரிந்துகொண்டு கவனித்துப் பார்ப்பீர்களானால் ஒருவேளை நாகரீகமுள்ள பிரபுக்களை, உபசரணையுள்ள துரைமக்களை, உண்மையும் யோக்கியதையுமுள்ள வர்த்தகரை, சாக்கிரதையும் சமர்த்துமுள்ள சிற்பாசாரிகளை, உழைப்புள்ள கிருஷிகரை, நாணயமான கூலியாட்களைக் காண்பீர்கள். ஆனாலோ அவர்களுக்குள்ளே அசட்டைசெய்யப்பட்ட கிறிஸ்தவ குணங்குறியுள்ளவர்களைக் காண்பது எவ்வளவு அரிதாயிருக்கும். மனிதர் பொதுவாக தங்கள் நடத்தைகளில் நேர்மையுள்ளவர்கள், பொருந்திய ஒழுக்கமுள்ளவர்கள், மரியாதை, உபசரணை, தயாளமுள்ளவர்கள் என்

று எண்ணப்படுவதையும், கீர்த்திப்பிரதாபத்துக்கும் சுயபிரயோசனத்
துக்குமேற்ற இவைபோலொத்த மற்ற ஒழுக்கமுடையவர்களென்னப்
படுவதையும் விரும்புகிறார்கள். இவைகள்தான் அவர்கள் நாடித்தேடு
கிற பிரதான கீர்த்திகள். ஆனால் நாம் புதியஏற்பாட்டை மிகுந்த மனத்
தாழ்மையோடும், நன்றியறிதலோடும், அன்போடும் நம்முடைய கை
களிலெடுத்து நமமுடைய நல் வாழ்வடங்கியதென்று நாம் மதிக்கும்
வேறெந்த புத்தகத்தையாவது நாம் ஆராய்ந்து பார்க்கும்வண்ணமாக
இதையும் ஆராயந்து பார்த்து, கிறிஸ்தவர்களிடத்திலிருக்கவேண்டிய
நடத்தைகள் எவைகளென்று சோதித்தறிவோமாக. ஏனென்றால், பொ
துவான பிரசைகளின் நடக்கை ஒழுக்கங்கள் அந்தந்தக் காலத்தில் எப்
படியெப்படியிருந்தாலும், கிறிஸ்துமார்க்கம் அப்போஸ்தலருடைய
நாட்களில் இருந்ததுபோலவே இப்போதுமிருக்கிறது. "அக்காலத்துக்
கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டியிருந்த குணங்குறிகளே இக்காலத்
துக் கிறிஸ்தவர்களுக்கும் இருக்கவேண்டும்" என்கிறார்.
கிறிஸ்து இந்த வசனத்திற் சொல்லியிருக்கிற பயங்கரமான வார்த்
தைகளை இக்காலத்து மனிதர் அதின் திட்டமான அர்த்தப்படி நம்பாதி
ருப்பது மாத்திரமல்ல, எந்தக் கருத்தாகவானாலும் அதை எவ்வளவும்
நம்புகிறதில்லை. இந்த வேதவாக்கியம் மற்ற வேதவாக்கியங்களைப்
போலவே அவர்கள் கொண்டிருக்கிற தப்பெண்ணங்களுக்கும் விருப்
பங்களுக்கும் ஒவ்வாதிருப்பதால் இது அவர்களிடத்தில் அதிகாரமற்ற
தாயிருக்கிறது. மேலும் அவர்கள் இந்த வசனத்தை நேர் விரோதமா
கப் புரட்டுகிறார்கள். தாங்களாவது தங்கள் சிநேகிதராவது வேதஞ்
சொல்லுகிற அளவுக்குப் பத்திமான்களாகிறதில்லையென்று ஒருவேளை
அவர்கள் அறிக்கையிட்டாலும், இந்த வசனத்துக்கு முற்றிலும் விரோ
தமான எண்ணத்தினால், அதாவது தாங்களும் தங்கள் வகையராக்களும்
பெருந்தொகையுள்ளோராயிருப்பதால், அந்தப் பெருந்தொகை தங்
களை மோசத்துக்கு விலக்கிக் காக்குமென்ற இந்த எண்ணத்தினால் தங்
களைத் தேற்றிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்கள் இதைப் புரட்
டி, சீவனுக்குப்போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது
இருக்கவேண்டும்; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்களும் அநேகரா
யிருக்கவேண்டும். கேட்டுக்குப்போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்
கமுமாயிருக்கிறது இருக்கவேண்டும்; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள்
சிலராயிருப்பார்களென்று சொல்வதாக இருக்கிறது. இவ்விதமாக கிறி
ஸ்து சொன்ன இந்த நல் வசனத்தைக்கொண்டு எச்சரிப்படைந்து
நாங்கள் அநேகரையொத்திருப்பதால் தப்பிதக்காரராயிருக்கிறோமோ
வென்று தங்களைக்குறித்துச் சந்தேகங்கொள்வதற்குப் பதிலாக, விசால
வழி கெட்ட வழியாயிருந்தும் அதின் விசாலமோ அது நல்ல வழியெ
ன்பதற்கு அடையாளம் என்பதுபோல தப்பிதமாய் நினைத்து அதைத்
தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் காலட்சேபம்பண்ணு
கிறதுபோல நாமுங் காலட்சேபம்பண்ணி, அவர்கள் நினைப்பதுபோல
நாமும் நினைத்து, அவர்கள் பேசுவதுபோல நாமும் பேசி, அவர்கள்
செய்வதுபோல நாமும் செய்வதுண்டானால், நடுங்குவோமாக.
இரண்டு கூட்டத்தார் உலகத்திலுண்டு. ஒன்று தேவபத்தியுள்ளவர்
களுடைய சிறு கூட்டம். இவர்களுடைய வயனங்கள் கீர்த்தியற்றதும்
அதனமுமாயிருக்கும். இவர்கள் பொதுவான மற்ற மனிதருக்கு வேறு
பட்டிருப்பார்கள். இவர்கள் அதிகப் பத்தியாகவும் கண்டிப்பாகவும்
நாட்கழிப்பதால் இவர்களைக்குறித்து இவர்கள் எட்டாத உன்னதத்திற்
போகிறவர்கள் என்று பொதுவான மற்றவர்கள் சொல்லுவார்கள்.



அதிகத் தொகையுள்ள வேறொரு பெருங்கூட்டமுமுண்டு. அவர்கள்
உலகமுழுதும் நாங்கள்தானென்று நினைக்கிறார்கள். அவர்கள் பயமில்
லாமல் நாட்கழித்துவருகிறார்கள். அவர்களுக்குச் சோதனையைப்பற்றி
அச்சமில்லை. பாவத்தைப்பற்றி நடுக்கமில்லை. ஆவிக்குரிய வருத்தங்க
ளும் உபத்திரவங்களும் அவர்களுக்கில்லை. அவர்கள் பெரும்பாலும்
தங்கள் மனவிருப்பத்தின்படி நடக்கிறார்கள். உலகம் சத்துருவென்று
அவர்கள் சமுசயப்படாததால் மற்றவர்களுடைய மாதிரியையே தங்
கள் நடக்கைக்குச் சட்டமாக்கிக்கொள்ளுகிறார்கள். தேசாசாரமே இப்
பேர்ப்பட்டவர்களுக்கு வேதமார்க்கம்; அவர்கள் கூட்டத்தாரின் திரட்
சியே அவர்களுடைய நம்பிக்கைக்கு ஆதாரம். அவர்கள் சொல்வதா
வது, நாங்கள் இரட்சிக்கப்படாமற்போனால் உலகத்தின் பெரும்பாகம்
ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகும். தேவன் தமது சிருட்டிகளில் இத்தனை
பெரிய தொகைப்பேருக்குத் தண்டனைத் தீர்ப்புச்செய்யத்தக்க நிஷ்டூ
ரல்ல, அப்படி அவர் ஒருபோதுந் தண்டிக்கமாட்டாரென்கிறார்கள். தங்
களுக்கு மறுமையிற் பாக்கியங் கிடைக்குமென்று இப்பேர்ப்பட்ட ஆதா
ரத்தின் பேரிலேதான் திரளான சனங்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.
கிறிஸ்து எங்களுக்காக மரித்தார். அவர் எங்களை நிச்சயமாகவே இரட்
சிப்பார். அவருடைய வார்த்தையை நம்புகிறோம் என்று சொன்னாலும்,
அவர் தானே "சீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்க
முமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று சொல்
லியிருக்கிறதை மறந்தவர்கள்போலிருக்கிறார்கள்.
இப்போதும் இவ்விரண்டில் பெருங்கூட்டத்தையா, சிறு கூட்டத்தை
யா' எந்தக் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறோம்? சிறு மந்தையே! பயப்
படாதே! உங்களுக்கு இராச்சியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரிய
மாயிருக்கிறார் (லூக். 12: 32) என்று நமது இரட்சகர் சொல்லுகிறார்.
நோவா தன் காலத்திலுள்ளவர்களுக்குள்ளே நீதிமானாயிருந்தான். அப்
போது பூமியில் திரளான சனங்கள் அவனோடு குடியிருந்தார்கள். என்
றாலும் நோவாவும் அவன் வீட்டாரும் மாத்திரம் தேவனுடைய தயவை
பெற்றுக்கொண்டார்கள். லோத்தின் நாட்களில் சோதோம் கொமோ
ராவில் பத்து நீதிமான்கள் முதலாயில்லை. எலியாவின் காலத்தில் இஸ்ர
வேல் இராச்சியம் முழுவதிலும் ஏழாயிரம் பேர் மாத்திரம் பாகாலுக்
கு முழந்தாள் முடக்காதிருந்தார்கள். கிறிஸ்துவின் நாட்களில் குருக்
களும் சனங்களுஞ் சேர்ந்த முழுக்கூட்டமும் அவருக்கு விரோதமாய்
நின்றார்கள். இவ்விதமாய் வேதசரித்திரங்களும் பிரமாணங்களும், திர
ளான சனங்கள் ஏமாறி பிடித்துக்கொண்டிருக்கிற மோசமான நியா
யத்தை நம்பக்கூடாதென்று நம்மை எச்சரிக்கின்றன. சருவவல்லமை
யுள்ள தேவனால் சனங்கள் அங்கீகரிக்கப்படுவார்களோ அல்லவோ
என்று நிதானித்தறிவதற்கு அந்தந்தக் காலத்தாருடைய நடத்தையே
பிரமாணமாகுமானால், கெட்டுப்போயிருக்கிற ஒரு தேசத்தாரில், அல்
லது சமயத்தாரில், அல்லது ஒரு கூட்டத்தில் சீர்திருத்தம் எப்படி எந்
தக் காலத்திலாகிலும் தொடங்கக்கூடும்? மனிதர் தேவனுடைய வார்த்
தையை தங்களுக்குச் சட்டமும் தங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமுமாக்
கிக்கொண்டு, தாங்கள் சேர்ந்திருக்கும் சனங்களின் பெருந்தொகை
தங்களை இரட்சிக்குமென்ற எண்ணத்தை எப்போது விடப்படிக்கிறார்
களோ, அப்போதுதான் கேட்டுக்குப்போகிற வழி விசாலமாயிருப்ப
தும் ஒழியும். அதற்குமுன்னல்ல.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

## XIII. பத்துக் கன்னிகைகள்.

மத்தேயு 25: 1—13.

(தொடர்ச்சி.)

அவ்வளவுதான் அவர்களுக்குக் கிடைத்தது. புத்தியீனமுள்ளவர்கள்
தங்களுடைய குறைவை நீக்கிக்கொள்ளப்போயிருந்தபோது மணவா
ளன் வந்தான். ஆயத்தமாயிருந்தவர்கள் அதாவது, பாத்திரங்களிலிருந்
து எண்ணெய்விட்டு பிரகாசிக்கச்செய்தவர்கள் அவனோடேகூட கலி
யாண வீட்டிற்குட் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.
உள்ளேயிருந்தவர்கள் பத்திரத்தோடு தடையில்லாமல் சந்தோஷத்
தை அனுபவிக்கத்தக்கதாகவும், புறம்பானவர்களை முற்றிலுந் தள்ளத்
தக்கதாகவுங் கதவு அடைபட்டது. 1 மோசே 7: 16. வெளி. 3; 12. எந்
தக் கதவு? கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருகிறவர்களுக்கு ஆபிரகாம்
ஈசாக்கு யாக்கோபோடு தேவனுடைய இராட்சியத்தில் பந்தியிருக்கும்
படிக்குத் திறக்கப்பட்ட கதவு. என்னிடத்தில் வருகிறவனை ஒருபோ
துந் தள்ளமாட்டேனென்று சொல்லுகிற கதவு. இப்போது அது எவ்
வளவாய்த் திறந்திருக்கிறது. அப்பொழுது அது என்றென்றைக்கும்
அடைக்கப்பட்டிருக்கும். கொலைபாதகர் வருகிறார்கள். அவர்களும் ஏற்
றுக்கொள்ளப்படுகிறார்கள். ஆயக்காரரும் வேசிகளும் வருகிறார்கள்.
அவர்களும் உள்ளே பிரவேசிக்கிறார்கள். அசுத்தரும் வேசிக்கள்ளரும்
திருடரும் வருகிறார்கள். எப்படிப்பட்ட பாவிகள் வந்தாலுந் திறக்கப்
பட்ட கதவு அவர்களைத் தடுக்கிறதில்லை. கிறிஸ்துவாகிய கதவு மன்னிக்
கிறதற்குத் தயைபெருத்தவர். எந்த அக்கிரம அளவுக்கும் மிஞ்சின
தயையுள்ளவர். அவர்தான் அப்போது என்னசொல்லுவார்? கதவு
அடைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய பச்சாதாபத்துக்கும் எந்தச்
செயத்துக்கும் எந்தப் பெருமூச்சுக்கும் இனி இடமில்லை. விக்கிரகாரா
தனையைச்செய்த ஆரோனையும், விபசாரத்தையுங் கொலைபாதகத்தை
யுஞ் செய்த தாவீதையும், பேதுரு மூன்றுவிசை மறுதலித்தும் திறவு
கோல்களைப் பத்திரப்படுத்தும்படி அவன் இடங்கொடுத்து அவனையும்
ஏற்றுக்கொண்ட—(லூக். 16: 26.) கதவு அடைக்கப்பட்டுப்போச்சுது.

பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து ஆண்டவரே, ஆண்டவரே எங்
களுக்குத் திறக்கவேண்டுமென்றார்கள். இப்பொழுது எண்ணெய் கிடை
த்ததினாலேயல்ல, அதை வீணாய்த் தேடின பிறகு அது இல்லாததை
மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். நியாயத்தீர்ப்புச்
செலுத்தும் வேளையில் இரக்கத்திற்காகக் கெஞ்சுகிறார்கள். ஆண்டவ
ரேயென்று மணவாளனைப்பார்த்துக் கூப்பிட்டதினால் அவரோடு நெ
ருங்கின சம்பந்தமுள்ளவர்களென்று காட்டுகிறார்கள். ஆண்டவரே,
ஆண்டவரே என்று இரண்டுதரஞ் சொன்னது சிலர் சொல்லுகிறபடி
வீணம்பிக்கையைக் காட்டுகிறதல்ல, தங்களை ஏற்றுக்கொள்ளவேண்
டுமென்று கெஞ்சுகிறதாகவிருக்கிறது. 1 மோசே 22; 11. 2 மோசே 3:
4. 1 சாமு. 3: 10. மத்தேயு 27; 46. லூக். 6; 24. 10; 41. 22; 31, அப்.



9: 4. அவர்களுடைய தப்பான நடத்தையினாலே அடைக்கப்பட்ட கத
வு இனி திறக்கமாட்டாதென்றுங், கேட்கிறது வீணாயிருக்குமென்றும்
அவர்களை எண்ணும்படி செய்தது. அப்படித்தான் காரியமுமிருந்தது.
அவர்கள் கெஞ்சினதற்கு உள்ளேயிருந்து பிறந்த தீர்ப்பென்ன! உங்
களை அறியேனென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
மணவாளன் அவர்களை அறியமாட்டானென்ற பொருளல்ல. நல்ல மே
ய்ப்பன் தன்னுடுகளை அறிந்து அவைகளால் அறியப்பட்டு இருக்கிற
கருத்தின்படி அவர்களை அறியமாட்டார். இந்த அறிவு இருபட்சத்தி
லுமிருக்கவேண்டியது. அகுஸ்தீன் நன்றாய்ச் சொல்லுகிறபடி நானுங்
களை அறியமாட்டேனென்று சொல்லுகிறது, நீங்களென்னை அறியமாட்
டீர்களென்பதற்குச் சரி. லூக்கா 13: 25 ல் இதைப்போலொத்த வாக்
கியத்தைப் பார்க்கலாம். எசமான் சாயந்தரங் குறித்தநேரத்தில் வீட்
டுக்கு வராத வேலைக்காரர் அடைக்கப்பட்ட கதவைத் தட்டும்போது,
எவ்வளவு கெஞ்சியும் எசமான் திறவாமல் அவர்களை முற்றிலும் அன்
னியராக எண்ணிப் பேசுகிறார்.

புத்தியீனமுள்ள கன்னிகைகள் கொஞ்சக்காலத்துக்காகமாத்திரமல்
ல, முற்றிலும் விருந்துக்கபாத்திரராய்த் தள்ளப்பட்டார்கள். அப்ப
டியல்லவென்றெண்ணுகிற அனேகருண்டு. ஆகிலும் முந்தின அபிப்
பிராயந்தான் சரியானதென்றெண்ண நியாயமுண்டு. ஏசாயா 65:
13. இதைப்பற்றி ஒருவர் சொல்லுகிறதென்னவென்றால், நாலுவித
வகுப்பாருண்டு. முதல்தரமானவர்களுக்கு தேவனுடைய இராட்சி
யத்தில் நிறைவான பிரவேசங் கிடைக்கிறது. அவர்கள் துறையை
நோக்கி நல்ல காற்றடிக்கிற சமையத்தில் பிரயாணம்பண்ணுகிறவர்
கள். வேறு சிலரோ, இரட்சிக்கப்பட்டாலும், கப்பல் சேதமடைந்த
கப்பற்காரரைப்போல வருத்தத்தோடு கரைசேருகிறவர்கள். மறுபட்
சத்தில் அழிவுக்குக்கொண்டுபோகிற விசாலமான பாதையில் தாரா
ளமாய்ப் பிரயாணம்பண்ணுகிறவர்களுண்டு. அவர்களுடைய பாவங்
கள் நியாயத்தீர்ப்புக்கு அவர்களை முந்தும். வேறுசிலரோ தேவனு
டைய இராட்சியத்திற்குத் தூரத்திலிராதவர்களாகக் காணப்பட்டா
லுங் கடைசியில் அதை இழந்துபோகிறவர்கள். புத்தியீனரான கன்னி
கைகள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். கிரீடத்துக்கும் இராட்சியத்
துக்கும் எவ்வளவோ சமீபமாயிருந்தும் அதை இழந்துவிட்டவர்களா
னபடியால் மகா நிற்பாக்கியராகக் காணப்படுகிறார்கள். நாம் இப்ப
டிப்பட்டவர்களாகாதபடிக்கு நம்மைப்பார்த்துக் கர்த்தர் சொல்லுகி
றதென்ன! உவமையைக் கேட்டவர்களுக்கு அவர் சொன்னது சபை
யிலுள்ள யாவருக்கும் ஒவ்வொரு காலத்திலுள்ள ஒவ்வொருவனுக்
கும் சொல்லுகிறார். மனிதகுமாரன் வரும் நாளையாவது நாழிகையை
யாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்துக்கொண்டு இருங்
கள். மத்தேயு 25: 44. அந்த நாளில் நிச்சயமாகவே ஆயத்தப்பட்டி
ருக்கவேண்டுமானால், அந்த நாளை அறியாத நீங்கள் ஒவ்வொரு நாளும்
ஆயத்தப்பட்டிருக்கவேண்டும். அந்த நாளில் ஆயத்தப்படாதவர்கள்
என்றும் ஆயத்தப்படாதவர்கள்தான். புத்தியீனமுள்ள கன்னிகைகளு
க்கு வந்த ஆக்கினை ஜீவநாள்முழுதும் நிறைவேற்றவேண்டிய வேலை
ஒரு நிமிஷத்தில் முடியாதென்று காட்டுகிறது. நாளையாவது நாழி
கையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

சபைக்கு விசேஷித்த சம்பவமுண்டாகும்போதெல்லாம் ஆவியின்
கிரியை வெளிப்படும்போதெல்லாம கர்த்தர் கடைசியாக வருகிறது
போல்தான் அந்தச் சமையங்களிலும் அவருடைய நாமத்தினால் அழை

க்கப்பட்டிருக்கிறவர்கள் ஆத்துமப்பிரகாரமாகச் செத்து உயிர்த்து இருக்கிறதற்குத்தக்கதாக புத்தியுள்ளவர்களென்றும், புத்தியீனரென்றும் பிரிக்கப்படுகிறார்கள். எப்படியென்றால், பெந்தேகோஸ்து நாளில் ஆவியானவர் சபையின்மேல் ஊற்றப்பட்டபோது இரட்சகர் வந்தார். இஸ்ரவேலில் புத்தியுள்ளவர்கள் அவரோடு விருந்துக்குப்போனார்கள். புத்தியீனரோ புறம்பே தள்ளப்பட்டார்கள். மார்க்க சீர்திருத்தமுண்டான காலத்திலும் அப்படித்தான். எண்ணெய் யாருக்கிருந்ததோ அவர்கள் உள்ளே பிரவேசித்தார்கள். வெறும் விளக்குகள் வைத்திருந்தவர்கள் அதாவது, பக்தியின் வல்லமையில்லாமல் ரூபத்தைமாத்திரம் வைத்திருந்தவர்கள் புறம்பேயிருந்தார்கள். இவ்விரண்டு திருஷ்டாந்தரங்களும் கடைசியில் நடக்கப்போகிறதைக் காட்டுகிறது.

இந்த உவமைக்கும், இராஜகுமாரனுடைய கலியாண உவமைக்கும் இருக்கிற சம்பந்தத்தைக் கவனிக்கிறதுமல்லாமல், இரண்டுக்கும் இருக்கிற வித்தியாசத்திற்கும் முகாந்தரம்பார்க்கவேண்டும், அபாத்திரனான அந்த விருந்தாடி கலியாண விருந்துக்கு உள்ளேபோயிருந்தான். மத்தேயு 22: 11. புத்தியீனமுள்ள கன்னிகைகளோ உள்ளே அழைக்கப்படவுமில்லை. உவமைக்குத்தக்கதாகத் தற்செயலாய் இந்த வித்தியாசமுண்டானதென்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லி லேசாய்த் தள்ளிவிடாமல் சரியான முகாந்தரத்தைத் தேடவேண்டும். கலியாண விருந்தின் சந்தோஷம் அங்கே சொல்லியிருக்கிறது வேறே, இங்கே சொல்லியிருக்கிறது வேறே. அது போராடுந் திருச்சபையைக் குறிக்கிறது. இது வெற்றிசிறந்த திருச்சபையைக் குறிக்கிறது. அதில் கலியாணவஸ்திரமில்லாதவர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இதில் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்துக்கொள்ள அருள் பெற்றவர்கள்மாத்திரந்தான் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. வெளி 19: 8. அதற்குச் சுவிசேஷ எக்காளத்தால் மனுஷர் அழைக்கப்பட்டார்கள். இதற்குப் பிரதான தூதனுடைய எக்காளத்தால் அழைக்கப்படுகிறார்கள். அதில் பிரவேசித்தவர்கள் வெளியேபோகலாம், அல்லது தள்ளப்படலாம். இதிற் பிரவேசிக்கிறவர்கள் வெளியே போகிறதுமில்லை, தள்ளப்படுகிறதுமில்லை. ஆதலால்தான் கதவு அடைக்கப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. லூக்கா 12: 35—38-ல் இதைப்போலொத்த ஒரு உவமை சொல்லியிருக்கிறது. அங்கே வேலைக்காரராக அவர்கள் செய்யும் ஊழியத்தைக்குறித்துப் பேசியிருக்கிறது. அரை கள் கட்டப்பட்டு, விளக்குகள் பிடிக்கிறவர்களாகக் காட்டியிருக்கிற ...: 17. 1 பேதுரு 1: 13. அகுஸ்தீன் என்பவர் சொல்லுது. எ... ...களோடு இதை முடிக்கிறோம். இப்பொழுது நாம் பிர... ...த்தக்கதாக ...ம், நம்முடைய விளக்குகள் தற்கால உலக சோதனை ...ங்களாலும் மங்குகிறது. சோதனையாகிய காற்றுகள் ...துப்போடாமல் நன்றாய்ப் பிரகாசிக்கும்படி தூண்டி ...ம் எவ்வளவோ எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

---

## சமாசாரத்திரட்டு.

## Summary of News.

**ஐரோப்பா.** அங்கிலேய ... ...திலுள்ள கனாமுனைக்கோட்... ...ய துரைத்தனத்தார் அஷந்தீ பிரதேசத் ...டக்கு சமீபத்தில் இருப்புப்பாதை ஒன்



று உண்டாக்கும்படியாக இருப்புச்சலாகைகளைக் கப்பலில் ஏற்றினார்கள். ஸ்ரீசாமுவேல் பேக்கர் துரை தமது பத்தினியோடு சுகமே சீமைவந்துசேர்ந்தார். அங்கிலேய தேசத்திற்குப் புறம்பாய் மஹா ராஜாத்தியவர்களுக்கு ஆதீனமாயிருக்கிற பிரஜைகள் இருபது கோடி. பிராஞ்சியர் புருஷிய ஜாமானியருக்குக் கொடுக்கவேண்டிய அபராதப் பணம் கொடுபட்டுத் தீர்ந்ததே. துரைத்தனம் இன்னும் உறுதியானசீருக்கு வரவில்லை. மக்மேஹன் துரை பிரஜாதிபத்தியத் தலைவராய் அதிகாரஞ்செலுத்திவருகிறார். இதுவரை எல்லாரும் அவ்வித ஆளுகைக்கு இணங்கி நடந்தும், பிராஞ்சியரிற் பெரும்பாலார் பிரஜாதிபத்தியப்பிரியரல்லர். இனிப் பிராஞ்சியரை ஆளுகைசெய்ய வருபவர் யாரென்பதை இப்போது உத்தேசித்துச் சொல்லக்கூடியதின்று. கொஞ்சக்காலத்துக்குள் சர்வதேசசபையார் ஒருங்குகூடும்பொழுது, ஒருவேளை இதைப்பற்றி ஒரு ஏற்பாடுசெய்வார்கள். ராஜாதிகாரமே ஸ்தாபிக்கப்படுமென்று அநேகர் எண்ணுகிறார்கள். புருஷியர் பிராஞ்சியரை ஜெயித்ததினால் தாங்கள் ஜெயபதிகளென்பதை பின்வருங்காலத்தில் உள்ளவர்களுக்கு ஞாபகப்படுத்தும்பொருட்டு, ஓர் பிரதிமூர்த்தியை தங்கள் ராஜதானியாகிய பெர்லின் நகரத்தில் நிறுத்தியிருக்கிறார்கள். ஸ்பானியதேசத்தின் ராஜபட்சத்தாரும் பிரஜாதிபத்தியப்பிரியரும் கடலிலும் தரையிலும் அதிக தைரியத்தோடே போர்செய்துவருகிறார்கள். இத்தாலிய துரைத்தனத்திற்கும் பிராஞ்சிய துரைத்தனத்திற்கும் ஏதோ ஒரு வழக்கு உண்டாயிற்றென்று கேள்வி. இத்தாலிய அரசனாகிய விக்டர் இம்மானுவேல் வியனா ராஜதானியைவிட்டுப் புறப்பட்டபின்பு, பெர்லின் ராஜதானிக்குப்போய் அங்கே அதிக பக்ஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டார். இத்தாலிய துரைத்தனத்தார் ரோமாபுரியிலுள்ள தர்மமடங்களைக் கைவசப்படுத்திக்கொண்டார்கள்.

**ஆபிரிக்கா.** நாம் முன் தெரிவித்தபடி ஆபிரிக்காவைச்சேர்ந்த அஷந்தீ பிரதேசத்திலுள்ள மிலேச்சர் கலகமெழுப்பி அங்கேயுள்ள அங்கிலேயாமுதலியோரை துன்பப்படுத்தினதால், அபிசினியாவுக்குச் செய்ததுபோல், அவர்களையும் தண்டித்து அடக்கி காரிருள்மூடிய அவ்வஞ்ஞான தேசத்தில் சீர்திருத்தம், நாகரீகம், கல்வி, நீதி, சன்மார்க்கமிவற்றை ஜனங்களுக்குள்ளே அபிவிர்த்திசெய்வதற்கு இங்கிலீஷ் துரைத்தனத்தார் பிரயாசப்படுகிறார்கள். இது அவசியமான காரிந்தானே. இது காரியத்தை நிறைவேற்ற அதிகாரம்பெற்றுப் போயிருக்கிறவர் கர்னல் வில்ஸலி என்பவர். கைக்கொண்ட காரியத்தை நிதானமாய் முடிக்கத்தக்கவராம்.

**அமேரிக்கா.** அமேரிக்காவைச்சேர்ந்த நியுயோர்க்கில் உண்டாக்கப்பட்ட ஆகாயககப்பல் சென்றமீ 7௳ நிலத்தைவிட்டெழும்பி ஐரோப்பாவுக்குப போகப் புறப்பட்டது. ஐக்கிய நாடுகளைச்சேர்ந்த கனெட்டிக்கட் பிரதேசத்தின் மேலாய் மேகங்களை ஊடறுத்துச் செல்லுகையில் பெருங்காற்றில் எதிர்ப்பட அதில் ஏறினவர்கள் தம்முயிரைக் காக்கும்படி அதை தரைமட்டும் இறங்கும்படிபண்ணினார்கள். ஆகவே ஆகாயக்கப்பல் பயணத்தைப்பற்றியிருந்த அச்சம் ஒழிந்தது.

**இந்தியா.** சென்னையிலிருந்து கூடலூர்வழியாய் தஞ்சாவூருக்குப் போகும் இருப்புப்பாதை செய்யத் தொடங்கியிருக்கிறதாம். சென்னைக் கவர்னரவர்கள் வருகிறமாசத்தில் மைசூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகபட்டினமென்னும் இடங்களுக்குப் போவார்கள். சென்னையில வீதி இருப்புப்பாதை வேலை நடக்கப்போகிறது. இது சென்னை நகர்வாசிகளுக்கு அதிக உபயோகமான காரியமே.

---

நவம்பர்மீ நாள் 30. ஐப்பசிமீ 18உ முதல், கார்த்திகைமீ 17உ வரை.

| வாரம். | [illegible] தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௧௮ | கர்த்தர் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கினார்: யாத். 20:11. |
| ஞா | 2 | ௧௯ | உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு. 12. |
| தி | 3 | ௨0 | பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக. 16. |
| செ | 4 | ௨௧ | பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. 17. |
| பு | 5 | ௨௨ | எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார். எஸ்றா 8:23. |
| வி | 6 | ௨௩ | நீங்கள் கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள். 28. |
| வெ | 7 | ௨௪ | எங்கள் தேவனுடைய கரம் எங்கள்மேலிருந்தது. 31. |
| ச | 8 | ௨௫ | எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்குமேலாகப் பெருகிற்று. 9:6. |
| ஞா | 9 | ௨௬ | என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக. சங்கீதம் 88:2. |
| தி | 10 | ௨௭ | என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது. 3. |
| செ | 11 | ௨௮ | உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது. 7. |
| பு | 12 | ௨௯ | உமக்குநேராக என் கைகளை விரிக்கிறேன். 9. |
| வி | 13 | ௩0 | ஏன் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர்? 14. |
| வெ | 14 | ௧ | நான் சிறுமைப்பட்டவனாயிருக்கிறேன். 15. |
| ச | 15 | ௨ | உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம்பண்ணுகிறது. 16. |
| ஞா | 16 | ௩ | தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். நீதி. 3:34. |
| தி | 17 | ௪ | ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள். 35. |
| செ | 18 | ௫ | மதிகேடர் கனவீனத்தை அடைவார்கள். 35. |
| பு | 19 | ௬ | புத்தியை அடையும்படி கவனியுங்கள். 4:1. |
| வி | 20 | ௭ | என் உபதேசத்தை விடாதிருங்கள். 2. |
| வெ | 21 | ௮ | என் இரட்சிப்பு வெளிப்படும். ஏசாயா 51:5. |
| ச | 22 | ௯ | என் நீதி அற்றுப்போவதில்லை. 6. |
| ஞா | 23 | ௧0 | மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலிருங்கள். 7. |
| தி | 24 | ௧௧ | அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன். ஓசியா 14:4. |
| செ | 25 | ௧௨ | என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று. 4. |
| பு | 26 | ௧௩ | அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம். யோவா. 11:16. |
| வி | 27 | ௧௪ | நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். 21. |
| வெ | 28 | ௧௫ | நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். ரோமர் 10:10. |
| ச | 29 | ௧௬ | இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். 10. |
| ஞா | 30 | ௧௭ | அவரை விசுவாசிக்கிறவன் வெட்கப்படுவதில்லை. 11. |

## விசேஷித்த நாட்கள்.

2. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் இருபத்தோராம் ஞாயிறு.
4. பௌரணமி.
9. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்திரண்டாம் ஞாயிறு.
16. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்துமூன்றும் ஞாயிறு.
20. அமாவாசை.
23. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்துநான்காம் ஞாயிறு.
30. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள முதலாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 25. December. No. 12.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 222
Christian Church History. ... ... ... ... ... 225
Notes on Genesis. ... ... ... ... ... ... 229
The Parables of Christ... ... ... ... ... ... 232
United Prayer Meeting. ... ... ... ... ... 235
Summary of News. ... ... ... ... ... ... 238


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௨௨௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௨௨௫
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௨௨௯
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ௨௩௨
ஐக்கிய ஜெப அழைப்பு. ... ... ... ... ௨௩௫
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௨௩௮



**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1873.

# நற்போதகம்.

௰௨. டிசம்பர்மீ. ௲௮௱௯௰.




## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### ரூத்தின் சரித்திரம்.

ரூத் 1, 2.

ஒருவர் ஒருநாள் தம் சிநேகிதர் ஒருவர் வீட்டிற்குப்போய் வாசற்படியில் நின்று கதவைத் தட்டினார். எத்தனை விசையோ தட்டியும் கதவைத் திறப்பாரில்லை. ஒருவேளை வீட்டில் ஒருவருமில்லையோ? இருக்கிறார்கள். அதோ வீட்டிக்குள்ளே ஒரு சத்தங் கேட்கிறதே. ஒரு ஆள் மாத்திரமல்ல, இரண்டுமூன்று பேருக்கு அதிகமிருக்கவேண்டுமென்று அதினால் தெரியவருகிறது. ஆகலால் மறுபடியுங் கதவைத் தட்டிக்கொண்டே காத்து நின்றார். கடைசியிலே வேலைக்காரி ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் கதவைத் திறந்துவிட்டு, "ஐயா நான் பிள்ளைகளண்டையிலிருந்தேன், அவர்களெல்லாரும் சண்டைபோட்டு சந்தடிசெய்துகொண்டிருக்கிறார்கள், அதினாலே மிகவும் துக்கப்படுகிறேன்" என்றாள். வீட்டுக்குள் சத்தமுண்டான காரணம் இதுதான். மேல் வீட்டிலே கோபமான பேச்சுக்களும் அழுகையின் சத்தங்களும் இப்பொழுது அதிகமதிகமாய்க் கேட்டது. உடனே ஒரு சிறுபையன் ஓடிவந்து வாசலில் நின்ற அவரை உள்ளே வரும்படி கேட்டுக்கொண்டான். "இந்த அழுகையும் சந்தடியும் ஏன்" என்று அவர் கேட்க, "ஐயா தகப்பனும் தாயாரும் வெளியேபோய் விட்டார்கள், அதினால் இவ்வளவு நிர்ப்பாக்கியமாயிருக்கிறது" என்று சொன்னான். "ஏன் அப்படியிருக்கிறது" என்று அவர் மறுபடியும் கேட்டபொழுது, "நாங்களெல்லாரும் எங்களிஷ்டப்படி நடக்க விடப்பட்டிருக்கிறோம், எங்களை விசாரிக்கிறதற்கு ஒருவருமில்லை" என்றான். நல்லது, அது ஆச்சரியமல்லவா! அவர்கள் தங்களிஷ்டப்படி நடக்க இடம்பெற்றிருந்தது தகப்பனார் வீட்டுக்குத் திரும்பும் வரையில் எல்லாம் தாறுமாறும் நிர்ப்பாக்கியமுமாயிருப்பதற்கு ஏதுவாயிறறே.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இவ்வாறு தங்களிஷ்டப்படி நடக்கவிடுகிறது விவேகமோ அவிவேகமோ என்று நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள். வாக்குதத்த தேசத்திற் குடியிருந்த கர்த்தருடைய சனங்களும் ஒருகாலத்தில் இந்தப் பிள்ளைகளைப்போலவே நடக்க விடப்பட்டிருந்தார்கள். அவர்கள் காண்பித்த முரட்டாட்டத்துக்கும் நடப்பித்த அக்கிரமத்துக்கும் தண்டனையாகவும் தேவன் இவ்விதம் செய்தாரென்றும் சொல்லலாம். அவர்கள் தங்கள் காரியத்தைத் தாங்களே அனுகூலமாய் நடப்பித்துக்கொள்ளக்கூடியவர்களென்று நினைத்தார்கள். அவ்வாறே செய்துபார்க்க தேவனும் அவர்களுக்கு இடங்கொடுத்தார். இவ்விதமாய் அதிக வல்லமையும் ஞானமுமுள்ள ஒருவருடைய விசாரணையும் ஒத்தாசையும் அவர்களுக்கு அவசியந் தேவையென்று உணர்த்தினதில், தேவனுடைய ஞானத்தையும் இரக்கத்தையும் நன்றாய்க் கண்டுகொள்ளுகிறோம்.

நியாயாதிபதிகளின் ஆகமத்தின் கடைசி வாக்கியத்தால் இதெல்லாம் காண்பிக்கப்படுகிறது. "அந்த நாட்களிலே இஸ்ரவேலிலே இராசாவில்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்." அவர்கள் தங்கள் மனம்போன போக்கிலே நடந்தார்கள். அதன் முடிவு, மேற்காட்டிய பிள்ளைகளுக்கு நேரிட்டதுபோல, தாறுமாறும் நிர்ப்பாக்கியமுமாயிருந்தது. ஆகையால் இந்த ஆகமம் பயங்கரமான கொடிய செய்கைகளால் நிறைந்திருக்கிறது. ஒரு பிள்ளை அதை வாசித்துவிட்டுச் சொன்னது "இஸ்ரவேலர் எப்பொழுதும் தொல்லையில் அகப்படுகிறதுபோல காணப்படுகிறதே" என்றது. அது உள்ளதுதான். என்றாலும் தேவன் இன்னமும் அவர்களைக் கைவிடவில்லை. அவர்கள் மாறிமாறிப் பாவஞ்செய்தார்கள், மாறிமாறி மனந்திரும்பினார்கள். பாவஞ்செய்தபோது, மோவாபியர் கானானியர் மீதியானியர் பெலிஸ்தியர் முதலிய சத்துருக்கள் கையில் அகப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். மனந்திரும்பினபொழுது, தேவன் தமது சனங்களுக்காகச் சண்டைசெய்து அவர்களை மீட்கும்படிக்கு பல யுத்தவீரர்களை யனுப்பினார். பாராக்கு கிதேயோன் அபிமெலேக ஈப்தா சிம்சோன் முதலிய அநேகருடைய சரித்திரங்களை நீங்கள் வாசித்திருப்பீர்களே. நியாயாதிபதிகளின் ஆகமத்தில் உத்தேசம நானூற்றைம்பது வருஷச் சரித்திரம் அடங்கியிருக்கிறது. பெலிஸ்தர் முதலியவர்களோடு செய்த சண்டைகள்தான் துக்கமான பகுதியென்று நினைக்கலாகாது. இஸ்ரவேலர் பலமுறையும் நன்றிகெட்டவர்களாகி தேவனை மறந்து விக்கிரகாராதனைசெய்தார்களே. சத்துருக்கள் தொல்லையில்லாமல் சமாதானமாயிருந்த காலத்திலும், அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரோடொருவர் பயங்கரமானவிதமாய்ச் சண்டைசெய்தார்கள். சிம்சோனுடைய சரித்திரத்துக்குப் பின்வரும் கடைசி ஐந்து அதிகாரங்களிலும் அவர்களுடைய சரித்திரத்திலெல்லாம் மகா வெட்கமான பகுதி அடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது.

இவ்வளவு தாறுமாறும் அக்கிரமமும் நிர்ப்பாக்கியமும் இருக்கிற இடத்தில், பக்தி அன்பு சமாதானம் முதலிய சற்குணங்கள் விளங்கிய ஒரே ஒரு சிறு சரித்திரத்தை மாத்திரங் காண்கிறோம். வசந்த காலத் துவக்கத்தில் பிரகாசமான ஓர் நாளில், அழகிய மலையடிவாரங்களில் விளைந்த வாற்கோதுமை வயல்கள் வெயிலிலே வெள்ளையாயும், கோதுமை வயல்கள் இன்னம் பச்சையாயும் அசைவாடிக்கொண்டிருக்கின்றன. மலைச்சரிவுகளிலே திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் காயும் பூவும் நிறைந்தவைகளாய் அடுக்கடுக்காகக் காணப்படுகின்றன. அதோ அந்த மலை மீது தணிந்த மதில் சூழ்ந்த சிறு பட்டணம்ஒன்று தெரிகிறதே, அதுதான் பெத்லேகேம் ஊர். அநேகம்பேர் பாடிக்கொண்டு அறுப்புக்குப் புறப்பட்டு வருகிறதைப் பாருங்கள். அவர்கள் அவ்வளவாய்ச் சந்தோஷப்படுகிறது சரிதான். தேசத்தில் வெகுகாலமாய்ப் பஞ்சமுண்டாயிருந்தது. வருஷாவருஷம் மழை போதுமான அளவு வருஷிக்காததினாலே விதைப்பும் அறுப்பும் அதிகமிருந்ததில்லை. சண்

டைகளினாலும் சீமை பாழாய்ப்போயிற்று. பலசாலிகள் பொசிக்கப் போசனங் கிடையாதபடியால் வாடி வதங்கிப்போனார்கள். சிறுபிள்ளைகள் பசியினால் வருந்தி யழுதும் ஆகாரங் கிடைக்கவில்லை. அநேகம் வீடுகள் இடிந்து பாழாய்ப்போயின. வாலிபர் பிழைப்புக்காகவோ யுத்தத்துக்கு தப்பிக்கொள்ளவோ வேறு பட்டணங்களுக்கும் அந்நிய தேசங்களுக்கும் போய்விட்டார்கள். இப்பொழுதோ சமாதானம் தலைப்பட்டிருக்கிறது. நிலங்களெல்லாம் பயிராகியிருக்கிறது. தேவன் தமது சூரியனைப் பிரகாசிக்கவும் மழையை வருஷிக்கவும்பண்ணியிருக்கிறார். பயிர் விளைந்து அறுப்புக்கு ஆயத்தமாயிருக்கிறது.

ஆயினும் அதோ இரண்டு பேர் நிற்கிறார்களே, அவர்கள் முகத்திலே அத்தனை சந்தோஷத்தைக் காணோம். அவர்களிருவரும் அறுப்புக்குப் புறப்பட்டுப்போகிற சனங்களை துக்கத்தோடு பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களிருவரும் ஸ்திரீ சனங்கள். அவர்கள் உடுப்பைப் பார்க்கும்போது கைம்பெண்கள் என்று தெரியவருகிறது. ஒருத்தி மற்றவளைப் பார்க்க வயசுசென்றவள், அவள் முகத்தைக் கவனிக்கையில் மிகுந்த கஸ்தியடைந்தவளாகத் தோன்றுகிறது. ஆகிலும் அவள் இந்த இடத்துக்கு அந்நியமானவளாக விளங்குகிறதில்லை. அவள் வயல்களைப் பார்க்கிறதும் திராட்சத்தோட்டங்களைப் பார்க்கிறதும் பட்டணத்தின் மதிலைக் கவனிக்கிறதும், பட்டணத்திலிருந்து வெளியே வருகிற எல்லாரோடும் பழகினவள்போல அவர்களை ஒருவரொருவராய் உற்றுப் பார்க்கிறதும். அவர்களில் மிகுதியானவர்கள் பெயரைச்சொல்லிக் கூப்பிடுகிறதுமாயிருக்கிறாளே. அவர்களோ அவள் போட்டுக்கொண்டிருந்த கைம்பெண்ணுக்குரிய முக்காட்டினாலும் வாடிப்போயிருந்த அவளுடைய துக்க முகத்தினாலும் முதலில் அவளை இன்னாளென்று அறிந்துகொள்ளவில்லை. அவளை அடுத்துக்கொண்டிருந்த அந்த பாலியக் கைம்பெண்ணுக்கோ, அவ்விடமெல்லாம் நூதனமாகவேயிருந்தது. அங்கே அவள் காண்கிறதெல்லாம் தன் தேசத்திலுள்ளவைகளுக்கு மிகவும் வித்தியாசமாயிருந்தபடியால், ஒவ்வொன்றையும் பார்த்து ஆச்சரியப்படுகிறாள். அவள் முகத்திலும் துக்கங் காணப்படுகிறது. அவள் தன் கண்ணிலிருந்து ஓடுகிற கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மற்றவள் காதிலே என்னமோ சொல்லுகிறாளே, அதென்னவென்று கேளுங்கள். "நீர் போகிற இடத்துக்கு நானும் போவேன், நீர் தங்குகிற இடத்தில் நானும் தங்குவேன், உம்முடைய சனம் என்னுடைய சனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்பது தான்.

அந்தக் கைம்பெண்களுடைய சரித்திரத்தை நீங்கள் அறிவீர்களே. அவர்கள் ஏன் துக்கமுகமாயிருக்கிறார்களென்றும், அவர்கள் பெத்லெகேமுக்கு திரும்பிவந்த முகாந்தரம் இன்னதென்றும் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னே தேசத்தில் பஞ்சம் ஆரம்பமானது. அப்பொழுது அப்பட்டணத்திற் குடியிருந்த எலிமெலேக் என்று பெயர்கொண்ட ஒரு மனிதன் தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, தன் பெண்சாதியையும் குமாரர் இருவரையுங் கூட்டிக்கொண்டு, யோர்தான் நதியைக்கடந்து மோவாபியர் தேசத்துக்குப் போனான். அங்கே போனபிறகு எலிமெலேக் இறந்துபோக, குமாரர் இருவரும் மோவாபியரான பெண்களை விவாகஞ்செய்துகொண்டு, சிறிதுகாலம் தங்கள் தாயாரோடு வாசம்பண்ணினார்கள். அப்படியிருக்கையில் அந்த வீட்டில் துன்பம் நுழைந்தது. குமாரர் இருவரும் மரித்துப்போனார்கள். சந்தோஷம் நிறைந்திருந்த அந்த வீட்டிலே மூன்று கைம்பெண்கள் மாத்திரம் தனித்தார்கள். இஸ்ர



வேல் ஸ்திரீயான நகோமியும், மோவாபியரான அவள் மருமக்கள்மார் ரூத்து, ஓர்ப்பாள் என்றவர்களுமே. நகோமி தன் ஜெனன ஊருக்குத் திரும்பிப்போக விரும்பினாள். அது இயல்புதானே. அவ்விடத்திலே பஞ்சம் தெளிந்துபோயிற்று என்று அவள் கேள்விப்பட்டபடியால், அவள் தன் மருக்கள்மாரிடத்தில் வழியனுப்பிக்கொண்டு ஒன்றியாய்த் தன்னூருக்கு நடந்துபோக நினைத்தாள். அப்படியே ஓர்ப்பாள் துக்கப்பட்டாலும், தன் சனத்தண்டைக்கும் தன் தேசத்து தேவர்களைக் கும்பிடவும் போய்விட்டாள். ரூத்து என்பவளோ நகோமியோடே கூடப்போகத் தீர்மானித்து உறுதியாய் நின்றாள். அதினாலே இருவருமாக பயணம்பண்ணினார்கள். அது நெடும்பயணமாயிருந்ததல்லாமலும் துக்கமானதாயுமிருந்திருக்குமே. ஆகிலும் அவ்விரு கைம்பெண்களுக்கும் ஆறுதலில்லாதிருக்கவுமில்லை. எப்படியென்றால், நகோமி என் ஜனனவூரைக் காண்பேனென்று நினைத்ததினாலும், ரூத்து என் மாமியாரைவிடாமல் அவருடைய தேசத்தையும் தேவனையுந் தெரிந்துகொண்டதில் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டேன் என்ற உணர்வினாலும் ஆறுதலோடு நடந்துபோனார்கள்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 15. அதிகாரம்.

*சபையிலுண்டான அமரிக்கையும் சீர்கேடும்,—டேசியு இராயன் காலத்துத் துன்பம்,—சன்னியாசம் ஆரம்பித்த வரலாறு,—மறுதலித்துப் போனவர்களைக் குறித்த விர்த்தாந்தம்,—கர்த்தாகோ பட்டணத்திலும் ரோமாபுரியிலும் நேரிட்ட பிரிவினைகள்,—சபைகளிலிருந்த ஐக்கியம்,—வலேரியன் இராயனால் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த அனுகூலம்,—சபைகளுக்கிருந்த அன்னியோன்ய சம்பந்தம்,—தப்பறைக்காரர் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றிய வாக்குவாதம் என்றிவைகள் அடங்கியது.*

(தொடர்ச்சி.)

ஐரோப்பாக்கண்டத்தின் மேற்கிலுள்ள சபைகள் தர்க்க விஷயங்களில் சம்பந்தப்படவும் மற்றச் சபைகளோடு நிருபப்போக்குவரவுசெய்யவும் போதுமானபடி பெருகியிருந்தது. ரோமாபுரியிலிருந்தோ வேறிடங்களிலிருந்தோ பல மிஷனரிமார் தேசியு இராயன் காலத்தில் கவுல் தேசத்துக்குப்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்களென்று நினைக்க இடமுண்டு. அவர்களிற் சிலர் வடக்கே பாரிஸ் பட்டணம்வரையும் போயிருந்தார்களென்றும் தெரியவருகிறது. இவ்விதமாய் அத்தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் புதுப்பெலனடைந்து பெருகினது.

இந்த மிஷனரிமாருடைய பெயர்கள் இன்னமிருக்கிறது. அவைகளிற் சிலவை அப்போஸ்தலன்மார்களுடைய பெயர்களாயும் வேறு சிலவை புதிய ஏற்பாட்டிலுள்ள வேறு பெயர்களாயுமிருக்கின்றன. இதினாலே

கவுல் தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் பிரபலியமான சரித்திரத்தை விவ
ரிக்கும் ஆதி நூல்களிலே மிகுந்த குழப்பம் காணப்படுகிறது. அத்தே
சத்திலுள்ள சில சபைகள் முதலாம் நூற்றாண்டிலேயே ஸ்தாபிக்கப்
பட்டவைகள் என்றுஞ் சொலலியிருக்கிறது. என்றாலும் மேலே காட்
டிய காலத்திலும் பிரகாரமுமே அவர்கள் சுவிசேஷத்தை யேற்றுக்
கொண்டார்களென்று சொல்வது தான் தகுதி. இச்சரித்திரத்தின் துவக்
கத்தில் குறிப்பித்திருக்கிறபடி கவுல் தேசத்தின் தென்பாரிசத்துக்கு
அப்போஸ்தலன்மார்களில் யாராவது அவர்களுடைய சிஷர்களாவது
போய் முதல்முதல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபைகளை ஸ்தாபித்
தார்களென்பதும் தப்பிதமன்று.

இச்சிமையில் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலே கிறிஸ்து
மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததென்று கவனித்தோமே. தேசியு இரா
யன் மூலமாயுண்டான துன்பத்தினாலும் மறுதலித்தவர்கள் விஷயத்
தில் ரோமாபுரியிலும் கர்த்தாகோப் பட்டணத்திலும் முன் சமாதான
மாய்த் தீர்ந்த வாக்குவாதம் மறுபடியும் உயிர்கொண்டது. ஆர்லீஸ் பட்
டணத்துக் கண்காணியாரான மார்சியேனு என்பவர் நோவேஷனுடை
ய கண்டிதமான கொள்கைகளுக்குச் சார்பாயிருந்தபடியால், லீயரன்ஸ
பட்டணத்துக் கண்காணியாராகிய பாஸ்தினு என்பவரும் அயலிடங்க
ளிலுள்ள மற்றுங் கண்காணிமார்களும் ஒன்றுசேர்ந்து தற்காலத்தில்
ரோமைக் கண்காணியாராயிருந்த ஸ்தேவான் என்பவருக்கும் சிபபிரி
யன் கண்காணியாருக்கும் எழுதியனுப்பினார்கள். மேற்கிலுள்ள சிரேஷ்
டமான இவ்விரண்டு சபைகளின் கண்காணிமார்களிடத்திலும் அவர்கள்
ஆலோசிக்கிறது இயல்புதான். கால்தேசத்துக் கண்காணிமார்களுடைய
அபிப்பிராயப்படிக்கு மார்சியேனு என்பவனை சபையின் ஐக்கியத்தை
விட்டு நீக்கவும் அவனுககுப் பிரதியாக நியமிக்கப்படும் கண்காணியா
ரை ஒப்புக்கொள்ளவும் சிப்பிரியன் என்பவர் ஸ்தேவான் கண்காணி
யாரைப் பலமாயேவினார்.

கால்தேசத்திலே ஒரு கண்காணியாரை நியமிப்பதைப்பற்றி ரோமா
புரி சபைக்காவது காத்தாகோப் பட்டணத்துச் சபைக்காவது சம்பந்
தமில்லை. ஆகிலும் நியமிக்கப்பட்ட ஒருவரை ஒப்புக்கொள்ளுகிறதும்
ஒப்புக்கொள்ளாததும் அவர்களுடைய இஷ்டம். ஒருவருடைய நிய
மகத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில், அவரது சபையைச்
சேர்ந்த கிறிஸ்தவர்கள் ரோமாபுரிக்காவது கர்த்தாகோப் பட்டணத்
துக்காவது வரும்போது அவர்கள் சபையின் ஐககியத்திற் சேர ஏது
விருக்கமாட்டாது. ஆகையினாலேதான் கால்தேசத்துக் கண்காணிமார்
தங்களில் ஒருவரைத் தள்ளி வேறொருவரை யேற்படுத்துகிற காரியத்
தில் அவர்களுடைய அனுமதிபெற்றுககொள்வது அவசியமாயிருந்தது.
ரோமை, கர்த்தாகோப பட்டணங்களிலுள்ள சபைகள் தள்ளப்பட்ட
கண்காணியாரை அங்கீகரித்துககொள்வார்களாகில், பிரிவினை யெப்
படியும் உண்டாகாதிராது. ஆனால் ஐரோப்பாவின் மேல்பாரிசத்திலுள்
ள இவ்விருசிரேஷ்ட பட்டணங்களும மார்சியேனு என்பவனுககு அனு
சரணையாயிராத பட்சத்தில் அவன் பிரிவினை உண்டுபண்ணப்பார்த்தா
லும் அது அவ்வளவாய்ச் சித்திபெறும் என்று நினைகக இடமில்லை. இந்
தச் சமையத்தில் ஸ்தேவான் என்பவர் இன்ன அபிப்பிராயமுள்ளவரா
யிருந்தார், இன்னபடி நடந்தார் என்று தெரியாது. ஆகிலும் அவர் சிப்
பிரியன் சொன்ன யோசனையை அங்கீகரித்திருப்பாரென்றும் அவ்விரு
சபைகளும் கால்தேசத்து கண்காணிமார் கேட்ட காரியத்துக்கு இணங்
கியிருக்குமென்றும் நினைக்கத்தகும்.



இக்காலத்தில் தானே வேறொரு காரியத்தைப்பற்றி ஸ்பானியாதே
சத்துச் சபைகள் சிப்பிரியனிடத்தில் ஆலோசனை கேட்டார்கள். அத்
தேசத்தில் பாசிலிதே, மார்ஷியேலிஸ் என்று பெயர்கொண்ட இரண்டு
கண்காணிமார் விசுவாசத்தை மறுதலித்ததினிமித்தமும் மற்றும் குற்
றங்களினிமித்தமும் தங்கள் உத்தியோகங்களினின்று தள்ளப்பட்டார்
கள். இவர்கள் தாங்கள் குற்றவாளிகள் தானென்று அறிக்கைசெய்தி
ருந்தபோதிலும், பிற்பாடு அவர்கள் ரோமாபுரிக்குப்போய் ஸ்தேவான்
கண்காணியாரிடத்தில் மாறுபாடாய் தங்கள் காரியத்தை யறிவித்து,
தங்களுக்கு அனுகூலம்பண்ணும்படி அவரை நயப்படுத்திக்கொண்டார்
கள். அதன்பேரில் அவர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட்டிருந்த கண்
காணிமார்களிருவரும் கர்த்தாகோப் பட்டணத்துக்குப் புறப்பட்டுப்
போய் சிப்பிரியனிடத்தில் தங்கள் காரியத்தை அறிவித்தார்கள். அவர்
உடனே முப்பத்தேழு கண்காணிமார்களைச் சங்கமாகக் கூடிவரச்செய்
து மேற்படி காரியத்தை விசாரித்தார். விசாரித்ததில் காரியம் மகா
துலாம்பரமாயிருந்தபடியால், ஆப்பிரிக்காச் சங்கத்தார் யோல் ஸ்பா
னியாக் கண்காணிமார்களுக்கு நிருபமெழுதி தாங்கள் திட்டஞ்செய்தி
ருக்கிற பிரகாரமே நடக்கும்படி யேவினார். மேலும் சிப்பிரியன் என்
பவர் ரோமாபுரிக் கண்காணியார் செய்தது அவிவேகமென்று ஒப்புக்
கொண்டு, அவர் வெகுதூரத்திலிருப்பதினாலும் மாறுபாடான பேச்சி
னால் வஞ்சிக்கப்பட்டுப்போனாரென்றும் போக்குக் காண்பித்ததோடு,
விசுவாசத்தை மறுதலித்து உத்தியோகத்திலிருந்து தள்ளபபட்டிருக்
கிற மேற்படி கண்காணிமார்களோடு யாராவது சகவாசஞ்செய்வார்
களாகில், அவர்களும் இவர்கள் குற்றத்திற் பங்காளிகளாவார்களென்
றும் வெகு தெளிவாய்க குறிப்பித்திருந்தார்.

ஒரு சபையைச் சேர்ந்த கண்காணிமார் வேறொரு சபையைச் சேர்ந்
த கிறிஸ்தவர்களைச் சபைக்குப் புறமபாக்கினார்களென்று சொல்லியி
ருப்பது இன்ன கருத்தாகவென்று மேலே விவரித்த இரண்டு சங்கதி
களாலும் கண்டுகொள்ளலாம். இந்த அதிகாரத்தை ஒவ்வொரு சபை
யுஞ் செலுத்திவந்தது நிச்சயம். ஆகிலும் அது ஒரு சபை மற்றச் சபை
களுக்கு மேலானதென்று காண்பிக்கிற குறிப்பல்ல. ஒரு சபையிலே
ஒருவனைப் புறம்பாக்குகிற அதிகாரம் கண்காணியாருக்கே உரியதென்
றாலும், சாதாரணமாய் அவர் தமது குருக்கள்மாரோடு யோசித்துக்
கொண்டுதான் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வார். மற்றும் கண்
காணிமார்களோடு யோசித்துக்கொள்ள சமையம் வாய்க்குமானால்,
தற்காலத்தில் கர்த்தாகோப் பட்டணத்தில் நடந்ததுபோல, பெருமபா
லும் சங்கமாகக் கூடிவந்து காரியத்தை யோசித்துத் தீர்ப்புச்செய்
வார்கள்.

ஸ்தேவான் என்பவர் முற்கோபியாயிருந்ததுமன்றி, தமது உத்தி
யோக மேன்மையைகுறித்து பெரிய எண்ணங்கொண்டவராயுமிருந்
தார். சிப்பிரியன் என்பவரோ அவரைப்போல திடச்சித்தமுடையவரா
யும், தமது சபையும் அவருடையதுபோலவே சுயாதீனமுடையதென்
று உணர்ந்தவராயுமிருந்தபோதிலும், அவரைப் பார்கக அதிக இணகக
முள்ளவரும் சமாதானத்தை நாடுங் குணமுடையவராயுமிருந்தார்.
ஆதினாலேயே ரோமாபுரிக் கண்காணியாரிடத்தில அதிகார முதன்மை
யைப்பற்றி தர்க்கிககவில்லை. இரண்டுபேரும் ஒன்றுபோல முற்கோபி
களும பிடிவாதக்காருமாயிருந்திருப்பார்களாகில், வேறொரு காரியத்
திலே அவர்கள் சபைகள் ஒன்றுக்கொன்று விரோதப்பட்டு பகை சாதிக்
கும்படி நேரிட்டிருக்கும். தப்பறைக்காரர் கூட்டத்திலிருந்து யாராவ

து சபையைச் சேர்த்துகொள்ளும்போது, அவர்கள் தப்பறைக்காரரால் ஞானஸ்நானம்பெற்றவர்களாயிருந்தாலும், அவர்களுக்குத் திரும்பவும் ஞானஸ்நானம்கொடுப்பது கிழக்கத்திச் சபைகளிலும் ஆப்பிரிக்காவிலுள்ள சபைகளிலும் வழக்கமாயிருந்தது. கி. பி. 231 ல் இக்கோனியாப் பட்டணத்திற் கூடிவந்த ஒரு சங்கத்தார் தப்பறைக்காரரால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் செல்லாதென்று தீர்த்திருந்தார்கள். அதல்லாமலும் அகிரிப்பினு என்பவர் கர்த்தாகோப் பட்டணத்திற் கண்காணியாராயிருக்கையில் 215 ல் அவ்விடத்திற் கூடின சங்கத்தாலும் வேறு பல சங்கங்களாலும் அவ்விதமே தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒருவன் பொதுவான சபையில் ஞானஸ்நானம்பெற்றிருந்து அப்புறம் தப்பறையில் அகப்பட்டிருப்பானாகில், அப்படிப்பட்டவனை மறுபடியும் சபையிற் சேர்க்கும்போது, கண்காணியார் அவன்பேரில் கைகளை வைப்பதே போதுமாம். தப்பறைக்காரரால் மாத்திரம் ஞானஸ்நானம்பெற்றவனாயிருந்தால், அவனை ஞானஸ்நானத்தின்மூலமாயே சபையில் சேர்க்கலாமாம். முந்தின ஞானஸ்நானத்தை சரியானதாக ஒப்புக்கொள்ளாததினாலேயே அப்படிச் செய்தார்கள். ரோமைச் சபையின் வழக்கமோ அது அல்ல. ஒருவன் தப்பறைக்காரர் கூட்டத்திலிருந்து சபைக்குத் திரும்பும்போது, ஞானஸ்நானமில்லாமல் அவன் சபையின் ஐக்கியத்திற் சேர்த்துக்கொள்ளப்படுவான்.

ரோமைச் சபைக்கும் மற்றச் சபைகளுக்கும் உண்டாயிருந்த இவ்வித்தியாசத்துக்குக் காரணம் யாதெனில், நாம் மேலே விவரித்தபடிக்கு ரோமைச் சபையிலும் அவ்வாறே இத்தாலியாவிலுள்ள சபைகளிலும் கள்ள உபதேசங்கள் அவ்வளவாய் நுழையாததுதான். நோஸ்திகரும் மொந்தேனிய வகுப்பாரும் ரோமாபுரியில் தங்கள் கொள்கைகளைப் போதித்தது மெய். என்றாலும் கிழக்கிலே அவர்கள் நிலைகொண்ட பின்பே அப்படிச் செய்தார்கள். அதன்றியும் ஆசியாவில் துவக்கமுதல் அவர்கள் காரியம் சித்திபெற்றது அவ்வளவாய் ஐரோப்பாவில் பெறவில்லை. இதுவரையும் தோன்றின ஒவ்வொரு தப்பறையும் கிழக்கிலேதான் உற்பத்தியானது. அதினால் தப்பறைக்காரரால் ஞானஸ்நானம்பெற்று, பின்பு மெய்யுபதேசத்தைப் பற்றிக்கொண்டவர்கள் ரோமாபுரியில் மிகவும் சுருக்கமாயிருந்திருக்கவேண்டும். ஆதலால் ரோமைச் சபையில் இதுகாரியத்தைப்பற்றி திட்டங்கள் ஏற்படுத்த அவசியமிருந்ததேயில்லை. மேலும் கிறிஸ்துமார்க்க வகுப்பார் யாவரும் கிறிஸ்துநாதர் கற்பித்ததும், பொதுவான திருச்சபையிலே வழங்கிவந்ததுமான ஞானஸ்நான முறைமையையே வழங்கிவந்தார்கள். ரோமாபுரிக் கண்காணியார் குருமார் பார்வையில் அது போதுமானதாயிருந்தது. ஆனால் மொந்தேனியர் கொள்கைகள் ஆசியாவிலும, ஆப்பிரிக்காவிலும் மிகவும் அனுகூலமாய்ப் பிரபலியமாகிக்கொண்டுவந்தபடியால், மேற்படி தீமையைத் தடுக்க விரும்பி அவ்விடங்களிலுள்ள கண்காணிமார், பொதுவான சபையிற் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் ஒன்றுதவிர மற்றெந்த ஞானஸ்நானமும் செல்லாதென்று தீர்த்தார்கள். இந்தத் தீர்ப்பினால் மொந்தேனியருடைய கொள்கையும் மற்றத் தப்பறைகளும் பிரதிகூலம் அடையாதிருப்பது அசாத்தியம். ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலுமுள்ள சபைகள் ஞானஸ்நானக் காரியத்தில் இவ்வளவு வைராக்கியம்பாராட்டினார்களேயென்று விபரீதமாய் நினைக்கலாகாது. விசுவாசத்தின் ஐக்கியத்தைக்காத்துக்கொள்வதும் சபையாரைத் தப்பறையில் அகப்படாதபடி விலக்கவேண்டுமென்பதுமே அவர்களுடைய எதார்த்தமான நோக்கம்.



## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௨௯. அதிகாரம்.

### யாக்கோபு விவாகம்பண்ணினது.

1. ஏறக்குறைய 400 மயில் பிரயாணம்பண்ணி போய்ச் சேர்ந்தான்.

2, 3. "மடக்கு" அத்தேசத்தில் தண்ணீர் கிடைப்பது அரிது. ஆகையால் அது வீணாய்ச் செலவழிந்துபோகாதபடிக்கும், எல்லாருக்கும் ஒரே திட்டமாய்க் கிடைக்கும்படிக்கும் இப்படிப்பட்ட கட்டுப்பாடு செய்வார்கள். 8 வா. வாசி.

5. லாபான், நாகோருக்குப் பேரன். 22: 22. நாகோர் குடும்பத்தலைவனானதினாலே அவன் மகன் என்று சொல்லியிருக்கிறது. 24: 28. வியா.

18. ரெபெக்காளை ஈசாக்குக்குக் கலியாணம் செய்துகொடுக்கும்படி ஆபிரகாமின் வேலைக்காரன் கேட்கவந்தபொழுது, தங்கநகை கொண்டு பரிவாரத்தோடு வந்தபடியால் லாபான் உடனே சம்மதித்தான். 24: 50. ஆனால் இப்பொழுதோ, யாக்கோபு வந்த கோலத்தைப் பார்த்த உடனே மனதுக்கு அவ்வளவு திருப்தியில்லை. தனக்கு சேஷ்டபுத்திரபாகம் அகப்பட்டது, ஆசீர்வாதமெல்லாம் கிடைத்திருக்கிறதென்று யாக்கோபு சொல்லியிருப்பானானாலும், வீட்டிலே கைக்குள் ஏசா இருப்பதினாலே லாபானுக்கு நம்பிக்கைகொள்ளவில்லை. ஆகையால் யாக்கோபுடைய திறமையையும் சுறுசுறுப்பையும் கண்டறிகிறதற்கு முன் தன் மகளைக் கொடுக்கிறதைப்பற்றி யாதொன்றும் பேசவில்லை. "ஏழுவருஷம்" லாபானுடைய பொருளாசைக்குக் குறிப்பு. 24: 29—32.

22. யூதருக்குள் விவாகத்தை மற்றவர்களுக்குப் பிரசித்தப்படுத்துகிற வகையாய் இப்படி விருந்துசெய்வது வழக்கம்.

23, 25. பெண்ணை முக்காடிட்டு மாப்பிள்ளை வீட்டுக்குக் கூட்டிவிடுவார்களாகையால் இப்படிப்பட்ட வஞ்சனை லேசாய் நடக்கக்கூடியது.

27. "ஏழு நாள்" என்பது கலியாண விருந்து நாட்களாம். ஒரு புருஷனுக்கு ஒரு மனைவி என்பது ஆதிச் சரித்திரத்தால் முற்பிதாக்களுக்கு விளங்கக்கூடியதாயினும், ஒருவன் பல ஸ்திரீகளை வைத்துக்கொள்ளக்கூடாதென்று அக்காலத்தில் நேரான கட்டளை இருந்ததில்லை. இவ்விடத்தில் காலத்தை வாரமாகப் பிரித்துக் காட்டியிருப்பதில் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்ட குறிப்பு அடங்கியிருக்கிறது.

30. லாபான் செய்த தந்திரத்துக்கு லேயாளும் இணங்கி இருப்பாள் என்று யாக்கோபு அவள்மேல் அதிகப் பிரியங்கொள்ளவில்லை. 35 வா. லேயாள் தன் பிள்ளைகளுக்கு இட்ட பேர்களைக் கவனிக்கும்போது, அவள் தேவபக்தியுள்ளவளாயிருந்தாளென்று நினைக்கத்தகும்.

படிப்பினை.

அநேக பெரிய பெரிய சலாக்கியங்களை நாம் தாராளமாய் இடைவிடாமல் அநுபவித்துவருவதினாலே அவைகளை அற்பமாய் மதிக்க ஏவப்படுகிறோம். இது பெரிய தப்பிதம். நமக்குத் தாராளமாய்க் கிடைக்கிற தண்ணீர் எத்தனையோபேருக்கு வருத்தத்தோடே கிடைத்தது. நமக்கு இலவசமாய்க்கிடைக்கிற தீக்காக, துருயித்தர் (Druids) காலத்திலுள்ளவர்கள் கூலிகொடுத்தார்களே! நாம் எவ்வளவோ நன்றியறிதல் உள்ளவர்களாயிருக்கவேண்டும். 2—4.—நெடுநாளாய் வருத்தப்பட்டுச் செய்து முடிக்கவேண்டிய பாரமான வேலையானாலும், அதை அன்போடு செய்தால், லேசும் சுளுவுமாகக் காணப்படும். 20 வா. கிறிஸ்துநாதரைப்பற்றிய நேசம் நமக்குள்ளிருந்தால், அவருக்காகப் படவும், செய்யவும், சகிக்கவும் சலிக்கமாட்டோம்; அவருடைய நுகம் மெதுவாயும் அவர் வைக்கிற சுமை லகுவாயுமிருக்கும்.

## ௫௰. அதிகாரம்.

### யாக்கோபுக்கு மற்றும் பிள்ளைகள் பிறந்தது.

1, 2. ராகேல் தகாத விசனத்தினாலும் கோபத்தினாலும் நிறைந்தவளாய் "எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்." இப்படிப் பிள்ளைக்காகப் பேராவல்கொண்டு ஆங்காரமாய்ப் பேசினவள் பிரசவவருத்தத்தினாலேயே மரித்தாள்! ஆக்கம்போல கேடுவருவதுமுண்டு.

3. மலடி என்கிற இளப்பத்தை நீக்கிக்கொள்ளலாம் என்று இந்த தகாத யோசனை சொன்னாள்.

14. "தூதாயீம் கனிகள்" நாவுக்கு ருசியும், இன்பமான வாசனையும், பார்க்கப் பகட்டுமான ஒருவகைப் பழம், அல்லது பூ என்று நினைக்கப்படுகிறது. பழம் என்றுதான் பெரும்பாலும் சொல்லப்படும். அது பழம் என்ற அபிப்பிராயமுடையவர்கள், சிவந்த நிறமும் சுகந்த வாசனையும் வத்தாக்குக்காய் அவ்வளவு தண்டியுமான ஓர்வகை வெள்ளரிப்பழம் என்று சொல்லுகிறார்கள்.

23. யாக்கோபு ராகேலுக்காக மறுபடி ஆடுமேய்த்த இரண்டாம் ஏழு வருஷத்திற்குள்ளாக இந்தப் பிள்ளைகள் எல்லாரும் பிறந்தவர்களானதால்; ரூபன், யோசேப்பைப்பார்க்கிலும் 6 வயதுக்கு அதிகமாயிருக்கமாட்டான்.

34. புள்ளியும் வரியுமுள்ள ஆடுகள்மட்டுந்தானே, புள்ளியும் வரியுமுள்ள குட்டிகளைப்போடும் என்ற யோசனையினாலே உடனே சம்மதித்தான்.

31—34. நாள்கூலிபேசினால் லாபான் லேசாய் வஞ்சித்துப்போடுவான் என்று இந்த ஒழுங்குபண்ணினான்.

37—42. யாக்கோபு செய்த இந்தக்காரியம் உபாயதந்திரமுள்ளதென்று சிலரால் கண்டிக்கப்படுகிறதுமுண்டு. சிலரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்படுகிறதுமுண்டு.

புள்ளியும் வரியுமுள்ள குட்டிகளைப்போடும்படியாக யாக்கோபு செய்தது எப்போதும் சித்திக்குமென்று சொல்லக்கூடாது. லாபான்



செய்த அநியாயத்துக்குச் சரிக்கட்டும்படி இதெல்லாம் தேவயத்தனமாய் நடந்தது. 31: 10—13.

படிப்பினை.

இந்த அதிகாரத்தின் நடையைக் கவனிக்கும்போது, வேத சரித்திரக்காரன் புகழ்மொழிவுக்காரனல்ல, சங்கதிகளை உள்ளபடியே எழுதுகிற உண்மையுள்ளவன் என்று கவனிக்கத்தகும்.—நமக்குப் பிரியமான அநேக நன்மைகளை கர்த்தர் நமக்குக் கொடாமல் விலக்கிவைத்திருப்பது நம்முடைய நன்மைக்காகவேயிருக்கும். 35: 16—20. நாம் விரும்புவதை கர்த்தர் கொடாமலிருக்கும்போதும், நமக்கு உரித்தானவர்கள் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும்போதும், நாம் நினைத்திராத துன்பம், சோதனை, தரித்திரம் வந்து நம்மை நெருக்கும்போதும், நமது ஜெபத்துக்கு உடனேகூடனே உத்தரவு அருளப்படாமலிருக்கும்போதும், கர்த்தருடைய வாக்கை நினைக்கக்கடவோம். "நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்." யாக்கோபு, யோசேப்பு சரித்திரத்தில் இதற்கு அநேக திருஷ்டாந்தங்களைக் காணலாம்.

## ௫௧. அதிகாரம்.

### யாக்கோபு தன் பரிவாரத்தோடு கானானுக்குத் திரும்பினது.

10—13. யாக்கோபு பதான் அராமுக்கு வந்து 20 வருஷமாகி அவன் லாபானுக்குச் செய்த ஊழியம் முடிகிற சமயத்தில் இந்த தரிசனம் உண்டானதாகக் காணப்படுகிறது. தன் மனைவிகள் தன் நோக்கத்துக்கு இணங்கிவரும்படி இதை எல்லாம் சொன்னான்.

"தேவதூதன்...... பெத்தேலில் உனக்குத் தரிசனமான தேவன் நானே." 16: 7. வியா.

17. யாக்கோபு. கி. மு. 1739 வருஷம் கானானுக்குத்திரும்பினான். அவன் மூத்த மகனாகிய ரூபனுக்கு இப்பொழுது 12 வயதுக்கு அதிகமிருக்கமாட்டாது.

19. ராகேலும் லேயாளும் தங்கள் தட்டுமுட்டுக்களை எடுத்துக்கொண்டுவரும்படி தங்கள் கூடாரங்களுக்கும் லாபானுடைய வீட்டுக்கும்போயிருப்பார்கள். அப்பொழுது "ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டாள்." தன் தகப்பனைப்போல அந்தச் சுரூபங்களை வணங்கவோ,—அல்லது அவைகளிலுள்ள பொன் வெள்ளியின்மேல் இச்சைப்பட்டோ,—அல்லது அவை விலையுயர்ந்த அழகான பொருளாயிருக்குமாதலால், தன் தகப்பன் செய்த அநியாயத்திற்குப் பதிலாக இது தனக்கு ஒரு ஆஸ்தியாயிருக்கட்டும் என்று நினைத்ததினாலோ,—அல்லது தாங்கள் ஓடிப்போகும் வழிவகையை இவைகளிடத்தில் தன் தகப்பன் கேட்டறிந்துகொண்டு சீக்கிரம் தொடர்ந்து பிடித்துக்கொள்வான் என்று பயந்ததினாலோ,—அல்லது தங்கள் தகப்பன் இனி அவைகளை வணங்காமற்போகட்டுமென்றோ அவைகளைத் திருடிக்கொண்டாள். எந்த நோக்கத்தினாலே செய்தாலும் இது தப்பிதந்தான். இதனாலே தனக்கும் தன் பரிவாரத்துக்கும் பெரிய மோசத்துக்கு இடம்பண்ணினாள். பிற்பாடும் இது யாக்கோபின் குடும்பத்துக்குச் சோதனையும் கண்ணியுமானதாகக் காணப்படுகிறது. 35: 2, 4.

"சுரூபங்கள்" என்ற வார்த்தைக்கு எபிரேயுப்பாஷையில் டேராபிம் (Teraphim) என்று பேர். நியா. 17: 5. 1 சா மு. 19: 13. ஓசே. 3: 4.

20. "சீரியனாகிய" 10: 22. வியா. 26: 5. வியா.

21. "ஆற்றை" ஐபிராத்து ஆறு. இது பேர்போன பெரிய ஆறானதினாலே பேர்சொல்லாமல் வழங்குவார்கள்.

23, 24. லாபான் கண்டுபிடிக்கிறதற்குள்ளாக யாக்கோபு ஐபிராத்து நதியையும், அதற்கும் கீலேயாத்து மலைக்கும் இடையிலுள்ள பெரிய வனாந்தரத்தையும் கடந்துவந்துவிட்டான். அவன் பாளையங்களையும் அவனுக்கிருந்த தடைகளையும் கவனிக்கும்போது இவ்வளவு தூரம் அவனுக்கு நீண்ட பிரயாணம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் தேவ இரக்கத்தினாலும் விசேஷித்த பராமரிப்பினாலுமே லாபானுடைய மோசத்துக்குத் தப்பினான்.

36—42. யாக்கோபு லாபானுக்கு வெகு உண்மையாய் நடந்ததற்கு ருசுக்களாம்.

47. "ஏகர்சகதூதா" என்பது கல்தேயா அல்லது சீரியாபாஷை வார்த்தை. "கலயெத்" என்பது எபிரேயு வார்த்தை. இரண்டுக்கும் சாட்சிக்குவியல் என்றர்த்தம். யாக்கோபும் லாபானும் வெவ்வேறான தேசத்தார் என்று இந்த வார்த்தைகள் காட்டுகிறது.

50. "மிஸ்பா" சாமக்கூடு (Watch-Tower) என்றர்த்தம்.

55. லாபானும் யாக்கோபும் மறுபடி ஒருவரை ஒருவர் சந்தித்ததாக நாம் வாசிக்கிறதில்லை. லாபானும் அவன் குடும்பத்தாரும் விக்கிரகபத்திக்காரராகவே இருந்தார்களென்று நினைக்கவேண்டும்.

படிப்பினை.

பெரிய பெரிய இராச்சியங்களின் வரலாறு ஒன்றும் எழுதப்படாமலிருக்க, இந்த ஆடுமேய்ச்சிகளுடைய குடும்பச்சரித்திரம் இவ்வளவு நுட்பமாயும் விவரமாயும் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்கும்போது, வேதம் எழுதப்பட்ட நோக்கத்தை அறிந்துகொள்ளலாம்.—நம்முடைய போக்கும் வரத்துமெல்லாம் தேவ உத்தரவுப்படி நடத்தப்படவேண்டும். அப்போது அவருடைய விசேஷித்த பராமரிப்பு நமக்குக் கிடைக்கும். 13.—தேவன் தம்முடைய பிள்ளைகளை இவ்வுலகத்தில் விசேஷித்தவகையாய் நடத்துகிறார். 24, 29, 42.—யாக்கோபு கோலும் கையுமாய்ப் போனான். இப்போ பாளையங்களுடனே திரும்புகிறான். இது தேவ செயலையொழிய வேறல்ல.

---

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XIV. தாலந்துகள்.

மத்தேயு 25: 14—30.

முந்தின உவமையில் கன்னிகைகள் தங்கள் எஜமானுக்காகக் காத்திருந்ததைக் காட்டியிருந்தது. இந்த உவமையில் அவருடைய ஊழியக்காரர் அவருக்காக ஊழியஞ்செய்கிறதைக் காட்டியிருக்கிறது.



முந்தினதில் விசுவாசிகளுடைய உள்ளான ஜீவ நிலைமையும், இதில் அவர்களுடைய வெளியரங்கமான ஜாக்கிரதையும் வெளியாகிறது. அங்கே புத்தியில்லாத கன்னிகைகளுக்கு நேரிட்ட முடிவினாலே ஆத்துமாவில் உள்ளான ஜீவன் குறையாமல், கெடாமல், பாதுகாப்பது எவ்வளவு அவசியமென்று எச்சரிக்கப்படுகிறோம். இங்கே சோம்பலான ஊழியக்காரனுக்குக் கிடைத்த தண்டனையினாலே நம்முடைய வெளியரங்கமான ஊழியத்தில் அசதியாகாதென்று கற்றுக்கொள்ளுகிறோம். அந்த உவமையினால் எல்லாவற்றிலும் முக்கியமாய் இருதயத்தைக் காப்பது அவசியமென்று அறிகிறோம். கிறிஸ்துவானவர் வெளிப்படும்போது சமாதானமுள்ளவர்களாகக் கண்டுபிடிக்கப்பட நம்முடைய வேலைகளில் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று இந்த உவமையினால் அறியவடைகிறோம். ஆதலால் கன்னிகைகளைப்பற்றின உவமை முந்தியும், தாலந்துகளைப்பற்றினது பிந்தியும் வருகிறது நல்ல ஒழுங்குதான். ஞான உயிரானது இருதயத்தில் ஜாக்கிரதையாய்ப் பிரகாசித்தால்தான் நாம் தேவனுடைய இராஜ்யத்தில் பிரயோசனத்தைக் கொடுக்கத்தக்க ஜாக்கிரதையுள்ளவர்களாயிருப்போம். கன்னிகைகளுக்கும், வேலைக்காரருக்கும் வேறுவகை வித்தியாசமுமுண்டு. கன்னிகைகள் தியானத்திலே தங்கள் நேரத்தைப் பின்னிடும் சபையின் அவயவங்களையும், ஊழியக்காரர் வேலையில் தங்கள் நேரத்தைப் பின்னிடும் அவயவங்களையும் குறிக்கலாம். இந்த வித்தியாசம் சபை உண்டான துவக்கத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாயினும் இப்போது அவ்வளவாய் அங்கிகரிக்கப்படுகிறதில்லை. சபையைச்சேர்ந்த ஒவ்வொருவனும் தியானஞ்செய்தலோடு ஊழியஞ்செய்யவேண்டியவனாயிருந்தாலும், (இந்த வகையிலும் இரண்டு உவமைகளையும் அர்த்தப்படுத்தலாம்.) ஒன்று ஒருவனிடத்திலும், மற்றொன்று வேறு ஒருவனிடத்திலும் மீசுரமாய் விளங்கும். ஆகிலும் ஒவ்வொருவனும் தனக்குக் கிடைத்திருக்கும் வரங்களுக்கும், மற்றவர்களிடத்தில் காணப்படும் குறைவுகளுக்குந்தக்கதாக தனக்குள்ளேதானே இவ்விரண்டையும் அளவுபடுத்திக்கொள்வது அவசியம்.

இதைப்போலொத்த உவமை கொஞ்சம் வித்தியாசப்பட்டு, மாற்கு 13-ல் கண்டிருக்கிறது. "நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு" 36-ம் வ-ம் என்கிற வார்த்தைகளில் கன்னிகைகளைப்பற்றின உவமையும் சாடையாய்க் காணுகிறது. மத்தேயு விபரமாய்ச் சொல்லியிருக்கிறதை மாற்கு சுருக்கி இணைத்துச் சொல்லியிருக்கிறார். இரண்டு சுவிசேஷகர்களும் ஒரே உவமையைச் சொல்லுகிறார்களென்று சந்தேகமற நினைக்கலாம். கடைசி நாட்களில் வருந் துன்பங்களைக்குறித்து எச்சரித்தபிறகுதான் இருவரும் இந்த உவமையைச் சொல்லுகிறார்கள். லூக்காவும் பல குறிப்புகளில் இதைப்போலொத்த ஒரு உவமையைச் சொல்லியிருக்கிறார். 19: 11. அதுவும் இதுவும் ஒன்றல்ல. அப்படிச் சொல்வதற்குப் பல ஆட்சேபனைகளுண்டு, இரண்டும் சொல்லப்பட்ட இடம் வேறு. காலம் வேறு. லூக்காவில் கண்டிருக்கிற உவமை இரட்சகர் எருசலேமுக்குச் சமீபமாய் வந்து இராஜ கோலமாய் அதில் பிரவேசிக்குமுன்னே சொல்லப்பட்டது. இதையோ அந்தப் பட்டணத்தில் பிரவேசித்ததின் பிறகு மூன்றாம் நாள் ஒலிவ மலையின்மேலிருந்து சொன்னார். அது சீஷர்களுக்குமாத்திரமல்ல, பொதுவாய் சனங்களுக்குஞ் சொல்லப்பட்டது. இதுவோ தாம் பூமியில் தொடங்கின விசேஷித்த கிரியையை நடத்தும்படி இனி தாம் அதை ஒப்புவிக்கப்போகிற தம்மு

டைய உத்தம சீஷருக்குமாத்திரந்தான் சொல்லப்பட்டது. அந்த உவமையினுடைய நோக்கம் இருவகையானது. உத்தம மனதோடு இரட்சகரைப் பின்சென்ற திரள் சனங்கள் தம்முடைய இராஜ்யத்தைக் கைக்கொண்டு அதை ஆளவும், எருசலேமில் தம்முடைய பிதாவாகிய தாவீதின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கவும் போகிறாரென்று நினைத்தார்கள். அப். 1: 6. தம்முடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளுமுன் அதிகக் காலஞ் செல்லவேண்டுமென்றும், தாம் பூமியை விட்டுப்போய் அதிகக் காலத்திற்குப் பிறகு திரும்பிவந்து தனக்கெதிரான சத்துருக்களைக் கீழ்ப்படுத்தவேண்டுமென்றும் காட்டுகிறார். அதுவரையில் தனக்குச் சிநேகிதரும் ஊழியக்காரருமானவர்கள் அவருடைய வருகைக்குச் சோம்பலாய் எதிர்பார்த்திருக்கிறது மாத்திரம் போதாது. அவர் வரும்போது ஒவ்வொருவனுடைய கிரியைக்குத்தக்கதாக பிரதிபலன் அளிப்பாரென்கிற நம்பிக்கையோடு ஒவ்வொருவனும் தன்னாலானமட்டும் அவருக்கு அனுகூலமானவைகளை விருத்தியாக்கப்பார்க்கவேண்டுமென்றும் போதிக்கிறார். அப்படித் திரும்பிவரும்போதுதான் லூக்கா தன் உவமைக்கு இசைவாய்ச் சொல்லுகிறபடி அவர் தம்முடைய சத்துருக்களை, இவன் தங்கள்மேல் அதிகாரஞ்செலுத்தக்கூடாதென்று சொன்னவர்களை முற்றிலும் அழித்துப்போடுவார். லூக்காவில் கண்டிருக்கிற உவமையின் நோக்கம் இருவகையானது. தாங்கள் நினைத்தபடி இராசாவாய் ஆளுகைசெய்வாரென்று எதிர்பார்த்து இரட்சகரைப் பின்சென்ற கொஞ்ச அறிவுள்ள சனங்களுக்கு ஒரு நோக்கத்தோடு சொல்லப்பட்டது. தங்களுடைய எண்ணம் தப்பிதமென்று அவர்கள் கண்டபோது, அவருக்கு விரோதமாக அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று சத்தமிட்டவர்களோடு சேர்ந்துகொள்ளத்தக்கவர்கள். துரிதத்தில் தம்முடைய சத்துருக்களை செயித்துப்போடாவிட்டாலும் நிச்சயமாகவே அவர்களை பயங்கரமாய்த் தண்டிப்போமென்று எச்சரிக்கிறார். எருசலேமுக்கு வரும் அழிவைக்கண்டு தம்மோடுந் தம்முடைய சபையோடும் நெருங்கிச் சேர்ந்துகொள்ளவும், அழிவுக்குக் குறிக்கப்பட்ட தம்முடைய சத்துருக்களோடு ஒன்றுசேராமல் பிரிந்துகொள்ளவும், இருவகை நோக்கத்தோடு அவர்களை எச்சரிக்கிறார். தம்முடைய சீஷர்களுக்கும் இதில் ஓர் எச்சரிப்புண்டு. அவர் போய்த் திரும்பிவருமளவாக்கும் அவர்கள் சோம்பலாய் இராமல் தங்களுடைய எசமானுக்காக சாக்கிரதையோடு உத்தமமாய் ஊழியஞ்செய்யவேண்டுமென்றும், அப்படிப்பட்ட உத்தமருக்குத் திரளான பலன் கிடைப்பதுபோல் அசட்டைக்காரராயிருந்து சோம்பலுக்கிடங்கொடுக்கிறவர்கள் தகுந்த சிட்சையடைவார்களென்றும் எச்சரிக்கிறார்.

நாலு சுவிசேஷங்களிலுமுள்ள இரட்சகருடைய பிரசங்கங்களை உண்மையல்லவென்று ஆட்சேபிக்கிற ஒருவர் லூக்கா சொல்லியிருக்கிற இந்த உவமையில் மத்தேயு சொல்லுகிற இராஜகுமாரனுடைய கலியாண உவமையைப்போல் பல சங்கதிகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டியிருக்கிறதென்றும், இரண்டு உவமைகளை இதில் ஒன்றாகச் சேர்த்திருக்கிறதென்றும், தன் வீட்டைவிட்டுக் கொஞ்சக்காலம்போயிருந்த எசமானைக்குறித்து இரண்டிலுஞ் சொல்லியிருக்கிறபடியால், அந்தக் கலக்கத்தால் சேர்க்கையாய்ச் செய்த கட்டுமானம் நன்றாய் வெளியாகிறதென்றும் ஆட்சேபிக்கிறார். வேலைக்காரருங் குடிகளும் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டவர்களல்லவென்றும், 12, 14, 15, 27. இந்த வாக்கியங்களைக் கொஞ்சம் மாற்றினால், கலகக்காரரான குடிகளுடைய உவமையென்று ஒரு உவமை பூர்த்தியானதாய் இருக்குமென்றும், மற்ற வாக்கியங்களைக்கொண்டு இராத்தல் உவமை ஒன்று ஆகுமென்றும் இவ்விதமாய் வேறு காரிய சம்பந்தமின்றி இரண்டு உவமைகளைக் காட்டலாமென்றும் சொல்லுகிறார். இப்படி ஆட்சேபிக்கிறவர் ஒன்றைக் கவனியாமல் விட்டுவிட்டார். இரட்சகர் சொன்னவைகளைக் கேட்டவர்கள் இருவகைச் சனங்கள். வெவ்வேறு மனசுடையவர்கள், வெவ்வேறு புத்திமதி வேண்டியவர்கள். சற்று கூர்ந்து பார்த்தால் தம்முடைய சீஷர்களுக்குஞ் சனங்களுக்கும் அவரவர் நிலைமைக்குத்தக்கதாக லூக்காவில் கண்டிருக்கிற உவமையை வகுத்துச் சொல்லியிருக்கிறாரென்று லேசாய் அறிந்துகொள்ளலாம். லூக்காவில் கண்டிருக்கிற உவமையின் நோக்கத்தைப்போல உவமையும் இருவகையானது. மத்தேயுவில் கண்டிருக்கிற நோக்கம் ஒன்று. அது அப்போஸ்தலருக்குச் சொல்லப்பட்டது. சனங்களுக்குரிய பங்கு இங்கே சுத்தமாய்ச் சேரவில்லை.



---

## United Prayer Meeting.

## ஐக்கிய ஜெப அழைப்பு.

## 1874.

ஜனுவரிமீ 4உ—11உவரை.

---

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தை நோக்கிக் கூப்பிடும் எல்லா இடங்களிலுமிருக்கிற எவ்வகை சனங்களுமாகிய நேசிக்கப்படத்தக்க சகோதரரே! பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபை உண்டாவதாக.

கிறிஸ்தவர்களாகிய பற்பல கோத்திரத்தாரும் பாஷைக்காரரும் ஒருமனப்பட்டு நமது தேவனை நோக்கி செய்துவரும் வருஷாந்தர பிரதம வாரச்செபத்துக்கு உங்களை அழைக்கிறது எங்கள் கடமையும் விசேஷித்த சலாக்கியமுமாயிருக்கிறது.

வருஷங்கள் செல்லச்செல்ல இந்த ஜெப அழைப்பை எல்லாரும் அதிக ஆவலோடு எதிர்பார்த்துவருகிறார்களென்பதையும், ஒவ்வொரு வருஷமும் தேவகிருபாசனத்தைச் சுற்றி நிற்கிற தேவபக்தர்களின் தொகை அதிகரிக்கிறது என்பதையும் நினைக்கையில் நமது மனம் ஆனந்த பரவசமாகிறது.

இப்பொழுது தங்கள் வேலைகளை விட்டோய்ந்து இளைப்பாறி நம்மைப்போல விண்ணப்பத்தையல்ல, ஸ்தோத்திரத்தைச் செலுத்தப்போயிருக்கிற கனமும் அன்புமுள்ள அநேக தேவஊழியக்காரர் நம்மோடிருந்து இப்படிப்பட்ட ஜெபக்கூட்டங்களை நடத்தினார்களே. அப்படிப்பட்ட பல நற்சமயங்களை நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது அந்தப் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் பங்குபெறுகிற காலங்களை மிகுந்த

அருமைபெருமையாக நினைக்கவும் விர்த்தியாக்கவும் செய்யுமென்பதற்குச் சந்தேகமில்லை.

நிகழுகின்ற தற்கால சம்பவங்களை நாம் சற்றே சிந்திப்பது, நாம் ஊக்கத்தோடும் சோர்படையாமலும் விண்ணப்பஞ்செய்ய நம்மை ஏவாமற்போகாது. நம்மைச் சூழ நடப்பதெல்லாம் கிறிஸ்துபக்தர்களின் இருதயங்களில் ஆவலையும் கவலையையும் உயிர்ப்பிக்கிற அடையாளங்களாகவே இருக்கின்றது. ஜாதிகளின் அசலகுதகலங்களும், இராச்சியங்களின் எழுதலும் விழுதலும், சுடீரெனவுஞ் சடுதியாகவும் மாறுதலடையும் மதக்கோட்பாடுகளும், ஜனசங்காத்தத்துக்கும் கிறிஸ்தவசங்காத்தத்துக்கும் பிரதிகூலமான பல கொள்கைகள் அநேகருக்குள் புகைந்துகொண்டிருப்பதும், சருவமுஞ் சந்தேகமென்னும் மயக்கம் பெருகுவதும், மனித புத்திக்கெட்டாத ஒவ்வொரு இரகசியங்களையும் சாஸ்திர வல்லபத்தால் தீர்க்கப் பார்க்கும் வீண் துணிவு வளருவதும், வேதவிரோதமும் வீண் பக்தியுமான சடங்காசார மார்க்கம் (Ritualism) தலையெடுப்பதும, கடைசியும் விசேஷமுமாக பாப்புமார்க்கமானது தன் பழைய அதிகாரத்தை ஸ்தாபிக்க பல நுண்ணிய தந்திரங்களால் அநேகர் மனசை வசியப்படுத்தப் பார்ப்பதுமாகிய இவை எல்லாம் ஒன்றுகச் சேர்ந்து நாம் அனலோடு பிரார்த்திக்க ஏவிவிடுகிறதென்பதை எந்த புத்தியுஞ் சிந்தனையுமுள்ள மனமாவது கண்டறியாதிராது. "ஜெபத்தினால் என்ன பிரயோசனத்தைக் கண்டீர்கள்" என்று பரியாசக்காரர் கேட்கும கேள்விக்கு: கிறிஸ்துவின உண்மையுள்ள சீஷர்கள் கொடுக்குந் தகுந்த மறுமொழி, "ஜெபத்தைக் கேட்கிறவரை" நோக்கிச் செய்யும் உற்சாக விண்ணப்பமே. புத்தியீனரும் பொல்லாதவர்களுமானவர்களுடைய அபாயமான தந்திர உபாயங்களை சிதறடிக்குந் தப்பாத சாதனம சருவவல்லவரின், புயபலத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்பிவிடுகிறதே. "அவர்களுக்குப் பயப்படாயாக. ஏனெனில், அவர்களோடிருக்கிறவர்களிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்." "கர்த்தர் நமக்கு அடைக்கலமும் பெலனும் நெருக்கங்களிற் கிடைக்கிற அநுகூலமுமானவர்." சேனைகளின் தேவன் நம்மோடிருக்கிறார், இயாக்கோபின் தேவன் நமக்கடைக்கலமானவர் என்கிற இந்த திவ்விய வாக்குகள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துப் போராடுகிற விசுவாசிகளுக்கு தேவவசனம் அடிக்கடி படிப்பிக்கிற பாடங்களாயிருக்கின்றன.

அதினோடு நமக்குள் நன்றியை எழுப்பிவிட்டு தைரியத்தை அதிகரிக்கச்செய்யும ஏதுக்களுந் திரளாயிருக்கின்றன. சுவிசேஷ பிரவேசத்துக்கு தற்காலத்தைப்போல் எக்காலத்திலாவது வாசல் தாராளமாய் திறந்திருப்பதில்லை. இதுவரை அதற்குத் தடையாயிருந்த நாட்பட்ட தப்பெண்ணங்களென்னும் அரண்கள் நிர்மூலமாக்கப்பட்டுவருகின்றன. கீழ் தேசத்தார் வெகு யுகங்களாய்க் கிடந்த நித்திராஸ்திதியிலிருந்து மேல் தேசத்தாரின் அதிசய ஞானத்தையும் வல்லமையையும் பார்ப்பதற்கு இப்போதுதான் தங்கள் கண்களைத் திறக்கத் துவக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு இஞ்சினியரும் வியாபாரியும் போகுமிடங்களிலே போதகன்மாரும போகிறார்கள். வேதபுஸ்தகமும் கூடவேபோகிறது. ஆதலால் சகோதரரே! இந்த ஏதுக்களெல்லாம் சுவிசேஷ இராச்சியத்தை விஸ்தாரமாக்கும்படி போராடுகின்ற சாதனங்களாகும்படி ஜெபிக்க வேண்டியது நமது கடமையாயிருக்கிறது. தேவகிருபாசனத்தண்டை நாம் ஒருமித்துச்சேருகையில் தேவமகிமையான தற்சொருபமாயிருக்கிற கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளி பூமியின் இருளான ஸ்தலங்களிலெல்



லாம் பிரகாசிக்கவும் பூச்சக்கரமுழுவதும் அவரை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும் கிருபைசெய்யவேண்டுமென்று ஏகோபித்து பிரார்த்திக்கக் கடவோம்.

---

பின்வருவன ஜெபவாரத்தின் ஒவ்வொரு நாளும் போதிக்கவும் ஜெபிக்கவும் ஏற்றபொருளாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஞாயிறு. ஜனுவரி௴ 4வ.

பிரசங்கம். கிறிஸ்து சபை ஐக்கியம். விசுவாசிகளின் மெய்யான ஒற்றுமை. இதற்குத் தடைகளை விலகும் உபாயமும். யோவா. 17: 21, 22, 23.

## திங்கள். 5வ.

ஸ்தோத்திரம். ஆத்துமப்பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் நாம் தேசம் தேசமாகவும், வீடுவீடாகவும், தனித்தனியாகவும், பெற்றுக்கொண்ட கிருபைகளுக்காக. பாவ அறிக்கை. நம்முடைய ஜனங்களும் நாமும் மேற்படி கிருபைகளுக்கு அபாத்திரரென்றும் குற்றவாளிகளென்றும் ஒத்துக்கொண்டு அறிக்கையிடுதல். தானியேல் 9: 7.

## செவ்வாய் 6வ.

ஜெபம். கிறிஸ்து சபையில் விசுவாசமும் பரிசுத்தமும் அன்பும் பெலனும் பெருகவும், பரிசுத்தாவியானவர் தமது கிருபைகளைத் திரளாய்ப் பொழியவும் துன்பப்படுகிற கிறிஸ்தவர்கள் ஆறுதலடையவும். கொலோ. 1: 9, 10, 11. எபி: 13: 3.

## புதன். 7வ.

குடும்பங்களுக்காகச் ஜெபம். சொந்த வீடுகளிலும், தாய்தந்தைகளிடத்திலும் கிராமப் பள்ளிக்கூடங்களிலும கல்விச்சாலைகளிலும் படிக்கிற பிள்ளைகளுக்கு, நற்போதனை உண்டாகவும்; இதர தேசங்களுக்குப் போயிருக்கிற குமாரர் குமாரத்திகளுக்காகவும், வியாதியாலும் துன்பத்தாலும் வருத்தப்படுகிற பிள்ளைகளுக்காகவும், சன்மார்க்க வழியை விட்டு வழுவி நடக்கிற கீழ்ப்படியாத பிள்ளைகளுக்காகவும். சங்கீ. 115: 12—14. 144: 12.

## வியாழன். 8வ.

எல்லாத் தேசத்தாருக்காகவும் சமாதானம் தழைக்கவும், தேசமெங்கும் சன்மார்க்கமும், நீதிநியாயமும் பெருகவும், குடிவெறி, அவிசுவாசம், வீண்பத்தி இவை நீங்கவும, கிறிஸ்துமார்க்கத்தின் சுத்த சத்திய உபதேசங்கள் வளர்ந்தோங்கவும். ஏசாயா 60: 17, 18.

## வெள்ளி. 9வ.

ஜெபம். ஐரோப்பிய தேசங்களின் சுவிசேஷ பிரபலியத்துக்காகவும், இஸ்ரவேலா மனந்திரும்பவும், மகம்மது மார்க்கமும் அஞ்ஞான மார்க்மும் பெருகி இருக்கிற தேசங்களில் சுவிசேஷம பரம்பவும். சங்கீ. 68: 31. 122: 6. எபிரோயர் 13: 3.

### சனி. 10உ.

ஜெபம். 1873ம் வருஷத்தில் நடந்தவைகளை நினைத்து அவைகளிலுள்ள தேவ பராமரிப்பை ஒத்துக்கொண்டும், தேவ நடத்துதல் பாக்கியமான பலனை விளைவிக்கிறதென்பதை நினைத்தும். ஏசாயா. 26: 8, 9.

### ஞாயிறு. 11உ.

பிரசங்கம். கிறிஸ்துவின் இராச்சியம் எங்குமுள்ளது. அதுவே என்றும் நிலைநிற்பது இவைகளைப்பற்றி. சங்கீதம் 97: 1, 2.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** ஜர்மானிய, ஔஸ்திரிய, இத்தாலிய அரசர்கள் சிலகாலத்துக்குமுன் ஒருவரையொருவர் கண்டு சந்தித்தார்கள். மேலும் அவர்கள் ஐரோப்பாவைச்சேர்ந்த துரைத்தன காரியாகாரியங்களில் ஒத்தமனதாய் இருக்கிறார்கள். ஆனதுகொண்டு, ஐரோப்பாவில் நெடுநாள் சமாதானம் உண்டாயிருக்கவுங்கூடும். இங்கிலிஷ் துரைத்தனத்தாரும் எத்திசையிலும் சமாதானத்தையே நாடுகிறார்கள். நாளதுஸ்ரீ மகா ராஜாத்தியின் இரண்டாவது குமாரனும் ருஷிய சக்கரவர்த்தியின் குமாரத்தியும் விவாக சம்பந்தத்தில் உரிமைப்படுவார்கள். ஆதலால் ஐரோப்பா தேசத்தார் யாவரும் ஒருவரோடொருவர் சமாதானமாய் வாழ்ந்திருக்கலாம்.—பிரான்சிய பிரஜாதிபதியாகிய மார்ஷல் மக்மேகன் துரை செலுத்தும் அதிகாரம் ஏழு வருஷமட்டும் நீடித்திருக்கவேண்டுமென்று பிரான்சிய சர்வதேசசபையாரிற் பெரும்பான்மையோர் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். மேலும் வேண்டிய ஒழுங்குத்திட்டங்களை விதிக்க முப்பது பெயரை ஒரு கமிட்டியாய் தெரிந்து ஏற்படுத்தினார்கள்.—இத்தாலியாவிலும் முன் பாப்புமார்க்கம் குடிகொண்டிருந்த இடங்களிலும் வேதாகமம் வெகுவாய் பிரசுரமாகி சனங்களால் ஆசையாய் வாங்கி வாசிக்கப்பட்டுவருகிறது.

ஜஞ்சிபாரில் சிறை வியாபாரத்தை ஒழிக்கப்போயிருந்த ஸர் பார்ட்டில் பிரெயர் துரை லண்டனுக்குப்போய்ச் சேர்ந்தபின்பு ஒருநாள் லண்டன் மிஷன் சங்கத்தாரிடத்தில்போய், மதகஸ்கார் என்னும் தீவின் வடகரைக்கருகே ஒரு ஞாயிற்றுக்கிழமைக் காலையில் தாம் கப்பலில் போகையில் கரையில் உள்ள ஒரு பட்டணத்தில் கண்ட மனோரம்மியமான ஒரு சங்கதி தெரிவித்தார். அந்தப் பட்டணம் எப்படிப்பட்டதென்று அறிய விரும்பி துபாசி ஒருவனை அழைத்துக்கொண்டு கரையேறிப் பட்டணத்திற் பிரவேசித்தபொழுது வீதிகளில் ஒருவரும் தென்படவில்லை. ஜனங்கள் எங்கே என்று கேட்க துபாசி, ஐயா தேவாராதனைக்குப் போயிருக்கிறார்கள் என்றான். பின்பு அந்த உத்தமர் ஒரு பெரிய பந்தலுக்குப்போய் சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் கூடியிருக்கக் கண்டார். தேவாராதனை மகா பயபத்தியாய் நடப்பிக்கப்பட்டது. பின்பு சபையாரில் பெரும்பாலார் கலைய சிலர் இருந்தார்கள். அப்பொழுது துபாசிமூலமாய் நற்கருணை பரிமாறப்படப்போகிறதெ



ன்று அறிந்துகொண்டு தாமும் அவர்களோடு கர்த்தருடைய பந்திக்குச் சேர்ந்தார். கிறிஸ்துமார்க்கம் ஏற்பட்ட எந்தத் தேசத்திலும் மேற்படி ஊரில் தாம் கண்டதைப்பார்க்கிலும் அதிக பயபத்தியாயும் எழுப்புதலாயும் திருவிருந்து கொண்டாடப்பட்டதைத் தாம் கண்டிருப்பதில்லை என்று சொல்லுகிறார். அவர் கரையேறின அந்தப் பட்டணம் ஐரோப்பிய மிஷன் குருமாருடைய ஸ்தானத்துக்கு மூந்நூறு மைல் தூரத்தில் உள்ளது. இத்தனை தூரமான இடத்தில் கிறிஸ்துமார்க்கம் எவ்விதமாய்த் தோன்றியதென்று அவர் கேட்டபோது, 1846-ம்வரு மதகஸ்கார் ராஜதானியிலே கிறிஸ்தவர்களானதினிமித்தம் துன்பமடைந்து அடிமைகளாக விற்கப்பட்டு இவ்விடம் வந்த இரண்டு சிறைகள் தாங்கள் அறிந்த வேதகாரியங்களை எங்களுக்குள் பிரசித்தஞ்செய்ததினால் நாங்கள் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்தோம் என்று சொன்னார்கள்.

**வங்காளத்திலும்** அதற்கடுத்த பிரதேசங்களிலும் மழைத்தாழ்ச்சியினால பஞ்சம் ஆரம்பித்திருக்கிறது. துரைத்தனத்தார் ஜீவகாருண்யத்தினால் ஏவப்பட்டு பஞ்சத்தால் வருத்தப்படும் பிரஜைகளுக்கு வேலைகிடைப்பதற்கு ஏற்பாடுசெய்துவருகிறார்கள்.

**சென்னை இராஜதானி**யிலிருந்து போன வருஷம் எழுபத்துமூவாயிரம்பேர் இலங்கைக்கையச்சேர்ந்த காப்பித்தோட்டங்களில் கூலிவேலைசெய்யப் போனார்கள். அவர்களில் பெரும்பாலார் திருநெல்வேலியிலும் மதுரையிலுமிருந்து போனவர்கள். இலங்கைக்குமாத்திரமல்ல; ரங்கூன், மோரிஷ், மேற்கிந்தியாமுதலிய இடங்களுக்குப் போனவர்கள் நாலாயிரம்பேர். நாளது வருஷம் இலங்கையிலிருந்து திரும்பினவர்கள் பதினாலாயிரம்பேர்.

---

## பழமொழிகள்.

1. சொந்த சினம் அடக்கு, வந்த சினம் தடுக்கு.
2. தரித்திரம் வருவது வாசல்வழி, மித்திரம் போவது சன்னல்வழி.
3. அரைக்காசுகாக்கக் கல்லாதான் ஆயிரம்காசுகாக்கச் செல்லாதான்.
4. உடனே தைத்தால் ஒரு தையல், பிறகு தைத்தால் பெரும் தையல்.
5. நாளை என்று சொல்லாதே, வேலை என்றும் நில்லாதே.
6. கடனுடையான் திடனுடையான்.
7. கடனில்லாமல் கால்வயிறு கஞ்சி, ஒழுகாமல் ஒருமுழக்கூரை.

162398

## டிசம்பர்௴ நாள் 31. கார்த்திகை௴ 18௳ முதல், மார்கழி௴ 18௳ வரை.

| வாரம். | இங். தேதி | தமிழ்த் தேதி | அனுதினத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௮ | நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன். யாத். 20: 22. |
| செ | 2 | ௧௯ | உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன். 24. |
| பு | 3 | ௨௦ | அந்நியனை ஒடுக்காமலிருப்பீர்களாக. 22: 21. |
| வி | 4 | ௨௧ | நான் இரக்கமுள்ளவரா யிருக்கிறேன். 27. |
| வெ | 5 | ௨௨ | எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று. எஸ்றா 9: 6. |
| ச | 6 | ௨௩ | நாங்கள் பெரியகுற்றத்துக்கு உள்ளாயிருக்கிறோம். 7. |
| ஞா | 7 | ௨௪ | அவராலே கொஞ்ச நிமிஷமாவது கிருபை கிடைத்தது. 9. |
| தி | 8 | ௨௫ | தேவனே நாங்கள் இனி என்னசொல்லுவோம். 10. |
| செ | 9 | ௨௬ | கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன். சங். 89: 1. |
| பு | 10 | ௨௭ | வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும். 5. |
| வி | 11 | ௨௮ | கர்த்தருக்கு நிகரானவர் யார்? 6. |
| வெ | 12 | ௨௯ | உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது. 8. |
| ச | 13 | ௩௦ | உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும். 18. |
| ஞா | 14 | ௧ | என்கை அவனோடே உறுதியாயிருக்கும். 21. |
| தி | 15 | ௨ | நான் அவனை எனக்கு முதற்பேறானவனாக்குவேன். 27. |
| செ | 16 | ௩ | ஞானத்தையும் புத்தியையும் சம்பாதி. நீதிமொழி 4: 5. |
| பு | 17 | ௪ | புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள். 13. |
| வி | 18 | ௫ | தீயோருடைய வழியில் நடவாதே. 14. |
| வெ | 19 | ௬ | துன்மார்க்கருடைய பாதை காரிருளைப்போலிருக்கும். 19. |
| ச | 20 | ௭ | எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். 23. |
| ஞா | 21 | ௮ | என்னுடைய நீதியோ என்றென்றைக்கும் நிலைக்கும். ஏசா. 51: 8. |
| தி | 22 | ௯ | என் இரட்சிப்பு தலைமுறைதோறும் இருக்கும். 8. |
| செ | 23 | ௧௦ | நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். 12. |
| பு | 24 | ௧௧ | இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன். ஓசியா 14: 5. |
| வி | 25 | ௧௨ | கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள். 9. |
| வெ | 26 | ௧௩ | நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள். 9 |
| ச | 27 | ௧௪ | நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். யோவா. 11: 2 |
| ஞா | 28 | ௧௫ | என்னை விசுவாசிக்கிறவன் பிழைப்பான். 25. (2 |
| தி | 29 | ௧௬ | யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமேயில்லை. உரோ. 10 |
| செ | 30 | ௧௭ | சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. 16. |
| பு | 31 | ௧௮ | எங்களால் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? 16. |

## விசேஷித்த நாட்கள்.

4. பௌரணமி.
7. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள இரண்டாம் ஞாயிறு.
14. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள மூன்றாம் ஞாயிறு.
19. அமாவாசை.
21. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள நான்காம் ஞாயிறு.
25. கிறிஸ்துவின் ஜநநதிருநாள்.
28. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப்பின் வரும் முதலாம் ஞாயிறு.